# விசேட வணிக நிறுவனம் (SBE)

விசேட வணிக நிறுவனத்தின் (SBE) கீழ் வங்கி, காப்புறுதி, குத்தகை, கடன் தீர்பனவு, நிதிச் சேவைகள், நிதி முகாமை, பங்குத் தரகு, போன்ற வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், கொழும்பு பங்குச் சந்தையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் மற்றும் ரூபா.500 மில்லியனுக்கு மேல் வருமானம் கொண்ட நிறுவனங்களும், ரூபா.100 மில்லியனுக்கும் அதிகமான அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்கள், ரூபா.300 மில்லியனுக்கும் அதிகமான மொத்த சொத்துக்களைக் கொண்ட நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுக்கு ரூபா.100 மில்லியனுக்கும் அதிகமான பொறுப்புகளைக் கொண்ட நிறுவனங்கள், 1,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணியமர்த்தும் நிறுவனங்கள் மற்றும் பொருட்கள் விற்பனை அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பொது நிறுவனங்கள் ஆகியவை விசேட வணிக நிறுவனத்தின (SBE) என்பதில் அடங்கும். ஒவ்வொரு விசேட வணிக நிறுவனமும் (SBE) இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க அதன் நிதி அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு விசேட வணிக நிறுவனங்களின் (SBE) கணக்குகளும் தொழில் பயிற்சி நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் மற்றும் வழங்கிய சான்றிதழை வைத்திருக்கும் தொழில்முறை தகுதி வாய்ந்த கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படும்.

இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் மேற்பார்வை சபையின் தகவல்களின்படி, 1681 நிறுவனங்கள் விசேட வணிக நிறுவனங்களாக (SBE) பட்டியலிடப்பட்டுள்ளன மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின்படி, 45 விசேட வணிக நிறுவனங்கள் (SBE) கணக்காய்வாளர் நாயகத்தின் கீழ் வரும். 2021 ஆண்டின் இன் இறுதியில் இதில் 2 பெரிய வணிக வங்கிகள் மற்றும் 5 விசேட வங்கிகள் உட்பட 7 அரசு வங்கிகள் அடங்கும். இந்த வங்கிகளின் செயல்திறன் மூன்றாண்டு அறிக்கை வங்கித் துறையின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

வங்கிகளைத் தவிர, கணக்காய்வாளர் தலைமை அதிபதியிகன் கீழ் உள்ள விசேட வணிக நிறுவனங்களில் (SBE) இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை, அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபனம் போன்ற பெரிய வர்த்தக நிறுவனங்கள் அடங்கும். தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கைத்தொழில்கள் பல இந்த விசேட வணிக நிறுவனங்களின் கீழ் (SBE) செயல்படுகின்றன. நான்கு நிறுவனங்களைத் தவிர மற்ற அனைத்து விசேட வணிக நிறுவனங்களின் (SBE) நிதி அறிக்கை நோக்கங்களுக்காக இலங்கை கணக்கியல் நியமங்களைப் பயன்படுத்துகின்றன.

இலங்கை ஜவுளி மற்றும் ஆடை நிறுவனம், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சபை, சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவை பொதுத்துறை கணக்கியல் நியமங்களைப் பயன்படுத்துகின்றன.

தேசிய கணக்காய்வு சட்டத்தின்படி, இலங்கை கணக்கியல் நியமங்களின்படி நிதிநிலை அறிக்கைகளின் உண்மைத்தன்மை மற்றும் நியாயத்தன்மையை ஆராயும் போது, கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் வளங்கள் பொருளாதார ரீதியாகவும், திறமையாகவும், திறம்படவும் கொள்வனவு செய்யப்பட்டு உரிய காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆராய்கிறார். சில விசேட வணிக நிறுவனங்களில் (SBE) எதிர்மறையான நிதி முடிவுகளைப் காட்டிய போதிலும், அந்த நிறுவனங்கள் தேசிய இலக்குகளை அடைய சமூகத்திற்கும் பொருளாதார ரீதியிலும் சமூகத்திற்கு பங்களிக்க அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு இணங்க பொருந்தக்கூடிய சட்டங்களின்படி தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, இந்த விசேட வணிக நிறுவனங்கள் (SBE) கொடுக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் சமூக நல்வாழ்வு மற்றும் நிதி செயல்திறனை அடைய செயல்படுவதை உறுதி செய்வதற்காக, தேசிய கணக்காய்வு அலுவலகம் நிதி அறிக்கை மற்றும் இந்த நிறுவனங்களின் செயல்பாட்டு செயல்திறனை மதிப்பாய்வு செய்கிறது.

பெறப்பட்ட தகவல்களின்படி, விசேட வணிக நிறுவனங்களின் கீழ் உள்ள 38 நிறுவனங்களில் (வங்கிகளைத் தவிர) 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் குறித்து கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்ட கணக்காய்வு அவாதானிப்புகளின் விவரங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| முனைப்பழியற்ற அபிப்பிராயம் | 3 | 3 | 5 |
| முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | 24 | 21 | 19 |
| பாதகமான அபிப்பிராயம் | 2 | 2 | 1 |
| மறுப்பு அபிப்பிராயம் | 4 | 4 | 2 |

மேலும், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 3, 5 மற்றும் 7 குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் 2022 செப்டெம்பர் 1 வரை கணக்காய்வுக்கு தங்கள் நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை.

பெறப்பட்ட தகவல்களின்படி, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான முக்கிய சிறப்பு வணிக நிறுவனங்களின் நிதி இலாபம் / நட்ட விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **நிறுவனத்தின் பெயர்** | **2018 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபம்** | **2019 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபம்** | **2020 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபம்** |
|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் | 1,684,750,291 | 2,176,094,213 | 2,545,624,468 |
| அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 359,680,673 | 592,057,058 | 1,160,997,739 |
| இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 1,620,291,000 | 823,619,000 | 2,500,789,000 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 8,696,106,374 | 16,155,365,468 | 20,327,138,415 |
| மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் | 2,006,395.65 | (16,328,928.59) | (40,984,137.28) |
| அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம | 18,523,726 | (843,901,384) | (257,420,711) |
| இலங்கை போக்குவரத்து சபை | 69,903,402 | 416,537,116 | (3,232,362,133) |
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | (383,318,108) | (394,370,449) | (454,126,752) |
| இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனம் | 190,605,217 | (467,539,830) | (236,774,998) |
| இலங்கை மின்சார சபை | (30,344,487,000) | (97,319,155,000) | (60,433,489,000) |
| பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | (106,140.404) | (11,835.600) | 2,370.955 |

| | | | |
|---|---|---|---|
| நெல் சந்தைப்படுத்தல் சபை | (1,241,427,452) | (884,782,517) | |
| கூட்டுறவு மொத்த விற்பனைக் நிலையம் | (2,236,445,017) | (1,003,047,978) | |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | (517,037,963) | (1,111,094,592) | 662,862,732 |

கிடைத்த தகவலின்படி, குறிப்பிட்ட வணிக நிறுவனங்களுடன் தொடர்புடைய 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிகர சொத்துக்களை கருத்தில் கொண்டு, பிரதானமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ரூபா.497.7 பில்லியனாகவும், இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா. 370.1 பில்லியனாகவும், இலங்கை மின்சார சபை ரூபா. 264.8 பில்லியனாகவும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ரூபா.16.8 பில்லியனாகவும், மற்றும் அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபனம் ரூபா.14.7 பில்லியனாகவும் கானப்பட்டது. மேலும், சில நிறுவனங்களின் நிகர சொத்துக்கள் எதிர்மறை மதிப்பைப் பெற்றுள்ளன, அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **நிறுவனம்** | **நிகர சொத்துக்கள் எதிர்மறை மீதி (ரூபா. மில்லியன்)** |
|---|---|
| பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 357,504 |
| இலங்கை போக்குவரத்து சபை | 9,790 |
| தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | 37.3 |
| இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் | 346.3 |

சிறப்பு வணிகத் துறைகளின்படி நிகர சொத்துக்களைக் கருத்தில் கொண்டு, நீர் வழங்கல் மற்றும் வடிகால் துறையின் மொத்த நிகர சொத்துக்கள் ரூபா. 497.7 பில்லியனாகவும் காப்புறுதி துறையில் ரூபா. 105.9 பில்லியனாகவும், துறைமுகத் துறையில் ரூபா.370.1 பில்லியனாகவும், சுகாதாரத் துறையில் ரூபா. 21.6 பில்லியனாகவும் மற்றும் மின்சாரத் துறை மற்றும் பொது போக்குவரத்து துறையில் முறையே ரூபா.92.7 பில்லியன் மற்றும் ரூபா.9.7 பில்லியன் எதிர்மறை நிகர சொத்துக்கள் உள்ளன.

## 01. இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம்

2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

| | |
|---|---|
| **2018** | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2019** | மறுப்பு அபிப்பிராயம் |
| **2020** | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

**3.** கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் **25** பந்தியின் பிரகாரம், எடையிடப்பட்ட சராசரி முறையின் அடிப்படையில் மீதி இருப்புக்களின் கிரயத்தை கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும் நியமத்தின் **27** பந்தியின் பிரகாரம் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அல்லது ஒவ்வொரு கொள்வனவு செய்த மிகை பண்ட இருப்பு கிடைத்த சந்தர்ப்பத்தில் அல்லது எடை இடப்பட்ட சராசரி கணிப்பதற்காக இருப்புப் பேரேடு பேணப்பட்டிருக்காததுடன், அதற்கு பதிலாக முன்வந்து முன்செல்லல் முறைப்படி இருப்புக் கிரயம் கணிப்பதற்காக கணினி மயப்படுத்தப்பட்ட இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருந்தது | நியமத்தின் பிரகாரம் முன்வந்து முன்செல்லல் எனும் விநியோக முறை அல்லது எடையிடப்பட்ட சராசரி முறை ஆகிய கிரய மதிப்பீட்டு முறைமைகளில் கணிப்புக்களில் ஒன்று தொடர்ச்சியாக கடைபிடிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் இருப்புக்களின் பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், வருட இறுதியில் உள்ள இருப்புப் பேரேட்டின் மீதி, மீதி இருப்பு என கணக்கீடு செய்யப்பட வேண்டும். கணினி | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முடிவுப் பண்ட இருப்பு முன்வந்து முன்செல்லல் முறையில் பேணப்பட்டிருக்கவில்லை என மற்றும் அவ்வாறு இருப்பு பதிவு செய்வதற்கு போதியளவு கணினி வசதிகள் விற்பனை நிலையங்களில் காணப்படவில்லை எனவும், மூலப்பொருள் இருப்பு மாத்திரம் முன்வந்து முன்செல்லல் முறைப்படி பேணப்பட்டு வருகின்றதெனவும், எதிர்காலத்தில் முன்வந்து முன்செல்லல் முறையின் படி இருப்பை கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் முடிவுற்ற பொருட்கள் மற்றும் மூலப்பொருள் இருப்பு பேணப்படுவது தொடர்பாக கணினி முறைமை ஒன்று | 2022 ஜனவரி 31 வரையிலும் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடையிடப்பட்ட சராசரி முறைக்குப் பதிலாக **2020** ஜனவரி மற்றும் திசெம்பர் மாதங்களில் கிரயத்தின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு **2020** திசெம்பர் **31** திகதியில் உள்ளவாறு மீதியான மூலிகை இருப்புக்கள், மீதியான முடிவுற்ற மருந்துகள் மற்றும் மீதியான பொதி செய்யும் பொருட்களின் கிரயம் முறையே ரூபா **70,360,760** தொகை, ரூபா **96,833,832** தொகை மற்றும் ரூபா **21,824,951** தொகை எனவும் வருட இறுதியில் கொள்வனவு விலையை அடிப்படையாக கொண்டு **2020** திசெம்பர் **31** திகதியில் உள்ளவாறு மீதி காகிதாகிகள் இருப்பின் கிரயம் ரூபா.**3,431,500** தொகை எனவும் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வசதிகள் காணப்படாத பிரிவுகளில் இருப்புப் பேரேடுகள் கையினால் (Manually) பேணப்பட வேண்டும். | நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு சேதங்களுக்கான ஏற்பாடு ரூபா 8,373,176 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் நிதி நிலைமைக் கூற்றின் படி அந்த ஏற்பாடுகள் ரூபா 11,179,466 தொகையாக இருந்தமையால் வித்தியாசம் ரூபா 2,806,290 தொகையாக இருந்தது. அதேபோல் மக்கள் வங்கியின் மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் படி இரண்டு சேமிப்புக் கணக்குகளில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 5,574,664 தொகை எனினும், நிதி நிலைமைக் கூற்றின் படி அது ரூபா.4,210,243 தொகையாக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 1,364,421 தொகையாக இருந்தது. | தவறுகள் சரி செய்யப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் நாட்குறிப்பு பதிவுளை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ரூபா 2,806,290 இற்கான உரிமை மாற்றங்கள் கூற்றில் திரட்டிய இலாபத்திற்கு சீராக்கல் செய்ய வேண்டியிருந்ததால் எதிர்காலத்தில் அதனை சரி செய்யப்படும் எனவும், இனங்காணப்படாத வைப்புக்களின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 1,364,421 இற்கான வித்தியாசத்தை இனங்கண்ட பின்னர் சரி செய்யப்படும் எனவும், பொது செலவு முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 9,927,344 தொகைக்காக அட்டவணைகள் மற்றும் உரிமைகள் மாற்றக் கூற்றில் முன்னைய ஆண்டிற்கான | 2022 ஜனவரி 31 வரையிலும் வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிய போதுமான அட்டவணைகள் மற்றும் உரிய நாளேட்டு பதிவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும், முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் படி பொதுச் செலவுகள் முற்பணக் கணக்கில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் பேரேட்டுக் கணக்கில் 2020 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீதிகளிடையே ரூபா 5,458,141 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டதுடன், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,927,344 தொகையான மீதியை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல் உரிமைகள் மாற்றக் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கல் என காட்டப்பட்டிருந்த ரூபா 8,906,193 இனால் ரூபா 6,047,654 தொகை நாட்குறிப்பின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | | சீராக்கல்கள் ரூபா 6,047,654 இற்கான தகவல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும், எதிர்காலத்தில் அந்த தகவல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், | |
| (இ) | 2020 சம்பர் 31 திகதியில் நடாத்தப்பட்டுவந்த 08 களஞ்சியங்களில் 03 களஞ்சியங்கள் தொடர்பாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது, ரூபா 842,292 கிரயத்தை உடைய மூலிகை மூலப்பொருட்கள் 20 இன் மற்றும் ரூபா 387,590 கிரயத்தை உடைய 12 முடிவுற்ற மருந்துப் பொருட்கள் இருப்புப் பற்றாக்குறை மற்றும் ரூபா 11,734,245 கிரயத்தை உடைய 20 மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் ரூபா 290,222 கிரயத்தை உடைய 31 முடிவுற்ற மருந்துப் பொருட்கள் இருப்புகள் மிகையாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | பௌதீக கணிப்பீடுகளின் போது கண்டறியப்பட்ட இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகள் கணக்கீடு செய்யப்பட்டு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டில் இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், கொரோனா பேரழிவு காரணத்தினால் ஏற்பட்ட நிலைமை மத்தியில் 2020 ஆண்டின் இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தாமதமாகியது எனவும் மற்றும் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | 2022 ஜனவரி 31, வரையிலும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனினும், அந்த இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகளை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி முடிவுற்ற மருந்து இருப்பில் உள்ளடங்கிய சேதமடைந்த மற்றும் காலவதியாகிய முடிவுற்ற மருந்து பொருட்கள் இருப்பின் கிரயம் ரூபா 7,301,072 தொகை இலாபத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு மற்றும் நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடாந்த பண்டக் கணிப்பீடு கண்டறியப்பட்டிருந்த சேதங்கள் மற்றும் காலவதியாகிய முடிவுற்ற மருந்து அலகுகள் 19,516 இற்கான, காகிதாகி அலகுகள் 671 இற்கான மற்றும் மூலிகை மூலப்பொருள் 177 கிலோகிராம் இற்கான கிரயத்தை கணித்து கணக்கீடு செய்திருக்காததுடன், பொதி செய்யும் பொருட்களின் இருப்புக்களில் உள்ளடங்கிய சேதமுற்ற மற்றும் காலவதியாகிய இருப்பினை கணித்தும் இருக்கவில்லை. | சரக்குகளின் முழுமையை கவனித்து, இந்த தவறுகளை சரி செய்ய வேண்டும். | 2021 ஆண்டின் போது களஞ்சியங்களில் பயன்படுத்த முடியாதிருந்த மற்றும் காலவதியாகிய இருப்புக்கள் அழிக்கப்பட்டன என, 2021 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்படும் எனவும் மற்றும் களஞ்சியத்தில் காணப்பட்ட பல வருட காலம் முதல் காணப்படும் பழைய மூலப்பொருட்கள், பொதி செய்யும் பொருட்கள், (லேபல்) காகிதாகிகளுக்காக கணினி முறைமையில் விலைகள் காட்டப்படாமையால் அவற்றின் கிரயத்தை இனங் கண்ட பின்னர் சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | 2022 ஜனவரி 31, வரையிலும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்கவில்லை. |
| (உ) | களஞ்சியத்தில் முறைப் பிரகாரம் இருப்புக்களை களஞ்சியப்படுத்தி இருக்காததுடன் உச்ச குறைந்த மற்றும் மீள்கட்டளை இருப்பு மட்டங்கள் பேணப்பட்டிருக்கவில்லை | களஞ்சிய நிருவாகம் முறைப்படுத்தப்பட வேண்டும். | முடிவுற்ற மருந்துக் களஞ்சியத்தில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட இட வசதியை உச்ச மட்ட அளவில் பயன்படுத்தக் கூடிய வகையில் இராக்கை முறைமை | 2022 ஜனவரி 31 வரையிலும் களஞ்சிய நிர்வாகம் முறைப்படுத்தப்படவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனவும், மெதுவாக அசையும் இருப்புக்கள் காணப்பட்ட போதும் அந்த விடயங்களை இனங்காண்பதற்கு மற்றும் விற்பனைக்காக விற்பனை மேம்படுத்தல் உத்திகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், மருந்துப் பொருட்களின் விலை அதிகரித்தல், லேபல்கள் மற்றும் பொதிகள் ஈரளிப்படைதல் ஆகிய காரணங்களினால் விற்பனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த நீண்ட நாட்கள் கொள்ளக்கூடிய மருந்து வகைகள் காலவதியான மருந்துகளுடன் ஒன்றாக களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது எனவும், அந்த இருப்புக்களை மீண்டும் லேபல் படுத்தி விற்பனை செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காலவதியாவதற்கு இடமளித்திருந்ததுடன், விற்பனை நிலையங்களில் மற்றும் களஞ்சியங்களில் காணப்பட்ட பயன்படுத்த முடியாத மருந்து வகைகள் நீண்ட காலமாக இருப்புப் புத்தகங்களில் இருந்து அகற்றப்படாமல் சாதாரண இருப்புக்கள் என கணிக்கப்பட்டிருந்ததுடன், விற்பனை நிலையங்களில் பெருந்தொகையான இட வசதிகள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதெனவும், மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | நவீனமயப்படுத்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், களஞ்சியத்தில் காணப்படும் இடவசதியை அதிகரிப்பதற்காக வேறு பகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது எனவும், காலவதியான மருந்துகளை உரிய முறையில் இனங்கண்டு அகற்றுவதற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது எனவும், மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்படும் விற்பனை நிலையங்கள் மருத்துவ சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்ட போதிலும் உலகலாவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அவ்விடயத்தை செயற்படுத்தப்பட முடியாதுள்ளது | |
| (ஊ) | உற்பத்திக் கிரயக் கட்டுப்பாடு மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ கணக்கு | உற்பத்தித் திட்டத்தின் முன்னேற்றம், உற்பத்திப் பிரிவில் காணப்பட | திட்டமிடல் பிரிவினால் உற்பத்தியை திட்டம், உண்மையான உற்பத்தி அறிக்கைகள், செயலாற்றல் மற்றும் | 2022 ஜனவரி 31 வரையிலும் முகாமைத்துவமானது ஒரு கணக்கியல் முறையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறைமை ஒன்று அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் உற்பத்தி அலுவல்கள் மற்றும் கிரய கட்டுப்பாடு முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. அதேபோல், உற்பத்திச் செயற்பாடு மற்றும் கலஞ்சியக் கட்டுப்பாடு தொடர்பாக முறையான வழிமுறைகள் அறிமுகப்படுத்தி இருக்காமையினால் இருப்புப் பற்றாக்குறைகள் ஏற்பட்டிருத்தல் மற்றும் மொத்தக் கலஞ்சியங்களில் இருப்பு மட்டங்களில் கணிசமான முரண்கள் ஏற்பட்டிருத்தல் ஆகிய விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. **2019** ஆம் ஆண்டில் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி இனங்காணப்பட்ட இருப்புப் பற்றாக்குறைகளின் சந்தைப் பெறுமதி ரூபா 2.60 மில்லியன் தொகையாகும். | வேண்டிய உற்பத்தி வேலைப் பத்திரத்திரங்களின் படி தயாரிக்கப்பட வேண்டும். இதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை முறைசார் விதமாக நிறுவப்பட வேண்டும். இந்த குறைபாடு தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிதிப் பிரமாணங்கள் மற்றும் தாபனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் தயாரிக்கும் போது கணினி தரவு முறையையில் காணப்படும் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றது என, அந்தத் தகவல்களை பயன்படுத்தி பிரிவுகளின் அலுவல்கள் நடாத்தப்படுவதினால் மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பாக அனைத்து அலுவல்களும் கணினி தரவு முறைமை ஊடாக மேற்கொள்ளப்படு வதனால் அத் தகவல்கள் சரியான தகவல்கள் என கணிக்கப்படுகின்றது என | அறிமுகப்படுத்தவும், கையிறுப்புக் கட்டுப்பாட்டில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை தவிர்க்கவும், நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவையின்படி அடையாளம் காணப்பட்ட கையிறுப்புக் குறைபாடுகளைக் கையாளவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (எ) | 2020 ஆம் ஆண்டின் விற்பனவு வருமானம் ரூபா 676,304,359 இல் ரூபா 504,447,317 தொகை எனப்படும் 75 சதவீதம் அரச துறையில் இருந்து கிடைத்திருந்ததுடன் ரூபா 171,857,042 தொகை எனப்படும் 25 சதவீதம் மாத்திரம் தனியார் துறையில் இருந்து கிடைத்திருந்தது. இயல்பாகவே கிடைக்கக் கூடிய அரச துறை விண்ணப்பங்களுக்காக கூடுதலான முயற்சி எடுத்தல், சந்தையின் தேவையை புதிய முறையில் இனங்காணாமை, உரிய விற்பனை உத்திகளை | தனியார் துறையின் விற்பனை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணத்தினால் ஒட்டு மொத்த செயற்பாட்டு முறைமை செயற்படாதிருத்தல் ஏற்பட்டது. 2019 தனியார் துறையின் ஒட்டுமொத்த விற்பனை வருமானத்திற்கு நேரொப்ப 2020 ஆண்டின் போது 25 சதவீதத்தினால் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்கு முடியுமானது எனவும், கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலைமையை கவனத்தில் எடுத்து | தனியார் துறையால் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் திட்டமிடவும், புதிய சந்தைப்படுத்தல் உத்திகளை அறிமுகப்படுத்தவும், போதுமான விளம்பர முறைகளை அறிமுகப்படுத்தவும் முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தாமை மற்றும் விளம்பரங்கள் போதியளவாக காணப்படாமை தனியார் துறையின் விற்பனைகள் வருமானம் குறைவதற்கு காரணமாக இருந்தது. | | ஆரம்ப மாதங்களின் விளம்பர ஊடகங்கள் ஊடாக விற்பனை விளம்பரப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை எனவும், வருடத்தின் கடைசி மாதங்களில் விற்பனவில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்துடன் ஆரோக்கிய மாதாந்த சஞ்சிகையில் ‘‘கினிஹல்கய” பத்திரிகையில் இலங்கை ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் அறிவித்தில் வெளியிடப்பட்டது எனவும், கொரோனா வைரஸ் நிலைமையினால் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் புதிய உற்பத்தி தொகுதி ஒன்றினை வெளியிடும் விழா ஒன்று நடாத்தப்பட்டது | |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்கத் துறைக்கு 134 வகையான உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக கோரிக்கை நிறைவேற்ற முடியாமல் போன காரணத்தினால் கூட்டுத்தாபனம் இழந்த வருமானம் ரூபா.79,614,405 தொகையாக காணப்பட்டதுடன், 2019 ஆண்டின் போது அவ்வாறு இழந்திருந்த வருமானம் ரூபா.78,372,900 தொகையாக இருந்தது. விற்பனை மேம்பாட்டு முயற்சியொன்றின்றி அரச துறையில் கிடைக்கக்கூடிய இந்த கேள்வியை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் சந்தையில் இருந்த பங்கு கை நழுவக்கூடிய ஆபத்து நிலை ஒன்று காணப்பட்டது. | அரச துறையிலிருந்து கிடைக்கக் கூடிய கேள்வியை கவர்ச்சிகரமான மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச துறையில் மூலம் இழந்துள்ள விற்பனை வருமான இழப்பினை குறைத்துக் கொள்வதற்வதற்காக உச்ச மட்ட அளவில் செயல்படுவது எனவும், கடந்த ஆண்டுகளில் கேள்வி மற்றும் புதிய சந்தைகளை கைப்பற்றலை கவனத்தில் எடுத்து இலக்குகளை நெருங்குவதற்கு இயலுமான முறையில் உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது என, | 2022 ஜனவரி 31 வரையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த உற்பத்தித் திட்டம் மற்றும் விற்பனைத் திட்டத்தின் படி செயலாற்றும் கூட்டத்தாபனத்தின் பல்வேறு துறைகளில் செய்முறைகளின் கருமங்களை மதிப்பாய்வு செய்வதற்காக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு அந்த கருமங்களின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் ஒவ்வொரு பிரிவின் செய்முறைகளும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு அவ்விடயங்களின் செயலாற்றல்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அடுத்த வருடங்கள் தொடர்பாக செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், அனைத்து பிரிவுகளினாலும் விற்பனை மற்றும் உற்பத்தி செய்முறைகள் தொடர்பாக நிறைவேற்றப்படும் கருமங்கள் தொடர்பாக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு செயற்படுவதற்கு அடுத்த வருடம் முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என. | 2022 ஜனவரி 31 வரையிலும் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலும் செயல்முறைகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான செயல்திறன் குறிகாட்டிகள் நிறுவப்படவில்லை. |
| (ஒ) | கூட்டுத்தாபனத்தினால் சந்தையிலுள்ள தமது பகுதியை தீர்மானிப்பதற்காக அவ்வவ்போது சந்தைக் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன், போட்டி நிறுவனங்களிடையே கூட்டுத்தாபனத்தின் சந்தையின் பகுதி குறைவடைதல் அல்லது அதிகரித்தல் ஏற்பட்டிருக்கின்றதா என தொடர்பாக தெளிவொன்று காணப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் சந்தையின் பகுதியை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு புதிய நுகர்வுத் தேவை திருப்தி அடையக்கூடிய விதமாக சந்தையின் போக்கினை இனங்காண்பதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | சந்தைக் கணிப்பீடு ஒன்று கொரோனா தொற்றுநோய் நிலைமை முடிவடைந்த பின்னர் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என, மற்றும் அதற்குத் தேவையான கணிப்பீட்டுப் பத்திரங்கள் ஆகிய ஆரம்ப அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என. | 2022 ஜனவரி 31 வரையிலும் சந்தை ஆய்வு எதுவும் நடத்தப்படவில்லை. |
| (ஓ) | 1969 மே 11 திகதிய 14,853/3 இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானி குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் 07 குறிக்கோள்களின் ஆயுர்வேத மருந்துப் பொருள் வகைகளை உற்பத்தி செய்வதற்காக தேவையான சுத்தமான பசு நெய் உற்பத்தி செய்வதற்காக சுத்தமான பசுப்பால் பெற்றுக்கொள்வதற்காக பாற்பண்ணைகள் நடாத்திச் | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அல்லது நடைமுறை நிலைமைக்கு இணங்கக் கூடியவாறு குறிக்கோள்களை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கால்நடை முகாமைக்கு ஏற்ற தட்பவெப்ப நிலையில் போதிய நிலம் மற்றும் தகுந்த உணவு இல்லாதது, பணியாளர்கள் பற்றாக்குறை, குளிரூட்டி வசதியின்மை போன்ற காரணங்களால் அந்த நோக்கங்களை அடைய முடியவில்லை.<br>தேனீ வளர்ப்பிற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் திட்ட அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு | 2022 ஜனவரி 31 வரையிலும் இந்த நோக்கங்கள் அடையப்படவில்லை அல்லது நோக்கங்களைத்திருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்லல், மருந்து வகைகள் உற்பத்திக்காக தேவையான தேன் உற்பத்தி செய்வதற்காக தேனீ வளர்ப்பு ஏற்படுத்துதல் மற்றும் தேனீ வளர்ப்பினை வீட்டுக் கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல் ஆகிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | வருகின்றன, தேனீ பெட்டிகள் மற்றும் பிற தேவையான அறிவுரைகள் வேளாண்மைத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டு, இந்த நடவடிக்கைகள் வேளாண்மை அதிகாரியின் மேற்பார்வையில் நடைபெறும் என்று நம்பப்படுகிறது. | |
| (ஔ) | 1994 ஜுன் 14 திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் விதி முறைகளுக்கு முரணாக 2020 போது மற்றும் கடந்த 06 ஆண்டுகளில் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தியிருந்த மொத்த ஊக்குவிப்பு கொடுப்பனவின் கூட்டுத்தொகை ரூபா 474,979,883 தொகையாக இருந்தது. 1997 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊக்குவிப்பு முறைக்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என 2007 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற பொது வர்த்தக குழு நிபந்தனை விதித்திருந்த போதிலும். 2020 டிசம்பர் 31, வரை, ஒப்புதல் பெறப்படவில்லை. | முறையான அனுமதி பெற்று, அனைத்துத் துறை அதிகாரிகளின் செயல்திறன் அளவை உயர்த்தும் வகையில் ஊக்குவிப்பு தொகை முறையை ஏற்பாடு செய்த பின்னரே ஊக்குவிப்பு தொகை வழங்க வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது எனவும், தற்போது புதிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவத்தை மேம்படுத்துதல் கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது என. | 2022 ஜனவரி 31 வரையிலும் திறைசேரியின் ஒப்புதல் பெறப்படவில்லை. |
| (க) | அநுராதபுரத்தில் அமைந்துள்ள மூலிகை தோட்டத்தை அபிவிருத்தி செய்து எல்லை வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 1,808,795 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியை முறைப்பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | காணியை முறைப் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதவச்சி பிரதேச செயலாளரினால் காணியை கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை முறையான உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காத துடன், மற்றும் செலவிடப்பட்டிருந்த | 2022 ஜனவரி 31 வரையிலும் கானி முறையாக கையகப்படுத்தப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலவுகள் அடுத்த கணக்குக் காலப் பகுதியில் கிரமமாக கழிக்கப்படும் எனவும், | |
| (ச) | 2018 ஆண்டின் போது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 09 வகையான சேவைப் பிரிவுகளின் கீழ் கூட்டுத்தாபனத்திற்காக திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சேவை பிரிவைச் சேர்ந்த பதவியணி சேர்க்கப்பட்டிருந்த அனைத்து உத்தியோகததர்களுக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறை குறிப்பிடப்பட்டுள்ளவாறு வினைதிறமை காண் பரீட்சை நடாத்தாமல் பதவிகள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் படி வினைத்திறன் காண் பரீட்சை உரிய முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தக் கூட்டுத்தாபன ஆரம்ப முதல் இது வரை விணைத் திறன் காண் பரீட்சைகள் நடாத்தாப்பட்டிருக்கவில்லை 2022 ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட அனைத்து பதவியணிக்கும் விணைத்திறன் மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், | 2022 ஜனவரி 31 வரையிலும் ஊழியர்களுக்கான செயல்திறன் மதிப்பீடுகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (த) | 2013 செப்தம்பர் 11 திகதிய 02/2013 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 பந்தியின் படி சேவை நாடுனர் ஒருவர் பணிக்கொடை நிதியம் பெற்றுக்கொள்வதற்காக தகைமை பெற்ற பின்னர் கூடிய விரைவில் அவருக்குரிய பணத்தை வழங்குவதற்கு வருடாந்தம் கணிக்கப்பட்ட பணிக்கொடைக்கு சமமான தொகையொன்று முதலீடு செய்திருக்கவில்லை. | பணிக்கொடை நிதியத்திற்கு சமமான தொகை ஒன்று முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குவது எனவும், எதிர்காலத்தில் முறையாக முதலீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | 2022 ஜனவரி 31 வரையிலும் பணிக்கொடை நிதிகள் முதலீடு செய்யப்படவில்லை. |
| (ப) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்த போதிலும், 2020 தொடர்பாக கூட்டுத்தாபனம் தனது விடயப்பரப்பின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல் தொடர்பாக இலக்குகள், சுட்டிகளை இனங்காண்பதற்காக மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக நடவடிக்கை எடுக்க | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் இலக்கு மற்றும் அந்த இலக்குகளை நெருங்குவது தொடர்பாக மற்றும் நிறுவனத்தின் இலக்குகளை நெருங்குவதற்கான சுட்டிகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு தொடர் | 2022 ஜனவரி 31 வரையிலும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது தொடர்பாக இலக்குகள், குறிகாட்டிகள் மற்றும் முன்னேற்றத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பட வேண்டும் என போதியளவு கவனத்துடன் நடவடிக்கை எடுத்திக்கவில்லை.அதன்படி ஐக்கிய நாடுகள் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிறுவனத்தின் கருமங்கள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் அந்த இலக்கை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்காக சுட்டிகளும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என, | அளவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

## 02. மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

(1) நிறுவனத்தின் பெயர் - மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

(2) கணக்காய்வு அபிப்பிராயம் -

| ஆண்டு | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|
| 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

(3) கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| 1. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை | | | |
| 1.1 | எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ் 15 – வாடிக்கையாள ருடனான | பூரணப்படுத்திய செயற்திட்டங்க | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் | சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்த ங்களிலிருந்து வருமானம் - நிர்மாண ஒப்பந்தங்களின் வருமானம் முழுமையாக இனங்காணப்பட்ட பின்னர், **2020** திசெம்பர் **31** இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் மொத்தமாக ரூபா **297,528,112** மற்றும் ரூபா.**359,002,617** தொகையான முறையே வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் காட்டப்பட்டுள்ளன. அதில் ரூபா **195,696,219** மற்றும் ரூபா **145,816,913** தொகையான முறையே வாடிக்கையாளர் களிடமிருந்து பெறவேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் **2020** திசெம்பர் **31** உள்ளவாறு **05** ஆண்டுகளிற்கும் மேலாக கணக்குகளில் இருந்து நீக்கப்படாமல் இருந்தது. | ளுடன் தொடர்பு டைய நீண்டகால நிலுவை மீதிகளை தாமதமின்றி அகற்றுவதற்கு பயனுள்ள மற்றும் உரிய வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்த ப்படுதல் வேண் டும். | தேவையான மாற்றங்கள் செய்யப்படும். | வருகிறது. |
| 1.2. | எல்கேஎஸ். 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பணியகத்தால் தொடர்ந்து பயன்படுத்தப் பட்டு வருகின்ற ஏறத்தாழ ரூபா 269.24 மில்லியன் கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் பொருளா தார ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. மேலும், பணியகத்தின் கணக்கியல் கொள்கையின்படி, முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் | முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் பொருளாதார ஆயு ட்காலத்தை மீள் மதிப்பீடு செய் வதற்கும் அதன்படி நிதிக் கூற்றுக்களில் மதிப்பீட்டுத் தவறை திருத்துவதற்கும் நடவடிக்கை எடு த்தல் வேண்டும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பௌதீக காணப்படும் தன்மையை மெய்மை யாய்வு செய்வதற்காக அணியொன்று நியமிக் கப்பட்டுள்ளது எவ்வாறாயினும், இதனை முழுமையாக பூரணப்படுத்த கால அவகாசம் தேவைப்படுகின்றது. | இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயனுள்ள வாழ்க்கையின் மதிப்பீட்டு பிழைகள் சரி செய்யப்படவில்லை மற்றும் நிதிநிலை அறிக்கைகளில் தொடர்புடைய சரிசெய்தல் செய்யப்படவில்லை. | | | |
| 1.3 | பணியகம் அதன் ரூபா.3,700,591,042 கிரயமுடைய நிலையான சொத்துக்களிற்கு குறியீடுகளை செய்திருக்காததுடன் அந்தக் குறியீடுகள் நிலையான சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. எனவே, அந்த சொத்துக்களின் காணப்படும் தன்மை சந்தேகத்திற்குரியதாக இருப்ப தால், வருடாந்த சொத்து மெய்மை யாய்வில் அந்த சொத்துக்களை இனங்காண முடியவில்லை. | பணியகத்தின் அனைத்து சொத்து க்களையும் குறியீடு செய்றதவற்கு தேவையான நடவ டிக்கைகளை எடுத் தல் வேண்டும். | நிலை யான சொத்துக்களை குறியீடு செய்தலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| 1.4 | பெறுமானத் தேய்வை பணியகத்தின் ஒவ்வொரு தளமும் நடாத்திய சொத்து மெய்மையாய்வின் படி அந்த சொத்துக்களின் உண்மையான காணப்படும் தன்மையை கருத்தில் கொள்ளாமல் பொதுப் பேரேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளின் அடிப்படையில் கணிப்பிட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட சொத்துப் பதிவேட்டை பணியகம் பராமரித்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா.646,315,029 கிரயமான அத்தகைய சொத்துகளினதும் அவற்றின் மீது 2020 இல் மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா.58,383,489 | பொதுப் பேரேட்டில் காட்டப்பட்டுள்ள நிலையான சொத் துக்களின் பௌதீக காணப்படு தன்மை யை உறுதிப்படுத்திய பின்னரே பெறுமானத்தேய் வு கணிப்பிடப்படுத ல் வேண்டும். மேலும், வருடாந்த சொத்து மெய்மையாய்வை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் நாளதுவரையாக் கி மையப்படுத்திய நிலையான | நிலையான சொத்துக்களின் பௌதீக காணப்படு தன்மையை மெய்மையாய்வு செய்யும் செயல்முறை இடம்பெற்று வருகின்றது. | நிலையான சொத்துக்களின் பௌதீக இருப்பை சரிபார்க்கும் செயல்முறை நடந்து வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையான பெறுமானத்தேய்வினதும் சரியான மற்றும் நம்பகத்தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | சொாத் துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும | | |
| 2 | கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் | | | |
| | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளிற்கும் அந்த திகதியில் உள்ளவாறு அந்தத் தளங்கள் மற்றும் பிரிவுகளால் தயாரிக்கப் பட்ட பட்டோலைகளில் உள்ளடக் கப்பட்டுள்ள பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளி ற்கும் இடையே 19 சந்தர்ப்ப ங்களில் ரூபா 29,028,235 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன்படி, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி, ஒத்த தொகையால் அதிகரித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்குறிப்பிட்ட வேறுபாடுகளில் ரூபா 8,927,514 அல்லது 23 சதவீதம் மட்டுமே 2021 செப்தெம்பர் 30 வரை கணக்கு களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு முன், பேரேட்டு நிலுவைகளை அட்டவணைகளு டன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். | நாம் இதனை கணக்கிணக்கம் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம். இவை 2021 ஆம் ஆண்டில் அகற்றப்படும். | மாற்றங்களுக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. |
| 3 | பெறவேண்டியவை | | | |
| 3. (அ) | வியாபாரக் கடன்பட்டோா் ரூபா.5,977,305,595 ஆனதுடன் அதில் ரூபா.2,674,662,841 மற்றும் ரூபா.1,449,987,960 தொகைகள் முறையே 3 ஆண்டுகள் மற்றும் 5 | நிலுவையாகவுள் ள மீதிகள் தாமதமின்றி அறவிடப்படுதல் வேண்டும். | வியாபாரக் கடன்ப ட்டோர் நிலுவைகளை ஆய்வு செய்து, நிலுவைத் தொகையை வசூலிக்க தொடர்ந்து முயற்சி களை | கடன் நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின் றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.<br><br>இந்த மீதிகளை அறவிடுவதற்கு முடி யுமா அல்லது இல்லையா என்பதை மதிப்பிடுவதற்கு உடன டியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு பயனுள்ள படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | மேற்கொண்டுள்ளோம். | |
| 3.<br><br>(ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணித்து முடிக்கப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட கட்டுமானத் திட்டங்களுக் குரிய ரூபா 894,598,087 மற்றும் ரூபா 543,001,855, பிடிகாசு தொகையை வசூலிக்க முறையே 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டு களுக்கும் மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேற்படி நிலுவைகளில் ரூபா 15,498,200 தொகை மாத்திரமே 2021 சனவரி 01 முதல் நவம்பர் 30 வரையிலான காலப்பகுதியில் அறவிடப்பட்டுள்ளது. | மிக நீண்டகாலத்திற் கு முன்னர் பூரணப்படுத்த ப்பட்ட செயற்திட்டங்க ளுடன் சம்பந்தப்பட்ட பிடிகாசு நிலுவைகளை தாமதமின்றி அறவிடுவ தற்காக உரிய பொறிமுறையொ ன்று அறிமுகப்படுத்த ப்படுதல் வேண்டும். | வாடிக்கையாளர்களால் உரிய பிடிகாசு விடுவிக்கப்படவில்லை. இதற்கிடையில், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள பிடிகாசு மீதிகளுக்கு 44% நட்டக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை மீட்பதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 4 | செலுத்த வேண்டியவை | | | |
| 4.1 | பணியகத்தால் செலுத்த வேண்டிய வருமான வரி நிலுவை ரூபா 897,795,802 ஆகும். அதில், ரூபா 152,446,819 மற்றும் ரூபா 700,484,023 ஆகியவை முறையே 05 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. இந்த நிலுவையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு அல்லது உள்நாட்டு இறைவரி | பணியகம் உள்நாட்டு இறைவரிச் சட்டத்து டன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது டன் தாமதக் கொடுப் பனவுகள் மீது மிகை அறவீடு விதிக்கப்படு வதை தவிர்ப்பதற் காக செலுத்த வேண்டிய | 2020 ஆம் ஆண்டில் மொத்த வருமான வரிப் பொறுப்பில் ரூபா 69 மில்லியன் தொகையைத் தீர்த்துள்ளது. மீதமுள்ள தொகையை செலுத்த ஏற்பாடுகள் நடந்து வருகிறது. | இதுவரை நிலுவைத் தொகை தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணையாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | வருமான வரியை உள்நாட்டு இறைவரி ஆணையா ளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| 4.2 | 90 சதவீதம் அல்லது முழுமையாக நிர்மாண வேலை பூரணப்படுத்தப்பட்ட 13 செயற்திட்டங்கள் தொடர்பில வேலை ஆரம்பித்தலுக்காக பெறப்பட்ட ரூபா.32,942,162 தொகையான முன்பணம் இன்னும் கணக்குகளில் தீர்க்கப்படாமல் உள்ளன. | நீண்டகாலமாக நிலு வையாகவுள்ள சாத் தியமான அனைத்து வேலை ஆரம்பித்தல் முற்பண மீதிகளை தாமதமின்றி தீர்ப்ப னவு செய்வதற்கும் ஏனையவற்றை வரு மானமாக கருதுவதற் கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேற்கூறிய பணிகளைத் தொடங்குவதற்கான முன்பணம் வாடிக்கையாளர்களால் ஈடுசெய்யப்பட்டால்அதற் கான தொகையை தீர்ப்ப னவு செய்ய பணியகம் செயல்பட்டு வருகிறது. | இந்தத் தொகையை வருவாயாக எடுத்துக்கொள்வதற்கா ன சபை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது . |
| 4.3 | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 218,474,698 மற்றும் ரூபா 647,016,183 தொகை ஆன கடன்கொடுத்தோர்களும் ரூபா 521,142,737 மற்றும் 403,493,350 தொகையான செலுத்த வேண்டிய பிடிகாசும் முறையே 3 முதல் 5 ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப் படாமல் உள்ளன. மேலும், ரூபா 11,881,461 தொகையான அட்டுறு செலவுகள் அந்த திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளன. | கடன் கொடுத்தோர் உரிய காலத்தில் தீர்க்கப்படுதல் வேண் டுமென்பதுடன், விடு விக்க முடியுமான தொகைகளை விடு விப்பதற்கும் ஏனை யவற்றை வருமான மாக கருதுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிலுவைகளை தீர்க்க கணிசமான நேரம் எடுக்கும். | இந்த நிலுவைகள் இன்று வரை தீர்க்கப்படவில்லை. |
| 5 | முற்பணங்கள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பல்வேறு நோக்கங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா4,178,158 மற்றும் ரூபா1,463,688 முற்பணங்கள் முறையே 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்கள் வழங் கப்பட்ட நோக்கம் முடிவடைந்தவுட ன் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | இவற்றில் சில நிலுவை கள் அடையாளம் காணப்படாத நீண்ட கால நிலுவைகளாக இருப்பதாலும் ஒரு சில நிலுவைகளை பதிவழிப்புச் செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறு வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த நிலுவைகள் தொடர்பில் இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| 6 | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | | | |
| 6.1 | பொது முயற்சிக ளின் நல்லாளுகைக் கான வழிகாட்டல்கள் மீதான **2003** யூன் **02** ஆந் திகதிய பீஈடீ **12** ஆம் இலக்க பொமுது முயற்சிகள் சுற்றறி க்கை. | | | |
| 6.1.<br>(அ) | (i) பந்தி 9.3.1<br>பணியகத்தில் அங்கீகரிக் கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் **(SOR)** ஒன்று இருக்க வேண்டுமாயினும், அத்தகைய திட்டம் ஒன்று நடுத்தர மற்றும் உயர் மட்ட நிர்வாக பதவிகளுக்காக தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப் பட்டிருக்கவில்லை. | பணியகத்திடம் அனைத்து மட்டங்களிற்கும ான அங்கீகரிக்கப்பட் ட பதவியணிக்குரி ய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் இருக்க வேண்டும். | சகல நிலை வரை ஆட் சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தை தயாரித்து அதற்கு சபை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் **(MSD)** அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட் டது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. |
| 6.1<br>(ஆ) | 9.14 ஆம் பந்தி<br>மனித வள முகாமைத்துவ த்துடன் தொடர்புடைய அனை த்து விடயங்களையும் உள்ள டக்கிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வழங்கு கின்ற நடைமுறை வழிகாட் டல் கையேடொன்று காணப் பட வேண்டிய போதிலும், | மனிதவள மற்றும் நிதி விடயங்களி ற்கான அங்கீகரித்த வழிகாட்டல் கையேடுகள் பணியகத்திடம் காணப்படுதல் வேண்டும். | மனித வள முகாமைத் துவத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்க ளையும் உள்ளடக்கிய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை வழங்குகின்ற வழிகாட்டல் கையேடொன்று மனிதவள மற்றும் | மனித வளங்கள் மற்றும் நிர்வாகச் செயல்பாடுகள் கையேடு அங்கீகரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணியகத்தின் மனித வளத்தை வினைத்திறனாக முகாமைத்து வம் செய்வதற்கேற்ற அவ்வா றானதோர் அங்கீகரித்த வழிகாட்டல் கையேடொன்றை பணியகம் வைத்திருக்கவி ல்லை. | | நிர்வாகப் பரிவால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | |
| 7 | **காசு முகாமைத்துவம** | | | |
| | வங்கி மீதியான ரூபா 3,310,974 தொகை 11 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 1 முதல் 2 ஆண்டுகள் வரை விளைவற்றதாக வைத்திருக்கப்பட்டதுடன், இந்த செயலற்ற வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு இதுவரை நிர்வாகத்தின் கவனம் இல்லை. | செயற்பாடற்ற வங் கிக் கணக்குகளை முடுவதற்கு தேவை யான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இதில், தேவையின் அடிப்படையில் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு, மீதமுள்ள கணக்குகள் மூடப்பட்டு வருகின்றன. | இந்த நடப்புக் கணக்குகள் அனைத்தும் இன்னும் செயல்படவில்லை. |
| 8<br><br>**8.1** | செயற்பாட்டு மீளாய்வு<br><br>முகாமைத்துவ செயற்திறனின்மை | | | |
| | பணியகத்துடன் கைச்சாத்திட்டிருந்த பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய மற்றும் 2007 முதல் 2018 வரையிலான கால கட்டத்தில் சம்பள விடுப்பில் வெளிநாடு சென்றிருந்த 09 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,157,098 தொகையான பாடநெறிக் கட்டணத்தை வசூலிப்பத ற்கு பணியகம் முறையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருந்தது. | பிணை முறி உடன்படிக்கைக ளில் கையெழுத்திட்டு அதனை மீறியிருந்த அந்த உத்தியோ கத்தர்களிற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 07 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் சட்ட நடவடிக்கைக்காக சட்டப் பிரிவுக்கு யைளிக்கப் பட்டதுடன், ஏனையவர்க ளுக்கு ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. | இந்த பணம் இது வரை மீட்கப்படாததுடன் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| 8.2 | செயற்பாட்டுச் செயற்திறனின்மை | | | |
| 8.2<br><br>(அ) | பணியகம் **2018, 2019** மற்றும் **2020** ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா.**3,254.13** மில்லியன், ரூபா.**3,173.68** மில்லியன் | நிதி வருமானத்தை அதிகரிப்பதனை க் காட்டிலும் பணியக த்தின் செயற்பாட்டு | நமது வருமானம் மற்றும் இலாபம் அதிகமாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்பாட்டு இலாபத்தை அதிகரிக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் ரூபா.**3,419.65** மில்லியன் குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீட்டு வழிகளில் முதலீடு செய்துள்ளது. **2018**, **2019** மற்றும் **2020** ஆம் ஆண்டுகளில் அந்த முதலீடுகளின் மூலம் முறையே ரூபா.**290.82** மில்லியன், ரூபா.**310.24** மில்லியன் மற்றும் ரூபா.**258.35** மில்லியன் நிகர வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த நிகர வட்டி வருமானம் அந்த ஆண்டுகளுக்கான வரி இலாபத்தில் **55** சதவீதம், **91** சதவீதம் மற்றும் **99** சதவீதம் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. | வருமானத்தை அதி கரித்துக் கொள்வத ற்கு பணியகத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | | |
| **8.2.** **(ஆ)** | ஈபீசீ பிரிவிலுள்ள பணியகத்தின் 09 தள அலுவலகங்கள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 93,092,128 செயற்பாட்டு நட்டத்தை ஈட்டியிருந் ததுடன், இந்த தள அலுவலகங்களில் 05 தள அலுவலகங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நட்டத்தை அறிவித்தருந்தன. மேலும் 03 தள அலுவலகங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நட்டத்தை அறிவித்திருந்தன. அத்துடன், 13 மதியுரைச் சேவைப் பிரிவுகள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 351,934,685 செயற்பாட்டு நட்டத்தை ஈட்டியிருந்ததுடன், அவற்றில் 03 மதியுரைச் சேவை பிரிவுகள் 2018 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நட்டத்தை அறிவித்தருந்தன. | நிர்மாணக் கைத் தொழிலுடன் சம்பந்த ப்பட்ட பல்வேறு வணிக செயற்பாடு களை கண்டறிவதன் மூலம் இந்த நட்டங் களை இழிவுபடுத்து வதற்கும் காணப்படு கின்ற பௌதீக மற்றும் மனித வளங் களிலிருந்து உச்ச பயன்பாட்டை பெற் றுக் கொள்வதற்கும் பணியகம் அதன் கவனத்தை செலுத்த வேண்டும். | பணியகத்தின் பௌதீக மற்றும் மனித வளங்களிலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பணியகத்தின் நோக் கெல்லைக்கு உட்பட்டு சாத்திய மான புதிய வணிக வாய்ப்புக் களை கண்டறிய முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது. | செயற்பாட்டு லாபத்தை அதிகரிக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது . |
| 8.2 | பணியகத்தின் நிர்மாணங்கள் பிரிவின் | எதிர்காலத்தில் இந்த | எதிர்கால கட்டுமான திட்டங்களால் ஏற்படும் | இழப்பைக் குறைக்க எந்த ஒரு பயனுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பூரணப்படுத்திய செயற்திட்டங்களில் 10 நிர்மாண வேலைகள் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 134,509,922 மொத்த நட்டத்தை ஈட்டியிருந்தன.<br>அதேபோல் 2019 ஆண்டின் இறுதியிலும் மொத்தம் ரூபா **197,137,979** இழப்புடன் **31** கட்டுமானத் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுன் அவற்றில் பணியகத்தின் துணைக் கம்பனிக்கு உப ஒப்பந்த அடிப்ப டையில் வழங்கப்பட்டிருந்த **14** செயற்திட்டங்கள் ரூபா.**52,278,277** நட்டத்துடன் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. | நட்டங்களைத் தவிர்ப் பதற்கு பணியகம் பயனுள்ள நடவடிக் கைகளை எடுத்தல் வேண்டும். | இழப்புகளை குறைக்க பணியகம் ஒரு தனி பிரிவை (Project Monitoring Unit) நிறுவியுள்ளது. | நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| 8.2<br>(ஈ) | அனைத்து கட்டுமானப் பணிகளையும் துணை நிறுவனத்திடம் ஒப்படைத்ததால், பணியகம் தற்போது ஆலோசனைப் பணியில் மட்டுமே ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக, **2012**ஆம் ஆண்டில், ஒரு பொறியாளர் மற்றும் ஒரு ஊழியர் முறையே ரூபா. **23.58** மில்லியன் மற்றும் ரூபா. **8.97** மில்லியன் வருமானம் ஈட்டுப்பட்டது. **2020** ஆம் ஆண்டளவில் ரூபா. **7.72** மில்லியனாகவும், ரூபா. **2.72** மில்லியனாகவும் குறைந்துள்ளது. எனவே, கணக்காய்வின் போது **402** பொறியாளர்கள் உட்பட அன்னளவாக **1141** ஊழியர்களை ஆலோசனை வருமானம் ஈட்டுவதற்காக மட்டுமே பணியமர்த்தப்பட்டது சிக்கலாக இருந்தது. | சுமார் ரூபா.**2,000** மில்லியன் ஆலோசனை வருமானத்தை ஈட்ட **402** பொறியியலாளர் கள் உட்பட **1141** ஊழியர்களை பணியமர்த்த வேண்டியதன் அவசியத்தை பணியகம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். | 2012 மற்றும் 2018 க்கு இடையில், பணியகம் படிப்படியாக அதன் கட்டுமான சேவை வணிகத்தை நிர்வகிக்கப்பட்ட நிறுவனத்திற்கு மாற்றியது. எனவே, இந்த நேரத்தில் புதிய கட்டுமானப் பணிகளில் பணியகம் நேரடியாக ஈடுபடவில்லை. | மனித வளத்தை அதிகபட்சமாக பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் | | | |
| 9.1 | பணியகத்தின் வளங்களை பயன்படுத்தியமைக்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,652,545,484 தொகை துணைக் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்ததுடன், பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் இந்த மீதி உறவுமுறைத் தரப்பிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. இந்த மீதி தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 1,147,466,029 ஆகக் காணப்பட்டது. இந்த மீதியை அகற்றுவதற்காக கிடைக்கக்கூடியதாகவுள்ள மாற்றுவழிகளை கருத்திற் கொண்ட பின்னர் பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது ள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ த்தால் சமரச நடைமுறை யொன்று அறிமுகப்ப டுத்தப்படுதல் வேண் டும். | தற்போது இந்த மீதியை பகுப்பாய்வு செய்வ தற்காக பணியகமும் துணை க்கம்பனியும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சபைக்கு பத்தர மொன்று சமர்ப்பிக்கப்படவு ள்ளது. | இந்த நிலுவைகள் தீர்க்கப்படவில்லை. |
| 9.2 | சரண மாவத்தையில் அமைந்துள்ள பணியகத்திற்குச் சொந்தமான மூன்று உத்தியோகபூர்வ இல்லங்கள் 2004 ஆம் ஆண்டு முதல் மூன்று பராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுடன் முறையே ஆகஸ்ட் **2015** முதல் நவம்பர் **2019** வரை மேலும் இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்கள் முன்னைநாள் மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் (2019 யூன் 09 இல் ஓய்வுபெற்ற) செயலாளர், | இது தொடர்பில் பணி யகத்தின் நிர்வாக நடைமுறைகளி ன் X ஆம் அத்தியாயத்தி லுள்ள ஏற்பாடுகளை கண்டிப்பாக பின்பற்று தல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற் காக குறித்துக் கொள்ளப்பட்டது. | வாடகை மற்றும் பயன்பாட்டு கட்டணங்கள் முறையாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் ஜனவரி **2015** முதல் மே **2019** வரை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், மற்றும் முன்னைநாள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தன. அதுமட்டுமல்லாமல் 2004 ஆம் ஆண்டு முதல் மகாவலி அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகங்களுக்கு மேலும் ஒரு உத்தியோகபூர்வ இல்லம் மகாவலி அதிகார சபை என்ற பெயரில் ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இது சம்பந்தமாக உரிய தரப்பினர்களிற்கும் பணியகத்திற்கும் இடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராததுடன், முன்னைநாள் மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், மற்றும் முன்னைநாள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ஆகியோரிடமிருந்து வாடகை எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்விற்குக் கிடைக் கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து மீளாய்வாண்டிற்கான வாடகையாக ரூபா 741,154 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.3 | பணியகத்தின் மறைந்த தொழிற்படு பணிப்பாளரின் இறுதிக் கிரியைகளி ற்கான ரூபா **613,360** செலவுக ளைச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை **2019** அக்தோபர் **21** இல் அங்கீகாரம் அளித்திருந்தது. மேற்படி தொகையில் ரூபா **138,360** இற்கான காசோலையொன்று பணியகத்தின் பெயருக்கு எழுதப்பட்டிருந்தது. இதற்கிடையில், மீதமுள்ள தொகைக்கான காசோலையை, இறுதி ஊர்வல அமைப்பின் பெயரில் எழுதி, செலுத்தப்பட்டது.<br><br>இந்த செலவினம் பணியகத்தின் செயல் பாடுகளுடன் தொடர்புடைய செல வினம் அல்ல என்றாலும், நிர்வாக செலவினங்களின் கீழ் காட்டப்பட் டிருந்தது. | இந்த வகையான முறையற்ற கொடுக் கல் வாங்கல்களில் ஈடுபடுவதைத் தவிர்ப் பதற்காக பணியகம் நடைமுறையிலு ள்ள விதிகள் மற்றும் பிரமா ணங்களுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். | பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் பணம் செலுத்தப்பட்டதுடன் எதிர்கால த்தில் சுற்றறிக்கையுடன் இணங்கி ஒழுகு வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 10 | திட்ட நிர்வாகத்தில் குறைபாடுகள் | | | |
| 10.1 | அம்பாறை மாவட்டத்திலுள்ள ரமபகன்ஓய இல் விவசாய பொறியியல் துறை முதலீட்டுச் செயற்திட்டமொன்றை அமுல்படுத்து வதற்கு 2020 யூன் 23 ஆந் திகதி சபை தீர்மானமொன்றை எடுத்திரு ந்தது. அதற்கமைய, இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்காக ரூபா 70 மில்லியன் தொகை பணியகத்தின் நிதியிலி ருந்து ஒதுக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.1 (அ) | இந்த செயற்திட்டத்தை மேற் கொள்வதற்காக 30 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் 150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி யை இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து (MASL) பெற்று க்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. இருப்பினும், இந்த விடயத்தை முடிவாக்குவதற்கு இவ்வறிக்கைத் திகதி வரை யிலும் பணியகம் தவறியிருந்தது. | செயற்திட்டத்தை அமுல்படுத்த முன்னர் காணியின் சட்ட ரீதியான உரிமையை பெற்றுக் கொள்தல் வேண்டும். | வர்த்தக ரீதியான விவசாய செயற்திட்டத்திற்கு இந்தக் காணியை குத்தகையில் வழங்கவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இந்தக் கூட்டத்தில் மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். | இதுவரை குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில் லை. . |
| 10.1 (ஆ) | இந்த பகுதியில் யானைகளின் நடமாட்டம் காணப்படுகின்றமை பௌதீக கணக்காய்வில் கண்டறியப்பட்டுள்ளமையால் தற்போது நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ள யானை மனித மோதல் நிலைமை மேலும் அதிகரிப்ப தற்கான சாத்தியக்கூறுகளை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவத ற்கு முன்னர் இச்செயற்திட் டத்தின் சமூக மற்றும் சுற்றாடல் இயலுமை குறித்து கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். | மகாவலி அதிகார சபையால் செயற்திட்டம் அடையாளம் காணப்பட்ட கட்டத்தில் மனித-யானை மோதல் விவகாரங்கள் மகாவலி அதிகார சபையால் தீர்க்கப்பட்டுள்ளது. | இந்த பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. |
| 10.1 (இ) | மேற்படி நிலப்பரப்பில் சுமார் 60 ஏக்கர் சோளமும் 15 ஏக்கர் உளுந்தும் பயிரிடப்பட்டுள் ளதாக பணியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எவ்வாறா யினும், மேலே பயிரிடப்பட்ட பகுதியின் உண்மையான பரப்பளவை உறுதிப்படுத்து வதற்கு கணக்காய்விற்கு எந்த உறுதிப்படுத்லும் வழங்கவி ல்லை. எனவே, அறிவிக்கப் பட்டதை காட்டிலும் அதிக பரப்பளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமைக்கான வாய்ப்பு காணப்படுகின்றது. | பயிரிடப்பட்டுள்ள பிர தேசத்தின் விஸ்தீரண த்தை மதிப்பிடுவதற் காக உரிய பொறி முறையொன்று அறிமு கப்படுத்தப்படுத ல் வேண்டும். | தற்போது, பல்வேறு அம்சங்கள் மற்றும் அளவீடுகளின் அடிப்படையில் நிலத்தை அடையாளம் காண்ப தற்கு பணியகம் விரிவான பொறியியல் கணக்கெடுப்பை நடத்தியுள்ளது. | கணக்காய்வுக்கு குறிப்பிட்ட உறுதிப்படுத்தல் எதுவும் வழங்கப்படவில்லை. |
| 10.1 (ஈ) | அறுவடை செய்யப்பட்ட மக்காச்சோளத்தை களத்திலோ அல்லது | தாமதமின்றி செயற் திட்டத்திற்காக | பணியகம் குறித்த பண்ணையில் ஒரு களஞ்சியக் கட்டிடத்தை | போதிய கயஞ்சிய வசதிகள் இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணியகத்திற்குச் சொந்தமான அம்பாறை பணியிடத்திலோ களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பொருத்தமான கட்டிட வசதிகள் காணப்பட வில்லை. அறுவடை செய்யப்பட்ட சோளம், நிர்மாணிக் கப்பட்டு வருகின்ற கட்டிட மொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் அத னைப் பாதுகாப்பாகப் வைத்திருந்து அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக உரிய விதத்தில் களஞ்சியப் படுத்துவதற்கு பணியகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | பொருத் தமான களஞ்சிய வசதிகள் வழங்கப் படுதல் வேண்டும். | நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளது, அது 90மூ நிறைவடைந்துள்ளது. | |
| 10.1 (உ) | இப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை தொடர்பில் அப்பகுதி மக்கள் பல தடவைகள் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்ததுடன் சட்டரீதி யான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். எனவே இச் செயற்திட்டம் தொடர்பில் நிச்சயமற்ற நிலை காணப்படு கின்றமை அவதானிக்கப்படு கின்றது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவத ற்கு முன்னர் இச்செயற்திட் டத்தின் சமூக மற்றும் சுற்றாடல் இயலுமை குறித்து கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். | அடுத்த 4 மாதங்களுக்குள் சட்டரீதியான விடயங்கள் முடிவடையும் வரை நிரந்தர முதலீடுகள் எதையும் தொடங்க வேண்டாம் என்று எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | பிரச்சினைகளை தீர்ப்பதறகான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 11 | மனித வள முகாமைத்துவம் | | | |
| | பொது முயற்சிகளின் நல்லாளுகைக் கான வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறி க்கையின் 9.2(உ) மற்று (ஊ) பந்திகளிற்கு முரணாக அங்கீகரிக் கப்பட்ட ஊழியர் கோப்புக்கு 03 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு 25 உத்தியோகத்தர்கள் மீளாய்வா ண்டில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | பணியகம் தற்போது ஆலோசனை சேவைகளை வழங்குவதில் மட்டுமே ஈடுபட்டுள்ளதால் , தற்போது அங்கீகரிக்கப்பட் ட ஊழியர்களின் எண்ணிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும், | பணியகம் அங்கீகரிக் கப்பட்ட ஊழியர் கோப்பை விஞ்சி உத்தேச செயற்திட்ட பணிகளிற்காக மாத்திரமே ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்ப்பை மேற்கொள்கின்றது. | திருத்தப்பட்ட ஆளணி நிர்வாக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பை விஞ்சி 09 பதவிகளுக்கு 182 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க் கப்பட்டிருந்தனர். | பொருத்தமான எண்ணிக்கையில ான மனித வளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும், இதனால், அங்கீகரிக்கப்பட் ட ஊழியர்களின் எண்ணிக்கையை த் தாண்டி பணியாளர்களை பணியமர்த்தக்கூ டாது. | | |
| 12 | வாகன குழாம் முகாமைத்துவம் | | | |
| 12.1 | பணியகத்திற்குச் சொந்தமான 331 வாகனங்களில் 48 வாகனங்கள் எந்வொரு தேவைக்காகவும் பயன்படுத் தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அவற்றில் இரண்டு வாகனங்கள் ஓராண்டிற்கும் மேலாக திருத்தப்பட்டு வரப்ப டுவதுடன், ஒரு வாகனத்தின் உரிமைத்துவம் உறுதிப்படுத் தப்படவில்லை. | பணியகத்தின் பௌதீக வளங் களிலிருந்து உச்ச பயன்பா ட்டை பெற்றுக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இப் பிரச்சினைகளை தீர்ப்பதறகான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில் லை. |
| 12.2 | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2019 சனவரி 01 முதல் 2021 யூலை 31 ஆந் திகதி வரையான காலத்தின் போது 60 சந்தர்ப்பங்களில் அநேக வாகன ங்கள் விபத்துக்குள்ளாகியிருந் ததுடன் 57 வாகன விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே காப்புறுதி கோரிக்கைகள் குறித்த காப்புறு திக் கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், விபத்துக்கு ள்ளான வாகனங்களின் எண்ணி க்கை, பெறப்பட்ட காப்புறுதிக் | முழுமையான அறிக்கை யினை சமர்ப்பிப்பதற்கு 7 நாட்களிற்கு மேல் கால தாமதம் ஏற்படின் ஆரம்ப அறிக்கையினை உடனடி யாக அனப்பிவைத்தல் வேண்டுமென்பது டன் விசார ணையின் பின்னர், இழப்பு ஏற்பட்ட தினத்திலிருந்து 3 மாதத்தினுள் முழுமையான அறிக்கை | எதிர்காலத்தில் ஏற்படும் வாகன விபத்துக்கள் குறித்து ஆடிட்டர் ஜெனரலுக்கு விசாரணை செய்து அறிக்கை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. | இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோரிக்கைகளின் பெறுமதி, திருத்துவதற்கு ஏற்பட்ட செலவி னம் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படாததுடன், நட்டப் பொறுப்பு மற்றும் விபத்துக்கான காரணங் களினை அறிந்து கொள்ளவும் பொறுப்புக்களினை சுமத்து வதற்கும் எவ்வித விசாரணை களும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே, அந்த வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் கணக்காய் வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | | |

### 03. விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்

1. நிறுவனத்தின் பெயர்: விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்
2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :

2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| **2018 ஆம் ஆண்டு** | | | | |
| **1** | 2018 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | | | |
| **(i)** | 1981 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்குரிய கோவைகள் அதிக அளவானவையாக இருந்ததுடன் அவற்றில் பல உக்கிப் போய் இருந்ததன் காரணமாக விவசாயிகளின் ஓய்வூதிய முகாமைத்துவ நடைமுறையின் மூலம் (Document Management System) பாதுகாத்தல். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயல்முறை நடுவில் நிறுத்தப்பட்டது. | இந்த திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| **(ii)** | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு விவசாயிகளைச் சேர்த்துக்கொள்ளல். | - மேற்படி - | புதிய திட்டம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. | புதிய ஆட்சேர்ப்பு எதுவும் நடைபெறவில்லை. |
| **2019 ஆம் ஆண்டு** | | | | |
| **2** | 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் திட்டத்தின் செயற்படுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை 959,254 ஆக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் பின்னர் முன்மொழிவுத் திட்டத்திலிருந்து விலகிய, பலவீனமடைந்த, மரணித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் | தகவல் முறைமையை நாளது வரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விவசாயிகளின் தரவுகள் புதுப்பிக்கப்படவில்லை. | புதுப்பிக்கப்பட்ட தரவுகள் இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தவணை கொடுப்பனவு செய்யாமை என்ற அடிப்படையில் விலகுதல் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2019 இறுதியில் செயற்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை, வருடாந்தம் சேகரிக்கப்பட வேண்டிய பங்களிப்பு, செலுத்த வேண்டிய சரியான ஓய்வூதியத்தின் பெறுமதி எவ்வளவு என கணித்துக்கொள்ள நலத்திட்டத்திற்கு முடியாதிருந்தது. | | | |
| **3** | தற்போது காணப்படும் முறைமைக்கு பதிலாக விவசாய சமூகத்தினருக்காக புதிய ஓய்வூதிய முறைமை ஒன்றை அறிமுகப்படுத்து வதற்காக நிபுணர் குழுவிற்கு விவசாயிகள் ஓய்வூதிய முறைமை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 04 முன்மொழிவு திட்டங்களுக்குரியதாக கணக்கிடல் அறிக்கை தயாரித்தல், அத்தகைய 4 முன்மொழிவுகளல் தெரிவு செய்யப்பட்ட முறைமையை தயாரிப்பதற்குரிய தகவல்களை நிபுணர் குழவிற்கு மீள தொடர்புபடுத்தல் அந்த முன்மொழிவுகள் தொடர்பாக ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் ஆகஸ்ட் மாதத்திற்குள் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் அதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் கூட்டிணைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் 2019 இறுதி வரை அது செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அரசின் கொள்கையின் பிரகாரம் விரைவில் புதிய ஓய்வூதிய முன்மொழிவு திட்டத்தை தயாரித்து பங்களிப்பாளர் களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | புதிய திட்டம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. | இதுவரை எந்த புதிய முறையும் அறிமுகப்படுத்தப் படவில்லை. |

| 2020 ஆம் ஆண்டு | | | | |
| --- | --- | --- | --- | --- |
| **4** | நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திறனான பங்களிப்பாளர்கள் மற்றும் விவசாய ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிப் பொறுப்பு காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக அவ்வாறான காப்பீட்டு கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 74,155,908,494 ஆகும். மேலும் இக்கடப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியப் பொறுப்பானது மதிப்பீட்டின்படி அவ்வப்போது கணக்கிடப்பட வேண்டும் மற்றும் கடமைகளைச் சந்திக்க போதுமான முதலீடு வைத்திருக்க வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | ஓய்வூதியப் பொறுப்பு மதிப்பீட்டின்படி குறிப்பிட்ட கால இடைவெளியில் கணக்கிடப்படவில்லை மற்றும் பொறுப்புக்களைச் சந்திக்க போதுமான முதலீடு செய்யப்படவில்லை. |
| **5** | பங்களிப்பாளர்கள் ஓய்வூதியத்திற்காகக் கட்டுப்பட்ட திகதி மற்றும் தகைமை பெறும் திகதி என்பவற்றை உள்ளடக்கிய பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியல், செயற்திறனான பங்களிப்பாளர்களின் மாதாந்த பங்களிப்பு பணத்தின் பெறுமதி, தகைமை பெறும் உறுதிப்பத்திரம் செயற்படாற்றுள்ள பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியல் என்பவற்றை நாளதுவரையாக்கி பேணப்படாமையின் காரணமாக பங்களிப்பு, பணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டில் பங்களிப்பாளர்களிடமிருந்து | ஓய்வூதியப் பங்களிப்பாளர் களின் நாளதுவரையாக பேணப்பட வேண்டியதுடன் பங்களிப்பு பணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்க வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | உரிமைப் பத்திரம் செயலற்ற பங்களிப்பாளர்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 96,476,139 மாத்திரம் காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | | |
| **6** | திட்டத்தின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 78,198,513,683 மறை மீதியாக இருந்ததுடன், நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 5,028,075,667 ஆக இருந்தது. மேலும் 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் பணிப்புரையின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தும் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தல் 1987 மே 07 ஆந் திகதிய 452/12 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் பங்களிப்பு முறையே ரூபா 21,495,773 மற்றும் ரூபா 19,316,409 தொகைகளாக இருந்ததுடன் ஓய்வூதியக் கொடுப்பனவு முறையே ரூபா 3,217,332,522 மற்றும் ரூபா 4,502,560,108 ஆக இருந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரித்தமையின் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 3,065,000,000, ரூபா | திட்டத்தை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போதுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண புதிய திட்டம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. | திறைசேரியில் இருந்து பங்களிப்பு இல்லாமல், திட்டம் இயங்க முடியாத நிலையில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4,450,949,000 தொகைகள் திறைசேரியின் மூலம் கிடைத்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இன்றி திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது. | | | |
| **7** | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| **(i)** | 4 ஆம் பிரிவு நிர்ணயிக்கப்பட்ட தகைமைகளைக் கொண்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு தமது தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத நிரந்தரமாக, அரைகுறையாக அல்லது முழுமையாக இயலாமைக்கு உள்ளாகுகையில் பொருளாதார ரீதியாக ஏதாவது முன்னேற்றம் பெறுவதற்கு படிகளைச் செலுத்துதல், மரணத்தின் போது மரணப் பணிக்கொடையைச் செலுத்துதல் மற்றும் 60 வயதினை பூர்த்தி செய்கையில் ஓய்வூதியம் செலுத்தும் குறிக்கோளுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை திட்டத்திற்கு அங்கத்தவர் எவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தற்போதுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண புதிய திட்டம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. | இத்திட்டம் உறுப்பினர்களை சேர்க்கவில்லை. |
| **(ii)** | 6(i) ஆம் பிரிவு 60 வயது பூர்த்தியடைந்த நாளிலிருந்து அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த வேண்டிய போதிலும் ஓய்வூதியம் செலுத்த வேண்டிய திகதியிலிருந்து அல்லாது ஓய்வூதியம் தயாரித்த திகதியிலிருந்து | 60 வயதினைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து விவசாயிகள் ஓய்வூதியம் செலுத்துதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | விவசாயிகளுக்கு நிலுவை ஓய்வூதியம் வழங்கப்படாமல், ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட நாளிலிருந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் அக்காலப்பகுதியில் செலுத்த வேண்டிய நிலுவையான ஓய்வூதியத்திற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 திசெம்பர் 31 வரை 8 ஆண்டுகளுக்காக 125,828 விவசாயிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலுவையான ரூபா 3,745,948,105 கூட்டு மொத்தமான ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **(iii)** | 15(2) மற்றும் (3)ஆம் பிரிவு பங்களிப்பாளர் பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது தவணைப் பணத்தை முறைப்படியாக செலுத்தாமையின் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்வதற்காக அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தெரிவித்தல் செய்யப்படாமையின் காரணாக **60** வயதினைப் பூர்த்தி செய்த ஓய்வூதியம் பெறுவதற்குத் தகைமையுள்ளது எனக் கருதி **1451** நபர்களால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | தவணைப் பணத்தை முறைப்படியாக செலுத்தாததன் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | பங்களிப்பாளர்களுக்கு பலன்கள் கிடைக்கப்பெறாமைக் குறித்து தெரிவிக்கப்படாததால் மேல்முறையீடு செய்வதற்கான வாய்ப்பை இழக்கின்றனர். |
| **(iv)** | 20 ஆம் பிரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ள ஆலோசனைத் தெரிவுக் குழுவினால் அமுல்படுத்தப்பட வேண்டிய அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு ஆலோசனைத் தெரிவுக்குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்றுவரை தெரிவுக்குழு கூட்டப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனை தெரிவுக் குழு கூட்டப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2016 முதல் இந்தக் குழு கூடவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **8** | 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டத்தையும் பழைய திட்டத்தையும் ஒப்பீடு செய்த போது புதிய திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கின்ற நலன்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதனால் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தில் புதிய திட்டத்தை நாளதுவரையாக்குதல் மற்றும் புதிய சமூக பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை இச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 இறுதி வரை, இந்த பணி முடிக்கப்படவில்லை. |
| **9** | 2020 சனவரியிலிருந்து ஒக்தோபர் வரை அண்ணளவாக 161,000 விவசாய ஓய்வூதியக்காரர் களுக்காக ரூபா 3,809,491,790 பணம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் 14 மாவட்ட கணக்கு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை செலுத்தப்படாத ஓய்வூதியம் ரூபா 76,019,485 தொகை சபைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாமைக்கு அடிப்படையான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கும் தகைமை பெறாத ஓய்வூதியக்காரர்கள் தொடர்பாக தகவல்களைக் கோரி தற்பொழுது உயிர் வாழவில்லையாயின் ஓய்வுபெறுவோர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் சபை | ஓய்வூதியக் காரர்களின் பெயர்ப் பட்டியலை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | ஓய்வூதிய பெயர் பட்டியல் இன்று வரை முறையாக பராமரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கவில்லை. | | | |
| **10** | 1992 - 2002 வரையான காலமாக முன் கொண்டு வரப்பட்டுக் காணப்படுகின்ற வைப்புச் செய்யப்பட்ட எனினும் தேறப்படாத 3 வங்கி கணக்குகளுக்குரிய ரூபா 1,179,624 பெறுமதியான 117 காசோலைகளை மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. | விடயத்தை ஆராய்ந்து பார்த்து தேறப்படாத காசோலைகளை தீர்த்து வைத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 117 மாற்றப்படாத காசோலைகள் மீளாய்வாண்டின் இறுதிக்குள் தீர்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| **11** | 2014 சனவரியிலிருந்து அமுல்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட விவசாய பங்களிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கிய முறைமைகளை நாளதுவரையாக்குவதனைக் குறிக்கோளாகக் கொண்டு ரூபா 1,726,875 தொகை செலவு செய்து 08 மாவட்டங்களில் மாத்திரம் மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் ஏனைய மாவட்டங்களில் மீளாய்வு நடவடிக்கையை மேற்கொண்டு தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்றதாக மாறியிருந்ததுடன் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட விவசாய பங்களிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கும் நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட விவசாயி பங்களிப் பாளர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்களை உள்ளடக்கிய முறைமையை நாளது வரையாக்குதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | புதுப்பிக்கப்பட்ட தரவு அமைப்பு இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **12** | மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓய்வூதியங்களைத் தயாரிப்பதற்காக 7,402 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 1,837 விண்ணப்பங்களுக்கு நலன்களை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | விவசாய மக்களுக்கு விரைவாக நலன்களை வழங்குதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 1,837 விண்ணப்பங்களுக்கு பலன்கள் வழங்கப்படவில்லை. |

**04. கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்**

1. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்

2. நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் -

| | |
|---|---|
| 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2020 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| **2019 ஆம் ஆண்டு** | | | | |
| **01** | 2019 உத்தேச முறைமைக்கான மொத்த பங்களிப்பு ரூபா 340,189 ஆன போதிலும், மொத்த ஓய்வூதிய கொடுப்பனவு ரூபா 63,346,699 தொகையும் தேறிய தவணை கொடுப்பனவு ரூபா 1,293,842 மற்றும் மரணமடைந்த அங்கத்தவர்களின் நலன்களை செலுத்துதல் ரூபா 368,000 ஆனமையினால் கிடைத்த பங்ககளிப்பினை விஞ்சி நிதியத்திலிருந்து ரூபா 64,668,352 தொகை உத்தேச முறைமையிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | நிதி இயலுமையுடன் கூடிய புதிய உத்தேச முறைமையொன்றை தயாரித்து புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான திட்டத்திற்கான மொத்த பங்களிப்பு ரூபா.90,148 ஆக இருந்தாலும், மொத்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் ரூபா.112,037,370 ஆகவும், நிகர பிரீமியம் கொடுப்பனவுகள் ரூபா.724,189 ஆகவும் மற்றும் இறப்பு நன்மைக்கான கொடுப்பனவுகள் ரூபா.322,000 ஆகவும் உள்ளது. இத்திட்டத்தின் ஊடாக பெறப்பட்ட பங்களிப்புக்கு மேலதிகமாக ரூபா. 112,993,411 நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| **2020 ஆம் ஆண்டு** | | | | |
| **02** | நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடான பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பிற்காக காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ளாது | ஓய்வூதியப் பொறுப்பானது காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டின் பிரகாரம் கால ரீதியாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிப் பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டுள்ள | 2007 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஓய்வூதியப் பொறுப்பு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த மீதி ரூபா 4,261,454,710 ஆகும். | | து. | |
| 03 | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ஓய்வூதிய பொறுப்பு ரூபா 4,261,454,710 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 8.83 சதவீதத்தினால் அதிகரிப்பாகும். அவ்வாறே திரண்ட நிதியத்தில் தேறிய சொத்துக்கள் நிலைமையானது ரூபா 3,675,902,450 மறைப் பெறுமதி வரை அதாவது முன்னைய ஆண்டினை விட 11.76 சதவீதம் அதிகரித்திருந்ததனால் அதுவும் திட்டத்தின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் அடுத்துவரும் ஆண்டுகளின் போது இந்நிலைமையானது மேலும் அதிகரிக்கக் கூடியதாக இருப்பதனால் அது தொடர்பாக கவனம் செலுத்தி திட்டத்தை மீளமைப்புச் செய்து நிதி சாத்திய வளத்தன்மையுடன் அமுல்படுத்துவதற்கு திட்டம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திட்டத்தினை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இத்திட்டம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு நிதி நிலைத்தன்மையுடன் செயல்படுத்தப்படவி ல்லை. |
| 04 | 2010 ஆம் ஆண்டிலிருந்து கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்திற்கு பல சந்தர்ப்பங்களின் போது ரூபா 518,000,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டிப் பணம் ரூபா 338,949,572 கூட்டுமொத்தமாகும். | கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில், கடன் மற்றும் வட்டியின் மொத்தத் தொகை ரூபா.338,949,572 ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **05** | 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்ட அதிகாரச்சட்டம் | | | |
| (அ) | 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் நிர்ணயிக்கப்பட்ட தகமைகளைக் கொண்ட 18 வயதிற்கு குறையாத மற்றும் 59 வயதிற்கு மேற்படாத கடற்றொழிலாளர்களுக்கு தமது தொழில்சார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாது நிரந்தரமான அரைகுறையான இயலாமைக்கு அல்லது முழுமையான இயலாமைக்கு உள்ளாகுகையில் பொருளாதார ரீதியாக ஏதாவது ஆறுதல் பெறுவதற்கு ஒரு படியினைச் செலுத்துதல் மரணத்தின் போது மரணப் பணிக்கொடையைச் செலுத்துதல், மற்றும் 60 வயதினைப் பூர்த்தி செய்கையில் காலப்பகுதிக்கு இணங்க ஓய்வூதியத்தினை செலுத்தும் குறிக்கோளுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் திட்டத்திற்கு எந்தவொரு அங்கத்தவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இத்திட்டம் புதிய உறுப்பினர்களை சேர்க்கவில்லை. |
| (ஆ) | 7 ஆம் பிரிவு பங்களிப்பாளர்கள் 60 வயதினைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து ஓய்வூதிய நிதியத்திற்கு தகைமை பெறுகின்ற போதிலும் திட்டத்தினால் ஓய்வுதியம் தயாரித்த திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நிலுவையான ஓய்வூதியப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2009 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலத்திற்குரிய ஓய்வூதியங்களை வேண்டிக் கொண்ட 176 மீனவர்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட நிலுவையான ஓய்வூதியம் ரூபா 4,828,177 தொகையை | ஓய்வூதியத்திற்கு தகைமை பெற்ற திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020ஆம் ஆண்டு இறுதிக்குள் 176 மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஓய்வூதிய நிலுவைத் தொகையான ரூபா.4,828,177 வழங்கப்படவில்லை என்றும், ஓய்வூதியம் சீரமைக்கப்பட்ட நாளிலிருந்து கொடுப்பனவுகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | 16 ஆம் பிரிவு<br>பங்களிப்பாளர் பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களுக்காக தவணைப் பணங்களை முறையாகச் செலுத்தாததன் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த அறிவிப்பு செய்யப்படாமையின் காரணமாக 60 வயதினைப் பூர்த்தி செய்த ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளவர்கள் எனக் கருதி 58 நபர்களினால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களுக்கான தவணைப் பணத்தை செலுத்தாதன் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளர் களுக்குத் தெரியப் படுத்துதல் வேண்டும். | பங்களிப்பாளருக்கு முன் அறிவிப்பு இல்லாமல் பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் பங்களிப்பு பணம் **60** வயதினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் வட்டியுடன் மீளச் செலுத்தப்படும். | பலன்கள் இழப்பு ஏற்பட்டால், பங்களிப்பாளருக்கு எந்த முன்னறிவிப்பும் வழங்கப்படாததுடன் மற்றும் ரத்து செய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் பங்களிப்புகள் தொகை 60 வயதை அடைந்த பிறகு வட்டியுடன் திருப்பித் தரப்படும். |
| (ஈ) | 20 ஆம் பிரிவு<br>தோற்றுவிக்கப்பட்டு ஆலோசனை தெரிவுக் குழுவினால் அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் மூலம் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அதற்காக ஆலோசனை தெரிவுக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்று வரை தெரிவுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனைத் தெரிவுக் குழு கூட்டப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2016 நவம்பரில் இருந்து இந்தக் குழு கூடவில்லை. |
| **06** | கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் 2020 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் கடற்றொழிலாளர் ஓய்வூதிய அட்டைகளைப் பாதுகாப்பதற்காக மாவட்டத்திற்கு இணங்க அட்டைகளைப் வகைப்படுத்துதல், அட்டைகளை ஸ்கேன் செய்தல் (Scan) களஞ்சியப்படுத்துதல் என்பவற்றைப் போல | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | ஆவண முகாமை அமைப்பு நடைமுறையில் இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடற்றொழில் ஓய்வூதியம் பெறுபவர்களின் தரவுகளை “ஆவண முகாமைத்துவ முறைமை” (Document Management System) இன் மூலம் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | | |
| **07** | 2016-2020 இணைந்த திட்டத்தில் உள்நாட்டு விவசாயிகளுக்கு நிரந்தர தன்மையை வழங்குவதற்காக காணப்படுகின்ற சமூக பாதுகாப்பு திட்டத்தை நாளதுவரையாக்குதல் மற்றும் புதிய பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை காலத்திற்குப் பொருத்தமான தேவைப்பாடுகளுக்கு இணங்க திருத்தம் செய்து புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் அல்லது காணப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளலானது கடந்த சில ஆண்டுகளாக காணப்படவில்லை. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | புதிய மீனவர் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தவோ அல்லது தற்போதுள்ள மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பாளர்களை ச் சேர்க்கவோ இல்லை. |

## 05. உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

1. நிறுவனத்தின் பெயர் - உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

2. கணக்காய்வு அபிப்பிராயம் -

| | |
|---|---|
| 2018 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 2019 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| 2020 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

3. கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள்

| | கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| **1** | 1993 இன் 24 ஆம் இலக்க உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் ஊடாக திருத்தப்பட்ட 1916 இன் 22 ஆம் இலக்க உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பதவியணியினரை நியமிக்கும் அதிகாரம் ஆணையாளர் சபையிடம் காணப்பட்ட போது ஆணையாளர் சபையின் அங்கீகாரமின்றி அதற்குரிய அமைச்சின் செயலாளரினால் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் வேலைப் பார்ப்பதற்கு /கடமைகளை நிறைவேற்றுவதற்கு கணக்காளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அந்த உத்தியோகத்தருக்காக சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் VII ஆவது பந்தியின் 12:5:4 ஆம் பிரிவு மற்றும் 12:8 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 382,056 வேலைபார்க்கும் சம்பளம் மற்றும் 2008 யூலை 28 | சட்டங்கள் விதிகளுக்கு முரணாக செலுத்தப்பட்ட வேலைபார்க்கும் சம்பளம் போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு என்பவற்றை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக நிறுவனத்தினால் மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், நிறுவன மற்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிலும் ஆணையாளர் சபையிலும் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டது. இறுதியாக உரிய பணத்தை அறவிடுவதற்காக ஞாபகமூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி இடம்பெற்ற ஆணையாளர் சபையில் உரிய உத்தியோகத்தர் தொடர்பாக முறையான | அரச சேவை ஆணைக்குழு விடம் புகார் செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதிய அரச வியாபாரச் சுற்றுநிருபம் பீஈடீ/50 ஆம் இலக்கத்தின் 5 ஆம் பந்தி மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்கத்தின் அரச வியாபார சுற்றுநிருபத்தின் 3.7 ஆம் பந்திக்கு முரணாக போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 522,000 மற்றும் எரிபொருள் கொடுப்பனவு ரூபா 340,849 ஆக மொத்தம் ரூபா 1,244,905 செலுத்தப்பட்டிருந்தது. | | ஒழுக்காற்று பரிசீலனை ஒன்றை மேற்கொள்வதற்காக உரிய ஒழுக்காற்று அதிகாரியான அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்து மூலமாக அறியத் தருவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமான தேவையான தகவல்கள் அறிவிக்கப்பட்டது. | |
| **2** | **முகாமைத்துவ பலவீனங்கள்**<br><br>(அ) 2010 ஏப்ரல் 08 ஆந் திகதி முகாமைத்துவச் சேவைத் திணைக்களம் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பொருத்தமான தகுதிகளை உடைய நபர் ஒருவர் நிதியத்தின் பணிப்பாளராக ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும் நிலையான உத்தியோகத்தர் ஒருவர் இந்த பதவிக்காக நியமிக்கப்பட்டிருக்க வில்லை. இரட்டை அடிப்படையில் பணிப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியுமான வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிக்க வில்லை என்பதுடன் தொடர்ச்சியாக வேலைபார்க்கும் பதவியொன்றாக இடம்பெறுகின்றமையினால் நிறுவனத்தின் செயலாற்றலுக்கு மோசமான முறையில் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் உள்ளக, | நீண்ட காலம் வேலை பார்க்கும் பதவிகளுக்கு நியமிப்பது நிறுவனத்தின் செயலாற்றலுக்கு மோசமாக பாதிக்குமென்பதால் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இது தொடர்பாக ஆணையாளர் சபைக்கு அறியத் தந்திருப்பதுடன் 2021 யூன் 30 ஆந் திகதி இடம்பெற்ற ஆணையாளர் சபைக்கு இது தொடர்பாக பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேவையான திருத்தங்கள் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/4/11/1/2/7 இலக்க மற்றும் 2019 யூலை 14 ஆந் திகதிய கடிதத்தில் அந்த அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் பணிப்பாளர் (திட்டமிடல்) நிதியத்தின் பிரதான நிறைவேற்றுப் பணியில் வேலை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பணிப்பாளர் (திட்டமிடல்) அப்போதே உலக வங்கியில் நிதியத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்ட மொன்றான பிரதேச அபிவிருத்திச் செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இதன் பிரகாரம் அவரால் ஒரே நேரத்தில் 3 பதவிகளில் கடமையாற்றிக் கொண்டு உரிய கொடுப்பனவுகள் பெறப்பட்டிருந்தது. | | | |
| **3.** | போக்குவரத்து கொடுப்பனவிற்காக உரித்தற்ற பதவிகளில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் இரண்டு உதவி பெண் பணிப்பாளர்களுக்கு 2015 திசெம்பர் 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றுநிருபனத்திற்கு முறனாக முறையான அங்கீகாரமின்றி 2017 நவம்பர் மாதத்திலிருந்து 2019 யூன் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 17,500 வீதம், ரூபா 700,000 போக்குவரத்து கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றுநிருப அறிவுரைகளுக்கு இணங்கி இருக்க வேண்டும். உரித்தற்ற வகையில் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகள் திருப்பி அறவிடப்பட வேண்டும். | தற்போது கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள் ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| **4** | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது மொத்த பெறுமதி ரூபா 419,177,427 ஆன 18 கடன் செயற்திட்டங்கள் செயற்படாத கடனாக காட்டப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன் செலுத்தப்படாதிருந்த காலம் 2 ½ வருடங்களில் இருந்து 21 வருடங்கள் வரையான கால வீச்சொன்றைப் பெற்றிருந்தது. மேலும் ரூபா 260,624,776 மீள் கட்டமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 158,552,651 கடனை அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது. | நிலுவை கடனை அறவிடுவதற்கான செயல் நடைமுறைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கடன் அறவீட்டிற்காக நிதியம், உயர்ந்த பட்ச முயற்சிகளை மேற்கொண்டதுடன் 06 செயற்திட்டங்களின் அறவீடு கடினமாக உள்ளது. | அப்படியே உள்ளது |

## 06. இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் - இலங்கையின் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2. 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான அபிப்பிராயம் -

   2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| 1. | கணக்கியல் குறைபாடுகள் | | | |
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரித்துச் செல்லப்பட்டிருந்த | மதிப்பீடு செய்யப்படாத வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்கள் பதிவேடு | கூட்டுத்தாபனத்தின் பெயரில் பதிவு செய்திருந்த போதும் பெறுமதி மதிப்பீடு | இந்த வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, மதிப்பீட்டு அறிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதும் சனாதிபதி செயலகத்தினால் வழங்கி கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த 06 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்கள பதிவேட்டில் பதிவுசெய்தல் மற்றும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | நாளது வரையாக்கப்பட வேண்டும். | செய்யப்படாமையால் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். | கிடைத்த பின் சொத்துக்கள் பதிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சொத்துக்கள் கணக்கிடும் கொள்கை கிரயத்திற்கு அல்லது மதிப்பீட்டு பெறுமதிக்கு என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பௌத்தாலோக வீதியில் அமைந்துள்ள **224** ஆம் இலக்க வரிப்பண காணி மற்றம் களனி திறையரங்கின் காணி மதிப்பிடப்பட்டு சாதாரண பெறுமதி கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2018 , 2019) | புதிய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு கூட்டுத்தாபனத்தின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கிடப்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கை பெறப்பட்டவுடனே கணக்குகளில் உள்ளடக்கப்படும். | புதிய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கைகள் கிடைக்கப்பெற்றவுடன் கணக்குகளில் பதியப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| | 2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள் | | | |
| | 2020 டிசம்பர் 31, அன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட திரைப்பட வாடகைக் கடனாளிகளின் விரிவான அட்டவணையின்படி, கடன் இருப்பு ரூபா.381,558,535 ஆக இருந்தது, ஆனால் அன்றைய பிரதான பேரேட்டிலுள்ள திரைப்பட வாடகைக் கடனாளி கட்டுப்பாட்டுக் கணக்கின்படி, மீதி | பதிலின் பிரகாரம் சரி செய்யப்பட வேண்டும். | அவதானிப்பு சரியானது. எதிர்காலத்தில் வேறுபாட்டிற்கு காரணங்களை கண்டறிந்து சீராக்கம் செய்கின்றேன். | இந்த நிலுவை மாற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து உடனடியாக அறிக்கை அளிக்குமாறு ”தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் கடன் மற்றும் நிலுவைத் தொகை மீட்புக் குழுவிற்கு” தெரிவிக்கப்பட்டு, |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா.362,737,356 ஆகும். அதனால் ரூபா.18,821,178 வித்தியாசம் காணப்பட்டது.<br><br>(2020) | | | இது தொடர்பாக கூட்டுத்தாபன அலுவலர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டு இப்பணிக்கான பொறுப்பும் ஒதுக்கப்பட்டது. தற்போது அந்த குழு அந்த பணியை மேற்கொண்டு வருகிறது. |
| 3. **கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு** | | | | |
| | கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினத்தை ஈடுசெய்வதற்கு போதுமானதாக இல்லாமை அடிப்படையில் திறைசேரியினால் **2011** ஆம் ஆண்டிலிருந்து ஊழியர் சம்பளம் மற்றும் மூலதனச் செலவினத்திற்காகவும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த **5** ஆண்டு காலத்தினுள் கூட்டுத்தாபனம் திறைசேரி மானியங்களைப் பெற்றுக்கொள்ள முன்னர் தொடர்ந்து தொழிற்பாட்டு நட்டத்தை ஈட்டும் நிலை அவதானிக்கப்பட்டது. தற்போது அரசின் உதவி அல்லது திரைப்படங்களை விநியோகிக்கும் மற்றும் வெளிக்கள ஒழுங்குபடுத்தலை கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ளும் சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றாமல் அல்லது கூட்டுத்தாபனத்தின தொடர்ந்து இயங்குதல் நிச்சயமற்ற நிலையில் | கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை மேம்படுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருதன்மை தொடர்பில் ஸ்திரதன்மை யொன்றை கட்டியெழுப்புவதற்கும் சட்டத்தின் பிரகாரமான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு செயற்பட வேண்டும். | 1999 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டுத்தாபத்தின் பிரதான வருமான முறையான விநியோக தரகு பணம் இழக்கப்பட்டதன் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் செலவினத்தை தீர்வு செய்வதற்கு 2001 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ள நேர்ந்திருந்தது. | 2001 முதல், கூட்டுத்தாபனத்தின் முக்கிய நிதி ஆதாரமாக விளங்கும், பகிர்மான தரகு இழப்பு காரணமாக, ஊழியர் சம்பளம் மற்றும் மூலதன செலவினங்களுக்கு 2001 முதல், திறைசேரியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.<br><br>2020 மார்ச் 18, திகதியிட்ட அமைச்சரவை தீர்மானம் இலக்கம் 20/0581/205/019 மூலம், நிலவீர அறிக்கையும் அது தொடர்பான முந்தைய விநியோக அமைச்சரவை முடிவும் ரத்து செய்யப்பட்டு, அமைச்சரவை முடிவின் மூலம் அறிவிக்கப்பட்டபடி, புதிய விநியோக முறைமை தயாரிக்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. (2020) | | | வர்த்தமானிக்காக உரிய அமைச்சின் ஊடாக பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், பகிர்ந்தளிக்கும் அதிகாரங்கள் பெறப்படுவதால், கூட்டுத்தாபனத்தின் வருமான நிலை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 4. | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை** | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 103 (ஆ) மற்றும் 104(1)(அ) குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திடீர் விபத்துக்கள் தொடர்பான நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேடுகள் பேணப்படாததுடன் வாகன விபத்துக்கள் தொடர்பில் பொலிசில் முறைப்பாடு செய்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. வாகன விபத்துக்கள் தொடர்பான கோப்புக்களும் சரியான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை (2020) | இந் நிதிப் பிரமாணத்துக் கேற்ப செயற்பட வேண்டும். | வாகன விபத்துக்கள் தொடர்பில் நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான ஆவணத்தில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறு விபத்துக்கள் தொடர்பில் காப்புறுதி நிறுவனங்களினூடே நட்டஈடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். மேலும் வாகன விபத்துக்கள் தொடர்பில் நிறுவனத்தினூடாக உள்ளக விசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், நட்ட இழப்பு பதிவேடு தொடர்ந்து முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தி கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் ரூபா 619,640,309 கூட்டுத் தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பான **2020** ஆம் ஆண்டுக்குரிய மெய்மையாய்வு சபையின் அறிக்கை **2021** ஒக்தோபர் மாதம் வரையில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. (2020) | 2020 ஆம் ஆண்டின் கண்காணிப்பு மதிப்பீட்டு அறிக்கையானது 2021 நவம்பர் 10 ஆந் திகதி வரை கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட வில்லை. குறித்த கணிப்பீட்டு பணியானது மேற்கொள்ளப் பட்டு அதன் அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | 2020 சனவரி 06 ஆந் திகதி 2020 ஆம் ஆண்டிற்குரிய கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ள து. நிர்வாகக் குழுவில் ஏற்பட்ட மாற்றங்களினால் குறித்த செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டது. | இறுப்பு கணக்கெடுப்பு குழு 2020 இறுப்பு கணக்கெடுப்பை முடித்து அறிக்கை அளித்துள்ள போதிலும் அவ் அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள து. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதியிடப்பட்ட 09/2009 ஆம் இலக்க மற்றும் 2009 யூன் 17 ஆந் திகதியிடப்பட்ட 09/2009(1) ஆகிய பொது நிர்வாகச் இச்சுற்றறிக்கைகளுக்கு அமைவாக கடமைக்குச் சமுகமளித்தல், கடமை முடித்து வெளியேறிச் செல்லல் என்பவற்றின் போது கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பயன்படுத்தாது, கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர் மூவருக்கு ரூபா.3,098,046 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்டிருந்தது. (2020) | இக் கொடுப்பனவுகள் மற்றும் கடமைக்கு சமுகமளித்தலின் போது கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பயன்படுத்தாமை தொடர்பில் ஆராய்ந்து பதிலின் பிரகாரம் தேவையான, அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பொருத்தமான தாகும். | பதிற் கடமை மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்க ான நியமனங்கள் தொடர்பிலான விசாரணையொன் றை நடாத்துவதற்கான தீர்மானம் 2021 ஏப்ரல் 20 ஆந் திகதி நடைபெற்ற 1199 ஆவது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட து. மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு உண்மை என்பதுடன் அது தொடர்பில் உரிய விசாரணை நடாத்தும் படி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது . | இந்த உத்தியோகத்தர்கள் ஒன்றினைக்கப்பட்ட சேவையில் உள்வாங்கப்பட்டுள் ளமையால் அவர்கள் தற்போது பணிபுரியும் பணியிடங்களுக்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள துடன், இது தொடர்பில் கிடைக்கும் பதில்களின் அடிப்படையில் மேலதிக முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள து. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவு குறித்த பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீட்டின் செயலாற்றுகையானது குறிப்பிட்ட காலப்பகுதிகளில் தொடர் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமாயினும் அச் செயற்பாடு நடைபெறவில்லை.<br><br>(2020) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒவ்வொரு நிர்வாகக் குழுக் கூட்டத்திலும் செயலாற்றுகை வீதம் மற்றும் அவற்றின் தன்மை தொடர்பிலான மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், குறித்த இவ்விடயம் தொடர்பில் நிர்வாகக் குழுவினை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| | 5. தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை | | | |
| | 2019 ஆம் ஆண்டு கணக்குகள் பேணுவதை கணினிமயப்படுத்துவதற்காக முறையான கொள்வனவு வழிமுறைகள் பேணப்படாது ''குவிக் புக்'' (Quick Book) மென்பொருள் தொகுதி கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தினுள் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் பயிற்றப்பட்ட ஊழியர்கள் காணப்படாத அதேவேளை, முறையான உள்ளக நிருவாகத் தொகுதி உத்திகளும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைக்குச் | நிறுவனத்தினுள் கணக்குகளை பேணுவதற்காக பயன்படுத்தப்படும் ''Quick book) முறைமையினை பயன்படுத்தும் பொழுது, பயிற்சி மற்றும் உள்ளக நிர்வாக உத்திகளுடன் குறித்த கணக்காய்வுப் பரிசோதனைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புகளை சீர் செய்து அவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். | அவதானிப்பு சரியாக உள்ளதுடன், எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு சீர் செய்வதற்கும், தேவையான தொகுதி நிர்வாக உத்திகளை செயற்படுத்துவதற்கும், பதவிநிலை உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கும், பாதுகாப்பு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | இது சம்பந்தமாக, உள்ளகக் கணக்காய்வாளரும் ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார், சம்பந்தப்பட்ட மென்பொருளை வாங்கிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, அமைப்பில் இருக்கும் குறைபாடுகளை சரி செய்யவும், பயிற்சி மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமாந்தரமாக, கணக்கேடுகளை கையால் எழுதி தயாரித்தலானது 2020 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2021 ஒக்டோபர் மாதம் ஆகும் பொழுதும் 2019ஆம் நிதியாண்டுடன் தொடர்பான எண் தரவுகளை அக் கணினித் தொகுதியினுள் உள்ளீடு செய்வதற்கும் நீக்குவதற்கும் அதில் காணப்பட்ட விசேட திறமை காரணமாக பெற்றுக்கொள்ளும் தரவுகள் மற்றும் தகவல்களின் நம்பகத்தன்மை தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. மேலும், தரவுகளின் மேலதிக பிரதிகளை (Backup) பாதுகாப்பாக வைத்திருக்காமையும், தேவையேற்படும் பொழுது அவற்றை மீண்டும் தொகுதிக்குள் உள்ளீடு செய்ய முடியாமையினாலும், தொகுதிக்கான வினைத்திறனான வன்பொருட்களை பெற்றுக்கொள்ளாமையும், வெளியக மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவுகள் தொகுதிக்குள் நுழைவதற்கான சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டுத் தொகுதி ஆபத்தான நிலையினை அடைந்திருந்தது.<br>(2020) | | | |

| 6. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | | | | |
|---|---|---|---|---|
| | 2006 சனவரியில் இருந்து 2015 திசெம்பர் வரையான காலக்கட்டத்தில் வாழ்க்கைப்படி கருத்திற் கொள்ளப்படாது ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு தொகை கணக்கிடப்பட்டதன் காரணத்தினால் அந்நிதியங்களுக்காக முறையே ரூபா 20,352,762 மற்றும் ரூபா 2,763,752 தொகை குறைவாக பங்களிப்பு செலுத்தப்பட்டிருந்தது. அந்நிலுவையான பணத்தை மீள செலுத்தும் போது அதற்காக மிகை கொடுப்பனவொன்றும் செலுத்த நேர்ந்ததுடன் நிலுவை தொகையை கொடுப்பனவு செய்வதற்காக 2020 ஒக்தோபர் 21 ஆந் திகதி நடைபெற்ற **1193** வது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது இணக்கம் காணப்பட்டது. அதன் பிரகாரம் மொத்தம் ரூபா 34,674,771 ஆன இம்மிகை கட்டணம் மற்றும் பங்களிப்பு தொகை என்பவற்றை 2021 யூன் 28 ஆந் திகதி செலுத்தி பூர்ததி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மிகை அறவீடாக மொத்தம் ரூபா 11,558,257 ஆன சிக்கனமற்ற செலவொன்றை கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க நேர்ந்தது.<br>(2020) | EPF மற்றும் ETF தவணை தொகை கணக்கிடும் போது சரியாக கணக்கிடுவதற்கும் அதற்காக கொடுப்பனவை சரியாக செய்வதற்கும் அதன் மூலம் மிகை கொடுப்பனவை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாழ்க்கைச் செலவினப் படி கருத்திற் கொள்ளப்படாது EPF மற்றும் ETF கணக்கிடப்பட்டு தவணையாக கொடுப்பனவு செய்யப்பட்டமையால் இந்த மிகை கொடுப்பனவை செலுத்த நேர்ந்தது. 2019 பெப்ரவரி 11 ஆந் திகதி இநிலுவை தொகை கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டு 2021 யூன் 27 ஆந் திகதி நிலுவை பங்களிப்பு செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 2016 ஆம் ஆண்டு முதல் பிரீமியங்களை துல்லியமாக கணக்கிட்டு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தொடர்பான அறிக்கைகளை அனுப்பி அதற்கான கட்டணங்களை செலுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. இனங்காணப்பட்ட நட்டங்கள் | | | | |
| (அ) | மீளாய்வாண்டில் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமாக 09 கார் வண்டிகள், 02 டபள் கெப் ரக வாகனங்கள், 02 வேன்கள், 01 லொறி உள்ளடங்கலாக 14 வாகனங்கள் காணப்பட்டன. குறித்த வாகனங்களுள் 07 வாகனங்கள் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலே பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை லொறியானது 1998 ஆம் ஆண்டு முதலே சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபன வளாகத்தில் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் குறித்த வாகனங்களை சீரமைத்து குறித்த வாகனங்களை திருத்தி மீள் பாவனைக்கென பயன்படுத்துவதற்கு அல்லது சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாமையால் 2021 ஒக்தோபர் மாதம் அளவில் கூட்டுத்தாபனத்தின் வளவில் வெவ்வேறு இடங்களில் நிறுத்திவைக்கப்பட்டு கும் சிதைவுற்று அழிவடைந்து வருகின்றது. (2020) | பயன்படுத்தப்படாத மற்றும் மீள் திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் திருத்தம் செய்ய முடியுமான வாகனங்களை திருத்தம் செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். | இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் கூட்டுத்தாபனத்துக் குச் சொந்தமான சகல வாகனங்கள் தொடர்பான அறிக்கையொன்றி னைப் பெற்று அதற்கேற்ற செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் . | இல. 2021/09/ நொவம்./1204.3.1.1 (6712) மற்றும் 14.12.2021 அன்று இயக்குநர்கள் குழு தீர்மானத்தின் படி, வாகனங்கள் பழுதுபார்க்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைக்கு ஏற்ப, பழுதுபார்க்கப்படும் வாகனங்களின் முன்னுரிமைக்கு ஏற்ப உரிய பணிகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி மொத்தம் ரூபா 870,659 பெறுமதியான படச் சுருள் | இவ்வாறு பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பிலான | பதில்கள் வழங்கப்படவில்லை. | இது தொடர்பாக அகற்றல் சபை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் இரசாயனப் பொருள் இருப்பு 2014 ஆம் ஆண்டு முதல் காலாவதியாகி இருந்தமையினால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. அதற்கு முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையிலும் இதே விடயம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. (2020) | சரியான தகவல்களை பொருள் மெய்மையாய்வு செயற்பாட்டின் போது அடையாளங் கண்டு மெய்மையாய்வுக் குழுவின் தீர்மானம், மற்றும் காணப்படும் சட்ட விதிகளுக்கு அமைவாக அகற்றப்பட வேண்டும். | | உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கூட்டுத்தாபன பிரதான களஞ்சியத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட திரைப்படம் தொடர்பான 7,917 சஞ்சிகைகள் விற்பனை செய்யப்படாமல் அகற்றப்படாமை காரணமாக சிதைவடைந்து வருகின்றன. மேலும் காலாவதியான மற்றும் தற்போதைய நிலையில் பயன்படுத்த முடியாத 450 வகையான பொருட்கள் களஞ்சியத்தில் நிறைந்து காணப்படுகின்றன. எனினும் குறித்த பொருட்களுக்காக கொள்வனவுச் செலவு குறித்தோ தற்போதைய அதன் பெறுமதி குறித்தோ எவ்வித தகவல்களும் கூட்டுத்தாபன பதிவேடுகளில் பதிவு செய்ய்பட்டிருக்கவில்லை முன்னைய வருட அறிக்கைகளிலும் குறித்துக் காட்டப்பட்ட இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வில்லை. (2020) | இவ்வாறு பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பிலான சரியான தகவல்களை பொருள் மெய்மையாய்வு செயற்பாட்டின் போது அடையாளங் கண்டு மெய்மையாய்வுக் குழுவின் தீர்மானம், மற்றும் காணப்படும் சட்ட விதிகளுக்கு அமைவாக அகற்றப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. | இது தொடர்பாக அகற்றல் சபை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | முகாமைத்துவ செயற்றிறனின்மைகள் | | | |
| (அ) | கூட்டுத்தாபன உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 28 உள்ளக கணக்காய்வு விசாரணைகள் சமர்ப்பித்திருந்த போதிலும் 2021 ஒக்டோபர் 31 இல் ஒரு கணக்காய்வு விசாரணைக்கு மாத்திரம் பதிலளித்திருந்தமையால் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்ட முகாமைத்துவம் உள்ளக கணக்காய்வினை நிறுவனத்தின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வினைத்திறனான முறையில் பயன்படுத்தவில்லை என அவதானிக்கப்பட்டது. (2020 ) | உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில்களை வழங்குவதற்கும் அதன் பிரகாரம் அவதானிக்கப்பட்ட விடயங்களை சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். | பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிய வரை கூட்டுத்தாபனத்தினால் 08 நடைமுறைக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததோடு குறித்த தினத்தில் அக் கணக்குகளின் காசேட்டின் பிரகாரம் ரூபா 23,030,540 என்ற சாதகமான மீதியொன்றை பேணிச் சென்றிருந்தது, அந்த வகையில் ரூபா 23 மில்லியன் பெறுமதியான கூட்டுத்தாபன பணத்தினை பயனற்ற முறையில் சேமித்து வைத்திருந்தமையானது கூட்டுத்தாபனத்தின் நிதி முகாமைத்துவத்தின் செயற்திறனின்மையே என்பது அவதானிக்கப்பட்டது. (2020) | நடைமுறை கணக்கினுள் காணப்படுகின்ற சாதகமான மீதிகளை வினைத்திறனான முறையில் குறுங்கால முதலீடுகளில் முதலீடு செய்ய அல்லது நடைமுறைக் கணக்கில் இவ்வாறான உயர் அளவிலான பணத்தை பேணாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். | அவதானிப்புக்கள் சரியானதே. | 2021 ஆம் ஆண்டில், குறுகிய காலத்தில் நடப்புக் கணக்குகளில் பயனுள்ள நிலுவைகளை திறம்பட முதலீடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இலக்கம் | இவ் அவதானிப்பு தொடர்பில் ஆராய்ந்து | கூட்டுத்தாபனத்துக் கென சட்ட | 2019ஆம் ஆண்டு முதல் இது |

| | | | | |
|---|---|---|---|---|
| | 244 இல் அமைந்துள்ள ஒரு மாடிக் கட்டிடமானது 2007 ஆம் ஆண்டு முதல் தணிக்கைகள் சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இரு சாரருக்குமிடையே இறுதியாக 2017 சனவரி மாதம் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 4711 ஆம் இலக்க ஒப்பந்தமானது 2018 திசெம்பர் 31 உடன் நிறைவுற்றிருந்தது. இந் நிலையில் தணிக்கை சபையானது குறித்த ஒப்பந்தத்தில் காணப்படும் விதி முறைகளுக்கு மாற்றமான வகையில் பழைய கட்டிடத்தை உடைத்து 2576 சதுர அடியிலான இரு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்திருந்தது. இதற்கான ஆரம்ப கட்டிடப் பணிகள் 2016 மே 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை வேலைகள் நிறைவு செய்யப்படவில்லை. எவ்வித முறையான எழுத்து மூல ஒப்பந்தங்களையும் மேற்கொள்ளாது தணிக்கை சபையினால் தன்னிச்சையாகக் கட்டப்பட்ட இக்கட்டிடத்திற்கான நீர், மின் கட்டணங்களை தமது பெயரிலேயே செலுத்தி குறித்த கட்டிடத்தை பயன்படுத்தி வருகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தம் நிறைவுற்று 02 வருடங்கள் 10 மாதங்கள் கடந்துள்ள போதிலும் புதிய கட்டிடத்துக்கான அரசின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்று | பொறுப்புக் கூற வேண்டிய பிரிவினருக் கெதிராக பொருத்தமான நடவடிக்கைகளை அதற்குப் பொருத்தமான எழுத்து மூல ஒப்பந்தமொன்றை விரைவில் கைச்சாத்திடு வதற்கும் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தரொருவர் இல்லாத நிலையில் குறித்த இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் பதிலளிக்கப்படும். நிர்மாணத்துக்கான சரியான செலவினத்தை பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக இன்று வரை பொருத்தமான ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தொடர்பாக முறையாக சட்ட நடவடிக்கை எடுக்க நிர்வாகம் அவ்வப்போது நடவடிக்கை எடுத்தும், புதிய அலுவலகக் கட்டிடம் மற்றும் திரையரங்கப் பணிகள் பொது மக்கள் தொடர்பு சபையினால் முடிக்கப்படாததால், அரசு மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்திர கட்டிட வரி மற்றும் வாடகை மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாமையினால் உரிய கால எல்லைக்குள் ஒப்பந்தம் செய்ய முடியவில்லை.<br><br>இருப்பினும், 2021 மே 04, மற்றும் 2021 நவம்பர் 10, ஆகிய திகதிகளில், முறையான ஒப்பந்தம் இல்லாமல், பொது மக்கள் தொடர்பு சபையினால் கவனம் செலுத்தி, முடிக்கப்பட்ட பணியின் அளவைக் கருத்தில் கொண்டு, வழங்குவதற்கு அரசு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பான மாதாந்திர வாடகை மதிப்பீட்டு அறிக்கை தற்போது, மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவதற்கு தேவையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதிய வாடகைத் தொகையை அளவீடு செய்து புதியதொரு குத்தகை ஒப்பந்தத்தை மேற்கொள்ளவும் நிலுவைகள் அறவிடப்பட வேண்டுமாயின் அதனை அறவீடு செய்யவோ கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. (2020) | | | நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் குடிநீர் கட்டணங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இலக்கம் 224 பிரதேசத்தில் அமைந்துள்ள இரு மாடிக் கட்டிடத்தின் முதலாம் மாடி இலக்கம் 4660 எனும் குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019 சனவரி 14 ஆந் திகதி வரை மாதாந்தம் ரூபா 315,000 என்ற வாடகை தொகைக்கு செலசினே தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட 1195 இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் திரைப்படப் பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் அழைப்பாணை ஒன்றினூடாக செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தை குறித்த கட்டிடத்திலிருந்து அகற்றுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த நிறுவனமானது குத்தகைப் பணம், நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் | கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குறித்த குத்தகைக் காரரை அகற்றுவதற்கு அல்லது தக்க வைத்துக் கொள்வதற்கு, அவர்களை வெளியேற்றும் வரை எழுத்து மூல உடன்படிக்கை யொன்றின் ஊடாக குறித்த கட்டிடத்தை பாவனைக்கு வழங்குவதற்கும், குறித்த குத்தகைதாரரை அகற்றுவதற்கு முன் | பதில் வழங்கப்படவில்லை. | தற்போதைய இயக்குநர்கள் குழு எடுத்த முடிவின்படி, வரி வாங்குபவர், அந்த வரிச் சொத்தை அகற்றுமாறு கடிதம் அனுப்பியதாகவும், 2022 ஜனவரி 18, திகதியிட்ட கடிதத்தில், அந்த வரிச் சொத்து தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனம் அதை ஏற்க வேண்டும். தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>குடிநீர், மின் கட்டணம் மற்றும் மாதாந்திர கட்டிட வாடகை நிலுவைத் தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடங்கலாக ரூபா 4,111,810 இனை நிலுவைத் தொகையாக கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டியிருந்தது. திரைப்பட பாடசாலை ஆரம்பிப்பதற்கென முன்மொழியப்பட்ட குறித்த கட்டிடமானது இவ் அறிக்கை தினம் வரை கூட்டுத்தாபனத்திற்கு மீள் வழங்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. (2020) | | | எழுத்துப்பூர்வமாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதா க தெரிவிக்கப்பட்டுள்ள து. |
| (உ) | அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை அறிக்கைப் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிப்பு மற்றும் திரையரங்குகளை நவீன மயப்படுத்தும் செயற்பாடுகளுக்கென கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டு மீள் அறவிடப்படாத கடன் பாக்கி ரூபா 85,174,055 ஆக காணப்பட்டது. குறித்த நிலுவைத் தொகையில் இதுவரை திரையிட வெளியிடப்படாத திரைப்படங்களுக்கென வழங்கப்பட்டு மீள் அறவிட முடியாத கடன் ரூபா 23,983,073 உம் உள்ளடங்கியிருந்தது. அந்த வகையில் மேற்குறிப்பிட்ட ரூபா 85,174,055 இன் 85.4 வீதமான தொகை அதாவது ரூபா 72,712,671 மீள் அறவிட முடியாத கடன் நிலுவை மற்றும் வட்டி என்ற விடயம் அவதானிக்கப்பட்டதோடு, நீண்ட நாட்களாக குறித்த பணத் தொகையை மீள் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | கடன் வழங்குதல், கடன் தொடர்பான கோப்புகளைப் பராமரித்தல், கடன் ஒப்பந்தம், கடன் தவணை மற்றும் வட்டி அறவீடு போன்ற விடயங்களில் உயர்மட்ட முகாமைததுவம் வினைத்திறனான முறையில் செயற்பட வேண்டும் அத்தோடு பழைய கடன் நிலுவைகளை அறவீடு செய்வதிலும் அவற்றினை நிவர்த்தி செய்வதிலும் கடுமையான கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும். பழைய கடன்களை தவிர புதிதாக பணம் மற்றும் சேவைகளை வழங்குகின்ற போது அவை கடனாளியிட மிருந்து அறவிட முடியாக் கடன் ஏற்படாதவாறு வகையில் மீள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகளை | திரைப்படத் தயாரிப்புக்களை வழங்கப்படும் கடனை வசூலிப்பதற்கான பிரதான முறை திரைப்படத்தை திரையிடலினூடே கிடைக்கும் வருமானமாகும். 2020 ஆம் ஆண்டு அதிகமான காலப்பகுதியில் திரையரங்குகள் மூடப்பட்டிருந்தமை யால் திரைப்படங்கள் வெளியிடப்படவில் லை. | இந்த விவகாரம் நியமிக்கப்பட்ட கடன் மற்றும் நிலுவைத் தொகை மீட்புக் குழுவால் கையாளப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (2020) | உயர் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். | | |
| (ஊ) | கூட்டுத்தாபனத்தினால் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு (COPE குழு) முன்வைக்கப்பட்ட நிலுவையிலுள்ள கடன் தொகை பற்றிய அறிக்கையின் பிரகாரம் திரையரங்குகளிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது அறவிட முடியாமல் போகும் என எதிர்பார்க்கப்படும் மொத்த தொகை ரூபா 284,502,137 என்பதோடு குறித்த அத்தொகையானது திரையரங்குகளால் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையின் 73 வீதம் எனவும் அறியப்பட்டது. மேலும் அறவிட முடியும் என எதிர்பார்க்கப்படும் மொத்த தொகை ரூபா 102,839,035 அதாவது முழு நிலுவையின் 27 வீதம் என்பதை அறிய முடிந்தது. எனினும், இத் தொகையை அறவீடு செய்வதிலும் உயர் முகாமைத்துவம் தோல்வியடைந்திருந்தது. (2020) | கடன் வழங்குதல், கடன் தொடர்பான கோப்புகளைப் பராமரித்தல், கடன் ஒப்பந்தம், கடன் தவணை மற்றும் வட்டி அறவீடு போன்ற விடயங்களில் உயர்மட்ட முகாமைததுவம் வினைத்திறனான முறையில் செயற்பட வேண்டும் அத்தோடு பழைய கடன் நிலுவைகளை அறவீடு செய்வதிலும் அவற்றினை நிவர்த்தி செய்வதிலும் கடுமையான கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும். பழைய கடன்களை தவிர புதிதாக பணம் மற்றும் சேவைகளை வழங்குகின்ற போது அவை கடனாளியிட மிருந்து அறவிட முடியாக் கடன் ஏற்படாதவாறு வகையில் மீள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகளை உயர் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். | கொவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக திரையரங்குகள் மூடப்படுகின்றமை யால் இப் பணத்தொகையினை அறவீடு செய்வதற்கு முடியாத நிலை காணப்படும் நிலையில் நிலைமை சீரானதும் குறித்த பணத்தினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இந்த விவகாரம் நியமிக்கப்பட்ட கடன் மற்றும் நிலுவைத் தொகை மீட்புக் குழுவால் கையாளப்படுகிறது. |
| (எ) | 2001 ஆம் ஆண்டின் போது சினிமா திரையரங்குகளுக்கு பிரிந்து சென்ற போது எந்தவொரு சபைக்கும் உரித்தாகாத மூடப்பட்ட 137 சினிமா திரையரங்குகளில் இருந்து | இவ்வாறு மூடப்பட்ட சினமா திரையரங்குகளிலிருந்து நீண்டகாலமாக அறவிட முடியாத மீதிகள் அறவிட முடியாக் கடனாக இருந்ததுடன் | அவதானிப்பு சரியானதாகும். | இந்த விவகாரம் நியமிக்கப்பட்ட கடன் மற்றும் நிலுவைத் தொகை மீட்புக் குழுவால் கையாளப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020 தசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய 19 ஆண்டுகளுக்கு மேல் பழமையான நிலுவைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 7,659,366 ஆகன இருந்தது, மேலும் சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மூடப்பட்ட சினிமா அரங்குகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை பெறுமதி ரூபா 138,022,871 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் மொத்தம் ரூபா 145,802,930 தொகை கூடப்பட்ட சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிட முடியாமல் நிலுவையாக காணப்பட்டது. (2020) | அம்மீதிகள் தொடர்பாக மேலதிகமாக பரீட்சித்து அம்மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். | | |
| (ஏ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அனைத்து சினிமா திரையரங்குகளுக்குரிய செயற்படுகின்ற சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மற்றும் வட்டி என்பவற்றன் கூட்டுத்தொகை ரூபா 241,538,242 ஆக இருந்தது. இத்தொகையில் மொத்தம் ரூபா 136,881,529 வட்டியாக இருந்ததுடன் ரூபா 104,656,713 கூட்டுத்தொகை நிலுவை தொகையாகும். ரூபா 241,538,242 கூட்டுத்தொகையான பெறுமதியில் ரூபா 142,046,109 கூட்டுத்தொகை அதாவது 58 சதவீதம் வரை | கடன் வழங்குதல், கடன் தொடர்பான கோப்புகளைப் பராமரித்தல், கடன் ஒப்பந்தம், கடன் தவணை மற்றும் வட்டி அறவீடு போன்ற விடயங்களில் உயர்மட்ட முகாமைததுவம் வினைத்திறனான முறையில் செயற்பட வேண்டும் அத்தோடு பழைய கடன் நிலுவைகளை அறவீடு செய்வதிலும் அவற்றினை நிவர்த்தி செய்வதிலும் கடுமையான கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும். பழைய கடன்களை தவிர புதிதாக பணம் மற்றும் | அவதானிப்பு சரியானதாகும். | இந்த விவகாரம் நியமிக்கப்பட்ட கடன் மற்றும் நிலுவைத் தொகை மீட்புக் குழுவால் கையாளப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிட முடியாத நிலுவைத் தொகை மற்றும் வட்டி என்பதாக கடன் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது (2020) | சேவைகளை வழங்குகின்ற போது அவை கடனாளியிட மிருந்து அறவிட முடியாக் கடன் ஏற்படாதவாறு வகையில் மீள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகளை உயர் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். | | |
| (ஐ) | ஊழிய கடன் முற்பணம் கொடுப்பனவு செய்தல் மற்றும் அறவிடல் தொடர்புடைய அமைப்பின் கட்டுப்பாட்டு பலவீனத்தினால் அடையாளப்படுத்த முடியாத முற்பண மீதி **2020** திசெம்பர் **31** இல் ரூபா **539,222** ஆக காணப்பட்டது. அவ்வாறே, **05** வருடங்கள் கடந்த அறவிடப்படாத கடன் முற்பணம் ரூபா **531,420** தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | பதில் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இக்கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்பு சரியானதாகும். | வசூலிக்கப்படாத கடன் தொகையை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அடையாளம் காணப்படாத கடன் தொகை குறித்து முறையான விசாரணையை மேற்கொள்ள உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | செலுத்தப்படாத சம்பள கணக்கில் 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து இனங்காணப்படாத செலுத்தப்படாத சம்பளங்களின் கூட்டுத்தொகை ரூபா 387,231 உட்பட 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட ரூபா 1,331,443 ஆன செலுத்தப்படாத | செலுத்தப்படாத சம்பளம் இனங்காணப்பட்டு உரிய நபர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு அல்லது மீண்டும் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்பு சரியானதாகும். | இயக்குநர் குழுவின் முடிவு இல. 1127.3.1.6(5849) இன் படி 2021ஆம் ஆண்டு நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சம்பளத்தை இனங்கண்டு தொடர்புடைய நபர்களுக்கு செலுத்துவதற்கு அல்லது மீண்டும் வருமானமாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | | | |
| (ஓ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட DMS/360/NFC/P மற்றும் 1999 யூன் 17 ஆந் திகதிய ''தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டி'' பிரகாரம் (நீலவீர அறிக்கை) கூட்டுத்தாபனத்திடம் உள்ள திரைபடங்களை விநியோகிக்கும் ஏகபோக உரிமை 04 தனியார் விநியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது, அச்சபை திரைப்படங்களை விநியோகிக்கும் முறை நியாயமானதென மேற்கொண்டமையால் 2020 மார்ச் 18 ஆந் திகதிய 20/0581/205/019 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ''நீலவீர அறிக்கை'' இரத்துச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்திற்கு தனியார் சபையினால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையினால் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட ''திரைபடங்களை விநியோகித்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்கான நடைமுறை'' முறையான அமைச்சரவை | கூட்டுத்தாபனததின் வலுவூட்டலுக்காக 2021 யூன் 14 ஆந் திகதி அமைச்சரவை வழங்கிய அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கும் அதற்கான வர்த்தமானியை வெளியிடுவதற்கும் உயர் மட்ட முகாமை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2020 மார்ச் 18, திகதியிட்ட அமைச்சரவை தீர்மானம் இலக்கம் 20/0581/205/019 மூலம், நிலவீர அறிக்கையும் அது தொடர்பான முந்தைய விநியோக அமைச்சரவை முடிவும் ரத்து செய்யப்பட்டு, அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டபடி, புதிய விநியோக முறை தயாரிக்கப்பட்டு, வர்த்தமானிக்காக மாண்புமிகு துறை சார் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த விநியோக மற்றும் காட்சிப்படுத்தலுக்குரிய நடைமுறையை செயற்படுத்துவதற்காக 2021 யூன் 14 ஆந் திகதிய அமப/21/1024/305/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது, இந்த அங்கீகாரத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இதுவரை வர்த்தமானி பத்திரம் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டிற்கும் திரைப்பட கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் பாதகமாக தாக்கமளிததிருந்தது. (2020) | | | |
| (ஔ) | மீளாய்வாண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு நிர்வாகத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது, காணப்படும் சட்டங்கள், விதிகள் சுற்றறிக்கைகள் மற்றும் தாபன விதிக்கோவை என்பவற்றின் பிரகாரம் இப்பரிசோதனை செயற்பாடுகளை விரைவில் நடாத்தி பூர்த்தி | 2021 யூலை 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவின் ஆலோசணைகளின் பிரகாரம் இப்பரிசோதனைகளை விரைவில் பூர்த்தி செய்து ஊழியர் சிக்கல்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனம் தாமதத்திற்கு காரணங்களை குறிப்பிட்டு நீண்ட பதிலொன்றை வழங்கியிருந்தது. மேலும் பரிசோதனைகள் தாமதமடைவதற்கு வெவ்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. விரைவில் பரிசோதனைகளை பூர்த்தி செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒழுக்காற்று விசாரணை தொடங்கப்பட்ட பின்னர், இது சுதந்திரமான விவகாரம் என்பதால், அதில் செல்வாக்கு செலுத்த தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு உரிமை இல்லை, ஆனால் அமர்வுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், விசாரணையை விரைவாக முடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யாமையால் கூட்டுத்தாபனத்தின் உயர் பதவிகளில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அது கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டிற்கும் பாதகமாக.<br>(2020) | | | மற்றும் அறிக்கையிடுமாறும் ஒழுக்காற்று விசாரணை அதிகாரிகளுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டது. |
| (க) | 2021 யூலை 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான செயற்குழுக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி ''கோப்'' குழுவினால் COPE/09/01/2020 ஆம் இலக்க கோப் குழுவின் 14 கட்டளைகள் அடங்கிய கடிதம் கூட்டுத்தாபனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. காலவரையறை குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த குறித்த கடிதத்திற்கேற்ப அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 10 செயற்பாடுகளை நிறைவு செய்தமைக்கான எவ்வித அறிக்கைகளும் இவ் அறிக்கை திகதி வரை கோப் குழுவிற்கோ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கோ சமர்ப்பிப்பதற்கான எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.<br>(2020) | 2021 யூலை 19 ஆந் திகதி நடைபெற்ற கோப் குழுக் கூட்ட அறிக்கை பிரகாரம் 2021 ஆகஸ்ட் 5 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்ட குழு கட்டளைகளுக் கேற்ப உயர் முகாமைத்துவ சபை செயற்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | ''கோப்'' குழு உத்தரவின்படி பரிந்துரைத்த விடயங்களில் 02 விடயங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், அது தொடர்பில் கோப் குழுவின் செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளது. எஞ்சியுள்ள பணிகள் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. |
| | 9. செயற்பாட்டு வினைத்திறனின்மை | | | |
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகளை | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திட்டத்திற்கு இணங்க நிறுவனத்தின் செயற்பாடுகளை | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் நிலைமை காரணமாக செயல் நடவடிக்கைத் | 2020 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பாக செயல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கி செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்த 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றும் நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றத்தை கணக்காய்வின் போது அவதானிக்க முடியவில்லை. (2020) | செயற்படுத்தி செயலாற்றலை மேம்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது சிரமமாக இருந்தது. | திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆண்டு முழுவதும் தொடரும் கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அனைத்துத் துறைகளையும், வளங்களையும் உள்ளடக்கிய நிறுவனத்தின் செயல் திட்டத்தைத் தயாரிக்க முடியவில்லை.<br><br>உண்மைகள் இருந்தபோதிலும், குறிப்பிட்டபடி ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கேற்ப செயல்திறன் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கையில் உயர் சினிமா கலாச்சாரமொன்றை ஏற்படுத்துவதற்காக தேவையான கலை, ஆற்றல், மற்றும் தொழில்நுட்ப அடிப்படையொன்றை தயாரிக்கும் நோக்கங்கள் தொடர்பில் முன்னனியாக கொண்டு சினிமாத் துறை தொடர்பாக ஓராண்டு ‘‘டிப்ளோமா பாடநெறியொன்று’’ ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இரண்டு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் இப்பாடநெறிக்காக 2020 ஆம் ஆண்டின்போது 50 மாணவர்களை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த | இந்த டிப்ளோமாவிற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஆட்களுக்கு இடையே அதனை பூர்த்திசெய்யும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு, சிறந்த தரமான டிப்ளோமாதாரிகளை உருவாக்குவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப்பாடநெறிக்காக ஆட்சேர்க்கப்படும் மாணவர்களின் 50 சதவீத மாத்திரம் பூர்த்தி செய்வதுடன், பாடநெறிக்கு உபகரணம் கோரப்பட்டிருந்த போது அதனை வழங்க முடியாமல் இருந்தது. தேவையான உபகரணங்கள் கோரப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறை பயிற்சிகளுக்காக ஒரு கேமரா வாங்கப்பட்டுள்ளது. முதல் நிலையிலிருந்து பாடத்திட்டத்தில் நடைமுறைப் பயிற்சிகள் சேர்க்கப்பட்டன. 224 கட்டடத்தில் உள்ள இடத்தில் புதிய வசதிகளுடன் திரைப்படப் பள்ளியை நடத்த எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. காலாவதியான உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கும் தொழில்நுட்ப உபகரணங்கள் போதியளவு இல்லாமை, நவீன கேட்போர் கூட வசதிகள் இல்லாமை போன்றவை காரணமாக பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை குறைவடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் வரையான 05 ஆண்டுகளில் 94 பேர் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் இறுதி திகதியில் 22 பேர் அதாவது 23 சதவீதம் மாத்திரம் பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. (2020) | | | |
| (இ) | 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 4 (ஊ) பிரிவின் பிரகாரம் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பாக சந்தை ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 4 (ஊ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2022 ஆம் ஆண்டின் போது இலங்கையின் திரைப்படங்கள் தொடர்பாக சந்தை ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | 2022ஆம் ஆண்டு இலங்கை சினிமா தொடர்பில் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 10. | பெறுகை செயற்பாடு | | | |
| (அ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய தே.பெ.மு சுற்றறிக்கை இலக்கம் 8 இன் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாட்டினை பயன்படுத்தாமல் ரூபா | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கணக்காய்வு விசாரணையின் 05 மற்றும் 07 ஆம் அவதானிப்புக்கள் சரியானதே. 06 இந்த நிர்மாணம் அரச பொறியியலாளர் | உள்ளக விசாரணைக்குப் பிறகு கொள்முதல் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | 99,965,061 ஆன கட்டிட நிர்மாண ஒப்பந்தமொன்று 2019 ஏப்ரல் 05 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தினால் அரச பொறியியல், கூட்டுதாபனத்திற்கு அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்காக இருதரப்பினருக்கிடையே கைச்சாத்திட்ட இரு தரப்பு உடன்படிக்கை அடிப்படையில் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ரூபா 3,134,107 கூட்டுத்தொகை பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரான அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது அந்நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. (2020) | | கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த முறைகேடு தொடர்பாக உள்ளக புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அதன் தீர்வின் பிரகாரம் திட்டவட்டமான பெறுகை செயற்பாடொன்றின் கீழ் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | து. |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான "தரங்கனி" சினிமா திரையரங்கிற்காக 4K பல்லுருக்காட்டி ரூபா 11,460,155 கூட்டுத்தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது, இக்கொள்வனவுக்குரிய கோவைகள் முறையாகவும் வெளிப்படையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2006 சனவரி 25 ஆந் திகதிய தே.பெ.மு சுற்றறிக்கை இலக்கம் 8 இன் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2020/2021 ஆம் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது, கொள்முதல் வழிகாட்டுதல்களை பின்பற்றி அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன, தரங்கணி திரையரங்குக்கு சொந்தமான புரொஜெக்டரை செயல்பட வைக்க, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து உதிரி பாகங்கள் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தையில் தற்போது நிலவும் இறக்குமதி பிரச்சினைகளால், வழங்குநர் தரப்பில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு வரை கூட்டுத்தாபனத்திற்குரிய "தரங்கனி" சினிமா திரையரங்கின் பயன்பாட்டிற்காக பொருத்தப்பட்டிருந்த இந்த பல்லுருக்காட்டி பொருத்தப்பட்டதன் பின்னர் அது செயலற்று காணப்பட்டதுடன் அது செயற்பாட்டு நிலைமையில் இருக்கவில்லை. (2020) | | | இருந்து சிறிது காலதாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், சந்தை நிலை மீண்டு வந்ததும், உரிய உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, இயந்திரம் சரி செய்யப்படும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 11. மனிதவள முகாமைத்துவம் | | | | |
| (அ) | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 186 ஆக இருந்ததுடன் அந்த அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 129 பதவிகளுக்காக ஊழியர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 57 பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன் இவ்வெற்றிடங்களுக்கு இடையே 12 பதவிகளுக்காக தற்போது கூட்டுத்தாபனத்தில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் பதில் கடமை, கடமை நிறைவேற்றல் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட மட்டத்தில் 03 பதவிகளில் 02 பதவிகளுக்காக நிரந்தரமல்லாத இரண்டாம் மற்றும் பதில் கடமை அடிப்படையில் | கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை செயற்திறனாகஅதிகரிப்பதற்காக அத்தியவசிய பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகததர்கள் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் காலத் தேவைக்கேற்ற வகையில் பதவியணி இனங்காணப்பட்டு சிக்கல்கள் தீர்வுசெய்யப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். கூட்டுத்தாபனத்தின் ஆளணி மதிப்பீடு செய்யப்பட்டு ஒழுங்கமைப்பு கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை முறையாக திருத்தம் செய்வதற்கும் குழுவொன்று 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நியமிக்கப்பட்டு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | 2021 ஆகஸ்ட் 10, அன்று, கூட்டுத்தாபனத்தின் பணியாளர் மதிப்பீட்டை நடத்துவதற்கும், நிறுவன கட்டமைப்பை திருத்துவதற்கும், ஆட்சேர்ப்பு நடைமுறையை மறுசீரமைப்பதற்கும் நியமிக்கப்பட்ட குழுவின் பணி இறுதி கட்டத்தில் இருப்பதால், அளிக்கப்பட்ட பரிந்துரைகளின்படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் நிரந்தர அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யாமை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலுக்கும் தொழிற்பாட்டிற்கும் பாதகமாக தாக்கமளித்திருந்தது. (2020) | | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக 2012 செப்தம்பர் 14 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தது, அது அங்கீகரிக்கப்பட்டு மிக நீண்டகாலம் கடந்திருந்த போதும் காலத்தின் தேவைக்கேற்ற தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தம் செய்யப்படாமை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பொது திருத்தங்கள் அதில் உள்ளடக்கப்பட்டு அத்திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமையால் ஊழியர் ஆட்சேர்ப்பில் சிக்கல் உருவாகியிருந்ததுடன் அது கூட்டுத்தாபனத்தின் நிலைத்திரு தன்மைக்கும் செயலாற்றலுக்கும் முகாமைத்துவத்திற்கும் பாதகமாக தாக்கமளித்திருந்தது. (2020) | காலததின் தேவைக்கேற்ற வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தம் செய்வதற்கும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு ம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகன்றேன். | எண்: 21/1596/304/134 மற்றும் 2021 ஆகஸ்ட 31 திகதியிட்ட அமைச்சர்கள் குழுவின் முடிவின்படி, நிரந்தர பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ள து. |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் | | | | |
| | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ஆண்டறிக்கைகள் 2021 ஒக்தோபர் மாதம் வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. (2020) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை ஆண்டறிக்கை தாமதமின்றி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ஆண்டறிக்கை தயாரித்து அப்போது காணப்பட்ட வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சு அவ்வப்போது மாற்றப்பட்ட காரணத்தினால் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படாமல் இருந்ததுடன் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அவ்வாண்டுகளின் அறிக்கை மற்றும் 2018, 2019 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகளை சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளை சமர்பிக்க உரிய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 13. கூட்டிணைந்த திட்டம் | | | | |
| | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் கணகக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2020-2025 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட தந்திரோபாய திட்டத்திற்காக 2021 யூலை 19 ஆந் திகதி | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். | கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் ஆலோசனையின் பேரில் மூன்றாண்டுக்கான கூட்டினைக்கப்பட்ட திட்டம் பல சந்தர்ப்பங்களில் தயாரிக்கப்பட்டாலும், கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அந்த திகதிகள் ரத்து செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரை பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படா திருந்ததுடன் பின்னர் 2021 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக தந்திரோபாய திட்டமொன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2021 ஒக்தோபர் மாதம் வரை அத்திட்டத்தை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. (2020) | | | வேண்டியிருந்தது, ஆனால் கூட்டினைக்கப்பட்ட திட்டத்தை விரைவாக தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| 14. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் | | | | |
| | கூட்டுத்தாபனத்தினால் செயல் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் கீழ் சினிமா கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு ரூபா 460,000,000 தொகையும் சினிமா பல்கலைக்கழக மொன்றை தாபிப்பதற்கு ரூபா 250,000,000 தொகையும் இலத்திரனியல் நுழைவுச்சீட்டு முறைமைக்காக ரூபா 50,000,000 தொகையும் சினிமா நூதனசாலை யொன்றுக்காக ரூபா 90,000,000 தொகையும் செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் போது சரியான திட்டத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு மேற்கொள்ள முடியாமல் போனமை நாடு பூராகவும் கொவிட் தொற்று பரவல் காரணமாக வருமான | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் | 2021 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு திட்டத்தை தயாரிக்கின்றேன். | 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டு அதற்கேற்ப திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.<br>2021 ஆம் ஆண்டில், நாடு தழுவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் பணத்தை வழங்குவதில் நிதி அமைச்சகத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக, சிறிது தாமதம் ஏற்பட்டாலும், |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகள் குறைவடைந்தமையால் அந்த இலக்குகள் எதுவும் மீளாய்வாண்டில் செயற்படுத்தி பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. (2020) | | | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் சினிமா துறையினர் வளர்ச்சிக்குத் தேவையான கொள்முதல் மற்றும் சேவைகள் செய்யப்பட்டுள்ளன. |
| 15. உள்ளக கணக்காய்வு | | | | |
| | 2016 மார்ச் 24 ஆந் திகதி மற்றும் 2021 யூலை 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக்கூட்டத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினை பலப்படுத்துவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் முன்னால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் 2020 ஆம் ஆண்டின் போது ஓய்வுபெற்றிருந்ததுடன் அப்பதவிக்காக 2021 ஒக்தோபர் மாதம் வரை நிரந்தர உததியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று காணப்பட்ட போதும் அப்பிரிவில் ஒரு ஊழியரை மாத்திரம் ஈடுபடுத்தியதன் பேரில் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வினை பலப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியதுடன் பிரிவில் தற்போது ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் குறைந்தது ஒரு ஊழியராவது சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் 2020 செப்தம்பர் 09 ஆந் திகதி ஓய்வுபெற்றார். வெற்றிடாத்திற்காக புதிய ஊழியர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீளாய்வாண்டில் இரண்டு உத்தியோகத்தர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், உத்தியோகத்தர்களை பணியமர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 07. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்.

1. நிறுவனத்தின் பெயர் : தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்.
2. கணக்காய்வு அபிப்பிராயம் :

    2018 முனைப்பழியற்ற அபிப்பிராயம்.

    2019 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

    2020 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|
| நிறுவனத்தால் புதிய கட்டிடங்களின் தொகுதியை நிருமாணிப்பதற்காக ஹெக்டர் கொப்பாகடுவ கமநல நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிக்கும் நிறுவனத்திற்கான 45 பேர்ச் நிலப்பகுதியினை 2007 மற்றும் 2013 ஆண்டுகளில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கையளிப்பதற்கு அனுமதி வழங்கியிரு-ந்த ஹெக்டயார் **0.345** ஐ கொண்ட-மைந்திருந்த காலி நகரத்தில் பராமரிக்கப்படும் கல்வி நிலையம் அமைந்துள்ள காணி என்பவற்றின் சட்டரீதியான உரித்து **2021** ஆம் ஆண்டு ஒக்டோபர் **31** ஆம் திகதியிலும் நிறுவனத்திடம் கையகப்படுத்தியிருக்கவில்லை. | **2021** ஆம் ஆண்டு திசெம்பர் 02 ஆம் திகதிய கோப் குழு-வின் பரிந்துரைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | உரிய நிலப்பகுதி ஹெக்டர் கொப்பாகடுவ கமநல நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தால் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்திடம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.<br><br>தலைமை அலுவலகம் அமைந்துள்ள நிலத்திற்கு பட்டா சான்றிதழ் வழங்காமல் இருப்பது, காலியில் காணி உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலாமை காரணமாக சொந்த உரித்து நிறுவ-னத்திடம் கிடைக்கப்பெறவில்லை. | 2021 டிசம்பர் 31, வரையிலும் உரிய நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லை. |

## 08. அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்

1. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்

2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 7,665,759, ரூபா 11,838,574, ரூபா 122,478,704, ரூபா 180,936,809 மற்றும் ரூபா 63,041,070 கிரயமான முறையே கணனி பாகங்கள் மற்றும் மென்பொருட்கள், அலுவலகத் தளபாடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் எல்கேஏஎஸ் - 16 இன் 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தை மதிப்பிடாமலும் அதற்கமைய கணக்கீடு செய்யப்படாமலும் கூட்டுத்தாபனத்தால் தொடரச்சியாக பயன்படுத்தப்பட்டு | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்தல் வேண்டும். | நிலையான சொத்துக்களை மீள விலைமதித்தல் தொடங்கப்பட்டுள்ளது. | சொத்து மீள விலைமதித்தல் தொடங்கப்பட்டுள்ளது, ஆனால் இது வரை முடிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருகின்றன. | | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரிமையுடைய துணைக்கம்பனியான திவ்கோசா (பிரைவட்) லிமிடட் நீண்டகால மாக செயற்படாதுள்ளதுடன் இக் கம்பனியை கலைப்பதற்கு 2006 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை தீர்மானித் திருந்தது. கலைக்கும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்திய டையாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் ஒன்றித்த நிதிக்கூற் றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில் லை. | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டும். | கலைத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (இ) | 2015 இன் 13 ஆம் இலக்க திருத்திய பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் படி, ரூபா 64,158,593 மற்றும் ரூபா 13,654,032 தொகையான முறையே பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்ஈ) மற்றும் அதன் மீதான மிகைஅறவீடு என்பன செலுத்தப்பட்டோ அல்லது 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டோ இருக்கவில்லை. | சாத்தியமான அளவு தவறான அறிக்கைகளைத் தவிர்ப்பதற்காக, அனைத்து நிலுவைகளையும் நிதிநிலை அறிக்கைகளுக்குக் கொண்டு வருவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும், மேலும் **2015** ஆம் ஆண்டின் **13** ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணத் திருத்தச் சட்டத்தின்படி செய்யப்பட வேண்டும். | சரி செய்யப்படவில்லை. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஈ) | ரூபா.609,829,608 தொகையான கடன்பட்டோர் மீதிகள் 03 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதிருந்தது. ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்ப தைத் தவிர்த்து அந்தக் | நிலுவையிலுள்ள மீதி களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கிடையில், நிலுவையில் உள்ள நிலுவைகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய சரியான | கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன்பட்டோர்களை அறவிடுவதற்காக பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.. | | |
| (உ) | அங்கீகரித்த கடன் எல்லையை மீறி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,831,519 தொகையான வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட வரம்புக்குள் செயல்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கடன் மீதி ரூபா 1,420 மில்லியன் ஆனதுடன், அந்தக் கடனுக்கான வட்டிச் செலவினம் ரூபா 164,565,105 ஆகும். இந்த வட்டிச் செலவினம் ஆண்டிற்கான மொத்த நிதிச் செலவினத்தில் 78 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. | பொருத்தமான உபாய வழிகளை கையாண்டு வட்டிச் செலவினத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழிற்படு மூலதனத் தேவைகளிற்காக கடந்த ஆண்டுகளில் பெருமளவு வங்கிக் கடன்களை பெற வேண்டிய நிலை கூட்டுத் தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (எ) | மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் ரூபா. **270.07** மில்லியன் மூன்று பாலங்கள் கட்டுமான திட்டங்கள் மற்றும் ரூபா. **349.47** மில்லியன் பெறுமதியான **4** கட்டிட நிர்மாணப் பணிகள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவை இதுவரை நிறைவு செய்யப்படவில்லை. அவர்களின் உண்மையான முன்னேற்றம் **50** சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட திட்டங் களிற்கு அமைவாக செயற்திட்ட வேலைகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொவிட் 19 நிலமை காரணமாக அதிகளவு செயற்பாட்டுக் கிரயம், வேலை ஆரம்பித்தல் முற்ப ணங்களின் தாமதம், கூட்டு த்தாபனம் எதிர் கொண்டு ள்ள நிதிச் சிக்கல், குறைந்தளவு நிதி ஒதுக்கீடு மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் என்பன பாதிடப்பட்ட செயற்திட்ட வேலை மட்டங்க ளிற்கு இடையே காணப்பட்ட வேறுபாட்டிற்கான காரணங் களாகும். | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஏ) | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | எதிர்பார்க்கப்பட்ட திட்டங் களிற்கு | கொவிட் 19 நிலமை காரணமாக அதிகளவு | தற்போதைய நிலை மாறாமல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | யிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 1,572.65 மில்லியன் பெறுமதியான 16 பாலங்களின் நிர்மாண வேலைகளை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பூரணப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டி ருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் கூட அந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அவற்றில் 07 நிர்மாண வேலைகளின் பௌதீக செயன் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | அமைவாக செயற்திட்ட வேலைகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்பாட்டுக் கிரயம், வேலை ஆரம்பித்தல் முற்ப ணங்களின் தாமதம், கூட்டு த்தாபனம் எதிர் கொண்டு ள்ள நிதிச் சிக்கல், குறைந்தளவு நிதி ஒதுக்கீடு மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் ஆகியனவே பாதிடப்பட்ட செயற் திட்ட வேலை மட்டங்க ளிற்கு இடையே காணப்பட்ட வேறுபாட்டிற்கான காரணங் களாகும். | உள்ளது. |
| (ஐ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 செயற்திட்ட வேலைகளிலிருந்து ரூபா 186,279,697 தொகையான மொத்த நட்டம் இனங்காணப்பட்டிருந் தது. | செலவினத்தை குறைக்க படுத்துவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். | கூட்டு த்தாபனம் எதிர் கொண்டு ள்ள நிதிச் சிக்கல், செயன்முன்னேற்றத் தாமதம், குறைந்தளவு நிதி ஒதுக்கீடு மற்றும் அதிக செயற்பாட்டுக் கிரயம் காரணமாக ஏனைய செயற்திட்டங்கள் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஒ) | ரூபா.67,133,489 பெறுமதியான பயன்படுத்த முடியாத மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இரத்மலானை தலைமை அலுவலக வளவில் வைக்கப்பட்டுள்ளன. | சொத்துக்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்ப டுவதனை உறுதிப்படுத் துதல் வேண்டும். | உரிய சொத்துக்கள், பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுவருகி ன்றது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

### 09. அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர்:- அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2. கணக்காய்வு அபிப்பிராயம் :-

   2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக வழங்குனர்களுக்கு வழங்கியிருந்த பிரதான கட்டளைகள் தாமதம் அடைந்திருந்தமையால் 98 வகையான மருத்துவ வழங்கல் விடயங்கள் உள்நாட்டு சந்தையில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நேரிட்டிருந்ததுடன் செலவிடுவதற்கு நேரிட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 565.40 மில்லியன் தொகையாக இருந்தது. 2021 ஒக்தோபர் 07 ஆம் திகதியளவில் அவற்றில் ரூபா 103.09 மில்லியன் தொகை மாத்திரம் வழங்குனர்களிடம் அறவீடு செய்து காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீதியான ரூபா 462.30 மில்லியன் தொகையினை அறவீடு செய்ய வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு அல்லது கணக்கீடு செய்வதற்கு | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்தல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் | அறவீடு செய்வதை விரைவுபடுத்தும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, ரூபா.462.30 மில்லியனில், ரூபா.27.14 மில்லியன் மட்டுமே வழங்குநர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது, ஆனால் மீதமுள்ள ரூபா.435.16 மில்லியன் வசூலிக்கத் தவறிவிட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (ஆ) | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தரக்குறைவான மற்றும் சேதமடைந்த மருந்துகள் வழங்கியிருத்தல் மற்றும் மருந்துகள் குறைவாக வழங்கியிருந்த காரணத்தினால் மேற்கொள்ளப்பட்ட கிரயம், நிர்வாகக் கட்டணம் மற்றும் அந்த இருப்பினை அழிப்பதற்கான செலவுகளை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக 2020 திசெம்பர் 31 திகதி அளவில் வழங்கப்பட்டிருந்த வரவுப் பத்திரங்களின் பெறுமதி ரூபா 2,239.86 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் எனினும் அவற்றில் காணப்பட்ட ரூபா 807.48 மில்லியன் தொகை 2021 செப்தெம்பர் 30 திகதி வரை அறவீடு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது. அவற்றில் 2021 செப்தெம்பர் 30 திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 680.60 மில்லியன் தொகை கரைநிரழ்படுத்திய வழங்குனர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்தமையால் அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது. அதே போல் அதில் அடங்கியுள்ள தரக் குறைவான ரூபா 95.54 மில்லியன் கிரயத்தையுடைய மருத்துவ வழங்கள் 14 விடயங்கள் 2020 ஆம் ஆண்டிற்காக மருத்தவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துகள் ஆகும். | தரக் குறைவான மற்றும் சேதமடைந்த மற்றும் மருந்து குறைவுகளில் கிரயத்தில் இருந்து அறவீடு செய்யப்படாத தொகை வழங்குனர்களிடம் அறவீடு செய்தல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். | வழங்குனர்களிடமிருந்து இந்த வரவுகளை வசூலிக்க தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 ஜனவரி 31, அன்று ரூபா. 95.54 மில்லியனில் ரூபா. 1.73 மில்லியன் மட்டுமே மீட்கப்பட்டுள்ளது . |
| (இ) | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி, கூட்டுத்தாபனத்தின் | தரக் குறைவான மருந்துகளின் பெறுமதியை | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | 2022 ஜனவரி 31, வரை, பழுதடைந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆனால் **2020 ஜனவரி 01** திகதியளவில் தரக் குறைவான, காலவதியான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் மொத்த கிரயம் ரூபா **116.86** மில்லியன் தொகை காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது தரக் குறைவான, காலவதியான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா **103.65** மில்லியன் தொகையாக இருந்தது. கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது தரக் குறைவான மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா **33.43** மில்லியன் தொகையில் ரூபா **16.16** மில்லியன் தொகை **2021** நவம்பர் **02** திகதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. மேலும் கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது மருந்துகள் காலவதியாதல் மற்றும் சேதமடைவதினால் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த மொத்த நட்டம் ரூபா **121.89** மில்லியன் தொகை ஆகும். மேலும், 2020 டிசம்பர் 31, வரை, வழங்குநர்களிடம் இருந்து செலுத்த வேண்டிய ரூபா.92.03 மில்லியன் கணக்கில் வரவில்லை அல்லது வெளியிடப்படவில்லை. | வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்கும் மருந்துகள் காலவதியாவதற்கான காரணத்தை கண்டறிந்து பரிகாரம் காண்பதற்கு மற்றும் அந்த காரணங்களுக்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | மருந்துகளின் விலை மற்றும் சேவைக் கட்டணங்களை வசூலிக்க போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் மருந்துகளின் காலாவதிக்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வு காணவோ அல்லது தரப்பினரை அடையாளம் காணவோ எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மற்றும் சேதங்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 121.89 மில்லியன் கிரயத்தை உடைய முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது காலவதியாகிய இருப்புக்கள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 33.43 மில்லியன் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | 2022 ஜனவரி 31, வரை, நிதி பிரமாணங்களுக்கு இணங்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரயத்தை உடைய முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது தரக் குறைவான இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (உ) | 1996 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஒசுசலகளின் மூலம் விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்திருந்த மருத்துவ வழங்கல்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தரக் குறைவாக இருந்த மருத்துவ வழங்கல்களின் கிரயம் நிதிநிலை அறிக்கைகளின்படி பெறப்பட்ட பெறுமதிக்கும் தொடர்புடைய அறிக்கைகளின்படி பெறுமதிக்கும் இடையில் ரூபா. **20.23** மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்காண்பதற்கு, தேவையான சீராக்கல்கள் மேற் கொள்வதற்கு மற்றும் உரியவாறு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுதவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த மாற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிய கூட்டுத்தாபனம் விசாரணை நடத்துகிறது | 2022 ஜனவரி 31, வரை, விசாரணை முடிக்கப்படவில் லை. |
| (ஊ) | மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து பெற வேண்டிய மீதி நிதிநிலை அறிக்கைகளின்படி மதிப்புக்கும் தொடர்புடைய அறிக்கைகளின்படி மதிப்புக்கும் இடையில் ரூபா. **404** மில்லியன் நிலுவைத் தொகை இருந்தது | மருத்துவ வழங்கல் பிரிவுடன் மீதியை இணக்கஞ் செய்து உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மருத்துவ வழங்கல் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதியின் விரிவான ஆவணங்கள் அந்த நிறுவனத்தில் இருந்து கோரப்பட்டுள்ளது எனவும் அதன் படி வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, நிலுவை இணக்கப்பாடு செய்து முடிக்கப்படவில் லை. |
| (எ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து பெற வேண்டிய ரூபா 34,424.92 மில்லியன் தொகையில் ரூபா 211.59 மில்லியன் தொகை 11 வருடங்கள் மற்றும் 22 வருட கால முதல் தீர்ப்பதற்கு | பழைய கடன் மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது முறையான அங்கீகாரம் ஒன்றுடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழைய கடன் மீதிகள் திறைசேரியின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும | 2022 ஜனவரி 31, வரை, இந்தக் கடன் நிலுவைகள் மீட்கப்படவில்லை ல அல்லது தள்ளுபடி செய்யப்படவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முடியாமல் காணப்பட்டது. | | | லை. |
| (ஏ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொள்கலன் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 16.48 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் ஐந்தொகை திகதியின் பின்னர் அவற்றில் ரூபா 4.04 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. 2 முதல் 14 வருடங்கள் வரையான காலம் தொடக்கம் தீர்த்துக் கொள்வதற்கு முடியாமல் காணப்பட்ட மீதி ரூபா 6.77 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் ஐந்தொகை திகதியின் பின்னர் அவற்றில் ரூபா 178,984 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 5.45 மில்லியன் தொகையில் பணம் ஏதும் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | கொள்கலன் வைப்புக்களை அறவீடு செய்தல் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். | கடந்த காலப் பகுதியில் நாட்டில் காணப்பட்ட நிலைமை காரணமாக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் உட்பட கப்பல் கம்பனிகள் விடுவித்தல் அலுவல்களுக்காக மாத்திரம் முக்கியத்துவம் வழங்கியிருந்தமையால் கொள்களன் வைப்பு மீதியினை அறவீடு செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் அதனை விரைவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் | 2022 ஜனவரி 31, வரை, இந்த கொள்கலன் வைப்புத்தொகை மீட்கப்படவில்லை. |
| (ஐ) | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் படி விற்பனை செய்த நாள் முதல் 30 நாட்களுக்கும் 45 நாட்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வியாபாரக் கடன்பட்டோரிடம் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ரூபா 1,426.07 மில்லியன் தொகைக்கான கடன்பட்டோர் மீதியுள் காணப்பட்ட தனியார் மற்றும் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 13.05 மில்லியன் தொகை 05 வருடங்களை மிகையான காலம் முதல் மற்றும் ரூபா 39.57 மில்லியன் தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் படி கடன் அறவீடு செய்யும் அலுவல்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் அறவீடு செய்வதை செயற்திறனுடன் மேற்கொள்ள வேண்டும். | நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை மீட்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றும், சில கடன்களை வசூலிப்பது சிக்கலாக இருந்ததால், நட்டக்கடன் ஏட்பாடு செய்யப்படுள்ளது | இதுவரை இந்த கடன் நிலுவை வசூலிக்கப்படவில்லை. இந்த நிலுவைத் தொகையில், தனியார் மற்றும் அரை அரசு நிறுவனங்களிடமிருந்து 1 முதல் 5 ஆண்டுகளுக்குள் செலுத்த வேண்டிய தொகை ரூபா. 28.07 மில்லியன் குறைக்கப்பட்டு மீதமுள்ள நிலுவைத் தொகை வசூலிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், அந்த மீதிகளில் ஐந்தொகை திகதிக்குப் பின்னர் ரூபா 6.23 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 05 வருடங்களை விட பழமையான ரூபா 10.44 மில்லியன் கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்காக மாத்திரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஒ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 10(5) அரச கூட்டுத்தாபனங்களின் மிகைகள் ஒவ்வொரு ஆண்டிலும் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் பின்னர் மீதியாகிய தேறிய மிகை வருமானம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதி அதிகார சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது வரை திறைசேரியினால் அவ்வாறு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டுக்கு மட்டும் திறைசேரி பங்களிப்பாக செலுத்தப்பட்டது. |
| (ஓ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் Epoetin Injection 1,000IU / Vial pre-filled syringes (Recombinant Human Erythropoietin BP) தடுப்பூசியில் **7,000** அலகுகள் ரூபா **44,640,705** தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது இந்த பெறுகையுடன் தொர்புடைய ஒப்பந்தப் பெறுமதி ரூபா 43.46 மில்லியன் தொகை எனினும், பெறுகை அலுவல்களுக்காக 2 வருடங்களுக்கு அண்மித்த காலம் எடுக்கப்பட்டிருந்தமையால் கொடுப்பனவு மேற்கொள்ளும் சந்தர்ப்பம் வரை டொலருக்கான ரூபாய் பெறுமதி மாற்றமடைந்தமையால் | இந்த பெறுகை தொடர்பாக முறையான சுதந்திரமான விசாரணை நடாத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்தியவசியமான மருந்தொன்றாகிய இந்த மருந்து அந்த விலைக்கு கொள்வனவு செய்யாவிடின் அந்த மருந்துக்கான தட்டுப்பாடு ஏற்படுவதனை தவிர்க்க முடியாது என. இந்த மாத்திரை முதற் தடவையாக கொள்வனவு செய்திருந்தது இந்த பெறுகையின் போது ஆகும் எனவும், ஆரம்ப கட்டளை வழங்கப்பட்ட திகதியின் பின்னர் வழங்கலை உறுதிப்படுத்திக் | 2022 ஜனவரி 31, வரை, இந்தக் பெறுகை குறித்து முறையான சுயாதீன விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதன்படி மிகையாக செலுத்த நேரிட்டிருந்த தொகை ரூபா 1.18 மில்லியன் தொகையாகும்.<br><br>இந்த தடுப்பூசியின் ஒரு அலகின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 350 என காட்டப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டுக் கிரயம் மற்றும் கட்டளைக் கிரயம் இடையே 1674 சதவீத முரண்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒரு அலகு ரூபா 6,208.72 வீதம் கொள்வனவு செய்யக்கட்டிருந்தது.<br><br>2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைப்பாடுகளுக்காக இந்த தடுப்பூசியின் 2,000IU தடுப்பூசொன்று USD 0.9 தொகை வீதமும், 10,000IU தடுப்பூசியொன்று USD 5.5 வீதமும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த மாத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலகுக்கான கிரயத்துடன் ஒப்பீடு செய்யும் போது கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்திருந்த Epoetin Injection 1,000IU அலகு ஒன்றிற்கான கிரயம் USD 34.79 வழமையல்லாத விலை ஒன்றென அவதானிக்கப்பட்டது.<br><br>ஒப்பந்த உடன்படிக்கை 10 பிரிவின் பிரகாரம், மருந்துகள் வழங்கல் 42 நாட்கள் தாமதத்திற்காக ரூபா 1.56 மில்லியன் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு அல்லது செயலாற்றல் பாதுகாப்பு முறி காலவதியாவதற்கு முன்னர் பணம் அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை | | கொள்வதற்காக எடுக்க வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள் சிலவற்றிற்காக காலம் எடுப்பதுடன், இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததெனவும், மற்றும் விநியோகம் கூட்டுத்தாபனத்தின் பணிப்பொறுப்பு ஒன்று அல்லாத மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பொறுப்பு ஒன்றாகும் எனவும். மருத்துவ வழங்கல் பிரிவினால் கிடைத்திருந்த அறிவுரைகள் மற்றும் கோரிக்கைகளின் படி பதிவிலிருந்து விலக்கு கடிதம் WOR இற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை.<br><br>மேம 7,000 தடுப்பூசிகள் கூடிய விரைவில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட வேண்டும் என வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன இந்த தடுப்பூசிகளில் 3,000 அலகுகளுக்காக மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு தடுப்பூசி அலகு கூட மருத்துவ வழங்கல் பிரிவினால் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும், இந்த தடுப்பூசிகளுக்காக மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத 10 வைத்தியசாலைகளுக்கு 1,388 அலகுகள் விநியோகிகப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2020 ஜூலை 16 திகதி வரை 5,612 அலகு இருப்பொன்று மீதியாக காணப்பட்டது. இதன்படி, இந்த மருந்திற்கான அவசரத் தன்மை ஒன்று காணப்பட்டதென உறுதிப்படுத்த முடியவில்லை.<br><br>2015 இன் 05 இலக்க தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 109 பிரிவின் பிரகாரம் உயிரொன்றினை காத்துக்கொள்வதற்காக பரவும் நோய்கள் அல்லது தொற்றுநோய்கள் பரவுவதை தவிர்ப்பதற்காக போன்ற விஷேட சந்தர்ப்பங்களின் போது அல்லது வேறேதும் தேசிய தேவைப்பாட்டிற்காக அல்லது தேசிய பாதுகாப்பிற்காக மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட உற்பத்திகளின் குறிப்பிட்ட எண்ணிக்கைகளில் இறக்குமதி செய்வதற்கு மற்றும் வழங்குவதற்கு அதிகார சபையினால் அங்கீகாரம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்க முடியும்<br><br>2018 தேவைப்பாடு தொடர்பாக Epoetin Injection 1,000IU/Vial pre-filled syringe கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த வழங்குனர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் அந்த மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு மற்றும் வழங்குவதற்கு பதிவுகளில் இருந்து விடுவித்தல் கடிதம் ஒன்று (Waiver of registration-WOR) வழங்கும் படி கூட்டுத்தாபனத்தினால் 2019 ஜூன் 21 திகதி அந்த அதிகார சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கான அத்தியவசியமாக, அவசரமான அல்லது தேசிய தேவைப்பாடு எவை என வெளிப்படுத்தப் படவில்லை. | | | |
| (ஔ) | Herticad என்ற வர்த்தக பெயரின் கீழ் வழங்குனர் ஒருவரிடமிருந்து ரூபா 891.18 மில்லியன் தொகையொன்றினை செலவு செய்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக 14 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட 20ml கரைப்பான குப்பிகளுடனான 440mg Trastuzumap ஊசி மருந்து 8,945 இன் கொள்வனவு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>Herticad என்ற வர்த்தக பெயரின் கீழ் வழங்குனர் ஒருவரிடமிருந்து ரூபா 891.18 மில்லியன் தொகையொன்றினை செலவு | அரசாங்க பெறுகை வழிகாட்டி மற்றும் அவற்றின் அவ்வவ்போதான நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் பெறுகையானது நிருவகிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளை அலட்சியம் செய்ததன் விளைவாக ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பன அந்த விடயங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களு | நோயாளிக்கு மருந்தை மிக விரைவாக வழங்க வேண்டியதன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு ஒரு மருத்துவரிடம் மட்டுமே பரிந்துரைகளைப் பெற தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு நிபுணர் மருத்துவர்களை நியமிக்க வெளிப்படையான அமைப்பு இல்லை, | 2022 ஜனவரி 31, வரை, இழப்புக்கு காரணமான அதிகாரிகள் அடையாளம் காணப்படவில்லை அல்லது நடவடிக்கை எடுக்கப்படவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக 14 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட 20ml கரைப்பான குப்பிகளுடனான 440mg Trastuzumap ஊசி மருந்து 8,945 இன் கொள்வனவு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>திணைக்கள பெறுகை குழுவின் தலைவராக உள்ள கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் பரிந்துரையின் அடிப்படையில் ஒரே ஒரு நிபுணரின் உதவியானது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. முன் அனுபவம் கிடைக்கப்பெறாமை காரணமாக கேள்வி மனுக்களை நிராகரிக்க அனுமதிப்படுவதில்லை. எவ்வாறாயினும், குறைந்த விலை மனுதாரரின் உற்பத்திகளை பயனப்டுத்தியிருக்கவில்லை என்று நிபுணரினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் 14 கொள்வனவுகளுடன் தொடர்புபட்ட குறைந்த கேள்வி மனுக்கள் பெறுகை குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. குறைந்தகேள்வி மனுக்களை நிராகரித்தமை காரணமாக ரூபா 230.86 மில்லியன் மேலதிக கிரயமொன்றினை கூட்டுத்தாபனத்தால் செய்ய வேண்டியிருந்தது. | க்கு மிகைக் கட்டணம் விதிக்கப்படல் வேண்டும். | இந்த புற்றுநோய் மருந்துகள் பல பக்க விளைவுகள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் விளைவுகளைக் கொண்டிருப்பதால், மருத்துவரின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயல்படுவதைத் தவிர, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு வேறு வழியில்லை. | |
| (க) | 2018 ஆம் ஆண்டிற்கான தேவைப்பாடாக 2 மில்லியன் **Cefuroxime for Injection** 750mg USP ஊசி மருந்து குப்பிகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன மற்றும் குறிப்பிட்ட அளவினை | இந்த பெறுகை தொடர்பான புலனாய்வினை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் | மருத்துவ வழங்கல் பிரிவினால் விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையினை விஞ்சியதாக வழங்கல் | 2022 ஜனவரி 31, வரை, இது தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் பிரதான கொள்வனவு கட்டளையொன்று அலகுக்கான கிரயம் ரூபா 29.46 ஐ உள்ளடக்கிய ரூபா 58.93 மில்லியன் மொத்த கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. **2018** யூலை **18** இல் குறிப்பிட்ட மருந்தின் **2** மில்லியன் குப்பிகள் வழங்குனரால் வழங்கல் செய்யப்பட்டிருந்தன மற்றும் **1,914,500** குப்பிகளுக்கு மாத்திரம் ரூபா.**58.52** மில்லியன் விலைப்பட்டியலொன்று அனுப்பப்பட்டிருந்தது. **85,500** குப்பிகளின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையினை விஞ்சிய தொகையானது மருத்துவ வழங்கல் பிரிவினால் பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் குறிப்பிட்ட இருப்பானது வழங்குனரால் மீள எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, அவை தனியார் களஞ்சிய சாலைகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா **2.51** மில்லியன் கிரயத்திலான **85,500** குப்பிகளின் இருப்பினை பயன்படுத்த முடியாததாகிவிட்டது.<br><br>வழங்கல் செய்யப்பட்ட 1,914,500 குப்பிகளில் 100,000 குப்பிகளை விநியோகிப்பது நிறுத்தப்பட்டிருந்தது. ஏனென்றால் அவை ஐக்கிய அமெரிக்க மருந்தியல் நியமத்தினை உறுதிப்படுத்தவில்லை. இது தொடர்பில் வழங்குனரிடமிருந்து அறவீடு செய்திருக்க வேண்டிய ரூபா 2.94 மில்லியன் தொகையொன்று | வேண்டும். | செய்யப்பட்டிருந்த 85,500 குப்பிகளை நிராகரித்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டது.<br><br>2018 யூலை 18 இல் 1,914,500 குப்பிகள் வழங்கல் செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 ஏப்ரல் 05 அன்று விநியோகம் நிறுத்தப்பட்டது.<br><br>ருஹீ நியமத்துடன் இணங்காமை காரணமாக இடைநிறுத்தப்பட்டுக் காணப்பட்ட 100,000 குப்பிகளின் விநியோகம் தொடர்பில் தரமற்ற மருந்தகங்களுக்காக தற்போது பின்பற்றப்படும் நடைமுறையின் பிரகாரம் அறவிடுகைகள் மேற்கொள்ளப்படும். | குறைபாடுள்ள மருந்துகளுக்கு உரிய மீள்பெறுகை மேற்கொள்ளப்ப டவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. விலைப்பட்டியலில் உள்ளடக்கப்படாத 85,500 குப்பிகளை (vials) மருந்துகள் விநியோகப் பிரிவு கையேற்றிருக்காமை, 100,000 குப்பிகள் தரமற்றுக் காணப்பட்டமை, தேவைப்பாட்டிற்கான பெறுகையின் தாமதங்கள் போன்வற காரணங்களால் ஏற்பட்ட இருப்புப் பற்றாக்குறை தவிர்கும் பொருட்டு பிரதான கட்டளையினை விநியோகித்திருந்த உள்நாட்டு விநியோக முகவரிடமிருந்து அலகொன்று ரூபா 125.50 ஆக 352,000 குப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் மற்றுமொரு வழங்குனரிடமிருந்து அலகொன்று ரூபா 190 ஆக 23,000 குப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக ரூபா 37.49 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. | | | |
| (ச) | **2019** இல் ரூபா 70.98 மில்லியன் கட்டளைக் கிரயத்தில் Bavacizumrb Injection 100mg இன் 2,127 குப்பிகளின் கொள்வனவுக்காக இரண்டு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது.<br>பெறுகையின் பெறுமதி ரூபா **50** மில்லியனை மிகைத்திருப்பதன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பாய்விற்காக சுகாதார அமைச்சினால் **2** நிபுணர்கள் உள்ளடங்கலாக **5** உறுப்பினர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், இந்தப் பெறுகைக்காக கூட்டுத்தாபனத்தினால் **3** உறுப்பினர்களினை உள்ளடக்கிய தொழில்நுட்ப | அரச பெறுகை வழிகாட்டல் மற்றும் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப் படுகின்ற திருத்தகங்களின் பிரகாரம் பெறுகை முகாமை செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளின் அலட்சியமொன்றின் விளைவாக ஏற்படுகின்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறித்த விடயத்திற்குப் பொறுப்பாகக் காணப்படும் உத்தியோகத் | நோயாளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு, அவசர விநியோகத்திற்காக இரண்டாவது குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த விலைமனுதாரரிடமிருந்து கொள்வனவினை மேற்கொள்ள வேண்டிக் காணப்பட்டது. | 2022 ஜனவரி 31, வரை, பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து இழப்பு மீட்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்காக எவ்வித நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரினால் தொழில்நுட்ப உதவிக்காக ஒரு நிபுணர் மாத்திரம் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அவரின் உதவி மாத்திரம் பெறப்பட்டிருந்தது.<br><br>பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம், குறிப்பிட்ட மருந்தொன்றின் முன்னைய அனுபவம் காணப்படாமை காரணமாக விலைமனுக்களினை இரத்துச் செய்வது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு உதவிபுரிகின்ற நிபுணர்க்கு அனுமதியளிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், முதலாவது குறைந்த விலைமனுதாரரிடமிருந்து 532 குப்பிகளினைக் கொள்வனவு செய்வது மற்றும் இரண்டாவது குறைந்த விலைமனுதாரரிடமிருந்து 1,595 குப்பிகளினை கொள்வனவு செய்வது நிபுணரினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பெறுகைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அந்த குறைந்த விலைமனுதாரரின் உற்பத்திகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறைந்த விலைமனுதாரரினை நிராகரித்தமை காரணமாக அலகொன்று ரூபா 6,500 ஆக 1,595 அலகுகளினைக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 10.36 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. | தரிடமிருந்து மிகைக் கட்டண அறவீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ட) | கூட்டுத்தாபத்தின் நிறுவன வள திட்டத்தினை (ERP) நிறுவுவதற்காக 2016 திசெம்பர் 19 அன்று தொடர்புடைய ஒப்பந்தக்காரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 49.3 மில்லியனாக இருந்தது. மற்றும் 2018 பெப்ரவரி 19 இற்குள் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். கருத்திட்டத்தின் செயல்திறனானது தொடர்ச்சியாக மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒப்பந்தத்தின் காலப்பகுதியானது உடன்படிக்கை திகதியிலிருந்து 3 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியொன்றாக நீடிக்கப்பட்டிருந்தது. 3 வருடங்களின் பின்னர், 2020 பெப்ரவரி 20 அன்று உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது.<br><br>கருத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 32.36 மில்லியனை செலுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 9 வகைகளான கணனி மற்றும் உதிரிப்பாகங்களில் 497 அலகுகள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட கணனி மற்றும் உதிரிப் பாகங்களில் ரூபா 15.56 மில்லியன் கிரயத்திலான 07 வகைகளான 266 அலகுகள் கூட்டுத்தாபனத்தின் தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தன. மீதமுள்ள ரூபா 16.79 மில்லியன் கிரயத்திலான கணனி மற்றும் உதிரிப்பாகங்களின் 7 வகைகளில் 231 அலகுகள் 2020 யூன் 30 வரை | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்த நிருவாகம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>தொடர்புடைய பொருட்களை விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.<br><br>கணினி சேவையகங்கள் 4 இனை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கருத்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் விலைமனு மீண்டும் கோரப்பட்டன. மற்றும் விரைவாக கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தன. தேவைப்பாட்டின் பிரகாரம் தொடர்புடைய பொருட்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். கணினி சேவையகங்களை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். குறிப்பிட்ட நிலைமையினை தவிர்ப்பதற்கு விரைவாக புதிய கருத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2022 ஜனவரி 31, வரை, புதிய ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 134 யூனிட் பயன்படுத்தப்படாத கணினி சாதனங்கள் இன்னும் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டுள்ளன மற்றும் 04 சர்வர் கணினிகள் வழங்குநரிடமிருந்து மீண்டும் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | களஞ்சியசாலையில் உபயோகமற்றவையாக இருந்தன.<br><br>களஞ்சிய சாலைகளில் காணப்பட்ட 4 கணனி சேவையகங்களின் குறைபாடுகள் காரணமாக ஒப்பந்தக்காரர் 4 கணனி சேவையகங்களை வழங்கல் செய்வதற்கு உடன்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 30 வரையிலும் குறிப்பிட்ட உபகரணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.<br><br>03 வருடங்களுக்கும் மேலாக இத்திட்டத்தின் தோல்வியானது மருந்தக செயற்பாடுகள் உட்பட கூட்டுத்தாபனத்தின் அனைத்து செயற்பாடுகள் தொடர்பான தரவு முறைமையையும் நேரடியாகப் பாதித்துள்ளது. | | | |
| (த) | உலக சுகாதார நிறுவனத்தின் 143 நிறைவேற்றுக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கான சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நியமனத்தை கொண்டாடுவதற்காக நடாத்தப்பட்ட விழா ஒன்றிற்காக மீளாய்வாண்டின் போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா.1,000,000 தொகை அனுப்பப்பட்டிருந்தது. | நிதிகள் கூட்டுத்தாபன நோக்கங்களிலிருந்து விலகி வழமைக்கு மாறான நோக்கங்களிற்காக செலவிடப்படக் கூடாது | நிகழ்விற்கு நிதியளிப்பதன் மூலம், நிறுவனமும் அதன் கட்சிகளும் பங்கேற்பாளர்க ளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நிறுவனத்திற்கு ஒரு விளம்பர நன்மையைப் பெறுவதற்கு உழைத்துள்ளன. | 2022 ஜனவரி 31, வரை, பொறுப்பான அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. |
| (ப) | **2018** இல் 720 vials of 100mg in 10ml of Rituximab Injection மற்றும் 920 vials of 500mg in 50ml என்பன வரையறுக்கப்பட்ட போட்டிக் கேள்வி செயன்முறையை பின்பற்றி சர்வதேச சந்தையிலிருந்து ரூபா | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் | பரிந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த விலைக்கே கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஜனவரி 31, வரை, பொறுப்பான அதிகாரிகள் தொடர்பில் தாபன விதிக்கோவை விதிமுறைகளுக் கினங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | 57,675,670 தொகை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.<br><br>கேள்விதாரர்கள் முன்னைய வழங்குநர்களாக காணப்படாததன் காரணமாக விலைமனுக்களை நிராகரிக்கும் அதிகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்டிருக்காத போதிலும் அக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது.<br><br>இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆகக் குறைந்த விலைமனுதாரர்களிற்கு **50** சதவீதப் படி கட்டளையை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்காக பெறுகைக் குமுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மூன்றாவது விலைமனுதாரரும் முன்னைய வழங்குநராக இருக்கவில்லை.<br><br>குறைந்த விலைமனுதாரரிற்கு ஒப்பந்தம் வழங்கப்படாததன் காரணமாக கூட்டுத்தாபனத்தால் ரூபா 5,421,827 மேலதிகக் கிரயமொன்று செலவிடப்பட வேண்டியிருந்தது. | தேவைப்பாடுகளிலிருந்து விலகுவதற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடாபாக ஒழுக்காற்று அதிகாரியால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | | நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ர) | 540 vials of 100mg in 10ml of Rituximab Injection மற்றும் 690 vials of 500 mg in 50 ml என்பன உள்ளூர் சந்தையிலிருந்து ரூபா 67,768,500 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றின் மீது ஏற்பட்ட மேலதிகக் கிரயம் ரூபா 21,606,922 ஆக காணப்பட்டது.<br><br>இரண்டு மதியுரையாளர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் தேவைப்பாடுகளிலிருந்து விலகுவதற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடாபாக | தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொள்ளுகின்ற மதியுரையாளரின் அபிப்பிராயம் அல்லது பரிந்துரைக்கு எதிராக செயற்படுவது மருந்து பொருள் தொடர்பில் நன்றல்ல. | 2022 ஜனவரி 31, வரை, பொறுப்பான அதிகாரிகள் தொடர்பில் தாபன விதிக்கோவை விதிமுறைகளுக் கினங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழுவிற்கு நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் ஒரு மதியுரையாளர் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டிருந்தார்.<br><br>கேள்விதாரர்கள் முன்னைய வழங்குநர்களாக காணப்படாததன் காரணமாக விலைமனுக்களை நிராகரிக்கும் அதிகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்டிருக்காத போதிலும் அக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு மிகக் குறைந்த விலைமனு மற்றும் இரண்டாவது மிகக் குறைந்த விலைமனு என்பன நிராகரிக்கப்பட்டிருந்தன.<br><br>நான்காவது ஆகக் குறைந்த விலைமனுவை சமர்ப்பித்திருந்த கேள்விதாரரிற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பட்ட மேலதிக கிரயம் ரூபா 44,545,500 ஆக இருந்தது. | ஒழுக்காற்று அதிகாரியால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | | |
| (ய) | கொழும்பு 7 இல் அரச ஒசுசலவிற்காக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ரூபா 106,305,300 தொகையான ஒப்பந்தம் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பூர்த்திசெய்யப்பட்டிருந்த மேலதிக வேலைக்காக செலுத்தப்பட்ட ரூபா 6,824,841 செலுத்தப்பட்டது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2019 மே 10 வரையிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அப்போதிலிருந்து 4 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>செயலாற்றல் பிணைமுறி 2016 | முறையான புலனாய்வொன்றின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்த முரண்கள் தொடர்பாக பெறுகை கைநூலின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அமைச்சுப் பெறுகைக் குழுவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்கி கட்டிடத்தின் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | 2022 ஜனவரி 31, க்குள், கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன , ஆனால் மேலதிக பணிகளுக்கு ஒப்புதல் பெறவும், தாமதக் கட்டணம் வசூலிக்கவும், தீர்மாணிக்கப்பட்ட விவரக் குறிப்புக்கு இணங்காத மின்னுயர்த்தி குறித்து முறையான ஆய்வு மேற்கொள்ள வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெப்ரவரி 24 இல் உள்ளவாறு காலாவதியாகியிருந்த போதிலும் செல்லுபடியாகும் காலப்பகுதி 2019 மார்ச் 18 வரையிலும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்புரைகளுடன் இணங்கியிருக்காததும் தரப் பரீட்சிப்பு சான்றிதழ்கள் காணப்படாததுமான ரூபா 4,010,742 கிரயமான மின் தூக்கியொன்று நிறுவப்பட்டிருந்தது. நிறுவப்பட்டிருந்த 24 வளிப் பதனாக்கிகளிற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 5,732,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியாகியிருந்த வரைக்கும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ற) | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றல் சுட்டிகள் பிரத்தியேகமாகவும் போதுமானதாகவும் அளவிடப்படக் கூடிய மட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 6 செயற்பாடுகளின் அடைதல் செயன்முன்னேற்றம் பிரத்தியேகமாக மதிப்பிடப்பட முடியாதிருந்தன. 2016 – 2018 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்ததுமான ஆறு | முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPI) ஒரு குறிப்பிட்ட அளவு மற்றும் அளவிடக்கூடிய முறையில் குறிப்பிடப்பட வேண்டும், இதனால் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை துல்லியமாக மதிப்பிட முடியும். செயல் திட்டம் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 மற்றும் 2020 ஆண்டுகளை உள்ளடக்கிய கூட்டு கூட்டுத் திட்டமும் அந்த 02 ஆண்டுகளுக்கான செயல் திட்டங்களும் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவன வளத் திட்டம் மற்றும் வெளித் தரப்பினர்களுடனான அதன் ஒருங்கிணைப்பு, வணிகத்தை தொடரும் திட்டத்தை முன்னேற்றுதல், ஆட்சேர்ப்புத் திட்டத்தை மீளாய்வு செய்தல், முகாமைத்துவ பதவிகளிற்கான வெற்றியளித்தல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் பதவியுயர்வுகளை தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போன்ற 2015 ஆம் ஆண்டிலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் கூட்டுத்தாபனத்தால் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ல) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்களிற்காக பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைக் கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பெறுகை தன்மையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாதிருந்தன. | 2022 ஜனவரி 31, வரை, முதன்மை பெறுகை திட்டம் மற்றும் பெறுகை அட்டவணை தயாரிக்கப்படவில்லை. |
| (வ) | 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல் தொடர்பாக கூட்டுத்தாபனம் | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல் தொடர்பாக முறையாக அறிந்திருக்கவில்லை. அதற்கிணங்க தற்போது வரை இது தொடர்பாக | 2022 ஜனவரி 31, வரை, இது தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிந்திருக்காததன் காரணமாக அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்ளுதல் மற்றும் அவ்வாறு அடைந்துகொள்வதனை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பான 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத துடன் விடயம் அறிந்துகொள்ளப்பட்ட பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

## 10. இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனம்.

2. கணக்காய்வு அபிப்பிராயம் :-

   2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2020 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், காலப் பகுதியுள் | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட | சுகாதார அமைச்சிலிருந்த அனுப்பியிருந்த படிவத்தின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் தயாரிப்பதற்கு | 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தில் செயல்திறன் அளவுகோல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு செயலாற்றல் தேர்வு முறைகளை (Key Performance Indicators) உட்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியருந்த செயற்பாடுகளில் செயலாற்றல் தேர்வு முறைகள் அறுதியாக, போதியளவினதாக அளவீடு செய்யக் கூடிய மட்டத்தில் காட்டியிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளும் முன்னேற்றத்தை அறுதியாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.<br><br>செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 875.8 மில்லியனிற்கான 91 செயற்பாடுகளில் ரூபா 735.9 மில்லியனிற்காக 51 செயற்பாடுகள் 2020 ஆண்டின் போது | வேண்டும். | நேரிட்டது | சேர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், 14 செயற்பாடுகள் 2020 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மூன்று திணைக்களங்களுக்கான செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டின் போது நெருங்கியிருந்த பௌதீக முன்னேற்றத்தினை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த உற்பத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக மாதாந்த உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. விற்பனைத் திட்டத்தின் படி இனங்காணப்பட்டிருந்த மொத்த உற்பத்தித் தேவை 28 வகையான மருந்துகளில் 2,077 மில்லியன் அலகுகள் ஆகும். ஆனால் உள்ளவாறான உற்பத்தி 24 வகையான மருந்துகளில் 1,535 மில்லியன் அலகுகள் மாத்திரம் ஆகும் | வருடாந்த உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.<br><br>உச்சமட்ட உற்பத்தி செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வ தன்மையுடன் உற்பத்தி செய்வதற்காக தத்ரூபமான உற்பத்தி மற்றும் விற்பனை திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த உற்பத்தித் திட்டம் 2022 ஆண்டு முதல் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்<br><br>தொழிற்சாலைகளில் வசதிகள் காணப்படாமை, மூலப் பொருட்களில் ஏற்படும் குறைவுகள் மற்றும் சில உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற தொழிநுட்ப சிக்கல்கள் ஆகிய காரணங்களினால் சில விடயங்களின் உற்பத்தி திட்டமிடப்பட்ட எண்ணிக்கையை விட குறைவாக இருந்தது | 2022 ஜனவரி 31, இல் கூட, 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்படவில்லை மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான உண்மையான உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. |
| | 2020 இல் உற்பத்தி செய்திருந்த மருந்து வகைகளில் மாத்திரைகள் சிறிய | மருந்துகளின் பண்புசார் நிலைமையை அதிகரிப்பதற்காக | இது மருந்து உற்பத்தி நடைமுறையில் காணப்படும் | 2022 ஜனவரி 31, வரை, இந்த நிலையைத் குறைக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுதிகளாக உடையக் கூடிய இயலுமை அதிகரித்திருத்தல், மருந்து மாத்திரைகளின் பாரத்தில் ஏற்பட்டுள்ள முரண்கள், கவர்ச்சியற்ற தோற்றம் மற்றும் மருந்து மாத்திரைகள் உடைந்து போவதற்கு காணப்பட்ட வசதியின்மைகள் ஆகிய காரணங்களினால் உற்பத்திகளை இடைநிறுத்தி மீண்டும் உற்பத்தி செய்ய நேரிட்டிருந்த காரணத்தினால் ஏற்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா.2,563,069 தொகையாக இருந்தது. அனைத்து ஆண்டுகளிலும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற இந்த சீரற்ற நிலைமைகளை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மற்றும் உற்பத்திச் சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிக்கல்கள் எனவும | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | மூலப் பொருட்கள் இன்மை, இயந்திர கொள்திறன் போதியளவு காணப்படாமை,உற்பத்திச் செயற்பாடுகளில் காணப்படும் தொழிநுட்ப வழுக்கள் ஆகிய பல்வேறு காரணங்களினால் மருத்துவ வழங்கள் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கட்டளையிடப்பட்டிருந்த மருந்துகளில் விற்பனைப் பெறுமதி ரூபா 1,003 மில்லியன் தொகைக்கான 26 வகையான மருந்து வகைகளில் 570.78 மில்லியன் அலகுகளை | மருத்துவ வழங்கள் பிரிவில் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு உச்ச மட்ட முயற்சி எடுத்து சந்தையில் தமது பங்கினை பாதுகாத்துக் கொள்ள மற்றும் வருடாந்த விற்பனைத் திட்டத்தின் இலக்கினை நோக்கி நெருங்குவதற்கு உச்ச மட்ட முயற்சி எடுக்க வேண்டும். | நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் மத்தியில் சில உற்பத்திகளுக்கான கேள்வி குறைந்திருத்தல், மருத்துவ வழங்கள் பிரிவில் இருந்து மதிப்பிடப்பட்டிருந்த கட்டளை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கைகான கட்டளைகள் கிடைக்கப் பெறல், உரிய நேரத்தில் மூலப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை, | 2022 ஜனவரி 31, அன்று கூட இந்த நிலை மாறாமல் இருப்பது கவனிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்ததுடன் அவற்றில் விற்பனை பெறுமதி ரூபா 44.10 மில்லியனுக்கான Theophy.ER Tab 125mg மருந்து வகையில் 30 மில்லியன் அலகுகள் ஆகிய மொத்தத் தேவையையும் வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு இயலாமல் போயிருந்தது. மீளாய்வாண்டின் போது விற்பனவுப் பெறுமதி ரூபா 616 மில்லியன் தொகைக்கான 28 வகையான 549 மில்லியன் அலகுகளுக்கான உள்நாட்டுச் சந்தை விற்பனை இலக்கினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அவற்றில் விற்பனைப் பெறுமதி ரூபா 3.92 மில்லியன் தொகைக்கான 5.21 மில்லியன் அலகுகள் விற்பனை இலக்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 02 மருந்து வகைகளில் எண்ணிக்கை எதுவும் விற்பனை செய்வதற்கு முடியாமல் இருந்தது. | | தொழிநுட்ப வழுக்கள் ஆகிய காரணங்களினால் விற்பனை இலக்கினை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது | |
| | உள்நாட்டில் மருந்துகள் உற்பத்தி செய்யும் செயற்பாடுகளை விரிவாக்குவதற்காக அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுத்தமாக தனியார் முதலீட்டாளர் கடன் பங்குடைமையை ஆரம்பிப்பதற்கான திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் சாத்தியமான 15 | அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழுவினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளவாறு செயற்பட வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கை மேற்கொண்டிருந்த ஏனைய முதலீட்டாளர்களின் | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்து வழங்குவதற்கு தேவையான தொழிற்சாலை வசதிகள் மற்றும் தகைமைகளைஇரண்டு முதலீட்டாளர்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்தனர்.மற்றும் இடை வழங்குனர் | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, ஐந்து சாத்தியமான முதலீட்டாளர்களிடமிருந்து மட்டுமே மருந்துகள் வாங்கப்பட்டன, மேலும் 2021 ஆம் ஆண்டில், இடைநிலை வழங்கநரிடமிருந்து பொருட்கள் வாங்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | முதலீட்டாளர்களுடன் மருந்துகள் வழங்குவதற்காக 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>2020 திசெம்பர் 31 திகதி அளவில் மூன்று முதலீட்டாளர்களிடம் மாத்திரம் மருந்துகள் கொள்வனவு செய்திருந்தனர். பங்குடைமை நிருவுவதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினால் மருந்து வழங்குவதற்காக உடன்படிக்கை அந்த மருந்து உற்பத்தியாளர் (Producer) உடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் உற்பத்தியாளர் அல்லாத இடை வழங்குனர் மாத்திரம் ஆகிய முதலீட்டாளர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வழங்கல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | நிலைமை தொடர்பாக தொடர்ச்சியாக தொடர் செயல் நடவடிக்கை எடுத்து செயற்பட வேண்டும். | நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கை செல்லுபடி அற்றதாகியுள்ளது. | மருத்துவ விநியோகப் பிரிவுக்கு வழங்கப்பட்டன. |
| (உ) | பங்குடைமை உடன்படிக்கையின் படி முதலீட்டாளரினால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மற்றும் அறுவை நுகர்வுப் பண்டங்கள் உற்பத்தி கிரயத்திற்கு 20 சதவீத இலாப எல்லையொன்று கூட்டப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட | - மேற்படி - | அரச நிறுவனம் என்ற வகையில் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யும் போது கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், | 2021 ஆம் ஆண்டிலும், உற்பத்திச் செலவில் 20 சதவீதத்திற்கும் அதிகமான இலாப வரம்பைக் கொண்டு விற்பனை விலை முடிவு செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறான ஒரு முதலீட்டாளரிடம் பெறப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த 06 மருந்து விடயங்களின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 823,010,169 தொகையாக காணப்பட்டது. அதற்கு ரூபா 129,898,488 இற்கான இலாபம் சேர்த்தப்பட்டு இன்வொயிஸ் பெறுமதி ரூபா.952,908,657 தொகைக்கு கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் அந்த இன்வொயிஸ் பெறுமதியுடன் மேலும் ரூபா 66,692,327 இற்கான சேவைக் கட்டணம் கூட்டப்பட்டு ரூபா.1,019,600,983 தொகைக்கு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த 06 மருந்துகளின் மொத்தக் கிரயத்தில் 16 சதவீதம் இலாப எல்லை ஒன்று முதலீட்டாளரினாலும் இன்வொயிஸ் விலையின் 7 சதவீதம் சேவைக் கட்டணம் ஒன்று கூட்டுத்தாபனத்தினாலும் உழைக்கப்பட்டிருந்தது. அதன்படி, மொத்த உற்பத்திக் கிரயத்தில் 23 சதவீதம் இலாம் மற்றும் சேவைக் கட்டணம் கூட்டப்பட்டு விற்பனைவிலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | எனினும் தனியார் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் அலகிற்கான கிரயம் குறைவடையும் விதத்தில் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யும் இயலுமை காணப்படுவதனால் விற்பனை விலை தீர்மானிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் சேவைக் கட்டணம் கூடிய பெறுமதி ஒன்றை காட்டுகின்றன. | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | **45** வகையான மருந்துகளில் கிட்டத்தட்ட **2,000** மில்லியன் யூனிட்களை உற்பத்தி செய்யும் கூட்டுத்தாபனச் செலவுக் கட்டுப்பாட்டுத் துறை நிறுவப்படவில்லை, மேலும் செலவுக் கணக்காளர் பதவிக்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை. இதனால், கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் விலையைப் போல், கூட்டுத்தாபன பொருட்களின் விலையையும் கட்டுப்படுத்த முடியவில்லை. | நிறுவனத்தின் தயாரிப்புகளின் விலை தொடர்பான செயல்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டுக்கு பொருத்தமான பதவி அங்கீகரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இதற்காக ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார் | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, உற்பத்திச் செலவு கட்டுப்பாட்டு அலகு அல்லது உற்பத்திச் செலவு கணக்காளர் பதவி எதுவும் அங்கீகரிக்கப்படவில் லை. |
| (எ) | கூட்டுத்தாபன செலவு ஆதாயப் பகுப்பாய்வை நடத்துவதில் தோல்வியடைந்தது மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மற்றும் மருத்துவ விநியோகத் துறைக்கு குறைந்த விலையில் வழங்கக்கூடிய பொருட்கள் மற்றும் நிறுவனத்திற்கும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கும் இடையே தயாரிப்பு கலவையை தீர்மானிக்க முடியவில்லை. | மருத்துவ விநியோகத் துறைக்கு குறைந்த விலையில் வழங்கக்கூடிய பொருட்கள் மற்றும் தயாரிப்புகளின் கலவையைப் பற்றி செலவு பலன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை ல. | 2022 ஜனவரி 31, வரை, உற்பத்திச் செலவு பலன் பகுப்பாய்வு நடத்தப்படவில்லை மற்றும் சாதகமான தயாரிப்பு கலவை தீர்மானிக்கப்படவில் லை. |
| (ஏ) | பொதுவான பரிசோதனை ஆய்வு கூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை ஒன்று நிறுவும் குறிக்கோளுடன் மொத்தத் தொகை ரூபா 133,767,599 தொகை செலவிடப்பட்டு | கட்டிடத்தின் பயன்பாட்டிற்காக நிச்சயிக்கப்பட்ட திட்டம் ஒன்றின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டிடம் குத்தகைக்கு விடப்படுகிறது அல்லது வெளி தரப்பினருக்கு விற்கப்படுகிறது. | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, கட்டிடம் பயன்படுத்தப்படாமல் உள்ளது மற்றும் கட்டிடத்திற்கான நிலைத்தன்மை சான்றிதழ் கூட பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டு நவீன மயப்படுத்தியிருந்த கட்டிடம் ஒன்று 2019 ஆகஸ்ட் 20 திகதி முதல் 2021 ஒக்தோபர் 31 திகதி வரையும் விளைவற்று மூடப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை நிறுவுவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஏனைய தேவைகள் எதற்கும் கூட்டுததாபனத்தின் முன் திட்டமிடல் அல்லது தயாரித்தல் காணப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | | | |
| (ஐ) | 2017 ஆகஸ்ட் 06 ஆந் திகதி நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 89,898,864 தொகை செலவிடப்பட்டு Cephalexin தொழிற்சாலை நவீன மயப்படுத்தப்பட்டு 2019 ஆகஸ்ட் 09 திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் Cephalexin மருந்து உற்பத்திக்குத் தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பின்னர் அதில் Levothyroxin | முதலீடுகளின் மூலம் உச்ச மட்ட பயன்பாட்டை பெறக் கூடியவாறு அதற்குரிய ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். | **Levothyroxine tablets IP 50mg** அந்த பொருள் தயாரிப்பதற்கு மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் அனுமதி கோரப்பட்டுள்ளது | 2022 ஜனவரி 31, வரை, இந்த தயாரிப்புக் கூடத்தில் வணிகரீதியான தயாரிப்பு எதுவும் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | tablets IP 50mg உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக<br><br>திட்டமிடப்பட்டு 2020 திசெம்பர் 23 திகதி தொழிற்சாலை வளவினை திறந்து வைக்கும் ஆரம்ப விழா நடாத்துவதற்காக ரூபா 3,798,296 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2021 ஒக்தோபர் 31 திகதி<br><br>வரை இவ் உற்பத்தி நிலையத்தில் வாணிப அடிப்படையில் மருந்துகள் ஏதும் உற்பத்தி செய்திருக்கவில்லை. | | | |
| | Penicillin Zone களஞ்சியம் Cephalosporin Production பிரிவு என மாற்றப்பட்டு G வலயம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலை மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா 80,510,608 ஆக காணப்பட்ட போதிலும் 2020 பெப்ரவரி 19 திகதி வரை திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 11,918,835 தொகையினால் மிகையாக வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | ஒப்பந்த வேலைப் பெறுமதியை மிகைத்து நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகளுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | ஒப்பந்த பெறுமதியை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக திணைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக திணைக்கள தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது | 2022 ஜனவரி 31, வரை, மொத்த ஒப்பந்த மதிப்பை விட அதிகமாக செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பெறுகை குழு ஒப்புதல் பெறப்படவில்லை. |
| | இரண்டு கட்டடங்களை இணைக்கும் உத்தேச மேம்பாலம் நிர்மாணிப்பதற்காக 2021 பெப்ரவரி 18 திகதி வரை ரூபா 6,016,902 தொகை செலவிடப்பட்டிருந்த | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின்றி இந்தச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பங்களிப்பு செய்த பொறுப்புச் சொல்ல | செயற்திட்டத்துடன் தொடர்புடைய முன்வரக் கூடிய வேலைகளுக்காக பணிப்பாளர் சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்துக்காக | 2022 ஜனவரி 31, வரை, பரிந்துரைகளின் படி செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், இதன் நிர்மாண வேலைகள் இடைநிறுத்துவதற்காக நிர்வாக அதிகாரசபை தீர்மானிக்கப்பட்டிருந்ததால், செலவிடப்பட்டிருந்த தொகை பயனற்ற செலவொன்றாக மாறியுள்ளது | வேண்டிய தரப்பினரை கண்டறிதல் மற்றும் செலவிடப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளன | |
| | நான்கு மாடி நிர்வாக கட்டடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 28,952,527 தொகை செலவிடப்பட்டு 2018 மார்ச் 07 திகதியளவில் நிலக் கீழ்ப்பகுதி Piling வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 ஜூலை 31 திகதி கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த வேலைகளின் நிர்வாக அலுவல்களுக்காக அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்விடயங்களை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போலவே மேற்பார்வை செய்வற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கட்டுமான நிறுவனத்தின் தேவைக்கேற்ப மறுவடிவமைப்பு செய்ய நிர்வாகம் முடிவு செய்துள்ளது. | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, கட்டுமானப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. |
| | 2020 திசெம்பர் 18 திகதிய பீஈடீ 03/2020 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு ஊழியருக்கு வருடாந்தம் ரூபா 13,500 தொகை பணிக்கொடை கொடுப்பனவு என செலுத்த முடியும் எனினும் கூட்டுத்தாபனத்தினால் அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்கான ஒரு ஊழியரின் மாதாந்த சம்பளம் விஷேட பணிக்கொடை கொடுப்பனவு எனவும், ஒரு ஊழியருக்கு ரூபா 5,000 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்த வேண்டும் | சுற்றறிக்கையின் விதிமுறைகளை மீறி பணிக்கொடை வழங்குவதற்கு முறையான அனுமதி பெறப்படவில்லை. | 2022 ஜனவரி 31, வரை, இந்த நிலைமை சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது ரூபா 10,000 தொகையும் தலைவர் பணிக்கொடை எனவும் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி சுற்றறிக்கையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த வரையறையை மிகைத்து முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவு என ரூபா 16,577,284 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| | 2009 மார்ச் 09 திகதி டீஎம்எஸ்/ஈ4/10/4/090/2 இலக்கம் கொண்ட சுகாதார போசாக்கு மற்றும் தேசிய வைத்திய அமைச்சுச் செயலாளரை விழித்துள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடித்தின பின்வரும் விதிகளின்படி தவியணி அங்கத்தவர்களுக்கு மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றாக ரூபா 4,000 மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காமல் 2011 ஜுலை 01 திகதி முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு என மிகையாக செலுத்தியிருந்த தொகை | பணிப்பாளர் சபை தீர்மானத்தை செயற்படுத்துவற்கு முன்னர் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இது வரை வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுக்காக அனவல் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக எந்த ஒரு கவர் அனுமதியும் பெறப்படவில்லை | -அவ்வாறே- |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 121,234,241 ஆகும். அவ்வாரே நாளாந்த வரவுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு என ஒரு மாதத்திற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 2,000 தொகை மாத்திரம் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அதனை ரூபா 3,500 தொகை வரை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. நாளாந்த வரவு<br><br>ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படின் வருட இறுதியில் உள்ள மீதியான விடுமுறைகளுக்காக பணம் செலுத்த முடியாது எனினும், தின வரவுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியான விடுமுறைகளுக்காக ரூபா 12,475,703 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சித்தரைப் புத்தாண்டு மற்றும் நத்தாளுக்காக ஒருவருக்கு ஒருமுறை மாத்திரம் ரூபா 6,000 இற்காக பரிசு வவுசர் வழங்க முடியும் எனினும், மீளாய்வாண்டின் போது நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 25,000 தொகை வீதமும் பயிற்சி பெறும் ஊழியர்களுக்கு ரூபா 12,500 தொகை வீதமும் மொத்தப் பெறுமதி ரூபா 7,325,000 தொகைக்கான பரிசு வவுசர்களும் அதற்கு மேலதிகமாக பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்காக | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 12,500 தொகை வீதம் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு ரூபா 6,250 தொகை வீதம் மொத்தப் பெறுமதி ரூபா 4,712,500 தொகைக்கான பரிசு வவுசர்கள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>ஏதேனும் ஒரு ஊழியர் குறிப்பிட்ட சேவை முறை மாற்றம் அனைத்துக்கும் வருகை தந்தால் ரூபா 1,000 தொகை மாதாந்தக் கொடுப்பனவு மாத்திரம் செலுத்த முடியும் எனினும், மாறாக **2020** ஆம் ஆண்டு மிகை யாக செலுத்தப்பட்டிருந்த சேவை முறை மாற்றுக் கொடுப்பனவு ரூபா 3,549,100 தொகையாக காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தருக்கு தூரத்தின் அளவினை கவனத்தில் எடுத்து போக்குவரத்துப் படி செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தூரத்தின் அளவினை கவனத்தில் எடுக்காமல் 2009 ஆண்டு முதல் மாதாந்தம் முறையே ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 இற்கான போக்குவரத்துக் கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆண்டு முதல் பணிப்பாளர் சபையின் தீர்மானம் ஒன்றின் படி அந்த மாதாந்த கொடுப்பனவு முறையே | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 8,000 மற்றும் ரூபா 6,000 தொகை வரை அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| | 2008 திசெம்பர் 31 திகதிய 30/2008 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தக்கூடிய உச்சமட்ட<br><br>இடர் கடன் தொகை ரூபா 250,000 தொகை என வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 101 உத்தியோகத்தர்களுக்கு அந்த வரையறையை மிகைத்து இடர் கடனாக மொத்தத் தொகை ரூபா 12,429,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்துக்கு பொறுத்தமான தாபனக் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் வரை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கையை பொருத்தமாக்கிக் கொள்ள வேண்டும். | சுற்றறிக்கை விதிகளை மீறி பணம் செலுத்துவதற்கு முறையான ஒப்புதல் பெறப்படவில்லை. | -அவ்வாறே- |
| | 2009 நவம்பர் 13 திகதிய 438 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின்படி<br><br>2020 திசெம்பர் 31 அளவில் பயன்படுத்த முடியாதிருந்த ரூபா 5,959,483 கிரயத்தை உடைய மூலப்பொருள் இருப்பு, ரூபா 6,030,600 தொகை கிரயத்தை உடைய நடைபெறுவேலை பண்ட இருப்பு, ரூபா 3,383 கிரயத்தை முடிவுப் பொருள் இருப்பு மற்றும் ரூபா 59,259,389 தொகை மொத்தக் கிரயத்தை உடைய நிலையான | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி சொத்துக்கள் முறைப்பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பயன்படுத்த முடியாத இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கும் உரிய முறையில் நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க | நியமனம் செய்யப்பட்ட கணிப்பீட்டு சபையினால் உரிய அனைத்து விடயங்களையும் இனங்கண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மிக விரைவாக அப்புறப்படுத்துவற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2022 ஜனவரி 31, நிலவரப்படி, வழங்குநரிடமிருந்து பயன்படுத்த முடியாத மூலப்பொருள் கிரயம் ரூபா.5,124,650 மட்டுமே வசூலிக்கப்பட்டது, மேலும் அவர்கள் இருப்பு மற்றும் நிலையான சொத்துக்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நிதி ஒழுங்குமுறை<br><br>விதிகள் 103, 104 மற்றும் 105. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்து அலகுகள் 346 முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கும், பயன்படுத்த முடியாத இருப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 105 படி விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கும் அல்லது உரிய முறையை நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேண்டும் | | பொறுப்பானவர்களைக் கண்டறிந்து அதற்கேற்ப இழப்பை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | 1983 இன் 12 இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரிவு 06(2)(அ) இணங்க ஊழியர் முற்றாக சேவை செய்துள்ள ஒவ்வொரு ஆண்டிற்காக அரை மாதத்திற்கான சம்பளம் அல்லது வேதனம் அடிப்படையில் ஊழியர் பணிக்கொடை ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு பதிலாக ஊழியரின், முழு மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு என ரூபா 2.46 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டடிருந்தது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் பணிக்கொடை ஒதுக்குவதற்கும், செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிக்கொடை கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டது எனவுமமற்றும் எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | 2022 ஜனவரி 31, வரை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை. |

## 11. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

1. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

2. அபிப்பிராயம் -

2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.11.1 ஆம் பந்தி கிரிமினல் குற்றமொன்று தொடர்பாக நீதிமன்றத்தில் சட்ட வழக்கு காணப்பட்ட சந்தர்ப்பத்தில் இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதிக்கு சம்பளமெதுவும் செலுத்தப்படக் கூடாத போதிலும் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு அரைச் சம்பளக் கொடுப்பனவாக ரூபா 954,664 தொகை 2011 ஒக்தோபர் தொடக்கம் 2016 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக முடிவெடுப்பதற்காக குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் முடிவின்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கொடுப்பனவுகள் சரி செய்யப்படவில்லை. |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் பணவனுப்பல்கள் | 07.11.2018 முதல் 18.01.2022 வரை 24 தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. 07.11.2018 முதல் 60 தவணைகளில் | இது தொடர்பான நஷ்டத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்களிப்பு அது கழிக்கப்பட்ட மாதத்தின் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2007 மற்றும் 2008 ஆண்டுகளிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் பணவனுப்பல்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தாமதப்படுத்தப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டு ரூபா 15,051,384 நட்டம் ஏற்பட்டிருந்ததால் 2007 ஏப்ரல் தொடக்கம் 2009 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்பட்ட நட்டம் ஏதாவது காணப்பட்டால் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | செலுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. | இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை முடிவுறுத்தப்பட்டு 30 நாட்களினுள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் 02 உத்தியோகத்தர்களிற்கு பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பான 8 மாத தாமதத்திற்காக தொழில் ஆணையாளரால் மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 253,884 நட்டம் ஏற்பட்டிருந்தது. | பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டும். ஏற்பட்ட நட்டம் ஏதாவது காணப்பட்டால் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | நிறுவன அளவில் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணை நிறைவடையாததால் பதற்றமான சூழல் நிலவுகிறது. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து உரிய இழப்பீட்டை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டில் றுகுணு சேவய இல் காணமல் போயிருந்த 12 இசைக் கருவிகளிற்குரிய ரூபா 305,900 மீள நிறுவுதல் பெறுமதியை கணக்காய்வுத் திகதியான 2019 யூலை 31 வரையிலும் பொறுப்பான | உரிய நட்டம் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் வெகுஜன ஊடக அமைச்சிடம் விசாரணை செய்து முடிவெடுக்கப்படவுள்ளது. | இது தொடர்பான நஷ்டத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | ல. |
| (உ) | 2015 மே 05 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 பந்தி 3.3 மற்றும் 2016 மார்ச் 09 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 05/2016 இன் 02 ஆம் பந்தி உத்தியோகபூர்வ வாகன ங்களுக்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துதல் அல்லது உத்தியோகபூர்வ வாகனத்துக்கு பதிலாக மாதாந்தம் போக்குவரத்து படியாக ரூபா **50,000** மற்றும் குறிப்பிட்ட பதவிக்குரிய மாதாந்த எரிபொருள் படி பெற்றுக் கொள்ளல் ஆகிய இரண்டு மாற்றீடுகளில் ஒன்றினை தெரிவு செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் அதனை கவனத்தில் எடுக்காமல் தலைவருக்கு **2020** பெப்ரவரி மாதம் முதல் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் **2020** ஏப்ரல் முதல் ஜூலை வரையான காலப்பகுதிக்காக போக்குவரத்துப் படியாக ரூபா **200,000** மற்றும் எரிபொருள் கொடுப்பன வாக ரூபா **93,160** தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவு அல்லது ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்று வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | தலைவர் அலுவலகத்தில் இருந்து நடவடிக்கைகளுக்காக இந்த வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | இந்நிலையை சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | தனியார் வங்கி ஒன்றில் கூட்டுத்தாபனத்திற்குரிய நடைமுறைக் கணக்கு ஒன்றில் ரூபா 3,244,526 தொகை 2019 போது பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டமையால் அப் பணத்தை வட்டி கிடைக்கக் கூடிய கணக்கு ஒன்றில் வைப்புச் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை இழந்துள்ளது. | வட்டி வருமானம் கிடைக்கக் கூடியவாறு வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்து பேணப்பட வேண்டும். | நிதி தேவையின் அடிப்படையில் பிரதான வங்கிக் கணக்கிற்கு நிதி மாற்றப்படுகிறது. | இன்னும் சரி செய்யப்படவில்லை. |
| (எ) | கூட்டுத்தாபனத்தின் செவிமடுத்தல் வளத்தினை டிஜிடல் பாதுகாப்பு செய்யப்பட்ட தர களஞ்சியப்படுத் தலுக்காக 2017 ஆண்டு முதல் கொரியா உதவியுடன் பெற்றிருந்த கொரியா சேவையகம் (Server) பயன்படுத்தப்படுவதுடன் அதற்காக டிஜிடல் பாதுகாக்கப்பட்ட ‘‘பாடல்கள்’’ மாத்திரம் களஞ்சியப் படுத்தப்பட்ட போதிலும் ‘‘நிகழ்ச்சித் திட்டங்கள்’’ களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாததுடன் குறிப்பிட்ட கொரியா நிறுவனத்துடன் நிகழ்வு நிலை உத்தரவு (Online Command) மூலம் தொடர்பு கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை நாளதுவரை ஆக்குவதற்கு 2017 ஒக்தோபர் முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கூடிய விரைவில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | டிஜிட்டல் பாதுகாப்பிற்கான பயிற்சி அதிகாரியாக பணியாற்றிய அதிகாரி, பாடல்களை மட்டும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு, மார்ச் **2021**ல் ஓய்வு பெற்றார். அதற்கு பதிலாக, **2022** ஆம் ஆண்டு முதல் மற்றொரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் SERVER அமைப்பிற்குள் நுழைய தேவையான கடவுச்சொல்லை ஆட்டோமேஷன் சிஸ்டம் பெற்ற நிறுவனம் இதுவரை வழங்கவில்லை என்றாலும், இந்த பணி தாமதமானாலும், கொடுத்தவுடன் வேலையை தொடரலாம். மனித வள பற்றாக்குறையே முக்கிய காரணம் எனவே அதற்கான உடனடி நடவடிக்கை எடுக்க முடிவு | இன்னும் சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்யப்பட்டுள்ளது. ஆனால் 2017 முதல், பிற திட்டங்கள் பாதுகாக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. | |
| (ஏ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான விளைவற்றுக் காணப்படும் கட்டிடங்களின் தரையளவு 1126.45 சதுர மீற்றர்களாக காணப்பட்ட துடன் அக் கட்டிடங்களை அபிவிருத்தி செய்து பயன்தரக் கூடிய கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியுமாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் உரிய பராமரிப்பு இன்றி நீண்டகாலமாக காணப்படுவதினால் கட்டிடங்கள் அழிவுநிலையை அடையும் சூழ்நிலை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்குகின்றேன். இந்த இடப்பகுதியில் புதிய அரங்கு ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு, கூட்டுத்தாபனம் சபையின் ஒப்புதலின் பேரில், புதிய கட்டிடத்தின் ஒரு பகுதி குத்தகைக்கு விடப்படுவதால், புதிய கட்டிடத்தில் ஒரு பகுதி திரையரங்கம் கட்ட உத்தேசித்துள்ள பகுதியிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கழகம். | இன்னும் சரி செய்யப்படவில்லை. |
| (ஐ) | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானதும் பரிமாற்றல் (transmission) நிலையத்தை நடாத்துவதற்காக குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுமான 0.3194 ஹெக்டெயர் பரப்பளவிலான காணி தொடர்பான ரூபா 127,149,208 குத்தகை வாடகை கூட்டுமொத்தம் 1995 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான வரி வாடகையை கொண்டிருந்ததுடன் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு சொந்தமான 119.5309 ஹெக்டெயர் பரப்பளவிலான | ஆண்டுக்குரிய செலவினங்கள் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். | 25.01.2022 அன்று, அமைச்சர்கள் குழுவின் முடிவு AMA/22/0012/316/001 செயலாக்கப்படும். இந்த காணியை அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வானொலி கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்தி மேற்படி வரித் தொகையை நிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானம் பெறப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தில், இதுவரை வசூலிக்கப்பட்டுள்ள வரிகளை பதிவழிப்பது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணிக்கான 2017 ஆம் ஆண்டுக்கான குத்தகை வாடகை 2020 டிசம்பர் 31 இல் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | 2 முதல் 20 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்குள் முன்கொண்டு வரப்பட்ட ரூபா 6,774,855 மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 20,508,760 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,117,912 மீளளிக்கப்படாத தொகை குறித்த மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில், வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட செலவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டன. | இன்னும் சரி செய்யப்படவில் லை. |
| (ஓ) | 1981 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான 39 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட வேண்டிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 149,420,035 கூட்டுமொத்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு 2020 போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவினங்கள் நீண்ட காலம் நீடிக்கின்றமை தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வாடகையை அகற்றுவது தொடர்பாக திரைசேறியிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. | இன்னும் தீர்பனவுக்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை ல. |
| (ஔ) | ஹுன்னஸ்கிரிய மற்றும் திருகோணமலையில் ஒலிபரப்பு நிலையங்கள் நடாத்தப்பட்ட காணிகளுக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் | செலுத்த வேண்டிய செலவின மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு | 25.01.2022 அன்று, அமைச்சர்கள் குழுவின் முடிவு AMA/22/0012/316/001 செயலாக்கப்படும் | சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தில், இதுவரை வசூலிக்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுகளில் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ரூபா 31,905,000 செலுத்த வேண்டிய குத்தகை வாடகையை தீர்ப்பனவு செய்வதற்கு 2021 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | | ள்ள வரிகளை பதிவழிப்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. |
| (க) | 2015 ஒக்தோபர் 27 ஆம் திகதிய பிஈடி 01/2015(i) ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் படி<br><br>உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவரால் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது ரூபா 50,000 போக்குவரத்து படி மற்றும் சம்பந்தப்பட்ட பதவிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படியை பெற முடியுமான போதிலும் 2020 ஜனவரி 30 முதல் முன்னாள் தலைவருக்கு வாகனத்தை முன்பதிவு செய்ததன் அடிப்படையில் மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக முன்னாள் தலைவருக்கு ரூபா 659,610 தொகை 2020 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தலைவர் அலுவலக நடவடிக்கைகளுக்காகவும், சில நேரங்களில் தலைவர் மண்டல சேனல் கண்காணிப்பு பயணங்களில் மட்டும் இந்த வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. | இந்த தொகையை முன்னாள் தலைவரிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ச) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 6.2 ஆம் பிரிவின் படி<br><br>பணி ஒதுக்கீட்டு அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட சேவையை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக முடிவெடுப்பதற்காக குழுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்ட பின்னர், அதன்படி செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | இன்னும் சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக்கொண்டதும் வரிசை அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது 7 பெறுநர்களுக்கு ரூபா 3,519,117 தொகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணி ஒதுக்கீடு பூர்த்தியடைவதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ட) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 6.2 ஆம் பிரிவுமாதாந்த எரிபொருள் படி போதுமானதாக இல்லாவிட்டால் பணிப்பாளர் சபையின் பரிந்துரையுடன் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டு பொது திறைசேரி செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் பெறப்படாமல் **1011** லீற்றர் எரிபொருள் முன்னாள் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக, தலைவர், பத்திரிகை செயலாளரிடம் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் பெறவில்லை. | இன்னும் சரி செய்யப்படவில்லை. |
| (த) | லங்கா புவத்தின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வெகுஜன ஊடக அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் 1993 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் | முதலீடுகளைப் பார்த்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலீடு செய்யப்பட்ட தொகை. | இதுவரை பங்கிலாபம் கிடைக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு வரை பங்குலாப வருமானம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ப) | ரூபா 4,605,256 இற்கு உடனடியாக பழுதுபார்க்கப்பட வேண்டிய தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள ஒலிபரப்புக் கோபுரம் மற்றும் மைக்ரோவேவ் கோபுரம் என்பவற்றை பழுதுபார்ப்பதற்காக 2019 நவம்பர் 6 இல் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 பெப்ரவரி வரையிலும் உரிய வேலை தொடங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது இந்த கோப்பு கொள்முதல் செயல்முறைக்கு அனுப்பப்பட்டுள்ளது (டெண்டர்களுக்கு அழைப்பு). | இன்னும் சீரமைக்கப்படவில்லை. |
| (ய) | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 35 பதவிகளில் 371 வெற்றிடங்களும், 42 பதவிகளில் 364 மேலதிகங்களும் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத 102 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக 6 சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மேலதிக ஊழியர்களின் எண்ணிக்கை 35 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மாத்திரமே ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக முடிவெடுப்பதற்காக குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இன்னும் சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ர) | இல. 513, படி 1 அநுராதபுர மாவட்டத்தின் நுவரகம் பலத கிழக்கு பிரதேச செயலக பிரிவின் அநுராதபுர புதிய நகரத்தில் அமைந்துள்ள காணியில் 1981 ஆம் ஆண்டிலிருந்து றஜரட்ட சேவய நடாத்தப்படுகின்றது. அக் காணியின் சட்டரீதியான உரித்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்படாத போதிலும் இவ் விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமைத்துவம் தீர்க்கப்பட வேண்டும். | உரிமைத்துவத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | இன்னும் தீர்க்கப்படவில்லை. |
| (ல) | 2 சந்தர்ப்பங்களில் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பாக ரூபா 4,716,813 மற்றும் ரூபா 7,551,750 தொகையை அறவீடு செய்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மற்றும் கொழும்பு மாகாண உயர் நீதிமன்றத்தில் 2015 ஆம் ஆண்டின் போது 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. பிரதிவாதி குடியிருக்கும் இடத்தை அவர் கைவிட்டதன் காரணமாக அந் நான்கு வழக்குகளும் நடாத்தப்பட முடியாதிருந்ததுடன் 4 ஆண்டுகளிற்கு மேலாக கைவிடப்பட்டிருந்தன. பிரதிவாதியின் தற்போதைய வதிவிடம் தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கை கூட்டுத்தாபனம் செயற்படுத்தியிருக்கவில்லை. | நீதிமன்றத்திற்கு தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் இடாப்பின் ஊடாக பிரதிவாதியின் தற்போதைய வதிவிடம் தொடர்பான தகவல்களை வழங்கி வழக்கு செயற்படுத்தப்பட வேண்டும். | குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது போலீசார் புகார் அளித்து விசாரணை நடத்துவார்கள். | இந்த வழக்கு இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை. |

## 12. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

1. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
2. கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

2018 இல்லை

2019 இல்லை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|
| தொழிலுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களிடமிருந்து விமானப் பிரயாணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தில் விமானப் பிரயாணச்சீட்டுக் கொள்வனவு செய்ததன் பின்னர் எஞ்சிய ரூபா 2,615,836 தொகையை உரிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டியதாக காண்பிப்பதற்கு பதிலாக பணியகத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது | புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணத்தில் மீதமுள்ள பணத்தை அந்த தொழிலாளர்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும். | பணியகத்தினால் இதற்காக பொது மேந்தலை செலவினமொன்றாக செலவிடப்பட்டதா் இவ்வருமானம் அச்செலவினத்தின் மீளளிப்பொன்றாக கருத முடியும். | 2021 டிசம்பர் 31, வரை, அந்தந்த உரிமையாளர்களுக்கு பணம் செலுத்தப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **2020** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்கின்ற தொழிற்படையினரிடமிருந்து பல்வேறு காரண-ங்களின் மீது பிடிபணமாக வைத்துக் கொள்ளப்பட்டு, மீண்டும் செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா.668,986,984 ஐ புலம்பெயர்ந்த தொழிற்படையினரின் காப்புறுதி நட்டஈடாக கிடைக்கப்-பெற்றுள்ள ரூபா**. 51,239,587**ம் தொழில் முகவர் நிறுவனங்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா.**281,344,569** காணப்பட்டதுடன், குறித்த பணத் தொகை பல்வேறு காரணங்கள் மீது செலுத்தாமல் நீண்ட காலமாக பணியகத்தில் பிடிபணமாக வைக்கப்பட்டிருந்தது. | தற்போது செலுத்தாதுள்ள காப்புறுதி நட்டஈட்டு தொகை அடங்கலாக செலுத்தப்பட வேண்டிய ஏனைய பணத் தொ-கையினை துரிதமாக செலுத்துவதற்கு தேவை-யான நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். | ஆதார ஆவணங்கள் அல்லது வேறு ஏதேனும் குறைப்பாடுகள் காரணமாக இது வரை கவனிக்கத்தக்க எண்ணிக்கையிலான விண்ணப்பங்களை நிதிப் பிரிவிடம் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. உரிய கோரிக்கைகளை சரியான வகையில் சமர்ப்பித்த பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த தொகைகளை தீர்பனவு செய்வதற்கான முறையான ஏற்பாடு எதுவும் இல்லை. குறிப்பிட்ட காலத்திற்குள் கோரிக்கைகளை முன்வைக்காவிட்டால் வருமானமாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. |
| 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டம் 52(1) பிரிவுக்கமைய அனுமதிப்பத்திர தாரரால் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு சகல தரகுப் பணத்திற்கும் 05 சதவீதம் அளவில் கணக்கிடப்பட்டு செஸ் வரியொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் புலம்பெயர் வீட்டுப்பணிப்பெண்களுக்கு வெளிநாட்டு எஜமான்களிடமிருந்து தரகுப்பணம் கருத்திற் கொள்ளாமல் ஒரு வீட்டுப்பணிப் பெண்ணுக்கு ரூபா 5,000 வீதம் செஸ் வரி அறவிடப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பணியகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு முரணாக வெவ்வேறு கட்டணங்களை தீர்மானிப்பதற்கு பணியகத்திற்கு இயலுமையொன்று இல்லாது இருந்ததுடன இதனூடாக அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறித்துரைக்கப்பட்ட தன் பிரகாரம் அறவிடப்படாமை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட | பணியகத்தின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த வரி அறவிடப்பட்ட போதும் அநேகமான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் இந்த தரகு தொகை வெளிப்படுத்துவதில் இருந்து தவிர்ப்பதாலும் அது தொடர்பாக மேலதிக பரீட்சிக்கும் முறையொன்று இல்லாமையாலும் வீட்டுப் பணிப் பெண் தரகுப் பணமாக சேவையில் பெண்கள் ஊழியத்திற்காக ரூபா 100,000 கிடைப்பனவு என்ற அடிப்படையில் இப்பணம் அறவிடப்படுகின்றது. | வெளிநாடுகளில் தொழில்புரிவோர் சார்பில் வேலைவாய்ப்பு முகவர்கள் பெறும் தரகு தொகையை துல்லியமாக தெரிவிக்கும் முறையும், அரசுக்கு செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் வசூலிக்கும் முறையும் 2021 டிசம்பர் 31, வரை செயல்படுத்தப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். | | |
| 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் இரண்டாம் பகுதியின பிரிவு 17, துணைப் பிரிவு 3 இன் படி பணியகத்தின் நிதிகள் செலவழிக்கப்படலாம். இதற்கு முறையாக அனுமதியின்றி **1995** ஆம் ஆண்டு முதல் பணியகத்தின் ஊழியர்களுக்கு மருத்துவ கட்டணங்கள் மற்றும் விபத்து இழப்பீடுகளை திருப்பிச் செலுத்துவதற்கான காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில், பணியகத்தின் மொத்த வருமானத்தில் ரூபா. **44,287,888** இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவக் கட்டணங்களை மீளச் செலுத்துவதற்காக செலவிடப்பட்டது | பணியகம் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்த முறையான ஒப்புதல் பெறப்பட வேண்டும். | அதற்கான அனுமதி பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | பணியக ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு முறையை அறிமுகப்படுத்து வது தொடர்பான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்ட து. |
| 2017 ஆம் ஆண்டின் சனவரி முதல் 2018 ஆம் ஆண்டின் யூலை 31 ஆந் திகதி வரை 19 மாத காலப்பகுதியில் பணியகத்திற்குச் சொந்தமான 26 வாகனங்கள் 43 சந்தர்ப்பங்களில் விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அது தொடர்பான நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 20 காப்புறுதி உரித்து கோரல் கோவைகளை எழுமாறாக பரீட்சிக்கப்படுவதுடன் அவற்றில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் மேற்குறித்த காலப்பகுதியில் இடம்பெற்ற 34 விபத்துக்களில் 14 விபத்துக்கள் தொடர்பான சாரதிகளால் எழுத்து மூலம் நிறுவனத்திற்கு | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் வாகனங்கள் விபத்து தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான காப்புறுதி மேவுகை கிடைப்பதன் மூலம் நிறுவனத்திற்கு நட்டமொன்று இடம்பெறவில்லை என தீர்மானிக்க முடியாமல் இருப்பதுடன் காப்புறுதி தவணை கொடுப்பனவு, உரித்துக் கோராத உபகாரப் படிகள் இழக்கப்பட்டமை, விபத்து காரணமாக | கணக்காய்வு அவதானிப்பு சரியாக இருப்பதுடன் எதிர்காலத்தில் அக்குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | எவ்வாறாயினும், கணக்காய்வுப் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் நிதி ஒழுங்குமுறை<br><br>விதிகளின்படி கையாளப்படவில்லை என்றும், ஆனால் தற்போது, வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதி ஒழுங்குமுறை விதிகளின்படி கையாள்வதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் 27 விபத்துக்கள் பொலிசிற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்திற்கு இம்பெறும் சேதம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | | |
| 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை மிகைத்து பணியகத்தினால் இடர்கடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அக் கடன் மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 325,149,295 ஆக இருந்தது. ரூபா 500,000 இனை விஞ்சிய 137 இடர்கடன் மீதிகள் மற்றும் ரூபா 1,000,000 இனை விஞ்சிய 04 கடன் மீதிகள் மேற்படி மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | ஊழியர் கடன் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக அங்கீகாரத்தை கோரி அமைச்சு செயலாளர் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரியதாக 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதிய PE/NEB/SLB FE/GEN/2018 ஆம் இலக்க புதிய கடிதம் வழங்கப்பட்டிருந்தது. | இயக்குநர் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அதே முறையைத் தொடர ஒப்புதல் வழங்குமாறு பொது நிறுவனங்கள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31, வரை அந்தக் கடிதத்திற்கு பதிலளிக்கப்படவில்லை. |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டம் 42**(2)** பிரிவுக்கமைய இலங்கைக்கு வெளியே சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நல-னோம்பலை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்க-ப்பட்டிருந்த தொழிலாளர் நலனோம்பல் நிதியத்தின் பணத்தை உபயோகப்படுத்தி அதன் நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் நேரடி தொடர்பு இல்லாத பணியகத்தின் பணியாற்தொகுதியினரின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பொதுப் பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், | தொழிலாளர் நலனோம்பல் நிதியம் ஆரம்பிக்கும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவ-ற்றை நிறைவேற்றிக்-கொள்வதற்காக அந்த நிதியம் உபயோக-ப்படுத்தல் வேண்டும். | **1998** யூன் 03 ஆந் திகதிய **1998/783/32/017**Mம் இலக்க அமைச்சரவை கட்டளை மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மூலம் வெளியிடப்பட்ட ACCOUNTINGECIR NO 01 OF 1999 இன் பிரகாரம் ஏற்-புடைய செலவி-னங்களை தொழிலாளர் நலனோம்பல் நிதியத்தில் மேற்-கொள்ளப்பட்டுள்ளது. | வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக சட்டத்தின்படி, வெளிநாட்டுப் தூதரகங்களுக்கு புறப்படும் பணியகக் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிதியைப் பயன்படுத்தியிருக்க வேண்டும், ஆனால் அது செய்யப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| நிதிக் கூற்றுகளின படி மீளாய்-விற்கான ஆண்டில் அதற்காக மொத்தம் ரூபா. 1,050,341,472 ஐ செலவிடப்பட்டிருந்தது. அது நலனோம்பல் நிதியத்தின் முழுமொத்த செலவினத்தில் **72** ஆன சதவீதமாகும். | | | ல. |
| 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பணியகத்தில் ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளாமல் சேமலாப நிதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, 10 வருடங்களாக அந்த நிதியத்திற்கு பணியகத்தின் பங்களிப்பிற்கு மேலதிகமாக ஊழியர் பங்களிப்பாக கூட்டுமொத்தமாக ரூபா 47,912,231 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டமையால் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக இந்நட்டம் பணியகத்திற்கு ஏற்பட்டுள்ளதுடன் அதற்காக பொறுப்பாள உதகியோகத்தர்கள் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமா இல்லையா என தெளிவாக இல்லாமையால் வாழ்க்கைச் செலவுப்படி ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது தவறியுள்ளது. | கணக்காய்வு பரிந்துரைகள் செயல்படுத்தப்பட வில்லை. |
| 2019 ஆம் ஆண்டில் பெறுமதி ரூபா.3,611,950,163 ஆன முதிர்வடைந்த 06 திறைசேரி முறிகளை அன்றைய திகதியில் மீண்டும் முதலீடு செய்யாமை காரணமாக பணியகத்திற்கு ரூபா.5,466,192 ஆன வருமானம் கிடைக்கப்பெறவில்லை. | கிடைக்காது போன வருமானத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களை அடையளாம் காணப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். | தலைவர் அவர்களின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு கவனித்தில் கொள்ள வேண்டிய அளவிலான காலம் எடுத்துக் கொண்ட படியால், சம்பந்தப்பட்ட முதலீடுகளை மேற்கொள்ளுதல் உரிய திகதியில் நடைபெறவில்லை. அதன்படி கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் செவ்வையாகும். | கணக்காய்வு பரிந்துரைகள் செயல்படுத்தப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| பணியகத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு தூதரகங்களில் 16 தொழிலாளர் நலன்புரி பிரிவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரொன்று அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று இல்லாமல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 135 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய வசதிகளுக்காக மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 663,811,831 செலவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தங்கியிருப்போரின் நேரடி செலவினத்திற்காக ரூபா 80,771,306 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தூதுவர் இல்லங்களின் மொத்த செலவினத்தில் 89 சதவீதம் பதவியணியினர் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | பணியகத்தின் சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு தூதுவர்களுக்கான பொது கடமைகள் மற்றும் ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் பணியகத்தின் நிதிய மூலம் செலவிடப்பட்டிருந்த துடன் தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து அச்செலவினத்தை மேற்கொள்ள முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான தொழிலாளர் நலன்புரி நிதியம் ஆரம்பிக்கும் நோக்கில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெளிநாட்டு தூதுவர் இல்லங்களில் இராஜதந்திர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய தயாரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவம் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு செயற்பாடுகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தன. | புலம்பெயர்ந்த தொழிலாளர்களி டம் இருந்து நேரடியாக பெறப்பட்ட கோரிக்கைகள் காரணமாக இந்த செலவுகள் ஏற்பட்டுள்ளதாக வும், ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதல் அளிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்ட து. |
| 1990/1991 மத்திய கிழக்கு யுத்தம் காரணமாக அவ்வலயத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கையர்களுக்கு இழப்பீடு கொடுப்பனவு செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணையாளரிடமிருந்து கிடைத்திருந்த நட்டஈடுகளுக்குரிய நிதியக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 3,184,109,533 ஆக இருந்ததுடன் அந்த இழப்பீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 251,453,848 ஆக இருந்தது. இந்த இழப்பீட்டுத் தொகை | இழப்பீட்டு உரித்தாளர்கள் மேலும் முன்வராவிட்டால் அது தொடர்பான உறுதிப்படுத்தபபட்டு மிகை நிதியத்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இழப்பீட்டு ஆணையாளரிடமிருந்து கிடைத்த பணத்தை கொடுப்பனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் வரை தற்காலிக வைப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வட்டித் தொகை உரிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய இழப்பீட்டு காரர்கள் இழப்பீடு கோரிய சமர்ப்பிக்கப்பட்டால் கொடுப்பனவிற்காக இப்பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | இழப்பீடு உரிமையாளர்க ள் இழப்பீடு கோரிக்கைகளை சமர்ப்பித்தால், இந்த பணம் மேலும் சேமிக்கப்பட்டுள் ளது, குவைத் நிதியில் இருந்து ரூபா. 2,000 மில்லியனைப் பயன்படுத்தி புலம்பெயர்ந்த தொழிலாளர்களு க்கு ஓய்வூதிய முறையை முன்மொழிந்தது |

| | | | |
|---|---|---|---|
| பணியகத்திற்கு கிடைத்து 20 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், உரிய நலனாளிகளை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முதலீடு செய்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மிகை நிதி தொடர்பாகவும் முகாமைத்துவத்தினால் எவ்வித தீர்மானமொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | மற்றும் அது தொடர்பான சட்டத்தை உருவாக்கி வருவதாக தெரியப்படுத்தியுள்ளது. |
| இலங்கை சமுர்த்தி அதிகாரசபை மற்றும் பணியகத்தின் ஒத்துழைப்புடன் புலம்பெயர் ஊழியர்களுக்காக செயற்படுத்திய வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரை 12,078 புலம்பெயர் தொழிலாளர்களுக்காக சமுர்த்தி வங்கி மூலம் ரூபா 3,557 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதில் 1,573 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு புறம்பாகவும் எவ்வித பிணையொன்றும் வைக்கப்படாமலும் வழங்கப்பட்டிருந்த ரூபா 360.27 மில்லியனான கடன் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. இதுவரை அம்முறைமை செயற்படாது காணப்படுவதுடன் உடன்படிக்கையின் படி ரூபா 100 மில்லியன் வைப்புச் செய்வதற்கு பதிலாக இலங்கை வங்கியில் சமுர்த்தி அதிகாரசபையின் பெயரில் ரூபா 100 மில்லியன் வைப்புச் செய்ததன் காரணமாக அதற்குரிய வட்டியும் 2014 ஆம் ஆண்டு முதல் பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | இந்நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் இயலுமை தொடர்பாக கருத்திற் கொண்டதன் பின்னர் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். இப்பணத்தை தீர்வு செய்வதற்கு தேவையான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 100 மில்லியனான பணம் மற்றும் அதற்குரிய வட்டி என்பவற்றை மீண்டும் பணியகத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரட்டவிரு கடன் பெற்றுக்கொண்டு மரணமடைந்துள்ள மற்றும் முழுமையாக அங்கவீனம் அடைந்துள்ள கடன் பெற்றோரின் கடன் மீதிகளை மேற்படி பணத்திற்கு கிடைக்கும் வட்டியை அறவீடு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்தத் தொகைகள் 2021 டிசம்பர் 31, வரை மீட்டெடுக்கப்படவில்லை அல்லது தீர்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **2020** ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் பணியகத்தின் பணிப்பாளராக நியமனம் பெற்ற அலுவலர் ஒருவர் 2020 சனவரி 13 ஆந் திகதிய **PS/SP/circular/02/2020** ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றுநிருபத்திற்கு முரணாக அன்றைய திகதி தொடக்கம் பணியகத்தின் முனைப்பான பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு மார்ச் 02 ஆந் திகதி தொடக்கம் பணியகச் சட்டத்தில் **11(1)** மற்றும் **14(3)** பிரிவுகளுக்கு முரணாக மீண்டும் பணியகத்தின் உபதலைவராகவும், 2020 ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கம் விடய பொறுப்பு அமைச்சரால் பணிப்பாளராக (நிருவாகம்) முழு நேர காலத்திற்கும் நியமனம் செய்து,கணக்காய்வு திகதியான 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 17 ஆந் திகதியிலும் சேவையாற்றியிருந்தார்.<br><br>இந்த நியமனங்கள் சட்ட ரீதியற்றதால் உடனடியாக இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சனாதிபதி செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.<br>மேலும், இவ்வலுவலர் பொருட்டு உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுலாவிற்காக ரூபா. **450,197** ம் சம்பளம் மற்றும் படியாக ரூபா. **1,208,545** ம் போக்குவரத்து வசதிகளையும் பணியகத்தின் நிதியைக் கொண்டு வழங்கியிருந்தது. | பணியகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வெற்றிடமாகவுள்ள பதவிகளின் பொருட்டு மட்டும் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் படி தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களை முறைவழியிலான முறைகளுக்கமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அமைச்சரிடம் உள்ள அதிகாரங்களின் பிரகாரம்,<br><br>நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு தேவையான எல்லா வசதிகளையும், பணியகத்தால் மேற்கொள்ள வேண்டியுள்ளது. சட்டத்தின் **11(1)** மற்றும் **14(3)** பிரிவுகளுக்கமைவாக விடய பொறுப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பணியகத்தின் நிருவாக நடவடிககைகளை வினைத்திறனுடன் பராமரிப்பதற்கு தலைவர் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இந்த அலுவலரை நியமனம் செய்யப்பட்டிருந்தது.<br><br>அதற்காக பணிப்பளார் சபை அனுமதி வழங்கியள்ளது. இஸ்ரேல் அரசாங்கத்துடன்,உடன்படிக் கைகளை கைச்சாத்திடுவதற்காக சந்தைப்படுத்தல் பிரிவின் கோரிககைக்கு அமைவாக இந்த அலுவலர் வெளிநாடு சென்றுள்ளார்.<br>எவ்வாறாயினும் இந்த நியமனம் அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நீக்கம் செய்தல் தொடர்பாகவும் அமைச்சர் அவர்கள் தீர்மானமெடுத்தல் வேண்டும். | இந்த அதிகாரிக்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் இதர வசதிகளை வழங்குவதற்கு திறைசேரி ஒப்புதலைப் பெறுவதற்காக 2020.11.17 மற்றும் 2021.11.23 திகதியிட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டுள் ளன, ஆனால் 2021 டிசம்பர் 31, வரை பதில் வரவில்லை. |
| கொரிய நாட்டு வேலைவாய்ப்பு பெறுபவர்களின் பொருட்டு விமானச் சீட்டுகளை பெற்றுக்கொள்ளும்போது ஏற்பட்டிருந்த நிதி முறைக்கேடுக்கு ஏற்புடையதாக | இந்த நிகழ்விற்கு ஏற்புடையதாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்தப்பட்டு | இதற்கு ஏற்புடையதாக உள்ளக கணக்காய்வு பரிசோதனை முடிவுறுத்தப்பட்டுள்ளது. குறித்த பரிசோதனை அறிக்கை மீது | இது தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணை நிறைவடைந்துள் ளதாகவும், |

| | | | |
|---|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு சனவரி 10 ஆந் திகதி பணியகத்தின் பொது உதவியாளர் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு பணித்தடை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு ஏற்படையதான ஒழுக்காற்று விசாரணை நடாத்தல் தாபன விதிக் கோவையின் 11 ஆவது தொகுதியில் 13.2 பிரிவில் குறிப்பிடப்பட்டள்ளவாறு முடிவுறுத்தப்படவில்லை என்பதுடன், எந்தவொரு விசாரணையொ ஒழுக்காற்று நடவடிக்கையோ இன்றி சம்பந்தப்பட்ட அலுவலரை 2020 யூலை 16 ஆந் திகதி தொடக்கம் மீள சேவையில் அமர்த்தப்பட்டிருந்தது.<br><br>ஆயினும், விமானச்சீட்டுகளை கொள்வனவு செய்யும் பிரிவை, இந்த நிகழ்வின் பின்னர் மூடிவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. | தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாட்டினை முறைவழிப்ப-டுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்களிடம் குற்றப்பத்திரிக்கை வழங்குவதற்கும், ஏனைய அலுவலர்களிடம் விளக்கமளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப-பட்டுள்ளது. | விசாரணை அறிக்கை பணியகத்திடம் சமர்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. |
| பணியகத்தின் அலுவலர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதாக பதிவாகியிருந்த 20 துஷ்பிரயோக நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் ஏனைய புலனாய்வுகளில் வெளிப்படுத்தியிருந்த விடயங்களில் தற்கால நிலைமையினை பரிசோதனை செய்யும்போது, வெளிப்படுத்திக் கொண்டவாறு 7 நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் தாமதமாகியதன் காரணமாக குற்றஞ்சாட்டப்ப-ட்டுள்ள அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடியவில்லை. 6 நிகழ்வுகள் தொடர்பில் பொறுப்பு கூற | பணியகத்தின் ஒழுக்காற்று விசாரணை செயற்பாடு முறைசார்படுத்துவத ன் ஊடாக தாபனத்தில்நிதிசார் மற்றும் நிருவாக ஒழுக்காற்றை உரியவாறு பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | **2012**மற்றும் **2014** காலப்பகுதிக்குள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நிகழ்ந்துள்ள, நிதி முறைக்கேடுகள் தொடர்பில், கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நிகழ்வுகளுக்கும் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கி தயாரித்த இற்றைப்படுத்திய சாராம்ச அறிக்கை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று விசாரணைகள் நிறைவடைந்த வழக்குகள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏனைய வழக்குகளில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு குறிப்பிடப்பட்ட வழக்குகள் தொடர்பிலான தொடர் நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| வேண்டியவர்களை அடையளாம் காண்பதற்கு முடியாதிருந்தது. மேலும் 06 நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக குற்றப்பத்திரிக்கைகள் பெற்றிருந்த அலுவலர்கள் முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது, சுற்றவாளியாக்கப்-பட்டிருப்பினும், உண்மையாக பொறுப்பு கூற வேண்டியவர்களை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. ஒரு நிகழ்வுக்கு எற்புடையதாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கையின் போது குற்றவாளியென உறுதிப்படுத்தப்பட்டிருந்த அலுவலரை விடுவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மேற்படி 12 நிகழ்வுகளுக்கு தவறாக பயன்படுத்தியதாகபதவாகியிருந் தபணத் தொகையின் மொத்தம் ரூபா **61,130,337** ஆனதுடன், அது தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்களை அடையாளம் காணப்பட்டிருக்-கவில்லை. | | | மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. |
| பணியகம் 2015 ஆம் ஆண்டில் ரூபா.52 மில்லியன் பெறுமதிக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு மேலும் ரூபா. **1,146,095** ஐ செலவிடப்பட்டிருந்த காணியை எந்தவொரு பயனுள்ள நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாது 06 ஆண்டுகள் முழுவதும் பயனற்றதாக காணப்பட்டதுடன், அதற்கு ஏற்புடையதாக எழுத்திலான உடன்படி-க்கையும் இருக்கவில்லை. | இந்த சொத்துக்களை வினைத்திறனாக பயன்ப-டுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்ப-டுத்தல் வேண்டும். | குத்தகை உடன்படிக்கை தயாரித்து எதிர்கால நடவடிக்கைகளின் பொருட்டு முன்வைக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் அத்தியாவசியமற்ற செலவினங்கள் மற்றும் முன்னுரிமையில் குறைந்த செலவினங்களை பதவழிப்பதற்கு நடவ-டிக்கை மேற்கொள்ளும்படி அறிவிக்கப்ப-ட்டுள்ளதால், இந்த காணியில் முன்தயாரிப்பு கட்டிடமொன்றை நிருமா-ணிப்பதற்காக அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | 27.06.2020 அன்று மேற்படி காணியில் முன்னர் தீர்மாணிக்கப்பட்டவாறு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளதாகவும், அதற்கேற்றவாறு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. |

## 13. இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் - இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனம்

2. அபிப்பிராயம் -

   2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| 1. | முகவர் தரகு தொடர்பான தகவல்களை கணனி முறைமை மூலம் தனித்தனியாக பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கூட்டுத்தாபனத்தால் கணனி தகவல் முறைமை பேணப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 87,282,685 தொகையான முகவர் தரகு தொடர்பான வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தது. ஆகையால் குறித்த மீதிகளின் தற்போதைய நிலையை சரிபார்க்க முடியாதிருந்தது. | போதுமான தகவல்கள் பேணப்பட வேண்டியதுடன் சரியான வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணனி முறைமையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய முகவர் தரகு தொடர்பாக வயது பகுப்பாய்வை (கையேடு) தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இந்த நிலை சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,219,290,585 தொகையான கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 190,563,478 வரை குறைவடைந்திருந்தது. மேலும் அரசாங்க மானியத்தின் விளைவாக 2018 ஆம் ஆண்டின் போது இலாபம் ஈட்டப்பட்டிருந்த போதிலும் முன்னைய 5 ஆண்டு காலத்திற்கு மேலாக கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்று ரூபா 244,648,000 ஆக காணப்பட்டதுடன் 2020 இறுதியில் உள்ளவாறு ரூபா 258,728,044 ஆகவும் காணப்பட்டது. இத் தொடர்ச்சியான நட்டம் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனத்தை பாதித்திருந்ததுடன் திறைசேரி அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியின்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையானது நிச்சயமற்றதாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சிறந்த நிதி முகாமைத்துவம் அமுல்ப்படுத்தப்பட்டு, நட்டங்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கூடுதல் நேரம் மற்றும் பிற செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செலவுகளைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. | இலாபம் இன்னும் எட்டப்படவில்லை. |
| 3 | 1985 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் லங்கா | முதலீடுகளின் உரிமைத்துவம், இருக்கும் தன்மை | லங்கா புவத் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் | இந்த நிறுவனம் தற்போது செயல்பாடடளவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | புவத்திடமிருந்து பங்குகளை கொள்வனவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,104,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை எந்தவொரு பங்கிலாபமும் பெறப்பட்டிருக்கவில்லை. | மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள். | வகையில், அவ்வப்போது நிறுவனத்தின் இடமாற்றங்களினால் பங்குச் சான்றிதழ்களின் பிரதிகள் தவறவிடப்பட்டிருந்தன லிமிட்டட்டிடம் இருந்து | ல் இல்லை. |
| 4. | கூட்டுத்தாபனத்தின் மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 507,789,779 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 229,200,950 தொகையானது அரசாங்க நிறுவனமொன்று உட்பட ரூபா 5 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதிகளையுடைய 10 கடன்பட்டோரை உள்ளடக்கியிருந்தது. தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறவேண்டிய தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 10 மில்லியன் நிச்சயமற்றதாக காணப்பட்டது. மேலும் 32 அரசாங்க நிறுவனங்கள் உட்பட 170 கடன்பட்டோர் மீதிகளை கொண்டிருந்த 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 97,117,914 கடன்பட்டோர் மீதியில் ரூபா 78,480,159 தொகையை பிரதிநிதித்துவப்படுத்திய 153 | கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக விற்பனைத் துறை, வசூல் பிரிவு, சட்டப் பிரிவு ஆகியவை இணைந்து செயல்பட்டன. கடன் வசூலை விரைவுபடுத்தும் வகையில் வசூல் பிரிவை விரிவுபடுத்தி வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிது. | இன்றுவரை மீட்க முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன்பட்டோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 5. | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய செயல்நிமித்த கட்டுநிதியின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக காணப்படுகின்ற போதிலும் நிகழ்ச்சித்திட்டங்கள், தங்குமிடங்கள் மற்றும் கொள்வனவு ஆகியவற்றிற்காக எல்லையை விஞ்சி 46 சந்தர்ப்பங்களில் ரூபா 40,406,563 தொகை வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய தேதியில் பணம் செலுத்தாத பட்சத்தில் அபராதம் வசூலிக்கவும், உரிய தொகை செலுத்தப்படும் வரை ஊதியத்தை பிடித்தம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். | இதுவரை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட வில்லை. |
| 6. | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபன தலைவருக்கு செலுத்தப்பட வேண்டிய படிக்கு மேலதிகமாக 2020 ஆண்டின்<br><br>போது ரூபா 548,388 தொகை விசேட படிகள் மற்றும் ஏனைய படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த மேலதிக படியானது 2018.07.08 இல் அங்கீகாரத்திற்காக முன்னாள் வரிசை அமைச்சாகவிருந்த நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. | இதுவரை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட வில்லை. |
| 7. | போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிக்கு உரித்தில்லாத 99 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆண்டின் போது போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 8,203,940 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கூட்டுத்தாபனத்தின் தொடக்கத்தில் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களிற்கு எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது | இதுவரை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட வில்லை. |
| 08 | கூட்டுத்தாபனத்தால் பேணப்பட்ட இரண்டு | வங்கி மேலதிகப்பற்று உரிய எல்லையை | வங்கி மேலதிகப்பற்று வட்டிச் செலவைக் | இதுவரை சரி செய்யும் பணி |

| | | | | |
|---|---|---|---|---|
| . | வங்கி நடைமுறைக் கணக்குகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப்பற்று எல்லை 2020 ஆண்டின் போது ஒரு மாதத்தைத் தவிர ஒவ்வொரு மாதத்திலும் கூட்டுத்தாபனத்தால் மீறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வட்டியாக ரூபா 29,085,302 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மீறாதவாறு பேணப்பட வேண்டும். | குறைப்பதற்காக, தற்போதைய வங்கி மேலதிகப்பற்று அல்லது அதன் ஒரு பகுதி 2022 ஆம் ஆண்டில் தீர்பனவு செய்யப்படும். | மேற்கொள்ளப்பட வில்லை. |
| 09. | இலங்கையின் அடையாளத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் அறிவையும் மகிழ்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும் இத்தாலி அல்லது ஐரோப்பாவில் நிறுவப்பட்ட ஸ்ரூடியோவில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் ஊடாக தொலைக்காட்சி அலைவரிசையை பேணுவதற்கும் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தற்காலிக குத்தகை அடிப்படையில் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் 2014 திசெம்பரில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி | தேவையான சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டியதுடன் செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பு வெளியாகியுள்ளது. எதிர்காலத்தில், கூட்டுத்தாபத்தின் சபையிடம் அளித்து, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | இன்னும் மீட்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் முற்பணமாக 2015 சனவரி 02 இல் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 3,454,279 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குறித்த பணி 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முற்றாக கைவிடப்பட்டதுடன் மீளாய்வாண்டு வரையிலும் குறித்த முற்பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 10 | 2020 ஆம் ஆண்டின் போது ஒளிபரப்பப்பட்ட 80 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக 119 வான்கால மணித்தியாலங்கள் மற்றும் 37 நிமிடங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கான ரூபா 30,250,006 வான்கால வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டணங்கள் அறவீடு செய்யப்படாமல் தவறவிடப்பட்டிருந்தது. | நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது, இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப அதிக பணம் பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இன்னும் சரி செய்யப்படவில்லை. |
| 11 | 2020 இறுதிக்குள் நிரந்தரப் பதவிகளுக்கான காலியிடங்கள் 182 நிரந்தரப் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 28 பதிற்கடமை பதவிகள் மற்றும் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அத்தியாவசிய பதவிகளைத் தவிர ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள வேண்டாம் என வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளதால், தற்போது வெற்றிடங்களை நிரப்புவதற்கான பணிகள் எதுவும் | வெற்றிடங்கள், பதில் நியமனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் இல்லாத பதவி பணியாளர் நியமனங்கள் இதுவரை சரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத 14 பதவிகளுக்கு 27 நிரந்தர ஊழியர்களும், ஒப்பந்த அடிப்படையில் 12 ஊழியர்களும் பணி ஒதுக்கீட்டு அடிப்படையில் 2 ஊழியர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | | மேற்கொள்ளப்படவில்லை. | செய்யப்படவில்லை. |
| 12. | வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சால் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்களிற்குக் கையளிக்கப்பட வேண்டிய கமுதாவ மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்ட விளம்பரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 103,550,000 வான்கால வருமானம் 2020 யூன் மாதம் வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்களை விளம்பரம் செய்தல் தொடர்பாக கட்டணங்களை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | இன்னும் மீட்கப்படவில்லை. |
| 13 | 1982 இன் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் தொலைக்காட்சி அலைவரிசைகளை கண்காணிப்பதற்காக பணிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 யூன் வரையிலும் | தொலைக்காட்சி அலைவரிசைகளை கண்காணிப்பதற்குத் தேவையான பணிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | தேவையான கட்டளைகள் இன்னும் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தகைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |

### 14. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் - அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

2. கணக்காய்வு அபிப்பிராயம் :-

   2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| **(1)** | 2020 டிசம்பர் 31 இல் தேசிய கடதாசி கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா **9,753,427** பெறப்பட வேண்டியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் கடதாசி கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா **7,460,675** ஆக காணப்பட்டது. இந்த மீதிகளுக்குள் **06** வருடங்கள் கடந்த கடன் தொகை முறையே ரூபா **7,989,976** மற்றும் ரூபா **5,578,142** ஆக இருந்தும் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவைத்தொகையை உடனடியாகத் தீர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். | நிலுவை தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த மீதி அதேமாதிரி கூட்டுத்தாபனத்தின் கணக்கு புத்தகங்களில் உள்ளது. |
| **(2)** | லொத்தர் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், லொத்தர்களை அச்சடித்து, குறித்த திகதியில் கையளிக்காத காரணத்தினால், | மூலப்பொருட்களை அவ்வப்போது கொள்முதல் செய்து, ஒப்புக்கொள்ளப்பட்ட | குறிப்பிட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை | இன்றும் அச்சிடுவதில் தாமதம் ஏற்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | **2018** மற்றும் **2020** ஆம் ஆண்டுகளில் லொத்தர் சபையினால் செலுத்த வேண்டிய தொகை ரூபா. **21, 386,760** அபராதமாக கழிக்கப்பட்டது. | திகதிகளில் ஆர்டர்கள் வழங்கப்பட வேண்டும். | ல. | |
| **(3)** | அச்சிடப்பட்ட பள்ளி புத்தகங்கள் வழங்குவதில் **01** நாட்கள் முதல் **20** நாட்கள் வரை தாமதம் ஏற்பட்டதால் **2019**, **2020** மற்றும் **2021** ஆம் கல்வியாண்டுகளுக்கான பள்ளி பாடப்புத்தகங்கள் வழங்குவதற்கு கல்வி வெளியீடு துறையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கல்வி வெளியீடு துறை கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா. **122,498,305** தாமதக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. | பள்ளிப் பாடப் புத்தகம் அச்சடிக்கும் வருமானம்தான் கூட்டுத்தாபனத்மிற்கு முக்கிய வருமானம். எனவே, தேவையான பொருட்களை சேமித்து, அச்சு கட்டளைகளை பூர்த்தி செய்து சரியான நேரத்தில் வழங்க வேண்டும். | குறிப்பிட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை | இப்போதும் இவ்வதரான தாமதக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. |
| **(4)** | தேசிய லொத்தர் சபையால் அச்சிடப்பட்ட மகஜன சம்பத (லாட்டரி எண் 3665) 2018 ஆண்டிற்கு பதிலாக 2008 ஆண்டு என பிழையாக அச்சிடப்பட்டிருந்தது. இதனால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 354,477 தேவையற்ற செலவு ஏற்பட்டது. | பொறுப்பானவார்களிடம் இருந்து இழப்பை அறவிடுதல். இது போன்ற பிழைகள் ஏற்படாதவாறு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். | இயந்திரப் பிரிவு மற்றும் பேக்கேஜிங் பிரிவில் லாட்டரி சோதனை முறை நிறுவப்பட்டுள்ளது. | நட்டத்திற்கு பொறுப்பானவர்களிடம் இருந்து வசூலிக்கப்படவில்லை. இயந்திரத் துறையிலும் பேக்கேஜிங் துறையிலும் லாட்டரி சோதனை முறை நிறுவப்பட்டுள்ளது. |
| **(5)** | போட்டிச் சந்தையில் இயங்கும் அரச அச்சகக் கூட்டுத்தாபனம், ஆய்வுப் புத்தகங்களைத் தயாரித்தல், வெளியீட்டுப் புத்தகங்களை வெளியிடுதல் மற்றும் பிற வணிக அச்சிடுதல் தொடர்பாக சந்தைப் பங்கைப் புரிந்துகொள்வதற்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிலோ அல்லது முந்தைய ஆண்டுகளிலோ சந்தைக் கணக்கெடுப்பை நடத்தவில்லை. | ஒரு போட்டி சந்தையில் பணிபுரியும் போது, ஒரு சந்தை கணக்கெடுப்பை நடத்தி உங்கள் சந்தை பங்கைப் புரிந்துகொள்வது நல்லது. | குறிப்பிட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. | அவர்களின் தயாரிப்புகளுக்கான சந்தைப் பங்கைக் கண்டறியும் கணக்கெடுப்பு இது வரை நடத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(6)** | பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடுதல் மற்றும் லாட்டரி சீட்டுக்களை அச்சிடுதலுக்காக முறையே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து மற்றும் தேசிய லொத்தர் சபையிடமிருந்து ரூபா 979,237,857 மற்றும் ரூபா 268,941,482 ஆக மொத்தம் ரூபா 1,248,179,339 வருமானமொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இது வருடத்தின் மொத்த வருமானமான ரூபா 1.593,815,189 இன் நூற்றுக்கு 78 ஆக இருந்ததுடன் கூட்டுத் தாபன அதன் வருமான மூலகங்கள் வெவ்வேறு வகைப்படுத்தப்படாமல் இரண்டு வருமான மூலகங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருமான மூலகங்களை வெவ்வேறு வகைப்படுத்தலுக்காக அரச அச்சக கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினாலும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வணிக நடவடிக்கைகளை பல்வகைப்படுத்த குறிப்பிட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | இன்றும் இந்த நிலை அப்படியே உள்ளது. |

## 15. அபிவிருத்தி லொத்தர் சபை

| விபரம் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| 01. அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

02. முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| 01 | மீளாய்வாண்டிற்குரிய சபையின் பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைத் | பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் | பணிப்பாளர் சபை பத்திரம மற்றும் தீர்மானங்கள் இதற்கடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் | இப்போதும் கூட, பனிப்பளர் சபைக் குறிப்பு மற்றும் தீர்மானம் தாமதமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்மானங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் துரிதமாக கணக்காய்விற்கு வழங்குமாறு 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் பல்வேறு தகவல் கோரும் கடிதங்களினூடாக கோரப்பட்டிருந்த போதிலும், குறித்த தகவல்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் துரிதமாக கணக்காய்விற்கு வழங்குவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. அவ்வாறே அந்த காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட கணக்காய் வகுழுக் கூட்டங்களில் இந்த நிலமையை சீர்ப்படுத்திக்கொள்வதாக இணங்கியிருந்த போதிலும், கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்தி நிறைவு செய்யப்பட்ட பின்னரும் 02 முதல் 04 மாதத்திற்கு இடைப்பட்ட கால தாமதத்தின் பின்னர் அந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள் ள சில நட்டங்கள் மற்றும் அபாயங்களை குறைத்துக்கொள்ள சபைக்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதா எனும் சந்தேகத்தினை கணக்காய்வில் புறக்கணிக்க | உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு கால தாமதமின்றி கணக்காய்விற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படுவதுடன், சந்தைப்படுத்தலுக்குரிய பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் தீர்மானங்கள் மாத்திரம் அவை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முடியாதிருந்தது. | | | |
| 02. | நிதிப்பிரமாணம் - **103** மற்றும் **103(1)** எ வாகனமொன்று 3 சந்தர்ப்பங்களில் விபத்துகளுக்கு உள்ளாகியுள்ள போது அதற்காக பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்காது சபையினால் ரூபா 129,200 செலவிடப்பட்டு அந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விபத்திற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகும். | 2022 பிப்ரவரி 28, வரை, நிதி பிரமாணத்தின் விதிமுறைகளுக்கு இணங்கவில்லை. |
| 03 | நிதிப்பிரமாணம் **757(2)** பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், முறையான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முறையான பொருள் மெய்மையாய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் சொத்துக்கள் உரிய முறையில முகாமை செய்யப்பட வேண்டியமை. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை **2019** மே **30** ஆந் திகதி அரச கணக்குகள் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர சொத்து ஆய்வு அறிக்கைகள் தாமதத்திற்குப் பிறகு 2021 ஜூலை 14, அன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டிற்கான சொத்து ஆய்வு குழு அறிக்கைகள் 2022 பிப்ரவரி 28, வரை கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 04 | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஃடீ 57 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பிரச்சாரத் திட்டம் வருடாந்திர செயல் திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டு பொது வணிகத் துறையால் அங்கீகரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கவில்லை. | | | |
| 05 | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2(i) பந்தி மற்றும் 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதிய 2017/10/1184 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்துக்கமைய அமைச்சரவையின் அங்கீகாரமின்றி **60** வயதை கடந்த ஓய்வு பெற்ற ஒருவர் **2017** ஒக்தோபர் **09** ஆந் திகதி முதல் **2019** ஏப்ரல் **14** ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளராக சேவையில் ஈடுபடுத்தி மாதாந்தம் ரூபா **100,000** ஆன கொடுப்பனவுடன் மருத்துவ உதவிகள், போக்குவரத்து படிகளுமாக **2017** ஒக்தோபர் **09** ஆந் திகதி முதல் **2019** மார்ச் **31** ஆந் திகதி வரையிலும் ரூபா **2,151,054** தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டு இது வரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன், தற்போது சேவையில் நீடிப்பு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. தற்போது அந்த ஊழியரின் சேவைக்காலம் முடிந்துவிட்டது. | 2022 பிப்ரவரி 28, வரை, அமைச்சர்கள் குழுவின் ஒப்புதல் பெறப்படவில்லை மற்றும் ஒப்புதல் இல்லாமல் செலுத்தப்பட்ட பணம் திரும்பப் பெறப்படவில்லை. |
| 06 | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ கோவைகள் சுற்றறிக்கையின் (ii) ஆம் பந்தியின் படி இந்த சுற்றறிக்கையின் விதிகளுக்கமையாது சபையின் செயற்திட்ட இணைப்பு உத்தியோகத்தர் பதவிக்காக மாதாந்த படிகள் ரூபா **50,000** | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இந்த பதவியை அங்கீகரித்துள்ளமையால் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கை விதிகளுக்கு இணங்காமல் மற்றும் ஒப்புதல் இல்லாமல் செலுத்தப்பட்ட பணம் 2022 பிப்ரவரி 28 வரை திரும்பப் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையும், எரிபொருள் படியாக ரூபா **35,000** தொகையும் செலுத்தும் அடிப்படையில் **2019** பெப்ரவரி **01** ஆந் திகதி முதல் **70** வயதான உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். | | | |
| 07 | சபையினால் லொத்தர் சீட்டிழுப்பிற்காக தற்போது பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள் சேவையானது தனியார் கம்பனியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதெ ன்பதுடன், அந்த சேவையும் முறையற்ற உடன்படிக்கை தொடர்பின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த காரணத்தால் லொத்தர் சீட்டிழுப்பு தரவுகளின் பிரவேசத்தினை முழுமையாக மூன்றாம் தரப்பினருக்கு ஒப்படைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. இந்த கணனி மற்றும் மென்பொருட்களை பராமரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 11,995,200 தொகை உள்ளடங்கலாக 2009 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 117,410,057 தொகை அந்த கம்பனிக்கு | சீட்டிழுப்புகள் மற்றும் கணக்கீட்டு முறைமையை நிறுவுதல். | அபிவிருத்தி லொத்தர் சபையின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் அதன் தரவுகளில் இரகசியத்தன்மையை பாதுகாக்கும் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் கட்டமைப்பினை சபைக்கு சொந்தமாக்கிக்கொள்ள பணிப்பாளர் சபை பத்திரமொன்றினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | 2022 பிப்ரவரி 28 வரை, இந்த அமைப்பைக் சபை உடமை கொண்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| 08 | லொத்தர் சீட்டுக்கள் வெற்றிகளுக்காக பரிசுகளாக வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,035,160 பெறுமதியான 2 மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 219,500 தொகையான மோட்டார் சைக்கிளொன்று விற்பனைப் பிரதிநிதிகளின் கோரிக்கையின் அடிப்படையில் கண்காட்சிக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த 02 வாகனங்களும் விபத்திற்கு உள்ளாகியிருந்தன. 02 மோட்டார் வாகனங்களும் விபத்திற்கு உள்ளானமையின் அடிப்படையில் ரூபா 228,855 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், மோட்டார் சைக்கிளின் நட்டம் 2019 மே 15 ஆம் கணக்காய்வு திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பரிசுகளாக வழங்குவதற்கிருந்த இந்த வாகனங்களின் காட்சிப்படுத்தல் காலப்பகுதியினுள் வாகனங்களின் பாதுகாப்பு பிரதிநிதிகள் நேரடியாக பொறுப்புக்கூற வேண்டியதுடன், இவ்வாறான விபத்தொன்று ஏற்படும் போது அது தள உத்தியோகத்தர்களால் சபைக்கு அறிவித்து காப்புறுதி நிறுவனத்திடமிருந்து நட்டத்தினை மீளளிப்பு | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பிப்ரவரி 28, வரை, பொறுப்பான தரப்பினரிடமிருந்து இழப்பு மீட்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்ய வேண்டும். எனினும், அது தொடர்பில் உயர் மட்ட முகாமைத்துவத்தினால் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடம் அறவிடப்படாது சபையினால் நட்டம் ஏற்பட்டிருந்தது. | | | |
| 09 | 2018 ஆம் ஆண்டின் பாதீட்டினூடாக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த Modern Lottery Shops 25 நிர்மாணிக்கும் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அடையக்கூடிய இலக்குகளை உள்ளடக்கி பாதீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | உத்தேசிக்கப்பட்ட இடங்கள் விற்பனை முகவர்களிடம் இல்லாதிருந்தமை மற்றும் கிடைக்கும் பிரதிபலன்கள் எதிர்பார்த்த மட்டத்தினை அடையாமை. | 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, நவீன லாட்டரி கடைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா.1,875,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டது, ஆனால் மதிப்பாய்வாண்டின் இறுதிக்குள் ரூபா.68,140 செலவிடப்பட்டுள்ளது. நவீன லாட்டரி கடைகள் 31 டிசம்பர் 2021க்குள் முடிக்கப்படவில்லை. அதன்படி, இப்போது கூட அடையக்கூடிய இலக்குகளை உள்ளடக்கிய பட்ஜெட் தயாரிக்கப்படவில்லை. |
| 10. | கோடிபதி ஷனிா புதுவருட விசேட லொத்தருக்காக விற்பனை சந்தைப்படுத்தல் பணிகளுக்காக கண்காட்சி வண்டியாக பதிவு செய்யப்படாத வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், வாடகையின் அடிப்படையில் பழைய வாகனங்கள் 15 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 மாரச் 20 ஆந் திகதி | பரிசுகள் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடொன்றை தாபித்தல். | வழங்கல் நிறுவனத்தின் கண்காட்சிக்காக மேலதிக வாகனங்களின் இருப்பொன்று இல்லாதிருந்தமையால் பதிவு செய்யப்பட்ட வேகன் ஆர் வண்டிகள் பயன்படுத்தப்பட்டதாக. | 2022 ஆம் ஆண்டு முதல், விருதுகள் பணமாக மட்டுமே வழங்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முதல் ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் நாளொன்றிற்கு ரூபா 1,500, ரூபா 2,000, ரூபா 2,200 மற்றும் ரூபா 2,500 எனும் பல்வேறு வாடகைகளின் கீழ் முறையான அங்கீகராமின்றி கண்காட்சி வாகனங்களாக பயன்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 645,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வெற்றியாளர்களை ஏமாற்றும் விதத்தில் பழைய வாகனங்களை கண்காட்சிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாகும். | | | |
| 11 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் **4** ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படும் போது பெறுகைத் தேவைப்பாடு இனங்காணப்பட வேண்டிய போதிலும், சபையின் **2018** ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்திலான **14** பெறுகைகள், அதாவது ரூபா **166.9** மில்லியனுக்கு அண்மிய பெறுகைகள் **2018** ஆம் ஆண்டினுள்ளும் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன்,அதற்கு புறம்பாக பெறுகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, சபையின் முகாமைததுவம் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத பெறுகைகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சந்தையில் நிலைத்து நிற்பதற்கு ஏனைய போட்டி நிறுவனங்களின் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் காரணமாக இவ்வாறு இடம்பெற்றுள்ளதாக. | 2021ஆம் ஆண்டிலும் தேவைகளை அடையாளம் காணாமல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மூலோபாய அறிவுரைகள் மற்றும் நோக்கங்களை கருத்திற்கொள்ளவும் பெறுகைத் தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்காணுவதற்கும் தவறியிருந்தது. | | | |
| 12 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.13 (அ) பந்தியின் மாற்றுவழிகளுக்கமைய கேள்வி முறிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு ஒப்பந்த பெறுமதியான ரூபா 196,776,045 இன் சதவீதமாக தீர்மானிக்கப்பட வேண்டும். அதற்கமைய தீர்மானிக்கப்பட வேண்டிய தொகை ரூபா 1,697,760 ஆன போதிலும், ரூபா 4,378,000 அறவிடப்பட்டமையால் ரூபா 2,680,240 பெறுமதியானது குறித்த நிறுவனங்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>2016/2017 ஆண்டுகளில் விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்யும் போது காணப்பட்ட 03 வருட அனுபவம் காணப்பட வேண்டும் எனும் விதி 2016/2017 ஆண்டுகளுக்குரிய ஒரு வருட அனுபவம் வரை குறைக்கப்பட்டுள்ளமையு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும் என்பதுடன், பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் அங்கத்தவர்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படுவதாக மற்றும் 03 வருட அனுபவத்திற்கு பதிலாக ஒரு வருட அனுபவம் போதுமானது என நிபந்தனைகள் மாற்றப்பட்டமைக்கு புதிய சிந்தனைகளுடனான புத்தாக்கமுடைய நிறுவனங்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல் பொருத்தமானது என திணைக்கத்தின் பெறுகைகள் குழுவின் அங்கத்தவர்கள் தீர்மானித்தமையால் ஆகும். | இது வரை பெறுகை நடவடிப்கை அமைச்சரவை பெறுகை குழுவினால் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ம் அமைச்சரவை பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய இந்த பெறுகை திணைக்கள பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டமையால் விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்யும் போது பெறுகை உரிய முறையில் இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | | | |
| 13 | கோடிபதி ஷனிதா லொத்தருக்கான பரிசாக வேகன் ஆர் வாகனங்கள் (Brand New) 05 இனை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.5 ஆம் பந்தியில் மாத்திரம் கூறுவிலைகளை கோரி கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், தனியான வாகன விற்பனை (Car Sale) மூலம் கூறு விலைகள் கோரப்பட்டு பயன்படுத்தப்பட்ட (Recondition) வாகனங்கள் 05 ரூபா 17.5 மில்லயனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின<br><br>2.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் நேர் முறையின் கீழான கொள்வனவிற்கான பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர்களுக்கு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. | டொயோடா லங்கா அந்த ரகத்தினை இறக்குமதி செய்யாததுடன், AMW இருப்பு இல்லை என குறிப்பிடப்பட்டமையால் உள்நாட்டு இறக்குமதியாளர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்த பெறுமதியை கருத்திற்கொண்டு அதன் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | லாட்டரி பரிசுகளை பணமாக மட்டுமே வழங்க சபை முடிவு செய்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்ய முடியாத போதிலும், ரூபா 18,000 தொகை உரிய குழு அங்கத்தர்வர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| 14 | 03 சந்தர்ப்பங்களில் 35,000 குடைகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த விலைக்கேள்வி ஆவணத்தின் 17 ஆம் நிபந்தனைக்கமைய ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதி முதல் உரிய காலப்பகுதியினுள் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு இல்லையெனின் தாமதக் கட்டணங்கள் அறவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய திகதியில் பொருட்கள் கிடைக்காமையின் அடிப்படையில் ரூபா 418,260 தொகையான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்கள் விதிகளின்படி செயல்பட முடியாது. |
| 15 | 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேவையான குடைகளின் எண்ணிக்கை 7,500 ஆன போதிலும், 20,000 குடைகள் கட்டளையிடப்பட்டிருந்ததுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் | திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தேவைக்கு மாத்திரம் பொருந்தக்கூடிய வகையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியமை. | ஒரு போட்டிச் சுற்று முழுமையாக விற்பனை மந்தகதியில் இடம்பெற்றமையில் அடிப்படையில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில குடைகளையும் சந்தைக்கு வெளியிடுவதற்கு முடியாது போனமையும், உடனடி | மீதமுள்ள குடைகள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவற்றுள் 11,900 குடைகள் மாத்திரம் கிடைத்திருந்தது. எஞ்சிய 8,100 குடைகள் 2019 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், ரூபா 2,541,151 பெறுமதியான 6,718 குடைகள் திசெம்பர் 31 ஆந்திகதியில் உள்ளபடியாக களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | | லொத்தர் சீட்டுகள் மூலோபாய நடைமுறையொன்றினூடாக இடம்பெற்றமையால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் இதனை சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | |
| 16 | கூட்டிணைந்த திட்டத்தினுள் காண்பிக்கப்பட்டிருந்த பகிர்ந்தளிப்பு செயற்திறனை அபிவிருத்தி செய்வதற்காக பாதீட்டினூடாக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த Fork Lift இயந்திரமொன்றின் தேவைப்பாடு பிரதான களஞ்சியம், உப களஞ்சியம், அல்லது ஏனைய எந்தவொரு பிரிவினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த கொள்வனவு பெறுகைகள் திட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்டிராததுடன், ரூபா 4,500,000 செலவிடப்பட்டு Toyota லங்கா நிறுவனத்திடமிருந்து 2018 யூலை 02 ஆந் திகதி அந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அமைப்புக் குறிப்பீடுகள் கிடைக்காமை, | - பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>- நிதி அமைச்சினால நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்கள் தொடர்புகொள்ளப்பட வேண்டும்.<br><br>- பணிக்குரிய பிரிவுகளால் உரிய தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதன் பின்னர் பணிப்பாளர் சபையின் பத்திரங்களை முன்வைத்து பணிப்பாளர் சபை தீர்மானங்களாக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | -2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தினூடாக மற்றும் அந்த பெறுமதி பாதிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் எந்தவொரு பிரிவினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது பொய்யானதாகும்.<br><br>-டொயோட்டா லங்கா நிறுவனம் உள்நாட்டு நிறுவனமொன்றானமையால் அந்த பெறுகை பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>-மோட்டார் வாகனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரை தொடர்புகொள்ள முடியாதிருந்தமையால் மற்றுமொரு மதியுரையாளரின் மதியுரை சேவையினை பெற்றுக்கொண்டதாக.<br><br>தொழில்நுட்ப மதியுரையாளரின் அறிக்கை | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 பிப்ரவரி 28, வரை, இந்த இயந்திரங்கள் 35 மணிநேரம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன .. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில்நுட்ப மதியுரையாளரின் பரிந்துரை கிடைக்காதும் நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் இல்லாது தொழில்நுட்ப மதிப்பாய்வினை மேற்கொள்ளல், கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான பெறுமதிகள் பரிந்துரை செய்யப்பட்டிராமை, உரிய அங்கீகாரமின்றி ரூபா 25,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு மதியுரை சேவையொன்றை பெற்றுக்கொள்ளல் போன்றவையாக பெறுகைகள் நடைமுறையிலிருந்து விலகி இந்த பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது இவ்வாறானதொரு இயந்திரமொன்றை பயன்படுத்துவதற்கு களஞ்சியத்தினுள் மற்றும் சபையின் வளாகத்தினுள் போதியளவான வசதிகள் இல்லாதிருந்தது என்பதாகும | | கிடைத்துள்ளதாக<br><br>-மதியுரையாளரால் கோரப்பட்ட ரூபா 25,000 இற்காக முகாமைத்துவத்தினால் பின்னர் அனுமதி வழங்கப்பட்டதாக. | |
| 17 | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மதியுரையாளர் பதவிக்காக 64 வயதான ஒருவரும், 2019 ஏப்ரல் | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த அங்கீகாரங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. | மதியுரைக்காக மாத்திரம் அமைச்சரவை பத்திரமொன்றை அமைச்சிற்கு முன்வைத்த போதிலும், அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அனுமதியின்றி செலுத்தப்பட்ட பணம் 28 பிப்ரவரி 2022க்குள் திரும்பப் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 30 ஆந் திகதியளவில் பதவியணியின் அங்கத்தவர் அல்லாத 70 வயதை கடந்த நபர் ஒருவர் செயற்திட்ட இணைப்பு உத்தியோகத்தராக ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலப்பகுதிக்காக மேலும் 4 பேருடன் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மேற்படி 60 வயதை கடந்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| 18 | சாரதி பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக **2018** யூன் **14** ஆந் திகதி மற்றும் **2018** ஒக்தோபர் **19** ஆந் திகதிகளின் போது **2** சந்தர்ப்பங்களில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி எட்டு பேர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். நேர்முகப் பரீட்சைகள் சபையினால் அந்த இரு சந்தர்ப்பங்களில் கல்விசார் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகளுக்காக புள்ளிகளை வழங்குதல் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறு பணியமர்த்தப்பட்ட **6** ஓட்டுநர்களின் கல்வித் தகுதியை சரிபார்க்க பரீட்சை ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படவில்லை மற்றும் அதன் சரியான | நிலையான புள்ளி வழங்கும் அடிப்படையொன்றினை தாபிக்க வேண்டும். அது நபரொருவரின் மீது தங்கியிருத்தல் அவசியமற்றது | இரு சந்தர்ப்பங்களில் இரு அமைச்சுப் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தமையால் அதற்கமைய புள்ளிகளை வழங்கும் அடிப்படைகள மாற்றமடைந்துள்ளதாக. | 2021ல் ஓட்டுனர்கள் பணியமர்த்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தன்மையை சபை சரிபார்க்கவில்லை. | | | |
| 19 | 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகள் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள், மதிப்பிடப்பட்ட அளவுகள் மற்றும் கிரயங்கள், உரிய காலப்பகுதிகளும் பாதீட்டினுள் உள்ளடங்கும் வகையில் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் விரிவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | செயல்நடவடிக்கை திட்டத்தின் செயன்முன்னேற்றம் கால ரீதியாக பரீட்சிப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்த வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்பது. | 2022 ஆம் ஆண்டிலும், திட்டம் விரிவாகத் தயாரிக்கப்படவில்லை. |
| 20 | சபையின் கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கை திட்டம், பெறுகைகள் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியவை ஒன்றுக்கொன்று இணைந்தததாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒன்றுக்கொன்று பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட வேண்டியமை. | கூட்டிணைந்த மற்றும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டிலும், இது தொடர்பான திட்டங்கள் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படவில்லை. |
| 21 | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கணக்கீட்டு முறையொன்றினை தாபிப்பதற்கு அந்தந்த வருடங்களில் ரூபா 30 மில்லியன் பாதீட்டு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இது வரையிலும் கணக்கீட்டு முறைமையொன்றினை தாபிப்பதற்கு சபை தவறியிருந்தது. | கணக்கீட்டு முறைமையொன்றினை தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | ஒன்றிணைக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றினை தாபிப்பதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | 2022 பிப்ரவரி 28, வரை, கணக்கியல் முறை எதுவும் நிறுவப்படவில்லை. |
| 22 | தேவையினை இனங்காணாது பாதீட்டு | நடைமுறைச் சாத்தியமான | 2019ல் சரி செய்யப்படும் | 2021 ஆம் ஆண்டில் மூலதனச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த மையால் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான நிதியேற்பாடுகளில் 60 சதவீதமானது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பாதீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | என குறிப்பிடப்பட்டுள்ளது. | செலவினங்களுக்காக ரூபா 257 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் வருட இறுதிக்குள் ரூபா 8.8 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, 96.57 சதவீத ஒதுக்கீடு குறைவாகவே பயன்படுத்தப்பட்டது. |
| 23 | சபையினால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு நட்டம் மற்றும் சேதங்கள் ஏற்பட்டதன் பின்னர் பழுதுபார்க்கப்பட்ட ரூபா 4,254,660 கூட்டுத்தொகையான மோட்டார் சைக்கிளொன்று மற்றும் 02 கார்கள் அத கோடிபதி ஷனிதா, தச லக்ஷபதி மற்றும் சுப்பர் போல் எனும் லொத்தர்களின் பரிசுகளாக வழங்கப்பட்டிருந்தது. | பரிசு வழங்கும் நடைமுறை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட வேண்டும் என்பது. | எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | லாட்டரி சீட்டுக்கு பணப்பரிசு மட்டுமே வழங்க சபை முடிவு செய்துள்ளது. |
| 24 | கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட **5** முடிவுகள் செயல்படுத்தப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட **5** முடிவுகளை செயல்படுத்துதல். | கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு கூட்டத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2022 பிப்ரவரி 28, அன்று கூட, கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட 5 முடிவுகள் செயல்படுத்தப்படவில்லை. |
| 25 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII அத்தியாயத்தின் 4.1 பந்திகளின் படி உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர படிகளை பெற்றுக் கொள்ளும் உரித்து இல்லாத உத்தியோகத்தர்களாக | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ஏற்றுக்கொள்கின்றேன்இந்த கள உத்தியோகத்தர் களின் அரச விடுமுறை தினங்களில் கடமைகளை விருப்புடன் மேற்கொள்வதற்காக விடுமுறை தினங்களில் மேலதிக நேர படிகள் செலுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் அரச விடுமுறை தினங்களில் | 2022 பிப்ரவரி 28, க்குள், நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் கள உத்தியோகத்தர் களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,122,318 ஆன மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | | அந்த சேவையின் தேவை உள்ளமையால் அந்த பிரச்சினை 2019.11.01 ஆந் திகதி நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரம் இதுவரையிலும் கிடைக்கப்பெற வில்லை. | |
| 26 | பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு **1/20** கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் **08** மணித்தியாலங்கள் கட்டாயமாக கடமைகளில் ஈடுபட வேண்டிய போதிலும் சபையினால் இந்த ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது விடுமுறை தினங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பணியாற்றிய மணித்தியாலங்களின் அடிப்படையில் மணித்தியாலமொன்றிற்கு ஒன்றரை மணித்தியாலம் எனும் விகிதாசாரத்தில் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் அந்த திகதிகளில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் சீட்டிழுப்பு பணிகளில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | **04** மணித்தியால சேவை தேவைப்பாடு நிலவும் சந்தர்ப்பத்தில் **08** மணித்தியாலங்கள் சேவையில் நிறுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் சபைக்கு பொருளாதார ரீதியில் சிறந்த பலனை அளிக்காமையால் அவ்வாறு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | இதன் அடிப்படையில் 28 பிப்ரவரி 2022க்குள் பணம் செலுத்தப்படும். |
| 27 | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) பதவி நிலைத் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நடைமுறைக்கு சாத்தியமான மற்றும் நேரடியாக தாக்கம் செலுத்தும் செயற்திட்டங்களுடன் தொடர்பு படாமை காரணமாக அந்த உப | 2021 ஆம் ஆண்டிலும் பதவிநிலை அல்லாத அதிகாரிகளுக்கு முன்பணம் வழங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் **2019** ஆம் ஆண்டினுள் ரூபா **10,727,741** பெறுமதியான கட்டு நிதி பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | | கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தினை தீர்க்கும் போது நடைமுறை ரீதியிலான பிரச்சினைகள் உருவாக கூடும் என்பது. | |
| 28 | விளம்பர மூலோபாயமொன்றாக சபையின் அலுவலக வளாகத்தில் LED அறிவிப்பு பலகைகளை நிர்மாணித்து பொருத்தும் பணிக்காக ஒளிர்வு பலகை சித்திர வேலைக்காக (Art Work and Production) ஆகியவற்றுக்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா **952,000** ஆன தொகை குறித்த வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு இந்த சித்திர வேலை இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் அறிவித்தல் பலகையை பொருத்தியுள்ள இட அமைவின் அடிப்படையில் அது பொது மக்களின் பார்வைக்கு படாத இடத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளின் பிரகாரம் செயற்பட்டு உள்ளதா என்பதை பரிசோதித்து கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | சபையின் சமூக பொறுப்பு மற்றும் லொத்தர் சீட்டின் பெயர் தொடர்பில் அறிவூட்டுவதற்கு இந்த விளம்பர பலகை பயன்படுத்தப் பட்டுள்ளமை மற்றும் சித்திர வேலைகளை மேற்கொள்ளும் அந்த சந்தர்ப்பத்தில் வேறுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது புகைப்படம் எடுக்கும் போது அந்த நிகழ்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பிப்ரவரி 28, வரை, சபையின் சமூகப் பொறுப்பு மற்றும் லாட்டரி வகைகள் குறித்து இந்த விளம்பர பலகைகள் தெரிவிக்க உதவவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | அபிவிருத்தி லொத்தர் சபையின் உயர் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் பிரகாரம் பொதுவான முறைமையின் கீழ் லொத்தர் சீட்டுக்களை கடனுக்கு விற்பனை செய்யும் போது குறித்த கடன் தொகை அதற்கு அடுத்த தினம் தீர்க்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த விற்பனை முகவருக்கு மீளவும் லொத்தர் சீட்டுக்களை விநியோகித்தல் நிறுத்தப்படும். எனினும், **2019** திசெம்பர் **31** ஆந் திகதியில் உள்ளபடியாக **08** முதல் **27** மாதங்கள் வரையான காலமாக **05** விற்பனை முகவர்களுக்கு ரூபா **2,660,369** ஆன தொகை அறவிடப்படாது காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | உயர் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் உரிய முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிலும், கடன் தொகை அடுத்த நாளில் தீர்க்கப்படாத சந்தர்பங்கள் காணப்பட்டன. |
| 30 | விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்கு இணைந்ததாக மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக மாவட்டத்திற்கு **10** எனும் படி **250** கொடிக் கம்பங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா **1,000,000** ஆன கிரயம் சபையினால் **2018** ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது . அவ்வாறு கொள்வனவு | தேவைப்பாடு உரிய முறையில் மதிப்பிடப்பட்டு பொருத்தமான நடைமுறைகளை பின்பற்றி குறித்த உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | கொடிக் கம்பங்களை பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்து வதற்கு உரிய இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் மேம்படுத்தல் சந்தர்ப்பங்களில் இந்த கொடிக் கம்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2022 பிப்ரவரி 28, அன்று கூட, கொடிக்கம்பங்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட கொடிக் கம்பங்களில் இருப்பு சபையினுள் மிகவும் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் அவை எவ்வித விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | | |
| 31 | 2018 மார்ச் 25 ஆந் திகதி சீட்டிழுக்கப்பட்ட கோதிபதி சனிதா 271 ஆம் சீட்டிழுப்பிற்கு உரிய லொத்தர் சீட்டுக்களில் தவறான பரிசு கோலமொன்று அச்சிடப்பட்டிருந்தமை அடிப்படையில் ரூபா 320,000 ஆன மிகை பரிசில்கள் தொகையினை செலுத்த சபைக்கு நேர்ந்திருந்தமை, உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த அச்சீட்டு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிண ரூபா 320,000 ஆன தொகை அறவிடப்பட்டிராமை மற்றும் தவறான தரவுகள் அச்சிடப்பட்டமை ஆகிய காரணங்களால் அறவிடப்பட வேண்டிய ரூபா 500,000 ஆன தொகை அறவிடப்படாமை. | உடன்படிக்கையின் பிரகாரம் அச்சீட்டு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அது ஒரு சிறிய அச்சீட்டு வழுவென குறிப்பிடப்பட்டுள்ளது. | 28 பெப்ரவரி 2022க்குள் அச்சகத்திலிருந்து குறித்த பணம் மீட்கப்படவில்லை. |
| 32 | சுப்பர் போல் விசேட லொத்தர் சீட்டின் பரிசாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 20 கைத்தொலைபேசிகளுக்காக ரூபா | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை | போட்டி அடிப்படையிலான கூறு விலைகள் கோரப்பட்டு தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த கொள்வனவு | 28 பெப்ரவாரி 2022 வரை கோத்தரை தினம்புக்கு பணப் பரிசுகளை மட்டுமே வழங்க சபை முடிவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | **672,860** ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த கொள்வனவு பெறுகைகள் நடைமுறைக்கு புறம்பாக இடம்பெற்றிருந்தது. | எடுக்கப்பட வேண்டியமை. | இடம்பெற்றுள்ளது என்பது. | செய்துள்ளது. |
| 33 | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் **8.9.1** ஆம் அத்தியாயத்தின் (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா **500,000** தொகையினை மிஞ்சும் பொருட்களை கொள்வனவு செய்யும் போது முறையான உடன்படிக்கை பிரகாரம் செயற்பட வேண்டிய போதிலும் கோதிபதி விசேட சீட்டிழுப்பிற்காக ரூபா **1,669,500** பெறுமதியான மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யும் போது உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | குறித்த விடயங்கள் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத வகையில் இடம்பெற்றுள்ளதுடன் சர்ச்சையொன்று ஏற்பட்டிருக்கவில்லை என்பது. | மேல் குறிப்பிட்டவாறு |
| 34 | களஞ்சியத்தில் போதுமான இருப்பு காணப்படும் போது அது தொடர்பில் கருத்திற் கொள்ளாது மீளவும் கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தமை, உடனடி லொத்தர் சீட்டுக்கள் பொருத்தமான விற்பனை திட்டமொன்றின் பிரகாரம் இடம்பெறாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளுக்காக உடனடி லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு சந்தையில் விடப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக லொத்தர் சீட்டுக்களின் விற்பனை | விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளை கொள்வனவு செய்யும் போது தற்போது காணப்படும் இருப்பின் மட்டம் கருத்திற் கொள்ளப்பட்டு பொருத்தமான விற்பனை திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | **50** சதவீத வெகுமதி விகித எல்லையின் கீழ் அச்சீட்டாளருக்கு அச்சிடலுக்கு கட்டளை வழங்கப்பட்டது என்பதும். சந்தையில் நிலவும் தளம்பலின் அடிப்படையில் லொத்தர் சீட்டுக்கள் கட்டளையிடப்பட்டு கொண்டு வரப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, தற்போது இந்த அனைத்து இருப்புக்களும் உடனடி லொத்தர் சீட்டுக்களுடன் விநியோகிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளமை அறிவிக்கப்பட்டுள்ளது | 2022 பெப்ரவாரி 28, நிலவரப்படி, சில விளம்பரப் பொருட்கள் இன்னும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேம்படுத்தலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா **9,075,040** பெறுமதியான **17,452** ரீசேட்கள் விளைவற்று காணப்பட்டன. | | | |
| 35 | சபையினால் லொத்தர் சீட்டிழுப்புக்களுக்காக தற்போது பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள் சேவை தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுவதாகும். வருடமொன்றிற்கு ரூபா **6.5** மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் பெறும் **04** நிறைவேற்று தரத்திலான உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ரூபா **9** மில்லியன் கூட்டுத் தொகையான சம்பளம் மற்றும் படிகளினை பெறும் **08** உத்தியோகத்தர் களுடனான கணனி பிரிவொன்று சபையினுள் நிறுவப்பட்டிருந்த போதிலும் அவர்களைக் கொண்டு இந்த கணினியுடன் தொடர்புடைய பணி மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. **2009** ஆம் ஆண்டு முதல் **2019** திசெம்பர் **31** வரையான காலப்பகுதியினுள் இந்த தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைக்காக ரூபா **130,607,657** செலுத்தப்பட்டிருந்தது. | லொத்தர் சீட்டிழுப்பின் போது கணனி மயப்படுத்தப்பட்ட கட்டமைப்பினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பெறுகைகள் நடைமுறை நடைமுறைப்படுத்தப் படுகின்றது. | 2022 பெப்ரவாரி 28 நாள் வரை இந்த நடவடிக்கை சபையின் கணினி துறை அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **36** | 2006 ஒக்டோபர் முதல் சபையினால் பொக்செல் வீதியில் இலக்கம் 234 இல் அமைந்துள்ள கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை ஒரு தரப்பினரால் மீறப்பட்ட காரணத்தால் வைப்புத் தொகையாக செலுத்திய ரூபா 723,780 மற்றும் ஆண்டிற்காக செலுத்திய வாடகைப் பணத்தின் ஒரு பகுதியான ரூபா 4,976,220 ஆகிய தொகைகளின் கூட்டுத் தொகையான ரூபா 5,700,000 இற்றைக்கு 15 வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிலுவைத் தொகையை வசூலிக்க வேண்டும் | இல. 234 வோக்ஸ்ஹால் தெருகட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக நிறுவனத்திடம் திரும்பப் பெற வேண்டிய தொகை ரூபா.5,700,000 நிதியமைச்சின் செயலாளரால் மீளப்பெறுதல் அல்லது தள்ளுபடி செய்தல் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு 04 தடவைகள் கூடி இது தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடி இறுதி அறிக்கையை நிதி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளது. இதன்படி, நிதி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கனுக்கமைய செயற்படுவோம். | 2022 பெப்ரவாரி 28, வரை, தொடர்புடைய பணம் மீட்கப்படவில்லை. |
| **37** | 1990 ஆம் ஆண்டு வார்ட் பிளேஸில் ஒரு நபருடன் செய்து கொள்ளப்பட்ட வாடகை ஒப்பந்தத்தின்படி ரூபா **2,520,000** ஆன கட்டிட வாடகை வைப்பு பணத்தை மீள அறவிட்டுத் தருமாறு கோரி சபையினால் **23** வருடங்களுக்கு முன்னர் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு **2016** சனவரி **11** ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. தீர்ப்பு வழங்கப்பட்டு **05** வருட காலம் கடந்துள்ள போதிலும் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 1990ல் வார்டு பிளேஸில் உள்ள ஒருவருடன் குத்தகை ஒப்பந்தத்தின்படி சபை ரூபா. 2,520,000 ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது, மேலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட மாவட்ட நீதிமன்றம் வழக்கின் முன்னேற்றம் குறித்து எங்களுக்குத் தெரிவிப்பதாக எங்களுக்குத் தெரிவித்துள்ளது. அதன்படி, நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும். | 2022 பெப்ரவாரி 28, வரை, தொடர்புடைய பணம் மீட்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வில்லை. | | | |
| **38.** | 2013ஆம் ஆண்டின் போது 3 சந்தர்ப்பங்களில் ரூபா 2,877,144 மற்றும் 2014ஆம் ஆண்டின் போது ரூபா 749,583 ஆக ரூபா 3,626,727 ஆன கூட்டுத்தொகை Archtype நிறுவனத்திற்கு மதியுரைக் கட்டண முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. சுமார் 7-8 வருடங்களாக வெளித் தரப்பினரிடம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | உரிய நிறுவனத்திடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2014ஆம் ஆண்டின் போது Archtype நிறுவனத்திற்கு கட்டிடங்களை புதுப்பிப்பதற்கு தேவையான திட்டங்களை தயாரித்தல் மற்றும் வீடமைப்பு ஆகியவற்றுக்காக ரூபா 3,626,727 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த புதுப்பித்தல் பணிகள் பின்னர் மேந்கொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக இலஞ்ச மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவினால் எமது கோவைகளின் மூலப் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த விசாரணையின் பின்னர் இலஞ்ச மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | 2022 பெப்ரவாரி 28, வரை, தொடர்புடைய பணம் மீட்கப்படவில்லை. |
| **39** | விநியோக கடன் பட்டோராக நிதி நிலைமைக்கூற்றில் ரூபா **8,296,082** ஆன தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் அந்த மீதியில் எதுவித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியினுள் ஒரு வருடம் பழமையான கடன் மீதிகள் ரூபா **6,555,851** தொகையும், **2** வருடம் பழமையான கடன் மீதிகள் ரூபா **1,496,695** தொகையும், **2** வருடங்களை விஞ்சிய | பெற வேண்டிய பழமையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் விநியோக கடன் பட்டோர் கடன் மீதியாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 6,555,851 ஆன மீதி ஒரு வருடம் பழமையான கடன் மீதி அல்ல என்பதுடன், செயற்படு வருடத்தில் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வது தொடர்பில் உருவாகிய மீதியாகும். வங்கிப் பிணைமுறிகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும் இந்த கடன் மீதிகளிடையே ஆர்.ஜே.எல். குணசேன எனும் விநியோக முகவரின் மீதியான ரூபா 1,342,756.48 தொகை தவரித்து | 2022 பெப்ரவாரி 28, வரை, ரூபா.1,342,756.48 கடன் மீதி திரும்பப் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன் மீதியான ரூபா **270,536** தொகையும் உள்ளடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | அனைத்து கடன் மீதிகளும் சபையினால் தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், மேற்குறிப்பிடப்பட்ட விநியோக முகவரின் மீதியையும் அறவிடுவதற்காக சபையினால் வங்கிப் பிணைமுறியை இரத்துச்செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br><br>அவ்வாறே, கணக்காய்வு ஐயவினாவில் இரண்டு வருடங்களுக்கு பழமையான கடன் மீதிகளாக காண்பிக்கப்பட்டுள்ள கடன் மீதிகளை நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கப்பட்ட ஆண்டுக்கு முன்னை ஆண்டு முதலாக முன்கொண்டுவரப்படும் மீதியாக காணப்படுகின்றமை வங்கிப் பிணைமுறிகள்ன ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த நிலுவைப் பணத்தில் குணசேன ரத்னகோன் எனும் விநியோக முகவரின் மீதி மாத்திரம் அறவிடப்பட வேண்டியதாக உள்ளதுடன், ஏனைய கடன் மீதிகள் சபையினால் தற்போது அறவிடப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட விநியோக முகவரின் மீதியையும் அறவிடுவதற்காக சபையினால் வங்கிப் பிணைமுறியை இரத்துச்செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு உரிய சட்ட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br><br><br>அவ்வாறே, 2 வருடங்களை விட பழமையான கடன் மீதியான ரூபா 270,536 ஆன தொகை மூன்று விநியோக முகவர்களின் கடன் மீதிகளாவதுடன், அவற்றில் ரூபா 263,607.05 ஆன கடன் மீதிக்குரிய ஏ.எம். வீரகோன் விநியோக முகவரின் கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br>அவ்வாறே, விநியோக முகவர் பீ.டீ.ஜே. பெரேரா அவர்களிடமிருந்து சபைக்க அறவிடப்பட வேண்டிய ரூபா 825 ஆன தொகையை உடனடியாக செலுத்துமாறு அவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விநியோக முகவர் ஜே.டபிள்யூ. சந்தன ஜயலால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,104.15 ஆன தொகையை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br>எதிர்காலத்தில் குறித்த கடன் தொகைகள் கிடைக்காதுவிடின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து ஐயக்கடனாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **40** | 2014ஆம் ஆண்டின் போது, 2015ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்காக தங்குமிட வசதிகளை | முற்பணத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை | 2015ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்காக தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ஒரு | 2022 பெப்ரவாரி 28, வரை, முற்பணம் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்காக ஒரு நிறுவனம் மற்றும் மூன்று தனிநபர்களுக்கு ரூபா 202,800 ஆன முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், சுமார் 7 வருட காலமாக அவை தீர்ப்பனவு செய்யப்படாது கணக்குகளில் முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எடுத்தல். | நிறுவனம் மற்றும் மூன்று தனிநபர்களுக்கு ரூபா 202,800 ஆன முற்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அந்த பணத்தை அறவிடுவதற்காக அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத்துமூலம் அறிவித்த போதிலும், இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. இந்த தொகையை மீள அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்படுவதுடன், அவ்வாறல்லாத போது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **41** | அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் **17(5)** ஆம் பிரிவு வெற்றியாளர்களால் உரித்து கோரப்படாத, **06** மாதங்களை கடந்த வெகுமதிகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை முதலாவதாக நிதியத்திற்கும் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்க வேண்டிய போதிலும், **2020** பெப்ரவரி **12**ஆந் திகதியில் உள்ளபடியாக **06** மாதங்களை கடந்த ரூபா **1,428,172** கிரயமான **11** வெகுமதி உருப்படிகளுக்குரிய **162** வெனுமதிகளை விற்பனை செய்தமையால் கிடைக்கும் பணத்தை சனாதிபதி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | அதிகாரச் சட்டத்தின் 17(5) பிரிவுகளுக்கமைய செயற்படல். | ஏதேனும் விளம்பர பணியொன்றுக்காக மேலதிக வெகுமதி ஒதுக்கக் கணக்கினை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படுவதுடன், 06 மாதங்களை கடந்த பின்னர் உரித்து கோரப்படாத போது அதனை எதிர்கால விளம்பர நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியும் என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த உருப்படிகளை விற்பனை செய்யாது எதிர்கால விளம்பர நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவாரி 28 க்குள், சட்டத்தின் விதிகள் செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **42** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை VIII அத்தியாயத்தின் **10.1** ஆம் பந்திக்கமைய பொதுவான கடமைகளை நிறைவேற்றும் போது கூடுதலாக பயணங்களை மேற்கொள்ள நேரிடும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் பயணக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நிறுவனத்தின் தலைவருக்கு இயலுமை உள்ள போதிலும், அவ்வாறல்லாது **9** வலய முகாமையாளர்களுக்கு **07** மாத காலப்பகுதிக்காக எரிபொருள் மற்றும் ஏனைய படிகளாக ரூபா **2,835,356** ஆன தொகை சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். | வலய முகாமையாளர்கள் தமது கடமைகளுக்காக பிரயாணம் மேற்கொள்ளும் போது அவர்களுக்கு உரித்துடைய வாகனங்களை பயன்படுத்துவதற்காக வாகனம் மற்றும் எரிபொருளுக்காக **1** கி.மீ. இற்கு ரூபா **40** படியான கொடுப்பனவொன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படுகின்றது. அவ்வாறே களக் கடமைகளுக்கு அறிக்கையிடும் போது, இரவு தங்கும் போது, தங்கும் படியொன்று நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் , அந்த கொடுப்பனவும் மேற்படி **1** கி.மீ. இற்கு ரூபா **40** படியான கொடுப்பனவொன்றும் எனும் கூட்டுத்தொகை கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த பெறுமதி ஆகும். | பயணச் செலவுகளைச் செலுத்துவது தொடர்பான நடைமுறையை சபை தயாரித்து ஒப்புதல் அளிக்காததால், அவ்வாறு செய்யப்படும் வரை, தாபன விதிக்கோவை விதிகளின்படி கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். |
| **43** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ஓஐஏ அத்தியாயத்தின் **8**ஆம் பந்திக்கமைய அரச நிறுவனங்களில் களக் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தும் வாகனத்திற்காக ஒரு கி.மீ. இற்கு ரூபா **12** படியான தொகை மாத்திரம் செலுத்த முடியுமான போதிலும், **1** கி.மீ. இற்கு சபையினால் | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவும் | வலய முகாமையாளர்கள் தமது கடமைகளுக்காக அவர்களுக்கு உரித்துடைய வாகனங்களை பயன்படுத்துவதற்காக **1** கி.மீ. இற்கு ரூபா **40** படியான கொடுப்பனவொன்று செலுத்தப்படுவதுடன், வாகனங்கள் மற்றும் பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் வலய முகாமையாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டியமையால் அதனைக் கருத்திற்கொண்டு மேற்படி வீதம் பணிப்பாளர் | மேல் குறிப்பிட்டவாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| | விற்பனை முகாமையாளர்களுக்கு ரூபா **40** படியாக செலுத்தப்பட்டிருந்தது. | | சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், வானகமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டால், அந்த வாகனத்திற்கு **1** கி.மீ. இற்கு ரூபா **40** படியான கொடுப்பனவொன்று செலுத்தப்படுவதால் அந்த வீதங்களை வலய முகாமையாளர்கள் தமது வாகனத்தை பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது. | |
| **44** | 2018 நவம்பர் 14ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) ஆம் பிரிவுக்கமைய அரச வங்கிகளுக்கு புறம்பாக **2020** திசெம்பர் **31**ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா **5,486,920** ஆன பணம் சபைக்கு சொந்தமான தனியார் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டு, அதன் ஊடாக திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். | மாவட்ட விற்பனை முகவர்களின் நாளாந்த வைப்புக்களை இலகுபடுத்தும் நோக்கில் இந்த கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.எதிர் காலத்தில் வைப்புச் டிசெய்யப்படும் அளவினை அவதானித்து இந்த கணக்கை தொடர்ந்தும் பேணிச் செல்லல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். | 2022 பெப்ரவாரி 28 க்குள், பணம் ஏற்கனவே ஒரு தனியார் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு, திறைசேரி உண்டியலில் முதலீடு செய்யப்பட்டது. |
| **45** | 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2018 நவம்பர் 14ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவுக்கமைய 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 206,987,668 ஆன மீதி சேமிப்பு வங்கிக் கணக்கில் மற்றும் ரூபா | உரிய முறையில் அங்கீகாரம் பெற்று முதலீடு செய்ய வேண்டும். | தற்போது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறையே பின்பற்றப்படுகின்றது. அதற்கு உரிய அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள வாறு எதிர்காலத்தில்நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தினையும் | 2022 பெப்ரவாரி 28, வரை, முறையான ஒப்புதல் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 62,184,487 ஆன தொகை ஏழு நாள் ஏக்ஷன வைப்புக் கணக்கில் முதலீடு செய்வதற்காக அமைச்சரினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| **46** | நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் **2008** திசெம்பர் **31**ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் **142** இன் **5.2** III பிரிவு சபையினால் **144** உத்தியோகத்தர்களுக்கு ரூபா **250,000** இனை விஞ்சி ரூபா **10,011,540** ஆன தொகை இடர் கடனாக செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆரம்பம் முதல் இதுவரையிலும் இந்த நடைமுறையின் கீழ் ஊயழிர்களை ஊக்குவிப்பதற்காக இடர் கடன் வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவாரி 28, அன்று கூட, சுற்றறிக்கை விதிகளை விட அதிகமாகவே இடர் கடன்கள் வழங்கப்படடிருந்தன. |
| **47** | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் தலைமைக் கணக்காளரின் **2017** ஒக்தோபர் **03**ஆந் திகதிய MF/**06/20/**Common/**2017** ஆம் இலக்க கடிதத்துக்கமைய பெறுகைகள் திட்டத்திற்கு புறம்பாக ஏதேனும் கொள்வனவொன்று மேற்கொள்ளப்படும் எனின் அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும், அது தொடர்பில் சிறப்பாக நியாயப்படுத்த வேண்டு | திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்று பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிராத அந்த கொள்வனவுகள் தொடர்பில் பெறுகைகள் திட்டத்தினை திருத்துவதற்காக **2020** திசெம்பர் மாதம் பணிப்பாளர் சபை பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அது **2021.01.27** ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவாரி 28 வரை, அமைச்சக செயலாளரின் ஒப்புதல் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையின் **2020**ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டத்திற்கு புறம்பாக ரூபா **15.4** மில்லியன் பெறுமதியான பெறுகைகள் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. | | | |
| **48** | பெறுகைகள் குழுவினால் **2008** ஏப்ரல் **18**ஆந் திகதி ரூபா **8,095,000** பெறுமதியான டபள் கெப் வண்டியொன்றினை தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாகரம் பெறப்பட்டிருந்ததுடன், அந்த வாகனம் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. பின்னர் அந்த நிறுவனத்தால் வாகனத்திற்கான கொடுப்பனவை மேற்கொள்ளுமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை சபையினால் நிராகரிக்கப்பட்டமையால் , **2009** ஆம் ஆண்டின் போது சபைக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கின் தீர்ப்பு தனியார் நிறுவனத்திற்கு சார்பாக காணப்பட்டது. அதற்காக சபையினால் ரூபா **16,842,554** ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | வாகனம் கிடைக்காதாயின் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா **16,842,554** ஆன கெப் வண்டியின் மொத்தக் கிரயத்தினை வாகனத்தை எடுத்துச் சென்ற தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2022 பெப்ரவாரி 28 நிலவரப்படி, வண்டியின் ரூபா. 16,842,554, கிரயம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து மீட்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| **49** | முறையான திட்டமொன்று இல்லாது மேம்படுத்தல் உருப்படிகளை கொள்வனவு செய்தமை காரணமாக ரூபா **3,623,367** பெறுமதியான மேம்படுத்தல் பொருட்கள் குடைகள் (ஆண்கள்), ரீ-சேட்கள், சோலார் விளக்குகள், கெப், போசிலேன் பொருட்கள், நீர் வடிகள் ஆகியன களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. சபையின் மேம்படுத்தல் பொருட்களின் மீள் கட்டளையிடும் இருப்பின் அளவு தொடர்பில் போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்படுவதாக அவதானிக்கப்படவில்லை. | பெறுகை உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே திட்டமிட்டவாறு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இந்த இருப்பில் பெரும்பாலானவை நிலவும் கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மீள் கட்டளையிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் , அவற்றை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், விற்பனை முகவர் கூட்டங்கள் ஆகியன இரத்துச் செய்யப்பட்ட காரணத்தால் அவை களஞ்சியத்தில் எஞ்சியுள்ளன. | 2022 பெப்ரவாரி 28 நிலவரப்படி, இந்த சரக்கு இன்னும் கையிருப்பில் உள்ளது. |
| **50** | 2019 ஒக்தோர்பர் 24ஆந் திகதி லொத்தர் சீட்டுகளின் பரிசுக் கோலம் தொடர்பில் கலந்துயையாடுவதற்காக நடாத்தப்பட்ட கூட்டத்தில், களஞ்சியத்தில் காணப்படும் வெற்றிக்கான உரித்து கோரப்படாத 06 மாத காலத்தினை கடந்த வெகுமதிகளை எதிர்வரும் போட்டிகளுக்கு பயன்படுத்துவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 529,850 பெறுமதியான 02 சைக்கிள்கள் 2019 திசெம்பர் மாதம் சந்தைக்கு | எதிர்வரும் உடனடி லொத்தர் சீட்டுக்களுக்காக பரிசாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த இரு துவிச்சக்கர வண்டிகளை எதிர்வரும் உடனடி லொத்தர் சீட்டுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய ஊழஎனை தொற்றுநோய் நிலைமை காரணமாக உடனடி லொத்தர் சீட்டுகளின் விற்பனை மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. இந்த லொத்தர் சீட்டுகளை எதிர்காலத்தில் சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவாரி 28 வரை, பரிசுகளாக பயணபடுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி லொத்தர் சீட்டின் பரிசாக மற்றும் 2020 பெப்ரவரி லக்ன வாசனா விசேட சீட்டிழுப்பின் போது பரிசாக வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) இற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த 02 துவிச்சக்கர வண்டிகளும் கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 12ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்படுவதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | | |
| **51** | ரூபா **592,500** பெறுமதியான **123** பரிசுச் சீட்டுகள் **12** வருட காலத்தினுள் சபையினால் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அவற்றுள் ரூபா **7,500** பெறுமதியான **07** பரிசில் சீட்டுக்கள் **2019** ஆகஸ்ட் **31**ஆந் திகதி காலாவதியாகியிருந்தன. மேலும், ரூபா **585,000** பெறுமதியான ரூபா **5,000** பெறுமதியுடைய **117** பரிசுச் சீட்டுகள் காணப்பட்டதுடன், அந்த சீட்டுகளின் காலாவதித் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில் லை. அவை **2009** ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட பரிசுச் | சபைக்கு அதனை பெற்றுக்கொள்கின்றேன். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியுடைய பரிசுச் சீட்டுகளை நாளதுவரையாக்குவதற்காக வர்த்தக அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் சதொச நிறுவனத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் போது சதொச நிறுவனத்திடம் குறித்த தகவல்கள் இல்லாதிருந்தமையால் அதற்குரிய அனைத்து தகவல்களும் அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், வர்த்தக அமைச்சினால் சதொச நிறுவனத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது அந்த பணம் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆகும். எதிர்காலத்தில் | 2022 பெப்ரவாரி 28 வரை கூட, சபைக்கு பணம் பெறப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சீட்டுகளாவதுடன், தற்போது கொள்வனவு செய்யப்பட்டு **12** வருடங்கள் கடந்துள்ளமையால் எதிர்வரும் பரிசு வழங்கல்களின் போது இந்த சீட்டுகளை பயன்படுத்துவதற்கு உள்ள இயலுமை தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்படுகின்மை அவதானிக்கப்பட்டது. | | அது சபைக்கு கிடைக்கவுள்ளது. | |
| **52** | நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள சாப்பாட்டு அறை (Lunch Room) மற்றும் களஞ்சிய அறை (Stores Room) ஆகியவற்றுக்காக முறையே ரூபா **1,336,676** மற்றும் ரூபா **246,918** எனுமாறு ரூபா **1,583,594** ஆன தொகை **2018** ஆம் ஆண்டளவில் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக **2019** மற்றும் **2020**ஆம் ஆண்டுகளுக்காக எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிராதது டன், பணி நிறைவடைந்துள்ளதெனின் குறித்த சொத்துக்களின் கிரயம் கணக்கு வைக்கப்பட்டு பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் சொத்தொன்றாக இனங்காண நடவடிக்கை எடுத்தல். | உணவு அறை மற்றும் களஞ்சிய அறையை நிர்மாணிப்பதற்காக ரூபா **1,583,594** ஆன தொகை தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் இது வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நடைமுறை வேலைக் கணக்கில் அந்த பணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் சொத்தொன்றாக இனங்காணப்பட்டு பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவாரி 28 க்குள் கூட அந்தப் பணிகள் முடிக்கப்படவில்லை. |
| **53** | வெகுமதிப் பொருட்களினுள் கொள்வனவு செய்யப்பட்டு **02** வருடங்களை விஞ்சிய | அங்கீகாரத்துடன் கைத்தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | இந்த உருப்படிகளை முறையான கைத்தவிர்ப்பு நடைமுறையின் கீழ் கைத்தவிர்ப்பதற்க உரிய பணிகள் | 2022 பெப்ரவாரி 28 அன்று கூட, கைத்தவிர்ப்பு வேலை முடிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா **548,224** பெறுமதியான **08** கைத்தொலைபேசிகள் மற்றும் **04** மடி கணினிகள் ஆகியவற்றின் உத்தரவாதக் காலம் நிறைவடைந்திருந்ததுடன், ரூபா **32,510** பெறுமதியான **02** மவுன்டன் சைக்கிள்கள் மற்றும் பலகையினால் ஆன தொலைக்காட்சிப்பெட்டி தாங்கியொன்று பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத மட்டத்தில் காணப்படுவதாக பௌதீக பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. அவற்றுள் **03** கைத்தொலைபேசிகள், **04** மடி கணினிகள் மற்றும் **02** மவுன்டன் சைக்கிள்கள் **2019** ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வின் ஊடாக விற்பனை செய்வததற்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான **2021** பெப்ரவரி **12**ஆந் திகதி வரையிலும் அந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | |
| **54** | சபையின் மொத்த எஞ்சும் லொத்தர் சீட்டுக்களின் சதவீதம் **2016, 2017, 2018, 2019** மற்றும் **2020**ஆம் ஆண்டின் சனவரி முதல் யூலை வரையிலும் முறையே **0.2, 24.01, 10.41, 7.57,** மற்றும் | எஞ்சும் லொத்தர் சீட்டுக்களின் சதவீதத்தினை குறைவான மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பாக 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மிகவும் குறைவான மீள அனுப்புதல் வீதம் பதிவு செய்யப்பட்டதுடன், அந்த சதவீதம் சனவரியில் 7 சதவீதம், பெப்ரவரி மாதம் 4 சதவீதமாகவும் | 2022 பெப்ரவாரி இல் கூட, டிக்கெட் மீளனுப்பப்படும் சதவீதம் அதிகமாக இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | **14.1** ஆகும். இதன் மூலம் விற்பனை செய்யாது எஞ்சும் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை கடந்த காலங்களில் அதிகரித்துள்ளமையை இது காண்பிக்கின்றது. **2020**ஆம் ஆண்டின் முதல் **7** மாத காலப்பகுதியினுள் எஞ்சிய லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுச் செலவினம் ரூபா **181** இலட்சமாக காணப்பட்டது. | | பதிவாகியது. எனினும், அதன் பின்னர் கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மிகவும் உயர்ந்த அளவான மீள திருப்பி அனுப்புதல் வீதம் பதிவு செய்யப்பட்டமையால் அந்த வருடத்தில் உயர்வான மீள அனுப்புதல் வீதம் பதிவாகியது. | |
| **55.** | மீளாய்வாண்டின் போது களஞ்சியத்தில் எஞ்சியிருந்த **5,938,989** லொத்தர் சீட்டுக்கள் மற்றும் விற்பனை செய்யாது எஞ்சியிருந்த **83,323,876** லொத்தர் சீட்டுக்கள் ஆகியவற்றுக்காக ரூபா **41,122,828** ஆன அச்சீட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திட்டமிட்ட முறையில் கட்டளையிடல் பணிகளை மேற்கொள்ளல். | 2020 மார்ச் மாதம் முதல் இடம்பெற்ற நாட்டின் எதிர்பாராத கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு அவ்வப்போது மூடி வைக்கப்பட்டிருந்தமையால் பொரும் அளவிலான இருப்பு எஞ்சியிருந்தது. இதன் பிரகாரம் அந்த வருடத்தை விட மிகவும் சிறந்த முறையில் முகங்கொடுப்பதற்காக மிகவும் திட்டவட்டமான முறையில் கட்டளையிடல் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | களஞ்சியத்தில் இருப்பு மீதம் உள்ளது. |
| **56.** | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.6 ஆம் பந்தி மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 7/98, 8/98(I) மற்றும் 8/98 (II) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவியணியின் செயல்திறனை மதிப்பீடு செய்தல் ஆண்டுதோறும் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். | பதவியணியின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்காக உரிய நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் , அதன் பிரகாரம் KPI (அடிப்படை குறிகாட்டிகள்) தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம், **2022** ஆம் ஆண்டு முதல் இதனை நடைமுறைப்படுத்த | 2022 பெப்ரவாரி 28 நிலவரப்படி, அது இன்னும் தொடங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | திட்டமிடப்பட்டுள்ளது. | |
| **57.** | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆரம்பம் முதல் நிர்வாக மற்றும் மேவுகை பணிகள் தொடர்பில் செயல்வழிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்காதது டன், அந்த பணிக்காக **2016** ஆம் ஆண்டின் போது தகைமைவாய்ந்த நபரொருவர் நிமிக்கப்பட்டிருந்தார். உரிய தரப்பினரால் நிலவும் சட்டங்கள் மற்றும் விதிகள் ஆராயப்பட்டு குறித்த செயல்வழிக் கோவை தயாரிக்கப்பட்டு **2019** ஒக்தோபர் **14** ஆந் திகதி அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பணிக்காக ரூபா **4,500,000** தொகையை உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்ததுடன், இவற்றுள் ரூபா **1,700,000** தொகை இதுவரையிலும் செலுத்தப்பட்டிருந்தது. அவரால் குறித்த செயல்வழிக் கோவை இரு பகுதிகளாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையில் தற்போது நிலவும் நடைமுறைக்கு இணங்காத வகையில் இந்த செயல்வழிக் கோவை தயாரிக்கப்பட்டுள்ளதாக காரணம் கற்பித்து | சபையினால் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி லொத்தர் சபைக்கு செயல்வழிக் கோவையொன்று தயாரிப்பதற்கு பொருத்தமான ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதன் பிரகாரம் அவர் உடன்படிக்கையின் சில பகுதிகளை வரைபாக்கி சபைக்கு கையளித்துள்ளார். அவரால் வழங்கப்பட்ட அந்த பகுதிகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயமாக கொள்ளப்பட்டது அவரால் தயாரிக்கப்பட்ட பகுதிகளின் பெரும்பாலான பகுதிகள் தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணத்தை உள்ளடக்கியிருந்தது என்பதாகும். அதன் காரணமாக வியாபார நிறுவனமொன்றுக்கு பொருந்தும் வகையில் மீண்டும் வரைபாக்கி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய வளப்பங்களிப்பாளருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சபையுடன் கலந்துரையாடி உள்ளதுடன், தற்போது மீள தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீள தயாரிக்கப்பட்ட பகுதிகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு கிடைக்கும் அறிவுரைகளுக்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 பெப்ரவாரி 28 வரை, அபிவிருத்தி லொத்தர் சபைக்கான வேலை நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எஞ்சிய பணம் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த பணிக்காக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த ‘‘லொத்தர்கள் மற்றும் சீட்டிழுப்பு பணிகள், உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வுப் பணிகள்’’ ஆகியவற்றுக்கான விதிகளை தயாரிதல் ஆகிய பணிகளை இடைநிறுத்துமாறு சபையினால் அதனை தயாரித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பணி இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த பணிக்காக கைச்சாத்திடப்பட்ட நிபந்தனைகள் மீறப்படல் மற்றும் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகை தொடர்பில் சட்டரீதியான அச்சுறுத்தலான்று நிலவுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | | |
| **58** | நாளாந்தம் சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்களில் சீட்டிழுப்பு சந்தர்ப்பத்தில் பகிர்ந்தளிக்கும் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு சபைக்கு வழங்கப்படாத லொத்தர் சீட்டுக்கள் | உரிய முறையில் லொத்தர் சீட்டுக்களை பகிர்ந்தளித்தல் நடைமுறையொன் றை உருவாக்குதல் மற்றும் விற்பனை பிரதிநிதிகளுக்கு | லொத்தர் சீட்டுக்களின் இருப்பு பகிர்ந்தளிக்கும் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்படுவது பேருந்து மற்றும் புகையிரதம் மூலம் ஆகம். சில சந்தர்ப்பங்களில் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பு பேருந்து அல்லது | கூரியர் சேவை மூலம் வினியோகம் செய்யும் போது குறைபாடுகள் ஏற்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டமை மற்றும் உப களஞ்சியத்தினால் குறித்த பட்டியல்கள் பிரகாரம் சரியான பண்டக்குறியுடனான லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்படாமை போன்ற சில தவறுகளின் அடிப்படையில் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அந்த லொத்தர் சீட்டுக்கள் குறித்த முகவரின் வற்பனையாக கருதி கணினிக் கட்டமைப்பினுள் உள்ளடக்கி சீட்டிழுக்கும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதற்காக உதவிப் பொது முகாமையாளரின் (நிதி) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. சீட்டிழுப்பின் பின்னர் அந்த லொத்தர் சீட்டுக்களின் பண்டக்குறியீட்டுக்கு உரிய பரிசில்கள் நிறுத்தப்பட்டமை, அது பின்னர் அகற்றப்பட்டமை மற்றும் பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு மீள பணத்தை செலுத்துதல் போன்ற பணிகளும் முறையான அங்கீகாரமின்றி உதவிப் பொது முகாமையாளர் (நிதி) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. **2020**ஆம் ஆண்டினுள் அவ்வாறான **13** சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதன் விற்பனைப் பெறுமதி ரூபா **307,861** ஆகும். | லொத்தர் சீட்டுக்கள் கிடைத்தமையை உறுதிப்படுத்தல். | புகையிரதத்தில் காணாமற்போகும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பினை குறித்த விற்பனை முகவருக்கு விற்பனை செய்ததாக கருதி, அவர்களின் பெயரில் கொடுக்கல் வாங்கல் பதிவு செய்யப்படும். பின்னர் அந்த இருப்பு பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு கிடைத்தாக அவர்களால் எழுத்து மூலம் சான்றுபடுத்தியதன் பின்னர் அந்த பணம் மீண்டும் பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படும்.<br><br>எனினும், மேற்படி நடைமுறை தொடர்பில் கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்ட திகதிக்கு அடுத்த தினத்தில் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பானது தொலைந்து போயுள்ளதாக பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளால் சான்றுபடுத்தியதன் பின்னர் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பினை விற்பனையாக கணக்கு வைக்கப்பட மாட்டாது. அதன் பிரகாரம் இவ்வாறான பிரச்சினையொன்று எதிர்காலத்தில் ஏற்படாது. | |
| **59** | ஆண்டினுள் மேலதிகமாக கட்டளையிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் | மேலதிக இருப்பு கட்டளையிடும் போது விற்பனை | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள **1,255,570** எஞ்சுவதற்கான | 2022 பெப்ரவாரி 28 வரை, கூடுதல் கட்டளை கையிருப்பில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அளவானது **31,779,000** ஆக காணப்பட்டதுடன், களஞ்சியத்தில் விநியோகிக்கப்படாது எஞ்சியுள்ள லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை **1,255,570** ஆகும்.<br><br>அது சதவீதமொன்றாக **4** சதவீதமாக காணப்பட்டதுடன், அத கோடிபதி லொத்தர் சீட்டின் இந்த சதவீதம் **6** சதவீதமாக இருந்தது.மேலதிக கட்டளையிடல் உரிய முகாமைத்துவத்துடன் இடம்பெறுவதில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தொடர்பில் உறுதிப்படுத்தல். | காரணமாக அமைந்தது **2020**ஆம் ஆண்டில் இடம்பெற்ற COVID நிலைமை காரணமாக சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டமை காரணமாக அந்த பிரதேசங்களின் விற்பனை முகவர்கள் லொத்தர் சீட்டுக்களை கொண்டு செல்லாத காரணத்தால் களஞ்சியத்தில் இருப்பு எஞ்சியது. | உள்ளன. |
| **60** | DLB/FIN/MStores/4-4 ஆம் இலக்க 2020 சனவரி 29ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிரதான களஞ்சியத்தின் முகாமைத்துவ உதவியாளரால் 2019ஆம் ஆண்டு திசெம்பர் மாதமளவில் மற்றும் 2020 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தின் பல்வேறு சீட்டிழுப்புகளுக்குரிய கட்டளையிடப்படாத 281,000 லொத்தர் சீட்டுக்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததாக உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், லொத்தர் சீட்டுகளுக்கு கட்டளை பிறப்பித்தல், கட்டளை பிறப்பித்த லொத்தர் சீட்டுகளுகளை களஞ்சியத்திற்கு | கட்டளையிடப்படாத லொத்தர் சீட்டுகள் அனுப்பப்பட்டமை தொடர்பில் அச்சீட்டாளருக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுத்தல். | லொத்தர் சீட்டுகளுகளின் அச்சீட்டாளரால் சபையினால் கட்டளையிடப்பட்ட அளவ்னை விஞ்சி மேலதிக தொகையான லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும், அதற்காக பொருள் பெறுவனவுப் பட்டியல் (GRN) வழங்கப்படாதுள்ளதுடன், அதற்காக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. | 2022 பெப்ரவாரி 28 க்குள், களஞ்சியம் கட்டளைய்டாத இருப்பைப் பெற்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்பேற்றல் மற்றும் மேலதிக கட்டளைகளின் ஊடாக லொத்தர் சீட்டுகளுகளை பெற்றுக்கொள்ளல் போன்ற நடைமுறைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை என்பது கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த காரணத்தால் 2020ஆம் ஆண்டின் முதல் 7 மாத காலப்பகுதியினுள் மேலதிகமாக கட்டளையிடப்பட்ட லொத்தர் சீட்டுகளுகளின் எண்ணிக்கை 4 சதவீதமான அல்லது 1,255,570 எஞ்சியிருந்தது. | | | |
| **61** | 2020 சனவரி 30ஆந் திகதிய பெறுகைகள் குழுவின் பரிந்துரைக்கமைய சுப்பர் போல் விசேட சீட்டிழுப்பிற்கான ஸ்கூட் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட வெற்றிபெற்ற விலைக்கேள்வியாளருக்கு அந்த திகதியிலேயே பொருள் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. எனினும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1(ஆ) பிரிவிற்கமைய ஒப்பந்தக் கையளிப்பிற்காக உடன்படிக்கையின் செல்லுபடியாக காலப்பகுதியினுள் ஒப்பந்தக் கையளிப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதும் கையளிப்புக் கடிதமொன்று உரிய வழங்குநருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல். | பொதுவான கொள்வனவின் போது உள்ளாறே ஒரே தடவையில் விலைக்கேள்வியை சாட்டுதல் இதன் போது இடம்பெறாததுடன், வெற்றியாளர்கள் முன்வரும் முறைமைக்கமைய ஒவ்வொரு தடவையும் பொருள் கட்டளைகளை சமர்ப்பிப்பதன் மூலம் இந்த துவிச்சக்கரவண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஒரே தடவையில் துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதால் ஏற்படக்கூடிய சிக்கல்களை குறைக்கும் வகையில் இதன் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவாரி 28 வரை பணப் பரிசுகளை மட்டுமே வழங்க சபை முடிவு செய்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ல. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 இன் பிரகாரம், செயலாற்றல் பிணைகளை சமர்ப்பிப்பதற்கு மற்றும் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **62** | விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட ரூபா **1,352,610.58** கிரயமான **07** துவிச்சக்கர வண்டிகள் **02** வருடங்கள் **11** மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக அலுவலக வாளகத்தில் வாகனத் தரிப்பிடத்தில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பயன்படுத்த முடியாததெனின் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட **07** துவிச்சக்கர வண்டிகள் தலைமை அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த துவிச்சக்கர வண்டிகளை பழுதுபார்ப்பதற்கு அதிக கிரயம் ஏற்படுவதால் அதனை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முறையான கைத்தவிர்ப்பு நடைமுறையின் ஊடாக கைத்தவிர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 பெப்ரவாரி 28 வரை, அப்புறப்படுத்தப்படவில்லை. |
| **63.** | சபையின் பிரதான பணியொன்றான லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிகள் **2017**ஆம் ஆண்டு முதல் முறையான பெறுகைகள் திட்டமொன்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிராதது டன், நிலவும் உடன்படிக்கை காலம் நிறைவடையும் தருவாயில் பெறுகை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பொதுவாக சுமார் **06** மாத காலமாக பெறுகை நடைமுறை | லொத்தர் சீட்டுக்களின் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைகள் வழிகாட்டிக்கமைய நிறைவேற்றுதல். | 2020/21 ஆம் ஆண்டுக்குரிய லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் பெறுகை நடவடிக்கைகள் 2020 மார்ச் 15ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அந்த பணிகள் 2020 யூன் 01ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் 2020 மார்ச் 16ஆந் திகதி முதல் 2020 மே 11ஆந் திகதி வரையிலும் நாடு மூடப்பட்டிருந்ததுடன், | 2017 ஆகஸ்ட் 1, முதல் 2022 பெப்ரவாரி 28 வரை, இரண்டு அச்சகங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு, அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடம்பெறுவதுடன், அதன் காரணமாக உடன்படிக்கை காலத்தினையும் **06** முதல் **08** மாதங்கள் வரையான காலம் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. **2017** ஆகஸ்ட் **01**ஆந் திகதி முதல் இதுவரையிலும் இரு அச்சீட்டு நிறுவனங்கள் மாத்திரம் அதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன. | | அலுவலகப் பணிகள் 2020 மே 11ஆந் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டது. இந்த பெறுகை நடவடிக்கைகள் 2020 யூன் 01ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் ஆரம்பிக்கக்கூடிய ஆகக் கிட்டிய திகதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| **64** | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் **2.14** ஆம் பந்திக்கமைய பெறுகையின் ஒட்டுமொத்த பெறுமதி ரூபா **250** மில்லியனை விஞ்சும் போது அது அமைச்சரவைப் பெறுகைகள் குழு அல்லது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், சபையினால் அது தொடர்பில் எதுவித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. **2020/2021** ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட அச்சீட்டு செலவினம் ரூபா **422** மில்லியனான போதிலும், அது **7** லொத்தர் சீட்டுகளுக்கான **7** பெறுகைகளாக குறிப்பிட்டு அதனை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிதி எல்லையின் கீழ் மேற்கொள்ள முடியும் | லொத்தர் சீட்டுக்களின் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைகள் வழிகாட்டிக்கமைய நிறைவேற்றுதல். | சபையினால் சீட்டிழுப்புக்காக **07** லொத்தர் சீட்டுக்கள் அச்சிடுவதற்காக ஒரு வகையான லொத்தர் சீட்டினை அச்சிட்டு வழங்குவதற்கு வழங்குநர் ஒருவரை தெரிவு செய்தல் பெறுகையொன்றாக கருத்திற்கொள்ளப்பட்டு, இதற்காக விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளதுடன், இதன் போது ஒரு லொத்தர் சீட்டுக்குரிய விலைக்கேள்விகள் தனித்தனியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுகின்றன. அனைத்து லொத்தர் சீட்டுக்களையும் வழங்குவதற்கு உரியதாக ஒரு பெறுகையாக விலைக்கேள்வி கோரல் மூலம் அனைத்து லொத்தர் சீட்டுகளுக்காக ஒரு வழங்குநர் தெரிவு செய்யப்பட்டால் அதன் மூலம் சபை பாரிய அளவிலான அச்சீட்டு அபாயத்திற்கு முகங்கொடுக்க நேரிடும். ஏதேனும் வழங்குநரின் இயந்திரக் கோளாறு அல்லது அவரின் தரப்பிலிருந்து மீறிய | மேல் குறிப்பிட்டவாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| | என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திணைக்கள பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் இந்த பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என உதவி பொது முகாமையாளர் (பெறுகைகள்) இனால் **2020** மே **29**ஆந் திகதி பரிந்துரை செய்யப்பட்டு அதற்காக தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் தது. அதன் பிரகாரம், இந்த பணிகள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பது அவதானிக்கப்பட்டது. | | நிலைமையொன்றினுள் லொத்தர் சீட்டுக்களை விநியோகிப்பதற்காக தாக்கம் செலுத்தக்கூடிய விடயங்களை கருத்திற்கொண்டு இடம்பெறக்கூடிய அச்சுறுத்தலான நிலைமை இதன்போது முதன்மையான கருத்திற்கொள்ளப்பட்டுள்ள து. அதன் மூலம் பல வழங்குநர்களை தெரிவ செய்வதன் மூலம் சபையின் அச்சீட்டு அபாயம் குறைவடைவதுடன், அதன் காரணமாக ஒரு லொத்தர் சீட்டுக்கு ஒரு வழங்குநர் எனும் வகையில் **7** வகையான லொத்தர் சீட்டுகளுக்கு தனித்தனியாக விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய பல ஆண்டுகளாக அமைச்சின் பெறுகைகள் குழுவினால் அவ்வாறே விலைக்கேள்வி கோரப்பட்டு அச்சீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>அந்த முறையில் இந்த வருடத்திலும் அந்த பெறுகை நடவடிக்கைகள் பெறுகைகள் குழுக்களின் அதிகார எல்லையினுள் அவ்வாறே ஆரம்பிக்கப்பட்டன. விசடமாக இதற்கு முன்னைய வருடங்களிலும் அமைச்சரவை பெறுகைகள் குழு அவ்வாறே செயற்பட்டிருந்ததுடன், அதனைப் பின்பற்றி இந்த வருடமும் அவ்வாறே பணிகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>அவ்வாறே இறுதியாக நிலவிய லொத்தர் சீட்டுக்களின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தேவைப்பாட்டுக்கமைய மதிப்பிடப்பட்ட கிரயம் அமைச்சரவை பெறுகைகள் குழுவின் எல்லையை விஞ்சுகின்றமையால் அந்த பெறுகை நடவடிக்கைகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவின் மூலம் மேற்கொள்ளல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| **65** | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் **7.9.5, 7.9.6** ஆம் பிரிவுகளில் மற்றும் **2013/01** மற்றும் **2017/04** ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் தேசிய உரித்து எனும் பங்கு உரித்தில் **51** சதவீதத்தினை விஞ்சுதல் என வரைவிலக்கணம் தரப்பட்டுள்ள போது அதனை விஞ்சி வழங்குநருக்கு **100** சதவீதமும் உள்நாட்டு உரித்துடன் காணப்பட வேண்டும் எனும் நிபந்தனை **2020**ஆம் ஆண்டின் போது விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு **2008** இன் **08/2356/306/145/**TBR ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாக கொள்ளப்பட்டதாக பொது முகாமையாளரால் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், **2009** ஆம் | லொத்தர் சீட்டுக்களின் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைகள் வழிகாட்டிக்கமைய நிறைவேற்றுதல். | அந்த அமைச்சரவைத் தீர்மானம் **2017**ஆம் ஆண்டு முதல் கவனத்திற்கொள்ளப்பட்டு ள்ளது. அதற்கு காரணமாக அமைந்துள்ளதாவது **2016** மற்றும் **2017** ஆகிய வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுகைகளின் போது சில வெளிநாட்டுக் கம்பனிகள் இணைப்பு முயற்சிகளாக விலைக்கேள்வி சமர்ப்பித்து லொத்தர் சீட்க்களை அச்சிடுவதற்காக தொடர்புபட்டு பின்னர் பங்குடமை எனும் பெயரில் பேணப்பட்டு, வெள்நாட்டுக் கம்பனிகள் மாத்திரம் அனைத்து அச்சீட்டு பணிகளையும் மேவுகைப்படுத்தல் மற்றும் டீழுஐ வசதியின் அடிப்படையில் மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் மூலம் பொருத்தமற்ற முறையில் கிரய நலனை பெற்றுக்கொள்ள முயற்சி செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அந்த நிலைமையின் அடிப்படையில் இணைப்பு வியாபாரங்கள் பெயரளவில் செயற்படுகின்றமையால் | மேல் குறிப்பிட்டவாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு முதல் **2017**ஆம் ஆண்டு வரையிலும் பெறுகை ஆவணங்களை தயாரிக்கும் போது இந்த நிபந்தனை உள்ளடக்கப்படாமைக்கான காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை. | | வெளிநாட்டு வழங்குனரால் முழுமையான நடைமுறையையும் மேற்கொள்வதன் மூலம் இந்த நாட்டிலிருந்து வெளியே இடம்பெறும் பணப் பரிமாற்றங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு அமைச்சரவை பெறுகைகள் குழுவினால் அதற்காக பொருத்தமான நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம், இது தொடர்பில் சட்டரீதியான அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு விலைக்கேள்வியாளர் **100** சதவீத உரித்து காணப்பட வேண்டும் எனும் நிபந்தனை விலைக்கேள்வி ஆவணப்படுத்தப்பட்டது. அந்த திகதி முதல் அந்த விலைக்கேள்வி நிபந்தனைகள் வேறுபாடின்றி காணப்பட்டது. | |
| **66** | சபையினால் ரூபா **3,275,246** செலவினம் மேற்கொள்ளப்பட்டு Sweep App ஊடாக லொத்தர் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் Oracle நிறுவனத்தினால் அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் அந்த வசதியின் ஊடாக வழங்குவதற் இணங்கி இருக்கவில்லை. மேலும் மேலதிக அச்சீட்டு இயந்திரங்கள் எவையும் இல்லாதிருந்தமையை போன்று அச்சீட்டு வழுக்கலுடன் | அச்சீட்டாளரின் குறைபாடுகள் நிலவுகின்றமையால் போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்பட்டு சிறந்த அச்சீட்டாளரை தெரிவு செய்தல். | Sweep App ஊடாக லொத்தர் சீட்டுக்களை விநியோகிக்கும் போது அதற்காக பெற்றுக்கொள்ளப்படும் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை திட்டவட்டமாக குறிப்பிடப்படாமல் மற்றும் அந்த லொத்தர் சீட்டுக்களுக்காக மேலதிக காப்பீடொன்று பெற்றுக்கொள்ள வேண்டியமையால் அந்த காப்புறுதி கிரயம் உயர்வான பெறுமதியினை கொண்டிருந்தமையின் அடிப்படையில் Oracle International நிறுவனத்தினால் அந்த | Sweep App மூலம் லாட்டரி சீட்டுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அச்சிடப்பட்ட லாட்டரி சீட்டுகளை அந்த வசதி மூலம் வழங்க Oracle நிறுவனம் சம்மதிக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்ச்சியாக லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் காணப்படும் போதிலும் அந்த நிறுவனம் தகைமை பெற்ற நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | | லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>எவ்வாறான போதிலும் Oracle கம்பனி தற்போது சபையின் லொத்தர் சீட்டு விநியோகத்தராக உள்ளமை மற்றும் Oracle கம்பனி வெற்றிகரமான வழங்குநராக குறிப்பிட முடியாத அளவிற்கு வழங்கலில் நளிவுகள் இல்லாதிருந்தமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் Oracle கம்பனி வெற்றிகரமான வழங்கநராக இனங்காணப்பட்டுள்ளது. | |
| **67.** | சபையின் **2020** திசெம்பர் **31**ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி **342** ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி **316** ஆகும். அதன் பிரகாரம், **39** வெற்றிடங்கள் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | சேவையின் தேவைப்பாட்டுக்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் முழுமையாக 39 வெற்றிடங்கள் நிலவின. அவற்றுள் சில பதவிகள் நீண்ட கால தேவை இல்லை என தீர்மானிக்கப்பட்டு கீழிறக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் காரணமாக அது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. எனினும், இதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே, சில பதவிகளுக்காக (உதவிப் பொது முகாமையாளர் விற்பனை, தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் மற்றும் துறை சந்தைப்படுத்துநர்) ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் | 2022 பெப்ரவாரி 28 நிலவரப்படி, சபையில் மொத்தம் 39 வெற்றிடங்கள் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆட்சேர்ப்புகளும் எதிர்காலத்தில் இடம்பெறும். அதன் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் குறைவடையும். | |
| **68** | 2020ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை உரிய திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்திற்க சமர்ப்பிக்க வேண்டியமை. | இணங்குகின்றேன். | 2022 பெப்ரவாரி 28 வரை, 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. |

## 16. தேசிய லொத்தர் சபை

| **விளக்கம்** | **2018** | **2019** | **2020** |
|---|---|---|---|
| 1. அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

2. முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| (அ) | சபையினால் அதன் கணக்கு அலுவல்களை பேணிச் செல்வதற்காக **2003** ஆண்டின் போது அறிமுகப்படுத்தியிருந்த மையப்படுத்தப்பட்ட Sage ACCPAC எனும் கணினி மென்பொருள் **2016** ஆம் ஆண்டின் | கணினி மென்பொருள் முறைமை மற்றும் கணினி பாதுகாப்பு முறைமை என்பவற்றை நாளது வரை பராமரித்து மிகவும் நம்பிக்கையுடன் குறிக்கோள் சார் கருமங்களை நிறைவேற்றும் | மெய்யப்படுத்தப்பட்ட Sage ACCPAC கணினி மென்பொருளை பயன்படுத்தும் போது ஏற்பட்டிருந்த கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ஒன்று பிரதான நாட்குறிப்பில் மீதியாக இருந்ததனால் அவ்வாறான கொடுக்கல் | நிர்வாகத்தின் முடிவுகளின்படி, புதிய மென்பொருள் அல்லது தற்போதைய மென்பொருளின் சமீபத்திய மென்பொருள் அல்லது கொள்வனவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | போது பன்முகப்படுத்தப்பட்டிருந்தமையால் அந்த மென்பொருளில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் வரையறையாகியது. முன்னர் காணப்பட்ட மையப்படுத்தப்பட்ட முறைமையின் மூலம் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணப்பட்ட நம்பிக்கைத் தன்மையும் இந்த பன்முகப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் கேள்விக் குறியாக இருந்ததுடன், அடிக்கடி உரிய மாற்றங்கள் செய்யப்படுவதனால் ஏற்படக் கூடிய ஆபத்து நிலைமைகளின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளல் இந்த மென்பொருளை அறிமுகப்படுத்திய கம்பனியும் மறுத்துள்ளது. மேலும் மீளாய்வாண்டின் போது சபையினால் மென்பொருளின் பராமரிப்பிற்காக ரூபா **13,931,289** இற்கான தொகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த மென்பொருளுக்காக கணினி பாதுகாப்பு முறைமை ஒன்று பராமரித்திருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியளவில் Sage ACCPAC கணினி மென்பொருள் வீழ்ச்சி ஒன்றிற்கு ஆளாகி | முகமாக பேணப்பட்டு வர வேண்டிய தேவைப்பாடு. | வாங்கல்கள் மேற்கொள்ளல்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்காக முறைமைக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மெடியூலர்களை பிரதான நாட்குறிப்பில் இருந்து அகற்றப்பட்டு வெவ்வோறாக இரண்டு முறைமைகள் என தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக சில உள்ளகக் கட்டுப்பாட்டு குணாதிசயங்கள் அகன்றிருந்தமையால் சில வசதிகள் செயற்படாதிருந்தமையால் நடைமுறைச் சிக்கல் நிலைமைகளை தவிர்ந்து கொண்டு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த ERP முறைமை நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிக்கல்களை குறைத்துக் கொண்டு புதிய மென்பொருள் முறைமை ஒன்று அறிமுகப்படுத்துவதற்காக தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள Sage Accpac ERP முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகவர் நிலையம் மென்பொருளில் காணப்படும் தேவையான பாதுகாப்பு முறைமை உரிய அங்கீகரிக்கப்பட்ட | செய்வதற்கான பெறுகை செயல்முறை தொடங்கப்பட்டு, அதன்படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபையின் கணக்கு முறைமையின் செயற்பாடுகள் பாரிய ஆபத்து நிலைமை ஒன்றிற்கு ஆளாகியிருந்தது. | | நடைமுறைகளுக்கு வழங்கி பேணப்பட்டு வந்துள்ளது. பிரதான தர முறைமையில் ஏற்பட்டிருந்த சில வீழ்ச்சிகள் காரணமாக சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக முறைமை செயற்படாமை ஏற்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்வுகள் இந்த பராமரிப்பு உடன்படிக்கையுடன் தொடர்புடையவை அல்ல. | |
| (ஆ) | நியமத்தின் **06** பந்தியின் படி, ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன "உற்பத்தியின் போது அல்லது பண்டங்கள் சேவைகள் வழங்கும் போது பயன்படுத்துவற்காக வேறு தரப்பினருக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக அல்லது நிருவாக அலுவல்களுக்காக வைக்கப்பட்டுள்ள மற்றும் ஒரு காலப்பகுதியை விட கூடுதலான காலப்பகுதியில் பயன்படுத்துவற்காக எதிர்ப்பார்க்கும் தொட்டுணரக்கூடிய சொத்துக்கள்" என காட்டப்பட்டிருந்த போதிலும், சபையினால் அதற்கு முரணாக, ரூபா **21,954,215** தொகை கிரயத்திற்கான கணினி மென்பொருள், தொட்டுணர முடியாத சொத்துக்களின் கீழ் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தொட்டுணர முடியாத சொத்துக்களை கணக்கீடு செய்யும் தேவைப்பாடு. | சபைக்காகவே உற்பத்தி செய்யப்பட்ட மென்பொருள் மாத்திரம் தொட்டுணர முடியாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கின்ற மையால் தற்போது தொட்டுணரக்கூடிய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள தொட்டுணர முடியாத சொத்துக்கள் மற்றும் எதிர்காலத்தில் தனதாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனைத்து தொட்டுணர முடியாத சொத்துக்கள் இ.க.நி. இலக்கம் **16** இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு குறித்துக்கொண்டேன். | 2021 ஆம் ஆண்டு தொடர்பான இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில், இ.க.நி. இல. 16 கையாளப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டடிருந்தது. | | | |
| (இ) | வியாபார கடன்பட்டோரில் அடங்கியுள்ள நீதிமன்ற செயற்பாடுகள் காணப்பட்ட **05** விற்பனை முகவர்களிடம் மற்றும் லொத்தர் விற்பனையின் மூலம் ஏற்பட்டிருந்த கடன்பட்டோரின் கூட்டுத்தொகை ரூபா **11,948,108** தொகைக்கான மீதி தொடர்பாக நிறுவனத்தின் ஐயக் கடன் ஒதுக்கக் கொள்கைக்கு மாற்றமான முறையில் ஒட்டுமொத்த மீதித் தொகைக்காகவும் ஐயக்கடன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் , அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க ஐயக் கடன் ஒதுக்க வேண்டிய தேவைப்பாடு. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்காக குறித்துக் கொண்டேன். | மொத்த நிலுவையில் ஈட்டுக் கடன் ஒதுக்கப்படாது, இது 2020 நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள து. |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட சீட்டிலிழுப்புத் தவணைகளுக்காக பரிசுகளுக்காக ஒதுக்கப்பட்ட பின்னர் மீதியாக காணப்பட்ட ரூபா **261,676,181** இற்கான தொகையினை தடுத்து வைக்கப்பட்ட இலாபத்திற்கு வரவு | ஒதுக்க நிதியத்திற்கு மாற்றுதல் தடுத்து வைத்தல் இலாபத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | அனைத்து பரிசுத் தொகைகளும் கழிக்கப்பட்ட பின்னர் மீதித் தொகை பரிசு ஒதுக்கக் கணக்கு செலவு வைக்கப்படுகின்றது. இந்த நிதியம் பரிசுகளுக்காக நிதியம் பெற்றுக்கொள்வற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. பரிசுகளுக்காக உரிமை | 2021 நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது இது தொடர்புடைய மாற்றங்கள் செய்யப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைத்து, பரிசு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும், அதனை ஆண்டிற்கான செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான இலாபம் அப்பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றுத் தயாரிக்கும் போது வரிக்கு முன்னரான இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | | கோறப்படாத பரிசுகள் ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ள நிதி முரண் அல்லாத ரூபா **261,676,181** இற்கான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் பரிசுச் செலவு கணக்கின் கீழ் வரவு வைக்கப்பட்டது. காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது இப்பெறுமதி வரிக்கு முன்னரான இலாபத்துடன் சீராக்கல் செய்து காசு மூலம் ஏற்பட்ட முரண் என காட்டப்பட்டுள்ளது. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது விற்பனை முகவர்களினால் சபைக்கு விற்பனை செய்யப்படாதவை என உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக சபைக்கு ஒப்படைத்திருக்காத **701,206** தொகை டிக்கட்டுகளுக்கான தண்டப்பணம் உட்பட மீளாய்வாண்டு இறுதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா **11,429,657** இற்கான தொகை கணக்குகளில் பெறவேண்டிய மீதி ஒன்றென காட்டப்பட்டிருக்கவில்லை. | விற்பனை செய்யப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காத டிக்கெட் பத்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த பெறுமதி சபையின் முறைமையினூக உறுதிப்படுத்த முடியுமாக இருப்பதனால் அப்பெறுமதியை அறவிடப்பட வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட வேண்டிய தேவைப்பாடு. | அரச கணக்காய்வுப் பிரிவினரால் விற்பனை செய்யப்படாத லொத்தர்கள் தொடர்பான உரிய தகவல்கள் வழங்கிய பின்னர் இந்த லொத்தர் சீட்டுகளுக்காக பணம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | அரசின் கணக்காய்வு துறை இதுவரை உரிய தகவல்களை அளித்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கின் மீதி ரூபா **12,996,213** | காசோலைகள் மதிப்பளிக்கப்படாமை தொடர்பாக முறைப்பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டிய | இந்த மீதிகளில் **06** மாதங்களை மிகைத்துள்ள மீதி எதிர்காலத்தில் சபையின் வருமானத்திற்கு | இந்த இருப்புத்தொகையில் 06 மாதங்களுக்கும் மேலான நிலுவைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையாக இருந்தது. அம் மீதியுள் **2018** ஆண்டு முதல் பல்வேறு வழங்குனர்கள் மற்றும் கடன் கொடுத்தோர்களுக்கு **235** காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் அடங்கியிருந்தன. மீளாய்வாண்டு இறுதியளவிலும் குறிப்பிட்ட மீதிகள், இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு, கடன் கொடுத்தோர் மீதியுடன் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அம்மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவைப்பாடு. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் வருவாய்க் கணக்கில் எடுக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | ஒரு விற்பனை முகவருக்கு இன்வொயிஸ் செய்யப்பட்ட லொத்தர் டிக்கட்களுக்கான பணம் செலுத்தியிருக்காத போதிலும், **2020** செப்தம்பர் மாதம் முதல் **2020** திசெம்பர் வரையான காலப்பகுதியுள் ரூபா **4,687,855** இற்கான தொகையொன்று வைப்புச் செய்யப்பட்டது என, கணினிக்கு பிழையான தகவல்கள் உட்படுத்தி சபையில் இருந்து மோசடியாக டிக்கட் பத்தரங்கள் | மேற்கொள்ளப்பட்டிருந்த மோசடி தொடர்பான தரப்பினரை இனங்காண்பதற்கும் மற்றும் அம் மோசடி தொடர்பான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு. | இது தொடர்பாக நிறுவன ரீதியாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன், முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்வதற்காக விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு தற்போது ஒழுக்காற்று விசாரணை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேபோல் இது தொடர்பாக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன், அவ்விசாரணை அலுவல்களும் | சம்பவத்துடன் தொடர்புடைய ஊழியருக்கு எழுத்துப்பூர்வ குற்றப்பத்திரிகை அனுப்பப்பட்டுள்ளது, அவர் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். அதன்படி, இந்த சம்பவம் தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்காக புலனாய்வு அதிகாரி மற்றும் முறைப்பாடு கையாளும் அதிகாரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அவ்வாறு மோசடி செய்திருந்த தொகை தேறப்படாத வைப்புக்களுடன் உட்படுத்தியிருந்ததுடன் , அது தொடர்பாக வெளிப்படுத்தல்கள் ஏதும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருட இறுதியில் உள்ளவாறு அவ்வாறு மோசடி செய்யப்பட்டிருந்த தொகை தேறப்படாத வைப்புக்களில் உட்படுத்தியிருப்பதுடன், **2021** ஆண்டிற்கான கணக்குகளில் இது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு குறித்துக்கொண்டேன். | நியமிக்கப்பட்டுள்ள துடன், மேற்படி அதிகாரி குழு இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை 15.03.2022 அன்று ஆரம்பிக்க உள்ளது.<br><br>இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திற்கு ம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது டன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2021 நிதிநிலை அறிக்கைகளில் இது பற்றிய வெளிப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| (ஏ) | விற்பனை முகவர்களின் லொத்தர்கள் திருப்பி அனுப்புதல்கள் தொடர்பாக சபையின் சேகரிப்புக் கணக்கில் தற்போது செலவு வைக்கப்பட்டுள்ள தொகை மீண்டும் மக்கள் வங்கியின் சேகரிப்புக் கணக்கு ஊடாக சீராக்கல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த து. **2014** ஆண்டு முதல் **2020** ஜூன் வரை சேகரித்தல் கமிஷன் தொகை என வங்கியினால் ரூபா **18,220,437** இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட்டிருந்தது. தொகையை மீண்டும் அறவீடு செய்வதற்காக | கிடைக்க வேண்டிய பணம் தொடர்பாக இணக்கத்தினை பெற்று அறவீடு செய்வதற்கு மற்றும் உரியவாறு கணக்கீடு செய்யும் தேவைப்பாடு. | இது தொடர்பாக மக்கள் வங்கியுடன் பல கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் , இத்தொகையை மீண்டும் பெற்றுத் தருமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. தற்போது மக்கள் வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அது முடிவடைந்த பின்னர் பணத்தை சபைக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. **2021** ஆகஸ்ட் **31** திகதி வரை இதற்காக கால நீடிப்பு வழங்கும் படி வங்கியினால் கடிதமொன்று | இந்தத் தொகையை தேசிய லொத்தர் சபைக்கு செலுத்துவதற்கு மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மக்கள் வங்கியுடன் இணக்கமொன்று ஏற்படுத்தியிருந்த போதிலும் குறிப்பிட்ட பணத்தினை இதுவரை அறவீடு செய்திருக்கவில்லை. | | அனுப்பப்பட்டிருந்ததுடன், கொவிட் நிலைமையின் காரணமாக அதனை இதுவரை பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை என வங்கியினால் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி மக்கள் வங்கியின் இணக்கம் கிடைத்த பின்னர் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | 2020 திசெம்பர் 31 திகதி வரை உடனடி லொத்தர் பத்திரங்கள் வழங்கப்பட்ட விற்பனை முகவர்களின் 365 நாட்களை மிகைத்துள்ள கடன் பட்டோரின் பெறுமதி சுமார் ரூபா 50,744,968 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் வங்கி பிணைமுறி உடைய கடன் பட்டோரின் பெறுமதி ரூபா 8,839,957 தொகை காணப்பட்டது. கடன் பட்டோரின் காலம் ஒரு வருடத்தை மிகைத்திருந்த கடன் பட்டோரிடம் அவ் அறவிடப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது வங்கிப் பிணைமுறியை காசாக்குவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒரு வருட காலத்தை மிகைத்திருந்த அந்த கடன் பட்டோரிடம் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது வங்கிப் பிணைமுறியை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | 2020.11.30 திகதியில் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத்திருந்த கடன் கொடுப்பனவு தொடர்பாக தவணைகளாக செலுத்த வேண்டிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு எழுத்துமூலம் விற்பனை முகவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், 2020 திசெம்பர் மாதம் முதல் தவணைகளாக கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடனாளிகளிடம் இருந்து நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டு, வசூலிக்க முடியாத விற்பனை முகவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | 2020 திசெம்பர் 31 திகதி வரை 764 விற்பனை முகவர்களிடம் விற்பனை குடில்களுக்காக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதி ரூபா 5,612,225 தொகையாக இருந்தது. அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 2,454,363 தொகையாக காணப்பட்டதுடன், அம் மீதியினை அறவீடு செய்வதற்காக சபை இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையினால் கருத்துத் தெரிவுத்துள்ளவாறு தாமதம் இன்றி செயற்பட வேண்டிய தேவைப்பாடு. | இந்த அறவிடப்பட வேண்டிய மீதியில் ரூபா **4,244,451** தொகை முகவர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை ஊக்குவிப்புப் பணத்தில் இருந்து கழித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா **1,385,643** இற்கான மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. | வசூலிக்கப்பட வேண்டிய மதிப்புகளிலிருந்து செலுத்த வேண்டிய ஊக்குவிப்புத்தொகை மற்றும் பணப் பெறுவனவு தொடர்பான கட்டணங்கள் விதிக்கப்பட்ட பிறகு, ரூபா.513,957.92 மட்டுமே வசூலிக்கப்பட உள்ளது. கணக்காய்வின்படி, 5 ஆண்டுகளுக்கு மேல் பழமையான, அதாவது 2016 ஆம் ஆண்டுக்கு முன் வழங்கப்பட்ட விற்பனைச் சாவடிகளுக்கு நிலுவைத் தொகை இல்லை. மீதமுள்ள தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஓ) | 2016 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் இனங்காணப்படாத ரூபா 3,585,823 இற்கான செலவு மீதியொன்று 09 வருடங்களை விட மிகைத்துள்ள 04 கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,979,245 தொகையும், பதவியணியில் 14 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 169,311 இற்கான தொகையொன்றும் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டதுடன், அம் | நிதியமைச்சினால் வழங்கியிருந்த பரிந்துரை.∴ அங்கீகாரத்தின் படி தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | ரூபா.**3,585,823** இற்கான இனங்காணப்படாத செலவு மீதிக்காக நிதியமைச்சினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்படும். கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா **4,979,245** இற்கான மீதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு நிதியமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. பதவியணியினருக்கு செலுத்த வேண்டியிருந்த | அதற்கான திருத்தங்கள் தற்போது செய்யப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | ரூபா **169,311** இற்கான மீதியில் ரூபா **35,192** தொகை சிற்சில பரிந்துரைகளின் கீழ் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நிதியமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |
| (ஔ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பந்தி 10(5) மற்றும் 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்திய) அதிகார சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1963 இன் 11 இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 17(2) க்கு இணங்காது லாட்டரி வருவாயிலிருந்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களைக் கழித்து மீதியானது ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும் என்றாலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் தக்கவைக்கப்பட்ட இலாபத் தொகையான ரூபா.2,486,581,711 2020 டிசம்பர் 31 வரை ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப்படாமல் சபையால் தக்கவைக்கப்பட்டது. | காட்டப்பட்டுள்ள சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. | வருட இறுதியில் மீதியான இலாபம் என காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை முற்றாக நிதிப் பெறுமதி உள்ளதாக காணப்படாததுடன், அந்த திரண்ட இலாபத்தில் நிறுவனத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அடங்குகின்றன. அந்த முழுத் தொகையும் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படின் நிறுவனத்தின் அன்றாட அலுவல்களை நடாத்திச் செல்லும் போது பாரிய நிதி நெருக்கடி ஒன்றிற்கு முகங்கொடுக்க நேரிடும். அதனால் அந்த முழுத் தொகைத் தொகையையும் அரசாங்க திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு முடியாதுள்ளது. | இது தொடர்பாக நிதி அமைச்சகத்துக்கு 16.11.2021 திகதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது . (இணைப்பு 01) |
| (க) | 1997 இன் 35 இலக்க நிதி (திருத்திய) அதிகார சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவுகள் 14(2), 16(1) மற்றும் 16(4) பிரிவுக்கு இணங்காது | குறிப்பிடப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | சபையினால் நடாத்தப்படும் வெற்றித் தவணைகள் தொடர்பாக பணம் அவ்வவ் நிறுவனங்களுக்கு செலவு வைக்காமல் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதனால் | தற்போது, அரசு திறைசேரி ஒருங்கிணைந்த நிதியில் பணத்தை வைப்புச் செய்கின்றன, இவ்வாறு தனிப்பட்ட அமைச்சுக்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபையினால் அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளுக்காக லொத்தர்கள் நடாத்தும் போது உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், கொவிசெத, சுபிரி வாசனா, ஜாதிக சம்பத, நீரோகா மற்றும் செவன ஆகிய லொத்தர்களுக்காக அவ்வாறு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. அதேபோல், சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் **06** மாதங்களை மிகைத்துள்ள உரிமை கோறப்படாத அனைத்து பரிசுகளின் பெறுமதி திரட்டியநிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் **2019** ஜுலை **01** திகதி முதல் **2020** ஜுன் **30** திகதி வரை நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிலுப்புக்கள் தொடர்பாக உரிமை கோறப்படாத ரூபா **7,018,415** தொகைக்கான பணம் அல்லாத பண்ட பரிசுகள் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், | | உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.<br><br>பிரதான சீட்டிழுப்பு ஒன்றின் போது பணமாக வழங்கப்படும் பரிசு **06** மாதங்களை கடந்த பின்னர் பரிசு பெறுவோரினால் உரிமை கோறப்படாத போது அந்தத் தொகையை திறைசேரிக்கு செலவு வைக்கப்படுகின்றது. பரிசுப் பண்டங்கள் அல்லது லொத்தர் விற்பனையை அதிகரிப்பதற்காக வழங்கியிருந்த விஷேட பரிசுகள் **06** மாதங்கள் வரை வழங்கப்பட்டு அதன் பின்னர் உரிமை கோறப்படாவிடின் அவற்றை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொண்டு அடுத்த சீட்டிழுப்புத் தவணைகளின் போது அல்லது விஷேட பரிசுகளாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அல்லது அரசு திணைக்கங்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்தலாம். அதைக் கருத்தில் கொண்டு, தேசிய லொத்தர் சபைக்குச் சிறப்பு வாய்ந்த சட்டத்தை தயாரிப்பதில், சட்ட வரைவுத் திணைக்களம் உரிய தொடர்புடைய பிரிவுகளை திருத்தப் போகிறது.<br><br>1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டிலிருந்து திருத்தப்படவில்லை . இந்நிலையில், புதிய சட்டம் தொடர்பான வரைவுகள் சட்ட வரைவுத் திணைக்களத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>இது நேரடியாக தொடர்புடைய நிதிகளுக்கு வரவு வைக்கப்படவில்லை மற்றும் திறைசேரிக்கு மீள அனுப்பப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதற்காக திறைசேரியின் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (ச) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை பந்தி 15(2) மற்றும் (3) பிரிவுக்கு இணங்காது லொத்தர் பரிசு பெறுவோரின் பரிசுகளில் இருந்து மற்றும் நீரோகா லொத்தர் விற்பனை வருமானத்தில் இருந்து **0.005** சதவீதம் செலவு வைக்கப்பட்டு, **1998** ஆண்டின் போது சபையினால் உதவியற்றவர்களுக்கு உதவுவதற்காக நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது . மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த நிதியத்தில் ரூபா **22,484,736** இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், அவ்வாறு விஷேடத்துவ நிதியம் ஒன்று நடாத்துவதற்காக திறைசேரியின் முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் தேவைப்பாடு. | வர்த்தகத்தின் தன்மையின் அடிப்படையில் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை வலைபின்னல் மற்றும் சமூக கருணையுள்ள தேவைக்காக **1998** ஆண்டில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் நிறுவப்பட்டது. தேசிய லொத்தர் சபை அனைத்து தரத்திலுள்ள அங்கத்தவர்களும் ஏனைய அனைத்து லொத்தர்கள் தொடர்பாக வழங்கப்படும் ஊழியர் ஊக்குவிப்புக் பணம் இந்த லொத்தருக்காக கோறியிருக்கவில்லை. ஊழியர் ஊக்குவிப்பு என ஒதுக்கக் கூடியதாக இருந்த விற்பனை பெறுமதியில் **0.5%** இற்கான தொகை உதவியற்றவர்களுக்கு உதவும் நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்டது. | தேசிய லொத்தர் சபையின் லொத்தர் வருவாயில் ஒரு சதவீதம் ஊழியர் ஊக்குவிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நிரோகா லொத்தர் மூலம் ஒதுக்கப்படும் பணம் ஊழியர்களுக்கு வழங்கப்படாமல், நலிந்தோர் நிவாரண நிதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், முன்பு, லொத்தர் பரிசு வென்றவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நன்கொடைகளும் இந்த நிதிக்கு பங்களித்தன, தற்போது அந்த பரிசு வென்றவர்களிடமிருந்து எந்த பங்களிப்பும் இல்லை. இவ்வாறு, இயக்குநர்கள் சபையின் ஒப்புதலின் பேரில், ஏழை நிவாரண நிதியிலிருந்து ஆண்டுக்கு கிட்டத்தட்ட 2 மில்லியன் செலுத்தப்படுகின்றது. அதன் மூலம், பெறப்படும் கோரிக்கைகளை கணக்கில் எடுத்து, |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தேவையை உறுதி செய்த பின், நிதி பங்களிப்பை வழங்க ஏற்பாடு செய்வோம். |
| (ட) | 1993 ஜனவரி 21 திகதிய PE1/70/07/Vol1 இலக்கம் கொண்ட திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதத்திற்கு இணங்காது அரசின் சார்பாக நடாத்தப்படும் அனைத்து லொத்தர் வருமானங்களின் **16.5** சதவீதம் ஒன்று திரட்டிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட மெகா பவர் மற்றும் தன நிதானய ஆகிய **02** வகையான லொத்தர்களில் இருந்து குறிப்பிட்ட சதவீதத்தை விட குறைவான அதாவது **10** சதவீத பெறுமதி மாத்திரம் திரட்டிய நிதியத்திற்கு அனுப்பியிருந்தமையால், மேலும் திரைசேரிக்கு அனுப்பப்படாத பெறுமதி ரூபா **258,274,111** தொகையாக இருந்தது. | திறைசேரி கடிதத்தின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | இந்த கடிதத்தின் மூலம் அறிவுரை வழங்கும் போது மஹஜன சம்பத மற்றும் வாசனா சம்பத ஆகிய **02** லொத்தர்கள் மாத்திரம் காணப்பட்டன. திரட்டிய நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டிய **16.5** சதவீதம் அடிப்படை காரணமாக இருந்தமையால் இந்த இரண்டு லொத்தர்களும் தற்போது நட்டம் அடையும் நிலைமையை அடைந்துள்ளது. ஏனைய ஆரம்பிக்கப்பட்ட புதிய லொத்தர்களுக்கு வழங்கக்கூடிய பங்களிப்பு விற்பனை வருமானத்தின் சுமார் **10%** இருந்ததுடன், அதை விட கூடிய சதவீதம் வழங்கினால் அனைத்து லொத்தர்களும் நட்டமடையும் நிலைமை ஏற்படும். மேலும், அந்த லொத்தர்களை நடாத்திச் செல்வதற்கும் முடியாமல் போவதுடன், சபைக்கு கிடைக்கக் கூடிய வருமானத்தில் ஏனைய அனைத்து செலவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மஹஜன சம்பத மற்றும் வாசனா சம்பத லொத்தர் விற்பனை வருமானத்தில் **16.5 %** உம் ஏனைய அனைத்து லொத்தர்களின் வருமானத்தில் **10 %** உம் மாதாந்தம் | இது தொடர்பாக நிதி அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெற விரிவான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு 02) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திறைசேரிக்கு அனுப்பப்பட்டு தேசிய லொத்தர் சபை இலாபமுட்டும் நிறுவனம் ஒன்றாக நடாத்தப்படுவது கடின முயற்சியின் பிரதிபலனாகும். திறைசேரிக்கு விற்பனை வருமானத்தில் சதவீதமாக அனுப்பப்படும் தொகையினை அதிகரிக்க முடியாததுடன் **10 %** மாத்திரம் வழங்க முடியும் மேலும் இது தொடர்பாக நிதி அமைச்சையும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ப) | தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பு தவணைகளின் போது அகற்றப்பட்டிருந்த விற்பனை செய்யப்படாத லொத்தர்களை களஞ்சியப்படுத்துவதற்காக சபைக்கு சொந்தமான வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள காணியில் தற்காலிக கட்டடம் ஒன்று நிர்மாணிக்கக்கூடிய இயலுமை காணப்பட்ட போதிலும் அதற்காக சபையினால் **2015** ஆண்டு முதல் வ.்.ப கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் **3,136** சதுர அடி களஞ்சிய இட வசதி வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. பின்னர் அதனை **6,217** சதுர அடி வரை அதிகரித்து அதற்காக ஒரு வருடத்திற்கு ரூபா | சபையின் வளவொன்றில் முறைப்பிரகாரம் சிக்கன அடிப்படையில் களஞ்சிய வசதிகள் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றிருந்த ஏழு களஞ்சியங்களில் **2021.04.01** அளவில் சுமார் **05** களஞ்சியங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அப்புறப்படுத்தப்பட்ட லொத்தர்கள் மற்றும் ஏனைய கடதாசிகள் குறித்தொதுக்கிய பெறுகை நடைமுறையின் மூலம் அகற்றும் நிறுவனம் ஒன்றினைத் தெரிவு செய்து அவர்களுக்கு வழங்குவது நடைமுறை ஒன்று எனினும் பெறுகை செய்முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் அந்த கடதாசி இருப்புக்களை எடுத்துச் செல்லல் | 2021.12.31 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய வளாகம் திரும்பப் பெறப்பட்டது. அதன்படி, இந்த நிலை முடிவுக்கு வந்தது.<br><br>12.01.2021 முதல் 11.01.2022 வரை, காலாவதியான லொத்தர் சீட்டுகளை மீழ்சுழற்சி செய்வதற்காக ஒரு வழங்குநர் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br><br>2022 ஆம் ஆண்டிற்கான சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை செயல்முறை தொடங்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | **12,572,495** தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | இடைவெளியில் நிறுத்தப்படுகின்றது. அதன் பின்னர் மீண்டும் ஒருமுறை பெறுகை செய்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் பல சந்தர்ப்பங்களில் கேள்விதாரர்கள் முன் வராமை, ஆரம்பத்தில் முன்வந்து பின்னர் இரத்துச் செய்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் பெறுகை மூலம் கொள்வனவு செய்யக்கூடிய ஒருவரை தெரிவு செய்வதற்கு நீண்ட காலம் எடுத்தது. இதன் காரணமாக இந்த கடதாசி இருப்புக்களை களஞ்சியப்படுத்தி வைக்க நேரிட்டது. எனினும் **2020** ஆண்டின் போது புதிய கொள்வனவுதாரர்கள் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு அந்த இருப்புக்களை வழங்குவது உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நடைபெற்று வருகிறது. |
| (ர) | சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள காணியை வர்த்தக வளாகம் நிர்மாணிப்பதற்காக **2016** ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அதன் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் கட்டட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடு. | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கட்டட நிர்மாண வேலைகளுக்காக நடைமுறை வேலை (Working Progress) என ரூபா **27,003,862** மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவு கட்டடத்தின் வரைபு தயாரிப்பதற்காக உசாத்துணை நிறுவனம் ஒன்று நியமனம் செய்தல், அந்த வரைபுகளுக்கான அங்கீகாரம் பெறல், | நிதி அமைச்சு இது தொடர்பான கட்டுமானப் பெறுகையை நிறுத்தியதுடன், நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மின்சாரம் மற்றும் நீர் வழங்கும் இயலுமையை கண்டறிதல், அங்கீகரிக்கப்பட்ட உயரத்தின் அடிப்படையில் கட்டடத்தின் உயரம் என்பவற்றிற்காக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையிடமும் உரிய அங்கீகாரம், அனுமதிகள் மற்றும் அறிக்கைகள் பெற்றுக்கொள்ளல் என்பவற்றிற்காக செலவிடப்பட்டது. சபைக்கு சொந்தமான வொக்ஷோல் ஒழுங்கை காணியில் புதிய கட்டடம் ஒன்றை நிரமாணிப்பதற்காக இலக்கம் **16/2468/719/150** அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருந்ததுடன், அதன்படி தெரிவு செய்யப்பட்ட உசாத்துணை கம்பனியினூடாக கட்டடத்தின் வரைபு மட்ட வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு கட்டட நிர்மாண வேலைக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கட்டட அனுமதிப்பத்திரமும் பெறப்பட்டுள்ளது. இந்த செலவுகள் ஆரம்ப வரைபு கட்டத்திற்கான செலவுகளாக காணப்பட்டதுடன் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. மேற் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறிப்பிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் கிடைத்திருந்த அங்கீகாரத்தின் படி மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் அனைத்துச் செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | |
| (ய) | தேசிய லொத்தர் சபையினால் பிரதான அலுவலகம் நடாத்துவதற்காக வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டடத்திற்காக ஆரம்ப வைப்பு ஒன்று என ஒரு வருட வாடகை தொகை ரூபா **97,429,500** தொகை கட்டட உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், ஒரு வருடத்தின் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடத்தின் ஆரம்ப வைப்புத் தொகையில் **35** சதவீதம் மாதாந்த வாடகைக்கு பிரதியீடு செய்ய வேண்டும். அதன்படி உடன்படிக்கை கால முடிவில் கட்டட உரிமையாளரிடம் ரூபா **63,329,175** இற்கான வைப்புத் தொகை மீதியாக இருப்பதுடன், அந்தத் தொகை கட்டடத்தை ஒப்படைத்த பின்னர் **30** நாட்களுக்குள் கட்டட உரிமையாளரினால் சபைக்கு செலுத்த வேண்டியிருந்தது. | உடன்படிக்கை மேற்கொள்ளும் போது சபைக்கு அனுகூலமான நிபந்தனைகள் மீது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | தேசிய லொத்தர் சபையினால் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டடத்திற்காக ஒரு வருட முற்பணம் செலுத்துவதற்கும், அது உடன்படிக்கை மேற்கொண்ட இரண்டாம் வருடம் முதல் மாதாந்த தொகையில் **35%** அறவீடு செய்வதற்கும் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் மீது அமைச்சின் பெறுகைக்குழு அங்கீகரித்திருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் அமைச்சின் பெறுகை குழுவின் ஒப்புதலின்படி, வாடகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட அலுவலக கட்டிடத்திற்கு ஓராண்டு முன்பணத்தை வழங்கவும், மேலும் முன்பணத்தை இரண்டாம் ஆண்டு முதல் மாத வாடகையில் 35% ஆக குறைத்து மாத வாடகையை செலுத்தவும் பரிந்துரைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிடத்தின் ஒப்பந்த காலம் 2022 ஏப்ரல் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.<br><br>01.09.2020 அன்று முதல் நீட்டிப்பின் போது முந்தைய ஒப்பந்தத்தின்படி, மீதமுள்ள 65% வைப்புத்தொகை, |

| | | | | |
|---|---|---|---|---|
| | இந்த வைப்புத் தொகைக்கு மேலதிகமாக உடன்படிக்கையின் **8(ஆ)** பந்தியின் பிரகாரம் செலுத்தப்படாத கட்டட வாடகை, தொலைபேசி, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் ஆகியவற்றுக்காக மேலும் **03** மாத வாடகைக்கு சமமாக பாதுகாப்பு வைப்பொன்று என ரூபா **24,357,375** தொகை கட்டட உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | | அதாவது ரூபா.63,329,175 தற்போதும் கட்டிட உரிமையாளரின் பாதுகாப்பில் உள்ளது. 01.09.2020 முதல் தற்போது வரை, ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, வைப்பு செய்த தொகையில் இருந்து மாதாந்திர தவணை கழிக்கப்படவில்லை. பாதுகாப்பு வைப்புத்தொகை தற்போது கட்டிட உரிமையாளரின் வசம் உள்ளது மற்றும் அதன் மதிப்பு ரூபா.24,357,375 ஆகும். ஒப்பந்தத்தின்படி, கட்டிட உரிமையாளர் கட்டிடத்தை ஒப்படைத்த 30 நாட்களுக்குள் மேற்கண்ட வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகையை தேசிய லொத்தர் சபையிடம் கொடுக்க வேண்டும். |
| (ர) | கடந்த ஆண்டுகளின் போது மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா **7,392,287** இற்கான ஊழியர் பணிக்கொடை, சபைக்கு மீண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் என பொது முயற்சிகள் | உரிய பணத்தை அறவீடு செய்யப்பட வேண்டிய தேவைப்பாடு. | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா **7,392,287** தொகையான பணிக்கொடையினை அறிவீடு செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை | இது சம்பந்தமாக, 29.06.2018 அன்று நடைபெற்ற சபைக் கூட்டத்திற்கு ஒரு குழு அறிக்கை பரிந்துரைக்கப்பட்டது, அங்கு இயக்குநர்கள் குழு கணக்கு புத்தகங்களில் இருந்து உரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழுவினால் **2013** மார்ச் **21** திகதி கட்டளை இடப்பட்டிருந்த போதிலும், அத்தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது பெற வேண்டிய தொகை ஒன்று என நிதிக்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மிகையாக செலுத்தியிருந்த பணிக்கொடைத் தொகையை சபைக்கு மீளளிப்பு செய்யும் படி குறிப்பிட்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல் மாத்திரம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | பெறப்பட்டதுடன், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை வழங்குதல் பரிசொன்று வழங்குவதென கணிக்கப்படுவதனால் அவர்கள் மீளளிப்பு செய்யாவிடின் அத் தொகையினை அவர்களிடம் அறவீடு செய்ய முடியாது என அப்போதைய பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. | தொகையை பதிவழிக்க முடிவு செய்தது. இதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் செய்யப்படும். |
| (ள) | 2020 திசெம்பர் 31 திகதியளவில் சபையில் பதிவு செய்யப்பட்ட விற்பனை முகவர்களின் எண்ணிக்கை 114 தொகை எனினும், அவர்களில் 43 பேர்களிடம் மாத்திரம் வங்கிப் பிணைமுறி பெற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது. | வங்கி பிணைமுறி பெற்றிருக்காத விற்பனை முகவர்களிடம் வங்கி பிணைமுறி பெற்றுக்கொள்வதற்கு முறையான நடைமுறை ஒன்று செயற்படுத்த வேண்டிய தேவைப்பாடு. | சபையினால் மாவட்ட விற்பனை முகவராண்மை ஒன்று பெற்றுக்கொள்ளும் போது தற்போது காணப்படும் சட்டங்கள், விதிகளின் படி ஒரு மில்லியன் வங்கி பிணைமுறி வைத்தல் கட்டாயமாக இருந்த போதிலும் பழைய மாவட்ட முகவர்களுக்கு அது கட்டாயமானதாக காணப்படவில்லை எனினும் தற்போது கொள்கை ஒன்றாக **2018** ஆண்டு முதல் இதுவரை புதிய ஆள்சேர்ப்பு அனைத்திற்கும் ஒரு மில்லியன் பிணைமுறி பெறப்பட்டிருந்தது. | மேற்கூறிய கணக்காய்வு விசாரணையின்படி, 31 டிசம்பர் 2020 அன்று சபையில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் எண்ணிக்கை 114 ஆக இருந்தபோதிலும், அவர்களில் 43 பேர் மட்டுமே வங்கி உத்தரவாதத்தை வைத்திருந்தனர்.<br><br>தற்போது நடைமுறையில் உள்ள சட்ட விதிகளின்படி மாவட்ட விற்பனை பிரதிநிதி நியமனத்திற்கு ஒரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேலும் இதனை செயற்படுத்தும் நோக்கில் பழைய மாவட்ட விற்பனை முகவர்கள் மரணம் அடைந்த போது மிகவும் தந்திரோபமாக அவர்களின் மாவட்ட முகவராண்மையை சாட்டுதல் செய்யும் போது ரூபா ஒரு மில்லியன் வங்கிப் பிணைமுறி பெற்றுக்கொள்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், வங்கிப் பிணைமுறி வைப்பதற்கு முடியாதவர்களுக்கு சாட்டுதல் மேற்கொள்ளப்படவில்லை. வங்கி பிணைமுறி வைத்திருக்காத பழைய (செயற்படு) மாவட்ட விற்பனை முகவர் எதிர்காலத்தில் கட்டம் கட்டமாக இந்த பாய்ச்சலுடன் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | மில்லியன் வங்கி உத்தரவாதம் தேவை, பழைய மாவட்ட விற்பனை பிரதிநிதிகளுக்கு வங்கி உத்தரவாதம் வழங்கப்படவில்லை. இதுகுறித்து பழைய மாவட்ட வியாபாரிகளிடம் பலமுறை தெரிவித்தும், பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அந்த பழைய மாவட்ட விற்பனை பிரதிநிதிகள் மரணம் அடைந்தாலும், குடும்ப உறுப்பினருக்கு மாற்றும் போதும், துணை அலுவலகங்கள் கொடுக்கும் போதும் வங்கி உத்தரவாதம் பெறப்படுகிறது. |
| (வ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் மொத்த கடன் பட்டோரின் பெறுமதி ரூபா **137,704,393** தொகையாக இருந்ததுடன், அவற்றில் **22** சதவீதம் அதாவது ரூபா **29,771,317** இற்கான பெறுமதியுடைய கடன் பட்டோரிடம் மாத்திரம் வங்கி பிணைமுறி பெறப்பட்டுள்ளது. | வங்கிப் பிணைமுறி பெற்றிருக்காத விற்பனை முகவர்களிடம் வங்கி பிணைமுறி பெற்றுக்கொள்வதற்காக முறையான நடைமுறை ஒன்று செயற்படுத்த வேண்டிய தேவைப்பாடு. | ஆரம்பத்தில் விற்பனை முகவர்களிடம் வங்கி பிணைமுறி பெற்றிருக்காததுடன், தற்போது விற்பனை முகவர் நியமனம் வழங்கும் போது வங்கி பிணைமுறி பெற்றுக்கொள்ளல் கட்டாயமாகும். அநேகமான விற்பனை முகவர்களினால் டிக்கட்டுக்கள் பணத்திற்கு கொள்வனவு செய்வதுடன், விரைவாக விற்பனை இலக்கினை பூர்த்தி செய்தவற்காக விஷேட லொத்தர் சீட்டிழுப்பின் போது | புதிய முகவர்களை நியமிக்கும் போது, ஏஜென்சி மேனேஜ்மென்ட் துறை வங்கி உத்தரவாதத்தை எடுத்து, பழைய முகவர்களிடம் இருந்து வங்கி உத்தரவாதம் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வங்கி பிணைமுறியை கவனத்தில் எடுக்காமல் லொத்தர்கள் விற்பனை செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது செயற்படுத்தப்படுகின்றது. இந்த கடன் தொகை விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ழ) | 2020 ஆண்டின் போது அச்சிடப்பட்ட 10 வகையான லொத்தர்களில் ஆண்டின் போது 9 சதவீதம் முதல் 18 சதவீதம் வரையான வீச்சில் லொத்தர்கள் விற்பனை செய்யப்படாமல் மீதியாக காணப்பட்டது. சபையினால் கடைபிடிக்கப்படும் விநியோக செயற்பாடுகள் மற்றும் விற்பனைத் தேவையினை சரியாக எதிர்வு கூறாமை இந்த மிகைக்கு காரணமாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. இந்த 10 வகையான லொத்தர்கள் தொடர்பாக ஆண்டின் போது 116,045,964 எண்ணிக்கையான டிக்கட்டுக்கள் விற்பனை செய்யப்படாமல் மீதியாக காணப்பட்டது. வருடாந்தம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட அச்சுச் செலவு மாத்திரம் ரூபா 45,998,592 ஆக இருந்தது. மேலும், | விற்பனைத் தேவை மற்றும் விநியோக செயற்பாடு தொடர்பாக சரியான எதிர்வுகூறல் ஒன்று மேற்கொண்டு லொத்தர் டிக்கட்டுகள் அச்சிடுவதற்கு நடவடிக்கும் எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | இந்த நிலைமைக்கு பாதித்துள்ள முக்கிய காரணம் என மார்ச் மாதம் 10 திகதி முதல் படிப்படியாக அதிகரித்த கொவிட் பரவல் அதன் பின்னர் மார்ச் 20 திகதி முதல் மே 18 திகதி வரை போக்குவரத்து தடை என்பனவாகும். விஷேடமாக போக்குவரத்துத் தடை மே 18 முதல் அனேக பிரதேசங்களில் இருந்து அகற்றிய போதிலும் நுகர்வோரின் கேள்வி மற்றும் விற்பனைக்காக விற்பனை வலையமைப்பில் லொத்தர்கள் பெற்றுக்கொள்ளும் முறைகளில் நிரந்தர தளம்பல் நிலையொன்று ஏற்பட்டிருந்த காரணத்தினால் கட்டுப்படுத்த முடியாத முறையில் திருப்பி அனுப்புதல் மற்றும் களஞ்சியத்தில் மீதியான லொத்தர் இருப்பு அதிகரித்தது. மேலும், அரச அச்சுக் கூட்டுத்தாபனத்தில் பாரியளவில் அச்சுச் சிக்கல்கள் | கோவிட் பரவியதன் பின்னணியில், நடமாட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் ஏற்பட்ட கட்டுப்பாடற்ற நிலைமைகளின் தாக்கம் காரணமாக, 2020 ஆம் ஆண்டில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட காலத்தில் (விற்பனை செய்யப்படாத மீதமுள்ள லொத்தர் சீட்டுகள்) லொத்தர் சீட்டுகளின் அளவு திரும்பி வந்து சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுகளின் தொகையின் சதவீதமாக) 11.10% அளவுக்கு உயர்வு ஏற்பட்டது. இந்த வகையான பின்னணியில், |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டு இறுதியளவில் முகவர்களுக்கு விநியோகிக்காமல், களஞ்சியத்தில் மீதியாக இருந்த லொத்தர்களின் எண்ணிகை 23,257,800 தொகையாக காணப்பட்டதுடன், அந்த லொத்தர்களில் நேர் அச்சுச் செலவு ரூபா 8,710,976 ஆகும். | | காணப்பட்டமை மற்றும் லொத்தர்கள் தாமதமாக கிடைத்தல் ஆகிய காரணங்களால் மீதியான எண்ணிக்கை அதிகரித்தல் ஏற்பட்டிருந்தது. | கோவிட் பரவல் மற்றும் புழக்கக் கட்டுப்பாடுகளின் கீழ் விற்பனையை அதிகரித்ததன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் மீதமுள்ள விற்கப்படாத லொத்தர் சீட்டுகளின் அளவு 2020 உடன் ஒப்பிடும்போது 14.39% ஆக அதிகரித்துள்ளது<br><br>ஆனால், இன்றும் நாட்டில் டாலர் தட்டுப்பாடு, அச்சடிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம், பெறுகை நடைமுறைகள் மூலம் அச்சகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் போன்றவற்றால், லொத்தர் சீட்டுகள் தட்டுப்பாடின்றி அச்சிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இத்தகைய கட்டுப்பாடுகளின் கீழ் கூட, விற்பனையை அதிகரிக்கவும், வருமானம் மற்றும் சரக்குகளை வரம்பிடவும் ஆர்டர்கள் செய்யப்படுகின்றன. மேலும், அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டால் அந்தந்த அச்சகங்களில் இருந்து அபராதம் வசூலிக்கப்படும். இத்தகைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கட்டுப்பாடுகளின் கீழ் கூட, அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கையில், விற்பனையாகாத லொத்தர் சீட்டுகளின் மொத்த அளவு 14.19% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இது சாத்தியமாகும் என்று நம்புவோம். |
| (ல) | சபையின் வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள காணியில் லொத்தர் சபையின் பிரதான அலுவலகம் நிர்மாணிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த கட்டட நிர்மாண ஒதுக்க நிதியில் இருந்து ரூபா **550** மில்லியன் தொகை **2016** ஆண்டின் போது திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் திறைசேரியில் இருந்து கட்டட ஒதுக்க நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையொன்றென காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திறைசேரியின் **2020** திசெம்பர் **31** திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரச நிதிக்கூற்றுக்களில், தேசிய லொத்தர் | திறைசேரியில் இருந்து மீதியை உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக்கொண்டு அதன்படி முறைப்பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | இந்தத் தொகை சபைக்கு செலுத்தும் அடிப்படையில் திரட்டிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக அப்போதிருந்த தலைவரினால் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு **2016.09.19** திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. | - அவ்வாரே - |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபைக்கு செலுத்த வேண்டிய அவ்வாறான மீதியொன்று உட்படுத்தியிருக்கவில் லை. | | | |
| (ங) | **05** கடன் பட்டோரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா **7,169,678** தொகை கடன் பெறுமதிக்காக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் விற்பனை முகவர்களுடன் மேற்கொண்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பேணப்பட்டிருந்த அறிக்கைகளில் பூரணத்துவம் இன்மை காரணமாக நீதிமன்ற செயற்பாடுகளின் மூலம் கடன் அறவீடு செய்வதில் நிச்சியமற்ற தன்மை ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | சட்ட ஆலோசனை பெற்று அதன்படி அறவீடு செய்யும் இயலுமையை தீர்மானித்து முறைப்பிரகாரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | இந்த கடன் பட்டோருக்காக நீதிமன்ற செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படும் வரை கடன் அறவீடு செய்யும் ஆபத்து நிலை தொடர்பாக அறுதியாக கூற முடியாதுள்ளது. | A137 - திருமதி ஏ.எச்.வீரகோன் அவர்களின் செவன கடன் மீதி 376,691.50 ஆகவும், AD - 06 - திரு. எட்மண் அவர்களின் கடன் மீதியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>திரு.பெலிகொல்ல தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ஞ) | மீளாய்வாண்டின் மொத்த செலவுகளில் **53** சதவீதம் எனப்படும் ரூபா **893,002,443** தொகை விற்பனை, விநியோகச் செலவாக காணப்பட்டதுடன், அவற்றில் **81** சதவீதத்ததை அண்மித்த பெறுமதி விற்பனை மற்றும் விற்பனை மேம்பாட்டுச் செலவுகளாகும். அதேபோல் விற்பனை மற்றும் மேம்பாட்டுச் செலவு ஒட்டுமொத்த செலவுகளில் **43** | விற்பனை வருமானம் மற்றும் செலவு தொடர்பாக முறையான பகுப்பாய்வு மேற்கொண்டு பொருளாதார ரீதியான மிகவும் அனுகூலமான முறையில் விற்பனை மேம்பாட்டுச் செலவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | இலங்கை லொத்தர் வியாபாரத்தில் ஒட்டுமொத்தமாக தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய இரண்டு அரச தொழில் முயற்சிகள் மாத்திரம் சந்தையில் தொழிற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. லொத்தர் என்பது நுகர்வோருக்கு கட்டாய பண்டமொன்றல்ல. லொத்தர் விற்பனையில் விளம்பரங்களை பயன்படுத்தி எதிர்கால் அதிட்ஷ | பாதீட்டு ஆவணத்தில் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் செலவினத்திற்கு உட்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்குள் பராமரிக்கப்பட்டு, அதிகாரப்பூர்வ முடிவுகளை வெளியிடுவதற்கான செலவு 2021 ஆம் ஆண்டில் குறைக்கப்பட்டுள்ள து. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீத பெறுமதியை கொண்டிருந்தது. | | சந்தர்ப்பங்களை நுகர்வோரிடம் ஏற்படுத்தி நிரந்தமாக நுகர்வோரை தூண்டுல் ஏற்படுத்த வேண்டும். அதற்காக கணிசமான கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நிலைமை உலக லொத்தர் தொழிலில் இனங்காணக்கூடியதாக உள்ளது. ஆரம்ப மட்ட நுகர்வோரினை முனைப்பினை ஏற்படுத்துவதற்காக விற்பனை உபாயம் என நுகர்வோர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்வதற்கு நேரிடுகின்றதுடன், அதற்காக சில மேம்படுத்தும் பண்டங்கள் கொள்வனவு செய்தவற்காக செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளது. விற்பனை வலையமைப்பில் அங்கத்துவர்களின் முனைப்பினை ஏற்படுத்துவதற்காக மேற்கூறிய முறையில் செயற்பட வேண்டியிருப்பதுடன், அதற்கு மேலதிகமாக பொதுவான விற்பனை கொமிஷ் தொகை என மற்றும் சில சந்தர்ப்பங்களில் விஷேட விற்பனை கொமிஷ் என கணிசமான அளவு தொகையொன்று செலவிடப்படுகின்றது. இந்த அனைத்து செலவுகளும் சந்தையில் யதார்த்தமாக இருப்பதுடன் எவ்வாறான | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சந்தையிலும் இந்த செலவுகளை தவிர்க்க முடியாதுள்ளது. இந்த செலவுகளை குறைப்பதன் மூலம் குறுகிய கால இலாபத்தை அதிகரிக்கக்கூடியதாக இருந்த போதிலும் நீண்டகால அடிப்படையில் நடைபெற்ற சந்தை வீழ்ச்சியடைதல் கட்டாயமாகும். விநியோகச் செலவுகளை குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் , விநியோக சேவை ஒன்றின் மூலம் நாடலாவிய லொத்தர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது அதன் மூலம் விநியோகச் செலவில் கணிசமான அளவினை குறைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது . லொத்தர் சபையினால் மேற்கொள்ளப்படும் விளம்பரம் மற்றும் மேம்படுத்தல் செலவுகள் தேவை தொடர்பாக அரச முயற்சிகள் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், **2011** பெப்ரவரி **11** திகதிய **57** இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் லொத்தர் வருமானத்தின் **10 %** வரை செலவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் ஜனாதிபதி செயலாளரின் **2020** திசெம்பர் **10** திகதிய PS/GPA/Circular/36/20 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 20 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலமும் விளம்பரம் மற்றும் மேம்பாட்டுச் செலவுகளுக்காக முன்னைய ஆண்டின் வருமானத்தில் **10%** வரையரையை மிகைக்காமல் செலவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த லொத்தர் தொடர்பான விளம்பரத் தேவை விஷேட தன்மையை சிறந்த முறையில் அறிந்து மேற்கொள்ளப்பட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தமது இலாபத்தை உச்சமட்டமாக அதிகரிக்கும் குறிக்கோளுடன் சபை பொதுவாக தமது வருமானத்தில் **5%** அளவொன்று மாத்திரம் வருடாந்த விளம்பர மற்றும் மேம்படுத்தல் செலவுக்காக ஆக்கபூர்வமாக செலவிடப்படுகின்றது. | |
| (ந) | சபையினால் பரிசுகள் என வழங்குவதற்காக கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா **8,764,996** தொகை பெறுமதியான மோட்டார் கார், சைக்கிள்கள் உட்பட **06** வாகனங்கள் மற்றும் ஏனைய பரிசுப் பண்டங்கள் **05, 04** மாதங்கள் முதல் **05** வருடங்கள் வரையான காலம் அந்த தேவைகளுக்காக பயன்படுத்தாமல் | விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள் காலவதியாவதற்கு.׃. அழிவடைய முன்னர் பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு | விஷேட சீட்டிழுப்பு தவணைகளின் போது மேலதிக பரிசுகளாக வழங்குவதற்கு தேவையான பண்டங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. சில சீட்டிழுப்புத் தவணைகளில் மேலதிக பரிசு வெற்றியாளர்கள் இருப்பதுடன், வெற்றியாளர்கள் முன்வராமை மீது அந்த மேலதிக பரிசுகளுக்காக | வெற்றியாளர்களுக்கு வழங்கப்படாததால் 6 வாகனங்கள் மற்றும் 5 பரிசுப் பொருட்கள் இன்னும் மீதம் உள்ளதாக கணக்காய்வில் தெரியவந்துள்ளது. அந்த 11 வாகனங்கள் மற்றும் பரிசுப் பொருட்களில், பின்வரும் பரிசுப் பொருட்கள் ஏற்கனவே சிறப்பு |

<table>
<tr>
<td></td>
<td>விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டதுடன், அவற்றில் சில பரிசுப் பொருட்களின் உத்தரவாத காலமும் கடந்திருந்தது.</td>
<td></td>
<td>கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் களஞ்சியத்தில் மீதியாக காணப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட காலப் பகுதியில் வெற்றியாளர்கள் முன்வராத பண்டங்கள் எதிர்காலத்தில் லொத்தர் பரிசுகளுக்காக பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும், இவ்வாறாக மீதியாகும் பரிசுப் பொருட்கள் முன் வரக்கூடிய தவணைகளில் பயன்படுத்தப்பட்ட போதிலும் குறிப்பிட்ட லொத்தரின் மூலம் இலக்காகிய நுகர்வோர் தொகை, குறிப்பிட்ட சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட காலம் மற்றும் அந்த பரிசுப் பொருட்களின் கிரயம் ஆகிய காரணிகளின் காரணமாக மீதியாகும் பரிசுப் பொருட்கள் குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததுடன், வேறொரு விஷேட தவணைக்காக பயன்படுத்துதல் தொடர்பாக செயற்பாட்டுச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வெற்றியாளர்களுக்கு முன்வருவதற்காக வழங்கியுள்ள 06 மாத காலத்தை மிகைக்கும் திகதியும் அந்த பரிசுப் பண்டம் விஷேட</td>
<td>சீட்டிளுப்பு பருவங்களின் வெற்றியாளர்களுக்குப் பரிசாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
<table>
<tr><td>பொருள்</td><td>அளவு</td></tr>
<tr><td>டிராக்டர்</td><td>02</td></tr>
<tr><td>வீகோ மோட்டார் வண்டி</td><td>01</td></tr>
<tr><td>டிவிஎஸ் மோட்டார் சைக்கிள் கள்</td><td>01</td></tr>
<tr><td>கையடக்க தொலைபேசிகள் (ரூபா. 108,000)</td><td>01</td></tr>
<tr><td>Apple I தொலைபேசி (ரூபா. 165,599)</td><td>01</td></tr>
</table>
இது தவிர நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நிறுவனத்தில் மற்றொரு வைகோ கார் (விகோ 1000சிசி) தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, தணிக்கையில் காட்டப்பட்ட</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சீட்டிழுப்பு தவணைகளுக்காக மீண்டும் பயன்படுத்தும் திகதிக்கும் இடைப்பட்ட கால வீச்சொன்று காணப்படுவதுடன் அது வரை அவ்வாறான பரிசுப் பொருட்கள் களஞ்சியத்தில் மீதியாக காணப்படுகின்றது. | மீதமுள்ள வாகனங்கள் மற்றும் பிற பரிசுப் பொருட்களில், பரிசாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது டிஸ்கவரி மோட்டார் சைக்கிள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி மட்டுமே. வரும் சிறப்பு சீசன்களுக்கு விரைவில் பொருட்களை பயன்படுத்தவும், மீதமுள்ள இருப்புகளை பணியாளர் நல சங்கத்திடம் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ன) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி சபையின் சந்தைப் படுத்தல் ∴ மேம்படுத்தல் உத்தியோத்தர் என பதவியொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்த பதவிக்காக தகைமைகள் நிச்சயிக்கப்படாமல் முகாமைத்துவ உதவியாளர் பதவி ஒன்றினை வகிக்கும் ஒருவர் **2017** ஆகஸ்ட் **08** திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் இந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் **03** சம்பள | திறைசேரிச் சுற்றறிக்கையின் அறிவுரையின் படி பதவியணி ஆட்சேர்ப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடு. | ஓய்வு பெறுவதற்கு அண்மித்திருந்த பழைய ஊழியர்களை முனைப்பினை ஏற்படுத்தும் குறிக்கோள் மற்றும் நிறுவனத்தின் கடமைத் தேவைகள் மீது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது தற்காலிகமாக பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. | இந்த ஊழியர் 20.01.2020 அன்று ராஜினாமா செய்தார், தற்போது உயிருடன் இல்லை. அதன்படி, இந்த நிலையும் முடிவுக்கு வந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகரிப்புக்களை பிற்போடும் படி கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் அவ்வுத்தியோகத்தர் **2020** [னவரி மாதம் ஓய்வுபெறும் வரை புதிய பதவியின் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | | | |
| (ம) | சபையினால் **2019** ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை **2021** ஆகஸ்ட் **31** திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | வருடாந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளவாறு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்காக **2021.06.22** திகதி நிதியமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இது 02.12.2021 அன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. |

## 17. நெல் சந்தைப்படுத்தல் சபை

1. நிறுவனத்தின் பெயர் :- நெல் சந்தைப்படுத்தல் சபை

| விவரம் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| ----------- | ------- | -------- | -------- |
| 2.கணக்காய்வு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | நிதி அறிக்கை கிடைக்கப் பெறவில்லை |

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| | **2018** | | | |
| (அ) | 2016 செப்டம்பர் 19 ஆம் திகதியிடப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 1/2016(i) அன் படி தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்கான ஒரு வாகனத்திற்கான அதிகபட்ச மாத வாடகை ரூபா 200,000 என்றாலும், அதிகபட்ச மாத வாடகை எல்லையை மீறி ரூபா 848,800 வழங்கப்பட்டுள்ளது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேணடும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் PED1/2015 தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதுமானதாக இல்லாதபோது, இயக்குநர்கள் குழுவின் பரிந்துரையுடன் வரிசை அமைச்சின் செயலாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும். செயலாளரின் ஒப்புதல் பெறாமல் ரூபா.482,285 செலுத்தப்பட்டது. | நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேணடும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |
| (இ) | 2015 ஆம் ஆண்டிற்கான சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாக விவாசாய, கால்நடைகள், | உடனடியாக பொருத்தமான முறைமைகளை நிறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வளங்கள் அபிவிருத்தி ,நீர்வடிகால் மற்றும் மீன்பிடி மற்றும் நீர்வளங்கல் அபிவிருத்தி அமைச்சரினால் 2019 யூலை 05 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை MF/PE/CM/2019/145 இலக்க கடிதத்தில் மற்றும் 2019 ஆகஸ்ட் 05 ஆம் திகதியில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க முறையான மொத்த கட்டுப்பாட்டு அமைப்பு விரைவாக நிர்மாணிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்த போதிலும் சபையினால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மொத்த கட்டுப்பாட்டு அமைப்பின் நடவடிக்கை நாளாதுவரை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 நவம்பர் 15 ஆம் திகதி வரை நிர்மாணிப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ரூபா 18,328,337ஆக மற்றும் VPN ( Vertical Private Networks) ஆன கொடுப்பனவுகள் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டிற்கான கூட்டு மொத்த ரூபா 4,792,595 செலவிடப்பட்டிருந்தன. 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதியில் சபையினால் மீண்டும் கணணிமயப்படுத்தப்பட்ட மொத்த கட்டுப்பாட்டு அமைப்பினை நிர்மாணிப்பது தொடர்பான இலங்கை அறக்கட்டளை நிலையத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டதுடன் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முற்பணமாக ரூபா 360,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இதன் அடிப்படையில் 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை செலவு செய்யப்பட்ட ரூபா 23,120,932 சிக்கனமற்ற கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது. | | | |
| | **2019** | | | |
| (ஈ) | நீண்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட தொங்கல் கணக்கின் ரூபா 3,049,830,238 மீதி மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்ட ரூபா 2,234,953 ஒன்லைன் இருப்புக்கள் என்பவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சரியாக கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |
| (உ) | பனை அபிவிருத்திச் சபையிடமிருந்தான ரூபா 700,000 மற்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்திலிருந்தான ரூபா 10,591,838 மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்திடமிருந்தான ரூபா 77,526,708 தொகைகள் செலுத்த வேண்டியவைகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்கள் அத்தகைய செலுத்த வேண்டியவைகள் எவையும் காணப்படவில்லை என எழுத்துமூலம் அறிவித்திருந்தன. எனினும் இவை நிதி நிலைமை கூற்றில் கடன்பட்டோராக குறிப்பிடப்பட்டிருந்தன. | வருடாந்த கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல் பெறப்பட்டு கணக்குகளை இணக்கம் செய்வதன் மூலம் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2019 மற்றும் அதற்கு முன்னைய மூன்று ஆண்டுகளின் தேறிய சொத்துகளின் பெறுமதியை கருத்தில் கொள்ளும் போது ரூபா 12,060,577,822 ஆக இருந்த 2016 ஆம் ஆண்டின் எதிர்மறை பெறுமதி மீளாய்வாண்டில் ரூபா 14,179,929,345 எதிர்மறை பெறுமதி வரை அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 3,548,270,058 எதிர்மறை பெறுமதியொன்றாக காணப்பட்டது. இது சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை மோசமாக பாதித்திருந்ததால் அரசாங்கத்தின் நிதி உதவியின்றி இந்த பொறுப்புகளை தீர்ப்பதற்கு சபை நிதி ரீதியாக பலப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை நோக்கி கவனம் செலுத்தப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |
| (எ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,675,916,872 கடன்பட்டோர் மீதி 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,917,478,534, 03 மற்றும் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 28,837,545 மற்றும் 01 மற்றும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 729,600,799 ஆன மீதிகளை உள்ளடக்கியிருந்தது. | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |
| (ஏ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 7,091,809,148 கடன்கொடுத்தோர் மீதி 04 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 6,717,087,405, 03 மற்றும் 04 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா | பழைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 6,581,534, 01 மற்றும் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 368,140,210 மற்றும் 01 ஆண்டிற்கு உட்பட்ட ரூபா 71,092,220 ஆன மீதிகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், இந்த மீதிகள் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,684,554,538 மீதியை உள்ளடக்கியிருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த அறிக்கைகள் உரிய காலப்பகுதியினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | இறுதியாக 2018 வருடாந்தர அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. |
| (ஒ) | சபையால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 4,132,994 கிலோகிராம் நெல் இருப்புப் பற்றாக்குறையில் 3,597,203 கிலோகிராம் நெல் இயற்கைச் சேதங்களுக்காக பதிவழிக்கப்பட்ட பின்னர் ரூபா 13,074,157 பெறுமதியான இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்பான 54 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க | இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்பான நபர்களிடமிருந்து உரிய பெறுமதிகளை அறவீடு செய்வதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டும். குறித்த மீதியில், ரூபா 6,106,113 தொகை சபையினால் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,968,078 பற்றாக்குறை பெறுமதி 2021 சனவரி 25 வரையிலும் 17 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ் உத்தியோகத்தர்களில் இருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து ரூபா 4,245,954 கூட்டுமொத்தமான பற்றாக்குறைகளை அறவீடு செய்வதற்கு சபையால் நாளதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஓ) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் போது 16,068,715 கிலோகிராம் நெல் பற்றாக்குறை இனங்காணப்பட்டதுடன் குறித்த பற்றாக்குறை தொடர்பில் 125 உத்தியோகத்தர்கள் இருப்புப் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பு மெய்மையாய்வை மேற்கொண்ட பின்னர் கணக்காய்வு திகதி வரையிலும் ஏறக்குறைய 02½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் சபை உரிய பற்றாக்குறைகளை அறவீடு செய்திருக்கவில்லை. | உரிய பற்றாக்குறையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தற்போது வரை நிலைமை சீரடையவில்லை. |

## 18. இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

2. நிதி அறிக்கை - 2018 வருடத்தின் நிதி அறிக்கை 2021 ஜூலை 28 அன்று சமர்பிக்கப்பட்டது. 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான நிதி அறிக்கைகள் இது வரை சமர்பிக்கப்படவில்லை.

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கையின் 2(இ) பந்தியின் படி கட்டளைகளுடன் இணைத்து காசோலைகளால் முற்பணங்கள் வழங்கப்பட்டவுடன், அத்தகைய முற்பணங்கள் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். இருப்பி னும், 1999 முதல் 2019 வரையிலான காலப்பகுதிக்கரிய மொத்தம் ரூபா 175,470,650 தொகையான முற்பணங்கள் கூட்டுத்தாபனத்தில் தீர்க்கப்படா மல் இருந்தன. மேலும், கூட்டுத் தாபனத்தின் ஒரு செயற்திட்டமாக அதன் கீழ் செயற்படுகின்ற தேசிய உபகரண ங்கள் மற்றும் இயந்திர நிறுவனத்திற்குரிய (நெமோ) 2016 முதல் 2019 வரையிலான ரூபா 6,445,194 கட்டளைகளுடன் இணைந்த காசோலை முற்பண ங்கள் தீர்க்கப்படாமல் உள்ளன. | நிலுவையில் உள்ள மீதிகளை எவ்வித தாமத மும் இல்லாமல் அறவிடுதல் வேண்டுமென்பதுடன் இது தொடர் பாக கூட்டுத்தா பனம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் | சுற்றறிக்கையின் படி பொருத்த மான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி சேவைகள் அல்லது பொருட் களை வழங்கவதற்காக காசு முற்பணங்கள் வழங்கப்படுமா யின், அத்தகைய முற்பணங்கள் 14 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். இருப்பினும், ரூபா 22,016,960 தொகையான அவ்வா றான முற்பணங்கள் 2019 திசெம்பர் இறுதி வரையிலும் தீர்க்கப்படாமல் உள்ளன. மேலும், கூட்டுத்தாபனத்தின் ஒரு செயற்திட்டமாக அதன் கீழ் செயற்படுகின்ற தேசிய உபகர ணங்கள் மற்றும் இயந்திர நிறுவனத்திற்குரிய (நெமோ) 2017 மற்றும் 2018 இற்கான ரூபா 9,711,161 காசு முற்பணங்களும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாமல் உள்ளன. | சுற்றறிக்கையின் படி தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் படி பணிபுரிய ஒப்புக் கொள்ளப்பட்டு புதிய சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (இ) | ஸ்ரீ ஜயவர்தனபுர தாதியர் பீட கட்டிட நிர்மாணம் மேற்குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 அக்டோபர் 04 இல் அமைச்சரவையின் ஒப்புதலுடன் ரூபா 7,171.88 மில்லியன் (பெ.சே.வரி இல்லாமல்) ஒப்பந்த தொகையில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2020 பெப்ரவரி 22 அன்று அல்லது அதற்கு முன்னர் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், டிசம்பர் **31, 2021** நிலவரப்படி, ஒப்பந்தத்தின் முன்னேற்றம் **8.17** | ஒப்பந்தம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே வாடிக்கையாளர் தரப்பிலிருந்து பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது முன்னிலையில் இருந்ததால் முன்னேற்றம் குறைந்துள்ளது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதமாக இருந்தது. | | | |
| (ஈ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, நிர்மாணங்கள் பிரிவு, நிர்மாணக் கூறுகள் பிரிவு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு, விசேட செயற்பாட்டுப் பிரிவு மற்றும் மதியுரைப் பிரிவு என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா.51,243,748, ரூபா.25,628,858, ரூபா.305,927,727, மற்றும் ரூபா.222,091,810 தொகையான எதிர்மறை காசுப் பாய்ச்சலைக் காண்பித்திருந்தன. | கூட்டுத்தாபனத்தில் உரிய தொழிற்படு மூலதன முகா மைத்துவம் மற்றும் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவ த்தினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிறுவனத்தின் நிதி நிலைமை மோசமான நிலையில் உள்ளதாலும், வங்கிகள் கடன் வாங்கி நிதியளிப்பதாலும் இது நடந்துள்ளது. | இப்போதும், சம்பந்தப்பட்ட துறைகளில் எதிர்மறை காசுப்பாய்ச்சல் காணப்பட்டது. |
| (உ) | பெறுமதிசேர் வரி (VAT), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) மற்றும் பொருளாதாரச் சேவைகள் கட்டணம் (ESC) தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவி ல்லை. ஆகையால், அந்த வரிகளின் உண்மையான செலுத்தப்பட வேண்டிய மீதிகளை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பிட முடியவில்லை. | செலுத்தப்பட வேண் டிய மீதிகளை திருப்தி கரமாக மெய்மையா ய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபர மான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஊ) | 2002 முதல் 2011 காலப்பகுதியிலிருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 230.8 மில்லியன் தொகை தேசிய இயந்திரவியல் நிறுவனத்தால் செலுத்தவில்லை | நீண்டகாலமாக நிலு வையிலுள்ள சாத்திய மான அனைத்து மீதி களையும் தீர்ப்பதற்கு தாமதமின்றி நடவடி க்கை எடுத்தல் வேண் டும். | எதிர்காலத்தில் பணம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | நெமோ இன் அங்கீகரித்த பதவியணி 344 ஆக இருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான பதவியணி 591 ஆகும். மேலதிக பதவியணியான 247 இற்காக முகாமைத் துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அத் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நெமோ புதிதாக 23 பதவிகளையும் உருவாக்கியிருந்தது. அத்துடன் இந்த அங்கீகரிக்காத பதவிகளிற்காக 62 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | அங்கீகாரத்தைப் பெறு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பில் முகாமைத்துவக் குழுவிற்கு பரிந்துரைகளை வழங்கு வதற்காக குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. | தற்போதைய நிலை குறித்து தகவல் கேட்டபோதிலு ம், இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில் லை. |
| (ஏ) | ரூபா 10,562,227, ரூபா 897,465,953, ரூபா 97,745,734, ரூபா 17,204,806 மற்றும் ரூபா 25,683,053 தொகையான முறையே வருமான வரி, பெறுமதிசேர் வரி, பொருளாதார சேவைகள் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பொருட்கள் சேவைகள் வரி ஆகியவற்றை செலுத்தாமையால் 2014 முதல் 2019 வரை ரூபா 161,703,053 மிகைஅறவீடு உள்நாட்டு இறைவரித் திணைளத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. | வரிச் சட்டத்தின் பிரகாரம் வரிகளைச் செலுத்துவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஒரு பேச்சுவார்த்தை இடம் பெற்றது. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மட்டும் தவணை முறையில் செலுத்தப்பட்டு வருகிறது. |
| (ஐ) | 2006 சனவரி முதல் 2015 யூலை வரை தொகைகளை கணிப்பிடுகையில் கருத்திலெடுக்கப்படாத ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் தொடர்பில் முறையே ரூபா 307.82 மில்லியன் மற்றும் ரூபா 41.97 மில்லியன் பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டம் ஆகிய வற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதுவரை பணம் செலுத்தப்படாததால், திறைசேரியில் இருந்து பணம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பாததால் அவற்றின் மீது முறையே ரூபா 171.22 மில்லியன் மற்றும் ரூபா 20.98 மில்லியன் மிகைக் கட்டணங்களை கூட்டுத்ததானம் செலுத்த வேண்டியிருந்தது. | | | |
| (ஒ) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சி-சிட்டி செயற்திட்டத்தின் நிலம் மற்றும் கட்டிடம் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குறித்த நோக்கத் திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்தினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணியின் உரிமையை தீர்ப்பதற்கான விடயம் இடம்பெற்று வருகின்றது. எனவே அனைத்து தொடர்புடைய ஆவணங்களும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஓ) | கட்டுமானத் துறையில் ரூபா.**703.82** மில்லியன் மதிப்பீட்டில் **3** திட்டங்கள் , **2019** டிசம்பர் **31**க்குள் முடிக்க இலக்கு வைக்கப்பட்டாலும், அவற்றின் உண்மையான முன்னேற்றம் **2021** டிசம்பர் **31** க்குள் **80** சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. | முன்னேற்றத்தை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணியை சரியான நேரத்தில் முடிக்க தள செலவுகளை ஈடுகட்ட ஆரம்ப மற்றும் இடைக்கால பணப்புழக்கம் போதுமானது | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ஔ) | கட்டுமான உபகரணங்கள் துறையில் ரூபா 743.01 மில்லியன் பெறுமதியான 2292 ஆம் இலக்க செயற்திட்டத்தை மீளாய்வாண்டில் பூரணப்படுத்தவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், **2021** டிசம்பர் **31,** நிலவரப்படி உண்மையான முன்னேற்றம் **80** சதவீதமாக இருந்தது. | செயல் முன்னேற்றம் இதனைக் காட்டிலும் மேம்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் தாமதத்தை குறைப்ப தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வேலைகளை உரிய நேரத்தில் பூரணப்படுத்துவதற்கு பட்டியல் களை தீர்ப்பதிலான தாமதம் பிரதான காரணமாக இருந்தது | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (க) | கூட்டுத்தாபனத்தின் 31 ஊழியர்கள் 2003 யூன் 02 | உரிய அரசாங்க நிறுவனங்களிடமிருந் | மாத சம்பளத்தையும் திருப்பிச் செலுத்துவத | மாதாந்திர ஊதியம் மீள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் சுற்றறிக்கையிலுள்ள 8.3.9 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, மாகாண அமைச்சுக்கள், கட்டிடத் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற் றுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், அச்சுற்றறிக்கையின் படி குறித்த ஊழியர்களின் சம்பளங்கள் அந்தந்த நிறுவனங்களிடமிருந்து மீளப் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், கூட்டுத்தாபனத்தால் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் 04 ஊழியர்கள், கட்டிடத் திணைக்களத்தின் 06 ஊழியர்கள் மற்றும் அரசாங்க தொழிற்சாலையின் 02 ஊழியர்கள் சார்பாக செலுத்தப்பட்ட முறையே ரூபா 13,152,091, ரூபா 961,574 மற்றும் 297,570 தொகைகள் 2020 மே 31 வரையிலும் மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. | து சம்பளத்தை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுத்துள்ளது. | செலுத்தப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ச) | 2006 முதல் 2019 வரை அதிக சம்பள அளவுத் திட்டங்களில் ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட நிர்வாக மட்டத்திலுள்ள 05 பதவிகளுக்கு 28 உத்தியோகத்தர்களை கூட்டுத்தாபனம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. மேலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 15 அளவுத்திட்ட கணக்கெடுப்பாளர்கள், 08 படவரையுனர்கள் மற்றும் 26 அத்தியட்சகர்கள் (சிவில்) ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டிருந்தனர். | சிரேஷ்ட நிர்வாக மட்டத்திலுள்ள பத விகளுக்கு ஆட்சேர்ப் புத் திட்டத்தின் படி உத்தியோகத்தர்கை ள ஆட்சேர்ப்தற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். | உயர் நிர்வாக பதவிகளின் சேவைகளின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு, நிலையான கிரயத்தை குறைப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங் கள் வழங்கப்பட்டன. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |
| (ட) | தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள பதவிகளின் அளவுக்கு மாத்திரமே ஆட்சேர்த்தல் வேண்டும். இருப்பினும், அதற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 33 பதவிகளிற்காக 525 மேலதிக ஊழியர்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்க்கப்பட்டிருந் தனர். | தாபனவிதிக் கோவை யுடன் இணங்குவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | தற்போதைய நிலை மாறாமல் உள்ளது. |

## 19. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

1. நிறுவனத்தின் பெயர் :- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

   2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

   2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| **1)** | நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 01) 32 ஆம் பந்திக்கு முரணாக நடைமுறையல்லாத சொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த ரூபா.8,506,031 வியாபார பெற வேண்டியவைகளின் அசாதாரண செலவு மீதி செலுத்த வேண்டியவைகளிற்கு எதிராக சரி செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது. அதேபோல நடைமுறைப் பொறுப்புக்களைப் பிரதிதித்துவப்படுத்தியிருந்த ரூபா.1,078,112 தொகையான பெறப்பட்ட பிடிகாசின் வரவு மீதி பெற வேண்டியவைகளிற்கு | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் 01 உடன் (எல்கேஏஎஸ் 01) இணங்கியிருந்தமையை உறுதிப்படுத்த வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒப்புதலுடன் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அவர்களின் பரிந்துரைகளை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. | இதில் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவர்களின் பரிந்துரைகளைப் பெறுவதற்காக கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் உடன்படிக்கையுடன் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எதிராக சரி செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தது. | | | |
| **2)** | நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 01) 60 ஆம் பந்திக்கு முரணாக சபையானது இருப்புக்கள், கடன்பட்டோர் மற்றும் முற்பணங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய ரூபா 149,681,812 தொகையான செயற்பாடற்ற சொத்துக்களை இனங்கண்டிருந்ததுடன் இது கணக்கிற்குள் அவர்களுடைய திரவத்தன்மையை கருத்திற் கொள்ளாமல் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றிற்கு கீழே வெளிப்படுத்தப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் 01 உடன் (எல்கேஏஎஸ் 01) இணங்கியிருந்தமையை உறுதிப்படுத்த வேண்டும். | இவற்றில் சில 2020 இல் தீர்க்கப்பட்டன. | இதில் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவர்களின் பரிந்துரைகளைப் பெறுவதற்காக NWSDB இல் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் உடன்படிக்கையுடன் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| **3)** | பொருளிருப்புகள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 9 ஆம் பந்திக்கு (எல்கேஏஎஸ்-02) முரணாக மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நகராதிருந்த ரூபா 496,204,232 பெறுமதியான இருப்புகள் அவற்றினுடைய தேறிய பெறுமதியில் மதிப்பிடாமல் அதன் கிரயத்தில் பதியப்பட்டிருந்தது. | பொருளிருப்புகள் மீதான பெறுமதியை கண்டறிதல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் 02 உடன் (எல்கேஏஎஸ்-02) இணங்கியிருந்தமையை உறுதிப்படுத்த வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வணிகத்தின் தன்மை காரணமாக, நீர்குழாய் வெடிப்புகள் உட்பட எதிர்பாராத சூழ்நிலைகளில் எழும் அவசர தேவையைப் பூர்த்தி செய்ய கணிசமான அளவு இருப்பு வைத்திருக்கிறது. |
| **4)** | காசுப்பாய்ச்சல் கூற்று மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 07 ஆம் பந்திக்கு (எல்கேஏஎஸ்-07) முரணாக ரூபா 1,412,440 தொகையான சேமிப்புக் கணக்கில் செய்யப்பட்ட | நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் வகைப்படுத்தும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 07 உடன் (எல்கேஏஎஸ்-07) | காசுப்பாய்ச்சல் செயல்படும் நடவடிக்கைகளில் இருந்து இது விலக்கப்படலாம். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைப்புகள் மற்றும் ரூபா 12,887.03 தொகையான எஸ்கோ சோமிப்பு கணக்கில் செய்யப்பட்ட வைப்புகள் என்பன காசு மற்றும் காசிற்கு சமமானவையாக காட்டுவதற்குப் பதிலாக நிதிச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். | | |
| 5) | கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீட்டு தவறுகளில் மாற்றங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 41 மற்றும் 42 ஆம் பந்திகளுக்கு (எல்கேஏஎஸ் 08) முரணாக 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட மூன்று டொலர் வைப்பு கணக்கின் ரூபா 65,430,227 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | தவறுகளிற்காக நிதிக்கூற்றுக்களை மீளக் குறிப்பிடும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 08 உடன் (எல்கேஏஎஸ்-08) இணங்குவதை உறுதிப்படுத்தல். | 2020 ஆம் ஆண்டில் திருத்தங்கள் செய்யப்பட்டன. | |
| 6) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 51 ஆம் பந்தியின் (எல்கேஏஎஸ்-16) பிரகாரம், சொத்துக்களின் பயன்பாட்டுக் காலம் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலாவது மீளாய்வு செய்யப்பட வேண்டியதுன் முன்னைய மதிப்பீடுகளுடன் எதிர்பார்ப்புகள் வேறுபடின் எல்கேஏஎஸ்-08 இற்கமைய மாற்றங்கள் கணக்கீடு செய்யபட வேண்டும். எவ்வாறாயினும் இன்னமும் பாவணையிலுள்ள 17 வகுதியான நிலையான சொத்துக்கள் தொடர்புபட்ட ரூபா 1,888,920,123 தொகையான முழுமையாக | முழுமையான பெறுமானத் தேய்விடப்பட்ட சிக்கன பயன்பாட்டு காலத்தைக் கொண்ட சயைால் ஏற்கனவே பயன்படுத்தப் படுகின்ற சொத்தக்கள் மீமதிப்பிடுதல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 உடன் (எல்கேஏஎஸ்-16) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | NWSDB நாடு முழுவதும் பரந்த சொத்துத் தளத்தைக் கொண்டிருப்பதால் அதன் சொத்துத் தளத்தை மதிப்பிடுவது நடைமுறைச் சாத்தியமற்றது. | சொத்தின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கையை மறுமதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான மதிப்பீட்டு அதிகாரியின் சேவைகளைப் பெறுவது கடினம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பாவணைக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு இதன்படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| **7)** | 2012 யூலை 17 இல் கொள்வனவு செய்யப்பட்டு வவுனியா நிலக்கீழ் நீர் பிரிவில் இருந்த காற்று அழுத்தி உபகரணம் 2018 செப்தெம்பர் 27 இல் தீயினால் அழிந்திருந்தது. எவ்வாறாயினும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7 ஆம் பந்திக்கு (எல்கேஏஎஸ் 16) முரணாக, 2012 செப்தெம்பர் 28 இலிருந்து 2020 ஒக்தோபர் 31 வரை ரூபா 2,221,615 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 888,646 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டு தொடக்கத்தின் திரண்ட நட்டம் ரூபா 1,332,969 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது அந்த சொத்து கைதவிர்க்கப்பட்டமையால் நிதிக்கூற்றில் ரூபா 2,221,615 தொகையான கைதவிர்ப்பு மிகை இலாபம் இனங்காணப்படடிருந்தது. | நிலையான சொத்துக்களின் அடையாளம் காணல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 உடன் (எல்கேஏஎஸ் 16) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | அகற்றும் சொத்துக்கள் தொடர்பான தேய்மானத்தின் அதிகப்படியான மதிப்பீட்டின் விளைவாக ஏற்படும் லாபத்தின் மீதான விளைவு, அகற்றலின் மீதான ஆதாயத்திற்கு எதிராக ஈடுசெய்யப்படுகிறது. | |
| **8)** | ஊழியர் நலன்புரி மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 66 மற்றும் 144 ஆம் பந்திகளின் (எல்கேஏஎஸ் 19) பிரகாரம், | ஊழியர் நலன்புரி உதவி அடையாளம் காணல் மற்றும் சம்பந்தமான | NWSDB இன் செயல்பாடு ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரு நிபுணரின் சேவைகளை | நேரம் மற்றும் செலவு தாக்கங்கள் காரணமாக, ஒவ்வொரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபையானது உள்ளபடியான மதிப்பீட்டு முறை பிரயோகிக்கப்பட்டு எந்தவொரு ஊகங்களும் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது பிந்திய ஊழியர் நலன்புரி உதவி மற்றும் சம்பத்தப்பட்ட தற்போதைய சேவைக் கிரயம் என்பவற்றின் தற்போதைய பெறுமதியை அளவிடும் நோக்கில் அவற்றினை வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. மேலும், நியமத்தின் 58 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஓய்வூதிய நலன்புரி உதவிக்கான ஏற்பாடு (பணிக்கொடை ஏற்பாடு) செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது பணக் கொடையாக செலுத்தப்பட்டிருந்து (செயற்திட்ட உத்தியோகத்தர் தவிர்த்து) ரூபா 485,960,193 இற்கு சமமான தொகைக்கு பதிலாக மீளாய்வாண்டின் ஏற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது. | வெளிப்படுத்தல் செய்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 உடன் (எல்கேஏஎஸ் 19) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | ஈடுபடுத்துவதன் மூலம் செய்யப்படுகிறது. | ஆண்டும் தொடர்புடைய செயல்முறையை மேற்கொள்வது நடைமுறையில் இல்லை. |
| 9) | அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவியின் வெளிப்படுதல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்திலுள்ள (எல்கேஏஎஸ் 20) ஏற்பாடுகளிற்கு முரணாக, 9 முதல் 13 ஆண்டுகளிற்கு மேலாக சேர்க்கப்படாமல் இருந்த 34 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 13,704.8 மில்லியன் கூட்டுத் தொகையான வெளிநாட்டு | வெளிநாட்டு மானியம் சேர்த்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எல்கேஏஎஸ் 20) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | காணிகள் உள்ளடங்கலாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்காத சொத்துக்கள் தொடர்பான மானியங்கள் பல ஆண்டுகளாக பெறுமானத்தேய்வு செய்யப்படாமல் இருந்தது. வழமையாக கட்டிடங்களின் பயன்பாட்டுக் காலப்பகுதி 50 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தன. உரிய மானியங்கள் அத்தகைய காலப்பகுதி வரையும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டன. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மானிய உதவி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் விபரங்கள் எதுவும் கிடைக்காமையால் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்காமையின் தாக்கம் கணக்காய்வில் மதிப்பிட முடியாதுள்ளது. | | | |
| **10)** | காலி முகாமையாளர் அலுவலகத்தில் மீளாய்வாண்டின் இருப்பு மெய்மையாய்வின் போது அடையாளம் காணப்பட்ட ரூபா 3,399,965 பெறுமதயான PVC உபபாகங்கள் அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவியின் வெளிப்படுதல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 03 ஆம் பந்தியின் (எல்கேஏஎஸ் 20) பிரகாரம் வளங்களை முறையாக அடையாளம் காணப்படாமல் வெளிநாட்டு மூலதன மானியங்களாக கருதப்பட்டிருந்தது. | வெளிநாட்டு மானியம் வளங்கள் சேர்த்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எல்கேஏஎஸ் 20) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | ஆதாரம் உறுதிசெய்யப்பட்டவுடன், 2020 ஆம் ஆண்டிற்குள் நிதி நிலையில் உரிய விடயங்களில் எந்த மாற்றமும் ஏற்படாது என்பதை உறுதிசெய்ய பொருத்தமான மாற்றங்கள் செய்யப்படும். | NWSDB அதன் எல்லைக்கு உட்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் பதிவு செய்வது கடமையாகும். |

| | | | |
|---|---|---|---|
| **11)** | அந்நிய செலாவணி விகிதங்களிலுள்ள மாற்றங்களின் தாக்கங்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 21) 23(அ) பந்திக்கு முரணாக சபையானது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள இறுதி விகிதத்தை பயன்படுத்தி ஐ.அ.டொலர் 84,176,147 கூட்டுத்தொகையான ஐந்து (05) ஐ.அ.டொலர் நிலையான வைப்புக்களின் பெறுமதியை ரூபாவிற்கு மாற்றியிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களிலுள்ள நிலையான வைப்புக்களின் பெறுமதி ஏறத்தாழ ரூபா 159.09 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் 28 ஆம் பந்தியின் பிரகாரம் பணரீதியான விடயங்களை மாற்றுவது தொடர்பாக ஏற்பட்ட செலாவணி வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு நாணய பண ரீதியான விடயங்களை பதிவு செய்வது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 21 (எல்கேஏஎஸ் 21) உடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். | இந்த எஸ்க்ரோ கணக்குகளில் இருந்து வரும் பண ரசீதுகள், மேற்பார்வை அல்லாத சொத்துகளாக தற்காலிக ஒதுக்கீட்டைக் குறிக்கின்றன, மேலும் இந்தக் கணக்குகளில் உள்ள நிதிகள் NWSDBக்கு சொந்தமானவை அல்ல. |
| **12)** | கற்னை சொத்தக்கள் மீது இலங்கை கணக்கீட்டு நியமம் 104 ஆம் பிரிவில் (எல்கேஏஎஸ் 38) குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு நிதியாண்டிலும் கற்பனை சொத்துக்களிற்கான ஒன்றுதிரட்டல் மற்றும் தீர்த்தலின் முறை மீளாய்வு செய்வதற்கு சபை தவறியிருந்தது. | இலங்கை கணக்கியல் தரநிலைகள் **38** (LKAS **38)** உடன் இணங்குவதை உறுதிசெய்து, அருவமான சொத்துக்களை கடனளிக்கும் முறை மற்றும் காலக்கெடு மற்றும் கடன்தொகை முறையை மதிப்பாய்வு செய்தல். | மொத்த கற்பனைச் சொத்துக்கள் மொத்த சொத்துக்களில் 0.0013 சதவீதத்தை கொண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு ஆண்டிலும் இது மீளாய்வு செய்வதற்கு அவசியம் இருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| **13)** | முதலீட்டு ஆதனம் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்திலுள்ள (எல்கேஏஎஸ் 40) ஏற்பாடுகளிற்கு முரணாக, ரூபா 333,020,680 தொகையான முதலீட்டு ஆதனத்தின் முற்கொண்டுவரப்படும் பெறுமதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு ஆதனமாக காட்டுவதற்குப் பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக காட்டப்பட்டிருந்தது.<br>மேலும், நியமத்தின் 75 (ஊ)(i) மற்றும் 79 ஆம் பந்தியின் பிரகாரம், முதலீட்டு ஆதனத்திலிருந்தான வருமானம் வெளிப்படுத்தப் பட்டிருக்காததுடன் சபையானது பெறுமானத்தேய்வு முறை, பயன்பாட்டுக் காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம், மொத்த முற்கொண்டுவரப்படுகின்ற தொகை, ஆரம்ப மற்றும் இறுதி காலப்பகுதியில் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் கழிவுத் தொகை என்பன தொடர்பான முறையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டு ஆதனம் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எல்கேஏஎஸ் 40) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | NWSDBயின் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவின் ஒப்புதலுடன் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **14)** | நிதிக்கருவிகள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 5.5 ஆம் பிரிவுக்கு (எல்எவ்ஆர்எஸ் 09) முரணாக கழிவகற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் என்பவற்றின் கழிவுக்கான ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்ட கடன்கொடுத்தோர் இழப்பை இனங்காணாமல் நிலையான வீதத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் கழிவிற்கான ஏற்பாடு தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமம்-09 உடன் (எல்எவ்ஆர்எஸ் 09) இணங்குதலை உறுதிப்படுத்த வேண்டும். | SLAS 9 இல் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு முறையின் சிகிச்சை சமநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தாது. | |
| **15)** | 2015 ஆம் ஆண்டின் கணிப்பீட்டு சபையின் போது பயன்படுத்த முடியாத நிலையில் குருநாகல் பிராந்திய அலுவலகத்தில் 16 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில் ரூபா 65,852,393 கூட்டுப் பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் நீண்ட காலமாக நிலையான சொத்துக்களாக இருக்கின்றன என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றினை கணக்கேடுகளிலிருந்து அகற்றுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்ப ட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணப்பீடுகளின் பிரகாரம், ரூபா 40,605,148 பெறுமதியுடைய 42 பெறுமானத் தேய்விடக்கூடிய விடயங்களிற்காக மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்விற்காக ரூபா 851,398 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பது | பயன்படுத்த முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் அவற்றினை கணக்கேடுகளிலிரு ந்து அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | சபையின் ஒப்புதல் பெறப்பட்டு, பட்டியல் நீக்கம் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது | சபையின் அனுமதி பெறப்பட்டு, இந்த சொத்துகளின் மதிப்பு ரத்து செய்யப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிப்பட்டது. | | | |
| **16)** | 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 133,867,477 தொகையான சிக்கன சேவைப் கட்டணங்கள் (ESC) மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமான வரிச் செலவினை பதியும் நோக்கில் விரிவான வருமான வரியை கணிப்பீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான விரிவான வருமானக் கூற்றில் வருமான வரிச் செலவினமாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. | விரிவான வருமானக் கூற்றில் சரியான வருமான வரிச் செலவினத்தை உறுதிப்படுத்த வேண்டும். | பொருளாதார சேவைக் கட்டணங்களுக்கு வருமான வரிப் பொறுப்பு ஏதுமில்லை, ஏனெனில் முந்தைய ஆண்டுகளில் இருந்து சபையால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட வரி இழப்புகள் அதிகம். எனவே, பொருளாதாரச் சேவைக் கட்டணங்கள் சபை செலவாகும், அதற்கேற்ப விரிவான வருமான அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன. | |
| **17)** | 2016 / 2017 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான சிக்கன சேவைப் கட்டணங்கள் 2016 ஏப்ரல் 01 இலிருந்து வீதங்கள் 0.5 சதவீதத்திற்கு திருத்தப்பட்டிருந்த போதிலும் 0.25 சதவீதம் என்ற அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால், தண்டப்பணம் உள்ளடங்கலாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ரூபா 128.76 மில்லியன் வரிவிதிப்பு செய்யப்பட்டிருந்தது. சபையின் பதிவேடுகளின் பிரகாரம், வீத மாற்றங்கள் காரணமாக (தண்டப்பணம் தவிர்த்து) ரூபா 66.37 மில்லியன் சபையால் செலுத்தப்பட வேண்டியுள்ளது. கணக்கேடுகளில் செலுத்த வேண்டிய மிகுதி வரிக்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | சிக்கன சேவைக் கட்டணங்களிற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் அவற்றினை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த விடயம் திணைக்களத்துடன் கலந்துரையாடலிற்கு உட்படுத்தப்பட்டன. | கூடுதல் வரி பொறுப்பு ஏற்பட வாய்ப்பில்லை, எனவே இந்த நிலுவைக்கு எந்த ஒதுக்கீடும் தேவையில்லை. |
| **18)** | அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, சப்ரகமுவ | கணக்கேடுகளில் பதியப்பட்ட | 1. சகல சொத்துப்பதிவேடுக | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் வவுனியா பிராந்தியங்களில் பன்னிரண்டு (12) கிரய நிலையங்கள் தொர்பில் ரூபா 453,636,398 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக இருக்காமையால் மெய்மையாய்வு செய்யமுடியவில்லை. எவ்வாறாயினும், கணக்கு ஏடுகளிலிருந்து அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 17,171,243 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் உண்மைத் தன்மை, நிறைவுத் தன்மை மற்றும் உள்ளதன்மையை உறுதிப்படுத்த வேண்டும். | ளும் கணனிமயப்படுத்தப் பட்டதுடன் மேற்படி நடவடிக்கைகளிற்காக சுற்றறிக்கைகள் வழங்கப்பட்டன.<br>2. புலனாய்வின் பின்னர் இல்லாத சொத்துக்களை அகற்றுவதற்கு சபைத் தளை அனுமதிப்பதற்கு உரிய பிரதி பொது முகாமையானரின் அனுமதி வேண்டப்பட்டது. | |
| **19)** | அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்களின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், ஏழு கிரய நிலையங்கள் தொடர்பில் ரூபா 20,829,745 கூட்டுப் தொகையான கட்டிட உட்கட்டமைப்பு, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், நடமாடும் உபகரணங்கள், இறையில் ஆதனம் மற்றும் மொத்த பழுதடைந்த தண்ணீர் மீட்டர்கள் என்பவற்றினை பாவணையிலிருந்து அகற்றி அழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்கேடுகளிலிருந்து அவற்றினை அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 616,308 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கேடுகளில் பதியப்பட்ட நிலையான சொத்துக்களின் உண்மைத் தன்மை, நிறைவுத் தன்மை மற்றும் உள்ளதன்மையை என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும். | கணிசமான நேரம் எடுக்கும் திறைசேரி சம்மதம் மற்றும் சபை முடிவுகளால் விலக்குகள் அனுமதிக்கப்படுகின்றன. | சபையின் அனுமதி கோரப்பட்டு, புத்தகங்களில் தேவையான மாற்றங்கள் செய்யப்படும். |
| **20)** | மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா மற்றும் கிழக்குப் பிராந்திய அலுவலகங்களில் பௌதீக | கணக்கேடுகளில் பதியப்பட்ட நிலையான சொத்துக்களின் | திட்ட இயக்குனர் சொத்து படிவத்தை மூலதனமாக அனுப்ப வேண்டும். வெவ்வேறு | இது சொத்து முகாமை அமைப்பு மூலம் தீர்க்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரீதியாக இருக்கின்ற காணி இறையிலாதனம், உட்கட்டமைப்பு கட்டிட இறையிலாதனம், கட்டமைப்பு போன்ற 196 நிலையான சொத்து விடயங்கள் சபையின் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் கணக்கெடுகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் ரூபா 4,385,262,876 பெறுமதியான மேற்குறித்த 196 விடயங்களில் 74 விடயங்களிற்காக ரூபா 102,843,910 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், வவுனியா பிராந்தியம் உடமையாக்கப்பட்ட பத்து (06) காணிகள் மற்றும் மன்னார் பிராந்தியம் உடமையாக்கப்பட்ட பத்து (10) காணிகள் என்பவற்றின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேடுகளில் காணப்பட்ட போதிலும் கணக்கேடுகளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உண்மைத் தன்மை, நிறைவுத் தன்மை மற்றும் உள்ள தன்மையை என்பவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும், சபைக்கு உடமையான சகல காணிகளும் உரிய நிலையான சொத்து பதிவேடுகளில் அடையாளம் காணப்பட்டு நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சந்தர்ப்பங்களில் மதிப்பீடு மற்றும் முடிக்க ஒப்புதல் பெறப்பட வேண்டும். | |
| **21)** | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதிய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்கலாக வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 8,213,888,162 ஆக இருந்தது. எவ்வாறாயினும், ரூபா 7,978,854,614 | கடன்பட்டோர் கடன் கழிவுக்கான ஏற்பாட்டின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். | குறைபாடு கணக்கீடு வணிக முறையால் வழங்கப்பட்ட உண்மையான புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டது, அதே நேரத்தில் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட | ஏற்கனவே இருந்த நிலுவைக்கு தீர்பனவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையாக கடன்பட்டோருக்கு (புதிய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்கலாக) மாத்திரம் கடன்கழிவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, ரூபா 235,033,548 கூட்டுத் தொகையான அந்த கடன்பட்டோருக்காக ஏற்பாடுகளும் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | கடனாளி இருப்பு மதிப்பிடப்பட்ட வருவாயை அடிப்படையாகக் கொண்டது. | |
| **22)** | செயற்திட்ட ஒப்பந்தகாரர்களிற்கு பெறுமதி சேர் வரியாக சபையால் செலுத்தப்பட்ட ரூபா 12,430,354 ஆன தொகை சபையின் வெளியீட்டு வரிக்கு எதிராக ஏற்கனவே கோரப்பட்டிருந்த போதிலும் அவற்றினை பெறவேண்டிய வரியாக கணக்கிடுவதற்கு பதிலாக நடைபெறும் வேலைகளாக தவறாக அடையாளம் காணப்பட்டிருந்தது. எனவே, நடைபெறும் வேலைகளின் மீதி அதிகரித்துக் காட்டப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டிய வற் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்ட வற் வரி சரியாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த நாளேடுகள் கிடைத்ததும், இது சரி செய்யப்படும். | நாளேடுகள் 2021 இல் நிறைவேற்றப்பட்டது . |
| **23)** | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், பூர்த்தியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட நாற்பத்தி நான்கு (44) நீர் வழங்கல் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களின் ரூபா 5,246,945,547 தொகையான மூலதனமாக்கப்படாமல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளில் இருந்தது. | பூர்த்தியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டம் பூர்த்தியான பின்னர் 45 நாட்களிற்குள் பூர்த்தியாக்குவதற்கு சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டிருந்தது. | 2021ஆம் ஆண்டில் ரூபா. 19.4 பில்லியன் மூலதனமாக்கப்பட்டுள்ளது. |
| **24)** | மீள்சுழற்சி வேலைகளிற்காக பெறப்பட்ட | செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு இருக்குமாயின் | களுத்துறை, கேகாலை, மேற்கு பிராந்தியம் மற்றும் நிலத்தடி நீர் | சரிசெய்தல் பின்னர் செய்யப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முற்பணங்களில், களுத்துறை பிராந்தியம், கேகாலை மற்றும் மேல் மத்திய பிராந்தியத்தில் 06 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 13,447,905 ஆன தொகை மற்றும் பிராந்திய ஆதார நிலையங்கள் (மத்திய) தொடர்பில் ரூபா 3,997,933 ஆன மீள் சுழற்சி நிலத்தடி நீர் வேலைகள் மீளாய்வாண்டு இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரல் 30 வரையும் உரிய வருமானக் கணக்கிற்கு இது எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வருமானத்திற்கு மீழ் சுழற்சி வேலைகளிற்காக பெறப்பட்ட முற்பணங்களை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரிவு உட்பட சம்பந்தப்பட்ட பிரதி இணை முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர்களிடமிருந்து பூர்த்திச் சான்றிதழ்கள் கோரப்படுகின்றன | |
| **25)** | சபையானது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிலவியதை போல 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு நிதிக் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், 2019 ஆம் ஆண்டில் இறுதியில் உள்ளவாறான நிறுத்திவைத்த நட்டம் ரூபா 192.12 மில்லியனால் அழிக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்துவரும் ஆண்டுகளில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கல் செய்வதற்கான சாத்தியம் கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை. | வழமையாக முன்னைய ஆண்டு சீராக்கல் செய்வதன் மூலம் இலாப சிதைவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | எல்கேஏஇஸ் 8 இன் பிரகாரம், முன்னைய கால தவறுகளை திருத்தவதற்கு வழமையான தேவையாக உள்ளது. | |
| **26)** | ஏழு (07) செயற்திட்டங்கள் தொடர்பில், நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 198,729,791 கூட்டுத் தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் | பூர்த்தியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை மூலதனமாக்குவதற் | திட்ட இயக்குனர் சொத்து படிவத்தை மூலதனமாக அனுப்ப வேண்டும். பல்வேறு நேரங்களில் மதிப்பீடு மற்றும் நிறைவுக்கான ஒப்புதல் தேவைப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன. | |

| | | | |
|---|---|---|---|
| | அவசியமான நடவடிக்கைகயை எடுக்கும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் பதினொரு ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாமல் இருந்தது. | கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| **27)** | எவ்வித காரணங்களும் இல்லாமல் மூலதன அறவீட்டு கட்டண வருமான மூலத்திற்கு எதிராக நலன்புரி நிதியில் ரூபா 8,803,047 ஆன தொகை சீராக்கப் பட்டிருந்தமையும் விரிவான வருமானக் கூற்றில் மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் அதேதொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தமை என்பதும் அவதானிக்கப்பட்டது.. | கணக்கீட்டு சீராக்கல் மற்றும் நிதிக்கூற்றுகள் சமர்ப்பித்தல் என்பவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல். | இது இந்த கொடுக்கல் வாங்கல் வெளிப்படுத்துவதற்காக மட்டுமே காலம் முழுவதும் தொடர்ந்து செய்யப்படும் கணக்கியல் சரிசெய்தல் ஆகும். சரிசெய்தல் மற்றும் தலைகீழ் மாற்றம் இரண்டும் ஒரே நேரத்தில் செயலாக்கப்பட்டன. |
| **28)** | ஏனைய கடன்பட்டோர், முற்பணங்கள், வியாபார கடன்கொடுத்தோர், கோரப்படாத சம்பளங்கள் போன்றன உள்ளடங்கலாக ரூபா 149,681,812 மற்றும் ரூபா 71,927,749 தொகையான முறையே நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன அத்தகைய மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் செயற்பாடற்ற சொத்துகள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புகளாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும் ரூபா 95,796,513 ஆன இனங்காணப்படாத முன்னைய ஆண்டு மீதி, புலனாய்வு செய்வததல் மற்றும் தீர்பனவு செய்தலிற்கு நடவடிக்கை எடுக்காமல் மேற்குறிப்பிட்ட | செயற்பாடற்ற சொத்துகள் மற்றும் பொறுப்பு மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | NWSDBயின் கணக்காய்வு மற்றும் முகாமை குழுவின் ஒப்புதலுடன் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அவர்களின் பரிந்துரைகளை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடற்ற சொத்துக்களில் நான்கு பிராந்தியங்களிலுள்ள ரூபா 22,007,307 ஆன இருப்பு மீதி மற்றும் ரூபா 5,906,882 ஆன வங்கி மீதி என்பன இருந்தது. | | |
| **29)** | ஐந்து அண்டுகளிற்கு முன்னர் களனி பிராந்தியத்தில் ரூபா 2,549,788 தொகையான களவுபோன இருப்புகள் மற்றும் மேல் மத்திய பிராந்திய ஆதார நிலையத்தில் (கொகுவல) ரூபா 1,211,323 மற்றும் கிளிநொச்சி பொறியிலாளர் அலுவலகத்தில் ரூபா 1,633,256 ஆன இருப்புக் குறைவு என்பன 2020 திசெம்பர் 31 வரையும் பொருளிருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய உத்தியோகத்தர் களிடமிருந்து அந்தகைய நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கேடுகளிலிருந்து இருப்பு மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டங்களை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வெண்டும். | விசாரணையின் போது கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்படுவது இறுதியாக்கப்பட்டிருந்தது.<br><br>கொகுவல இருப்புக் குறைவு<br>ரூபா 218,857.64 பெறுமதியான இருப்பு புத்தக பதிவு திருத்தமாக இனங்காணப்பட்டிருந்தது. ரூபா 270,572.40 பெறுமதியான இருப்புக்கான பொலீஸ் விசாரணை செயற்பாட்டில் உள்ளதுடன் நீதி மன்றத் தீர்ப்பிற்காக காத்திருக்கின்றன. ரூபா 721,893.47 ஆன மீதி மேலும் புலானாய்வின் கீழ் உள்ளன. |
| **30)** | கண்டி வடக்கு பிராந்திய நிலையத்தின் கீழ் மாத்தளை பிராந்தி அலுவலகத்திற்கு பொருத்தமான தகுதியுடைய களஞ்சிய காப்பாளரை ஒதுக்கத் தவறியமையால் இருப்பு பெறுவனவு மற்றும் வழங்குதல் முறையாக பதியப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 41,739,680 ஆன இருப்புக் குறைவு பதியப்பட்டிருந்தது. எனவே, ஆண்டின் தொடக்கத்தில் திரண்ட நட்டம் ரூபா 26,604,682 ஆல் | வித்தியாசங்களிற்கான காரணங்களை இனங்காண்பதற்கும் இணக்கம் செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவசர வேலைகளில், போதிய தேவைப்பட்ட தகைமைகளை கொண்டிருக்காத சிலரால் மேவப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், இன்னொரு களஞ்சியக் காப்பாளர் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் வித்தியாசங்களிற்கான காரணங்களை இனங்காண்பதற்கும் இணக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இருதி இருப்புகள் ரூபா 41,739,680 ஆல் அதிகரித்தக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இருப்புக் குறைவிற்கான காரணங்களை இனங்காண்பதற்கும் அவற்றினை கணக்கெடுகளிலிருந்து அகற்றுவதற்கும் 2021 ஏப்ரல் 01 வரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **31)** | 2020 யூலை 02 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 30 பில்லியன் கடன் மீதான வட்டிக் கிரயம் பொதுத் திறைசேரியால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் போது கடன் வட்டியாக சபையால் ரூபா 699,702,314 ஏற்பட்டிருந்தது. எவவாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திறைசேரியிடமிருந்து ரூபா 659,277,279 மாத்திரமே பெறவேண்டியவையாக அடையாளம் காணப்பட்டிருந்தது | திறைசேரியிடமிருந்து பெறவேண்டியவையின் கணக்கிணக்கம் மீதான தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சரவை தீர்மானத்தின்படி அதற்கான செலவை திறைசேரியே ஏற்கும். | திறைசேரியிடமிருந்து வரவேண்டிய பணம் இன்னும் வரவில்லை. |
| **32)** | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளுடன் இரண்டு (02) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி தொடர்பில் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்டுத்தல்களுடன் ஒப்பிடும் போது நிதிக்கூற்றுக்களின் | ஆண்டின் இறுதியில் கடன் மீதியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 இன் ஜர்னல் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி ரூபா 1,723,847,989 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | | |
| **33)** | ஒன்பது (09) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் கடன் மீதான அட்டுறு வட்டி தொடர்பில் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 10,254,724 ஆன ஏற்பாட்டின் கீழ் செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | கடன் மீதான அட்டுறு வட்டி கணிப்பீடுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். | இது **2021** ஆம் ஆண்டு சரி செய்யப்பட்டது. | |
| **34)** | கோட்டை பிராந்தியம் (பத்தரமுல்லை) தொடர்பில் 2019 திசெம்பர் மாதத்திற்காக ரூபா 59,129,751 தொகையான மீட்டர் விற்பனை வருமானம் தவறாக மீளாய்வாண்டிற்கான வருமானமாக கருதப்பட்டிருந்தது எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட வருமானத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். | டிசம்பர் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட வருவாயைப் புகாரளிக்கும் பிராந்தியங்கள், அடுத்த ஆண்டு ஜனவரியில் டிசம்பர் வருவாயைப் புகாரளித்து, பத்திரிகை உள்ளீடுகள் மூலம் டிசம்பர் வருவாயை மாற்றியமைக்கின்றன. | பின்வரும் ஆண்டுகளில் ஜர்னல் குறிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. |
| **35)** | மாத்தறை கட்டம் (iv) செயற்திட்டத்தின் சுற்றாடல் மதிப்பீட்டுக் கட்டணமாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,074,821 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நில்வள ஆற்றிற்கு குறுக்கே உப்புநீர் தடை நிர்மாணிப்பதற்காக ஆலோசனைக் கட்டணமாக 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் | செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்கள் மீது ஏற்பட்ட செலவினம் நடைபெறும் வேலையாக கணக்கீடு செய்யப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டும். | இத்திட்டத்தின் செயல்பாட்டு முன்னேற்றமாக சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளை உள்ளடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள் **13.05.2021** அன்று திருத்தப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட ரூபா 9,590,000 தொகை பிற்போட்ட பொறுப்புகளிலிருந்து கழிக்கப்பட்டதுடன் உரிய செயற்திட்டங்களின் நடைபெறும் வேலைகளை இனங்காண்பதற்கோ அல்லது நடைமுறை செலவினமாக திரண்ட நட்டத்திற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறையற்ற பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | | |
| **36)** | புதிய இணைப்புகள் தொடர்பில் ரூபா 81,502,527 தொகையான மீளளிக்க வேண்டிய மற்றும் மீளளிக்கப்படாத வைப்புக்களின் மீதி சபை அனுமதி எதுவும் பெறப்படாமல் ஆண்டின் வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், ஒரு ஆண்டிற்குள் மீளளிக்க வேண்டிய மற்றும் மீளளிக்கப்படாத வைப்புக்களிற்கு உடமையான ரூபா 42,600,938 இற்கு சமமான தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மீளளிக்க வேண்டிய வைப்புகள் ஆண்டிற்கான வருமான கருதப் பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தல் | சபை நடைமுறைப் பிரகாரம், வாடிக்கையாளருக்கு புதிய இணைப்பு வைப்புகள் மீளளிப்பதற்கு மிகவும் சாத்தியமற்றிருந்தது. எனவே, 2012 ஆம் ஆண்டில் முதலாவது தடவை பின்பற்றும் நியமங்களிற்கு பின்பற்றப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினுடைய ஆண்டு வருமானத்திலிருந்து வருமானமாக கருதப்பட்டிருந்தது. | |
| **37)** | மெய்மையாய்வின் போது பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காத ரூபா 16,731,847 தொகையான வேறு இருப்பு விடயங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பொருளிருப்பாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | கணக்கேடுகளிலிருந்து பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய முடியாத இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதி பெற்ற பின்னர் புத்தகங்களிலிருந்து விடயங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **38)** | மொனறாகலை பிராந்தியம் மற்றும் தலைமை அலுவலகத்தில் மீளாய்வாண்டு மற்றும் | வருமானம் மற்றும் வருமானத்தில் சாட்டுதல் செய்யப்பட்ட வற் | 2021 ஆம் ஆம் ஆண்டில் பதிவுகள் மேற்கொள்வதன் மூலம் திருத்துவதற்கு சரியான | 2021 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்னைய ஆண்டுகளின் போது வாடிக்கையாளரிடமிருந்து வழங்கல்கள் மீது பெறுமதி சேர் வரியாக முறையே ரூபா 2,327,771 மற்றும் ரூபா 99,121 ஆன தொகை செலுத்த வேண்டியவ ற்றாக காட்டுவதற்குப் பதிலாக தவறுதலாக வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் ஆண்டு தொடக்கத்திலுள்ள திரண்ட நட்டம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | (செலுத்த வேண்டிய வற்) என்பவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | |
| **39)** | வவுனியா, மட்டக்களப்பு, களுத்துறை, பாணந்துறை பிராந்திய அலுவலகங்கள், பிராந்திய உதவி நிலையம் (சப்ரகமுவ) ஆகியவற்றின் நிலையான சொத்துப் பதிவேடுகளிற்கும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதற்கு நேரொத்த பட்டோலைகளிற்கும் இடையில் ஆதனம், பொறி உபகரணங்களின் பெறுமதியில் காணப்பட்ட ரூபா 105,427,971 கூட்டுமொத்தமான வேறுபாடு காரணமாக இறையில் ஆதன காணி, இறையில் ஆதன கட்டிடம் மற்றும் பாகப்பிரிவினைகள் போன்ற நிலையான சொத்துக்களின் மூன்று (03) உருப்படிகளின் சரியான தன்மை மற்றும் முழுமைத் தன்மையானது கணக்காய்வின் போது மதிப்பிடப்பட முடியாதிருந்தன. | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் அதற்கு நேரொத்த பட்டியல்கள் இணக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | **பாணந்துறை**<br>தேவையான ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இது சொத்துப் பதிவேட்டிற்கு எடுக்கப்படும்.<br><br>**களுத்துறை**<br>வேறுபாடுகள் 2020 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டது.<br><br>**மட்டக்களப்பு**<br>ரூபா.4,896,791 வேறுபாடு 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டது. | அட்டவணைகள் மற்றும் ஆவணங்களை சரிசெய்வதன் மூலம் வேறுபாடு அகற்றப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **40)** | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் சபையின் வர்த்தக பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வு பட்டியலகளில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் வியாபார கடன்பட்டோரில் ரூபா 131,472,986 மற்றும் புதிய இணைப்பு கடன்பட்டோரில் ரூபா 103,560,564 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியில் 13 பிராந்தியங்கள் தொடர்பில் ரூபா 3,149,283,146 தொகையான வியாபார கடன்பட்டோர் மாத்திரம் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட இணக்கக் கூற்றில் ரூபா 96,700,258 மற்றும் ரூபா 39,773,142 கூட்டுத் தொகையான முறையே ஆரம்ப மீதி வித்தியாசம், இனங்காணப்படாத வித்தியாசங்கள் முறைப்படி புலனாய்வு செய்து சரிசெய்யப்பட்டிருக்கமை அவதானிக்கப்பட்டது. | இரண்டு முறைமைகளிற்கும் இடையில் வியாபார மற்றும் புதிய இணைப்பு கடன்பட்டோரை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களில் வியாபார கடன்பட்டோரின் உண்மை தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். | நாங்கள் முறைப்படியாக இணக்கம் செய்வதற்கு எங்களுடைய வர்த்தக பிரிவு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்ததுடன் இந்த ஆண்டுண் இறுதிக்கு முன்னர் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு ஒழுங்கு செய்யப்படும். | முன்னிலைப்படுத்தப் பட்ட விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் இணக்கப்பாட்டுடன் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| **41)** | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் சபையின் வர்த்தக பிரிவின் அறிக்கையில் மீட்டர் விற்பனைகள் மற்றும் மொத்த விற்பனைகளிற்கு இடையில் ரூபா 530.38 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் புதிய இணைப்பு வருமானத்தின் பெறுமதி மற்றும் வருடாந்த வற்கை பெறுகைகளில் வெளிப்படுத்தப்பட்ட வருமானம் என்பவற்றிற்கு இடையில் ரூபா 383.42 மில்லியன் | நிதிக்கூற்று, வர்த்தக முறைமை வற் பெறுகைகளில் வருமான வெளிப்படுத்தல்கள் என்பன இணக்கம் செய்யப்பட வேண்டும். | குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்வதற்காக திருத்தும் நாளேட்டு குறிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. | வணிகத் துறை பேரேட்டுக் கணக்குகளில் கடனாளிகளின் நல்லிணக்கம் **2020** ஆம் ஆண்டிற்கான நிறைவடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்காணப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. | | | |
| **42)** | சபையினுடைய நிதிக்கூற்றுக்களுடன் உரிய தனிப்பட்ட செயற்திட்டற்களின் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடும் போது கண்டி கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம், தெதுறுஓயா நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் உலர் வலய நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் என்பபவற்றின் வெளிநாட்டு மானியங்களில் ரூபா 19,342.19 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த வித்தியாசத்தில், கண்டி கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தில் ரூபா 10,756.71 மில்லியன் வித்தியாசத்திற்காக மாத்திரம் இணக்கக் கூற்று தயாரிக்கப் பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டம் தொடர்பில் சபையின் கணக்கேடுகளில் ரூபா 97.08 மில்லியன் பெறுயுடைய கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டிருக்கவில்லை. | சபை நிதிக்கூற்று மற்றும் செயற்திட்ட நிதிக்கூற்று என்பவற்றில் வெளிநாட்டு மானியங்களிலுள்ள வித்தியாசங்கள் இணக்கம் செய்ய வேண்டியதுடன் அவசியமான உரிய நாட்குறிப்பு பதிவுகள் அனுமதிக்க வேண்டும். | திருத்தம் **2021** இல் செய்யப்பட்டது. | |
| **43)** | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுசெவ்வையின் பிரகாரம், சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிக்கும் ஐந்து (05) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பிட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் | சபையினுடைய நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு இடையில் நடைபெறும் வேலைகளிலுள்ள வித்தியாசத்தை சரியாக இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணக்கம் தயார் செய்யப்பட்டுள்ளது | இணக்கம் சமர்பிக்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 2,346.26 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாம் அவதானிக்கப்பட்டது. மேலும், தயாரிக்கப்பட்ட இணக்கக்கூற்றினை பகுப்பாய்வு செய்யும் போது தம்புத்தேகம நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-(செயற்திட்டம் iii) என்பன தொடர்பில் சபையினுடைய நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,274.81 மில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | | |
| **44)** | பன்னிரண்டு வங்கி கணக்குகள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2019 வரைடிவங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 7,250,860 மற்றும் ரூபா 33,929,517 தொகையான முறையே இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு தெளிவுபடுத்த வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் வங்கியுடன் இணைந்து இருக்கின்ற மீதிகளை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | **2021** ஆம் ஆண்டில் பல குறிப்புகள் திருத்தப்பட்டன. |
| **45)** | 2015 யூலை 08 ஆந் திகதிய PE/WS/NWSDB/GEN/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளரின் கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் 2016 பெப்ரவரி 04 இல் எடுக்கப்பட்ட அமைச்சரமை தீர்மானம் என்பவற்றின் அடிப்படையில் ரூபா 88,531,428,611 தொகையான | திறைசேரியுடன் உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட மீதி இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திறைசேரியுடன் பல விவாதங்கள் நடத்தப்பட்டு இறுதியாக மீதமுள்ள தொகையை அரசு மானியமாக கருத வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இது தணிக்கை மற்றும் நிர்வாகக் குழுவின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொதுத் திறசேரி பதிவேடுகளின் பிரகாரம, ரூபா 62,415,763,525 இற்கு சமமான தொகை சபைக்கு மூலதன பங்களிப்பாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, வெளிநாட்டு கடன்களாக சபையால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 26,115,665,086 இற்கு சமமான தொகை எவ்வித அனுமதியும் இல்லாமல் அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| **46)** | ரூபா 31.06 மில்லியன் பொறுமதின குழாயிகள் மற்றும் பொருத்திகள் இலங்கை நிதிப்பிரமாணங்கள் 806 இன் பிரகாரம் முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாமல் பிரதி பொரு முகாமையாளராக (மேல் வடக்கு) தற்போது செயற்படுகின்ற செயற்திட்ட பணிப்பாளரின் வேண்டுகையில் பிரதி பொது முகாமையாளரால் (ஊவா) 2019 யூலை முதல் 2020 சனவரி வரையான காலத்தின் போது நீர் வழங்கல் மற்றும் சுகாதர செயற்திட்டத்தின் அமுலாக்கப்பட்ட பதுளை தியத்தலாவ நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப் பட்டிருந்தது. மேலும், சபையால் சொல்லப்பட்ட பொருட்களின் | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பொருட்களை அல்லது பெறுமதியை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | | தற்போது கையிருப்பில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போக்குவரத்திற்காக ரூபா 112,926 ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஆகஸ்ட் 31 வரையும் செயற்திட்டத்திடமிருந்து மேற்குறித்த பொருட்களை பொறுவதற்கோ அல்லது பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரர் நலிவாகச் செயற்பட்டடன நிதிக் இயலளவு இன்மை காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு இரண்டு தடவைகள் கால நீடிப்பை எடுத்திருந்தார் என கணக்காய்வில் வெளிப்பட்டதுடன் 2018 இலிருந்து 2020 வரையும் 30 சதவீத பௌதீக முன்னேறறம் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனவே, ஒப்பந்தகாரரிடமிருந்து சொல்லப்பட்ட பொருட்களை அறவிடுவது ஐயத்திற்கிடமாகவுள்ளது. | | | |
| **47)** | ரூபா 1,447 மில்லியன் கூட்டுத் தொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவுகுற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் என்பன இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக என்பன அறவீடு செய்யப்படாமல் இருந்தது. மேற்குறித்த வியாபார கடன்பட்டோரில் கொழும்பு, களணி, கோட்மை மற்றும் தெஹிவளை, கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு வடக்கு பிராந்தியங்களில் | கடன்பட்டோரிலிருந் து நிலுவை தொகைகளை அறவிடுவதற்கு போதிய மற்றும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | நிலுவைகளை அறவிடுவதற்கு துண்டிப்பு திட்டம் அமுலாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | பணிநீக்கம் செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 54 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்றது. | | | |
| **48)** | அமைச்சர் விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 22 தண்ணீர் இணைப்புகள் தொடர்பில் ரூபா 7,357,065 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்படாமல் இருந்தது. அதில், ரூபா 2,823,630 ஆன தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. மேலும், மீளாய்வாண்டு இறுதிவரையும் ரூபா 100,000 மோலன பட்டியல் பெறுமதியுடைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட 37 இணைப்புக்களிடமிருந்து ரூபா 28,316,137 ஆன தொகை நிலுவையாக இருந்தது. | அமைச்சர் விடுதிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவீட்டு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வணிகத் துறை இதை சமாளித்து இப்போதும் செய்து வருகிறது. | போதிய வசதிகள் இல்லாததால், அரசு நிறுவனங்களின் நிலுவைத் தொகையை செலுத்த முடியவில்லை.<br><br>காலாவதியான சில நிலுவைகளை அமைச்சர்கள் தள்ளுபடி செய்ய வேண்டும். |
| **49)** | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாவிருக்கின்ற துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் ரூபா 1,276,725,598 ஆக இருந்தது. அதில், 85 சதவீதத்திற்கு சமமாகவிருந்த ரூபா 1,088,634,725 தொகையான கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தது. | அறவீட்டு செயற்பாடுகளை நிறைவெற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடனை செலுத்த தவறியவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில கடனாளிகளை மீட்பதற்கான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. வாடிக்கையாளர்களைப் பார்வையிட்டு, நிலுவையில் உள்ள பில்களை மீட்டெடுக்கப் பயன்படுத்தப்படும் இருப்பு மற்றும் பல்வேறு வசூல் உத்திகள் பற்றி அவர்களுக்குக் கற்பிக்கவும். | கோவிட் காரணமாக விலகல் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. ஆனால் தற்போது மீண்டும் துண்டிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன |
| **50)** | வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொழும்பு மாநகர சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இரத்தினபுரி பிரதேச சபை மற்றும் பேருவளை நகர சபை என்பன உள்ளடங்காக வெளிநிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 43,538,237 தொகையான | வைப்புகள் மற்றும் முற்பணங்களின் உள்ள தன்மையை மீளாய்வு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவீட்டு செயற்பாடுகளை நிறை வேற்றப்பட | உரிய நிறுவனங்களிடமிருந்து வைப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னிலைப்படுத்தப் பட்ட விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் இணக்கப்பாட்டுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறுகியகால வைப்புகள் அறவிடப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. மேலும், உரிய அமைச்சில் விடப்பட்ட ரூபா 4,378,828 தொகையான முற்பணம் அறவிடப்படாமல் எட்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. விரிவான தகவல்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | வேண்டும். | | விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| **51)** | ரூபா 141,422,678 மற்றும் ரூபா 65,002,525 தொகையான முறையே வியபார கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் 18 பிரதேசங்களில் 2020 திசெம்பர் 31 வரையும் தீர்ப்பனவு செய்யப்படாமல் மூன்று (03) ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. | கடன்கொடுத்தோர் அடிப்படை தரவு மற்றும் நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற கடன் என்பவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையானது உரிய கடன்கொடுத்தோரல் செய்யப்பட்ட வேண்டுகையில் அந்த கொடுப்பனவுகளை செய்கின்றது. | |
| **52)** | ரூபா 1,144.86 மில்லியன் மற்றும் ரூபா 2.61 மில்லியன் தொகையான முறையே ஒப்பந்தகாரர் பிடிகாசு மற்றும் மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்புகள் என்பன உரிய தரப்பினருக்கு விடுவிப்பதற்கு அல்லது அவற்றினை வருமானமாக கருதப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. மேலும், அந்த பிடிகாசுகள் தொடர்பான ஒப்பற்தங்கள் மற்றும் வைப்புகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தனவா என்பதை மெய்மையாய்வு செய்யவதற்கு கணக்காய்விற்காக போதிய சான்றுகள் கிதைத்திருக்கவில்லை. | பூர்த்தியாக்கலின் பின்பு சபையானது உரிய ஒப்பந்தகாரருக்கு பிடிகாசினை விடுவிக்கும். | ஒப்பந்தங்கள் முடிவடைந்த பிறகு, சபை அந்தந்த ஒப்பந்ததாரர்களுக்கு பிடிப்பணத்தினை வழங்கும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| **53)** | மொனறாகலை பிராந்தியம் தொடர்பில் ரூபா 1,854,980 தொகையான நிலுவையாகவிருக்கின்ற செலுத்த வேண்டிய வற் மீதி மூன்று ஆண்டுகளிற்கு மேலாக புலனாய்வு செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. | இது 2021 இல் அடையாளர் காணப்பட்டிருந்ததுடன் 2021 இல் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்துவதற்கு சரியான அளவீடுகள் எடுக்கப்பட்டது. | பிழையை சரிசெய்ய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| **54)** | ரூபா.18,030,810 தொகையான முன்னாள் ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. | முன்னாள் ஊழியர்களிடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. | இது குறித்து கடனை திருப்பி செலுத்தாத அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், நிலுவைத் தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | முன்கூட்டியே மீட்கும் பணி நடந்து வருகிறது |
| **55)** | 2003 முதல் 2008 வரையான காலத்தின் போது பிராந்திய ஆதார நிலையங்கில் (மத்திய) இடை நிறுத்தப்பட்ட செயற்திட்ட ங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 9,278,335 கூட்டுத் தொகையான முற்பணங்கள் மற்றும் 2021 ஏப்ரல் 30 வரையும் புனரமைப்பு செயற்திட்டங்களிற்காக தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 4,049,022 கூட்டுத் தொகையான முற்பணங்கள் அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், 2014 யூலை 08 இல் தலைமை அலுவலத்தால் வழங்கப்பட்ட ரூபா 1,148,885 தொகையான முற்பணங்கள் அறவிடப் பட்டிருக்கவில்ல என அவதானிக்கப்பட்டது. | நிலுவையாகவிருக்கின்ற முற்பணங்கள் தொடர்பில் தாமதமில்லாமல் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வெண்டும். | சட்ட நடவடிக்கைகளின் நிலை வேண்டி சபையின் சட்ட உத்தியோகத்தருக்கு கடிதம் அனுப்பபட்டிருந்ததுடன் பதில் பெறப்பட வேண்டியிருந்தது. | கட்டுமான உத்தரவாத நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான முன்கூட்டிய பணம் உத்தரவாதம் மற்றும் உத்தரவாதத்திற்கு எதிரான எங்கள் உரிமைகோரல்கள் நிதியத்தால் மதிக்கப்படவில்லை. |
| **56)** | சபையானது காலிப் பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டதின் கீழ் | அவர்களுடைய கவனயீனத்திற்காக சபையின் | இந்த நிலத்தின் உரிமையை சரிபார்க்க, இந்த நிலத்தின் | சட்ட நடவடிக்கைகள் நடந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணிப்பதற்கு காணியொன்று சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பாய்வு திணைக்கம் இந்த காணிக்கு ரூபா 71.5 மில்லியனாக டிபறுமதியிட்டிருந்தது. காணியின் பெறுமதியாக 30 சதவீததிற்கு சமமான ரூபா 21.25 மில்லியன் தொகை சிரேஸ்ர சட்ட உத்தியோகத்தர் சிபார்சில் முற்பணமாக காணி உரிமையாளருக்கு 2014 ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. பின்னர், காணியில் வசித்தோரின் உரிமையாண்மை தொடர்பான தகராறு காரணமாக முற்பணத்தை அறவிடவதற்கு நீதி மன்ற வழக்கு தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியில் காணியில் ஏற்கனவே சிலர் வசித்தனர். செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அவற்றின் மீதான தண்டப்பணம் 2021 ஏப்ரல் 30 வரையும் காணி உரிமையாளர் அல்லது சபையின் பொறுப்புடைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புடைய உத்தியோகத்தரிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | அளவீடு, முதுநிலை சர்வே கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. | வருகின்றன. |
| **57)** | 2015 ஆகஸ்ட 12 இன் Admin/12/2015 இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கையின்படி துண்டிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களிற்குள் நிலுயையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், சட்ட நடவடிக்கைகள் | பொது முகாமையாளரின் சுற்றறிக்கை மற்றும் உரியகாலத்தில் நாளதுவரையான வாடிக்கையாளர் அடிப்படையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன், துண்டிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இரண்டு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்படும். மேலும், சட்ட நடவடிக்கைக்கான தொழில்நுட்ப அறிக்கையை சமர்ப்பிக்க பிராந்திய முகாமையாளர்களின் பார்வையை மேற்கொள்ள வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா.50,000 இற்கும் அதிகமாகவிருந்த 2,713 துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் ரூபா.617,878,548 கூட்டுத் தொகையான நிலுவையாகவுள்ள கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிலுவைத் தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| **58)** | 2018 செப்தெம்பர் 26 இன் Admin/09/2018 இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கையின் பிரிவு (02) படி 5 ஆண்டுகளை விட அதிகமாக உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்ற ஊழியர்களிடமிருந்து சந்தை வீதத்திற்கு சமமான வாடகை மற்றும் சம்பளத்திருந்து 12.5 சதவீத மிகையறவீடு சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆகஸ்ட் முதல் 2020 செப்தெம்பர் வரை பிராந்திய ஆதார நிலையத்தில் (ஊவா) இரண்டு ஊழியர்களிடமிருந்து ரூபா 230,010 தொகை மற்றும் 2019 இலிருந்து 2021 மார்ச் வரை பிராந்திய ஆதார நிலையத்தில் (மத்திய) 19 ஊழியர்களிடமிருந்து ரூபா 4,688,010 தொகையான தண்டப்பண வாடகை (மிகையறவீடு உள்ளடங்க வாடகை) என்பன அவர்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக உத்தியோகபூர்வ விடுதியில் வசித்திருந்த போதிலும் 2021 ஏப்ரல் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொது முகாமையாளரின் சுற்றறிக்கையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். | | தலைவருடன் நடைபெறும் அலுவலக காலாண்டு குழுவில் இது குறித்து விவாதித்து இது குறித்து கொள்கை முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| **59)** | 2019 ஆகஸ்ட 02 இன் Admin/12/2019 | பொது முகாமையாளரின் | கொள்கைக்கு இணங்க பல மாற்றங்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கையின் பிரிவு 2.1 மற்றும் பிரிவு 2.2 க்கு முரணாக ஊவா பிராந்திய ஆதார நிலையத்தில் பன்னிரண்டு (12) உத்தியோகத்தர்கள் மற்றும் பிராந்திய ஆதார நிலையத்தில் (மத்திய) 37 உத்தியோகத்தர்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக வேலைக்கு அமர்த்தப் பட்டதுடன் பண்டாரவளை பிராந்தியத்தில் 14 மீட்டர் வாசிபாளர்கள் 04 ஆண்டுகளிற்கு மேலாக ஒரே வேலைத் தளத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். | செய்யப்பட்டுள்ளன | |
| **60)** | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் படி 2006 சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். | | மூல ஆதாரம் (SOR) முகாமை சேவைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |
| **61)** | 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரிவு 1.2 ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டு பெப்ரவரி முதல் மே மாதம் வரை தலைவரிற்காக இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். | | தேவைக்கு ஏற்ப, வாகனங்கள் அந்தந்த பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுகின்றன.<br>(iii) ஏற்படும் செலவுகள் ஒரு சபைக் குறிப்பின் மூலம் ஈடுசெய்யப்படும் |
| **62)** | 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரிவு 1.4 ஏற்பாடுகளிற்கு முரணாக 2020 யூன் முதல் 2021 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சனவரி வரை உப தலைவரிற்கு இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. | | | |
| 63) | 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரிவு 1.5 ஏற்பாடுகளிற்கு முரணாக மாதாந்தம் எரிபொருள் எல்லை 150 லீற்றர் தகுதியுடைதற்கு மேலதிகமாக திறைசேரி செயலாளரின் சிபார்சினை பெற்றுக் கொள்ளாமல் 2020 யூலை 22 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தின் அடிப்படையில் 2020 சனவரியிலிருந்து தலைவர் மற்றும் உப தலைவரிற்காக மாதாந்தம் எரிபொருள் கட்டுநிதி ரூபா 60,000 அனுமதிக்கப்பட்டிருந்தது. | | | |
| 64) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.1.4. ஆம் பிரவு ஏற்பாடுகளிற்கு முரணான 2019 சனவரி முதல் 2020 யூலை வரையான காலத்தின் போது பிராந்திய ஆதார நிலையம் (மத்திய) உதவி பொது முகாமையாளரின் எரிபொருள் செலவினமாக ரூபா 280,281 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். | | பொது முகாமை யாளரிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. |
| 65) | 2015 சனவரி 10 ஆந் திகதிய PED/ASD/02/Veh ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் படி ஓடக்கூடிய நிலையில இருக்காத மஹரகம் முகாமையாளர் | திறைசேரி சுற்றறிக்கை சுற்றறிக்கையிலுள் ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | | அந்த வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, பழுது பார்க்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகத்தில் இரண்டு பவுசர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மேல் வடக்கு பிராந்திய நிலையத்தல் ஒன்பது மோட்டார் வாகனங்கள் என்பன 2018 திசெம்பர் 31 வரையும் கைதவிர்க்கப் பட்டிருக்கவில்லை. | | | |
| **66)** | கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் வசதி உடன்படிக்கையின் **3.1**, **18.15(**இ) பகுதியின் **2** ஆம் பிரிவிற்கு மற்றும் ”எஸ்க்ரோ” ஒப்பந்தத்தின் பத்தி **11.1** க்கு முரணாக பணவளிப்பு செய்யப்பட்ட கடன் தொகையில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் USD 140,641,551 கடன் வழங்கும் நிறுவனம் அல்லது திறைசேறியின் அனுமதியின்றி ஒன்பது (09) ஐ.அ.டொலர் வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் உள்ள வசதி ஒப்பந்தங்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும். | 31/01/2020 தேதியிட்ட போர்டு பேப்பர் எண். S/303/2019-868 இன் படி, தற்காலிக அடிப்படையில் சபை அமெரிக்க டாலர் நிலையான வைப்புகளில் ரூபா. 15,273.76 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக சீன அபிவிருத்தி வங்கிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, அமெரிக்க டாலர் நிலையான வைப்புக் கணக்குகளில் செலுத்தப்படாத அனைத்து நிதிகளையும் அமெரிக்க டாலர் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றவும், வட்டி வருவாயைப் பயன்படுத்தி திட்டத்தின் கடன் சேவையை செலுத்திய பிறகு திருப்பிச் செலுத்தவும் சீன மேம்பாட்டு வங்கி அறிவுறுத்தப்பட்டது.<br>அதன்படி, அமெரிக்க டாலர் நிலையான வைப்பு கணக்குகளில் உள்ள அனைத்து நிதிகளையும் அமெரிக்க டாலர் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றியுள்ளோம். | |
| **67)** | 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் படி வெளிநாட்டு நிதியீட்டம் மூலம் நிதியளிக்கப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக ஒரு உள்ளக கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார். | முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை | |
| **68)** | நிதிப்பிரமாணம் 156(8) மற்றும் சயையின் நெறிமுயையின் விதியின் 1.12 ஆம் பிரிவுக்கு | நிதிப்பிரமாணம் மற்றும் சயையின் நெறிமுயையுடன் நேரடியாக | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முரணாக பண்டாரவளை முகாமையாளர் அலுவலகத்தில் ஒப்பந்த அப்படை சேவையின் கீழ் ஈடுபடுத்தப்பட்ட மீட்டர் வாசிப்பாளர்களால் ரூபா 706,205 ஆன ஒதுக்கப்படாத வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | இணங்குவதை உறுதிப்படுத்தல். | | |
| **69)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 751(1) ஆம் பிரிவின் படி சகல இப்புக்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்விற்கு முன்னர் இருப்பு பதிவேட்டில் பதியப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 472,355,262 கூட்டுத் தொகையான இருப்பு பெறுவனவுகள் மற்றும் 24 பிராந்தியங்களின் 157 காட்சியறைகளில் ரூபா 586,914,207 கூட்டுத் தொகையான தேறிய இருப்பு வழங்கலகள் மெய்மையாய்வின் பின்னர் இருப்பு மீதிக்கு சீராக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்தல் | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை | |
| **70)** | மாதிரி கணக்காய்வு செவ்வையின் பிரகாரம், பண்டாரவளை முகாமையாளர் அலுவலகம் தொடர்பில் 39 விடுதிகளிலிருந்து ரூபா 50 முதல் ரூபா 900 வீச்செல்லை மாத்திரம் மாதாந்த வாடகை சாட்டுதல் செய்யப்படுகின்றன. தாபன விதிக் கோவையிலுள்ள பந்தி **XIX** இன் **5** ஆம் பிரிவுக்கு முரணாக பிராந்திய ஆதார நிலையம் (மத்திய) தொடர்பில் ரூபா 130 முதல் ரூபா 1,900 | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதலை உறுதிப்படுத்தல். | | காலாண்டுகளின் வாடகை அளவு மற்றும் வகை போன்றவற்றைப் பொறுத்து மாறுபடலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையான வீச்சில் மாத்திரம் மாதாந்த வாடகை சாட்டுதல் செய்யப்படுகின்றன. | | | |
| **71)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவை (அ) பந்தி XIV இன் 8.1.2. ஆம் பிரிவுக்கு முரணாக முன்னனுமதி பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகபூர்வ பயணங்களிற்காக அவர்களுடைய சொந்த வாகனங்களை பயன்படுத்துவதற்காக 12 ஊழியர்ககளிற்கு ரூபா 967,412 செலுத்தப்பட்டிருந்தது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை | |
| **72)** | அநுராதபுரம் பிரதேசத்தில் அரச நிறுவனங்களின் சட்டப்பிரிவு **6.1** க்கு முரணாக ஊழியர்களால் **07** முதல் **27** ஆண்டு வரையிலான காலம் **11** குடியிருப்புகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. | நிறுவனங்கள் தாபன விதிகளுக்கு இணங்குவதை உறுதிசெய்யவும். | சபை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது, மேலும் நடவடிக்கைகள் இன்னும் நடந்து வருகின்றன. | |
| **73)** | FIDIC வழிகாட்டலின் (நிர்மாண ஒப்பந்த நிபந்தனைகள்) 14.6 ஆம் பிரவுக்கு முரணாக மாத்தறை கட்டம் (iv) நீர் வழங்கல் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் போது இடைகால கொடுப்பனவு சான்றிதழ் 08 மற்றும் 09 மீதான மொத்த ஒப்பந்த பெறுமதியின் 2.5 சதவீதத்தை விட குறைவாக கொடுப்பனவுகள் செய்யப் பட்டிருந்தது. | FIDIC வழிகாட்டலின் மற்றும் ஒப்பந்த நிபந்தனையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல். | திட்டமிட்டபடி தேசிய வளர்ச்சி வங்கிக்கு வட்டி செலுத்தப்படும். | |
| **74)** | 1999 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய DMS/H&UD/3 ஆம் இக்கம் மற்றும் செப்தெம்பர் 01 ஆந் | பொறியியல் உத்தியோகத்தர் களிற்கு ஆலோசனை | எதிர்காலத்தில் மேலும் நடைமுறைகளை நெறிப்படுத்தும் நோக்கில் ஆலோசனை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிய DMS/F2/NWSDB/01 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக அலுவலக நாட்களின் பின்னர் மற்றும் விடுமுறை நாட்களின் போது வேலைகள் செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்தாமல் செயற்திட்டத்திற்கு வெளியே வழங்கப்பட்ட ஆலோசனை சேவைகளிற்காக சபையின் பொறியியலாளர்களிற்கு 2001 இலிருந்து 2014 வரை ஆலோசனைக் கொடுப்பனவாக ரூபா 91.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கட்டண கொடுப்பனவு தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அறிவுறுத்தல்களுட ன் இணங்குவதை உறுதிப்படுத்தல். | நெறிப்படுத்தல் குழு ஆலோசனை வேலைகள் அலுவலக நாட்களின் பின்னர் மற்றும் விடுமுறை நாட்களின் போது வேலைகள் செய்யப்பட்டது என ஒவ்வொரு ஆலோசனை குழு உறுப்பினரிடமிருந்தும் தனிப்பட்ட உறுதிப்படுத்தல்கள் பெறப்படும். | |
| **75)** | 2016 பெப்ரவரி 12 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாகயாழ்ப்பாணத்தில் ரூபா 5,390,596 தொகையான stand post இணைப்புக்களை வழங்குவது தொடர்பான வியாபார பெறவேண்டியவைகள் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல | மீட்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் தோல்வியடைந்தன. | |
| **76)** | 1999 முதல் 2006 ஆம் ஆண்டுகளின் போது திருகோணமலை, களணி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.64 மில்லயன் தொகயான காசு மோசடிகள் 2021 ஏப்ரல் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், திருகோணமலை பிராந்தியத்தின் ரூபா 171.9 மில்லியன் காசு | எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்ட நிலைகளிலிருந்து பாதுகாப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் எடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தல். | தற்போது திருகோணமலை உயர் நீதிமன்றத்தில் சட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்ற ன. களணி காசு மோசடிக்காக ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் அவரை சிறைப்படுத்த தண்டனை வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கிறிமினல் குறிற்த்தின் | குற்றம் சாட்டப்பட்டவர்களிட மிருந்து மீளப்பெறுவதற்கு திருகோணமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | மோசடியில் ரூபா 24.15 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோராக பதியப்பட்டிருந்தது. மேலும், 2001 ஆம் ஆண்டின் போது பண்டாரவரளை பிராந்தியத்தில் இடம் பெற்ற ரூபா 272,735 ஆன காசு மோசடி 2020 திசெம்பர் 31 வரையும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | ஒரு பகுதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேற்குறித்த நபர்களிடமிருந்து நிதி நட்டங்களை அறவிடுவதற்கு சிவில் வழக்குகளை தொடர்ந்திருந்தது. | |
| **77)** | 2000 முதல் 2001 வரையான காலத்தின் போது குருநாகல் பிராந்தியத்தில் நிகழ்ந்த ரூபா 1,337,135.19 ஆன காசு மோசடி அறவிடப் பட்டிருக்காததுடன் 2019 மார்ச் 31 வரையும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்குறிப்பிடப்பட்ட நிலைகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இங்கு உள்ளக கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்தல். | தற்போது சட்ட நடவக்கைகளின் கீழ் உள்ளதுடன் சட்டமா அதிபர் திணைக்களம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றது. | நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் காசாளர் மொத்த தொகையையும் சபையிடம் தீர்த்து வைத்தார் |
| **78)** | 2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டதின் 22(6) (iv) பிரிவிற்கு முறணாக ஒரு ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்ட 48 விலைப்பட்டியல்களின் ரூபா 2,224,236 தொகையான உள்ளீட்டு வரி 2019 இன் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளிற்காக வெளியீட்டு வரியிலிருந்து கோரப்பட்டிருந்தது. | பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல். | எதிர்காலத்தில் இந்த நிலையை தவிர்பதற்கு பிராந்திய நிலையங்களிற்கு அறிவிக்கப்பட்டது. | இந்த சிக்கலை தீர்க்க பயனுள்ள நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. |
| **79)** | 2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டதின் 26 (i) பிரிவிற்கு முறணாக 2019 இன் நான்காவது காலாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 38,802,349 தொகையான வற் 6 மாத | பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல். | சபையால் அதன் வணிக நடத்தையில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக வெட் வரியை உரிய திகதியில் சமர்ப்பிக்க முடியவில்லை. | இந்த சிக்கலை தீர்க்க பயனுள்ள நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாமதங்களுடன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 இன் முதல் மூன்று காலாண்டுகளிற்கான வற் பெறுகைகள் 11/2 மாதங்கள் முதல் மூன்று மாதகால தாமதங்களுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | | |
| **80)** | 2019 யூலை 09 ஆந் திகதிய CGIR/2019/3V (INS&Cir) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கையின் 03ஆம் பிரிவிற்கு முறணாக கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், ரூபா 501,513 தொகையான பெறுமதி சேர் வரி மீளாய்வாண்டின் போது செயற்பாடற்ற வழங்குநர்களின் வற் இற்கு செலுத்தப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரி திணைக்களச் சுற்றறிக்கைகளுடன் . கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல். | இந்தத் தொகை ரூபா. **501,513** ஏழு ஒப்பந்ததாரர்களுக்குச் சொந்தமானது மற்றும் அந்தந்த தொகையை IRD க்கு செலுத்தவும், NWSDB பிராந்திய அலுவலகங்களில் பிரதிகளை சமர்ப்பிக்கவும் நாங்கள் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளோம். | பணம் செலுத்தும் முன் செயல்படாத VAT ஆவணங்களை சரிபார்த்து பணம் செலுத்துமாறு உள்ளூர் அலுவலக அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள் ளது. |
| **81)** | 2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 2A பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2019 நவம்பர் 29 ஆந் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலுக்கு முறணாக<br><br>தெஹிவளை, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை பிராந்தியம் மற்றும் தலைமை அலுவலகத்தின் விசேட செயற்திட்ட பிரிவு என்பன சனவரி மாதத்தின் போது நிலக்கீழ் நீர் வருமானம், புதிய இணைப்பு வருமானம், கழிவகற்றல் வருமானம் மிட்டர் விற்பனைகள் மற்றும் பவுசர் வழங்கல்கள் என்பவற்றின் மீது 8 | பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல். | இது பிராந்தியங்களால் பிந்திய வருமான வெளிப்படுத்தல் காரணமாக உள்ளது. | வாடிக்கையாளர்க ளிடம் வசூலிக்கப்பட்ட VAT முழுவதையும் உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதத்திற்கு பதிலாக 15 சதவீதம் சாட்டுதல் செய்திருந்தது. தலைமை அலுவலகத்தின் மீள்சுழற்சி வருமானத்தின் ஒரு பகுதி 2020 இன் ஆறு மாத காலத்தின் போது 8 சதவீதத்திற்கு பதிலாக 15 சதவீதம் சாட்டுதல் செய்திருந்தது. இதன் விளைவால் ரூபா 7,096,144 தொகையான மேலதிக பெறுமதி சேர் வரி சாட்டுதல் செய்யப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது. | | | |
| **82)** | SEC/2012/04 ஆம் இலக்க எளிமைப்படுத்திய பெறுமதி சேர் வரி முறைமை மீதான வழிகாட்டலின் 14 ஆம் பிரிவுக்கு முறணாக 2020 ஆம் ஆண்டிற்கான முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகள் தொடர்பில் முறையே ரூபா **2,613,627** மற்றும் ரூபா **3,001,882** தொகையான எளிமைப்படுத்திய பெறுமதி சேர் வரி (SVAT) உறுதிச் சீட்டுகள் **2021** மார்ச் **30** வரையும் சேகரிக்கப் பட்டிருக்கவில்லை. | எளிமைப்படுத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல். | வவுச்சர்களை பௌதீக ரீதியாக சேகரிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, அனைத்து SVAT வாடிக்கையாளர்களுக்கும் தபாலில் வவுச்சர்களை அனுப்புமாறு தெரிவித்துள்ளோம். | |
| **83)** | களு ஆற்றில் குடிநீருடன் கடல் நீர் கலப்பதற்கான தீர்வொன்றாக உவர்ப்பு நீர் தடையை நிர்மாணிப்பதற்கு ரூபா 11,284,500 ஒப்பந்த தொகையில் 2016 பெப்ரவரி 03 இல் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், நிர்மாண நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் நீரில் உப்புத் தண்ணீர் கலப்பது எதிர்பார்க்கப்பட்டவாறு | (i) உரிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஒப்பந்தங்கள் திட்டமிடப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல்.<br>(ii) ஒப்பந்தமொன்று ஆரம்பிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்ப | ஒப்பந்தத்தை சபைக்கு வழங்குவதில், அப்பகுதியில் உள்ள **250,000** க்கும் மேற்பட்ட மக்களை பாதிக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண நேர்மையான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. திடீர் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட துரதிஷ்டவசமான நிகழ்வு ஒப்பந்ததாரர் மற்றும் சபையின் கட்டப்பாட்டிற்கு அப்பாற்பட்டதென்பது தெளிவாக உள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்க்கப்பட்டிருக்காததனால் ஏற்பட்ட முழுச் செலவினமும் சிக்கனமற்றதாக காணப்பட்டது. | டும் வரை முறையான கண்காணிப்பு பொறிமுறையெ ான்று காணப்படுவதை உறுதிப்படுத்து தல். | | |
| **84)** | கடன நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தின் நிகழத்தக்க நிதியேற்பாடுகளை பயன்படுத்தி 1000$m^3$ இயலளவு ஒன்றுடன் நிலத்தடி நீர்த்தேக்கம் மற்றும் பம்பி இல்லமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 67,368,370 ஒப்பந்தப் பெறுமதியில் உப ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும் உப ஒப்பந்தத்திற்குரிய பெறுகை நடவடிக்கைகளின் போது தீவிரமாக இணக்கம் செய்யப்படாமல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களுடாக உப ஒப்பந்ததாரரிற்கு நிதிகளை அனுப்பும் போது பிரதான ஒப்பந்ததாரரால் இலாப எல்லையாக ரூபா 8,084,204 தொகை அறவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிற்க ான தேவையற்ற கொடுப்பனவுகளை தடுக்கும் பொருட்டு ஒப்பந்த ஆவணங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிகள் காணப்படாததன் காரணமாக ஒப்பந்தத்தை வழங்குவதனூடாக வேலை மேற்கொள்ளப்பட்டிருந்த து. ஆகையால் ஒப்பந்ததாரர் 12% எல்லையை மேந்தலையாக அறவிட்டிருந்தார். | |
| **85)** | ஊழியர் இலக்கம் 2022982 இனை கொண்ட சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் ஒழுக்காற்று புலனாய்வு தீர்மானங்களிற்கு உட்படுத்தப்பட்டு 2017 மார்ச் 1 இல் மீள பதவி வழங்கப்பட்டு கடமைகளெதுவுமின்றி 2017 மார்ச் 30 இல் சபையின் | நடைபெற்றுக்கொ ண்டிருக்கும் ஊழியர்களின் ஒழுக்காற்று புலனாய்வுகளை துரிதப்படுத்துவதற் கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் மனித வளங்களின் முழுமையான | அந்த ஊழியர்கள் சபைக்கு எதிராக பல நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்துள்ளனர். கூடுதல் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை. | இந்த நியமனம், அதிகாரபூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே மற்றும் கூடுதல் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில்நுட்பக் கணக்காய்வுப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டிருந்தார். எனினும் 2017 மார்ச் 31 தொடக்கம் 2020 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதிக்கு மிகையூதியம் உள்ளடங்கலாக தனிப்பட்ட வேதனாதிகளாக அவ் ஊழியரிற்கு ரூபா 6,637,668 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பயன்பாட்டை உறுதிப்படுத்துதல். | | |
| **86)** | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டமொன்று மற்றும் மூன்று உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் சபையால் தவணைப்பண திருப்பிச் செலுத்தல்களிலுள்ள தாமதத்தால் தண்டப்பண வட்டியாக ரூபா 7,653,137 இற்கு சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தண்டணை வட்டி ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் உரிய நெரத்தில் கடன் செவை கொடுப்பனவை திருப்பிச் செலுத்துவதற்கும் அவற்றினை பதிவழிப்பதற்கு உரிய நிதி நிறுவனங்களுடன் பேரம் பேசும் சாத்தியம் இருக்குமாயின் அவசியமான நடவடிக்கை எடுக்க வெண்டும். | | அபராதத் தொகையை நீக்குமாறு வங்கியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டாலும், வங்கி ஒப்புக்கொள்ளவில்லை. |
| **87)** | 2016 ஆம் ஆண்டின் பொது நிலவிய சந்தை வீதங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பந்தகாரரின் அளவீட்டு பட்டியலின் மேலதிக மதிப்பீடு காரணமாக பதுளை, காலிஎல நீர் வழங்கல் செயற்திட்டத்தில் 7 விடுதிகளின் நிர்மாணத்திற்காக ரூபா 39.92 மில்லியன் மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் அசாதாரண ஏற்பாடுகள் உள்ள விலைப்பட்டியல் விடயங்கள் தொடர்பில் பேரம்பேசுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்ட முகாமைத்தவ பிரிவின் உத்தியோகத்தர்கள் வழிகாட்டல் ஒன்றாக அனுமதிக்கப்பட்ட கிரய விபரங்கள் மற்றும் எல்லை கொடுப்பனவு பட்டியல் என்பவற்றினை பின்பறினார்கள | |
| **88)** | கடன் மீது செலுத்த வேண்டியவ வட்டியைவிட 0.6 சதவீத பெறுவனவு செலுத்தப்பட்ட ஐ.அ டொலர் வைப்புக்களில் | எதிர்பார்த்த செயற்திட்ட நோக்கங்களை அடையும் நோக்கில் உரிய | | சீனா டெவலப்மென்ட் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் வபையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பஹா, அத்னாகல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த செயற்திட்டம் மீது பெறப்பட்ட நிதிகள் முதலீடு செய்யப்படுவதனால் 2019 ஒக்தோபர் 18 முதல் 2020 ஒக்தோபர் 30 வரை காலத்தின் போது சபையால் ரூபா 93 மில்லியனிற்கு சமமான ஐ.அ. டொலர் 502,779 நட்டமொன்று ஏற்பட வேண்டியிருந்தது. | திகதியில் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு செயற்திட்ட நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | முடிவுகளுக்கு இணங்க, USD நிலையான வைப்பு கணக்குகளில் செலுத்தப்படாத அனைத்து நிதிகளையும், கணிசமாக குறைந்த வட்டி விகிதத்தைக் கொண்ட USD சேமிப்புக் கணக்கிற்கு சபை மாற்றுகிறது. |
| **89)** | வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 06 இணைப்புகளை வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டின் வருடாந்த பாவனை 439,607 கன மீற்றராக இருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இது 2021 மார்ச் 31 வரையும் பட்டியலிடப் பட்டிருக்கவில்லை. | சகல தண்ணீர் பாவனையும் பட்டியலிடப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். | | இலவச குடிநீர் என்ற வகையை மாற்ற முடிவு செய்யப்பட்டது. |
| **90)** | பிராந்திய ஆதார நிலையத்தின் (மத்திய) கட்டிட புதுப்பித்தலிற்கான வடிவமைப்பு மற்றும் ஆலோசனை ஒப்பந்தம் ரூபா4.3 மில்லியன் ஒப்பந்த தொகைக்காக 2020 சனவரி 01 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்விடத்திலுள்ள சிவில் பொறியியலாளர், நில அளவையாளர் மற்றும் வடிவமைப்பாளர் என்போரை கொண்டுள்ள வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு தனியாக உள்ள போதிலும் 2020 செப்தெம்பர் 11 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | சபையின் மனித வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல். | | குழுவில் பணியாற்ற கட்டிடக் கலைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். |
| **91)** | மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட பொல்கஹவெல, பொதுஹெர, அளவ்வ ஒருங்கிணைந்த நீர் | நிதிகள் காணப்படாததால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை | | **376.52** மில்லியன் ரூபா தாமதக் கட்டணமாக, சபையிடம் போதிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கல் செயற்திட்டம், தேதுறு ஓயா நீர் வழங்கல் செயற்திட்டம், ஆனமடுவ நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் களனி வலது நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் (ii) தொடர்பாக துறைமுகத்திலிருந்து மூலப்பொருள் கொள்கலன்களை விடுவிப்பதில் தாமதம் காரணமாக ரூபா 376.52 மில்லியன் கூட்டுத்தொகையான தொகையொன்று தாமதக் கட்டணங்களாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | தாமதமின்றி விடுவிப்பதற்கு அல்லது தாமதமாக இறக்கப்படுவதற்கு ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | | நிதி இல்லாத காரணத்தால், வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. |
| **92)** | சந்தைப் பெறுமதியுடன் ஒப்பிடும் போது தேதுறு ஓயா நீர் வழங்கல் செயற்திட்டத்தில் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 21 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | அசாதாரண ஏற்பாடுகளுடன் பீஓகியூ விடயங்கள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல். | | இது வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தமொன்றாக உள்ளதால் இதனை பிரிக்க முடியாதுள்ளது. |
| **93)** | சபையானது காட்சியறை மற்றும் ஊழியர் விடுதிகள் நிர்மாணிப்பதற்கு களுத்துறையில் 1981 இல் காணியொன்று சுவீகரிக்கப் பட்டிருந்ததுடன் காணி உரிமையாளருக்கு இழப்பீட்டு கொடுப்பனவிற்காக 1991 இல் ரூபா 531,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏற்கனவே காணியில் சட்டவிரோதமாக சில குடும்பங்கள் வசித்திருந்தனர். எவ்வாறாயினும், காணிச் சுவீகரிப்பின் 39 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் உரிமையாண்மையை பெறுவதற்கு 2020 யூலை 21 இல் சட்ட நடவடிக்கைகள் | சபையின் சொத்துக்கள் உரிமையாண்மை பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தல். | | இது களுத்துறை நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது. இதன்மீது உள்ளக புலனாய்வும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த விடயத்தை கையாள்வதற்கு இரண்டு சட்ட உத்தியோகத்தர்கள் சபையில் ஏற்கனவே வேலைக்கமர்த்தப்பட்ட போதிலும் வெளியிலிருந்து ஒரு சட்டத்தரணியை ரூபா 991,875 செலவில் வாடகைக்கு அமர்த்தியிருந்தனர். | | | |
| **94)** | ஆண்டின் இறுதியில் 23.56 சதவீதத்திற்கு குறைப்பதற்கு சபை திட்டமிடப்பட்ட பொதிலும் மீளாய்வாண்டில் மொத்த உற்பத்தியில் வருமானமற்ற தண்ணீர் 24.63 சதவீதம் தொடர்புபட்டது. கசிவு, சட்டவிரோத இணைப்புகள், இலவச நீர் வழங்ககல் மற்றும் நிர்வாக திறமையீனங்கள் போன்றவற்றால் சபைக்கு நட்டங்களை ஏற்படுத்திய போதிலும். வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி புறம்பாக கணக்கிடுவதற்குப் பதிலாக சாதாரண கிரயமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் 39 சதவீதம் பதிவாகியிருந்த அதேநேரம் கோட்டை, தெஹிவளை, காலி, கண்டி, கேகாலை, பண்டாரவளை மற்றும் திருகோணமலை பிராந்தியங்கள் மீளாயவாண்டின் போது 25 சதவீதத்திற்கு மேலாக பதியவாகியிருந்தது. | வருமானமற்ற தண்ணீர் குறைப்பு மீது அதிக கவனம் செலுத்துவதற்கு மற்றும் அதன் மீது குறிப்பிடத்தக்களவு பாதீட்டு ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | NWSDB ஆனது PVC குழாய்களை DI குழாய்கள் மூலம் மாற்றுதல், திறன் மேம்பாடு மற்றும் NRW சதவீதத்தை குறைப்பதற்காக கொலன்னாவ மற்றும் கோட்டே பகுதிகளுக்கு NRW கட்டுப்பாட்டு திட்டங்களை அடையாளம் காண்பது மற்றும் ADB நிதியின் கீழ் கோட்டே பகுதியில் புதிய DMA கருத்தை நடைமுறைப்படுத்துதல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தியுள்ளது. டிசம்பர் 2021 இறுதிக்குள் NRW ஐ 20% ஆகக் குறைக்க, தவறான மீட்டர்கள் மற்றும் பூஜ்ஜிய மதிப்பீடு செய்யப்பட்ட பில்களைப் படிக்கவும், சிறப்பு சட்டவிரோத கண்டறிதல் திட்டத்தை செயல்படுத்தவும், பாதிக்கப்படக்கூடிய குழாய்களை HDPE குழாய்களால் மாற்றவும், மின்னணு மொத்த மீட்டர்களை நிறுவவும். | |
| **95)** | ரூபா 127,794,411 பெறுமதியான பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாக இருப்புகள் 2019 ஆகஸ்ட் 20 அவவற்றினை கேள்வி கோரி | பழுதடைந்த மற்றும பயன்படுத்த முடியாத இருப்புகள் உடனடியாக கைதவிர்ப்பதற்கு | | பெரும்பாலானவை அகற்றப்பட்டு, மீதமுள்ளவை அகற்றும் பணியில் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைதவிர்ப்பதறகு சபை அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| | ஆனால் மொனராகலை குமாரவத்தை தோட்டத்தில் உள்ள பாரவில இறப்பர் காணியை குத்தகைக்கு அரசாங்க மதிப்பீட்டாளரிடம் இருந்து அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட வில்லை. | | | |
| 03. | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான சட்டங்களின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சிகளுக்குச் சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு வழங்கும் போது சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி காணப்படுமாக இருந்தால் தவிர ஏனைய சந்தர்ப்பங்களின் போது அது 30 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 03 தேயிலைத் தொழிற்சாலைகள் 50 ஆண்டுகள் காலம் வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | பிரச்சனை இது வரை தீர்க்கப்படவில்லை. |
| 04. | 2015 மே 25, திகதியிட்ட அரச வணிகச் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2015க்கு முரணாக MM 1-1 சம்பளத் தொகுதிக்கரிய கணக்காளளர், மனித வள முகாமையாளர், சட்ட முகாமையாளர், முகாமையாளர் (வனம்) உள்ளக கணக்காய்வுவாளர் ஆகிய பதவிகளை வகிக்கம் ஆறுபேருக்கு மாதாந்தம் | தற்போதுள்ள சட்டங்கள் மீரப்படக்கூடாது. | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை, அதற்கான உதவித்தொகை 2022 பெப்ரவரியில் வழங்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | போக்குவரத்து படிகளாக ரூபா 50,000 வீதமும் ஒவ்வொரு பதவிகளுக்காக தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் லீற்றர் அளவிற்காக படியொன்று உட்பட 2019 ஆம் ஆண்டில் ரூபா 4,603,760 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, 1972 இன் 11 ஆம் விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் 5 மற்றும் 8 ஆம் பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அப்பிரிவுகளில் இவ்வாறான படிகள் கொடுப்பனவு தொடர்பாக திட்டவட்டமாக தகவல் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | | | |
| 05 . | மொனராகலை குமாரவத்த தோட்டத்தின் பாரவில பிரிவில் 15 ஹெக்டேயர் காணியில் இறப்பர் செய்கையை சபை ஆரம்பித்திருந்ததுடன், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை ரூபா 8,346,368 ரூபாய் செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபைக்கும் தொடர்புடைய குத்தகைதாரருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட 158 ஆம் இலக்க ஒப்பந்ததின் படி அக்காணியை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் சபை 30 ஆண்டுகளுக்கு குத்தகையாக ரூபா 11,423,415 மொத்தமாக பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, இந்தக் | இந்த இறப்பர் செய்கை உட்பட முழு காணிக்கும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டன் பின்னர்னுகுத்தகை தொகையை திருத்தம் செய்வதற்கு ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். | எவ்வித தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணியைக் குத்தகைக்கு வழங்கி உரிய பயிர்ச்செய்கைக்கு செலவிட்ட செலவுக்கு ஏற்றவாறு நலனொன்றைப் வருமானத்தைப் பெறுவதற்குரிய ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | | | |
| 06. | 2017 முதல் 2019 வரை சபையால் வெளியிடப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளின் பரகாரம் 16 தோட்டங்களின் சராசரி விற்பனை பெறுமதியுடன் ஒப்பிடும்போது, ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திச் செலவு எதிர்மறையாக இருந்தது, இது 2017 ரூபா 100 முதல் ரூபா 594 இற்கும் இடைப்பட்ட வீச்சிலும் 2018 இல் ரூபா 53 முதல் ரூபா 487 இற்கு இடைப்பட்ட வீச்சிலும் காணப்பட்டதுடன் அது 2019 ஆம் ஆண்டில் ரூபா 573 முதல் ரூபா 2109 ஆன வீச்சு வரை மறை பங்களிப்பு அதிகரிப்பினை அவதானிக்க முடிந்தது. அதன்படி, ஒரு கிலோகிராம் தேயிலை விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியாத நிலைமையில் தொடர்ந்தும் காணப்பட்டது. | ஒரு கிலோ கிராம் தேயிலை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வுரமானத்தில் அதற்காக செலவிடப்படும் உற்பத்தி கிரயத்தை மேவுகை செய்யும் வகையில் செயற்திறனான வகையில் தேயிலை உற்பத்தி, மற்றும் கிரய முகாமைத்துவம் செய்து விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |
| 07. | பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட பயிர் புள்ளி விபரங்களின் பிரகாரம் ஒரு ஹெக்டேயரில் மாதாந்த சராசரி விளைச்சல் 1600 கிலோ கிராம்களாக இருந்த போதும் 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சபையின் அனைத்து | பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட பயிர் புள்ளி விபரங்களின் பிரகாரம் ஒரு ஹெக்டேயரில் மாதாந்த சராசரி விளைச்சலை பேணுவதற்காக சபையின் தோட்டங்களை முறையாக பராமரிப்பதற்கும் முறையான பசளையிடுவதற்கும் | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தோட்டங்களிலிலும் விளைச்சல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது தோட்டங்களில் அப்பெறுமதி 335 கிலோ கிராம்களிலிருந்து 733 வரையான குறைந்த வீச்சினை எடுத்திருந்தது. | முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | | |
| **08.** | மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையினால் நிருவகிக்கப்படுகின்ற **16** தேயலைத் தோட்டங்களின் **10,165** ஹெக்டேயர் அளவான தேயிலை செய்கைக்கு ஒதுக்கீடு செய்த காணி அளவு தொடர்பாக சபையினால் தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தன. (Hectarage statement **2019)** அந்த அறிக்கையின் பிரகாரம் மொத்த பூமியில் தேயிலை மற்றும் ஏனைய பயிர் செய்கைக்கு **4,895.79** ஹெக்டேயர் அளவிலான காணி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. கட்டிடங்களுக்காக வரும் **1214** ஹெக்டேயர் அளவிலான காணியின் அளவு ஒதுக்கப்பட்ட பிறகு **4054.97** ஹெக்டேயர் அளவிலான காணி தேயிலை செய்கைக்காக பயன்படுத்தப்படவில்லையெனவும் அது மொத்த காணி அளவில் **39.89** சதவீதமான அளவொன்றாக இருப்பதால் இக்காணியை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்து வதற்கு சபையிடம் திட்டமொன்று இல்லையெனவும் அவதானிக்கப்பட்டது. | சபையிடமுள்ள காணியை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் எடுக்க வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 09. | இறப்பர் பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கீடு செய்த காணி அளவு தொடர்பில் சபையினால் தயாரிக்கப்பட்ட காணிப் பதிவேட்டின் (Hectarage statement 2019 பிரகாரம்) இறப்பர் பயிர்ச்செய்கைக்காக 2177 ஹெக்டேயர் இருந்த போதும் இறப்பர் பயிர்ச் செய்கைக்காக 742 ஹெக்டேயரும் ஏனைய பயிர்களுக்காக 26 ஹெக்டேயர் மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் 1408 ஹெக்டேயர் அளவில் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் மொத்த காணி அளவில் 64.6 சதவீதம் இறப்பர் செய்கைக்கு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. இக்காணி பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்து வதற்காக சபையிடம் திட்டமொன்று காணப்படவில்லை. | சபையிடமுள்ள காணியை செயற் திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தும் வகையில் திட்டங்களைத் தயாரித்தல் திட்டம் உச்ச அளவில் வரும் வரை நடவடிக்கை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |
| 10. | சபை பராமரித்து வருகின்ற காணிகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் அதிகாரமற்ற நபர்கள் கைப்பற்றியுள்ள காணிகளின் அளவு 313 ஏக்கர்களாகத் குறிப்பிடப்பட்டிருந்தும் கணக்காய்வு வெளிப்படுத்திய தகவல்களின் பிரகாரம் 893 நபர்களால் 861 ஏக்கர் கணிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அதிகாரமின்றி கைப்பற்றப்பட்டிருந்தும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது குத்தகைப் | சபைக்குச் சொந்தமான காணிகளை அதிகாரமின்றி கைப்பற்றுதல் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணத்தை அறவீடு செய்வதற்கோ நடவடிக்க எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | |
| 11. | உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்யும் போது தேயிலை ஆணையாளரால் வெளியிடப்பட்ட விலைகள் அல்லது அதை விட கூடிய விலைகள் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், மஹவில தொழிற்சாலையின் தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்யும் போது வெளித்தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது தேயிலை ஆணையாளர் வெளிப்படுத்திய விலையை விட குறைந்த விலையை நிர்ணயித்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3.75 மில்லியன் வருமானம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட விலைகளின் பிரகாரம் தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்தல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |
| 12. | 1995 செப்தெம்பர் 21 ஆந் திகதிய SAI/A/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு வருடாந்த குத்தகைப் பணம் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை அக்குத்தகைப் பணம் 50 சதவீதத்தால் | அரசாங்க காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை 50 சதவீதத்தால் அதிகரிக்கும் வகையில் குத்தகைப் பணத்தை தீர்மானித்தல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகரிக்கும் வகையில் குத்தகை கணிக்கப்படுதல் வேண்டும். எனினும், சபையினால் 2001 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்ட ஹந்தானை தோட்டத்தின் 01 ஏக்கர் 1.3 பேச்சஸ் அளவான தொழிற்சாலை மற்றும் 1986 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு வழங்கிய மேலும், 03 தோட்டங்களின் 64.55 ஹெக்டயர் காணிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுட ன் சமமான குத்தகைப் பணம் அறவிடுவதன் காரணமாக சபையினால் அறவிடப்பட வேண்டியதாகவிருந்த ரூபா 32.24 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | | |
| 13. | ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட தயாரிப்பு மதியரைர் ஒருவருக்கு போக்குவரத்துக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 50,000 வீதம் ரூபா 476,667 ஆன போக்குவரத்துப் படியாகவும் அந்த உத்தியோகத்தர் உட்பட பெருந்தோட்ட முகாமையாளர் மற்றும் தயாரிப்பு மதியுரையாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மேலும் இரண்டு ஒப்பந்த உத்தியோகத்தர் களுக்காக ரூபா 410,400 ஆன எரிபொருள் படிகளும் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்படுவதற்கு முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது, இக்கொடுப்பனவு 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5 மற்றும் 8 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும், அந்தப் பிரிவுகளில் அத்தகைய கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | | | |
| **14.** | தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் சம்பளம், படிகள் மற்றும் நலன்களுக்காக மாத்திரம் ரூபா 22 மில்லியன் ஆன கிரயமொன்றை செலவிடுவதற்கு நேர்ந்திருந்ததுடன் அலுவலகங்களை பராமரிப்பதற்கான செலவுகளையும் ஏற்க நேர்ந்திருந்தது. எனினும் கணக்குப் பிரிவின் பொறுப்பான உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கத் தவறியதால், ரூபா 1,000,000 கட்டணம் செலுத்தப்பட்டு அப் பொறுப்பு தனியார் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முறையே 2018 பெப்ரவரி 28 மற்றும் 2019 பெப்ரவரி 28 ஆகிய திகதிகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | கணக்கீட்டுப் பிரிவிலுள்ள செயற்திறனின்மை இனங்காணப்பட்டு அவற்றுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் அக்கால எல்லையையும் மிகைத்து ஒரு ஆண்டு முதல் இரண்டு ஆண்டு வரையான காலப்பகுதியொன்று கடந்ததன் பின்னர் ஒவ்வொரு ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி தனியார் கணக்கீட்டு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது, அத்தீர்மானங்கள் உரிய நேரத்தில் எடுக்கப்படாமை முகாமைத்துவ செயற்திறனின்மை என அவதானிக்கப்பட்டது. | | | |
| **15.** | சபையின் ஏழு சொத்துக்கள் தொடர்பாக கொழும்பு மாநகர சபை சமர்ப்பித்த மதிப்பீட்டு அறிக்கைகளின்படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையில் உள்ள வீதவரி ரூபா 33,728,663 ஆகும். மேலும், இந்த சொத்துக்களில் குத்தகைக்கு விடப்பட்ட வளாகத்திலிருந்து ஆண்டுதோறும் பெறப்படும் மொத்த வரி ரூபா 41,003,896 மற்றும் வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூபா 5,647,488 தொகை என அவதானிக்கப்பட்டது. இதன்படி, போதிய தொகை குத்தகையாக வசூலிக்கப்பட்ட போதிலும், சபையினால் மதிப்பீட்டுத் தொகையை உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செலுத்தத் தவறியமை அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வீத வரியை உரிய திகதிகளில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 15 தேயிலை தொழிற்சாலைகள் மற்றம் 02 இறப்பர் தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் இதில் நாளாந்தம் 77,000 கிலோ கிராம் உற்பத்தி இயலளவுடன் கூடிய 8 தேயிலைத் தொழிற்சாலைகள் இதுவரை செயலற்று காணப்படுகின்றன. அத்துடன் நாளாந்த 3000 லீற்றர் உற்பத்தி இயலளவிலான இரண்டு இறப்பர் தொழிற்சாலைகள் இதுவரை செயலற்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | தொழிற்சாலைகளின் உயர் இயலளவை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் எத்தல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. |
| 17. | 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய டீஎம்.எஸ்/ஈ3/34/4/218/1(Vol -1) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தேவையான பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தனர். எனினும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத ஆறு பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் ரூபா 7,849,074 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதவிகள் மற்றும் ஊழியர் எண்ணிக்கையில் மாத்திரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தியவசிய வேறு பதவிகள் இருந்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தீர்வு காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தன. | | | |
| 18. | 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(11) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பதவிகளுக்காக ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளாதிருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாகச் செயற்பட்டு மீளாய்வாண்டின் போது அங்கீகரித்த பதவியணியில் இல்லாத முகாமையாளர் - வனம், உதவி கணக்காளர், நிதி ஆலோசகர் ஆகிய பதவிகளை உள்ளடக்கிய 17 பதவிகளுக்காக 27 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு சம்பளமும் படிகளுமாக ரூபா 10.68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் உத்தியோகத்தர்கள் சேர்த்துக கொள்ளப்படுதல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை.<br><br>2022 மார்ச் 2020 ஆம் ஆண்டுக்கான அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் பதவி இல்லை. |
| 19. | ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அமைச்சு செயலாளரின் சிபார்சினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் இறுதியளவில் 60 வயதினை மிகைத்த 20 நிரந்தர மற்றும் அமைய | 60 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர் களுக்கு சேவை நீடிப்பு வழங்காமலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளாமலும் இருத்தல் வேண்டும். | எவ்விததடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. | இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை.<br><br>2022 மார்ச் மாதம் ஆன போது 60 வயதுக்கு மேற்பட்ட நிரந்தர மற்றும் சாதாரண அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டுள்ள னர். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் சேவையாற்றியிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 16.13 மில்லியன் சம்பளமாக செலவு செய்யப்பட்டிருந்தது | | | |

## 21. கூட்டுறவு மொத்த விற்பனைக் நிலையம்

1. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - கூட்டுறவு மொத்த விற்பனைக் நிலையம்

2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

| | |
|---|---|
| 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | நிதிநிலை அறிக்கைகள் 06 ஜனவரி 2022 அன்று கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் தற்போது கணக்காய்வு நடந்து வருகிறது. |

3. முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| (அ) | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், மதிப்பீட்டு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள சந்தை மதிப்பைக் காட்டிலும் குறைவான மதிப்பில், கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான சொத்தை குத்தகைக்கு எடுத்ததால், கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூபா. **22,429,875** ஆக இருந்தது. | சந்தை மதிப்புக்கு ஏற்ப வரிச் சொத்தை குத்தகைக்கு விட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | தொடர்புடைய நியமிப்பு 2021 வருடத்தில் த மதிப்பீடு அறிக்கையின் அடையாளப் பலகை மதிப்பைக் காட்டிலும் குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட்ட வருமானம். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | லங்கா சதொச லிமிட்டெட் இன் பங்கு பங்களிப்பிற்காக தாபனம் நிதி பங்களிப்பை வழங்காதிருந்ததுடன் அதற்காக தாபனத்தால் இலங்கை சதொச லிமிட்டெட் இற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான திரண்ட வாடகைப் பெறுமதி ரூபா 66,986,483 தொகையும், லங்கா சதொச விற்பனைக் கடைகள் மற்றும் களஞ்சியத்தின் பயன்பாட்டிற்காக தாபனத்தால் வழங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியான ரூபா 54,722,228 தொகையும் ஆக ரூபா 121,708,711 தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. இந்த பெறுமதியில் லங்கா சதொச லிமிட்டெட் இனால் ஒதுக்கப்பட்ட ரூபா 22,798,840 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முதலீடாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 98,909,871 தொகை முதலீட்டு முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் நீண்டகால சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அப்பெறுமதி தொடர்பாக லங்கா சதொச லிமிட்டெட் இனால் இணக்கப்பாடு தெரிவிக்கப்படாதிருந்ததுடன் லங்கா சதொச லிமிட்டெட் இன் நிதிக்கூற்றுக்களில் அது | பணம் அல்லது பங்குகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | பணம் அல்லது பங்குகளைப் பெறுவதற்கு லங்கா சதொசவுடன் பேச்சுவார்த்தை நடத்துதல். | இந்த விஷயத்தில் இதுவரை நிறுவனம் மற்றும் தொடர்புடைய நிறுவனத்தில் இருப்புநிலைக்கு தகுதியற்ற நிலையில் இருக்க வேண்டிய நிலை உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | |
| (இ) | கடன் அடிப்படையில் அரிசி வழங்கும் போது தனியார் நிறுவனத்திடம் இருந்து ரூபா **100,000,000** க்கான **02** வங்கி உத்தரவாதங்களை கூட்டுத்தாபனம் பெற்றிருந்ததுடன், வங்கி உத்தரவாதத்தை உண்மையான ஆவணங்களாக உறுதிப்படுத்தாமல், கடன் தொடர்ச்சியாக செலுத்தப்படாத நிலையில் அந்தந்த நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை வழங்கியிருந்தது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் **31** ஆம் திகதிக்குள், இந்த வங்கி உத்தரவாதங்கள் பொய்யான ஆவணங்கள் என்று தெரியவந்துள்ளது மற்றும் அன்று நிறுவனத்திடமிருந்து செலுத்த வேண்டிய தொகை ரூபா. **118,011,334** ஆக இருந்தது. | நஷ்டத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து வசூலிக்க வேண்டும் | தவறிய வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வழங்காதது | இந்த சிறப்பு இதுவரை அய்ய விகிதத்தில் இல்லாததால், நீதிமன்ற விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மாறாக, வங்கிப் பாதுகாப்பு உத்தரவாதத்தைப் பெற்ற பின்னரே, கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்த தனியார் நிறுவனத்திற்கு கடன் அடிப்படையில் அரிசி விற்கப்பட்டது மற்றும் அந்த நிறுவனத்திடமிருந்து டிசம்பர் **31** ஆம் திகதியின்படி ரூபா.**5,574,811** வசூலிக்கப்பட வேண்டும். விமர்சனம். | பணம் சேகரிக்க முடியும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | இந்த தொகையை பெறுவதற்கான நிறுவனத்தால் குற்றவியல் சோதனைக்கு உட்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2010 ஆகஸ்ட் 26, திகதியிட்ட இயக்குநர்கள் குழு எண். 2010/1753/34 இன் முடிவின்படி, அப்போது கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரின் ஒப்புதலுடன், நிர்வாக மட்டத்தில் மூன்று செயல் அலுவலர்களை நிரந்தரமாக நிறுவ முடிவு செய்யப்பட்டது. அந்தந்த பதவிகளில் 2007 பிப்ரவரி 01, முதல் அமலுக்கு வரும். அதிகாரிகளின் தனிப்பட்ட கோப்புகளில் அமைச்சரின் ஒப்புதல் கடிதங்களின் அசல் நகல் இல்லை.<br>மேலும் சம்பள நிலுவை மற்றும் நிலுவைத் தொகையாக ரூபா. **11,511,088** மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் செலுத்தப்பட்டது, அதாவது தற்போதைய இயக்குநர்கள் குழு மற்றும் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் அனுமதியின்றி அப்போதைய இயக்குநர்கள் குழுவின் முடிவின் பின்னர் **08** ஆண்டுகளுக்குப் பிறகு செலுத்தப்பட்டது இந்த கட்டணம்.<br>மேலும், இந்த இரு அதிகாரிகளும் தாங்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட காலம் தொடர்பான சம்பள நிலுவை மற்றும் சம்பள நிலுவைத் தொகையாக இயக்குநர் குழு மற்றும் மாநகராட்சித் தலைவரின் ஒப்புதல் இல்லாமல் மின்னணு வங்கி முறை மூலம் அவ்வப்போது ரூபா.**3,718,552** பெற்றுள்ளனர். | பணம் செலுத்துவதற்கு இயக்குநர் சபை மற்றும் கூட்டுத்தாபனம் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு, உண்மையான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | இந்த வழக்கு விசாரணையில் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. |

## 22. இலங்கை போக்குவரத்துச் சபை

1. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை போக்குவரத்துச் சபை
2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 மறுப்பு அபிப்பிராயம்

2019 மறுப்பு அபிப்பிராயம்

2020 மறுப்பு அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| **1.** | நியம இலக்கம் 16 இன் சொத்துக்கள் மீண்டும் கணக்கிடப்படவில்லை 58 ஆம் பந்தியின் பிரகாரம், காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி வேறு வேறாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>ஆண்டு **- 2020** | நியம இலக்கம் 16ன் பத்தி 58ன் படி கணக்குகள் வைக்கப்பட வேண்டும். | கணக்கியல் நியம எண் **16** ன் பிரகாரம் மேற்கொள்ளப் பட வேண்டும் என கூறப்பட்ட போதிலும், அது மேற்கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | இதனால் நிலம் மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்படவில்லை. |
| **2.** | **1.5.6** (அ) நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா **1,290,782,78**1 ஆன செயலாற்ற கணக்கின் வரவு மீதி மற்றும் ரூபா **18,526,264,783** ஆன செயலற்ற கணக்கின் செலவு மீதிகள் காணப்பட்டன. | அந்தந்த கணக்கு நிலுவைகளை செட்டில் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். | அந்தந்த நிலுவைகளை அடையாளம் காண ஒரு குழு நியமிக்கப்பட்டது. | செயலற்ற கணக்கின் பற்று இருப்பு மதிப்பு ரூபா.1,290,782,781 மற்றும் ரூபா.18,526,264,783 செலவு மீதிக்கு எழுத்துப்பூர்வ ஆதாரம் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு - 2020 | | | |
| **3.** | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 2019/2020 ஆண்டுகளின் போது ரூபா 426,390,078 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் சபைக்கு கிடைத்திருந்தது. இந்த இயந்திர உபகரணங்களில் ரூபா 189,343,036 தொகை பெறுமதியான 90 விடயங்கள் 2019 ஆண்டின் போது கிடைத்தவையாக இருந்ததுடன். அந்த இயந்திரங்கள் 2019 ஆம் ஆண்டில் இயந்திர உபகரணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதன உதவிக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த சொத்துக்களை சுங்கத்தில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக சுங்கக் கட்டணமாக ரூபா 38,663,394 இற்கான தொகையொன்று 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. இந்த பெறுமதியை மூலதனப்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கு முரணாக ரூபா 322,194 தொகை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதன்படி பெறுமானத் தேய்வு அதே தொகையினால் கணக்குகளில் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | தொடர்புடைய சொத்துக்கள் இலங்கை கணக்கியல் தரநிலைகள் **16** இன் படி கணக்கிடப்பட வேண்டும். | ஒரு சொத்தை மூலதனமாக்க, தேவையான மதிப்பைத் தீர்மானிக்க தேவையான ஆவணங்களைப் பெற வேண்டும். **2019** ஆம் ஆண்டில், இந்த இயந்திரத்தை மூலதனமாக்குவதற்கு சம்பந்தப்பட்ட துறைகள் போதுமான ஆவணங்களை வழங்கவில்லை. எனவே, மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் இயந்திரங்கள் மூலதனமாக்கப் படவில்லை. | சம்பந்தப்பட்ட ஆண்டில் மானியமாகப் பெறப்பட்ட சொத்துக்கள் முறையாகக் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு - 2020 | | | |
| **4.** | நியம இலக்கம் 17 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் குத்தகைகளின் நியாயமான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக இனங்காணப்பட்ட வேண்டிய போதிலும் குத்தகை முறைமையின் கீழ் 2019/2020 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,046,559,865 பெறுமதியான 50 இருக்கைகள் கொண்ட 272 சாதாரண பேருந்துகள் மற்றும் 33 இருக்கைகள் கொண்ட 53 பேருந்துகள் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் 325 பேருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டமைக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 263,435,339 ஆன முற்பணத் தொகையொன்று குத்தகை கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்படாமையால் குத்தகை கடன் கொடுத்தோர் கணக்கு அந்த அளவினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.<br>ஆண்டு - 2020 | பேருந்துக் கொள்வனவுகள் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | குத்தகைக் கொடுப்பனவுகள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **5.** | நியம இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் விற்கப்படும். சந்தர்ப்பத்தில் பெறுமதி மீள் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான வெரஹெர காணிப் பதிவாளர் நாயகம் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு விற்கப்பட்ட போது 2018 ஆம் வருடத்தில் மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு வரை இதற்காக ரூபா 4,554,000 பெறப்பட்டிருந்ததுடன் அத்தொகை கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன்கொடுத்தோர் கணக்கு அந்த அளவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. மேலும் காணியின் விற்பனைப் பெறுமதியான ரூபா 5,000,000,000 தொடர்பாக சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. ஆண்டு - 2020 | குறிப்பிட்ட நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | தொடர்புடைய நடவடிக்கைகள் நியமங்களின்படி சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| **6.** | சபைக்குச் சொந்தமான வேரஹெரவில் அமைந்துள்ள காணி ஒன்று கொத்தலாவல பாதுகாப்பு பீடத்துக்கு உரித்தாக்கியது தொடர்பாக திறைசேரியில் இருந்து 2018 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா | குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்வதற்கான முறைமை பின்பற்றப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை | தொடர்புடைய நடவடிக்கைகள் நியமங்களின்படி சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2,000,000,000 மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,054,000,000 தொகையும் ஆக ரூபா 4,054,000,000 தொகையினை சரியாக கணக்கீடு செய்யாமல் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த தொகையினை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை . ஆண்டு - 2020 | | | |
| **7.** | டிக்கட் இயந்திரங்களுக்கான பின்காட் பத்திரத்தின் பிரகாரம் ரூபா 378,354,463 பெறுமதியான டிக்கட் இயந்திரம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 266,471,937 ஆக காட்டப்பட்டிருந்தமையால் , நிலையான சொத்துக்கள் ரூபா 111,937,066 ஆனது குறைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சொத்துக்களின் பெறுமதி சரியாக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில் லை | சம்பந்தப்பட்ட சொத்துக்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| **8.** | **3.4(ஆ)** பஸ் வண்டிகளுக்கு பொருத்தப்படும் முற்பொருத்தல் டயர் ஒன்று சுமார் **15,000** கிலோமீற்றர்கள் மாத்திரமும் மீள் நிரப்பப்பட்ட டயர் ஒன்று **11,000** கிலோ மீற்றர்கள் மாத்திரமும் ஓடக் கூடியதாக இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீள் | டயர்கள் குறிப்பிட்ட நியமங்களுடன் முற்பொருத்தல் மற்றும் மீள் நிரப்பல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முற்பொருத்தல் டயர்கள் மற்றும் மீள் நிரப்பு டயர்கள் 34 சந்தர்ப்பங்களி ல் கழற்றி அப்புறப்படுத்து வதற்கு பின்வரும் விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந் தது. | ஒப்பந்தத்தின்படி, பேருந்துகளில் முன் பொருத்தப்பட்ட டயர்கள் மற்றும் மீண்டும் காற்றூட்டப்பட்ட டயர்கள் தற்போதைய தரத்தின்படி செய்யப்பட வேண்டும் மற்றும் முன்கூட்டியே இழந்த கிலோமீட்டர்களுக்கு சேதம் விதிக்கப்பட வேண்டும். இதனால், சம்பந்தப்பட்ட டெப்போக்களில் இருந்து அதிக அளவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிரப்பப்பட்ட டயர்களை கழற்றி அப்புறப்படுத்தப்பட்ட **34** சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவை ஓடியிருந்த சராசரி கிலோ மீற்றர் எண்ணிக்கை **7,402** தொகை மாத்திரமே. அதன் படி முற்பொருத்தல் மற்றும் மீள் நிரப்பல் டயர்களின் மூலம் ஓடப்பட வேண்டிய அங்கீரிக்கப்பட்ட தூரத்தின் எண்ணிக்கை அளவு ஓடுவதற்கு முடியாமல் இருந்தது.<br><br>ஆண்டு - 2020 | | | இயக்கப்படும் டயர்களில் இருந்து குறைவாக இயக்கப்படும் டயர்களின் கிலோமீட்டர்களைக் கழித்து மொத்தத்தை கணக்கிட சுற்றறிக்கை அறிவிக்கப்பட்டது. |
| **9.** | **1.5.1** 2003 யூன் 2 ஆந் திகதிய பீஇடீ.்.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவுக்கமைய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வருடம் முடிவுற்று **60** நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள 322 நாட்கள் தாமதமாகி **2021** ஒக்டோபா் **26** இல் சமா்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>ஆண்டு - 2020 | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்கு தொகுப்பு மூலம் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டாலும், மேலும் கணக்குகள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டன. | 2020 ஆம் ஆண்டிலும் கணக்குகளை சமர்பிப்பது தாமதமானது. |
| **10.** | **1.5.2** சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 628,678,099 தொகையாக இருந்ததுடன், நிலையான மேலதிக பற்று வசதி ஒன்றும் மக்கள் வங்கியில் | இலங்கை நிதி அறிக்கை நியம இலக்கம் 07 (SLFRS 7) இன் 14 A மற்றும் B ஆகியவை கையாளப்பட வேண்டும். | இது ஒரு பொறுப்பு அல்லது சாத்தியமில்லாத பொறுப்பாகக் கருதப்பட்டது மற்றும் வெளிப்படுத்தப் | இலங்கை நிதி அறிக்கை நியம இலக்கம் 07 (SLFRS 7) இன் பிரிவு 14 a மற்றும் b பின்பற்றப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்து பெற்றுக்கொண்டிருந்தது. இதற்காக ரூபா 325,100,000 இற்கான நிலையான வைப்புக்கள் பிணை பொறுப்புக்களாக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் இலங்கை நிதி அறிக்கைகள் நியம இலக்கம் 07 (SLFRS 7) 14 ஏ மற்றும் பீ பிரிவுகளின் பிரகாரம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.<br>2019 ஆண்டு | | படவில்லை. | |
| **11.** | **1.6.1**மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடத்துனர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,082,800 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 825,008 தொகை 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாம் காணப்பட்டது.<br><br>2019 ஆண்டு | அந்தந்த நிலுவைத் தொகையை ஆண்டுதோறும் சரியாக வசூலிக்க வேண்டும். | இது தொடர்பான பிச்சைக்காரன் பணம் மீட்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | அந்தந்த நிலுவைத் தொகை ஆண்டுதோறும் சரியாக வசூலித்திருக்க வேண்டும் ஆனால் வசூலிக்கப்படவில்லை. |
| **12.** | 1.6.3 (அ) உத்தியோகத்தர்களுக்கு வழங்கி இருந்த சம்பள முற்பணங்கள் அடுத்தமாத சம்பளத்தில் அறவீடு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த மொத்தத் தொகை ரூபா 283,905,777 தொகையாக இருந்தது. அந்த மீதியில் ரூபா 4,751,012 இற்கான பெறுமதி 10 | சம்பள முற்பணங்கள் உரிய முறையில் அறவீடு செய்யப்பட வேண்டும். | 10 வருடங்களை மிகைத்துள்ள மீதிகள் முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் பெறுமதிகள் அடங்கியுள்ளது. அந்தப் பெறுமதியினை சரியாக இனங்கண்ட பின்னர் உத்தியோகத்தர்களிடம் அறவீடு | சம்பள முன்பணம் முறையாக மீள் செலுத்தப்படாததால், 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவைத் தொகை அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது.<br><br>2019 ஆண்டு | | செய்யக்கூடிய மீதிகளை அறவீடு செய்வதற்கும், அவ்வாறு அறவீடு செய்ய முடியாத மீதிகள் காணப்படின் அது தொடர்பாக அறிக்கை ஒன்று பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **13.** | இலங்கை போக்குவரத்து சபையின் 2018 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 139 கணனிகள் மற்றும் 74 மடிக் கணனிகள் ரூபா 15,290,000 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கொள்வனவு செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் 800 கணனிகளையும் 47 மடிக் கணனிகளையும் ரூபா 113,303,750 தொகைக்கு பெறுகை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கணனி கொள்வனவின் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட ரூபா 89,977,500 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தேவைப்பாட்டினை இனங்காணாமல் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததாக | சரியான தேவைகளைக் கண்டறிந்து, சரியான பாதீடு மற்றும் கொள்முதல் திட்டங்களின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். | தேவைகளை அடையாளம் காணாமல் கொள்முதல் செய்துள்ளார். | தேவையற்ற கொள்முதல் காரணமாக சில டிப்போக்களில் கணினிகள் செயலிழந்துள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது.<br><br>2019 ஆண்டு | | | |
| **14.** | சபையில் 125 சொகுசு ரக பேருந்துக்காக ஜீபீஎஸ் (GPS) முறைமையை பேணிச் செல்வதற்காக தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக சபை தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 33,628,840 இற்கு உடன்படிக்கை மேற்கௌ்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | GPS மூலம் எதிர்பார்க்கப்படும் புள்ளிகளில் கவனம் செலுத்துவது மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். | தேவை அடையாளம், சாத்தியக்கூறு ஆய்வு, செலவு பலன் மதிப்பீடு இல்லாமல் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன | தேவைகளை அடையாளம் காணாதது, செலவு-பயன் பகுப்பாய்வு இல்லாமை, யாராலும் ஒழுங்குபடுத்தப்படாதது, தொடர்புடைய உபகரணங்கள் வேலை செய்யவில்லை என்று தெரிவிக்கவில்லை. தேவையான நோக்கங்களுக்காக ஜி.பி.எஸ். பயன்படுத்தப்படவில்லை. |
| | i. சபையின் தகவல்கள் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகாமையாளரால் இச்செயற்திட்டத்தின் தேவைப்பாடு இனங் காணப்பட்டிருந்ததுடன் சொகுசு பேருந்துக்களில் இடம்பெறும் மோசடி மற்றும் முறைகேடுகள் அதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இச்செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னர் ஆரம்ப சாத்தியவள ஆய்வொன்றும், கிரய நலன் பகுப்பாய்வொன்றும் பெறுபேறு எதிர்வு கூறல் முறைமை தொடர்பான ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii. இந்த கெமஹா முறைமை மற்றும் ஜீபீஎஸ் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதற்கான தலைமை அலுவலகத்தின் மேற்பார்வையோ டிப்போ உத்தியோகத்தர்களை யோ ஈடுபடுத்தாமல் இருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் மூலம் டிக்கட் மெஷின் வருமானம், எரிபொருள் தாங்கியின் எரிபொருள் அளவு, குறித்த நேர அட்டவணையின் பிரகாரம், உரிய வீதியில் எந்தளவு பயணிகள் எண்ணிக்கையுடன் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை து போன்ற விடயங்களை பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும், அப்பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | | | |
| | iii. 125 சொகுசு ரக பேரூந்துக்காக கமெறா மற்றும் உப பாகங்கள் 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சபைக்கு சொந்தமான 112 பேரூந்துக்கள் மாத்திரமாக இருந்தன. கணக்காய்வு திகதியான 2019 ஏப்ரல் 27 ஆந் திகதி | உரிய தேவைகளை கண்டறிந்து கவனமாக இருக்காமல் ஒப்பந்த விதிகளின்படி பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. | இதனால் முறையான பிக்சிங் செய்யப்படவில்லை. | ஜிபிஎஸ் இயந்திரங்கள் பழுதடைந்து செயலிழந்த போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரை ரூபா 7,263,830 பெறுமதி 27 கெமறா உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | | | |
| | iv. குறித்த உடன்படிக்கை நிறுவனம் 2019 மே 10 ஆந் திகதி வரையில் சேவைதாரர் கணனி (Server) வழங்கல் மற்றும் ஸ்தாபித்தல் தொழில்நுட்ப விபரக்கு குறிப்புக்கள் மற்றும் ஒட்டுமொத்த முறைமையை பரீட்சிப்பதற்காகவும் சபையின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கி முழு முறைமையையும் சட்டரீதியான கையளிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | முறையான இடமாற்றம் செய்யப்படவில்லை. | தொடர்புடைய அமைப்புகள் சட்டப்பூர்வமாக ஒதுக்கப்படவில்லை. | முறையாக ஒப்பந்தம் செய்யப்படாததாலும், ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றாததாலும் முறையாக ஒதுக்கப்படவில்லை. |
| | v. சபையில் 125 சொகுசு ரக பேருந்துக்காக ஜீபீஎஸ் (GPS) முறைமையை மென்பொருள் மற்றும் உப பாகங்களை பொருத்தும் போது உரிய பெறுகை உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 3,362,884 வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>2019 ஆண்டு | ஒப்பந்தத்தின் விதிமுறைகளை செயல்படுத்தாதது. | உரிய நிபந்தனைகள் பின்பற்றப்படவில்லை. | சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **15** | (அ) சபையினால் 2018 மார்ச் 20 ஆந் திகதி ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 61,014,316 தொகை பெறுமதியான உடன்படிக்கையின் பிரகாரம் இவ் விடயம் 2018 ஜூன் 20 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 19 திகதி அளவிலும் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக பெறுகை அலுவல்கள் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 2,102,126 இற்கான நிதிசார் நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் படி குறிப்பிட்ட தினத்தில் நிர்மாண வேலை பூர்த்தி செய்யாமையால் சபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தை செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது. அதே போல் ரூபா 12,610,500 தொகை பெறுமதியான 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்புகள் அந்த வளவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏதும் இன்றி காணப்பட்டதுடன் வைக்கப்பட்டிருந்த | சம்பந்தப்பட்ட திட்டங்கள் முறையான சாத்தியக்கூறு ஆய்வுடன் நிறைவேற்றுவதற்கு முறையாக ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் | அனைத்து விஷயங்களும் உள்ளடங்குமாறு ஒப்பந்தம் செய்யப்படவில்லை. | இது தொடர்பான திட்டங்கள் முறையான சாத்தியக்கூறு ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை முறையாக உள்ளடக்கி செயல்படாததால், பெரும் பொருட்செலவில் கைவிடப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த எரிபொருள் தொட்டிகளின் மூடிகள் ஒப்பந்தக்காரரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. 2019 ஆண்டு | | | |
| **16.** | 1.7 (i) காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் தமது வங்கி மீதி போதியளவாக உள்ளதான என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தர் கவனம் செலுத்த வேண்டியதுடன் எந்த அரசாங்க வங்கிக் கணக்கின் மூலமும் மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையில் ரூபா 239,443,555 இற்கான வங்கி மேலதிகப் பற்று ஒன்று காணப்பட்டது. அதற்கான வட்டியாக ரூபா 963,717 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.<br><br>2019 ஆண்டு | அரசு வங்கிக் கணக்குகளை மேலதிகப் பற்று வைத்திருப்பது பண விதிமுறைகளின்படி செய்யப்படக் கூடாது | இனிமேல் மேலதிகப் பற்று ஏற்படாமல் இருக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்ச்சியான குறுகிய கால முதலீடுகள் மற்றும் பண முதலீடுகள் மற்றும் முறையான செயல்பாட்டு மூலதன முகாமை இல்லாததால் ஓவர் டிரா∴ப்ட் மீது வட்டி செலுத்தப்பட்டது. |
| **17.** | 3.2 (அ) சபையின் பிராந்திய அலுவலகங்கள், டிப்போக்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் பிராந்திய வேலைத் தளங்கள் அமைந்துள்ள காணிகள் தொடர்பாக சபையினால் நாளதுவரை ஆக்கப்பட்ட கோவைகள் பேணப்படல் அல்லது காணிகள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை | இ.போ.ச. நிலம் புதுப்பிக்கப்பட்டு முறையான நிலப் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். | இ.போ.ச. வின் பொறுப்பில் காணப்படும் மற்றும் உரிமைகள் காணப்படும் காணிகள் தொடர்பாக தகவல்களை கோவைப்படுத்தி கோவைகள் முறைப்படுத்தப் பட்டுள்ளதுடன், காணி | சம்பந்தப்பட்ட காணிகளுக்கு பத்திரங்கள் மூலம் தீர்வு பெற்று உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | . மேலும், சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகளையும் இனங்காணல் மற்றும் உரிமையை தீர்த்துக் கொள்ளல் காணியின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்தல் கணக்காய்வுத் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. 2019 ஆண்டு | | அலுவல்கள் தொடர்பாக பிராந்தியங்களுக்கு உரிய 12 குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அதனூடாக அனைத்துக் காணிகள் தொடர்பாக காணிகளை இனங்காணல், காணிகள் தொடர்பான உரிமையை தீர்த்துக் கொள்ளல், காணிகளுக்காக சாட்டுதல் காணி உறுதி தயாரித்துக் கொள்வதற்காக ஆரம்பச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | |
| **18.** | (இ) குருநாகல் பிராந்திய வேலைத் தளத்தில் என்ஜின் திருத்த வேலைக்காக 2017 ஜூன் 03 ஆந் திகதி கூறுவிலைகள் அழைக்கப்பட்டு ரூபா 12,737,394 தொகை பெறுமதியான 9 கருவிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிராந்திய வேலைத் தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த இயந்திர உபகரணங்களில் ரூபா 3,661,430 தொகை பெறுமதியான Cylinder block head surface grinding machine இயந்திரம் மாத்திரம் | சம்பந்தப்பட்ட இயந்திரங்களை இயக்க மனிதவளம் கொடுக்கப்பட்டு, இயந்திரங்களை திறம்பட பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். | புதிய இயந்திர உபகரண செயற்களத்தில் சேவை செய்வதற்காக இயந்திர தொழிநுட்பவியலாளர் வெற்றிடங்கள் காணப்பட்டது. இது தொடர்பாக இ.போ.ச. தலைமை அலுவலகத்திற்கு அறிவித்ததுடன் அதன் படி நாளாந்த அடிப்படையில் இயந்திர தொழிநுட்பவியலாளர் ஒருவர் | சொத்துக்களை திறம்பட பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறித்த வேலைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 9,075,963 தொகை பெறுமதியான ஏனைய இயந்திர உபகரணங்கள் தொடர்பான பரிசோதனையின் போது அவை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.<br>2019 ஆண்டு | | 2020.07.22 திகதி கடமைக்கு வந்திருந்ததுடன், 2020.08.06 ஆந் திகதி முதல் இன்று வரை சேவைக்கு வந்திருக்கவில்லை. அதன் காரணமாக இது தொடர்பாக அறிவித்த போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஊழியர்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| **19.** | (ஈ) வாகன வாயு வெளியேற்றல் நிலையங்கள் நிர்மாணித்தல் முன்சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குருநாகல் மற்றும் மதவாச்சி ஆகிய நிலையங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. சட்டச் சிக்கல் ஒன்று காரணமாக மூடப்பட்டு காணப்படுகின்றது. அதனால் அந்த நிலையங்களின் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன், கணக்காய்வுத் | திட்டத்தை செயல்படுத்துவதில் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் செலவு பலன் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் மற்றும் அறிக்கைகளின்படி செயல்படுத்தப்பட வேண்டும். | வாயு வெளியேற்றல் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் இந்த புகைச் சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களின் மூலம் நீதிமன்றத்திற்கு விடயங்களை சமர்ப்பிப்பித்ததன் காரணமாக இந்த செயற்திட்டத்தை இடைநிறுத்த நேரிட்டது.<br><br>திட்ட செயலாக்கத்தின் அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்வதன் | முறையான சாத்தியக்கூறு ஆய்வுகள் இன்றி மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம், ஒழுங்குமுறைச் சிக்கலால் செயல்படாமல் இருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதியாகிய 2019 செப்தெம்பர் 30 திகதி வரை சிவில் வேலைகளுக்காக சபை ரூபா 22.48 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.<br><br>2019 ஆண்டு | | மூலம் சாத்தியக்கூறு ஆய்வுகள், செலவு பலன் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்.<br><br>திட்டங்கள் செயல்படுத்தப் படும் திறன் ஆய்வு, செலவு பலன்கள் விசையியலைச் செயல்படுத்துவ தன் மூலம் அனைத்து விவரங்களையு ம் ஆய்வு செய்ய வேண்டும். | |
| **20.** | 4.1(அ) டிப்போ வளாகங்களில் காணப்படும் செயற்களங்களில் எண்ணெய் கழிவுப் பொருட்கள் இடுவதற்காக முறைப் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை ஒன்று பயன்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன், 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் படி அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் 107 டிப்போக்களில் 11 | தொடர்புடைய தேசிய சுற்றுச்சூழல் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். | நிறுவனத்தில் செயற்படுத்தப்ப டும் ஆக்கபூர்வமான எண்ணக்கரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 24 டிப்போக்களுக் காக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருந்த துடன் மேலும் 11 டிப்போக்களுக் காக தற்போது அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. | வர்த்தமானி மற்றும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | டிப்போக்கள் தவிர ஏனைய டிப்போக்கள் அந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. 2019 ஆண்டு | | | |
| **21.** | (ஈ) 26 ஏக்கர்களைக் கொண்ட மெதவச்சி பிராந்தி வேலைத்தளம் அமைந்துள்ள காணியின் 5 ஏக்கர் தரைப் பகுதி ஒன்று முறையான அங்கீகாரம் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இந்தக் காணியின் 20.7 ஏக்கர் காணி பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அதே போல் 1.25 ஏக்கர் காணிப் பகுதி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிராந்திய வேலைத் தளம் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் உக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது. 2019 ஆண்டு | காணியின் உரிமையை உரித்தாக்கி ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது ஊழியர் பற்றாக்குறை காரணமாக இந்தப் பிராந்திய வேலைத் தள அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் காணியில் உரிமை பற்றிய அலுவல்கள் இ.போ.ச. ஊடாக அலுவல்கள் மேற்கொள்ளப் படுவதுடன் எதிர்காலத்தில் இக் காணி ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலம் மற்றும் கட்டிடங்களை திறம்பட பயன்படுத்தி நிறுவனம் செயல்பட வேண்டும். |
| **22.** | 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது கம்பஹா பிரதேச களஞ்சியத்தில் பாவனைக்கு எடுக்காமல் ரூபா 1,851,227 தொகை பேரூந்து உதிரிப்பாகங்கள் 2005 ஆம் ஆண்டு முதல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | தொடர்புடைய உதிரி பாகங்களை முறையாக அப்புறப்படுத்த வேண்டும். | இன்னும் இருப்பில் உள்ளது. | அவற்றை முறையாக ஆய்வு செய்து அகற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2019 ஆண்டு | | | |
| **23.** | ) **3.3**அ (மதவச்சி பிராந்திய வேலைத் தளத்தின் கொள்திறன் மற்றும் முன்ஆய்வு அறிக்கையின் படி ஒரு மாதத்திற்கு சுமார் 60 என்ஜின்கள் பழுதுபார்க்கக் கூடியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டளவில் ஒரு மாதத்திற்கு 15 என்ஜின்கள் மாத்திரம் திருத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன், அது மொத்த கொள்திறனின் 25 சதவீதமாகக் காணப்பட்டதுடன் குறைபயன்பாடு 75 சதவீதமாக இருந்தது. 2019 ஆண்டு | அந்தந்த பணியிடத்திற்கு முழு திறனுடன் பணிபுரியும் இலக்குகளை வழங்கவும் அடையவும் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும். | பொதுவாக பஸ் பொடி ஒன்று திருத்துவதற்காக சுமார் 20 நாட்கள் எடுக்கின்றது. | ஆலை அதிகபட்ச திறனில் இயங்காததால், பயன்பாடற்றது. |
| **24.** | சபையின் மைதானத்தின் செயற்பாடுகளுக்காக வெளி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா **4,470,901,** சபையின் வருமானத்தில் வரவு வைக்கப்படாமல் விளையாட்டுக் கழக கணக்கில் வரவு வைக்கப்பட்டது.<br><br>ஆண்டு - 2018 | சபையின் வருவாய் கணக்குகள் நிறுவனத்தின் வருவாயில் வரவு வைக்கப்படக்கூடாது. | தலைவர் ஒப்புதல் அளித்தவுடன், இந்த வருமானம் விளையாட்டு நிர்வாக கவுன்சிலின் கணக்கில் வரவு வைக்கப்படும். | வருமானம் விளையாட்டு நிதியில் வரவு வைக்கப்பட்டது. |
| **25.** | இலங்கை போக்குவரத்து சபையின் 2018 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 139 கணனிகள் மற்றும் 74 மடிக் கணனிகள் ரூபா 15,290,000 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கொள்வனவு செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த | தொடர்புடைய பாதீட்டுத் திட்டம் மற்றும் கொள்முதல் திட்டத்திற்கு வெளியே கொள்முதல் செய்யப்படக்கூடாது. | தலைவரின் ஒப்புதலின்படியே இது நடந்தது. | சரியான தேவைகளை அடையாளம் காணாமல் தொடர்புடைய பட்ஜெட் ஆவணம் மற்றும் பெறுகை திட்டத்திற்கு வெளியே கொள்முதல் செய்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், சபையினால் 800 கணனிகளையும் 47 மடிக் கணனிகளையும் ரூபா 113,303,750 தொகைக்கு பெறுகை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கணனி கொள்வனவின் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட ரூபா 89,977,500 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் தேவைப்பாட்டினை இனங்காணாமல் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.<br><br>ஆண்டு - 2018 | | | |
| **26.** | 2018 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் இலத்திரனியல் 1000 பேரூந்து டிக்கட் மெஷின்கள் ரூபா 35 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 2018 பெப்ரவரி 18 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2018 ஆம் ஆண்டில் ரூபா 75,900,000 பெறுமதியான 2000 டிக்கட் மெஷின்களை கொள்வனவு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதில் அங்கீகாரம் இன்றி கொள்வனவு செய்யப்பட்ட 1000 டிக்கட் மெஷின்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | செயல் திட்டம் மற்றும் கொள்முதல் திட்டத்தில் தேவைகளை அடையாளம் காணுதல், பாதீட்டுத் தயாரித்தல் ஆகியவை சேர்க்கப்பட வேண்டும். | மேலும் **1000** டிக்கெட் இயந்திரங்களை வாங்க தலைவர் ஒப்புதல் அளித்திருந்தார். | தேவைகள் மற்றும் பட்ஜெட் ஒதுக்கீடுகளை அடையாளம் காணாமல் கொள்முதல் செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இந்த டிக்கட் மெஷின் கொள்வனவு செய்வதற்கு முன்னர் டிப்போக்களுக்காக தேவையான மெஷின்களின் அளவு கணக்கிடப்பட்டு இனங்காணப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.<br>ஆண்டு - 2018 | | | |
| **27.** | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 பிரிவின் பிரகாரம் விவரக்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபை தற்போது பயன்படுத்தும் டிக்கட் மெஷின்கள் பிரயோகம் (application) இற்கு இணங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையில் தற்போது பயன்படுத்தப்படும் டிக்கட் மெஷின் வழங்குனர்கள் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட ஏனைய நிறுவனங்கள் கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகை செயற்பாடு வெளிப்படையொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>ஆண்டு - 2018 | ஒரே ஒரு வழங்குனர் மட்டுமே விலைமனு சமர்ப்பிக்கும் போது மீண்டும் விலைமனு அழைக்கப்பட்டு, மறு கொள்முதல் நடத்தப்பட வேண்டும். | தலைவரின் ஒப்புதலின் பேரில் இது நடந்தது. | ஒரே ஒரு வழங்குனர் மட்டுமே விலைமனு சமர்ப்பிக்கும் போது விலைமனு மீண்டும் அழைக்காமல் பெறுகை விதிகளை மீறி பெறுகை செய்தார். |
| **28.** | 7.12 பிரிவின் பிரகாரம் போட்டி என தெளிவாக இனங்காணப்படாத போது அதன் பிரகாரம் கிடைத்த சகல கேள்விகளை நிராகரிக்க | உரிய கொள்முதல் நடைமுறையை மீறாமல் செய்யப்பட வேண்டும். | தலைவரின் ஒப்புதலின் பேரில் இது நடந்தது | சம்பந்தப்பட்ட பெறுகை நடைமுறை மீறப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முடியுமாக இருப்பதுடன் விரிவான விளம்பரமொன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சந்தை பெறுமதி பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் கூறுவிலை நியாயமானதெனின் கேள்வி கோரும் செயற்பாடு செல்லுபடியானதென கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வாறு கூறுவிலை மதிப்பீடொன்று இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட விபரக்குறிப்புக்கள் மற்றும் இணக்கத்தில் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறுமதி சேர் வரியுடன் ரூபா 37,950 இற்கு 2,000 டிக்கட் மெஷின்கள் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி கூடிய பெறுகை குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்துடன் இணங்கியிருக்கவில்லை. ஆண்டு - 2018 | | | |
| **29.** | நிதிப்பிரமாணம் 237(ஆ) பிரகாரம் களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு செய்யும் போது பொருட்கள் இருக்க வேண்டிய போதும் அதற்கு முரணாக டிக்கட் மெஷின் கொள்வனவின் போது 35 சதவீதமான தொகை பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டுமென உடன்படிக்கையின் | கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் முறையாக உள்ளிடப்பட வேண்டும். | | ஒப்பந்தம் குறிப்பிட்ட பொருட்களை வழங்குவதற்கு முன் பணம் செலுத்துவதற்கான நிபந்தனைகளை உள்ளடக்கியது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிபந்தனையொன்றாக குறிப்பிட்டு 2018 நவம்பர் 22 ஆந் திகதி பெறுமதி 30 சதவீதமான தொகை அதாவது ரூபா 2,277,000 தொகை மெஷின்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆண்டு - 2018 | | | |

## 23. இலங்கை மரமுந்திரை கூட்டுத்தாபனம்

01. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை மரமுந்திரை கூட்டுத்தாபனம்

02. கணக்காய்வு அபிப்பிராயம்:-

| | |
|---|---|
| 2018 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2019 | இறுதி கணக்குகளில் உள்ள கணக்கீட்டு பிழைகள் காரணமாக நிராகரிக்கப்பட்டதுடன் கொடுக்கல் வாங்கல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது |
| 2020 | கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

03. முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| **2018** | | | | |
| **01.** | முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 40,294,448 கிரயமான 43 மோட்டார் வாகனங்கள் | மோட்டார் வாகனங்களின் எதிர்கால விளைதிறன் ஆயுள் காலத்தை கவனத்தில் எடுத்து உரிய மீள்மதிப்பீட்டுப் | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | வாகனங்களின் எதிர்கால பயனுள்ள வாழ்க்கையை கருத்தில் கொண்டு நிதிநிலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தும் நியமம் 16 இன் பிரகாரம் அந்த மோட்டார் வாகனங்களை மீண்டும் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | அறிக்கைகளில் தொடர்புடைய மீள்மதிப்பீட்டு மதிப்புகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. |
| **02.** | நியம இலக்கம் 19 இன் 139 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ரூபா 27,703,878 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதற்காக எதிர்காலப் பொறுப்புக்கள் ஏற்படும் இடர் நிலையைக் குறைப்பற்காக ஓய்வூதிப் பணிக்கொடை கடப்பாடு சம்பந்தமாக முதலீட்டுத் திட்டத்தை உருவாக்கி கொள்ள வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால பொறுப்புக்களுக்கான இடரை குறைப்பதற்காக ஒரு முதலீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கைக ள் எதுவும் எடுக்கப்படவில . லை. | எதிர்கால பொறுப்பு அபாயத்தைக் குறைக்க எந்த முதலீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்படவில் லை. |
| **03.** | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பயன்பாட்டு உயிரியல் சொத்துக்களான முந்திரிகைப் பயிர்கள் நியாயப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்படாது உயிரியல் சொத்துக்களாக ரூபா 79,026,608 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நியமம் இலக்கம் 41 இன் பிராகாரம் உயிரியல் சொத்துக்கள் நியாயப்பெறுமதியில கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும | தடுப்பு நடவடிக்கைக ள் எதுவும் எடுக்கப்படவில . லை. | வாழ்க்கை சொத்துக்கள் நியாயமான மதிப்பில் மதிப்பிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | இறுதி இருப்பு முந்திரிகை பருப்பு ரூபா. 7,589,946 முந்திரிகை விதை ரூபா. 3,570,764 முந்திரிகை நாற்றுக்கள் ரூபா. 3,167,807 இறுதி இருப்புக்களின் உள்ளமையினை உறுதிப்படுத்துவதற்கான இருப்பு அறிக்கை கனக்காய்வுக்கு சமர்பிக்கப்படவில்லை. | இறுதி இருப்புக்களின் உள்ளமையினை உறுதிப்படுத்து வதற்குரிய தொடக்க அறிக்கையை வேண்டிக் கொண்டவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | இறுதி கையிருப்பின் பௌதீக சரிபார்ப்பு தொடர்பான பதிவுகள் தயாரிக்கப்பட வில்லை. | இருப்பை சரிபார்க்க தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை |
| 05. | சேதமடைந்த முந்திரிகை நாற்றுக்கள் ரூபா 1,007,126 சம்பந்தமாக நாற்றுக்கள் தொடர்பான அறிக்கை கனக்காய்வுக்கு சமர்பிக்கப்படவில்லை. | சேதமடைந்த நாற்றுக்கள் சம்பந்தமான அறிக்கையை கணக்காய்விற்குச் சமர்பித்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | அதற்கான அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை |
| 06. | நானாவித கடன்கொடுத்தோர ரூபா.853,000 கடன் கொடுத்தோருக்குரிய மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் கனக்காய்வுக்கு சமர்பிக்கப்படவில்லை. | கடன் கொடுத்தோர் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்காக மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 07. | 2018 ஆன்டிண் இறுதியில் பெற வேண்டிய ரூபா 17,483,950 மீதிகளில் ரூபா 13,263,982 மீதி 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது இருந்தும் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படாததால், 31.12.2021 அன்று நிலுவைத் தொகையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. |
| 08. | **2018** ஆன்டிண் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 23,691,408 மீதியில் ரூபா 4,923,343 மீதி 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டதுடன் ரூபா 709,250 மீதி 03 - 07 இற்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்பட்டிருந்தும் அம்மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படாததால், 31.12.2021 அன்று நிலுவைத் தொகையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **09.** | 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வருமான வரி கடப்பாட்டுக்கு உட்பட்ட நிறுவனமாக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான வருமான வரியை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | உள்நாட்டு வருவாய் சட்டத்தின்படி வருமான வரி செலுத்துதல்கள் செய்யப்படவில்லை. |
| **10.** | மீளாய்வாண்டில் தோல் முந்திரிகை ஒரு கிலோ கிராமின் சந்தை விலை ரூபா 390 இற்கும் ரூபா 505 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டிருந்தும் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் தோல் முந்திரிகை ஒரு கிலோ கிராமின் உற்பத்திக் கிரயம் ரூபா 541 இற்கும் ரூபா 2,679 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இதற்கிணங்க உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்காக முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடைமுறைகள் போதியதாக இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது. | கூட்டுத்தாபனங்களின் தோட்டங்களில் முந்திரிகை உற்பத்திக் கிரயத்தை குறைப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கு அல்லது உற்பத்திக்கான அலகொன்றுக்கான செலவுகளைத் துல்லியமாகக் கணக்கிடுவதற்கான ஒரு பெறிமுறை உருவாக்கப்படவில்லை. |
| **11.** | கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தோல் முந்திரிகை 99,119 கிலோ கிராம்களாக இருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளைப் பூர்த்தி செய்வதற்காக அது போதியதாக இல்லாததன் காரணமாக வெளியிலிருந்தும் 6299 | உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அறுவடையை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | முந்திரி உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனம் முந்திரி தோட்டங்களில் கிடைக்கப்பெறும் அறுவடைக்கு முறையான முகாமை செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிலோ கிராம் முந்திரிகைப் பருப்புக்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. அதற்கிணங்க தோட்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தோட்டங்களில் கிடைக்கின்ற விளைச்சலை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள் போதியதாக இருக்கவில்லை. | | | |
| **12.** | சுதுவதுர ஆர விதைப் பூங்காவின் 160 ஏக்கர்களுக்கு அண்மித்த அளவான மற்றும் கமன்தளுவ தோட்டத்தின் ஒட்டுக்குளம் பகுதியிலுள்ள காணியில் 10 ஏக்கர்கள் அளவான காணிகள் வெளித்தரப்பினர்களால் கைப்பற்றப்பட்டு பருவகாலப் பயிர்கள் மற்றும் வெற்றிலை உள்ளடக்கிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் இக்காணிகளை மீளக் கைப்பற்றுவதற்காக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளை வெளித்தரப்பினர்கள் கைப்பற்றுவது சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது | வெளி நபர்களின் வசம் இருந்த இந்த நிலங்கள் திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| **13.** | கூட்டுத்தாபனத்தினால் முந்திரிகை நாற்றுக்களை பகிர்ந்தளிக்கும் நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட 275,320 மற்றும் ஒட்டு முந்திரிகை நாற்றுக்களில் 208,921 நாற்றுக்கள் வெற்றியளிக்காதிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட 258,700 விதை மற்றும் ஒட்டு முந்திரிகை நாற்றுக்களில் 142,344 நாற்றுக்கள் வெற்றியளிக்காதிருந்தன. மே, யூன் மாதங்களில் விதை தளிர்களைப் பெற்று | காலநிலை மற்றும் சுற்றாடல் பாதிப்புக்களுக்கு தாக்கு பிடிக்கும் வகையில் நாற்றுக்களை வளரச் செய்வதற்கும் திட்டமிடுவதற்கும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | முந்திரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவியானது தோட்ட உதவியாளர் என மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, 31.12.2021 நிலவரப்படி 22 தோட்ட உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. பின்தொடர்தல் சரியாக செய்யப்படவில்லை, இன்றும் இந்த நிலைமைகள் அப்படியே இருக்கின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாற்றுக்களை வளரச் செய்து நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆண்டின் இறுதி காலாண்டின் போது வளர்ந்து காணப்படுகின்ற காலநிலைக்கு தாக்குபிடிக்கும் இயலுமை இல்லாத நாற்றுக்களைப் பகிர்ந்தளித்தலும், கூட்டுத்தாபனத்தில் 27 மரமுந்திரகை அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடமாகக் காணப்படுதலும், ஒரு உத்தியோகத்தர் பல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் இந்த வெற்றியளிக்காமைக்கு காரணமாக இருந்தும் இதற்காக கூட்டுத்தாபனத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| **14.** | 2018 ஆம் ஆண்டில் எலுவன்குளம் விதைப்பூங்காவில் முந்திரிகை உலர வைக்கும் தளமும் ஒரு கட்டிடமும் ரூபா 2,389,757 செலவு செய்து (வதியுடன்) நிர்மாணிக்கப்பட்டிருந்தும் உரிய செயற்பாடுகள் முறையான மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தளத்தின் கொங்கிரிட் இடப்பட்ட நிலத்தில் கொங்கிரீட் மேற்பரப்பிற்கும் H இரும்பு சட்டத்திற்குமிடையே புளக்கல் பயன்படுத்தப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்த சுவர் வெடித்திருந்தது. அவ்வாறே அதில் H இரும்பு சட்டம் முன்னர் காணப்பட்ட அத்திவாரத்திற்கு தொடர்புபட்டிருந்ததனால் | நிர்மாண நடவடிக்கைகளில் பொருண்மையான குறைபாடுகள் காணப்பட்டிருந்தும் அதனைக் கவனத்திற்கு கொள்ளாது கொடுப்பனவுகளுக்கு சிபாரிசு செய்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்திவாரம் இடத்திற்கு இடம் வெடித்திருந்த போதிலும் இக்குறைபாடுகளைச் சரி செய்வதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **2019** | | | | |
| **15.** | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 18 இன் படி கூட்டுத்தாபனத்தினால் இன்வொயிஸ் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கணக்காய்வு கட்டணத்தினை தீர்க்கப்பட வேண்டியுள்ள போதிலும், 2005 ஆம் வருடம் முதல் 2018 ஆம் வருடம் வரையில் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணமான ரூபா 2,552,208 மீளாய்வு ஆண்டு வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்காய்வு கட்டணத்தினை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டின் மொத்த கணக்காய்வு கட்டணம் 2021 ஆம் ஆண்டில் ரூபா. 291,000 செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டது . | 31.12.2021 அன்று செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா.2,261,208. |
| **16.** | 2012 யூலை 24 ஆந் திகதிய பொது வியாபாரம் தொடர்பான குழு நிலை தீர்மானங்களுக்கமைய பொது வியாபார குழுவினால் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையற்ற காணிகளின் உரிமையினை கூட்டுத்தாபனத்திற்கு பணத்திற்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும் படி அறிவுரை செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் காணி, சீர்திருத்த ஆணைக்குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மரமுந்திரிகை செய்கைக்கான 15,329 | காணிகளின் சட்ட ரீதியான உரிமையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வெற்றிகரமான தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில் லை. | கூட்டுத்தாபனத்தின் பாவனையில் உள்ள நிலங்களுக்கு சட்டப்பூர்வ உரிமையை உறுதிப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏக்கர் காணியின் சட்டரீதியான உரிமையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் முடிக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| **17.** | 2019 இல் புத்தளம் மற்றும் கமன்தழுவ பரிசோதனை மத்திய நிலையத்திற்காக மீண்டெழும் சன்மானத்தின் கீழ் ரூபா 3,412,063 மற்றும் மூலதன சன்மானத்தின் கீழ் ரூபா 3,927,223 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டினுள் புதுப் பரிசோதனை எதுவும் ஆரம்பிக்கப்பட்டிலாது இருந்ததுடன் இரு மத்திய நிலையங்களிலும் முன்னைய வருடங்களிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வந்த 08 பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மேலும் பரிசோதனைகளின் முன்னேற்றத்தினை கணிக்கப்பட கூடிய தொடர் மற்றும் முறையான முன்னேற்ற அறிக்கையினை பராமரிப்பினையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பரிசோதனைகளின் முன்னேற்றத்தினை கணக்கிடக் கூடியவாறான தொடர் மற்றும் முறையான முன்னேற்ற அறிக்கை பராமரிப்பினை மேற்கொள்ளப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்க தொடர்ச்சியான மற்றும் வழக்கமான முன்னேற்ற அறிக்கை எதுவும் பேனப்படவில்லை. |
| **18.** | 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட 526 வது பணிப்பாளர் சபை கூட்டத்தில் விற்பனைப் பிரிவு தொடர்பாக எதிர்காலத்திற்காக உற்பத்தி திட்டம் ஒன்றினை மற்றும் அதற்கு இணங்கக் கூடியதான விற்பனைத் திட்டமொன்றினை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும் படி மற்றும் அரச நிறுவனங்களுக்கு சலுகை விலையில் மரமுந்திரிகை பெற்றுக் கொடுப்பதற்கான முறையொன்றினை தயாரித்து கூட்டுத்தாபன | பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | சபையின் தீர்மானம் அமல்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மரமுந்திரிகையை பிரபல்யப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படியும் பணிப்பாளர் சபையினால் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | | | |
| **19.** | வயின் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்கொள்ளப்படும் பணியாக காட்டப்பட்டுள்ள ரூபா 246,127 க்கான தொகையினை மற்றும் ரூபா 5,550 க்கான போத்தல்களும் வருடத்தின் இழப்பாக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. மேலும், இத்திட்டத்திற்காக சென்ற ஆண்டில் ரூபா 66,700 ஆலோசனைக் கட்டணமாக வெளிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் அதனால் எவ்வித வருமானம் பெற்றுக்கொள்ளவில்லை. | சரியான ஆலோசனையின் கீழ் மாதிரியொன்றினை தயாரித்து பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பரிந்துரையினை பெறப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | இழப்பு மற்றும் தோல்வியுற்ற நிர்வாக முடிவுகள் குறித்து பின்தொடர்தல் செய்யப்படவில்லை. |
| **20.** | 2019 பணிக்கொடை நிதியினை உரிய தினத்தில் செலுத்தாமையினால் மிகைக் கட்டணமாக ரூபா 96,607 செலுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டியமை. | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | பணிக்கொடை நிதியை உரிய திகதியில் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| **21.** | திறைசேரி அனுமதியில்லாது மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் 2013 யூன் 04 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த வைத்திய உதவி திட்டத்தின் கீழ் ஊழியர் மற்றும் குடும்ப அங்கத்தினர்களுக்காக வெளிவாரி வைத்திய செலவுக்காக வருடாந்தம் ரூபா 15,000 செலவினை குறைநிரப்பு செய்வதுடன் அதற்காக ஊழியர் சம்பளத்திலிருந்து அங்கத்துவ கட்டணமாக | திறைசேரி அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுப்பனவுகளை முறையாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | மருத்துவ உதவித் திட்டத்துக்கான திறைசேரி அனுமதி இதுவரை பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் ரூபா 300 அறவிடப்பட்டிருந்தது. ஆயினும், இத்திட்டத்தின் கீழ் ஊழியர் வெளிவாரி சிகிட்சைக்கான பற்றுச்சீட்டினை முன்வைத்திருந்த போதிலும் அச்செலவினை குறைநிரப்புவதை 03 வருட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய வைத்திய உதவிப் பணம் ரூபா 3,470,925 ஆக இருந்தது. | | | |
| **22.** | வர்த்தக நாற்று மேடையின் கீழ் கடன்பட்டோராக ரூபா 10,426,696 க்கான தொகையினை இருப்பதுடன் அதில் ரூபா 9,466,200 ஆனது 07 வருடங்களுக்கு மேல் பழமையான பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமானமாகும். இத்தொகையினை அறவிட முடியாத நிலையில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | கிடைக்கப் பெற வேண்டிய பணத்தினை துரிதமாக அறவிடப்பட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைக ள் எதுவும் எடுக்கப்படவில் லை. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலிழந்தவுடன் உறுவான அமைச்சுக்களுடன் நிலுவையில் உள்ள மீதி தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வராத காரணத்தினால் மீளப்பெற முடியாத நிலை உருவாகியுள்ளது. |
| **23.** | 06 வருடங்கள் கடந்துள்ள நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு செலுத்த வேண்டியுள்ள ரூபா 3,500,000 க்கான பணத்தினை மற்றும் அதற்கான ரூபா 927,500 வட்டியினையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத் தொகையும் மற்றும் அதன் வட்டியையும் முறையாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைக ள் எதுவும் எடுக்கப்படவில் லை. | ஒப்பந்தத்தின்படி கடன் தொகை மற்றும் திரட்டப்பட்ட வட்டி செலுத்தப்படவில்லை . |
| **24.** | 2019 இல் கூட்டுத்தாபனத்தினால் 19 மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 175,000 க்கான வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 2019 மே மாதம் 28 ஆந் திகதி நடந்த 523 ஆவது | பெறுகை வழிகாட்டலுக்கு அமைவாகவும் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுக்கு அமைவாகவும் செயற்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைக ள் எதுவும் எடுக்கப்படவில் லை. | சபையின் முடிவுக்கு இணங்காததால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிப்பாளர் சபை கூட்டத்தில் மோட்டார் சைக்கிள் 19 எண்ணிக்கையினையும் ஒரு நபரே கொள்வனவு செய்வதாயின் அதனை மதிப்பீட்டு பெறுமானத்தை விட விற்பனை செய்யப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் ரூபா 343,500 மதிப்பீட்டு பெறுமானமுள்ள 19 மோட்டார் சைக்கிள் களையும் ரூபா 175,000 பெறுமதியினைக்கு தனி நபர் கொள்வனவாளர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | | | |
| **25.** | 2017 வருடம் அம்பாறை ஹாடி பெருந் தோட்டத்தில் அமைந்துள்ள பயிற்சி மையத்தினை பயணிகளின் உல்லாசப் பங்களாவாக திருத்தி அமைக்கவும் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 5,050,354 க்கான தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இப்பயணிகள் பங்களாவினை வாடகைக்கு கொடுக்கப்பட்டதன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 48,000 க்கான வருமானம் மாத்திரம் ஈட்டிக் கொள்ளப்பட்டிருந்தது. | பயணிகளுக்கான பங்களாவின் மூலமாக கூடிய வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கான நடவடிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | சுற்றுலா பங்களாக்கள் மூலம் வருமானம் ஈட்ட எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. |
| **26.** | வயின் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 142,980 க்கான ஒட்டுத்துண்டுகள் அத்திட்டம் நிறுத்தப்பட்டதன் பின்னர் வீணடிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. | வயின் உற்பத்தியினை ஆரம்பிக்கப்பட்டு சுற்றுப் பொருட்களை கூடிய விரைவில் பாவனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | லேபிள்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. |
| **27.** | பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 வருடத்திற்கான "நிகழ்ச்சி நிரல்" மற்றும் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய இலக்கம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி, நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 கொண்ட தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பேண்தகு அபிவிருத்தி நோக்கினை அடையும் பொருட்டு நிறுவனத்தினால் அடைந்து கொள்ளப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் இல் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிலவும் இடைவெளிகள் போன்றே முன்னேற்றத்தினை அளந்து பார்ப்பதற்கு பொருத்தமான காண் படங்களை இனங்கண்டு கொள்ள வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அது போன்ற காண் படங்களை இனங்கண்டு நோக்குகளின் மூலம் அடைந்து கொள்ளப்பட்ட அளவு மற்றும் விலகிச் சென்றமை போன்றே கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டிய பலவிதமான களங்களினை இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | ஏற்படுத்தப்பட்டு, அவற்றை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |

## 24. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

01. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் :- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

02. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

2017 ஆம் ஆண்டிற்கான கடைசி நிதிநிலை அறிக்கைகள் 08.02.2022 அன்று பெறப்பட்டது.

2018, 2019, 2020, 2021 நிதிநிலை அறிக்கைகள் பெறப்படவில்லை.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில், கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளின் 154(6) அறிக்கைகளின்படி மூண்றான்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2020 - கொடுக்கல் வாங்கல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

03. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| (அ) | பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பாக தலைவர் மற்றும் தன்னார்வ ஓய்வூதிய இழப்பீட்டுக் குழுவுடன் 2016 செப்தெம்பர் 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டத்திற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதிகள் தனிப்பட்டதோர்கணக்கில் செலவு வைக்கப்பட்டு, அதன் பொறுப்புக்கள் பதிற்கடமை நிதி முகாமையாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் அதனை செயற்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 379 மில்லியன் தொகை தொடர்பில் தனியானதோர் வங்கிக் கணக்கு ஓய்வூதிய இழப்பீட்டிற்காக | பொதுத் திறைசேரி யிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை திறைசேரி அறிவுறு த்தல்கள் மற்றும் உரிய வழிமுறை களின் படி குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். இந்த விடயம் உள்ளடங்கலாக நிறுவனத்தின் நிதி பிரமாணங்கள் மற்றும் ஏனைய உள்ளக சுற்றறிக்கை ஏற்பாடுகளை உரிய விதத்தில் செயற்படுத்தியிருக்காமை சம்பந்தமாக பதிற்கடமை நிதி முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் நிதி (பதிற்கடமை பொது முகாமை யாளர்) ஆகியோர் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேணப்பட்டிருக்கவில்லை. அதன்படி பதிற்கடமை நிதி முகாமையாளர் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படாதிருந்ததுடன், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பொது முகாமையாளர் நடவடிக்கை எடுக்காதிருந்தமையம் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கான நிலுவைத் தொகை 174,927,250 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான நிலுவைத் தொகை ரூபா 15,520,274 மற்றும் அந்த நிதியங்களிற்கான முறையே ரூபா 82,367,893மற்றும் ரூபா 7,663,632மிகை அறவீட்டுத் தொகைகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும்,இந்த நியதிச்சட்ட செலுத்துகைகள் தொடர்பில் 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 2013/02ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 முதல் 3.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியதிச்சட்ட செலுத்துகைகள் தொடர்பில் சுற்றறிக்கைஏற்பாடு களை பின்பற்றுவதற்கும் அதனை செயற்படுத்துவதற் கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கடந்த ஆண்டுகள் முழுவதும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் ஈட்டியிருந்தமை காரணமாக இந்த நியதிச்சட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் எழுந்திருந்தன. நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கான பிரேரணை ஒன்றை தெடர்புடைய அமைச்சின் செயலாளர் ஊடாக எதிர்வரும் பாதீட்டுப் பிரேரணைக்குச் சமர்ப்பித்து நிதி ஏற்பாடுகளை பெற்று அவற்றை தீர்ப்பதற்கு எதிர்பாக்கப்படுவதுடன் தற்போது குறித்த உதவு தொகைகளை மாதாந்தம் செலுத் துவதற்குத் தேவையான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (இ) | 1964 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 186/14ஆம் இலக்க மற்றும் 2011 யூன் 30 ஆந் திகதிய 21/1712ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள்மூலம் பரிந்துரைக்கப்பட்ட வணிகச் செயல்பாடுகளில் நேரடியாகவோ அல்லது | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன்.பொறுப் பு வாய்ந்த அதிகாரிகள் ஏற்கனவே நிறுவனத்தை விட்டு வெளியேறியுள்ளதுடன் தற்போதைய அதிகாரிகள் மற்றும் நிர்வாகத்தினர் புதிதாக நியமிக்கப்பட் டவர்களாவர். எவ்வாறாயினும், 2020முதல் 2025வரையிலான கூட்டிணைந்த | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகவர்கள் மூலமாகவோ ஆழ்கடல் மீன்பிடித்தலில் ஈடுபடுதல், மீன் பதனிடுதல்,அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் மீன்களின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை, மீன் மற்றும் கடல் உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனையை எளிதாக்குதல்ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | திட்டம்,2021/2020 இற்கான வரவு செலவுத் திட்டம், கொள்வனவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றின் படி எதிர்கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்புடைய அனைத்து திட்டங்களுக்கும் பணிப்பா ளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பின்வரும் குறைபாடுகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>i) 2003 யூன் 02 ஆந் தேதியிட்ட பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பிரிவின் படி வருடாந்த செயலாற்றலை மதிப்பிடுவதற்காக சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்று பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்டிருக்க வில்லை.<br><br>ii) அனைத்து 08 ஐஸ் தொழிற்சாலைகளும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 33,364,965 நட்டத்தைஈட்டியுள்ளன. | கூட்டுத்தாபனத்தின் வருடாந்த செயலாற்றலை மதிப்பிடுவதற்காக சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்றை நியமிப்பதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடந்த 2014, 2015 ஆம் ஆண்டுகளிலும் முன்னைய ஆண்டிலும் நிறைவேற்றுனர் நட்டம் காணப்பட்ட போதிலும், 2021 இல்நிறைவேற்றுனர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, புதிய மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன்,அதன்படி நட்டமடைந்த பல நிறைவேற்றுனர்கள் இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. தற்போது அம்பாறை, பதுளை, தங்காலை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் உள்ள நிறைவேற்றுனர்கள் மாத்திரம் நட்டத்தில் இயங்கு வதுடன் ஏனைய நிறைவேற்று னர்கள் இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (உ) | கூட்டுத்தாபனத்தினால் கடன் அடிப்படையில் வெளித் தரப்பினர்களிற்கு மீன்களை விற்பனை செய்வதாயின் அதற்காக கடன் வரம்புகளை நிச்சயித்து, பொருத்தமான | வெளித் தரப்பினர்களி ற்கு மீன்களை விற்பனை செய்தலை சுற்றறிக்கை விதி முறைகளின் படியும் | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிமுறையொன்றை தயாரித்து, வங்கி பிணைமுறிகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் வெளித் தரப்பினர்களிற்கு மீன்களை விற்பனை செய்தலானது சுற்றறிக்கை விதி முறைகளின் படி மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையினால் 2019 யூன் 25 ஆந் திகதி இடம்பெற்ற 1040(I) ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும்,அதற்க மைய செயற்பட்டிருக்காமை அவதானிக் கப்பட்டது. | பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கையி லுள்ள அறிவுரையின் படியும் மேற்கொள்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| (ஊ) | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பதற்காக அரசாங்க தனியார் பங்குடமையின் கீழ் முதலீடுகளை கவர்ந்திழுப்பதற்குத் தேவையான மேம்படுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டு பிரதான அலுவலகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன் பதணிடல் பிரிவை புதுப்பிப்பதற்காக ரூபா 65,000,000தொகை 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் நேரச் செலவுகளிற்காக ரூபா 24,230,565 செலவிடப்பட்டிருந்ததுடன், கொள்வனவு நடவடிக்கைகள் உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் இடம்பெற்றிருக்காமையால் நிர்மாண நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படாது இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தமையால் எதிர்பார்த்த குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை. | 2006 இன் அரச கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுட ன், 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 26 மற்றும் 28 ஆம் பிரிவுகளின் படி நிர்மாண பணிகளை மேற்கொள்தல், நிர்மாணி த்தல், தேவையான ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிர்மாண கண்காணிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுத ல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | கூட்டுத்தாபனத்தினால் மேற்கூறிய மீன் பதப்படுத்தும் பிரிவின் பழைய கூரையிலிருந்து அஸ்பெஸ்டஸ் தகடுகளை அகற்றி புதிய தகடுகளை பொருத்துவதற்காக ரூபா 3,732,498 செலவிட்டுள்ளது. பழைய தகடுகளை அகற்றுவதற்காக சிவில் இன்ஜினியர் ஒருவரின் பரிந்துரையின்றி மேற்கொள் ளப்பட்டிருந்ததுடன், பழைய அஸ்பெஸ்டஸ் தகடுகள் களஞ்சியத் திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிரு க்கவில்லை. மேலும், அந்த அஸ்பெஸ்டஸ் தகடுகள் வேலைத் தளத்தில் காணப்படவுமில்லை. | இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்க ள் இனங்காணப்பட்டு அவர்களிடமி ருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ஏ) | 2019 செப்தெம்பர் 02 அன்று மேற்கொண்ட மீன் பதப்படுத்தும் பிரிவின் பௌதீக பரிசோதனையின் போது, புதிதாக போடப்பட்டிருந்த 155 அஸ்பெஸ்டஸ் தகடுகள் வெடித்திருந்தமை அவதானிக்கப்பட் டதுடன், மழை நீர் கசிவு காரணமாக கூரையின் நிலைத்திருப்பு நிச்சயமற்றதாக காணப்படுகின்றமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | பொறுப்புவாய்ந்த உத்தியோக த்தர்கள் இனங்காணப்பட்டு அவர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ஐ) | மோதர மீன்பிடி தொகுதியில் தற்போது இயங்கி வருகின்ற ஐஸ் தொழிற்சாலைக்கு 02மின்சார போர்க் லிப்ட் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பரில் ரூபா 10 மில்லியன் தொகை கூட்டுத்தாப னத்திற்கு | முகாமைத்துவச் சபையும் உயர் மட்ட முகாமைத்துவமும் கூட்டுத் தாபனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொண்டு | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும்,கொள்வனவு நடவடிக்கைகள் தாமதிக்கப்பட்டிருந்தமை காரணமாக போர்க்லிப்ட் இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடிந்திருக்காமையால் தொழிற்சாலையின் வினைத்திறன் குறைவடைந்து வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் குறிக்கோளை அடைய முடிந்திருக்கவில்லை. | வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் குறிக்கோளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| (ஒ) | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை அரசதனியார் பங்குடமையின் கீழ் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் தரப்புகளுடன் கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்காக 2016 ஆகஸ்ட் 23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டிருந்தது. அந்த தீர்மானித்தின் படி, 2017 சனவரி 26 ஆம் திகதி அமைச்சரவை கலந்துரையாடல் தீர்வுக் குழுவொன்றை நியமித்திருந்த போதிலும்,கணக்காய்வுத் திகதியான யூலை 2021 யூலை மாதம் வரை சுமார் 4 ஆண்டுகளும் 06 மாதங்களும் கடந்திருந்த போதிலும்,கலந்துரையாடல் குழு கூட்டப்பட்டிருக் கவில்லை. மேலும், 2017 சனவரி 26 ஆந் திகதி பொது நிதித் திணைக் களத்தினால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்ப தற்காக 05 பேர் கொண்ட செயற் திட்டக் குழுவொன்று | முகாமைத்துச் சபையால் அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு நடவடி க்கை எடுத்து, எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டி ருந்தது. எவ்வாறாயினும், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை அரசாங்கத்திற்கு சொந்தமான கூட்டு முயற்சியாக நடத்துவதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கு அமைச்சரவை நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு (CANC) மற்றும் செயற்திட்டக்குழு (PC) நியமிக்கப்பட்டு கணக்காய்வுத் திகதி வரை 04 ஆண்டுகளைக் கடந்திருந்த போதிலும்,இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை அரசதனியார் பங்குடமையின் கீழ் இலாபம் ஈட்டும் நிறுவனமாக கூட்டு முயற்சி ஒன்றாக நடத்திச் செல்வதற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக, குறைந்தபட்சம் பிரேரணைகளேனும் கோரப்படாதிருந்ததுடன் அதற்குத் தேவையான கொள்வனவு நடவடிக் கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | | | |
| (ஓ) | கொரியாவின் Fontus Ocean Holdings கம்பனியினால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துடன் ஒரு கூட்டு முயற்சியாக மீன்களை பொதிசெய்து ஏற்றுமதி செய்வதற் கானஅரச தனியார் கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு 2016 மே 19 ஆந் திகதி முதல் முயற்சிகள் | திட்டமிடப்பட்டவா று புதிய முதலீடுகள் மூலம் கூட்டுத் தாபனத்தின் வர்த்தகச் செயற்பா டுகளை விரிவுபடுத்துவதற் கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும்,அதற்குத் தேவையான கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிக் கம்பனியின் இயலுமை குறித்து மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமையால் இந்தக் கம்பனியுடன் இணைந்து ஆரம்பிப் பதற்கு திட்டமிடப்பட்டிருந்த கூட்டுத் தொழில் முயற்சி தோல்வியடைந்து இடைநடுவே கைவிடப்பட்டிருந்தது. | | | |
| (ஔ) | 2016 மார்ச் 18 ஆந் திகதிய 2/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி, கூட்டுத்தாபனத்தால் மிகையாக காணப்படுகின்ற ஊழியர்களை ஓய்வு பெறச் செய்வதற்குப் பதிலாக,அனைத்து ஊழியர்களிற்கும் ஓய்வுபெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை யால் கூட்டுத்தாபனத்தின் அன்றாட வணிக நடவடிக்கைகளைத் தொடர் வதற்குத் தேவையான முக்கியப் பதவிகள் வெற்றிடமாகியிருந்தன. இதன் விளைவாக, நிர்வாக முடிவுகளை எடுக்கும் திறன் கொண்ட அதிகாரிகள் இல்லாததால்,கூட்டுத்தாபனத்தை இலாபகரமான வணிக நிறுவனமாக மாற்றும் நோக்கத்தை அடைவதற்கான திட்டமொன்று இன்றி ஊழியர்கள் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற பிரதான பதவிகளிற்காக பொருத் தமானவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன்,இந்த செயல்முறை மிக விரைவாக செய்யப்பட வேண்டியிருந்தமையால் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நபர்களை ஓய்வு பெறச்செய்ய முடியாது போயிருந்தது.வெற்றிடமான அனைத்து பதவிகளிற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டாலும் கூட, பல்வேறு காரணிகள் மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக பதவி வெற்றிடங்கள் எழுந்துள்ளன. மிக விரைவாக இந்தப் பிரச்சினைகளை தீர்த்து, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை போட்டித்தன்மையுடைய மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக இலாபகரமான வர்த்தக நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பத ற்கு எதிர்பார்க்கப்படு கின்றது. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (க) | மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிக்கையில்கூட்டுத்தாப னத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடல் | கூட்டுத்தாபனத்தின் வர்த்தக நடவடிக்கைகளை மறுசீரமைத்து சட்டத்தை | உள்நாட்டுச் சந்தையில் தேவையான அளவு மீன் வகைகள் (தளபத்து/ கொப்பரா) காணப்படா மையால், வரிசை அமைச்சின் | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தளங்களை நிர்மாணித்துப் பராமரித்தல்,மீன்பிடி உபகரணங்களின் இறக்குமதி மற்றும் விற்பனை, மீன்பிடி படகுகளை கட்டுதல், மீன்பிடி படகுகளுக்கான பராமரிப்பு வசதிகளை வழங்குதல், உற்பத்தி மற்றும் மீனவர்களின் கோரிக்கையின் பேரில் தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தல் போன்ற வணிக நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனம்,வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றம் மற்றும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள் நிறுவப்பட்டதன் பின்னர்,அந்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்கப் பட்டிருந்த போதிலும், அதற்கமைய கூட்டுத்தாபனத்தின் வணிக நடவடிக் கைகளை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழிகாட்டு தலின் கீழ் புதிய நிர்வாகத்தின் பங்குபற்றுதலுடன் மீன் இறக்குமதி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>தற்போது கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மறுசீரமைக்கப்பட்டு, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சில செயற்திட்டங்களை கூட்டுத் தொழில் முயற்சிகளாக ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக - காலி ஐஸ் இயந்திர கூடம் | |
| (ச) | பேசாலையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 03ஏக்கர் 01 ரூட் 13.9பேர்ச் வணிக வளாகம் 2016ஒக்தோபர் 17 ஆந் திகதி கொள்வனவுச் சபையால் ரூபா 150,000 மாத வாடகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை ரூபா 130,000 மாத வாடகைக்கு வழங்கியிருந்தமையால் 2016 திசெம்பர் 14 முதல் மீளாய்வாண்டின் இறுதி | கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் கொள்வனவுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இழப்பு ஏற்படாத வகையில் செயற்படுதல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையான 36 மாதங்களின் போது ரூபா 720,000 இழப்பு ஏற்பட்டிருந்தது. இதனுடன் தொடர்புடைய குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 6இன் படி,உடன்படிக்கையின் ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்காக ரூபா 500,000 வங்கி உத்தரவாதம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டு அது வருடந்தோறும் புதுப்பிக்கப்ப டுதல் வேண்டும். இருப்பினும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. மேலும், காணி மற்றும் குத்தகை காணி என நிலம் வேறுபடுத்தப்பட்டிருக்காமை காரணமாக 20ஏக்கர் 1ரூட் 15பேர்ச் காணி தனியார் நிறுவனத்தினால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. | | | |
| (ட) | காலி ஐஸ் இயந்திர கூடத்தின் குளிரூட்டல் நிலையத்திற்குச் சொந்தமான இரண்டு கென்டன்சர்கள் ரூபா 313,103 பழைய இரும்பு விலைக்கு 2018 மே 16 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதிப்பிரமாணம் 770 மற்றும் 771 இன் படி பொருட்கள் கணக்கெடுப்புச் சபையால் பயன்படுத்த முடியாதவையாக இனங்காணப்பட்டிருக்கவில் லை. மேலும், இந்த பொருட்களிற்காக தொழில்நுட்ப அறிவு கொண்ட பொறியியலாளர் ஒருவரிடமிருந்து அறிக்கை ஒன்று பெறப்படாததுடன் பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டிருக்க வுமில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுட ன் விசாரணை அறிக்கையின் படி பொறுப்புவாய்ந்த நபர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காலி ஐஸ் இயந்திர கூடத்தின் குளிரூட்டல் நிலையத்திற்குச் சொந்த மான 02 கென்டன்சர்கள் பழைய இரும்பு விலை க்கு விற்பனை செய்யப் பட்டிருந்தமை தொடர்பில் உள்வாரியாக விசார ணை ஆரம்பிக்கப்பட்டு ள்ளது. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (த) | மேற்படி ஐஸ் தொழிற்சாலைக்கு இரண்டு கென்டன்சர்கள் ஒன்று ரூபா 6,368,750 வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கு முன்பணமாக ரூபா 2,547,500 தொகை 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி செலுத்தப்பட்டு 02 கென்டன்சர்களும் முறைமைக்கு பொருத்தப்பட்டிருந்த போதிலும், ஐஸ் உரைவதற்கு எடுக்கும் காலம் அதிகரித்தமை, கென்டன்சரில் வாயு மற்றும் நீர்க் கசிவு இடம்பெற்றிருந்தமையால் தரத்தில் குறைந்த கென்டன்சர் பொருத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின்படி,கோரப்பட்டி ருந்த இரண்டு கென்டன்சர் இயந்திரங்களும் கோரப்பட்டிருந்த பண்புகளுடன் இனங் காதிருப்பின் எவ்வித நிபந்தனை யுமின்றி நிராகரிக்கப்படும் என்றும் வழங்கப்பட்டுள்ள முற்பணத் தொகை மீளப்பெறப்படும் என்றும் பரிந்துரைக்க ப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய செயற்பட்டிரு க்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுட ன் விசாரணை அறிக்கையின் படி பொறுப்புவாய்ந்த நபர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடி க்கை எடுத்தல் வேண்டும். | புதிய இரண்டு கென்டன்சர்கள் தொடர் பில் காணப்படுகின்ற தொழில்நுட்ப விடயங் களை அடிப்படையாகக் கொண்டு இந்த இயந் திரங்களிற்காக தற்போது செலுத்தப்பட வேண்டியு ள்ள நிலுவை தொகை களை செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறு த்தப்பட்டுள்ளது. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ப) | கூட்டுத்தாபனத்தினால் 2017 மார்ச் 28 அன்று மோதர தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியிலிருந்து 117.78 பேர்ச் மற்றும் 30 பேர்ச் விஸ்தீரணமடைய 02காணிகள் 4 வருட காலத்திற்கு ஒரு தனியார் | நிலுவை குத்தகை வாடகை யினை விரைவாக அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனத்திற்கு முறையே ரூபா 1,110,000 மற்றும் ரூபா 333,000 மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு வழங்கப் பட்டிருந்ததுடன், 2019 ஆகஸ்ட் 16 வரை, 8 மாதங்களிற்கான ரூபா 5,487,450 குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.தனியார் நிறுவனத்தினால் மற்றுமொரு 49.7 பேர்ச் காணி சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதில் 29.7 பேர்ச் இற்கானஅரசாங்க மதிப்பீட்டாளரின் மாதாந்த வாடகை மதிப்பீடு ரூபா 178,333 ஆகும். | | | |
| (ர) | ரூபா 1,500,000 பெறுமதியான கணினி கணக்கீட்டு முறைமையை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்கள் கோவையின் 5.2.1, 5.3.11 மற்றும் 5.4.4 ஆகியவற்றின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை,கூறுவிலைப் பாதுகாப்பு மற்றும் செலுத்தப்பட்ட ரூபா 300,000 முற்பணம் ஆகியவற்றுக்காக பிணைமுறி எதுவும் பெறப்பட்டிருக்க வில்லை. தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும்,கணினி மயமாக்கப்பட்ட கணக்கீட்டு முகாமைத்துவ முறைமை நிருவப்பட்டிருக்கவில்லை. | கணினி மயமாக்கப்பட்ட கணக் கீட்டு முகாமைத்துவ முறைமை யை நிருவுவதற்கு முகாமைத் துவம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன் நிதிசார் நட்டத்தை அறிவிடுதலும் வேண்டும். | ஒப்புக்கொள்வோம். | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ய) | 2016 திசெம்பர் 31 இல் | கணினி | அனைத்து நிறைவேற்று | நிலைமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளவாறு கூட்டுத்தாபனத்திடம் 32 நிறைவேற்று னர்களும் 97 விற்பனை நிலையங்க ளும் காணப்பட்டன. 2019 திசெம்பர் 05 ஆந் திகதியளவில் 21 நிறைவேற்று னர்களும் 88 விற்பனை நிலையங்க ளும் காணப்பட்டன. இந்த நிறைவேற்று நிலையங்களின் வர்த்தக நடவடிக்கைகளை தலைமை அலுவல கத்துடன் தொடர்புறுத்துவதற்கான கணனிக் கணக்கீட்டு முறைமை ஒன்று கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப்படுத் தப்பட்டிருக்கவில்லை. | மயமாக்கப்பட்ட கணக் கீட்டு முகாமைத்துவ முறைமை யை நிருவுவதற்கு முகாமைத் துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைதொடர்புறுத்து வதற்காக இந்த கணனிக் கணக்கீட்டு முறைமையை விரைவாக ஸ்தாபிப்பத ற்கு எதிர்பார்க்கப்படுகி ன்றது. | அப்படியே உள்ளது. |
| (ற) | 2011 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்த ரூபா 2,558,028 பெறுமதியான பொதியிடல் இருப்புக்கள் பற்றாக்குறை தொடர்பில் பொறுப்புவாய்ந்த களஞ்சியப் பிரிவின் முகாமையாளருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் குறித்த பற்றாக்குறையினை அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு 2016 மார்ச் 09 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விசாரணை யின் படி குறித்த பற்றாக்குறையினை அந்த உத்தியோகத்த ரிடமிருந்து உடனடியாக அறவிடுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ல) | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பேணிச் செல்லப்படுகின்ற 4 வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 304,514 தொகை 2016 ஆம் ஆண்டு முதல் இது வரை விளைவற்றதாக வைத்திருக்கப்பட்டுள்ள போதிலும், அந்த | விளைவற்ற வங்கிக் கணக்குகளை மூடுவதற் குத் தேவையான நடவ டிக்கைகள் எடுக்கப்படு தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குகளை மூடுவதற்குத் தேவையான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருக்காமையால் ஒவ்வொரு மாதமும் வங்கிக் கட்டணம் அறவிடப்படடிருந்தமை காரணமாக அந்த வங்கி மீதிகள் மேலதிகப் பற்று மீதியாக மாற்றமடைந்திருந்தது. | | | |
| (வ) | கடன்பட்டோருக்காக வழங்கப்படுகின்ற கடன் சலுகைக் காலம் 45 நாட்கள் ஆன போதிலும்,கூட்டுத்தாபனம் சமர்ப்பித்திருந்த காலப் பகுப்பாய்வு பட்டோலையின் படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் காலம் இரண்டு மாதங்களைத் தாண்டிய ரூபா 140,432,424 கடன்பட்டோர் மீதி காணப்பட்டதுடன், அது மொத்தக் கடன்பட்டோரில் 66 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும்,2-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவைத் தொகைரூபா 43,309,524 ஆனதுடன் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நிலுவைத் தொகை ரூபா 65,569,605 ஆகும். இது மொத்த கடன்பட்டோரில் முறையே 20 சதவீதம் மற்றும் 31 சதவீதம் ஆகும். | கடன்பட்டோருக்கா க வழங்கப்படுகின்ற கடன் சலுகைக் காலம் 45 நாட்களைத் தாண்டாதிருப்பதற் கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுட ன் நிலுவை கடன் மீதிகளை அறிவிடுதல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ழ) | கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் படி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 தொடக்கம் 06 மாதங்களிற்கு இடைப்பட்ட ரூபா 72,850,305தொகையும் 06 மாதங்களிற்கும் 02 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட ரூபா 50,967,824தொகையும் 02 | இந்த கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பதற்கு கடப்பாடு காணப்படாத கடன் கொடுத்தோர் மீதிகளை மீண்டும் | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 82,842,846 தொகையும் தீர்க்கப்படாத கடளன்கொடுத்தோர் மீதிகளாக காணப்பட் டன. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் காணப்படுகி ன்ற நியதிச்சட்ட கொடுப்பனவுகளை உரிய சட்டங்களின் படி செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| (ள) | ரூபா 293,521,703 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 191,845,870 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்காமையால் அந்த கடன்கொடுத் தோர் மற்றும் கடன்பட்டோர் மீதகளின் காணப்படு தன்மை குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை | கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதி உறுதி ப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ங) | கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவரின் பணிக்கொடை மற்றும் அதற்கான மிகை அறவீட்டை செலுத்தியிருக்காமை தொடர்பில் தொழில் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு வழக்கின் நிமித்தம் 2019 திசெம்பர் 31 முதல் ரூபா 1,695,880தொகை தவணைக் கட்டணமாக | நியதிச்சட்ட கொடுப்பனவு களை உரியவாறு மேற் கொண்டு மிகைவிதிப்பு செலுத்தப்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்துமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. | | | |
| (ந) | கூட்டுத்தாபனத்தினால் ரூபா 8,153,155 பெறுமதிசேர் வரி செலுத்தாமை தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிற்காக விளக்கமளிப்பதற்கு கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் தற்போதைய நிலைமை கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை. | நியதிச்சட்ட கொடுப்பனவு கள் செலுத்தப்படாதிருத் தல் கூட்டுத்தாபனத்தால் செய்யப்படக் கூடாது என்பதுடன், நீதிமன்ற கட்டளைக்கேற்ப நடவடி க்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (ம) | கூட்டுத்தாபனத்தின் லொறி வாகனமொன்று விபத்துக்குள்ளானமையால் வான் வாகன மொன்றுக்கு ஏற்படுத்திய சேதத்திற்காக ரூபா 500,000 இழப்பீடும், மீண்டும் தொழில் செய்ய முடியாமை மற்றும் சம்பளம் என்பவற்றுக்காக ரூபா 6,516,871 இழப்பீடு கோரி ஊழியர்களால் 08 வழக்குகளும், பணிக்கொடை செலுத்தாமைக்காக ரூபா 2,378,795இழப்பீடு கோரி 2 வழக்குகளும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் அதன் மீதான மிகை அறவீடை செலுத்தாமைக்காக ரூபா 232,702,066 தொகையினைக் கோரி 3 வழக்குகளும் ரூபா 8,153,155பெறுமதிசேர் வரி செலுத்தியிருக்காமை மீது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழக்கொன்றும் 2013 திசெம்பர் முதல் 2015 சனவரி வரையான காலத்தில் பெறப்பட்ட மீன்களிற்கு பணம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 42(அ) பிரிவின் கீழ் தற்போதைய நிலைமை கணக்காய்வி ற்கு தெரியப்படுத்தப்படுதல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தியிருக்கா மையால் 11,782,513இழப்பீடு கோரி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதி மன்றங்கள் மற்றும் தொழில் இணக்கப்பாட்டுச் சபை ஆகியவற்றில் வழக்குகள் தொடரப்பட் டிருந்தன. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் வெளி நபர்களுக்கு எதிராக கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய 17,514,049மீன் விற்பனை நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக 10 வழக்குகளும் அடித்தல் மற்றும் இழப்புக்களை அறவிட்டுக் கொள்வதற்காக 02 வழக்குகளும் காணிகளை கையேற்பதற்காக வழக்கொன் றும் ரூபா 14,826,226குத்தகை வாடகையை அறிவிட்டுக் கொள்வதற்காக 02 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. இருப்பினும், இது தொடர்பிலான நடப்பு நிலமைகள் கணக்காய்விற்கு தெரியப்படுத் தப்படவில்லை. | | | |
| (ண) | கூட்டுத்தாபனத்தினால் மீன்களை விற்பனை செய்கையில் முகவர்கள் ஊடாக நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக் கிய விதத்தில் மீன்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கா மையால் சந்தையில் மீன்களின் விலையை உறுதியாகப் பேணும் ஒழுங்கு படுத்தல் என்ற வகையில் | சந்தையில் மீன்களின் விலையை உறுதியாகப் பேணும் ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக செயற்படுதல் கூட்டுத்தாபனத்தின் பணிக ளில் ஒன்றாக இருப்பத னால் அதற்குத் தேவை யான | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்படுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | | |
| (ன) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக அதிகுளிரூட்டிகளைக் கொண்ட 50 லொறிகள் காணப்பட்ட போதிலும், அவற்றில் 46 லொறிகளிலுள்ள குளிரூட்டல் முறைமைகள் இயங்காதிருந்த போதிலும், மீன்களின் விற்பனைக்காக அவை பயன்படுத்தப்படுகின்றன. இதன் காணரமாக சிறந்த தரத்திலான மீன்களை நியாய விலையில் நுகர்வோருக்கு வழங்க முடியாது போயிருந்தது. | லொறிகளிலுள்ள குளிரூட்டல் முறைமைகளை செயற்படுகின்ற நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |
| (னா) | கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் காணப்படுகின்ற பிரதான 04 பதவிகளான பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), பிரதிப் பொது முகாமையாளர் மனித வள அபிவிருத்தியும் நிர்வாகமும், பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) ஆகிய பதவிகள் பதிற்கடமை அடிப்படையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) 03 ஆண்டுகளிற்கும் மேலாக வெற்றிடமாக காணப்படுகின்றமையால் செயற்பாட்டு நலிவுகள், செயற்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் திட்டங் களை வகுத்து நடைமுறைப்படுத் துவதில் நலிவுகள் அவதானிக்கப்ப | வெற்றிடமாக காணப் படுகின்ற பிரதான பதவிகளிற்கு துரித மாக நியமனங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரதான பதவிகள் வெற்றிட மானமையால் புதிய ஆட்சேர்ப்புகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்த உத்தியோகத்தர்கள் நீண்ட காலத்திற்கு நிறுவனத்தில் நிலைத்திருக்காமையால் இந்த வெற்றிடங்கள் மீண்டும் மீண்டும் எழுகின்றன. பிரதிப் பொது முகாமையாளர் நிதி பதவிக்கு தற்போது ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன் பிரதிப் பொது முகாமையாளர் மனித வள அபிவிருத்தி மற்றும் ஏனைய பிரதிப் பொது முகாமையாளர்களை ஆட்சேர்ப்தற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பிரதிப் பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் பதவியில் பதிற்கடமை புரிவதற்கு தற்போது நீர்கொழும்பு நிறைவேற்று முகாமையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ட்டன. | | | |
| (னி) | தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2016 ஆம் ஆண்டு முதல் நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்படுகின்றமை, உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்காமை , திட்டமொன்று இன்றி உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்தமை, பதிற்கடமை முறையை பின்பற்றுதல் போன்றன இடம்பெற்றிருந்தன. | தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு ஆட்சேர்த் தலை மேற்கொண்டு பொருத்தமான வழி முறை ஒன்றை பின்பற்றி உள்ளகக் கணக்காய்வு செயற் பாடுகளை வலுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் ஆட்சேர்க்கப்பட் டுள்ளார். | நிலைமை அப்படியே உள்ளது. |
| (னீ) | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய ST/ST/MDP/17 ஆம் இலக்க அரச கொள்கைகள் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ''2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் செயற்பட வேண்டுமென் பதுடன், மீளாய்வாண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் தனது விடயப்பரப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய பணிகள் குறித்து எவ்வாறு செயற்படுவது தொடர்பில் அறிந்து வைத்திருக்கவில்லை. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் அதன் பணிகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ''2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் இலக்கு கள் அடையப்படுவதை ன அளவிடக்கூடிய குறிகாட்டி களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிலைமை அப்படியே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதற்கான நிறுவன ரீதியான இலக்குகள் மற்றும் அவற்றை அடைந்து கொள்ளல் மட்டம், இலக்கு அடையப்படுவதனை அளவிடக்கூடிய குறிகாட்டிகள் ஆகியவற்றை இனங்காண் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| (னு) | 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க உடைய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்திக்கு அமைய 2016 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்திற்குரிய மூன்று உத்தியோகத்தர்கள் ஏனைய இரண்டு அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு அந்த இரண்டு உத்தியோகத்தர் களுக்காக ரூபா 2,638,104 ஆன சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஆலோசணை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | மீட்கப்படவில் லை. |
| (னூ) | கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக அல்லது முகவர்கள் மூலமாக ஆழ் கடல் இழுவைப்படகு மூலம் மீன் பிடித்தலானது கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிக்கும் போதுள்ள வியாபார பணியாக இருந்தபோதும் இதனை மேற்கொள்ளாது மீன் வழங்குனருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள ஏற்படும் தாமதம் காரணமாக நியாயமான விலையில் மீன்கள் கொள்வனவு செய்ய கூட்டுத்தாபனத்திற்கு முடியாது போனது | கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | வணிக செயல்பாடுக ளை நேரடியாகவே ா அல்லது முகவர்கள் மூலமாகவோ நிறுவுவதில் கவனம் செலுத்தப்பட வில்லை. |
| (னெ) | 2011 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்த ரூபா 2,558,028 பெறுமதியான பொதியிடல் இருப்புக்கள் பற்றாக்குறை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பரீட்சித்து அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்க ள் இனங்காணப்பட்டு | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | மீட்கப்படவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | | |
| (னே) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 111,008,896 தொகையான 07 வைத்திய சாலைகளுக்குரிய கடன் பட்டோர் மீதிகள் இல்லையென வைத்தியசாலைகளால் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் செய்யப்பட்ட உறுதிப்படுத்தல்களில் ரூபா 21,586,769 ஆன கடன்பட்டோருக்குரிய மீதி உறுதிப்படுத்தல் கிடைத்திருக்க வில்லை. | கடன்பட்டோர் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிரு ந்த மீதிகளின் சரியானதன்மைை ய உறுதிப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | மீதி உறுதிப்படுத் தல் பெறப்படவில் லை. |
| (னொ) | பாதுக்க சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் 1994 ஆண்டு முதல் உடன்படிக்கையொன்று இல்லாமல் நடாத்திச் செல்லப்பட்டு வருவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும 2018 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 1041 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் புதிய வாடகை யொன்றின் கீழ் உடன்படிக்கை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பான உதியோகத்தர்களி ன் கீழ் கோவைகள் பேணிச்செல்ல வேண்டியதுடன் அவை காணாமல் போனமைக்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட வேண்டும். | சட்ட பிரிவினால் பேணிச் செல்லப்படும் உடன்படிக்கை பிரதிகளுடன் கூடிய கோவை காணாமல் போயிருந்ததுடன் செயற்பாட்டு பிரிவு கோவை 2019 செப்தெம்பர் 05 ஆந் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய புலனாய்வு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வின் விசாரணைக் கு குறிப்பிடப்பட் டுள்ளது. |
| (னோ) | காலாவதியான பாவனைக்கு பொருத்தமற்ற மீன்களை விற்பனை செய்தமையினால் பொது சுகாதார பரீட்சகர்களினால் 03 வழக்குகளும் கூட்டுத்தாபனத்தின் வாகன விபத்து தொடர்பாக | நிறுவகத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக கவனம் செலுத்தி விரைவில் முடிவுறுத்திக்கொ | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | விசாரணையி ல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இழப்பீட்டு முதல் ரூபா 9,500,000 ஐ கோரி 5 வழக்குகளும் தொழிலாளர்களினால் மீண்டும் வேலை மற்றும் பின் சம்பள இழப்பீடு கோரி 7 வழக்கும் சேவகி ஒருவரினால் ரூபா 5 மில்லியன் ஐ இழப்பீடாக கோரி ஒரு வழக்கும் அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக கூட்டுத்தாபன தொழிலாளரின் வழக்கு 2 உம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. | ள்வதற்கும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கும் தேவையான கட்டுப்பாட்டு முறைமை களை அறிமுகப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| (ஔ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் வெளிநபர்களுக்கெதிராக மீன்களை கடனுக்கு விற்பனை செய்து கிடைக்க வேண்டிய ரூபா 23,481,680 பெறுமதியான தொகையை அறவீடு செய்யும் பொருட்டு 09 வழக்குகளும் ரூபா 19,438,275 ஆன குத்தகை வாடகையை அறவிடுவதற்காக 06 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | விசாரணையில் உள்ளது. |

## 25. இலங்கை கைப்பணிகள் சபை

1. நிறுவனத்தின் பெயர் - இலங்கை கைப்பணிகள் சபை

2. கணக்காய்வு அபிப்பிராயம் -

| | |
|---|---|
| 2018 | பாதகமான அபிப்பிராயம் |
| 2019 | பாதகமான அபிப்பிராயம் |
| 2020 | இறுதி அறிக்கை வெளியிடப்படவில்லை |

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| 1 | சபைக்குச் சொந்தமான கோட்டை லக்சல கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் **2014** ஆம் ஆண்டு முதல் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. **04** மாடிகளை உடைய **44,000** சதுர அடி அளவான இந்த கட்டிடத்தில் **1500** சதுர அடி அளவு மாத்திரம் **2019** ஆம் ஆண்டு வரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. கணிசமான பொருளாதார பெறுமதியுடைய இந்த கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையினால் கட்டிடம் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்படுவதுடன், சபைக்கு வருடாந்தம் | இந்த கட்டிடம் தொடர்பாக கண்டறிந்து அதனை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன், பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் தற்போது நிதி கஷ்டத்திற்கு முகங்கொடுத்திருந்த போதும் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. மேலும் ICTAD நிறுவன அறிக்கையின் பிரகாரம் பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இதுவரை ஒப்பந்ததாரரிடம் பணம் வசூலிக்கப்படாமல், 1500 சதுர அடியை தவிர மீதமுள்ள பகுதி பயன்படுத்தப்படாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உழைக்கக் கூடியதாக இருந்த கணிசமான வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பாக ICTAD நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தனியார் நிறுவனமொன்றில் இருந்து ரூபா **30** மில்லியன் தொகை கிடைக்க வேண்டியிருந்தது. சபையின் முகாமைத்துவம் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த கட்டிடத்தில் **1500** சதுர அடி மட்டுமே தற்போது பயன்பாட்டில் இருந்தது | | | |
| **2** | சபையின் கணக்குகளை வைத்தல் மற்றும் இருப்பு கட்டுப்பாடுகளுக்காக SAP என்ற பெயருடைய மென்பொருள் பயன்படுத்தப்படுவதுடன், நாளாந்த விற்பனைக்காக POS என்ற பெயருடைய மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது. இந்த மென்பொருள் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்ட போதிலும், அந்த மென்பொருளுக்குரிய தாய் கம்பனியுடன் சேவை உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சேவை உடன்படிக்கை நாளது வரையாக்கப்படாமையினால் இந்த மென்பொருள்களின் புதிய உள்ளடக்கங்கள் (New Version) மற்றும் விருத்தி செய்தல் என்பன இழக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கண்டறிந்து பொருத்தமான மற்றும் தேவையான நடவடிக்கைகளை விரைவாக பின்பற்றுதல் பொருத்தமானதாகும். | சபையில் காணப்படுகின்ற நிதி பிரச்சினைகளினால் சேவை உடன்படிக்கையை நாளதுவரையாக்க முடியாதிருந்தமையின் அடிப்படையில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | சேவை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படாததால், தரவுகளில் ஆபத்தில் உள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனத்தின் தரவுகள் Back Up ஆக வைக்க வேண்டிய போதிலும், அவசர சந்தர்ப்பமொன்றில் அந்த தரவுகளை முறைமையில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தமையினால் (Reinstallation) முறைமையில் காணப்படுகின்ற நிறுவனத்தின் தரவுகள் தொடர்பாக அதிகளவான ஆபத்தொன்று காணப்பட்டது. | | | |
| **3** | 2019 ஆம் ஆண்டின் போது உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பினுடன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்தமையினால் சபையின் விற்பனை வருமானம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 119,986,688 தொகையினால் குறைவடைந்திருந்தது. எனினும், செலுத்த வேண்டிய வங்கிக் கடன் பெறுமதி 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 127,797,557 இனால் அதிகரித்திருந்தது. கணக்காய்வு செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் வரையிலும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சுற்றுலா பயணிகள் குறைவடைந்தமையினால் விற்பனை வருமானம் வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் 12 காட்சிக் கூடங்களில் 04 காட்சிக் கூடங்கள் மாத்திரம் | இந்த நிலைமை தொடர்பாக விரைவாக கவனம் செலுத்தி சபையில் காணப்படுகின்ற நிதிப் பிரச்சினைகளுக்காகு குறுங்கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். | சபை விலையிடல் உபாய வழிகளை ஈடுபடுத்தி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலக்காகக் கொண்டு விஷேடமான பொருட்கள் விலையிடப்பட்டிருந்தது. எனினும் உள்நாட்டு நுகர்வோர்களை கவர்வதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. சஹ்ரான் குண்டு வெடிப்பு மற்றும் கொவிட் 19 நிலைமையின் அடிப்படையில் நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் வருமானங்கள் வீழ்ச்சியடைவதற்கு உட்பட்டிருந்தது. 2019 இன் வருமானம் வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் கடன் செலுத்த முடியாமையினால் கடன்களின் மீள்ணிப்பீட்டினால் கடன் தவணை வட்டி அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் புதிய வழிகாட்டல்கள் மற்றும் உபாய வழிகளை 2021 ஆம் ஆண்டில் இருந்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பல வெளிநாடுகளில் பட்டய விற்பனை நிலையம் திறக்கத் திட்டமிடப்பட்டு, USA இல் தொடங்க ஒப்பந்தம் செய்யப்பட்டு 2021 நவம்பர் இல் ரூபா. 19 மில்லியன் மதிப்பிலான பொருட்களை அனுப்பிவைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறக்கப்பட்டு 08 காட்சிக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலைமையில் சம்பளம் மற்றும் நாளாந்த செலவினங்களை செய்வதற்கு போதிளவான வருமானம் இல்லாமையின் அடிப்படையில் நாளாந்த செலவினங்களை தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரியில் இருந்து நிதி கோரப்பட்டிருந்தது. மிக விரைவாக விற்பனை வீழ்ச்சியடைந்திருந்தமையினால் சபை அதிகளவான நிதி கஷ்டத்திற்கு உட்பட்டிருந்தது. | | | |

## 26. இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் - இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனம்
2. கணக்காய்வு அபிப்பிராயம் -

| | |
|---|---|
| 2018 | பாதகமான அபிப்பிராயம் |
| 2019 | பாதகமான அபிப்பிராயம் |
| 2020 | பாதகமான அபிப்பிராயம் |

**2.** கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| **1** | பங்கதெனிய, வேஉட, இலயாபத்துவ, பிங்கிரிய ஆகிய தொழிற்சாலைகளில் எதுவித உற்பத்தி நடவடிக்கைகளும் இடம்பெறாதிருந்த போதிலும் நிருவாக மற்றும் | தொழிற்சாலைகளைப் பராமரிக்கும் செலவுகளைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதிய திட்டங்களுக்கு முதலீட்டாளர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் | நிலத்தின் சட்டப்பூர்வ உரிமை இல்லாததால், இதுவரை தொழிற்சாலைகளை மீண்டும் தொடங்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொதுச் செயற்பாட்டுச் செலவுகளாக ரூபா **2,650,837** செலவு செய்யப்பட்டிருந்தது. பங்கதெனிய, வேஉட தொழிற்சாலைகளின் காணிகள், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் ரூபா **173,722,500** தொகைக்கு **2019** ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் ஆக்கபூர்வமான முதலீட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | முடியவில்லை. |
| **2** | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 07 தொழிற்சாலைகளுக்குரிய 134 ஏக்கர் 15 ரூட் 217.2 பேச்சஸ் காணிகளின் உரிமை கணக்காய்வுத் திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | காணிகளின் உரிமைகளை எழுத்து மூலம் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய அமைச்சகத்தின் ஆதரவுடன், நிலத்தின் உரிமை கையகப்படுத்தப்படும் | உரிமைகள் இன்னும் கோரப்படவில்லை |

## 27. இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்

1. நிறுவனத்தின் பெயர் :- இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்
2. கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| **1** | கங்கேசந்துறையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 02 எண்ணெய் தாங்கிகள் மற்றும் குழாய் முறைமை லங்கா பெற்றோலிய மொத்தக் களஞ்சியப் புறப்பகுதி அரச கம்பனிக்கு எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 22 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் 2010 ஆண்டு முதல் 2020 வரை ரூபா 168,000,000 இற்கான தொகையொன்று கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. குத்தகை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் வரிசை அமைச்சிற்கு அறிவித்திருந்த போதிலும் இதுவரை அந்தப் பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் எழுத்துமூல உடன்படிக்கையின் படி எண்ணெய் தாங்கிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரிசை அமைச்சின் தலைமையில் இந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக கலந்துரையாடல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என. | இதுவரை பணமும் வழங்கப்படவில்லை |
| **2** | 1967 ஜுலை 12 திகதிய இலக்கம் 14, 756/7 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 89.7 பெர்ச்சஸ் கொண்ட கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணி 2017 ஆண்டில் ரூபா 735,000,000 இற்காக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த காணியை அபிவிருத்திச் செயற்திட்டம் ஒன்றிற்காக பயன்படுத்தி உயர்ந்த வருமானம் ஒன்றினை உழைத்தல் கூட்டுத்தாபத்தின் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களை ஆக்கபூர்வமான முதலீடுகளுக்காக ஈடுபடுத்த வேண்டும். | கலப்பு முதலீட்டுத் திட்டத்திற்கான ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கு **21.09.2021** அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் ஒப்புதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கொள்முதல் நடைபெற்று வருவதாகவும் | தற்போது வரை கொள்முதல் பணிகள் தொடங்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும் அதற்குப் புறம்பாக இந்தக் காணியை வாகனங்கள் நிறுத்துவதற்காக வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான நிறுவனங்களை தெரிவு செய்யும் போது 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவை பந்தி 1.2 இற்கு புறம்பாக கேள்வி நடைமுறை கடைபிடிக்காமல் 07 பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனங்களுடன் எழுத்துமூல உடன்படிக்கைகள் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருக்கவில்லை. 2017 ஆண்டின் போது இந்தக் காணியை அரசாங்க வங்கியொன்றில் ஈடு வைத்து பெற்றிருந்த ரூபா 97,700,000 இற்கான கடன் தொகையில் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் மேலும் செலுத்துவதற்கு இருந்த கடன் தொகை ரூபா 67,700,000 தொகையாக காணப்பட்டதுடன் இதுவரை செலுத்தியிருந்த மொத்த வட்டி ரூபா 47,870,613 தொகையாக காணப்பட்டது. 2020 ஆண்டிற்காக செலுத்தியிருந்த வருடாந்த வட்டி ரூபா 7,452,517 தொகை எனினும், வாகனங்கள் நிறுத்துவதன் மூலம் ஆண்டின் போது கிடைத்திருந்த வாடகை வருமானம் ரூபா 4,424,070 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மிகவும் உயர்ந்த வாணிப பெறுமதியுடைய பிரதேசத்தில் காணப்படும் இவ்வாறான ஆதனம் ஒன்றினை ஆக்கபூர்வமான முதலீட்டொன்றிற்காக ஈடுபடுத்துவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| 3 | 96/1900/111/135 இலக்க மற்றும் | ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற் | இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் | 1993 முதல் 2018 வரை இழந்த வரிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1996 ஆகஸ்ட் 21 திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அருவக்காலுவில் அமைந்துள்ள சுண்ணாம்புக்கல் படிவு அமைந்துள்ள 5140 ஏக்கர் காணி 50 வருட காலத்திற்காக குத்தகைக்கு கொடுப்பதற்கு புத்தளம் சீமெந்துக் கம்பனி (தற்போது சியெம் சிடி சிமெந்து (லங்கா) கம்பனி) உடன் 1993 திசெம்பர் 29 திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட உடன்படிக்கையின் குத்தகைத் தொகை வருடாந்தம் அதிகரிப்பதற்கான நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் , ரூபா 11,500,000 இற்கான நிலையான தொகையொன்று வருடாந்த தவணைப் பணமாக தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 1993 முதல் 2018 ஆண்டு வரை கூட்டுத்தாபனம் பாரிய வருமானம் ஒன்றை இழந்துள்ளது. 2019 நவம்பர் 07 திகதி கையொப்பமிடப்பட்ட 268 கொண்ட மேலதிக உடன்படிக்கை மூலம் குத்தகை அதிகரிக்கும் சதவீதம் 12 சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1993 முதல் 2018 வரையான காலப்பகுதிக்கான குத்தகை தொகை அதிகரிப்பு தொடர்பாக இணக்கமொன்றுக்கு ஏட்டியிருக்கவில்லை. 2019 ஆண்டு முதல் வருடாந்த குத்தகை 319,118 அமெரிக்கா டொலர்கள் என கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் மேலதிக குத்தகை உடன்படிக்கைக்காக நட்டமா அதிபரின் அங்கீகாரம் இவ்வறிக்கைத் திகதி வரை வழங்கியிருக்கவில்லை. | கு முன்னர் அட்டர்னி ஜெனரல் மற்றும் உரிய அமைச்சகத்திடம் கலந்தாலோசித்து, ஒப்புதல் பெற்ற பின்னரே ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். | பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் | பணத்தை மீட்பதற்கு இதுவரை எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை |

## 28. இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுதாபனம்

01. நிறுவனத்தின் பெயர் - இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுதாபனம்

02. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

03. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக் காய்வு அறிக் கையின் ஆண்டு மற்றும் கணக் காய்வு பத்தி பற்றிய குறிப்பு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் ஆகியவை நியாயப் பெறுமதியில் **(Fair Value)** முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 2,424.37 மில்லியன் கிரயமுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில் | **2019 1.5.2** (அ) | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில், சொத்துக்களிலிருந்து கார்கள் மட்டுமே மீண்டும் கணக்கிடப்பட்டன மற்றும் நிதி அறிக்கைகளுக்கு நியாயமான மதிப்பு எடுக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில், சொத்து தொடர்பான உபகரணங்களின் நியாயமான மதிப்பு ரூபா.1,827.37 மில்லியன் மதிப்பிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லை. | | | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீள மதிப்பீடு செய்யும் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக மீள பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக இனங்காணப்பட்ட ரூபா 11.41 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனங்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 05 இற்கு முரணாக தொடர்ந்தும் நடைமுறையல்லாத பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 715.67 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் தொடர்பிலான மதிப்பீட்டு வழுவினை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 1.5.2 (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | அவை கணக்கு புத்தகங்களில் இருந்து நீக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை அகற்றாமல் மறுபயன்பாட்டிற்கு சீரமைக்க கூட்டுதாபனம் பணிமனைக்கு **(workshop)** அனுப்பப்பட்டு தற்போது ஓராண்டாகிறது. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 158.28 மில்லியன் கிரயமான முதலீட்டு | **2019 1.5.2 (ஈ)** | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், முதலீட்டுச் சொத்தின் நியாயமான | நிதிநிலை அறிக்கைகளில் நியாயமான மதிப்பு வெளியிடப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கூட, 2 முதலீட்டு சொத்துக்களின் நியாயமான மதிப்பு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் இரண்டின் நியாயப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | மதிப்பு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | | நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடப்படவில்லை. |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு கொள்கை 16 இன், 36ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய ஏதேனும் உருப்படியொன்றின் மீள்மதிப்பீடானது மேற்கொள்ளப்படும் எனின், அதற்குரிய சொத்துக்களின் முழுத் தொகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முறையே ரூபா 24.74 மில்லியன் மற்றும் ரூபா 26.47 மில்லியன் கிரயமான 160 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஜீப் வண்டிகள் அவ்வாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 1.5.2 (இ) | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெப்ரவரி 2022 வரை, அந்த சொத்துக்கள் கணக்காய்வு செய்யப்பட வில்லை. |
| (உ) | கூட்டுத்தாபனத்தினால் 2010ஆம் ஆண்டின் போது பவுசர்களாக புதுப்பிக்கப்பட்ட 10 டிரக்டர் டேலர்களின் பெறுமதி மற்றும் 2012ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் எக்ஸ்கவேட்டர் இயந்திரமொன்றின் மற்றும் 02 படகுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன் | 2019 1.5.3 (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | , ரூபா 1,620,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 3 வாகனங்களின் பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (ஊ) | 2018 கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்பட்ட **64** திறைசேரி செயற்திட்டங்களுக்காக ரூபா **1559.62** மில்லியன் செலவிடப்பட்டிருப்பினும் அதற்காக பெறப்பட்ட பணம் ரூபா **1,348.73** மில்லியன் ஆனதனால் அச் செயற்திட்டத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்த நட்டம் ரூபா **201.89** மில்லியன் ஆகும். இச் செயற்திட்ட சேவை நடவடிக்கைகளுக்காக திறைச்சேரி கூட்டுத்தாபனத்திற்கு **17** சதவீத சேவை வருமானமொன்று பெற்றுக் கொடுக்கப்படடிருப்பினும் இவ்வாறான நட்டம் ஏற்படல் கணக்காய்வின் போது பிரச்சனையாக காணப்பட்டது. | 2018 3.1 (இ) | மெய்யான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அப் பணம் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டம் முறையான முகாமைத்துவப் படுத்தி கிரயத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா.1433 மில்லியன் செலவழிக்கப்பட்டது, ஆனால் திறைசேரி ஒதுக்கீடாக ரூபா.1292 மில்லியன் மட்டுமே பெறப்பட்டது, இதனால் ரூபா.141 மில்லியன் இழப்பு ஏற்பட்டது. |
| (எ) | 2018 கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் காணப்பட்ட ரூபா **801** மில்லியன் பெறுமதியான **06** நிர்மாணிப்பு ஒப்பந்தங்களுக்காக மட்டும் போட்டியாக ஏலம் கோரப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா **296** மில்லியன் ஆன **03** ஒப்பந்தங்கள் மட்டும் | **2019 3.2 (இ)** | கூட்டுத்தாபன சட்டத்தின் நோக்கமான கட்டுமானத் துறையில் போட்டியாளராக மாறுவதற்கான நோக்கங்களை அடைய ஒப்பந்த முகாமை திறம்பட செய்யப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில், நிறுவனம் ரூபா.77.29 மில்லியன் மதிப்புள்ள 2 ஒப்பந்தங்களுக்கு மட்டுமே போட்டி ஏலங்களைச் சமர்ப்பித்து ரூபா.22.73 மில்லியன் மதிப்பிலான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறப்பட்டிருந்தது. 2019 போது கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் காணப்பட்ட ரூபா 1,453 மில்லியன் பெறுமதியான 07 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக மாத்திரம் போட்டி அடிப்படையில் விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது எந்த ஒப்பந்தத்தினையும் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கூட்டுத்தாபனம் விலைக்கேள்விக்காக முன்வைக்கும் கூறுவிலைகள் சந்தை விலையிலும் உயர்வாக காணப்பட்டமை இதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்ததுடன் இதற்கிடையில், திறைசேரி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பெறப்பட்ட ஒப்பந்தப் பணிகளை மட்டுமே செய்ததால் பெறக்கூடிய சந்தைப் பங்கை கூட்டுத்தாபனம் இழந்தது. | | | | ஒப்பந்தத்தை மட்டுமே பெற்றது. |
| (ஏ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியொன்று, பிறழான கருத்துக்கள் பிழையாக கூறப்பட்டு 2000 ஏப்ரல் 06 ஆம் திகதி வெளி வாங்குனருக்கு ரூபா 5.83 மில்லியனுக்கு விற்றதன் காரணத்தினால் அந்த வாங்குனரினால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் வழக்கின் முடிவு படி மிளாய்வாண்டில் அந்த வாங்குனருக்கு ரூபா | 2018 3.2 (ஆ) 2019 ML | பிறழாக பணி புரிந்த ஊழியர்களுக்கு விரோதமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்டத்தினை மீள் நிரப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூட்டுத்தாபனம் கூடுதல் வருமானம் கிடைக்க முயற்சித்தும், வணிக முடிவாக கருதி, நடவடிக்கை எடுக்கவில்லை. | நஷ்டத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 12.28 மில்லியன் கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. மேலும் இந்த விடயங்களுக்கு பொறப்பு கூற வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கை எடுப்பதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| (ஒ) | 2018 கூட்டுத்தாபனத்தின் இயந்திர உபகரண பிரிவியின் நட்டம் ரூபா 97 மில்லியனானதுடன் அங்கு வருடாந்த கிரயமாக காணப்பட்ட ரூபா 568 மில்லியனிலுள் ரூபா 373 மில்லியன் தொழிலாளர் கிரயமும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் மொத்த கிரயத்தில் இது 66 சதவீதமாகும். இயந்திர உபகரண பிரிவில் மிகையான ஊழியர்கள் இருந்தமை இந் நிலைக்கு நேரடியாக தாக்கியது. | 2018 3.2 (ஈ) 2019 ML | கூட்டுத்தாபனத்தின் மிகையான ஊழியர்கள் பயனுள்ள வகையில் கூட்டுத்தாபனத்தின் பிரிவுகளுக்கிடையில் இணைக்கப்படல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில், இத்துறையின் இழப்பு ரூபா 196 மில்லியனாக அதிகரித்ததுடன், இத்துறையில் 400 இற்கும் அதிகமான நிரந்தர ஊழியர்கள் இருந்தனர். |
| (ஓ) | கூட்டுத்தாபனத்தினால் ஆரம்ப சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொள்ளாது மாதின்னாகொட கிளை வீதியொன்றை நிர்மாணிப்பததற்காக 2019 வருடத்தின் இறுதியில் ரூபா 112 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் காணிகளை சுவீகரிப்பதிலான சிக்கலான நிலைமையொன்றின் அடிப்படையில் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. | **2019 3.7** (அ) | புதிய செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டு சாத்தியமான சிக்கல்களை முன்கூட்டியே கண்டறிந்து, சிக்கல் சூழ்நிலைகளைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்ப | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில், கட்டுமானம் மீண்டும் தொடங்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இதன் காரணமாக செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 112 மில்லியன் செலவினம் விளைவற்றதாகியிருந்தது. | | ட வேண்டும். | | |
| (ஔ) | 1996ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பாரிய கொழும்பு வெள்ளநீர் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக பாராளுமன்றத் தொகுதிக்கு மேற்கு எல்லையில் அமைந்துள்ள சுமார் 1000 ஏக்கர்கள் பரப்பளவாக தாழ்நில சதுப்பு நிலத்தினை நீரோந்துப் பிரதேசங்களாக பாதுகாப்பததற்கும் நிர்வகிப்பததற்கும் சிறப்பான நிறுவனமான இலங்கை நிலமீட்டல் மற்றும அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அவ்வாறு சாட்டப்பட்ட காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் நிலமீட்டடல்களை முழுமையாக அகற்றும் முழுப் பொறுப்பும் (**Sole Responsibility**) கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றின் சுமார் 63 ஏக்கர்கள் பரப்பளவான காணி அத்துமீறிய குடியிறுப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தமை மற்றும் மேலும் 82 | **2019 3.4** (அ) | அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்ட காணிகளை பாதுகாப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டளவில், 9 நீர் பிடிப்புப் பகுதிகளில் 1104 அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களும் 400 ஹெக்டேர் நிலப்பரப்புகளும் அடையாளம் காணப்பட்டன, ஆனால் அடையாளம் காணப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் அகற்றப்படத் தவறிவிட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏக்கர்கள் கூட்டுத்தாபனத்தினால் இறுதிப்படுத்தப்பட்டிருந்த (**Divesting**) காரணத்தால் அமைச்சரவையால் கூட்டுத்தாபனத்திடமிருந்து எதிர்பார்க்கும் பணியை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடத்தின் இறுதியில் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய நீரோந்துப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறிய நிர்மாணங்கள் மற்றும் நிலமீட்டல்கள் 1324 இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை இனங்கண்டு அகற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | | | | |
| (க) | கூட்டுத்தாபனத்தினால் இலங்கையின் 6 மாகாணங்களில் தாழ்நில, சதுப்பு , தரிசு மற்றும் ஈரநிலங்களிள் எல்லைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த காணிகளின் அத்துமீறிய நிலமீட்டல்கள், அத்துமீறிய குடியிருப்புகளை இனங்காணும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், அந்த நிலைமைகளை பரிசோதிப்பதற்காக உத்தியோகத்தர்களும் | **2019 3.4 (ஆ)** | கூட்டுத்தாபனம் வர்த்தமானியில் வெளியிட்ட மாகாணங்களில் அத்துமீறிய நிலமீட்டல்கள்/ குடியேற்றங்களை இனங்காணுவதற்கு உரிய நடைமுறையொன்று துரிதமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள், சட்டவிரோத நிலப்பரப்பு மற்றும் சட்டவிரோத குடியேற்றங்களை அடையாளம் காண எந்த அமைப்பும் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் பல்வேறு சூழல் பிரச்சினைகளுக்கு கூட்டுத்தாபனம் நேரடியாக முகங்கொடுக்கும் என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது. | | | | |
| (ச) | வேரஸ் கங்கை மழைநீர் வெளியேற்றம் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் காணிகளை கைப்பற்றும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதன் செயன்முன்னேற்றம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. | **2019 3.4 (இ)** | காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையை துரிதமாக நிறைவு செய்து, அதன் மூலம் பாதிப்படைபவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். | ஈடுசெய்யப்பட்ட சோதனையின் அளவு அதிகரிக்க செய்யப்பட்டுள்ளது. | 2020 நிலவரப்படி, நிலம் கையகப்படுத்தும் செயல்முறை தொடங்கி 7 ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் முன்னேற்றம் 50 சதவீதமாக உள்ளது. |
| (ட) | முத்துராஜவெல இடமாற்றத் திட்டத்திற்காக ව්‍යාපෘතිය **(Relocation project – Muthurajawela)** ரூபா. **161.53** மில்லியன், **2019** ஆம் ஆண்டு முதல் கட்டுமானம் தொடங்கப்பட்டது, ஆனால் செப்டம்பர் **2020** முதல், அதன் கட்டுமானப் பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன. | **2020** | கூட்டுத்தாபன சொத்துக்களை திறம்பட பயன்படுத்தி பொருளாதார பலன்களை பெற வேண்டும். | தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்படவில்லை. |
| (த) | களனி, பியகம, வத்தளை மற்றும் பேலியகொட பிரதேச செயலாளர் பிரிவுகளினுள் ஏற்படும் வெள்ள நிலைமைகளின் போது, இந்த பிரதேசத்தில் வதியும் மக்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு | **2019 3.3** | கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக முகாமை செய்யப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திட்ட காலம் 5 ஆண்டுகள் என்றாலும், திட்டத்திற்கான பூர்வாங்க ஆய்வு, செயல் திட்டம் அல்லது திட்ட காலக்கெடு எதுவும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்படும் சேதங்களை குறைக்கும் நோக்கில் 2016ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,000 மில்லியனின் கீழ் பிரதேசத்திலுள்ள வடிகாண் அபிவிருத்தி செயற்திட்டம் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதன் நிதி செயன்முன்னேற்றம் மற்றும் உள்ளபடியான செயன்முன்னேற்றம் முறையே 43 சதவீதம் மற்றும் 56 சதவீதம் ஆகும். இந்த செயற்திட்டத்திற்காக 2020ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,456 மில்லியன் திறைசேரியின் நிதியேற்பாட்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டுக்காக இந்த செயற்திட்டத்திற்கு பாதீட்டின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக எதிர்காலத்தில் உரிய நோக்கங்களை நிறைவேற்றாது இந்த செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு நேருமென தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | | | | தயாரிக்கப்படவில்லை. |
| (ர) | மெதமுலன டீ.ஏ ராஜபக்ஷ நினைவு மைத்தியஸ்தானம் நிர்மாணித்தலுக்காக ரூபா **47.36** மில்லியன் பெறப்படல் வேண்டுமென 2018 நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருப்பினும் திறைசேரி அனுமதியின்றி புத்தகங்களில் | 2018 1.6.1 (ஊ) | பெறப்பட வேண்டிய பணம் தொடர்பாக தொடர்புடைய நிறுவனத்துடன் கலந்தரையாடப் பட்டு அறவிடல்கள் விரைவில் மேற்கொள்ளப்பல் வேண்டும். | மேற்படி நிறுவனத்திடமிருந்து ரூபா.**47.36** மில்லியன் தொகை இனி செலுத்த வேண்டியதில்லை என தீர்மானிக்கப்பட்டு, நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் புத்தகங்களில் இருந்து அது தள்ளுபடி செய்யப்பட்டது. | திறைசேரியில் இருந்து ரூபா.47.36 மில்லியன் அனுமதி பெறப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நீக்கப்பட்டன. | | | | |

## 29. இலங்கை துறைமுக அதிகாரசபை

1. கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் : இலங்கை துறைமுக அதிகாரசபை
2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 - மறுப்பு அபிப்பிராயம்

2019 - மறுப்பு அபிப்பிராயம்

2020 - மறுப்பு அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதிய நிலை** |
|---|---|---|---|---|
| **1.** | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சிதைவு பெறுமதி வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு மாற்றங்கள் ஏற்படுமாயின் அவ் மாற்றம் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 இற்கு அதிகார சபையின் காலி துறைமுகத்திற்குரிய முன்கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 4,515 | சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றின் காரணத்தினால் இதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 ஆம் ஆண்டில் சொத்துக்களை மதிப்பாய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முன்மொழியப்பட்டுள்ளது . |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியனான 11 தொகுதிகளுக்குரிய சொத்துக்கள் மீளாய்விற்கு உட்பட்டிருக்கவில்லை. | | | |
| **2.** | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 ஆம் உறுப்புரையின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு வந்த சந்தர்ப்பத்திலிருந்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.எனினும் 2019 திசெம்பர் 23 ஆம் திகதி அதிகார சபைக்கு பெறப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 468.41 மில்லியன் ஆன இரு ஏவுத்தளக் படகுகளின் பெறுமதி மூலதனமாக்கப்படல் மற்றும் குறித்த வண்ணம் தேய்மானம் செய்திருக்கப்படாததுடன், 2020 திசெம்பர் 31 இற்கு நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் வெளிநாட்டு கொள்வனவிற்காக முற்பணம் என காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மேற்கூறப்பட்ட பெறுமதியினால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. | சொத்துக்கள் தொடர்பான கட்டுப்பாடு மற்றும் பொறுப்பு அதிகார சபைக்கு பெறப்பட்டுள்ளமையினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது வெளிநாட்டு கொள்வனவாகும். கொள்வனவு செயன்முறை இது வரையில் முடிவடையாததுடன் வழங்குனர் இன்வொய்ஸ் இனை இதுவரையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் முறையாகப் பெறப்படாத சூழ்நிலையில் சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை மற்றும் தேய்மானம் செய்யப்படவில்லை. அதற்கான ஆவணங்கள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், 2019ஆம் ஆண்டு முதல் கையகப்படுத்தல் மற்றும் தேய்மானம் சரிசெய்தலின் படி அதற்கு முந்தைய ஆண்டிற்கான சொத்துக்களை மாற்றி அமைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும், வெளிநாட்டு கொள்வனவுகளுக்காக முற்பண கணக்கில் ரூபா 1,546.89 மில்லியன் ஆன மீதியினுள்ளும், ஏற்கனவே பெறப்பட்டிருப்பினும் மூலதனமாக்கப்படாத சொத்துக்கள் மற்றும் செலவினங்கள், அடையாளப்படுத்தப்படாத முற்பணமாக நீண்ட காலமாக பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | | |
| **3.** | 2017 நவம்பர் தொடக்கம் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த அதிகார சபையின் துணைக் கம்பனியான மாகம்புர துறைமுக முகாமைத்துவ சேவை (தனியார்) கம்பனியினால் 2014 ஆம் ஆண்டில் தனியார் வங்கிடமிருந்து ரூபா 24 மில்லியன் ஆன கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதில் ஐ.அ.டொ 22.3 மில்லியன் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் கடன் தீர்ப்பதற்காக கம்பனியிடம் போதுமான சொத்து இல்லாமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் தொடர்புடைய வங்கியினால் இந்த | ஏற்படக் கூடிய நிதி ஆபத்து தவிர்க்க முடியாததினால் இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | இது தொடர்பாக ஹெட்டன் நெஷனல் வங்கியின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு தொடர்புடையதாக அதிகார சபையின் விபரங்கள் கோவைப்படுத்தல் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அவ் விபரங்கள் பிரகாரம் இந்த வழக்கு துறைமுக அதிகார சபைக்கு சார்பாக காணப்படுவதனால் இதற்காக சீரற்ற பொறுப்பு ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்படவில்லை. | துறைமுக அதிகாரசபை தாக்கல் செய்த ஆரம்ப ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு, மாவட்ட நீதிமன்றம் 06.12.2021 அன்று பூர்வாங்க உத்தரவை அறிவித்தது. இந்த உத்தரவின் மூலம், இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பாதுகாப்பு வைப்புத் தொகையின்றி காரணங்களைக் காட்ட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கு 14.03.2022 அன்று விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்படி பூர்வாங்க உத்தரவுக்கு எதிராக ஹட்டன் நேஷனல் வங்கி இல. WP/HCCA/COL/92/2021LA என்ற மேன்முறையீட்டு விண்ணப்பத்தை கொழும்பு சிவில் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன் அறவிடப்படுவதற்காக துணைக் கம்பனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரு வழக்குகள் 2020 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் கடன் பணத்திற்காக சாட்சியாளர்களாக மற்றும் கம்பனியாக இலங்கை துறைமுக அதிகார சபையினால் அதற்காக சீரற்ற பொறுப்பு ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிராதது டன் வழக்கு தாக்கல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு ஊடாகக்கூட வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | வைத்துள்ளது. வழக்கு மற்றும் இந்த வழக்கை உறுதிப்படுத்த 14 12.2022 ஆம் தேதி திட்டமிடப்பட்டது.<br><br>மேலும், மாகம்புர துறைமுக மேலாண்மை சேவைகள் (பிரைவேட்) நிறுவனத்திற்கு எதிராக ஒதுக்கப்பட்ட வழக்கு எண். டிடிஆர்/1347/2019 இன் ஆரம்ப உத்தரவும் 06.12.2021 அன்று அறிவிக்கப்பட்டது, மேலும் அசல் முடிவு இறுதி முடிவு எடுக்கப்பட்டது |
| **4.** | 2020 திசெம்பர் 31 இற்கு சொத்து மீளாய்வு குழுவினால் வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயத்தின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இற்கு முன்கொண்டு வந்த பெறுமதி ரூபா 171.12 மில்லியனான செயற்பாட்டு கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்பு பௌதீக ரீதியாக அடையாளப்படுவதற்கு இயலாமை காரணத்தினால் அச் சொத்துக்களின் நிலைத்திருத்தன்மை நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது. | பௌதீக ரீதியாக அடையாளப் படுத்தப்படுவதற்கு இயலாத சொத்துக்கள் நிச்சயிக்கப்பட்டு அச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br><br>சொத்து மீளாய்வு குழுவின் ஊடாக பெறப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படையில் நிலையான சொத்து பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டில், அடையாளம் காணப்படாத 02 சொத்துக்கள் முதலீட்டுச் சொத்துகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.<br><br>சொத்து மதிப்பாய்வுக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் நிலையான சொத்துப் பதிவேடு, புதுப்பிக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **5.** | காலி முகத்திடலில் நவீனமயப்படுத்தல் பணிக்காக அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 7.61 மில்லியன் ஆன தொகை துணைக் கம்பனியான இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் உசாத்துணை கம்பனியிடமிருந்து பெற வேண்டிய பணமாக அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருப்பினும், குறித்த கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய பணமாக காண்பிக்கப்பட்டிராமையினால் மேற்கூறப்பட்ட பணம் செலுத்த முடியாதென கம்பனியினால் அதிகார சபைக்கு எழுத்துமூலமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் மேற்கூறப்பட்ட தொகை பெறல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் அதற்காக நட்ட ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறப்பட வேண்டிய மீதிகள் அறவிடப்படுவதற்கு அல்லது நட்ட ஒதுக்கம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br><br>இந்த பணம் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதிகார சபையுடன் பல நிதி கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டினுள் கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்றதுடன் இந்த பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட முடியுமென்பதனால் நட்ட ஒதுக்கம் மேற்கொள்வதற்கான தேவைப்பாடு ஏற்படாது. | VAT-இல்லாத பெறத்தக்க ரூபா.7,609,035.79 தொகையானது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளது, எனவே இந்தத் தொகையை மீளப்பெற முடியும் என்பதால் சேதங்களுக்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. |
| **6.** | ஒலுவில் துறைமுக செயற்திட்டத்திற்காக காணி கையகப்படுத்தலுக்காக காணி இழக்கப்படுபவர்களுக்கு இழப்பீடு | இப்பீடு கொடுத்தல் தொடர்பான அறிக்கையென்று பெற்றுக் கொள்ளப்பட் | ஒலுவில் துறைமுக செயற்திட்டத்திற்காக கையகப்படுத்திக் கொண்ட காணிக்காக கொடுப்பனவிற்காக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளருக்கு பணம் | துறைமுக அதிகாரசபையானது தொடர்புடைய செலவினங்களின் பதிவேடுகளைப் பெற்றுள்ளது, அதாவது ரொக்க ரசீதுகள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்படுவதற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 41.8 மில்லியன் அட்டாளச்சேனை பிரதேச செயலாளருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் 2021 ஏப்ரல் 30 அம் திகதி வரையிலும் குறித்த செலவினம் தொடர்பான அறிக்கையொன்று அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஒலுவில் துறைமுகத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகார சபையின் கீழ் மற்கொள்வதற்கு இந்த அறிக்கை திகதி வரையிலும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் காணி அகற்றல் கணக்கின் மீதியினுள் முன்கொண்டு வந்து காணப்பட்ட மேற்கூறப்பட்ட பணம், மூலதனமாக்கல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது. | டு காணி அகற்றல் கணக்கிலுள்ள பெறுமதி முறையாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அவ் இழப்பீடு கொடுப்பனவு தொடர்பான அறிக்கை இதுவரையில் துறைமுக அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிராமையினால் குறித்த அறிக்கை பெற்றுக் கொடுக்குமாறு தொடர்புடைய பிரதேச செயலாளருக்கு தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது.<br><br>காணி அகற்றல் கணக்கில் காணப்பட்ட ரூபா 41,852,082 ஆன பணம் மூலதனமாக்கப்படுவதற்கு தேவையான தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் குறித்த சொத்து மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசாளரிடம் வைாப்பு செய்யப்பட்ட பணத்தின் கோரிக்கைச் சீட்டுகளின் பிரதிகள்.<br><br>மூலதனமாக்கப்பட வேண்டிய செலவினம் இந்த ரூபா 41.8 மில்லியன் மட்டுமல்ல, மூலதனமாக்கப்பட வேண்டிய மொத்தச் செலவினம் கண்டறியப்பட்டு, தேவையான கணக்குச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **7.** | ஹம்பந்தோட்டை துறைமுக நிர்மாணிப்பிற்காக பெறப்பட்டிருந்த வெளிநாட்டு கடன்களில் 2017 நவம்பர் 30 இற்கு அதிகார சபையின் கணக்குகளில் எஞ்சியிருந்த ரூபா 147,746 மில்லியனான கடன் மற்றும் வட்டி மீதி திறைச்சேரியின் | குறித்த விடயங்கள் தொடர்பாக பொது திறைச்சேரியுடன் கலந்துரையாடப்பட்டு இறுதி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br>குறிப்பிடப்பட்டுள்ள நிதி பெறுமதிகளுடன் இணங்குகின்றேன்.<br>கடன் பணம் அதிகார சபையின் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருப்பது, அதற்காக கடன்பணம் திறைச்சேரிக்கு செலுத்தப்பட்டு முடிவடைந்த பின்னராகும். | அதிகாரசபையின் புத்தகங்க ளில் பதிவு செய்யப்பட்டுள்ள கடன் தொகை ரூபா.147,746,246,364.57 மற்றும் ரூபா.149,943,332,000.00 இது தொடர்பாக திறைசேரிக்கு செலுத்தப்பட்டுள்ளது, எனவே இந்த தொகைக்கு அதிகாரசபை கணக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இணக்கப்பாடு அல்லது அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி அதிகார சபையினால் நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அக் காரணத்தினால் அத் திகதிக்கு பின்னர் அரசினால் எந்தவாரு கணக்கிலும் அக் கடன்பணம் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறெனினும், MPS/SEC/2017/32 ஆம் இலக்க மற்றும் 2017 யூலை 20 ஆம் திகதிய ''ஹம்பந்தோட்டை துறைமுக சலுகை ஒப்பந்தம்'' எனும் பெயரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கடன் மற்றும் வட்டி மீண்டும் செலுத்தும் பொறுப்பு பொது திசைசேரிக்குரியதாகும். அதன் பிரகாரம் பொது திறைச்சேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில் இருந்து கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் பதிவேட்டின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இற்கு இன்னுமாக | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அதிகார சபையின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்த பணம் ரூபா 147,746,246,365.57 ஆக காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 149,943,332,000.00 ஆன தொகையொன்று திறைச்சேரிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | காட்டவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 169,566 மில்லியன் ஆக காணப்பட்டது. மேலும், மேற்கூறப்பட்ட கடன் பணத்திற்கு தொடர்படையதாக 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு தொடர்புடையதாக கணிக்கப்பட்ட அந்நிய செலாவணி மாற்றல் திரண்ட நட்டம் ரூபா 31,545 மில்லியனும் கடன் அகற்றப்படலுடன் அதிகார சபையின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரையான அந்நிய செலாவணி மாற்ற திரண்ட நட்டமான ரூபா 34,072 மில்லியனையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இற்கு, அந்நிய செலாவணி மாற்றல் திரண்ட நட்டம் ரூபா 65,618 மில்லியனும் பொது திறைச்சேரியின் அல்லது அதிகார சபையின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| **8.** | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இருப்பு கணக்கின் மீதி ரூபா 2,703.55 மில்லியன் ஆகவிருப்பினும், நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி | இரு பிரிவுகளுக்கு இடையே இருப்பின் பெறுமதி இடையில் காணப்படும் வித்தியாசம் | இருப்பு கணக்கின் மீதி மற்றும் லெஜர் அட்டைகளிலுள்ள மீதிகளின் வித்தியாசத்திற்கு காரணம் கணினி அமைப்பில் உள்ள குறைப்பாடென்பதுடன் அது நிதி பகுதி மற்றும் | பங்கு இருப்பு மற்றும் தொடர்புடைய அறிக்கையின்படி, 69 மில்லியன் வித்தியாசத் திற்கு காரணம் ஒரக்கள் அமைப்பில் ஏற்பட்ட பிழை, இது நிதி பிரிவு மற்றும் டிஎம்எஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 2,772.55 மில்லியன் ஆனதினால் ரூபா 69.00 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அடையாளப் படுத்தப்படுவ தற்காக இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்ப டல் வேண்டும். | வழங்கல் பகுதி பதிவேட்டின் இடையில் வித்தியாசமாகும். அது **DMS** நிறவனத்தின் ஊடாக சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆகியவற்றுடன் இணைந்து சரி செய்யப்படுகிறது. |
| **9.** | ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனியின் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 12.43 மில்லியன் ஆன இருப்பு, முன்கொண்டு செல்லும் பெறமதியான ரூபா 0.62 மில்லியன் ஆன நிலையான சொத்து, மற்றும் கையிலுள்ள பணம் ரூபா 0.17 மில்லியன் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. ரூபா 13.22 மில்லியனான இந்த நட்டத்திற்காக நிதியேற்பாடும் நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கப்பட்டிருக்கவில் லை. மேலும், நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இற்கு கம்பனிக்கு அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 17.78 மில்லியன் ஆன மீதி, கப்பல் எண்ணெய் காப்புறுதிக்காக பெறப்பட வேண்டிய ரூபா 28.04 மில்லியன் ஆன மீதி மற்றும் | துணை கம்பனியின் நூறு சதவீத பங்குரிமை உரிய தாய் கம்பனியாக மற்றும் ஒருங்கிணை ந்த நிதிக் கூற்றுக்களி ல் துணைக் கம்பனி சொத்து, பொறுப்பு காண்பிக்கப்ப டுகின்றமைய ினால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட ல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை .<br><br>கம்பனி கலைத்தல் தொடர்பான எழுத்துமூல அறிவிப்பொன்று மேற்கொள்ளப்படாமையினா ல் நிதியேற்பாடு ஒதுக்கப்படுவதற்கு தேவைப்படாது. மாகம்புர துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பனி **(MPMC)** நிறுவனத்தினால் கணக்காய்விற்கான ஆதார பதிவேடுகள், மீதி உறுதிப்படுத்தல் ஆவணங்கள், வயது பகுப்பாய்வு, துணை ஆவணங்கள் இலங்கை துறைமுக அதிகார சபையிடம் இல்லாமையினால் அக் கம்பனியின் முகாமைத்துவத்திடம் விசாரிக்கப்படல் வேண்டும். | அதற்கான ஆதார ஆவணங்கள், கடிதங்கள் போன்றவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வியாபார கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 3.58 மில்லியன் ஆன மீதிக்காக மற்றும் அத்திகதிக்கு கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய ஏனையவற்றிற்கு தொடர்புடைய ரூபா 15.59 மில்லியன் ஆன மீதிக்காக ஆதார பதிவேடுகள், மீதி உறுதிப்படுத்தல் ஆவணங்கள், வயது பகுப்பாய்வு அறிக்கை மற்றும் துணை ஆவணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| **10.** | ஹம்பந்தோட்டடை துறைமுக நிர்மாணிப்பு செயற்திட்டத்திற்காக திறைச்சேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணத்திற்காக 2017 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் செலுத்தப்பட்ட கடன் பணத்திற்காக 2017 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் செலுத்தப்பட்ட தவணை பணமாக ரூபா 4,777 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 372 மில்லியனும் உள்ளடங்கலாக 2020 திசெம்பர் 31 இற்கு ரூபா 5,156 ஆன பணம் பொது திறைச்சேரியிடமிருந்து பெறப்பட வேண்டியவை என நிதிக் கூற்றுக்களில் | பெறப்பட வேண்டிய பணம் தீர்க்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த பணம் மீள செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டு அமைச்சின் செயலாளர் ஊடாக **2017.08.30, 2017.12.28, 2018.11.19, 2019.02.12, 2019.04.10, 2019.07.03** மற்றும் **2019.11.15** திகதிய கடிதங்கள் பொது திறைச்சேரியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேற்கூறப்பட்ட பணம் பெற்றுக் கொடுக்குமாறு கோரப்பட்டு **2020.01.07, 2020.05.14** மற்றும் **2021.03.24** ஆகிய திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ள போதிலும், இதுவரையில் இது தொடர்பில் தெளிவான பதில் கிடைக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருப்பினும் 2021 யூலை 31 ஆம் திகதி வரையில் அப்பணம் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள் அதிகார சபையினால் அழைக்கப்பட்டிருப்பினும் பொது திறைச்சேரியினால் அவ் உறுதிப்படுத்தல்கள் சான்றுப்படுத்தப்பட்டிராததுடன் 2020 ஆம் ஆண்டிற்கான குடியரசு நிதிக் கூற்றுக்களில் இம் மீதி உள்ளடக்கப்பட்டிராதமையும் அவதானிக்கப்பட்டது. அதனால் இந்த பணம் பெறல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது. | | | |
| **11.** | 2020 திசெம்பர் 31 இற்கு அதிகாரசபையின் கடன் காலவறையரை விஞ்சிய மொத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதி ரூபா 1,405.21 மில்லியன் ஆக காணப்பட்டது. அது மொத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதியில் 50 சதவீதமாக காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட கடன் காலவறையரையினுள் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | 31.12.2021 நிலவரப்படி, காலாவதியான கடனாளி இருப்பு ரூபா. 549,258,086.21 குறைக்கப்பட்டுள்ளது. |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>12.</td><td>2020 திசெம்பர் 31 இற்கு பிரச்சனைக்குரிய கடன்பட்டோர் (dispute debtors) ரூபா 122.85 மில்லியன் மற்றும் மீள தீர்ப்பதற்காக (re-dispute) ஈடுபடுத்திய கடன்பட்டோர் ரூபா 29.42 மில்லியன் ஆக காணப்பட்டது. மேற்கூறப்பட்ட மீதியினுள் ஆறு மாதம், வருடம் மற்றும் 1 ஆண்டும் 3 ஆண்டுகளும் இடையேயான காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் முறையாக ரூபா 84.04 மில்லியன், ரூபா 21.44 மில்லியன் மற்றும் 17.29 மில்லியன் ஆக காணப்பட்டது.</td><td>காணப்படுகின்ற பிரச்சனைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டு பெறப்பட வேண்டியவற்றை விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.</td><td>ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br><table><tr><td></td><td>Dispute கணக்கின் மீதி</td><td>Re Dispute கணக்கின் மீதி</td></tr><tr><td>2020.12.31 இற்கு மீதி</td><td>122,856,461</td><td>29,418,229</td></tr><tr><td>2021.05.18 இற்கு மீதி</td><td>61,023,341</td><td>5,189,531</td></tr></table><br>Dispute கணக்கில் மற்றும் Re Dispute கணக்கில் காணப்பட்ட மீதிகளில் இதுவரையில் தீர்க்கப்படாத மீதிகளுக்கு தொடர்புடைய விவாதத்திற்குரிய பட்டியல்கள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.</td><td><table><tr><td></td><td>தகராறு</td><td>மறு சர்ச்சை</td></tr><tr><td>2021.12.31 இல் இருப்பு</td><td>23,994,040.59</td><td>120,712.41</td></tr></table><br>31.12.2021 நிலவரப்படி, தகராறு கணக்கு மற்றும் மறு தகராறு கணக்கில் உள்ள நிலுவைகள் ரூபா.24,114,752. தீர்க்கப்படாத நிலுவைகள் தொடர்பான சர்ச்சைக்குரிய சட்டமூலங்கள் பிரிவு மற்றும் துறைமுக மாஸ்டர் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவற்றின் தீர்வுக்கான பரிந்துரைகளை உடனடியாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>13.</td><td>கப்பல் முகவரினால், துறைமுக சேவை வசதிகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக செலுத்தப்பட்ட முற்பண பணத்தில் உள்ளவாரான செலவினம் தீர்க்கப்பட்டதன் பின்னர், 2020 திசெம்பர் 31 இற்கு, எஞ்சி காணப்பட்ட மீதி ரூபா 786.97 மில்லியனாக காணப்பட்டதுடன்</td><td>சேவை பெற்றுக் கொள்வதறக்காக அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட முற்பண பணத்தில் குறித்த சேவை வழங்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் முற்பண தொகை</td><td>ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>மீதிகள் சரியானதாகும்.<br><br>கப்பல் முகவர்களினால் செலுத்தப்படுகின்ற பண அளவில் மிகை காணப்படும் சந்தர்ப்பத்தில் அது பணமாக மீண்டும் செலுத்தப்பட மாட்டாது. எனினும், கணக்கு மூடும் சந்தர்ப்பத்தில் மட்டும் பணமாக மீள செலுத்தல் செய்யப்படும். அதற்கு மேலதிகமாக கப்பல்</td><td>இந்த முற்பண கணக்கில் உள்ள பெரும்பாலான நிலுவைகள், ஷிப்பிங் ஏஜென்சிகளால் ஆண்டுதோறும் உறுதிசெய்யப்படும் இருப்புத் தொகைகளாகும், மேலும் அவர்களின் தேவையின் அடிப்படையில் அவ்வப்போது பில்களை செலுத்த பணம் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பல கப்பல்</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | அதில் ரூபா 111.75 மில்லியன் சேவை பெறப்பட்டு 06 மாதங்கள் கடந்திருப்பினும் தீர்க்கப்படுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், முகவரரகளினால் துறைமுக சேவைகள் பெற்றுக்கொண்டமைக்காக இன்வொயிஸ் பெறுமதியினை விட அதிகமாக செலுத்தப்பட்ட பண அளவு, கப்பல் முகவர் வரவு மீதியாக (shipping agent credit balances) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இற்கு அம் மீதி ரூபா 496.78 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் ரூபா 110.75 மில்லியன் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு 06 மாதங்களை விட அதிகமான காலம் கடந்திருப்பினும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் மேலதிகமாக செலுத்தல்கள் தொடர்பான விரிவான அட்டவணை மற்றும் வயது பகுப்பாய்வு தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டு காலங்கடந்த மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முகவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கழிவும் தொடர்ர்டைய கணக்கிற்கு வரவு வைக்கப்படும். எனவே, முற்பணம் தீர்க்கப்படும் தேவைப்பாடு ஏற்படாததுடன் அது மேல் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட கூடும். | ஏஜென்சிகள் துறைமுக அதிகாரசபையால் விதிக்கப்படும் சர்சார்ஜ் பில்களைத் தவிர்ப்பதற்காக தங்கள் கணக்குகளில் கடன் இருப்பை பராமரிக்கின்றன. எவ்வாறாயினும், அவர்களின் கணக்குகளில் உள்ள கடன் நிலுவைகள் வருடாந்தம் பில் செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று துறைமுக அதிகாரசபை எழுத்து மூலம் தெரிவிக்கும். |
| **14.** | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவுக்கமைய 2019 திசெம்பர் 31 | நிதி சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முதலீடிற்காக தொடர்புடைய | ஏற்கொள்ளப்படவில்லை. **PED/12** இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறுகிய கால வைப்புக்களில் செய்யப்படுகின்ற முதலீடுகளுக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு கோரப்பட்டுள்ளது. 2020 | 2021.02.12, 2021.03.04 மற்றும் 2021.03.13 திகதியிட்ட கடிதங்கள் அதிகாரசபையால் செய்யப்படும் குறுகிய கால முதலீடுகளுக்கு அனுமதி கோரியுள்ளன.<br><br>பொது வணிகத் துறையின் எண். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இற்கு முன்னர் அதிகார சபையினால் நிலையான மற்றும் குறுகிய கால வைப்புக்களில் முதலிடப்பட்ட ரூபா 48,456 மில்லியனிற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். | ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வைப்பு பணத்திற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளது. | PED/P/SLPA/2/2/3 (i) மற்றும் 19.05.2021 திகதியிட்ட கடிதம் ஒருங்கிணைந்த குறுகிய கால வைப்புத் தொகையாக ரூபா. 5,664 அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| **15.** | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவுக்கமைய அரச கூட்டுத்தாபனமொன்றில் ஏதேனும் ஒரு ஆண்டில் மிகையொன்று காணப்படின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிப்பனவுகள் செய்த பின்னர் மீதியை திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும். ஆயினும், 2016 தொடக்கம் 2020 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 48,991 மில்லியன் ஆன நிகர இலாபத்தில் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது ரூபா 600 மில்லியன் மட்டுமாகும். மேலும், மேற்கூறப்பட்ட இலாபத்தினுள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ள தெற்காசிய பிரவேச தளம் **(SAGT)** மற்றும் கொழும்பு | மிகை தொடர்பாக நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>இலங்கை துறைமுக அதிகார சபை சட்டத்தின் பிரகாரம், இலங்கை துறைமுக அதிகார சபை நிறுவும் போது அரசினால் ஏற்கப்பட்ட மூலதனத்தில் (Equity Capital) **8%** ஆன உச்ச எல்லைக்கு உட்பட்ட பங்கிலாபத்தினை பெற்றுக் கொடுக்க வேண்டுமென குறிப்பிடப்படுள்ளது. எவ்வாறாயினும், பொது முயற்சிகள் திணைக்களத்தினால் பங்கிலாபம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதென 2018.04.24 திகதிய கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையினால் தேசிய முக்கியத்துவத்துடனான துறைமுக செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணம் தீர்க்கப்படல் இலங்கை துறைமுக அதிகார சபையினாலே மேற்கொள்ளப்படுகின்றமையினால் விடுவித்தல் செய்யப்பட்டுள்ளது. | எந்த மாற்றமும் ஏற்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (3) | தனியார் கம்பனி ஒன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,873,954 தொகை 36 வருடங்களாக கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. இத்தொகையை பதிவழிப்பதற்காக 2012 செப்தம்பர் 06 ஆந் திகதி அப்போதய சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்ற சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை பொறுப்பேற்றல் டம்பெற்றிருக்கவில்லை. மேலும் ரூபா 1,687,042 தொகை 04 ஆண்டுகளாக கிடைக்க வேண்டிய மீதியொன்றாக இருப்பதுடன் மீளாய்வாண்டில் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கிவல் லை. 2020 ஆம் ஆண்டில் ரூபா 108,670 அறவிடப்பட்டிருந்தது. | **2019** **154/(6)** அறிக்கை **1.6.1(அ)** | இத்தொகைை ய அறவிடுவதற் கு முடியாவிட்டா ல் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த தொகையை பதிவழிப்பதற்கு இதற்கு முன்னரும் பல தடவை பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. திறைசேரி அனுமதி பெறும் பணி நடந்து வருகிறது | ஜனவரி 2022 வரை தீர்வு செய்யப்படவி ல்லை |
| (4) | வன பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கட்டிட பயன்பாட்டிற்காக | **2019** **154/(6)** அறிக்கை | சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்து வதற்கு தேவையான | கூட்டுத்தாபனம் சட்டத்துறை, **2020** மற்றும் **2021** ம் ஆண்டுக்கான | நிர்வாக சபைக்கு தகவல் தெரிவித்தும், குத்தகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரை உடன்படிக்கையொன்ற இல்லாமை மற்றும் ஏனைய விடயங்களின் பேரில் வாடகை கொடுப்பனவு செய்யப்படாமையால் ரூபா 39,600,000 தொகை பெற வேண்டிய தொகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | **1.6.1(இ)** | எழுத்து மூல சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்தத்தை வரைவு செய்து, வனத்துறையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்துள்ளது. | ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு, வனத்துறைக்கு வழங்கப்பட்டும், ஒப்புதல் பெறவில்லை. |
| (5) | சுற்றறிக்கை ஆலோசணைகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத் தலைவருக்கு உதவியாளராக இரண்டு மதியுரையாளர்கள் மற்றும் சாரதி ஒருவர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் மதியுரையாளருக்கு ஒரு நாளைக்கு ரூபா 2,850 வீதம் படியொன்று 2019 பெப்ரவரி முதல் 2019 செப்தம்பர் 03 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 270 நாட்களுக்கு ரூபா 769,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | **2019**<br><br>**154/(6)**<br>அறிக்கை<br>**1.7(இ)** | கொடுக்கல் வாங்கல்கள் மற்றம் நிர்வாக செயற்பாடுகள் சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டும். | இது தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் கோரியுள்ளதுடன் இதுவரை பதில் கிடைக்கவில்லை. | இந்த ஊழியர்கள் தற்போது பணியில் இல்லை. உரிய கொடுப்பனவுகள் மீளப் பெறப்படவில்லை. |
| (6) | பூஸ்ஸ தளபாடங்கள் தொகுதியினால் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 06 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 13,779,350 ஆன முற்பணங்களை தீர்வு செய்வதற்கு போதியளவு பெறுமானத்தை | **2019**<br><br>**154/(6)**<br>அறிக்கை<br>**3.2(அ)** | வழங்கப்படும் முற்பணத்தை தீர்வு செய்வதற்கோ அல்லது அதற்குரிய தளபாடங்களை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்தப்படும் முற்பணத் தொகைக்கு போதியளவில் தளபாட உற்பத்திகள் மேற்கொள்ள தேவையான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. | முன்பணங்கள் முறையாக வசூலிக்கப்படவில்லை அல்லது சரியான நேரத்தில் பொருட்கள் கிடைக்கவில்லை. முன்பணமாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உடைய தளபாடங்களை உற்பத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. மேலும் முற்பணத்தை வழங்கும் போது ஒப்பந்த தொகையின் 54.4 முதல் 80.2 வரை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. இது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | | வசூலிக்கப்பட வேண்டிய தொகை ரூபா.4,397,000. |
| (7) | பூஸ்ஸ காட்சியகத்தில் நடாத்தப்பட்ட விலை குறைப்பு கண்காட்சிக்கு ரூபா 1,690,183 தொகையான சந்தை பெறுமதியான பொருட்கள் 50 சதவீதத்தை விட விலை குறைக்கப்பட்டு ரூபா 707,710 விலை குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட இலாபம் 982,473 இருந்தது. | **2019**<br>**154/(6)**<br>அறிக்கை<br>**3.2(ஈ)** | தொகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை முறையாக பேணி கூட்டுத்தாபனத்தை சாதகமான மட்டத்தில் நடாத்திச் செல்லல் வேண்டும். | **2019** நவம்பர், திசெம்பர் மாதங்களில் அந்த இறுப்பு விற்பனை செய்யப்பட்டன. | கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்யப்படவில்லை |
| (8) | 2012 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு தொழிற்சாலையிலிருந்து களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,901,048 பெறுமதியான தளபாட இருப்பொன்று களஞ்சியத்தில் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டமையால் விற்பனை செய்வதற்கு பொருத்தமற்ற நிலைக்கு உட்பட்டிருந்தது. | **2019**<br>**154/(6)**<br>அறிக்கை<br>**3.3(அ)** | உரிய காலங்களில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தளபாடங்கள் மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட போதும் காட்சியகத்திலிருந்து கிடைக்கும் கட்டளைகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு காட்சியகங்களுக்கு வழங்கப்படுகின்றன. | இதுவரை இந்த இருப்புக்கள் முழுமையாக விற்பனை செய்யப்படாமல் கிடங்குகளில் குவிந்துள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (9) | பூஸ்ஸ மரக் களஞ்சிய வளவில் காணப்படும் ரூபா 47 மில்லியனை கருங்காலி கட்டை டெ.மீ 225,994 அளவு 2007 ஆம் ஆண்டிலிருந்து அதாவது 12 வருடட்ங்கள் களஞ்சிய வளவில் பாதுகாப்பற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு சுற்றாடல் பாதிப்புக்குள்ளாகியும் சிதைவடைந்து காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | **2019** **154/(6)** அறிக்கை **3.3(ஈ)** | களஞ்சிய நிர்வாக நடவக்கைகள் முறைப்படுத்த வேண்டும். | மர பொது முகாமையாளர் ஆலோசனையின் பிரகாரம் கட்டைகளில் உள்ள பழுதுகளின் பிரகாரம் கட்டைகளை வெட்டி பயன்பாட்டிற்கு எடுக்கக்கூய கட்டைகளை இருப்பிற்கு எடுத்து குறைகளுடன் கூடிய கட்டளைகளை ஏலம் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | அனைத்து இறுப்புகளும் விற்கப்பட வில்லை. |
| (10) | இலங்கை கணக்கிட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பு, கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இந்த இரண்டில் குறைவாக பெறுமதிக்கு பெறுமதியிடப்பட வேண்டியிருந்ததுடன், இறுதியிருப்பின் கிரயத்தினை விட தேறிய தேறக்கூடிய பெறுமதி குறைவாக வருமிடத்து அந்த வேறுபாடு செலவினமாக இலாபத்தில் இருந்து பதிவழிக்க வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட நியமத்திற்கு முரணாக கூட்டுத்தபானத்தினால் வியாபார இருப்புக்களுக்காக இருப்பு சேதத்திற்காக 15 சதவீதம் அதாவது ரூபா 244,674,912 தொகையான ஒதுக்கமொன்று இறுதி இருப்பில் இருந்து கழிக்கப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் | **2020** **154/(6)** அறிக்கை **1.5.1** **(ஊ)** | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இருப்புக்கள் சீராக்கப்பட வேண்டும். | அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாக ஒவ்வொரு கணக்காண்டின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சொந்தமான வியாபார இருப்புக்களுக்காக (மர தளபாடங்கள் தவிர) 15 சதவீதம் இருப்பு அழிவடைந்து செல்வதற்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது . | இறுப்பு கணக்கெடுப்பு சரியாக நடைபெறவி ல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இருப்பு மிகை ஒதுக்கீடாக ரூபா 44,165,123 தொகை மற்றும் இருப்பு பற்றாக்குறை ஒதுக்கமாக ரூபா 54,329,480 தொகை இலாபத்தில் சீராக்கப்பட்டு தேறிய பெறுமதி ரூபா 10,164,357 இனால் இலபாம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | | |
| (11) | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாத பதவியொன்றான பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவிக்காக வெளி நபரொருவர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் கடமை கையளித்தல் அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 337,000 தொகை “மதியுரை சேவை மற்றும் விஷேட கொடுப்பனவுகள்” இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்து. ஆட்சேர்ப்பிற்கான அடிப்படையாக கொள்ளப்பட்ட தகைமைகள் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படவில்லை. | **2020** **154/(6)** அறிக்கை **1.6 (ஈ)** | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரிக்கப்பட்ட முறைமையில் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்ளல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவி அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 06 மாத காலத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது | திறைசேரியின் அனுமதி கோரப்பட்டும் இதுவரை பதில் வரவில்லை. |
| **(12)** | 2015 ஆம் ஆண்டின் போது மின்னேரிய பிரதேச அலுவலகத்திற்குரிய ஹல்மில்லேவ 03/006 என்ற தேக்க வேலைத் | 2020 **154/(6) -** அறிக்கை 3.1 | குறித்துரைத்த முறையான ஒழுக்காற்று விசாரணை மூலம் வழங்கப்பட்டு | கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக கூட்டுத்தாபனம் ஒழுக்காற்று குழுவிற்கு உரிய தினத்தில் | 2022 பெப்ரவரி இல் கூட, எந்த இழப்பும் மீட்கப்படவில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தளத்தில் ஏற்பட்ட 69 மரங்களின் காணாமல் போனமையின் மோசடி தொடர்பாக நடைபெற்ற சுயாதீன ஒழுக்காற்று பரிசோதனை சபையினால் ஏற்பட்டுள்ள நட்டம் அதற்கு பொறுப்பாக இருந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு 2018 நவம்பர் 17 ஆம் திகதி பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த பரிந்துரைக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரினால் அந்த கட்டளையை அமுல்படுத்துதல் கைவிடப்பட்டமையின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,994,536 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | | ள்ள பரிந்துரை அமுல்படுத்தப் பட்ட வேண்டும். | அழைத்து இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்பட்ட பணம் குறித்தரீதியில் தீர்மானத்தை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | லை. |
| (13) | பொலன்னறுவை பிரதேச அலுவலகத்தில் இருப்பு புத்தகம் சமப்படுத்தப்படாதிருந்த மையினாலும், சில மரங்கள் கணிசமான அளவில் இறந்திருந்தமையினாலு ம், அநேகமான மரக் குற்றிகள் இலக்கங்களுடன் இனங்காண முடியாதிருந்தமையாலு ம் பௌதீக இருப்பு மெய்மெய்யாய்வை சரியாக மேற்கொள்ள முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கைகளில் | **2020**<br><br>**154/(6)** அறிக்கை **3.2 (ஆ)** | மரக் களஞ்சியத்தி ன் நிர்வாகத்தை முறைமைப்படு த்துவதற்காக முகாமைத்துவ ம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இருப்பு மெய்மெய்யாய்வு சபையின் மூலம் பௌதீக பரிசோதனை மேற்கொண்டு கையொப்பமிட்டு அவர்களினால் வழங்கப்படுகின்ற இருப்பு மெய்மெய்யாய்வு பத்திரங்களின் அடிப்படையில் கிரயம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. இதன் போது இருப்பு புத்தகங்களின் மீதிக்கும் பௌதிக மீதிக்கும் இடையே எந்தவொரு பற்றாக்குறையோ அல்லது மிகையோ குறிப்பிடப்பட்டிருக்குமாயி ன் அது உள்ளக கணக்காய்வின் மூலம் பரீட்சிக்கப்பட்டு உரிய பணம் இருப்புக்கு | இறுப்பு மதிப்பு இதுவரை சரியாக கணக்கிடப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்ட ரூபா 133,120,313 தொகையான இறுதி இருப்பு பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,855,504,806 தொகையான மர இருப்புக்களின் பெறுமதி என்பவற்றின் சரியான தன்மை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | | | பொறுப்பான உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **(14)** | ரொப்கில் வேலைத் தளத்தில் 04 பகுதிகளின் கீழ் 2172 மரங்களை அகற்றுவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. முழுமையாக அகற்றுதல் நடவடிக்கைகள் 2018 மே 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், குறித்த திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு வரையிலும் வேலைத் தளத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | **2020**<br><br>**154/(6)**<br>அறிக்கை<br>**3.5(ஈ)** | ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக முகாமைத்துவத்தால் விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். | **70** சதவீத மரங்கள் அறுவடை செய்யப்பட்ட இடத்தில் இருந்து அகற்றப்பட்டு, மரக் கொள்முதல் இறுதிக் கட்டத்தில் உள்ளது. | ஒப்பந்த நிர்வாக குறைபாடுகளால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு கணக்கிடப்படவில்லை. |

## 31. இலங்கை நியமங்கள் நிறுவனம்

01. நிறுவனத்தின் பெயர் - இலங்கை நியமங்கள் நிறுவனம்

02. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

03. கணக்காய்வு அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு மற்றும் கணக்காய்வு பத்தி பற்றிய குறிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|---|
| **01.** | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் **02** இன் பிரகாரம், இருப்பு அதன் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதிக்கு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் **2020** திசெம்பர் **31** ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா **1,499,794** பெறுமதியான இருப்பு தேறிய தேறக்கூடிய பெறுமதியை மதிப்பீடு செய்யாது | **2018**<br>**1.5.1**<br>**(அ )**<br>**2019**<br>**1.5.1 (இ)**<br>**2020**<br>**1.5.2** | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இருப்பு, கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதிக்கு கணக்கு வைக்கப்பட வேண்டும். | கடந்த **29-07-2020** அன்று நடைபெற்ற கணக்காய்வு மற்றும் நிர்வாகக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது, மேலும் இயற்பியல் கணக்கெடுப்புடன் ஒரு மதிப்பீட்டைச் செய்து, செலவு மற்றும் நிகர லாபத்தின் மதிப்புகளைக் குறைவாகக் காட்ட முடிவு செய்யப்பட்டது. எனவே, இது எதிர்கால பங்கு ஆய்வுகளில் செயல்படுத்தப்படும் | எதிர்வரும் வருடத்தில், இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி, நிதிநிலை அறிக்கைகளில் இறுப்பு பெறுமதி காட்டப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் கிரயத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், இருப்பின் கீழ் கொள்ளப்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகளுக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| **02.** | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதிகள் அதன் காலத் தேய்மானப் பெறுமதியில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 32,909,431 தொகைக்கான 364 கடன்பட்டோர் மீதிகளுக்காக குறைபாட்டு சோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | **2018 1.5.1 (ஆ) 2019 1.5.1 (ஆ) 2020 1.5.1 (அ)** | நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக கடன்பட்டோர்களிடம் சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. கடன் பட்டோரிடம் மீள அறவிடும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதற்கான சான்றுகள் உரிய முறையில் கிடைக்கப் பெறாமையால 2018 - 2020 ஆண்டுகளில் போது குறைபாட்டு சோதனை பரிசோதனை மேற் கொள்ளப்படவில்லை. | ஒவ்வொரு கடனாளிக்கும் கோரிக்கைப்பத்திரம் அனுப்பப்பட்டு இதுவரை ரூபா.363,784 செலுத்தப்பட்டு தீர்பனவு செய்யப்பட்டுள்ளது. இந்த நடைமுறை தொடர்கிறது மற்றும் தவறிய கடனாளிகளிடமிருந்து மீட்பு செய்யப்படுகிறது. |
| **03.** | 2016 – 2019 காலப்பகுதிக்கு உரிய நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பெறவேண்டிய வருமானமாகிய ரூபா 1,094,368 தொகை கணக்குகளில் இருந்து தவிர்ப்பு | **2018** 1.5.2 (ஆ) **2019** 1.5.2 (ஆ) | வருமானம் சரியாகக் கண்டறியப் பட்டு, கணக்குகளில் சரியாகச் சரிப்படுத்தப் பட | சரி செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை துல்லியமாக அங்கீகரிப்பதற்கும் கணக்கியல் தரநிலைகளின்படி கணக்குகளை சரிவரச் செய்வதற்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்கான திரண்ட இலாபம் அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | வேண்டும் மற்றும் அதற்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் செயல்படுத்தப்பட வேண்டும். | | நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| **04.** | ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை நிறுவுவதற்குரிய ஆலோசகரைத் தேர்ந்தெடுத்து 2017 ஏப்ரல் 27ஆம் திகதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தப்படி இந்த பணியை நான்கு கட்டங்களை கொண்டதாக 06 மாதங்களில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது. முதல் கட்டத்தின் பணியான தற்போதுள்ள அமைப்பை மதிப்பீடு செய்தல், பொருத்தமான புதிய முறையை முன்மொழிதல், அதற்குத் தேவையான விவரக்குறிப்புகளைத் தயாரித்தல், முன்மொழிவுகளைத் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்வதற்கு 2017 ஜூலை மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்கு ரூபா 1,816,103 மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின்படி, இரண்டாவது கட்டத்தின் செயல்பாடான | **2018 3.1 (இ) 2020 – 3.1 (அ)** | ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் தேவையை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்காக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள செயல்நடவடிக்கைதிட்டம் (Action Plan) முதலில் தயாரிக்கப்பட்டது என்பதுடன், பல முறை திருத்தப்பட்டது. மேலும், பொது சபையால் செயற்திட்ட ஓராண்டு இடைநிறுத்தத்திற்குப் பிறகு திட்டத்தை மீண்டும் தொடங்க அனுமதி அளித்து புதிய செயலநடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு வருவதால், கொள்முதல் பணிகளை மேற்கொள்ள தகுதியான அதிகாரியை நியமிக்க முடியவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | இரண்டாம் கட்டப் பணியின் போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இத்திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த 03-12-2018 அன்று நடைபெற்ற விசேட பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மார்ச் 2019 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், திட்டத்தை மீண்டும் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் கொள்முதலில் போதிய அறிவு இல்லாத அலுவலர்கள் இல்லாததால் பணிகள் பாதிக்கப்பட்டன. தற்போது, ஒருங்கிணைந்த மேலாண்மை தகவல் அமைப்பு அமைக்கும் பணியை மீண்டும் தொடங்க புதிய தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளதால், அதற்கான பணிகள் துவங்கியுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மென்பொருள் மற்றும் வன்பொருளை வாங்குவதற்கு பொருத்தமான நிறுவனம் அல்லது நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு இரண்டாவது கட்டத்தின் தொடக்கத்தில் 50 சதவீதமான தொகையை செலுத்த வேண்டியதுடன், அதன்படி அந்தத் தொகையாக வட் உள்ளடங்களாக ரூபா 538,363 தொகைக்காக 2018 மார்ச் 31 அன்று பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, இரண்டாம் கட்டப் பணிகள் இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும், ஆனால் 2021 அக்டோபர் 31 வரையிலும் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | | |
| **05.** | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அனுமதிப்பத்திரம் இரத்தாகிய தயாரிக்கப்பட்ட தானிய உணவு உற்பத்திக்காக மீள அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு உரிய மாதிரியொன்று பரிசோதிக்கபட்டிருந்தது 2018 யூலை 15 ஆந் திகதியே ஆகும். பரிசோதனையின் பெறுபேறுகளுக்கமைய பரிசோதனை தோல்வியடைந்திருந்தமையால் அதற்கமைய | **2018**<br>3.2 (அ) | மக்களுக்க தரமான பொருட்களை பெற்றுக்கொள்ள உள்ள நியம நிறுவனத்தின் பொறுப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கையின் நியமச் சான்றிதழ் | குறித்த பரிசோதனையை வெளிநாட்டு இரசாயன ஆய்வுகூடத்தில் மேற்கொள்ள நேர்ந்தமையால் பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்ள **02** மாதங்கள் கடடந்திருந்தது. அந்த பெறுபேறு **2018.10.23** ஆந் திகதி இடம்பெற்று அனுமதிப்பத்திரக் குழுவிற்கு சமர்ப்பித்ததுடன், அதன் போது அனுமதிப்பத்திரத்தினை | இந்த தயாரிப்புக்கான ”SLS” லோகோவைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன, மேலும் மீண்டும் மாதிரிக்கு பிறகு புதிய உரிமம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. SLS உரிமம் ரத்து செய்யப்பட்ட பிறகு, ”SLS” லோகோ கட்டாயமாக உள்ள பொருட்களுக்கு மட்டுமே நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீள அனுமதிப்பத்திரம் நீடிக்க முடியாதென குறிப்பிட்டிருந்தது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு 11 மாதங்களின் தாமதத்தின் பின்னர் 2018 நவம்பர் மாதத்தில் ஆகும். இந்த அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டமைக்கான எழுதமடதுமூல சான்றுகள் இல்லாதிருந்தது. குறித்த உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட நாள்முதல் **2019** மே வரையிலும், **17** மாத காலப்பகுதியினுள் SLS இலட்சினையுடன் அவை விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதை தேடிப் பார்ப்பதற்கு சந்தை மாதிரியொன்றினை பரிசோதித்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், **2019** மே வரையிலும் SLS இலட்சினையுடன் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுகின்றமை பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டது. | | தொடர்பில் நிலவும் நுகர்வோரின் நம்பிக்கையை பாதுகாப்பதற்காக நிறுவனம் செயற்பட வேண்டும். | இரத்துச் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற அனுமதிப்பத்திரக் குழுவின் போதும் அந்த தீர்மானம் சரியானதென அறிவித்து குறித்த கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எம்மால் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டமை அறிவிக்கப்பட்டது SLS தர நியமம் உரிய பொருட்களுக்கு மாத்திரம் என்பதனை மேலும் அறிவிப்பது டன், எதிர்காலத் தில் SLS தர நியமம் தேவையற்ற பெருட்களுக்கும் இவ்வாறான நிலைமையை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மேலும், "SLS" உரிமம் ரத்து செய்யப்பட்ட பிறகு நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து உரிமம் வழங்கும் குழுவின் கருத்துக்களை அறியவும், அதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்கள் மேலும் விவாதிக்கப்பட்டு இறுதி முடிவு எட்டப்படும். அடுத்த குழு கூட்டம். |
| **06.** | ஆய்வுகூட கட்டிடத்தை கட்டுவதற்காக இலங்கை நியமங்கள் நிறுவனம் ஹல்பரவத்த மாலபே பகுதியில் 03 ஏக்கர் காணியை | **2018 3.3 (அ) 2020 3.3** | சொத்தை உரிமையாக்கி உரிய கட்டிடத்தை விரைவில் நிர்மாணிக்க நடவடிக்கை | 2016.08.24 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பௌதீக உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வு ஐயவினாவின் படி உரிமையைப் பெறுவதற்கு | இந்த காணிக்கான பத்திரத்தை பெற்றுத்தருமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பல தடவைகள் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் விண்ணப்பித்த போதிலும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 168 மில்லியன் முன்பணமாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2018 நிதிநிலை அறிக்கைகளில் செலுத்தப்பட்ட முன்பணமாக பதிவு செய்யப்பட்டது. மேலும், 28 மே 2015 அன்று ரூபா. 1,165,333 பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், நிலத்திற்கான முழுப் பணத்தையும் செலுத்திய பிறகு, சொத்தின் உரிமையை நிறுவனத்திற்கு மாற்ற வேண்டும். 2021ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் திகதி வரையிலும் சொத்தின் உரிமையைப் பெற முடியாதிருந்தது. | | க எடுக்க வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இதுவரையில் பத்திரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. |
| **07.** | ரூபா **150** மில்லியனான மதிப்பிடப்பட்ட செலவினத்தில மாலம்பே ஹல்பரவத்த காணி ஆய்வுகூடத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்ததாரரை தெரிவு செய்தல் மற்றும் அதனை கையளித்தல் **2018** ஆம் ஆண்டினுள் | **2018**<br>3.3 (ஆ)<br>**2020**<br>3.3 | உத்தேச நோக்கங்களை நிறைவேற்றுவதங்காக பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் அந்த வருடத்தினுள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிள் வழங்குநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக பெறுகை அறிவித்தலினை மேற்கொள்ளல் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விலைக்கேள்வியளார்களை மதிப்பீடு செய்வதற்காக சிறு பதிவேடுகளை தயாரித்தல், அமைச்சரவை அங்கீகாரத்திற்காக பெறுகைகள் குழுவானல் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதங்குரிய | தற்போது, கட்டுமானப் பணிகளுக்கு அரசு அனுமதி வழங்காததால், கட்டுமானப் பணிகளில் முன்னேற்றம் காண முடியவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு இறுதி வரை, அதற்கான பணிகள் முடிக்கப்படவில்லை. | | | அறிக்கைகளை தயாரித்தல் போன்ற பணிகள் மேறைகொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் 2019 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | |
| **08.** | பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள படிவம்சார் சட்டகத்தின் OB **17** இன் பிரகாரம் ஏதேனும் கணக்கீட்டு நிறுவனத்தில் ஏற்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் மூலம் பொருளாதார வளங்களுக்காக ஏற்படும் தாக்கங்கள் நிதி சார் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு நடைபெறும் காலப்பகுதியில் அன்றி குறிப்பிட்ட தாக்கம் ஏற்பட்ட காலப்பகுதியை இனங்காண வேண்டியயிருந்த போதிலும், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் கருமங்கள் தொடர்பாக **2016, 2017** மற்றும் **2018** ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா **20,546,398** தொகைக்கான கட்டண வருமானம் **2019** ஆண்டிற்கான வருமானமாகவும் **2018** மற்றும் **2019** ஆண்டுகள் தொடர்பாக | **2019** 1.5.1 (அ) **2020** 1.5.1 (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப வருமானம் மற்றும் செலவினங்களை துல்லியமாக அடையாளம் காணக்கூடிய தகவல் கட்டமைப்மைப்பு துல்லியமான தகவல்களுடன் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும். | ஏதேனும் நிதியாண்டினுள் சேவை நாடுனரினால் செலுத்த வேண்டிய வருடாந்த கட்டணத் தொகையை இனங் காண்பதற்காக உரிய இணைந்த முகாமைத்துவ முறைமை ஒன்று காணப்படவில்லை. அதனால், இந்த வருடாந்த கட்டணத் தொகை மீளாய்வாண்டில் கிடைத்திருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. | நிதிநிலை அறிக்கைகள் இலங்கையின் கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு, காலங்களுக்குரிய வருமானத்தை தெளிவாகக் கண்டறிந்து கணக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிடைத்திருந்த ரூபா **12,294,325** தொகை 2020 ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | | |
| **09.** | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் **02/2016** அதற்க்கு மாறாக 2017 ஒக்தோபர் 01 திகதி முதல் செயற்படக் கூடிய விதமாக 2017,2018 மற்றும் 2019 ஆண்டு களுக்காக திறன்தொழில் கொடுப்பனவு ரூபா 24,421,496 தொகை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | **2019**<br>1.7(அ) | இலக்கம் 02/2016 சுற்றறிக்கை யின் படி செயற்பட வேண்டும். | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் இது வரை கிடைத் திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை 5/2017 இன் படி (நிர்வாக அதிகாரிகளுக்கான தொழில்முறை கொடுப்பனவு கொடுப்பனவுகள்) எங்கள் நிறுவனத்திற்கு ஒத்த நிறுவனங்களில் பணம் செலுத்தப்படுவதாக அறியப்பட்டது. நிறுவனத்தின் அனைத்து நிர்வாக அதிகாரிகளுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என 17-12-2018 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக சேவைகள் திணைக்களம் இதுவரை அதற்கு பதிலளிக்கவில்லை. |
| **10.** | இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு செயற்பாடு முறைமை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையில் 20 வருட நிறைவேற்று தர அனுபவம் மற்றும் 12 வருட உயர் முகாமைத்துவ அனுபவம் | **2019**<br>1.7(ஆ)<br>**2020**<br>3.4 (ஆ) | அனைத்து ஆட்சேர்ப்பு களும் தொடர்புை டய நடைமுறை க்கு இணங்க மேற்கொள் ளப்பட வேண்டும். மேலும், தகுதி மற்றும் அனுபவம் குறித்து | தன்னார்வ சேவைகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட மாட்டாது. மூத்த நிர்வாக அனுபவம், உயர் நிர்வாக அனுபவம் அல்லது கல்வி மற்றும் ஆராய்ச்சி (AR) அனுபவம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள முடியுமா என்பதற்கும் தெளிவான வரையறை இல்லை. **05** வருட இளங்கலை பட்டம் மற்றும் **03** வருட தன்னார்வ அனுபவம் உள்ளடங்களாக **21** வருட அனுபவம் | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சகத்தின் செயலாளர் மற்றும் இரண்டு அமைச்சரவை அமைச்சகங்களின் செயலாளர்கள் மற்றும் தரநிலைகள் நிறுவனத்தின் பொது வாரியத்தின் இரண்டு மூத்த உறுப்பினர்களுடன் தொடர்புடைய நேர்காணல் குழுவில் பங்கேற்றனர். பொதுச் சபை அனைத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவசியமானதென குறிப்பிடப்பட்டது. நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் **2006 – 2008** காலப் பகுதியில் நிறுவனம் ஒன்றில் சுயேட்சை ஆய்வு விஞ்ஞானி என (Voluntary Research Scientist) என கடமையாற்றியதாக கடிதம் ஒன்று வழங்கிய போதிலும், வேறு ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்று ஒன்று (நியமனக் கடிதம்) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் உயர்மட்ட முகாமைத்துவ அனுபவம் **12** வருடங்களை பூர்த்தி செய்யாதிருந்ததுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் **20** வருடங்களுக்கான நிறைவேற்றுத் தரத்தில் அனுபவம் ஆகிய நிபந்தனையை பூர்த்தி செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | ஏதேனும் தெளிவின் மை இருந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்து தெளிவுபடுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளது. நேரமுகப் பரீட்சைகள் குழுவின் முடிவுகளே இறுதியானது என்பதால், அந்த முடிவுகள் குறித்து நிறுவனத்திற்கு கருத்து தெரிவிக்க முடியாது. | விடயங்களையும் ஆராய்ந்து அதன்படி நியமனங்களை வழங்க தீர்மானித்துள்ளது.<br><br>இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் நியமன அதிகாரம் லைன் அமைச்சின் செயலாளராக இருப்பதால், இது தொடர்பான அனைத்து தகவல்களும் கோப்புகளும் எமது தொழில்நுட்ப அமைச்சின் லைன் அமைச்சில் இருப்பதால் அந்த அமைச்சினை தொடர்பு கொள்ளவும். |
| **11.** | ISO 22000 உணவுப் பொருட்கள் நன்கு பாதுகாக்கப்படல் தொடர்பான முகாமைத்துவ முறைமை சான்றுபடுத்தல் முறைமையின் கீழ் புதிதாக சான்றிதழ்கள் வழங்குதல் 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை 54 சான்றிதழ் முதல் 24 | **2019**<br>3.2 | ISO 22000 உணவுப் பொருட்கள் நன்கு பாதுகாக்கப்படல் தொடர்பான முகாமைத்துவ முறைமை சான்றுபடுத்தின் தேவை | இந்த சான்றுபடுத்தலை பெற்றுக்கொள்ளல் மற்றும் செயற்படுத்து வதற்காக பாரிய தொகையொன்று செலவிடுவதற்கு நேரிட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பமான சூழல் காரணமாக சுற்றுலா ஹோட்டல்களுக்காக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளல் நளிவுற்றிருத்தல் ஆகிய காரணங்க ளினால் புதிதாக சான்றிதழ்கள் வழங்குதல் | 2019 இல் சான்றிதழ்கள் குறைந்ததற்கு முக்கியமாக ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட எதிர்பாராத தாக்குதலே காரணம். இதன்காரணமாக ஹோட்டல் தொழில் நலிவடைந்துள்ளதுடன், சான்றிதழ் பெறுவதற்கு அதிகளவு பணம் செலவழிக்க வேண்டியுள்ளது என்பதும் மற்றொரு காரணம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரை முறையாக குறைந்துள்ளது. | | மற்றும் முக்கியத்துவம் தொடர்பாக உற்பத்தி நிறுவனங்களுக்கு சிறந்த விளம்பரப்படுத்தல் ஒன்று வழங்கி சான்றுதல்கள் வழங்குவதை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | |
| **12.** | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.4 மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவைக்கான பின்ணிணைப்பு 28 இன் பிரகாரம் விலை நிர்ணய முறையின் கீழ் சீல் வைக்கப்பட்ட 5 கூறுவிலைகளை விட குறையாத எண்ணிக்கை அழைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் வருடாந்த சுற்றுலாவிற்காக நுவரெலியவில் தங்கும் வசதி பெற்றுக்கொள்வதற்காக கூறுவிலைகள் அழைத்த போது ஒரு வழங்குனரிடம் மாத்திரம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு அந்த வழங்குனரிடம் | **2019 3.3** | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். | நலன்புரி சங்கத் தலைவரின் உத்தியோகபூர்வ மின்அஞ்சல் தபால் மூலம் கூறுவிலை அழைக்கப்பட்டு 3 ஹோட்டல்கள் அதற்காக பதிலளித்திருந்ததுடன் ஒரு ஹோட்டலை தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. நலன்புரி சங்கத்தின் புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட முதலாவது சுற்றுலா இதுவானதால் அறிவின்மை காரணமாக ஏனைய கூறுவிலை உட்பட ஒட்டு மொத்த ஆவணங்களை இணைப்பதற்கு மறந்துள்ளார்கள். மேலும், அப்போது காணப்பட்ட நிலைமையின் கீழ் இது தொடர்பாக தொழிநுட்பக் குழு நியமனம் செய்யப்பட்டிருந்தால் அது முடிவடைய குறிப்பிட்ட | கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு இணங்குமாறு ஒவ்வொரு துறைக்கும் தெரிவிக்கப்பட்டு தற்போது இந்த முறையில் நடந்து வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் பெறுகை வழிகாட்டல் கோவை பிரிவு 3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள வாறு ரூபா 05 மில்லியனுக்கு குறைவான சேவையை வழங்குவதற்காக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக நிறுவனத் தலைவரின் அங்கீகாரம் (CEO) மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டு தங்குமிட வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 1,829,400 தொகை செலுத்தப்பட்டிருந்த தென அவதானிக்கப்பட்டது. | | | காலம் எடுக்கும் என்ற காரணமாக நிறுவனத்தினால் ஒதுக்குதல் கைவிடப்பட நேரிடும். எவ்வாறாயினும் பெறுகை வழிகாட்டல்கள் உரிய முறையில் கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட துடன் அது நலன்புரி சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகளின் போது கவனத்தில் எடுக்கப்படும். | |
| **13.** | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆம் பிரிவின் படி வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட முடியாத போதிலும், நிறுவனத்தின் பரிசோதிப்புக்காக உரிய இடத்திற்கு செல்லுதல் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட போக்குவரத்து கட்டணம் உரிய ஒப்பந்ததாரரிடம் அறவிடப்பட்டிருந்ததுட ன், அவ்வாறு | **2020**<br>1.5.1 (இ) | இலங்கை கணக்கீட்டு நியமங்களு க்கு இணங்க செயற்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எதிர்கால கணக்கியல் தரநிலைகள் பின்பற்றப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிடைத்த கூட்டுத்தொகை ரூபா 10,254,941 ஆன போக்குவரத்து வருமானம், போக்குவரத்து கட்டண செலவினத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | | | |
| **14.** | 2018 முதல் செலுத்த வேண்டியதாக காணப்படும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக் கணக்கு ரூபா 49,747,361 ஆன மீதியை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் நிறுவனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | **2020** 1.6.2(ஆ) | நிலுவை தொகையை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திடமிருந்து கிடைத்த அவதானிப்புகளுடன் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 49,747,361 தொகையை தீர்ப்பனவு செய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்தாலோசித்து தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| **15.** | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதிக்கான வைப்புச் செய்யப்பட்ட போதிலும், தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கிய போதிலும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை சீராக்கம் செய்த பின்னர் மீண்டும் நிலுவையாக உள்ள அளவினை சீராக்குவதன் மூலம், மாத இறுதியில் உள்ள காசுப் புத்தகத்தின்படி மீதி பெறப்பட்டிருந்ததுடன், அந்த நிலுவைத் தொகை பற்றிய விரிவான குறிப்புகள் | **2020 1.7** | வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரிக்கும் போது அனைத்து பரிவர்த்தனைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். | 2020 திசெம்பரில் மாதத்திற்காக வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத செலவாக ரூபா 11,537,762 தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் சேவைகளைப் பெறுவதற்காக வாடிக்கையாளர்களால் நேரடியாக இலங்கை நியமங்கள் நிறுவன வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட பணம் மற்றும் காசோலைகள் ஆகும். | வங்கி சமரச அறிக்கைகளைத் தயாரிக்கும் போது அனைத்து பரிவர்த்தனைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2020 திசெம்பர் மாதத்திக் நிலுவையில் உள்ள சீராக்கல்களின் மதிப்பு ரூபா 11,537,762 ஆன பாரிய தொகையாவதுடன், இந்த நிலுவையிலுள்ள சீராக்கல்கள் 2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| **16.** | 2019 ஆகஸ்ட் மாதம் முதல் 2020 ஒக்தோபர் மாதம் வரையிலும் 270 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட போசியேல் பீங்கான் பொருட்களிடையே தரத்தினை பரிசோதனை செய்த 152 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட தேறிய நிறை 1,566,258.40 கிலோ கிராம் மற்றும் பெறுமதி ஐ.அ.டொலர் 849,623.74 தொகையான மாதிரியொன்று தெரிவு செய்யப்பட்டதுடன், அந்த மாதிரியில் 75 சதவீதத்திற்காக பாரவுலோகம் (Heavy Metal) பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இலங்கை நியம இலக்கம் 1222 : 1 பகுதி : 2001 (Sri Lanka Standard 1222 : Part 1 : 2001) இன் போசிலேன் பீங்கான் | **2020 3.2 (அ)** | மக்களுக்கு தரமான பொருட்களை துகர்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் நியமங்கள் நிறுவனத்தின் பணிப்பொறுப்பாவதுடன், உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள தேவையான பின்புலத்தை உருவாக்குதல் மற்றும் உரிய தர நியமங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | போசிலேன் மற்றும் செரமிக் பொருட்களுக்கான பரிசோதனையானது 2020.02.29 ஆந் திகதிய 1/21/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமே மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் ஈயம் மற்றும் கெட்மியம் பரிசோதனை மாத்திரம் அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த வரித்தமானி அறிவித்தலின் பிரகாரம் போசிலேன் மற்றும் செரமிக் பொருட்கள் உரிய பரிசோதனையின்றி இறக்குமதியாரிடமிருந்து களஞ்சியத்திற்கு விடுவிக்கப்படாது. செரமிக் பொருட்களுக்கு தர நியமம் தயாரிக்கப்படவில்லை. எவ்வாறான போதிலும் செரமிக் பொருட்களுக்கு போசிலேன் பொருட்களுக்கான தர நியமங்களை பரிசோதிக்க முடியாது. | இறக்குமதி செய்யப்பட்ட பீங்கான் பீங்கான்களை அதன் தொடர்புடைய விவரக்குறிப்பான SLS 1222 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுருக்களிலிருந்து பார் மெட்டலுக்கான அளவுருக்களைத் தவிர வேறு அளவுருக்களுக்காகப் பரிசோதிப்பதற்கான வசதிகள் இலங்கை தர நிர்ணய நிறுவன ஆய்வகத்தில் தற்போது இல்லை.<br><br>இருப்பினும், இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டஸ்ட்ரியல் டெக்னாலஜி (ITI) ஆய்வகத்தில் மற்ற அளவுருக்களிலிருந்து சில அளவுருக்களை சோதிக்கும் வசதிகள் இருப்பதால், அந்த அளவுருக்களை தொழில் நுட்பக் கழகத்தின் ஆய்வகம் மூலம் சோதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>ஆனால் 29-02-2000 எண் 1121/4 தேதியிட்ட வர்த்தமானி அறிவிப்பில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருட்கள் நியமத்திற்கு அமைவானதா என்பதை பரிசோதித்து பார்ப்பதற்காக 16 பரிசோதனைகள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவற்றிடையே ஒரு பரிசோதனை அதாவது லெட்/கெட்மியம் உள்ளடக்கப் பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தர நியமங்களின் ஊடாக தரத்தினை பரிசோதிப்பதற்காக 16 பரிசோதனைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள போது, ஒரு பரிசோதனையின் அடிப்படையில் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட போதிலேன் பொருட்களின் தரத்தினை பரிசோதித்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாக காணப்பட்டது. | | | | குறிப்பிடப்பட்டுள்ள கன உலோகங்கள் ஈயம் மற்றும் காட்மியம் சோதனை மட்டுமே பீங்கான் மேஜைப் பாத்திரங்களுக்கு பொருந்தும். |
| **17.** | SLSI/19/27984 ஆம் இலக்கத்தின் கீழான இறக்குமதிகளை பரிசோதனை செய்த பெறுமதி ஐ.அ.டொலர் 1255.3 கொண்ட 26025 போசிலேன் உபகரணங்களின் தொகுதிகளை அடையாளமிடல் (Markings), SLS 1222 : 1 பகுதி : 2001 நியமத்திற்கு இணங்கவில்லை என | **2020**<br>3.2 (ஆ) | இத்தகைய நடவடிக்கைகள் தரநிலைக் கழகத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை உடைக்க வழிவகுக்கிறது. | ஆய்வுகள் தோல்வியுற்றால், அதை சரிசெய்ய இறக்குமதியாளருக்கு அறிவிக்கப்படும். நினைவூட்டலுக்கு இறக்குமதியாளர் பதிலளிக்கவில்லை எனில், எச்சரிக்கையுடன் இயக்குநரால் அந்த இருப்பு அங்கீகரிக்கப்படும் | பீங்கான் பொருட்களுக்கான ளுடுளு 1222 குறிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குறிகளுக்கு இணங்காதது தொடர்பாக, குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னதாக அடையாளங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்காத இறக்குமதியாளர் எச்சரிக்கப்படுவார் மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அந்த பொருட் தொகுதியினை விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | | சந்தையில் தரமற்ற பொருட்களை வெளியிடுவதை தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும். | | அனுமதிகள் அதிகபட்சம் இரண்டு வழக்குகள் மற்றும் அடையாளங்கள் மட்டுமே. சரக்குகளை இறக்குமதியாளரின் கிடங்கிற்கு விடுவிப்பதற்காக, அவ்வாறு வெளியிடப்பட்ட சரக்குகள் அல்லது சரக்குகளுக்கான அடையாளங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். |
| **18.** | உற்பத்தி சான்றிதழ் இலட்சினையை பெற்றுக்கொண்ட பொருட்களின் தரம் தொடர்பிலான பரிசோதனைக்காக சந்தைப் பரிசோதனையொன்றினை மேற்கொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டளவில் SLS இலட்சினையை பெற்றுக்கொண்ட பொருட்களின் எண்ணிக்கை அண்ணளவாக 1105 ஆன போதிலும், அதற்கு ஒப்பாக சந்தை பரிசோதனைகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், இதன் காரணமாக தரத்தில் குறைவான பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் உயர் அபாயமொன்று நிலவுகின்றமை கணக்காய்வின் போது | **2020**<br>3.2 (இ) | போதுமான சந்தை ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலம் சந்தையில் விற்கப்படும் தரமற்ற மற்றும் தரத்துடன் இணக்கமற்ற தயாரிப்புகளின் அபாயத்தைக் குறைக்க உதவ வேண்டும். | ஒவ்வொரு வருடமும் சந்தை தயாரிப்பு ஆய்வுகளை நடத்தும் போது SLS சான்றிதழை வழங்கும் போது அந்த பதிவுகள் கவனத்தில் கொள்ளப்படும். இருப்பினும், துறைக்கு கிடைக்கும் சவால்கள் மற்றும் வளங்களைப் பொறுத்து, நுகர்வோர் புகார்கள் மற்றும் மோசமான சோதனை அறிக்கைகள் கொண்ட தயாரிப்புகளுக்கான சந்தை ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. | பின்வரும் காரணங்களால் சந்தை மாதிரி வரம்புக்குட்பட்டது<br><br>1. உற்பத்தியின் அதிக சந்தை விலையின் காரணமாக, மாதிரி விலை மிகவும் அதிகமாக உள்ளது (ஒரு மாதிரியில் தயாரிப்புகளின் பல அலகுகள் உள்ளன).<br><br>2. உற்பத்தியாளர் வளாகத்தில் ஆய்வு செய்ய வேண்டிய பொருட்கள் (எ.கா. uPVC குழாய்கள், கல்நார் கூரைத் தாள்கள், சிமெண்ட் கற்கள்)<br><br>3. சந்தையில் அடிக்கடி கிடைக்காத குறிப்பிட்ட பகுதிகள்/பிராந்தியங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தயாரிப்புகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாங்குபவர்களுக்காக மட்டுமே தயாரிக்கப்படுகின்றன (எ.கா. PE குழாய்கள், காகித சாக்குகள்)<br>இந்த ஆண்டு முதல் அதிக மாதிரிகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | | சந்தைக்கு வருவதற்கான திட்டங்கள் உள்ளன. |
| **19.** | நிறுவனத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு ஆய்வுகூடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டு பரிசோதனை அறிக்கைகளை வெளியீடு செய்தல் தொடர்பில் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாதிரிக்காக **2019** ஆம் ஆண்டின் உணவு தொடர்பான ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகள் **100**, மின்சார உபகரண அறிக்கைகள் **184**, இரசாயன பொருட்கள் தொடர்பான அறிக்கைகள் **256**, நுண்ணுயிர்கள் தொடர்பான பரிசோதனைகள் **218** மற்றும் உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படும் மூலப்பொருட்களின் தரம் தொடர்பில் **81** பரிசோதனை அறிக்கைகளும் என **839** அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டது. PR-**11-03** இன் **3.14(1)** இன் பிரகாரம், மாதிரிகள் அந்த திகதியில் அல்லது அதற்கு அடுத்த திகதியில் கோரிக்கை கடிதத்துடன் (Request Letter) குறித்த இரசாயன ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட வேண்டிய | **2020 3.2 (ஈ)** | ஆய்வு அறிக்கைகள் தாமதமாக வருவதால், தரமற்ற பொருட்கள் சந்தையில் வெளியாகின்றன. எனவே, பரிசோதனை அறிக்கைகளை உடனடியாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆய்வுகூடங்களில் உள்ளக செயல்முறைகள் உட்பட பிற தொடர்புடைய செயல்முறைகளுக்கான நேர இடைவெளியைக் குறைக்க ஆய்வுகூடம் எப்போதும் செயற்படுகின்றது. அவ்வாறான போதிலும், இறக்குமதி பொருட்களை பரிசோதிக்கும் போது துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ள சரக்குகள் மற்றும் தொடர்புடைய மாதிரிகளின் ஆய்வுக்கு முன்னுரிமை அளித்தலும், சில உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களின் பயன்பாட்டுச் செலவைக் குறைப்பதற்கும், அதிக எண்ணிக்கையிலான அளவுருக்கள் இருந்தால், ஆய்வாளரால் சோதனையில் செலவழித்த நேரத்தைக் குறைப்பதற்கு சில அடையாளம் காணப்பட்ட பொருட்களை வெவ்வேறாக பரிசோதிக்காது ஒரு குறிப்பிட்ட மாதிரி அளவை பகுப்பாய்வுக்கு இணைத்தல் போன்ற விடயங்களால் தாமதம் ஏற்படுகிறது. சோதனை அறிக்கையில் ஏதேனும் பிழைகள் இருந்தால், அவற்றை சரிசெய்ய வேண்டி நேர்வதுடன், சில சந்தர்ப்பங்களில் மீண்டும் சோதனை (Re-Testing) செய்ய வேண்டியிருப்பதும், ஆய்வுகூடத்திற்கு ஒரு வருடமொன்றில் பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தாலும், அதற்கு | சில சமயங்களில், இறக்குமதி ஆய்வு செயல்முறையின் கீழ் எடுக்கப்பட்ட மாதிரிகளை சம்பந்தப்பட்ட ஆய்வகத்திற்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படுகிறது, ஏனெனில் மாதிரி அலுவலர்கள் இல்லாததால் ஒரு மாதிரி அதிகாரிக்கு ஒதுக்கப்படும் செலவின் அளவு அதிகரிக்கிறது மற்றும் தற்போதைய சூழ்நிலையில் புதிய ஆட்சேர்ப்புகளை செய்ய முடியாது. இதற்கு தீர்வாக, பொதுக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி முறையின் கீழ் தகுதியான பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு மாதிரிகள் எடுக்க பயன்படுத்தப்பட்டு, இதன் மூலம் இந்த தாமதம் குறைக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதிலும், அதனை விட அதிக தாமதம் ஏற்பட்ட **481** சந்தர்ப்பங்களும், மாதிரிகள் கிடைத்திருந்த போதிலும் பரிசோதனை ஆரம்பிக்கப்படாத **359** சந்தர்ப்பங்களும், மாதிரிகள் கிடைத்திருந்த போதிலும் பரிசோதனை ஆரம்பிக்க பணிகள் ஒப்படைக்க தாமதமாகிய **130** சந்தர்ப்பங்களும், கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பரிசோதனை அறிக்கைகளிடையே பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகளை தயாரிப்பதற்கு தாமதமாகிய **169** சந்தர்ப்பங்களும், பரிசோதனை அறிக்கைகளை தயாரித்து ஆய்வுகூடத்திற்கு பொறுப்பான தலைவரால் சான்றுபடுத்தல் தாமதமாகிய **72** சந்தர்ப்பங்களும், பணி நியமனம் மற்றும் தேர்வுகள் தொடங்கும் திகதிக்கு இடையில் **48** தாமதங்களும் உள்ளன. | | | இணையாக பணியாளர்கள் அதிகரிக்காமை போன்ற காரணங்களால் காலதாமதம் தவிர்க்க முடியாததாக இருந்தது. தொழில்நுட்ப உபகரணங்களின் அதிகளவில் தேவைப்படுவதுடன், அவ்வாறு செய்வதற்கு தற்போதுள்ள ஆய்வுகூடத்தில் போதுமான நிலத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஆய்வகத்திற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| **20.** | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 393 ஆக உள்ளதுடன், 2021 யூன் 30 ஆந் | **2020** 3.4 (அ) | ஆட்சேர்ப்பு நடைமுறையின் திருத்தம் முடிவடைந் | நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு வருகிறது, செயல்முறை நிறைவடைந்ததும் ஆட்சேர்ப்புகளை | நிறுவனத்தின் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான முகாமைத்துவ சேவைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதியளவில் அவற்றுள் 27 சதவீதமான பதவிகளான 106 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. இந்த வெற்றிடங்களிடையே 50 சதவீதம் பதவிநிலை தரத்திற்கு உரியவை ஆகும். | | ததால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு சேவைகள் திறமையாக நடாத்திச்செல்லப்பட வேண்டும். | மேற்கொள்ளலாம். | திணைக்களத்தின் அனுமதி 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெறப்பட்டது மற்றும் ஆட்சேர்ப்பு செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இயக்குநர் (நிதி) மற்றும் மூத்த துணை இயக்குநர் (தரநிலைகள் மற்றும் சேவை உயர்வு) பதவிக்கான ஆட்சேர்ப்பு 2021 இல் மேற்கொள்ளப்பட்டது. இயக்குனர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, நேர்காணல்களும் முடிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டன. உதவி இயக்குநர் பதவிக்கான விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு தற்போது நடைபெற்று வருகிறது. |

## 32. நகர அபிவிருத்தி அதிகாரசபை

1. நிறுவனத்தின் பெயர் -: நகர அபிவிருத்தி அதிகாரசபை

2. கணக்காய்வு அபிப்பிராயம் -: 2018 - மறுப்பு அபிப்பிராயம்

   2019 - வரைவு அறிக்கை தயார் நிலையில் உள்ளது

**3.** கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | குறிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|---|
| (01) | **நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு** | | | | |
| (i) | அதிகாரசபையின் வருமானம் சேகரிக்கப்படும் இடங்களில் நாளாந்த நடவடிக்கைகள் மிகுந்த மேற்பார்வைக்குள்ளாகாத நிலையேற்படுமாயினும் பெத்தகான தெத்பிம பூங்காவில் அனுமதிச்சீட்டு வருமானத்தைப் பரிசீலித்து அதனைச் சரிவர வங்கியிலிட முறையான பரிசீலனை மாதத்திற்கு ஒரு முறையேனும் நடவடிக்கை எடுக்கப்படாது கடந்த **2016** யூன் தொடக்கம் கணக்காய்வு வரைவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட காலத்திற்குரிய பூங்காவின் அனுமதிச்சீட்டு வருமானமும் ஏனைய வருமானமுமான ரூபா **3,583,485** க்கு அதிகமான தொகையை அங்குள்ள உத்தியோகத்தர் மோசடி செய்திருந்தனர். | 1.5.1 (இ) - 2018 | சரியான உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டு மோசடிகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2016.06.15 தொடக்கம் 2018.07.31 வரைபெத்தகான தெத்பிம பூங்காவில் ஏற்பட்ட ரூபா 3,583,485 பண மோசடி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.<br><br>இது தொடர்பாக 2019.01.09 திகதி<br><br>நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மிரிஹான பொலிசுக்குப் புகாரிடப்படடுள்ளது. | சம்பந்தப்பட்ட அதிகாரி பணியில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டதோடு, புகார் மீதான விசாரணையும் இது வரை முடிக்கப்படவில்லை. |
| (ii) | நாட்குறிப்பு ஒன்றின் மூலம் கொடுக்கல் வாங்கலைப் பதிவு | 1.5.1 (அ) - 2018 | உயர் உத்தியோகத்தர் ஒருவரது | கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்ட | கணக்கியல் கொள்கைகளின் படி, இரட்டை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யும் போது குறித்த கொடுக்கல் வாங்கலைச் சீராக்கல் செய்வதற்கான தேவை மற்றும் அதற்குரிய சரியான இரட்டைப் பதிவு தொடர்பாக உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர் ஒருவரது அல்லது உத்தியோகத்தர் குழாம் ஒன்றினது மேற்பார்வை அல்லது அங்கீகாரம் வேண்டுமாயினும், அதிகாரசபையின் கணக்குகளில் நாட்குறிப்புகளின் மூலம் சீராக்கல் செய்யப்படும் போது அவ்வாறான மேற்பார்வை இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, ஆண்டின் போது **13,148** வரவுக்குறிப்புகளும் **28,686** செலவுக்குறிப்புகளுமாக ரூபா 66,054 மில்லியன் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, அதிகாரம் பெறாது நிதிப்பிரிவு அல்லது வேறு ஒரு பிரிவினது யாராவது ஒரு உத்தியோகத்தர் நாட்குறிப்புகளை இட்டதன் மூலம் அதிகாரசபையினது கணக்கு மீதிகளை தேவைக்கேற்றவாறு சீராக்கல் செய்து தவறுகள் ஏற்படுவதற்கு | | மேற்பார்வையின் கீழ் முறையான வேலைப்பகிரிவு அடிப்படையில் நாட்குறிப்பின் மூலம் கணக்குகளில் சீராக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சகல நாட்குறிப்புகளும் கணக்காளர் / உதவிப்பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் ஒருவரது பரிசீலனையுடன் அல்லது அங்கீகாரத்தின் பின்னர் கணக்கிலிடப்படும். இதற்கமைய எதேனும் உத்தியோகத்தர் ஒருவர் கணக்கீட்டு முறைமையில் நாட்குறிப்பு மூலம் கணக்கிலிட்டுச் சீராக்கலை மேற்கொள்ள இயலாது. நாட்குறிப்புகளின் மூலம் கணக்கீட்டு முறைமையில் சேர்க்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பல உள்ளன.<br><br>எவ்வாறாயினும், உயர் உத்தியோகத்தர் ஒருவரது மேற்பார்வையுடனேயே நாட்குறிப்பைக் கணக்கிடும் நடைமுறையை **2020** நவம்பர் தொடக்கம் அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பதிவு முறையில் கணக்குகளை வைத்திருக்கும் போது பற்று மற்றும் வரவுகளின் கூட்டுத்தொகை சமமாக இருக்க வேண்டும், ஆனால் நாட்குறிப்பு பதிவின் போது ரூபா.2,319,207,061 வித்தியாசம் இருப்பதால், நிதியின் துல்லியத்தில் திருப்தி அடைய முடியாது. 2019 டிசம்பர் 31,இன் அறிக்கைகள். மேலும் நாட்குறிப்பு அங்கீகரிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்புதல் பெறப்படவில்லை. மேலும், பல துறைகளில் நாட்குறிப்பு பதிவுகளின் பயன்பாடு கவனிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | | | |
| (02) | கணக்கீட்டுக் கொள்கை<br><br>முதலீடு செய்யப்பட்ட சொத்துக்களைக் கணக்கிலிடுகையில் அதிகாரசபையானது **99** ஆண்டுகள் அல்லது அதற்கு குறைவான அடிப்படையில் காணிகளையும் சொத்துக்களையும் வழங்கும் போது அச் சொத்துக்களை நிச்சயபூர்வமாக இனம் காணுதல், பெறுமதியிடுதல், கணக்கிலிடுதல் சம்பந்தமாக நிச்சயபூர்வமான கொள்கையினைக் கடைப்பிடிக்காதிருந்தது. முதலீட்டுச் சொத்துக்களுக்கென பதிவேடு ஒன்றும் பேணப்படவில்லை. இதன் காரணமாக, நிச்சயமாமனதொரு கொள்கையைக் கடைப்பிடிக்காது பல்வேறு அடிப்படைகளில் பெறுமதியை மேற்கொண்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த சொத்துக்கள் குத்தகைக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | 1.5.3 (அ) - 2018 | முதலீட்டுச் சொத்துக்களை முறைப்படி இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டும் நடவடிக்கை மேற்கொண்டு விபரமானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முதலீட்டுச் சொத்துக்கள் அடங்கலாக அதிகாரசபையின் சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காட்டப்படுவதற்கான நடைமுறை மேற்கொள்ளப்பட்டவாறுள்ளது. இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாகியதும் **99** ஆண்டுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளை நிச்சயித்து இனங்காணக்கூடியதாக இருக்கும். | சொத்துக்களை தனித்தனியாக அடையாளம் காண செயல்பாட்டில் இருப்பதாகக் கூறப்பட்ட முறை 2022 ஜனவரி 06, வரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன்படி, 2019 டிசம்பர் 31, இன் நிதிநிலை அறிக்கைகளில் ரூபா.96,706,779,657 மில்லியன் முதலீடு செய்யப்பட்ட சொத்தின் சரியான தன்மையை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. |
| (03) | கணக்கீட்டுக்குறைபாடுகள்<br><br>தற்சமயம் நாட்டில் அமுலில் இல்லாத | | அறவிடப்பட முடியாத சட்டபூர்வ அடிப்படை அற்ற மீதி சம்பந்தமாகத் தேவையான | தற்சமயம் நடைமுறையில் இல்லாத தேசிய பாதுகாப்பு வரியும் பண்டங்கள், | நிர்வாக ஆவணம் மூலம் வெளியேற்றத்திற்கான ஒப்புதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தேசிய பாதுகாப்பு வரி (NSL) மற்றும் பண்டங்கள், சேவைகள் வரி (GST) கடப்பாடானது அநேக ஆண்டுகளாக ரூபா 36 மில்லியன் அறவிடப்பட வேண்டிய வரிக் கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் தொகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது | 1.5.4 (ஆ) - 2018 | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவைகள் வரியும் அந்த வரிகள் முடிவுக்கு வந்த தினத்தில்<br><br>உள்ளவாறான கடன்பட்டோர் மீதிகளாகும். இவற்றை அறவிடுவது சாத்தியமற்றதால் பதிவழிப்புச் செய்வதற்கான முகாமைத்துவ பத்திரம் அங்கீகாரத்தின் பொருட்டு 2020.12.31 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட்டுள்ளது. |
| **(04)** | கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்<br><br>நிதிக்கூற்றுகக்ளில் காட்டப்பட்ட **13** விடயம் தொடர்பான கணக்கு மீதிகள் மற்றும் அவற்றுடனொத்த பட்டோலைகளில் காட்டப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா **675.5** மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, **08** அரச நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா **416.25** மில்லியன் மீதி அதிகாரசபையினது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அந்த | 1.5.5 - 2018 | அநேக ஆண்டுகளாக நிலவி வரும் ஆரம்ப மீதி வித்தியாசத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுகளில் தேவையான சீராக்கலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்குகளில் ஆரம்ப மீதிகளில் தொடர்ச்சியாக வித்தியாசம் நிலவி வருவதால், தற்சமயம் இவ் வித்தியாசத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. **2020.12.31** இல் உள்ளவாறாக கணக்குகளைத் தயாரிக்கும் போது குறித்த பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | 31.12.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில், 13 விடயம் தொடர்பான கணக்கு மீதிகள் நிதிநிலை அறிக்கைக்கும் அட்டவணைக்கும் இடையே உள்ள நிலுவைகள் ரூபா. 3,286,232,638<br><br>ஒரு வேறுபாடு காணப்பட்டது.<br><br>13 விடயம் தொடர்பான கணக்கு மீதிகள தொடர்பான இருப்பு ரூபா. 3,286,232,638 விரிவான துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களில் **02** நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களில் மாத்திரமே அதிகாரசபைக்கு ரூபா **61.9** மில்லியன் செலுத்த வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது. அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி அதிகாரசபை **02** அரச நிறுவனங்களுக்கு ரூபா **225.2** மில்லியன் மீதியைச் செலுத்த வேண்டியுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் காட்டியபோதும், அதற்கொப்பாக அந்த நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதி ரூபா **174.3** மில்லியன் வித்தியாசத்தைக் காட்டியது. எவ்வாறாயினும், இவ் வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான சீராக்கலை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | | | ல்லை. |
| **(05)**<br><br>(i) | ஒருங்கிணைத்தல்<br><br>ஒருங்கிணைத்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் நிர்வகிக்கப்படும் நான்கு நிறுவனங்களில் பேலியகொடை வெயார்ஹவுஸ் கூட்டுத்தொகுதி | 1.5.6 (அ) - 2018 | துணைக் கம்பனிகளுக்குரிய முதலீடுகள் அவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள், உரிமை மூலதனப் பொறுப்புகள், வருமானம், செலவினம் என்பன நிதிக்கூற்றுகளில் சீராக்கல் | கருத்துரை வழங்கப்படவில்லை. | பேலியகொட களஞ்சிய நிறுவனம் 2012 ஜூலை 31, அன்று கலைக்க முடிவு செய்தது. 2017 ஆம் ஆண்டு முதல், நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவி ல்லை, மேலும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கம்பனியால் **2017** தொடக்கம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. 2017 யூலை மாதத்தில் பெலியகொடை வெயஙார்ஹவுஸ் கூட்டுதொகுதியின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 500 மில்லியன் ஆகவிருந்தது. அம் முதலீட்டுப் பெறுமதி அவ்வாறே காட்டப்பட்டு 2017 ஆகஸ்ட் தொடக்கம் கம்பனியை அதிகாரசபை சுவீகரித்த போதும் சொத்துக்கள், பொறுப்புகள் ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான சீராக்கல் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்படவில் லை. | | செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப சமர்ப்பிக்கப்பட வேண்டும். | | நிறுவனத்தின் சொத்துக்கள் ஆகஸ்ட் 2017 முதல் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ள ன என்று கூறப்பட்டது. ஆனால் அதிகாரத்தின் கீழ் சொத்துக்கள் கணக்கு காட்டப்பட்டுள்ள ன என்பது உறுதி செய்யப்படவில்லை ல. |
| (ii) | நீதிமன்ற தீர்ப்பொன்றின்படி நகர அபிவிருத்தி சபைக்கு சொத்தாக வழங்கப்பட்ட ரூபா **642.5** மில்லியன் பெறுமதியான காணியும் கட்டிடங்களும் அவற்றினது பழுதுபார்த்தலுக்கென வழங்கப்பட்ட ரூபா **200** மில்லியனும் பொருட்டு வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியாகிய துணைக்கம்பனி நகர அபிவிருத்தி சபையிடமிருந்து பங்குகளுக்கு விண்ணப்பித்திருந்தது. எனினும் **2018** | 1.5.6 (ஆ) - 2018 | வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் தாய் நிறுவனம் என்ற ரீதியில் கம்பனியின் நடவடிக்கைகள் நீதிமன்றத் தீர்ப்பின்படியும் அமைச்சின் அங்கீகாரத்துடனும் செயற்படுத்தப்படுவத ற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | பங்கு வெளியீடு இதுவரை செய்யப்படவில்லை ல. முதலீட்டு பெறுமதியை 406.5 மில்லியன் ரூபாவால் குறைப்பதற்கான காரணங்கள் இதுவரை முன்வைக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டிசெம்பர் **31** வரை பங்குகள் வழங்கப்பட்டிராததுடன் ரூபா 406.5 மில்லியன் குறைவடைந்திருந்தது டன் அதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவுமில்லை. | | | | |
| **(06)**<br><br>(i) | **கணக்காய்விற்கான சான்றின்மை**<br><br>2018 டிசம்பர் 31, இன் மதிப்பு ரூபா.5,782 மில்லியன் பாராளுமன்றக் கூட்டுத் தொகுதிக்கு சொந்தமான 1167 ஏக்கர், முதலீடு செய்யப்பட்ட சொத்து மதிப்பு ரூபா. **91,781** தொடர்பாக, சொத்து கையகப்படுத்தல் விவரங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் உள்ளிட்ட விரிவான ஆவணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | 1.5.7 (அ) – 2018<br><br>1.5.7 (எ) – 2018 | முதலீட்டுச் சொத்து விபரம் ககணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முதலீட்டுச் சொத்துக்களை வெவ்வேறாக இனங்காண்பதற்கான வேலைத்திட்டம் தற்போது அமுலாக்கப்படுகின்றது. பாராளுமன்றக் கூட்டுத்தொகுதிக்கென சுவீகரிக்கப்பட்ட காணியில் வீதி அபிவிருத்தியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களும் மேற்கொண்டிருந்தன. வாவிகளையும் ஓடைகளையும் அபிவிருத்தி செய்தது இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகும். அவ்வாறே, இந்த **1167** ஏக்கர், **03** றூட், **36.9** பர்ச்சஸ் காணி கடுவெல, மஹரகம, ஸ்ரீஜயவர்த்தனபுர பிரதேச செயலகங்களை உள்ளடகியதென மேலும் குறிப்பிட விரும்புகிறோம். | பாராளுமன்ற வளாகத்திற்கு சொந்தமான 1167 ஏக்கர் காணிகளில் பாராளுமன்ற வளாகத்திற்கு சொந்தமான சுமார் 42 ஏக்கர் நிலம் மற்றும் சுமார் 18 ஏக்கர் விடுவிக்கப்பட்ட காணிகள் கண்டறியப்பட்டு தேவைக்கேற்ப கணக்கு காட்டப்படாமல் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட 374 ஏக்கர் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மற்றும் அதன் மதிப்பு 2019 டிசம்பர் 31, அன்று கணக்கீடு செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | ரூபா **90.8** மில்லியன் பெறுமதியான காணி தொடர்பாக காணிப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | 1.5.7 (ஆ) - 2018 | அதிகாரசபைக்குச் சொந்தமான காணி சம்பந்தமாக விரிவான பதிவேடு பேணப்பட வேண்டும். | அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் சம்பந்தமான விபரத்தைக் கணனி மயப்படுத்த் நடவடிக்கை 2020 செப்தெம்பர் இறுதியளவில் 1637 கோவைகளுக்கே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இக் காணித் தரவுக்கென கணனிமயப்படுத்தலை 2021 யூன் இறுதியளவில் பரிசீலித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கிறோம். | அதிகாரசபைக்கு சொந்தமான நிலங்களை கண்டறிந்து ஆய்வு செய்யும் வகையில் நில பதிவேடு தயாரிக்கப்படவில்லை. |
| (iii) | ரூபா. **28,817** மில்லியன் மதிப்புடையது நடைபெறும் வேபை் பெறுமதியில் சீராக்கல் செய்யப்பட்ட கடன்பட்டோர் கிரயம், ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏனைய சீராக்களது விபரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 1.5.7 (ஈ) – 2018 | அதிகாரசபைக்கு சொந்தமில்லாத செயற்திட்டங்கள் அதிகாரசபையில் நடைபெறும் வேலையாகக் காட்டப்படலாகாது. நடைபெறும் வேலை மீதி சரிவர சீராக்கல் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | நடைபெறல் வேலைக்கணக்கில் காட்டப்பட்ட இவ்வாறான செயற்திட்டங்கள் தொடர்பாக தேவையான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்த கால அட்டவணைப் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது.<br>தொடர்புடைய சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்குகளில் அவற்றைக் காட்டுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | 31 டிசம்பர் 2019 அன்று நிலுவையில் உள்ள நடைபெறல்பணிகள் ரூபா. 21,948 மில்லியன் மற்றும் அந்த மீதியில் ரூபா. 61 மில்லியன் பெறுமதியான 34 செயற்திட்டங்களும், ரூபா 228 மில்லியன் பெறுமதியான 39 செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. ரூபா112 மில்லியன் பெறுமதியான ஏனைய நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட 03 செயற்திட்டங்கள் முடிக்கப்படாத |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வேலையில் சேர்க்கப்பட்டது. |
| (iv) | ரூபா **539** மில்லியன் மதிப்புள்ள பிற்போடப்பட்ட வாடகைக் கொள்வனவு பொறுப்புகள சமநிலைக்கு செய்யப்பட்டது சீராக்கலைக் குறிக்கும் விபரம் கணக்காய்வு க்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 1.5.7 (உ) – 2018 | அதிகாரசபையின் முதலீட்டுச் சொத்துக்கள் சம்பந்தமாகவும் பிற்போடப்பட்ட வாடகைக் கொள்வனவுகளின் வாடகை சம்பந்தமாகவும் நிதிக்கூற்றுக்களில் விளக்கமளிக்கப்பட வேண்டும். நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் சரியாகப் பேணப்பட்டு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் மேற்கொள் வேண்டும். | இக் கணக்கின் வரவு மீதியான ரூபா **118,580,368** ஆனது வரிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள், விற்பனை செய்யப்பட்டிருந்தும் இதுவரை விற்பனைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத குத்தகைகள், கட்டுநிதியின் கீழ் பெறப்பட்ட தொகை, நெடுங்கால குத்தகையாகக் கணக்கிலிடப்பட்ட குத்தகைகள் மற்றும் குத்தகைகள் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட குத்தகைகள் என்பனவாகும்.<br><br>பிற்போடப்பட்ட வாடகைக் கொள்வனவு பட்டோலையில் மிகவும் பழமை வாய்ந்த குத்தகைகளை குறிக்கும் குத்தகை உடன்படிக்கைகள் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை. குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டிய ஆரம்ப திகதிகள<br><br>குறித்துக்கொள்ளப்பட்டுள்ளன. | 2019 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று 43,499 மில்லியன் ரூபா பெறப்பட்டது மற்றும் இதழ் உள்ளீடுகள் தொடர்பான ஆதார ஆவணங்களும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அவ்வாறாக பழைய ஆண்டுகளைக் குறிப்பிட்டதற்கான காரணம் அவற்றை இலகுவாக இனங்காண்பதற்காகவே ஆகும். 2020 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது திருத்தம் மேற்கொள்ளப்படும். | |
| (v) | விரிவான பட்டோலையும் காலப் பகுப்பாய்வும் கணக்காய்வுக்கு ரூபா.166.8 மில்லியன் விவரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 1.5.6 (ஊ) - 2018 | கணக்காய்வு மட்டுப்படுத்தப்படாதவாறு கணக்கீட்டு முறைமையில் உள்ள நலிவுகளைக் குறைப்பதற்கு முயல வேண்டும். எதிர்காலத் தேவையின் பொருட்டு தகவல்கள் நாளது வரையாக்கப்பட வேண்டும். | தற்போதுள்ள கணக்கீட்டு முறைமையில் முன்னைய கணக்கீட்டு முறைமையின் மீதியே ஆரம்ப மீதியாகக் காட்டப்பட்டுள்ளது. வீடமைப்புச் செயற்திட்டக் காலப் பகுப்பாய்வை தற்போது பெற முடியாதுள்ளது. தொடர்புடைய கணனி மென்பொருள் நிறுவனத்திற்கு இது தொடர்பாக அறவிக்கப்பட்டுள்ளது. **2020.12.31** இல் உள்ளவாறு காலப்பகுப்பாய்வை பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகாரசபையின் குறைந்த வருமான வீட்டுத் திட்டங்களின் (URPCC) கீழ், 2019 டிசம்பர் 31, இல், ரூபா. 249 மில்லியன், ஆனால் அட்டவணை கூட்டுத்தாபனம் அதற்கான வயது பகுப்பாய்வு மற்றும் விரிவான தகவல்களை வழங்கவில்லை, மேலும் கணக்கியல் மென்பொருள் சமநிலையின் சரியான தன்மையை சரிபார்க்க வசதிகளை வழங்கவில்லை. |
| **(07)**<br><br>(i) | பெறவேண்ய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள<br><br>கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்கமைய, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட | 1.6.1 (அ) - 2018 | செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகும் கடனைக் கட்டுப்பாடு செய்து துரித அறவீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் கொடுக்கல் வாங்கல்கள் | கருத்துரை வழங்கப்படவில்லை. | அந்த 24 கணக்குகள் தொடர்பாக 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் ரூபா 271.4 மில்லியன் கடனாளி மீதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடன்பட்டோரில், (17.1.26 - 17.2.6) கீழ் **24** கணக்கீட்டு மீதிகளது ரூபா **536** மில்லியன் கூட்டுத்தொகை **2013** ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படாது முன்கொண்டுவரப்பட்டவாறு இருப்பனவாகும். அக் கடன்பட்டோர் மீதியானது கொடுக்கல்வாங்களின்றி இருந்தன. அவ்வாறே, மீளாய்வாண்டு கடன்பட்டோரின் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அடிப்படை எதுவுமில்லாது ரூபா **918.3** மில்லியன் திரட்டு ஐயக்கடன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | தொடர்பாக முறையான கொள்கையினைத் தயாரித்து திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சேர்ந்து நின்ற வருமானத்தை அறவிடும் நடைமுறையானது தொடர்புடைய கணக்குகளில் உள்ள நிதியேற்பாட்டிற்கு ஏற்ப நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | இருந்தது, அது 05 வருடங்களுக்கும் மேலாக உள்ளது. அந்த நிலுவைகளில் இருந்து ரூபா 273.6 மில்லியன் பகுதியளவு கடன் ஒதுக்கீடும் எந்த ஒரு ஏற்றுக்கொள்ளக் கூடிய அடிப்படையும் இல்லாமல் செய்யப்பட்டது. |
| (ii) | மாதாந்த வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு அடிப்படையில் அதிகாரசபை சொத்துக்களை வழங்கும் போது அவ்வாடிக்கையாளரது சொத்துக்கள், மாதாந்த வருமானம், கொடுப்பனவு செய்யும் ஆற்றல் என்பன பகுப்பாய்வு செய்யப்படாதும் போதுமான பாதுகாப்புப் பிணை வைப்பு பெறப்படாதும் குத்தகைக்கு வழங்கப்பட்டமையால், தொடர்ச்சியாக ஒவ்வொரு | 1.6.1 (அ) - 2018 | வரி செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் சொத்துக்களை அதிகாரசபை சுவீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன்பட்டோரது அறவீடுகளை ஆய்வு செய்த கணக்காய்வு நிறுவனம் ஒன்றினது ஆலோசனைக்கமையவே இது **2015/2016** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது<br><br>2020 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் அறவீட்டிற்கான முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டுசதவீத மாற்றம் மேற்கொள்ளப்படும். | 2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், ரூபா. 560,470.446 வாடகை மற்றும் வரி பாக்கிகள் 6% முதல் 100% வரையிலான அரை காலக் கடன்களாக ஒதுக்கப்பட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்டிலும் குத்தகை நிலுவை / கடை வாடகை நிலுவை அதிகரித்திருந்தன. இதன் காரணமாக, ஓராண்டிற்கும் குறைவான பெற வேண்டிய மீதிகளின் பொருட்டு **35** முதல் 77 சதவீதமான அதிகரித்த சதவீதத்தை நட்டம் / காலக்கழிவு தொடர்பாக நிதியேற்பாடு செய்வதன் மூலம் கடனை அறவிடும் அதிகாரசபையின் வினைத்திறன் இன்மை தென்படுவதுடன் தொடர்ச்சியாக அதிகாரசபை நட்டக் கடனுக்குள்ளாகும் போக்கும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| **(08)** | கொடுப்பனவு செய்ய வேண்டியன<br><br>அபிவிருத்திச் செலவினமாகிய ரூபா **77,847,384** **04** கடனாளி நிலுவைகள், மாற்றம் எதுவுமில்லாது **06** ஆண்டுகளுக்கும் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறிருந்தது. அவ்வாறே, நடைமுறைப் பொறுப்பின் கிழ் ரூபா **7,255,110** பராமரிப்பு வைப்பாகக் காட்டப்பட்டிருந்தபோதும், அம்மீதியில் **5** ஆண்டுகளுக்கு மேலாக தீர்வு செய்யப்படாதிருந்த | 1.6.2 - 2018 | கொடுப்பனவு செய்ய வேண்டிய இம்மீதியில் பொறுப்பு இல்லாத மீதிகளைக் கண்டறிந்து அவற்றை வருமானத்திலிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாற்றம் எதுவுமின்றி **06** ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா **77,847,384** கடன்கொடுத்தோர் மீதியாயிருந்தது. | 2019 டிசம்பர் 31, நிலவரப்படி, ரூபா. 76 மில்லியன் கடனாளர் இருப்பு நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கும் மேலாக பராமரிப்பு வைப்புத் தொகையாகக் கூறப்பட்ட ரூபா. 7,063,500 நிலுவைத் தொகை 31 டிசம்பர் 2019 அன்று நிலுவையில் உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா **7,063,500** மீதியும் உள்ளடங்கியிருந்தது. | | | | |
| **(09)**<br><br>(i) | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை<br><br>1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியினது பிரிவுக்கமைய அதிகாரத்தால் நகரக் காணிப் பயன்பாடு தொடர்பாக அதிகாரசபை கொள்கை ஒன்றைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டுமாயினும் மீளாய்வாண்டு இறுதியிலும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது. | 1.7 (அ) - 2018 | அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்தரை வழங்கப்படவில்லை | நிலப் பயன்பாட்டுக் கொள்கை இன்னும் தயாரிக்கப்படவில்லை. |
| (ii) | 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 11அ பகுதியின் பிரிவின் 8(அ) பிரிவுக்கமைய பல்வேறு சந்தர்ப்பங்களில் வாகனங்களில் வருகை தரும் பொதுமக்களது வாகனங்களைத் தரித்து வைக்கும் நிலையமொன்றை உருவாக்குதலும் அவ்வப்போது அதன் | 1.7 (ஆ) – 2018 | அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | இன்னும் கவனம் செலுத்தவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வசதிகளை அதிகரிப்பதற்குமான தேவை அதிகாரசபையின் தலையீட்டில் நடைபெற வேண்டுமெனினும் அதிகாரசபை அது தொடர்பாக போதிய கவனம் செலுத்தாமையால் கொழும்பிலும் நெரிசல் மிக்க நகரங்களிலும் வீதிப்போக்குவரத்து அதிகரிக்கக் காரணம் ஏற்பட்டது. | | | | |
| (iii) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை படி சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவினது பரிந்துரை மற்றும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன இல்லாது நகர அபிவிருத்தி சபை பொறியியலாளர், வாஸ்து தொழில்நுட்பவியலாளர், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், நகர நிர்மாணவியலாளர்கள் ஆகிய தொழில் புரிவோருக்கு ரூபா **15,000** மாதாந்த தொழில்சார் படியாக 2014 யூலை **01** தொட்க்கம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டிற்கான தொழில்சார் | 1.7 (இ) - 2018 | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அதிகாரசபையில் பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் தெரில்சார் பணிபுரிபவர்களுக்கு மாதாரந்த படியாக ரூபா **15,000** வழங்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டபோதும் இதுவரை பெறப்படாதுள்ளது. | தற்போது முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் அனுமதியின்றி பணம் செலுத்திய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | படிக்கொடுப்பனவு விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | |
| (iv) | 2016 மார்ச் 09 ஆம் திகதிய 2016/05 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்பட்டுள்ள பதவியணிக் குறிப்பில் குறிப்பிடப்படாத பணிப்பாளர் மற்றும் பிரதிப் பிணப்பாளர் பந்திகள் என்பவற்றுக்கு இடையே கூறுகளது தலைவர் பதவியும் உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது அப் பதவிகளுக்கு **06** உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு **2** சம்பள ஏற்றங்களை வழங்கியும் தமது சொந்த வாகனங்களை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்துவதற்கு எரிபொருள் படியும் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட முழுத்தொகையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே, அந்த உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு | 1.7 (ஈ) - 2018 | சுற்றறிக்கைப் பிரகாரம் மாத்திரமே படியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான நடைமுறை முறையாக தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்குகையில் முறையான பதவி உயர்வு நடைமுறையிலிருந்து விலகியவாறு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | | | | |
| (v) | 2008 யூன் 26 ஆந் திகதிய 2018/14 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 எனும் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி தனியார் வாகனங்களை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்தி படியைப் பெறும் அதிகாரசபையின் **20** உத்தியோகத்தர்கள் அவ் வாகனங்களுக்கு அதிகாரசபை சாரதிகளைப் பயன்படுத்த முடியாது. எனினும், அவ்வாறாகப் பயன்படுத்தப்பட்ட சாரதிகளுக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக முன்னைய ஆண்டில் ரூபா **30,186,085** வும் 2018 இல் ரூபா **3,679,290** வும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 1.7 (ஓ) - 2018 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைஎடுக்க வேண்டும். | அதிகாரசபைக்குச் சொந்தமான **17** பழைய வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதால் அதிகாரசபையின் கடமைகளுக்கென **296/2017** ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரத்தின்படி தனியார் வாகனங்களை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, கடமையின் நிமித்தம் பல்வேறு தேவைகளுக்கு வெவ்வேறு பிரதேசங்களுக்குச் செல்ல பணிப்பாளர்களும் தொகுதித் தலைவர்களும் போக்குவரத்து செய்ய வேண்டி ஏற்பட்டது. தற்போது 28 வாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பணிப்பாளர்களுக்கும் உயர் பதவியினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. | 2019 ஆம் ஆண்டில், கொடுப்பனவுகளைப் பெறும் அதிகாரிகளின் சாரதிகளுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகள் ரூபா. 8,261,590 செலுத்தப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி வினைத்திறன் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படும் நடைமுறை அதிகாரசபையால் அறிமுகம் செய்யப்பட்டிராததால் பதவிகளுக்கான புதிய சம்பள வியூகத்தை உருவாக்கிய பின்னர் அதனை அமுல்படுத்துவதற்கு தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவினது அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், யோசிக்கப்பட்ட பதவியணியை உபயோகப்படுத் முன்கூட்டியே அங்கீகாரத்தைப் பெறாது அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. இச் சுற்றிக்கையின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்படும் போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென | 1.7 (ஊ) - 2018 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பதவி உயர்வு உத்தியோகத்தர்களுக்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் அமைய வேண்டும். | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் இந்த அதிகாரசபையின் பதவியணித்திட்டம் **2020.01.03** ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் **1670** பதவியணியினருக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, அதிகாரசபையின் 2020 – 2024 இற்கான தாபன ரீதியான திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் 1831 இன் திருத்தப்பட்ட பணியாளர் திட்டம் மீண்டும் **2020.07.21** ஆந் திகதி அங்கீகாரம் கோரப்பட்டது. **2019.09.03** ஆந் திகதிய பணிப்பாளர் சபையினது **367/2019** ஆம் இலக்க பத்திரத்தின் மூலம் பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கையை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அமைப்புக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பதவி உயர்வின் போது புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை | அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான நடைமுறைகள் முகாமை சேவைகள் திணைக்களத்தால் முறையாக தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டபோதும் அவர்களுக்கு அதனை அறிவித்திருக்கவில்லை. | | | மேற்கொள்ளப்படும். | |
| (vii) | 2016 சனவரி 08 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றிக்கை படி அவசர சேவைகளுக்கு வெளிநபர்களின் சேவையைப் பெறமுடியும். அதன் போது நிறுவனத்தில் பொருத்தமான நபர் இல்லாதிருப்பது நிச்சயப்படுத்தப்பட்டு அமைச்சினது செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்துடன் **2** மாதங்களுக்கு மாத்திம் வெளிநபர்களது சேவையைப் பெற முடியும். எவ்வாறாயினும், அச் சுற்றறிக்கைக்கு முற்றிலும் முரணாக **11** மதியுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம், படி மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு விரிவாகச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 1.7 (எ) - 2018 | மதியுரையாளர்களின் கடமைகளை சிச்சயமாக இனங்கண்டதன் பின்னர் அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி மாத்திரமே மதியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது தீர்மானத்தின்படியும் அச்சமயத்தில் இருந்த வரிசை அமைச்சினது செயலாளரது பணிப்புரையின் படியும் ஒவ்வொரு விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு **5** மதியுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் நான்கு பேரது சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சுற்றிக்கைப் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும். | 2019 ஆம் ஆண்டில், 03 ஆலோசகர்கள் பணியமர்த்தப்பட்டனர் மற்றும் 2022 மார்ச் 25, நிலவரப்படி, ஒரு ஆலோசகரின் சேவைகள் அதிகாரசபையின் சட்ட ஆலோசகராகப் பணியமர்த்தப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (viii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை: 4.2.6 ஆம் பந்தியின் படி அதிகாரசபையின் காலாண்டு முன்னேற்ற அறிக்கை குறித்த காலாண்டு முடிவடைந்த **30** நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 1.7 (ஏ) (i) - 2018 | காலாண்டு முன்னேற்ற அறிக்கையைக் குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலாண்டு முன்னேற்ற அறிக்கையை பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும், எதிர்காலத்தில் குறித்த காலப்பகுதிக்குள் அந்த அறிக்கையை பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றோம். | காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், அது தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் 2019 இறுதிக்குள் பொது வணிகத் துறையிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ix) | துணைக்கம்பனியாக அதிகாரசபையால் **2014** நவம்பர் **21** ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட Urban Investments and Real State தனியார் கம்பனி Urban Investment & Hotal Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி, Waters Edge Hotel Development கம்பனி என்பவற்றிற்கு 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை 8.2.3 ஆம் பிரிவுக்கு அமைய அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | 1.7 (ஏ) (ii) - 2018 | முதலீடுகள் தொடர்பில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமையவும் கம்பனி அதிகாரச் சட்டத்திற்கமையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்கவும் அச்சமயம் நிலவிய அபிவிருத்தி நிர்ணயங்களுக்கும் ஏற்ப பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி துணைக்கம்பனிகள் உருவாக்கப்பட்டன. எவ்வாறாயினும் அத்துணைக்கம்பனிகளின் செயற்பாடு தொடர்பாக புதிய பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். | 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அதிகார சபையினால் நிறுவப்பட்ட மேற்படி 04 நிறுவனங்கள் தொடர்பான அமைச்சரவை தீர்மானங்கள் 2022 மார்ச் 25 ஆம் திகதி வரை கணக்காய்வுக்கு வழங்கப்படவில்லை. |
| (x) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் | 1.7 (ஏ) (iii) - 2018 | தாபன விதிக்கோவைக்கு புறம்பாக நடவடிக்கை | தற்சமயம் தாபனவிதிக்கோவை கடைப்பிடிக்கப்படுகின்றது. அதற்குப் | நிறுவனங்கள் சட்டத்தில் இருந்து விலகும் சந்தர்ப்பங்களில், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுற்றிக்கை 9.14 ஆம் பிரிவுக்கு அமைய அதிகாரசபை மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விதிமுறைகளைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடின், மனிதவள முகாமைத்துவத்திற்காக தாபனவிதிக்கோவையில் உள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை. | | மேற்கொள்ளும் போது பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | புறம்பான சந்தர்ப்பங்களில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | பொது நிர்வாக அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெறாமல் முகாமை சபையின் ஒப்புதலுடன் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xi) | நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரது **1997** சனவரி **24** ஆந் திகதிய **116** ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் **2003** யூன் **02** ஆந் திகதிய PED/**12** ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் **9.4** ஆம் பந்திக்கு அமைய பொது முயற்சிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் அமைச்சில் அல்லது வேறு அரச நிறுவனங்களில் சேவைக்கு விடுவிக்கப்படலாகாது. எனினும் அதிகாரசபையின் **19** ஊழியர்கள் சம்பள | 1.7 (ஐ) - 2018 | பொது முயற்சிகளில் ஈடுபட்டள்ள உத்தியோகத்தர் அமைச்சில் அல்லது பொது அரச நிறுவனங்களில் சேவைக்கு விடுவிக்கப்படலானது சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அதிகாரசபயில் துணைக்கம்பனியாகிய நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு பதவியணிக்கான திட்டம் எதுவுமில்லை. ஆகவே, அங்கு சேவையின் அவசியம் காரணமாக இந்த அதிகாரசபையின் **08** உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டனர். மேலும், அக் கம்பனியின் **79** உத்தியோகத்தர்கள் அச்சமயம் அதிகாரசபையின் திட்டத் தயாரிப்புக்காக அதிகாரசபையில் இருந்தனர். | சுற்றறிக்கைகளுக்கு மாறாக, இதுவரை அந்த 10 அதிகாரிகளும் 05 அதிகாரிகளும் வேறு அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீளளிப்பு அடிப்படையில் பிற அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே, நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு **8** உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். அக் கம்பனி **79** உத்தியோகத்தர்களை அதிகாரசபையில் இணைத்திருந்தனர். ஊதியக் கொடுப்பனவு விபரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | |
| (xii) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு அதிவிசேட வர்த்தமானியின் ஏ ஆம் பட்டோலையின் 7 ஆம் பந்திக்கு அமைய பல ஆண்டுகளுக்கு முன்பு அதிகாரசபை கொழும்பு மாநகர எல்லைக்குள் மற்றும் வாவிகளை அண்மித்த இடங்களிலும் பரிசீலனை செய்து **1,868** அத்துமீறிய குடியேற்றங்களைக் கண்டறிந்தபோதும், வர்த்தமானியின் பிரகாரம் அவற்றை சட்டபூர்வமாக்க முடியுமாயின் பிற்போட்ட அங்கீகாரக்கட்டணம் அல்லது பாவனை | 1.7 (ஐ) - 2018 | வாவியைச்சூழவுள்ள இடங்களையும் சுற்றாடல் மாசுபடுதலையும் குறைப்பதற்கு சட்டவிதிகளுக்கு ஏற்ப துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆலோசனை சட்டபூர்வமாக அமைய வேண்டுமென அதிகாரசபை பணிப்பாளர் (சட்டவியல்) தெரிவித்தால், ஆலோசனைக் குழுவை வர்த்மானியில் வெளியிட நடவடிக்கை எடுத்து மாண்புமிகு அமைச்சின் அங்கீகாரத்திற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டு மாற்றத்திற்கான கட்டணங்கள் முறையாக கண்காணிக்கப்பட்டு வசூலிக்கப்படாமல் இருப்பதுடன், அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாற்றக் கட்டணத்தை அறவிட்டு அவற்றை சட்டபூர்வமானதாக்க அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| (xiii) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க சனாதிபதி அலுவலகச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்திக்கு அமைய நகர அபிவிருத்திக்காக அதிகாரசபை வழங்கிய பெருமளவு காணிகள் சுவீகரிக்கப்பட்ட தேவைக்கல்லாது தனியார் நிறுவனங்களுக்கு நெடுங்காலக்குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. சில பெறுமதி மிக்க காணிகள் சொகுசு மாடித்திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | 1.7 (ஓ) - 2018 | சுவீகரிப்பு நிச்சயிக்கப்பட்டு இல்லாதிருப்பின், திருத்தம் செய்யப்பட்ட நோக்கமும் இருக்க முடியாது. ஆகவே, சனாதிபதி அலுவலகச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகள் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சுவீகரிப்பு நிச்சயிக்கப்பட்டிராத சந்தர்ப்பங்களில் சுவீகரிப்பின் நோக்கம் திருத்தம் செய்யப்பட்டு தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணிகள் விடுவிக்கப்படும். | இப்போதும் கூட, ஜனாதிபதியின் அலுவலகங்கள் சுற்றறிக்கைக்கு மாறாக ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன அல்லது பல ஆண்டுகளுக்குப் பிறகு கைவிடப்பட்டன. ஒரு சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மில்லவா எஸ்டேட் ஆயிரம் ஏக்கர் கையகப்படுத்தல்.<br><br>டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் 0.712 ஹெக்டேர் நிலம்<br><br>பெட்டாலிங் ஜெயாவின் ஓல்கெட் மாவத்தையில் சுதேஷியா பிரிண்டர்ஸுக்குச் சொந்தமான 125 பேர்ச் காணி.<br><br>காலி டடெல்லா நிலம் |
| **(10)** | சிக்கனமற்ற கொடுக்கல் | | அதிகாரசபையின் முதலீட்டுக்கு பங்குலாபம் பெற | முதலீட்டுக்கு நிகரான பங்கிலாபத்தைக் | இது வரை ஈவுத்தொகை கிடைக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | வாங்கல்கள் அதிகாரசபை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்த ரூபா **500,000** மற்றும் கொழும்பு காணி மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் முதலீடு செய்த ரூபா **36,309,841** என்பவற்றிற்கு மீளாய்வாண்டு இறுதி வரை பங்குலாபம் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | 3.1 (ஈ) - 2018 | முடியாமையை முறையாகக் கவனிக்க வேண்டும். | கொடுப்பனவு செய்யாத நிறுவனங்களை அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. | . |
| (ii) | அதிகாரசபைக்குச் சொந்தமான பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதியில் ஒரு ஏக்கர், **23.1** பர்ச்சஸ் விசாலமான காணியில் மாடி வீடும் கடையும் நிர்மாணிக்கப்படுவதற்காக **1993** ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபை ரூபா **92** மில்லியனையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரூபா **120** மில்லியனையும் செலவிட்டிருந்தன. இச் சொத்தை முகாமைத்துவமிடுவதற்கு வரையறுக்கப்பட்ட ஓசன்வியூ டெவலப்மன்ட் பிரத்தியேக கம்பனி எனும் பெயரில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தேசிய வீடமைப்பு | 3.1 (இ) - 2018 | அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளையும் கட்டிடங்களையும் ஒப்படைத்தல் மற்றும் முதலீடு செய்தல் என்பன தொடர்பாக குறித்த சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஏற்ப அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படாதவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். கம்பனியின் நிர்வாகத்தில் உள்ள நலிவைக் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014 ஆம் ஆண்டில் பங்கிலாபமாக ரூபா 1,213,003 அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறாக பங்கிலாபம் வழங்காதிருக்கும் நிறுவனங்களை அதிகாரசபையின் முகாமைத்துவம் எதிர்காலத்தில் கவனித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். | 2019 ஆம் ஆண்டில், இந்த நிறுவனத்தைத் தவிர, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு நில மற்றும் அபிவிருத்தி நிறுவனம் போன்ற நிறுவனங்களிடமிருந்து ஈவுத்தொகை வழங்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபையும் கூட்டுமுயற்சி ஒன்றை ஆரம்பித்திருந்தன. இக் கம்பனியானது கட்டிடங்களை வாடகைக்கு வழங்கி வருமானத்தைச் சம்பாதித்திருந்தபோதும், 1993 தொடக்கம் 2018 இறுதி வரை அதிகாரசபை பங்கிலாபம் எதனையும் பெற்றிருக்கவில்லை. | | | | |
| **(11)**<br><br>**(i)** | இனங்காணப்பட்ட இழப்புகள்<br><br>அதிகாரசபைக்குச் சொந்தமான கோட்டை டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையின் எல்லையில் அமைந்துள்ள **2** ஏக்கர் **2** றூட், **21.4** பர்ச்சஸ் காணியை அபிவிருத்தி செய்வதற்கு நெடுங்கால அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு அதனை **99** ஆண்டுக் குத்தகைக்கு வழங்கும் போது அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது முறையான அங்கீகாரமின்றி, அரசாங்க மதிப்பீட்டு விலையிலும் ரூபா **330** மில்லியன் குறைவாக குத்தகைக்கு வழங்கப்பட்டமையால் இக் காணியை | 3.2 (அ) - 2018 | அதிகார சபையின் காணியை குத்தகைக்கு வழங்கும் போது குறித்த மதிப்பீட்டுப் பெறுமதியிலான வரி அறவிடப்பட வேண்டும். | அமைச்சின் செயலாளரது பணிப்புரைக்கமைய இத் தொகையை மீண்டும் குறித்த குத்தகையாளரிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | இது குறித்து, சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல், சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கியதன் மூலம் அதிகாரசபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 330 மில்லியனாகும். எனினும், இது தொடர்பாக மீளாய்வாண்டு முடிவு வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | | | |
| (ii) | திரசரபுரவர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கென முகத்துவாரம் அலுத்மாவத்தையில் காணித்துண்டுகளுக்கு உரியவர்களுக்கு ரூபா **72,257,674** இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. அதிகாரசபையின் வினைத்திறனின்மை காரணமாக இழப்பீடு தாமதமாகி ரூபா **4,034,154** வட்டியும் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது. | 3.2 (ஆ) - 2018 | இழப்பீட்டைக் குறித்த காலத்திற்குள் செலுத்தக்கூடிய முறைமையினை அறிமுகம் செய்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரையறுக்கப்பட்ட ரீல் கம்பனியின் தேவைக்காக இக்காணி சுவீகரிக்கப்பட்டது. அதன்போது, காணிச் சுவீகரிப்புக்கு ஆரம்ப கட்டத்தில் வரையப்பட்ட ரீல் கம்பனியால் திறைசேரியிடமிருந்து காணி சுவீகரிப்புக்கு நிதியேற்பாடு பெறப்பட்டு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், பின்னர் வரையறுக்கப்பட்ட ரீல் கம்பனி செயலற்றுப் போனதால் திறைசேரியிடமிருந்து நிதியேற்பாடு கிடைக்கப்பெறவில்லை. அதன் காரணமாக, கம்பனியின் இழப்பீட்டையும் வட்டியையும் அதிகாரசபை செலுத்த வேண்டியேற்பட்டது. | தற்போது, உரிய காலத்தில் இழப்பீடு வழங்குவதற்கான கட்டுப்பாட்டு முறைகள் எதுவும் அறிமுகப்படுத்தப் படவில்லை, மேலும் நிலத் தேவைகளுக்காக நிலத்தை கையகப்படுத்த மற்ற அரசு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளாததாலும், அந்த முகவர்களால் இழப்பீடு திரும்பப் பெறப்படாததாலும், வெளி தரப்பினருக்கு இழப்பீடு வழங்குவதில் தாமதம் மற்றும் எதிர்காலத்தில் அதிகாரசபையின் தேவையற்ற செலவு ஆகியவையும் அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டுள்<br><br>கணபதி வித்தியாலயத்திற்கு காணி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | சுவீகரிப்பு. |
| **(12)**<br><br><br>(i) | முகாமைத்துவ வினைத்திறனின்மை<br><br>நகர்ப்புற புனர்ஜீவன செயற்திட்டத்தின் நிதி மதிப்பீடு மற்றும் அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களின்படி முயற்சி ஒன்றிற்கென வழங்கப்பட்டுள்ள காணியை முதலீடுச் செயற்திட்டத்திற்கென ப் பயன்படுத்தி வருமானம் ஈட்டவேண்டுமாயினும், அதிகாரசபை விடுவித்திருந்த அநேக காணிகள் அவ்வாறு வருமானத்தை ஈட்டுவதற்கான நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படாது இருந்தன. வருமானத்தை சம்பாதிப்பதற்கான நோக்கத்துடன் மீளாய்வாண்டின் இறுதிவரை முயற்சிகளுக்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதுமிருந்த து. | 3.3 (அ) - 2018 | செயற்திட்ட ஆரம்பத்தில் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டமிடப்பட வேண்டும். | அதிகாரசபை சுவீகரித்திருந்த காணிகளில் நெடுங்கால குத்தகையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த து. அவ்வாறே அவ்வாறான நெடுஞ்கால குத்தகையின் மூலம் வழங்கப்பட முடியாதுபோன காணிகள் குறுகிய கால மற்றும் மத்திய கால குத்தகையின் அடிப்படையிலானவற் றிற்கு வழங்கப்பட்டிருந்ததா ல் குறிப்பிடத்தக்க வருமானத்தை இந்த அதிகாரசபை பெறுவதுடன் அதற்குப் புறம்பாக காணிகளை வழங்குவதற்கு அபிவிருத்தியாளர்க ளை கண்டுபிடிப்பதற்கு செயற்திட்ட மேம்பாட்டு பிர்வால் முன்மொழிதல்கள் கோரப்பட்டபோதும் சாதகமான தன்மை இல்லாமையால் அக்காணிகளில் மாடி வீடுகள் நகர்புற புனர்ஜீவன செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்படவிரு ந்தன. | அக்டோபர் 20, 2020 நிலவரப்படி, நகர மறுமலர்ச்சித் திட்டத்தால் விடுவிக்கப்பட்ட நிலம் முதலீட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வில்லை, மேலும் 112 ஏக்கரில், 29 ஏக்கர் கலப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அதிகாரத்தால் வழங்கப்பட்டுள்ள து, 32 ஏக்கர் மீள்குடியேற்றத்தி ற்கு வழங்கப்பட்டுள்ள து. 50 ஏக்கர் அரசு நிறுவனங்களுக் கு வழங்க திட்டமிடப்பட்டுள் ளது இவ்வாறு கையகப்படுத்தப் பட்ட நிலங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சரி செய்யப்படவில்லை ல. |
| (ii) | கொழும்பு கோட்டை டிரான்ஸ்வேர்க் சதுக்கக் காணி சந்தைப் பெறுமதியிலும் குறைவாக ரூபா **4,999,706,950** க்கு | 3.3 (ஆ) - 2018 | வாடகைக் கொள்வனவுப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி என்பவற்றுக்கு இடையேயான வித்தியாசம் | அதிகாரசபையின் காணிகளைக் குத்தகைக்கு வழங்கும் போது அறவிடப்படக்கூடிய வரியானது காலப்பகுதிக | தவணை செலுத்தி வீட்டு அலகுகளை விற்றால், அதற்கான கட்டணம் காண்டோமினிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்ளூரில் ஸ்தாபிக்கப்பட்ட வெளிநாட்டு தனியார் கம்பனி ஒன்றிற்கு நெடுங்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வித்தியாசத்திற்குள்ளான ரூபா **1,250,400,000** மீண்டும் அறவிடப்பட வேண்டுமென கருதப்பட்டபோதும் அத்தொகை அறவிடப்படவில்லை. | | அரசாங்கத்திற்கு இழப்பாக அமையாதவாறு அதிகாரசபையின் கொள்கைக்கு அமைய அறவீடு செய்ய வேண்டும். | கேற்பத் தீர்மானிக்கப்படும். கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டவாறு கோட்டை டிரான்ஸ்வேர்க் காணியின் **99** ஆண்டுகள் குத்தகைப் பணமாகத் தீர்மானிக்கப்பட்ட தொகை முதலீட்டுக் கம்பனியால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. காணியின் சந்தைப் பெறுமதிக்கும் வரித் தொகைக்குமிடையே உள்ள வித்தியாசமானது, அபிவிருத்திச் செயற்திட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளை விற்பனை செய்யும் காணியைக் கணித்துப் பெறும் விகிதத்தில் ஆண்டுக் குத்தகைப் பெறுமதி மற்றும் சந்தையில் நிலவும் பெறுமதி என்பவற்றுக்கிடையே ஏற்படும் விகிதத்தில் வீட்டு விற்பனையின் போது அறவிடப்படும். கலவையுடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது காணிகளை விற்பனை செய்வதற்கான நடைமுறை அதுவாகும். சுற்றறிக்கைக்குப் புறம்பாக மொத்த தொகையையும் அறவிடுவதற்கு அதிகாரசபையால் இயலாதுள்ளது. | ம் நிர்வாக அதிகாரியிடம் இருக்கும் மற்றும் நிலத்தின் மதிப்புடன் தொடர்புடையது அல்ல. எனவே, நிறுவனத்திடம் இருந்து நஷ்டத்தை வசூலித்து, நிலத்தை குத்தகைக்கு எடுத்து, நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்படும் வகையில், நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br><br>2013 உடன்படிக்கையின்படி, அபிவிருத்தி வீட்டுத்திட்டத்தை 5 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும், இதுவரை கட்டுமானம் முடிக்கப்படவில்லை, மேலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பணியிடத்தை ஆணையம் மேற்பார்வையிட வேண்டும், ஆனால் அத்தகைய மேற்பார்வை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | செய்யப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. |
| (iii) | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அங்கீகரிக்கப்பட்டிராத **64** பதவிகளுக்கு அதிகாரசபையின் கீழ் உள்ள உப கம்பனி ஒன்றினூடாக ஊழியர்களை ஆட்சேர்த்து பின்னர் அந்த உத்தியோகத்தர்களைப் பணியிலமர்த்தி சம்பளமும் படியுமாக ரூபா **5,175,502** கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 3.3 (இ) - 2018 | அதிகாரசபைக்குத் தேவையான பதவியணியை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பெற வேண்டும். | அச்சமயம் நிலவிய சேவைக்கான அவசியத்தைக் கருத்திற்கொண்டு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் அதிகாரசபையின் வெப் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு அவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்கென விண்ணப்பித்தோரில் பொரும்பாலானோர் அதிகாரசபையின் உப கம்பனியில ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகிறார்கள். **2020.01.03** ஆந்திகதியன்று முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்கியது. | நிர்வாக சேவைகளின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரசபையின் தேவையான பணியாளர்கள் பொது அறிவிப்புகள் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும் என்றாலும், அவர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள துணை நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர், பின்னர் அவர்கள் நிரந்தர சேவைக்காக அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். 2019 ஆம் ஆண்டு. |
| (iv) | தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயக அலுவலகங்களின் சகல உத்தியோகத்தர்களுக்கும் வேறு பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்குமாக **108** பேருக்கு கடந்த பல ஆண்டுகளாக | 3.3 (ஊ) - 2018 | இரகசியப்படிக் கொடுப்பனவு முறையான அங்கீகாரத்துடன் மாத்திரமே வழங்கப்பட வேண்டும். | 03.12.2012 திகதியிட்ட கணக்காய்வு முகாமைக் குழு மூலம் தலைவரதும் பணிப்பாளர் நாயகத்தினதும் பதவியணியினருக்கு சம்பளத்தில் **1/3** பங்கை இரகசிய படியாக வழங்குமாறு பரிந்துரை | 2019 ஆம் ஆண்டிலும், திறைசேரியின் முன் அனுமதியின்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அடிப்படை சம்பளத்தில் 1/3க்கு சமமான சிறப்பு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி அவர்களது சம்பளத்தில் **1/3** விசேட படியாக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ்வாறு வழங்கப்பட்ட மொத்த தொகை ரூபா 12,451,408 ஆகும். அவ்வாறே, விசேட படியை வழங்குவதற்காக உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டமை மற்றும் கொடுப்பனவின் அடிப்படை என்பன கணக்காய்வில் விளக்கமளிக்கப்படாதிருந்தது. | | | செய்யப்பட்டிருந்தது. **2013.04.17** இல் (பணிப்பாளர் சபை பத்திரம் இல. 107/2013) அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. இதற்கு திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கொடுப்பனவு வழங்கப்பட்டது. |
| (v) | அதிகாரசபைக்குச் சொந்தமான புறக்கோட்டை சார்மஸ் தானியக் களஞ்சியக் காணியை குத்தகைக்கு வழங்கும் போது / கூறுவிலைகளைக் கோரும் போது சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகளுக்கு முரணாக சட்டபூர்வமற்றவாறு குத்தகையாளரால் மேற்கொள்ளப்படும் இடைக்காலக் குத்தகை மற்றும் நிரந்தர கடைகளுக்கு சுழற்சி முறையில் அதிகாரசபையால் அங்கீகாரம் வழங்கப்படுவதால் கம்பனியை நெடுங்காலக் குத்தகைக்கு | 3.3 (உ) - 2018 | காணியைக் குத்தகைக்கு வழங்கும் போது வெளிப்படையான தன்மை நிலவ வேண்டும். வரி நிபரந்தனைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை ஆராய வேண்டும். | காணியில் இதுவரை வேறெவ்வித வியாபரமும் நடைபெறுவதில்லை. வாகனத்தரிப்பிடம் ஒன்று இயங்குகின்றது. அதற்கமைய, குறித்த காணியை நெடுங்காலக் குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக சட்டபூர்வக் கடப்பாடுகளும் ஏற்படவில்லை. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்குவதில் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறே, குத்தகை வழங்கப்பட்டதன் பின்னர் நிபந்தனைகள் மாற்றம் செய்யப்படுவதால் இக்காணியை கூடிய கூறுவிலைக்கு வழங்கும் வாய்ப்பை அதிகாரசபை இழந்திருந்தது. | | | | |
| **(13)** | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாது வாவியை எதிர்நோக்கியவாறு 3118 சதுர மீட்டரில் ஏறக்குறைய 32 அறைகளை உள்ளடக்கிய விசாலமான யாழ்ப்பாண வாடிவீட்டை நிர்மாணிப்பதற்கான தேபியன் தடுப்புச்சுவர் மற்றும் கட்டிடத்தின் அடித்தளத்தை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 77,488,989 செலவிடப்பட்டு, பின்னர் வேலை இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக வேறு பயனுள்ளவற்றிற்கு அத்தொகையை செலவிடக்கூடிய வாய்ப்பு இழப்புக்குள்ளாகியிரு | 3.8 (ஆ) - 2018 | செயற்திட்டத்தை ஆரம்பிக்கையில் சாத்தியக்கூறு ஆய்வின் மூலம் பயனைச் சரிவர இனங்கண்டு அதனை ஆரம்பிக்க வேண்டும். | 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதமளவில் புதிய அரசாங்கம் ஆட்சிக்குவந்ததன் பின்னர் நியமிக்கப்பட்ட புதிய முகாமைத்துவம் செயற்திட்டத்திற்கு பணம் வழங்குவதை நிறுத்தி இருந்தது. 2020 வரை அவ்வேலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.<br><br>தற்போதைய உயர் முகாமைத்துவம் இதில் விசேட கவனம் செலுத்தி கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. தனியார் துறையினரின் நிதிப்பங்களிப்புடன் அரசாங்கத்தின் பிரத்தியேக முதலீடாக (PPP Model) எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகி | இப்போதும், மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை, மேலும் மேற்படி நிலம் மற்றும் கட்டுமானம் ரூபா.77,488,989 செலவில், ரூபா. 2022 ஆம் ஆண்டில் 99 வருட குத்தகை அடிப்படையில் ரூபா 997 மில்லியன் குத்தகைக்கு வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ந்தது. மேலும் வாடிவீட்டின் கொங்கிரீட் தூண்களை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்திய இரும்புக்கம்பி துருப்பிடித்தவாறிருந்த தால் அச் செலவினம் பயனற்றதாக அவதானிக்கப்பட்டது. | | | ன்றன. | |
| **(14)**<br><br>**(i)** | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள்<br><br>காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 812.63 ஏக்கர் (320 ஹெக்டயர்) மில்லேவ தோட்டம் ஹொரணை கைத்தொழிலகத்தை ஸ்தாபிக்கும் நோக்குடன் சுவீகரிக்கப்படுவதற்கு அமைச்சரவை அதிகாசசபைக்கு 2016 டிசெம்பர் 21 ஆந் திகதி அதிகாரம் வழங்கியிருந்தது. அதற்கமைய, சாத்தியக்கூறு ஆய்வு எதுவுமில்லாதும் இறப்பர் உற்பத்தி மூலம் பெறப்படும் பங்களிப்பைக் கருதாமலும் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் குறித்த காணி பொறுப்பேறகப்பட்டிரு ந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியிலும் தைத்தொழில்பேட்டை திட்டமிடப்பட்டோ | 3.6 (அ) - 2018 | காணியைச் செயற்திட்டங்களுக் கு சுவீகரிக்கும் போது அதனைக் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தி தேசிய பொருளாதார மற்றும் சமுதாய தாக்கம் குறையும் விதத்தில் நடக்க வேண்டும்.<br><br>சுற்றறிக்கையை உத்தியோகத்தர்கள் தவறாகப் புரிந்து கொள்ளாது திறைசேரியின் ஆலோசனைப்படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களி ன் மேலதிக வேலைகளுக்கு சம்பளத்தில் 1/3 பங்கை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கமைய வழங்கப்படவுள்ளது. இதற்கான பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. 1/3 க்கான அங்கீகாரம் பெறப்படும் வரை அதில் ½ பங்கு மாத்திரம் வழங்கப்பட்டது. இக் கொடுப்பனவும் 2020 பெப்ரவரி முதல் இடைநிறுத்தப்படும். | ஹொரணை கைத்தொழில் பேட்டை அமைப்பதற்காக கையகப்படுத்தப் பட்ட 320 ஹெக்டேர் மில்லவ தோட்டம் தற்போது இலங்கை இராணுவ சிறைச்சாலைகள் திணைக்களம், கலாசார திணைக்களம், ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை போன்றவற்றுக்கு கைத்தொழில் நிறுவும் நோக்கமின்றி பல்வேறு நிறுவனங்களின் காணி தேவைகளுக்கா க வழங்கப்படுவதா க அவதானிப்பு. எஸ்டேட் அது இருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடிப்படை வசதிகள் திட்டமிடப்பட்டோ அல்லது வேறு அபிவிருத்தி நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை. அவ்வாறே, இந்த அபிவிருத்தி நடவடிக்கையால் வீடுகளையும் தொழிலையும் இழக்கும் தோட்டத்தொழிலாளர்களது வாழ்வாதார நடவடிக்கைகளும் அதிகாரசபையால் கவனத்திற் கொள்ளப்படவில்லை. தற்சமயம் இறப்பர் பால் வெட்டுதல் மந்தகதியில் நடைபெறுவதுடன் வருமானமானது சுவீகரிப்புக்கு முன்பிருந்த நிலையை விடக்குறைவாகவும் இருந்தது. | | | | |
| (ii) | அதிகாரசபையால் நடாத்தப்படும் வாடகை மற்றும் வாடகைக் கொள்வனவு அடிப்படையிலான விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய சுப்பர் வர்த்தகக் கூட்டுத்தொகுதி, கொழும்பு கோல்ட் சென்டர், மிதக்கும் வர்த்தகக் கூட்டுத்தொகுதி ஆகிய செயற்திட்டஙகளால் திட்ட நலிவு காரணமாகவும் அங்கு போதிய வாடிக்கையாளர்கள் வராதிருப்பதும் | 3.6 (ஆ) - 2018 | பயனற்ற இச் சொத்துக்களை வினைத்திறனுடனும் பயன்மிக்கதாகவும் உபயோகிப்பதற்கு முறையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | மேலே குறிப்பிட்டுள்ள கொழும்பு சென்ட்ரல் சுப்பர் மால், கொழும்பு கோல்ட் சென்டர், /ப்ளோட்டிங் மால் மற்றும் பொரளை பேமென்ட் பார்க் மால் ஆகியவை போதிய வாடிக்கையாளர்கள் இல்லாமை, திட்டமிடல் குறைபாடுகள் போன்ற பல்வேறு காரணங்களால் தோல்வியடைந்துள்ளதை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காரணமாக அவை வெற்றி அளிப்பனவாக அமையவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளிவில் அநேக கடைகள் மூடப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்தை மீண்டும் சக்திமிக்கதாக்கி அக் கூட்டுத்தொகுதிக்கு விரிவான பிரசாரத்தை மேற்கொள்வதற்குப் போதுமான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை. | | | | அவதானிக்க முடிந்தது. ஆனால் 2020ஆம் ஆண்டில் மிதக்கும் மாலுக்கு ரூபா. 8.36 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. |
| **(15)**<br><br>(i) | கொருட்கொள்வனவு முகாமைத்துவம் 2018 ஏப்ரலில் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட அதிகாரசபையின் நோக்கங்களுக்கு புறம்பான விடயமாகிய சூரியாபிஷேக விழாவுக்கு பொருட்கொள்வனவு நடைமுறைகள் எதனையும் கடைப்பிடிக்காது தனியார் நிறுவனம் இரண்டிற்கு ரூபா **11.9** மில்லியன் செலவினமாக வழங்கப்பட்டிருந்தது. | 3.7 (அ) - 2018 | பொருட் கொள்வனவு விதிமுறைகளுக்கு ஏற்ப பொருட் கொள்வனவுக்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். | இதனை மேற்கொள்ளவிருந்த மிகக்குறுகிய காலத்தினுள் சாதாரண பொருட் கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாதிருந்தமையால் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் முன்னர் வழங்கலை மேற்கொண்ட நிறுவனங்களிலிருந்து பெக்ஸ் மூலமும் அதிகாரசபையின் வெப் இணையத்தளத்தின் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | 2019 டிசம்பர் 31, நிலவரப்படி கொள்முதல் தொடர்பான கொள்முதல் நடைமுறையின்படி நிர்வாகம் எந்தப் பணியையும் செய்யவில்லை. |
| (ii) | பொருட் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் **2018** ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் திறைசேரி நிதியேற்பாடு என்பவற்றுடன் | 3.7 (ஆ) - 2018 | பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்து செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். | திறைசேரி நிதி வழங்கும் செயற்திட்டங்களுக்கு வேறாகவும் அதிகாரசபை நிதியளிக்கும் செயற்திட்டங்களுக்கு வேறாகவும் பொருட் | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான கொள்முதல் வழிகாட்டுதலின் 4.2 இன் படி, அடுத்த 03 ஆண்டுகளுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த பொருட் கொள்வனவுகளது எண்ணிக்கை **144** ஆகும். **2018** ஆம் ஆண்டின் இறுதியளவில் அதில் **116** செயற்திட்டங்கள் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்திருந்தன. எவ்வாறாயினும் **2018** ஆம் ஆண்டு இறுதியளவில் அவற்றில் **39** மாத்திரமே பொருட் கொள்வனவுகளைப் பூர்த்தி செய்திருந்தன. நிறைவேற்றப்பட உள்ள பொருட்கொள்வனவு நடவடிக்கைகளில் அது **33.62** சதவீதமாகும். | | | கொள்வனவுத் திட்டங்கள் தேவைப்படுவதால் அவை அவ்வாறே தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான பொருட் கொள்வனவுக்குரிய தகவல்கள் குறித்த திகதிக்கு முன்னர் பெறப்படாததால் **2018**, **2017** இல் அவை குறித்த தினத்தில் அவை பூர்த்தியாகவில்லை. | ஒரு முக்கிய கொள்முதல் திட்டத்தையும், அந்தந்த ஆண்டுகளுக்கான விரிவான கொள்முதல் திட்டத்தையும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டது, ஆனால் அதிகாரம் பொருட்கள் மற்றும் கொள்முதல் திட்டத்தை சமர்ப்பிக்கவில்லை. சேவைகள். |

## 33. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை

1. நிறுவனத்தின் பெயர் - தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை

2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்-

| | |
|---|---|
| **2018** | ஆண்டுக்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **2019** | ஆண்டுக்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **2020** | ஆண்டுக்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 34. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

01. நிறுவனத்தின் பெயர் :- ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

02. 2018, 2019 மற்றும் 2020 நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்:-

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

03. கணக்காய்வு அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|
| 01 | சபையானது அரச பிணைகளில் நிதி முதலீடு செய்யும் முதல் தர நிறுவனமான போதிலும் பிணை ஏலங்களில் நேரடியாக விலைமனு சமர்ப்பிக்கும் வசதியினை (Direct Bidding Facility) இலங்கை மத்திய வங்கியிடம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. 2016 ஓகஸ்ட் 26 ஆம் திகதி இடம்பெற்ற பொது வணிகம் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் முதன்மை வாடிக்கையாளராக (Primary Dealer) பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலுமே அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை.<br><br>(பந்தி 2020 - 3.1 -ஊ , | பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளையை செயற்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | இலங்கை மத்திய வங்கியானது இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நேரடியாக விலைமனுக்கலை வழங்குவதற்கான வசதியைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்படுவதுடன், அதைப் பரிசீலிப்பதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் குறித்து சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட மற்றும் பிற தேவைகள் தொடர்பான தொடர்புடைய தகவல்கள் அந்த துறைகளிடம் இருந்து கேட்கப்பட்டுள்ளன. தேவையான பணியாளர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் | உதவிப் பொது முகாமையாளர் ஆட்சேர்ப்புக்கு, பொது முகாமையாளர் பணியமர்த்துவதற்கான உரிய செயல்முறை முகாமை சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2019 – 3.2 ஆ 2018 – 3.2 - இ) | | எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| **02** | 2016 ஆம் ஆண்டின் பின்னர் சபையினால் திறைசேரி முறி இரண்டாம் நிலை சந்தை கொடுக்கல் வாங்கல்களில் தவிர்க்கப்பட்டிருந்ததுடன் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீண்டும் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மேலதிக நிதியை முதலீடு செய்வதில் சிக்கலான நிலைமை காணப்படுவதாகவும் அதனால் முதலீட்டு தொகுதியை ஒழுங்கமைப்பதில் குறைந்த அபாயமுள்ள அரச முதலீடு செய்யும் வாய்ப்பு இல்லாது போனதாகவும் தெரிய வந்துள்ளது.<br><br>(பந்தி 2018 – 3.2 - ஈ) | திறைசேரி பிணைமுறிகளை இரண்டாம் நிலையில் கொமுக்கல் வாங்கல்களுக்காக மீள நுழைவடைதல் மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப வசதிகள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிறுவனத்தின் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான தகுதி வாய்ந்த பணியாளர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பணியாளர்களை பணியமர்த்திய பிறகு, ப்ளூம்பெர்க் (Bloomberg )மற்றும் பிற தொடர்புடைய வசதிகளை இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலுடன் ஏற்பாடு செய்யலாம். | நேர்காணலுக்குப் பிறகு, மே 2021 முதல் ஒரு முகாமையாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டார். உதவி பொது முகாமையாளர் பணியமர்த்துவதற்கான நடைமுறை முகாமை சேவைகள் துறையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| **03** | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட 6 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே ரூபா. 31.41 மில்லியன், ரூபா 30.14 மற்றும் ரூபா. 49.10 மில்லியனான பங்குகள் முதலீடுகளுக்காக முறையே 2015, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை.<br><br>( பந்தி 2020 – 3.2 அ) | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். | கம்பனிகளில் பங்குகளை முதலிட்டு பங்கிலாபம் பெறுதல் அல்லது பெறாமை அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. அவ்வாறே அதற்கு உள் மற்றும் வெளிக் காரணிகள் தாக்கத்தை ஏற்படுத்தும். இதற்கமைய **2020** ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் **19** தொற்று நிலைமையினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் 3.2 என்ற எதிர்மறை மதிப்பில் எடுக்கப்பட்டது. பல நிறுவனங்களிலும் நாளாந்த | 2021 ஆம் ஆண்டிற்கான இந்த முதலீடுகளுக்கு ஈவுத்தொகை எதுவும் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுவதற்கு முடியாதிருந்ததுடன் பங்கிலாபத்தினை அறிவிக்க முடியாத நிலைமை உருவாகி இருந்தது. | |
| **04** | சபையினால் பட்டியலிடப்பட்ட 12 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளில் 2015 ஆம் ஆண்டில் சந்தைப் பெறுமதி ரூபா. 902.71 மில்லியனாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பங்குகள், பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் சபையின் முதலீட்டு நட்டத்தினைக் குறைத்துக் கொள்ளுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்தப் பங்குகளின் சந்தைப் பெறுமதி ரூபா. 553.10 மில்லியன் வரையிலும் வீழ்ச்சியடைந்திருந்தது. ( பந்தி 2020 – 3.2 – ஆ) | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். | இந்த நிறுவனமும் பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட முதல் தர நிறுவனம் என்பதனால் அவற்றின் சந்தை விலை உண்மையான செலவு மிகக் கூடிய பெறுமதியினை பெறுமிடத்து விற்பனை செய்து இலாபமடைய எதிர்பார்க்கின்றோம். | 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், முதலீடுகளின் சந்தை மதிப்பு அதிகரித்திருந்தது, ஆனால் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் சந்தை மதிப்பு குறைந்துள்ளது. 2021 டிசம்பர் 31, இன் சந்தை மதிப்பு ரூபா.770.94 மில்லியன். |
| **05** | ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளாது ஊழியர் நம்பிக்கை நிதிய சபையில் மட்டும் பதிவு செய்யும் தொழில் வழங்குனர்களுக்காக சபையினால் தற்காலிக பதிவு எண் வழங்கப்பட்டு போலி (Dummy) தொழில் வழங்குனராக பதிவு செய்துகொள்ளும் தொழில் வழங்குனர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் சந்தாப் பணம் ‘X’ எனும் பெயரில் தற்காலிகக் கணக்குகளில் பேணப்பட்டு வரும். அதற்கமைய குறித்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்காது ‘X’ | போலி இலக்கத்தினை நிலையான தொழில் வழங்குனர் இலக்கங்களுக்கு மாற்றுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்றினை செயற்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | தொழில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதியத்துடன் மாதாந்தம் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் பரிமாற்ற செயற்பாடு இடம் பெறுவதுடன், அந்த தகவல்களை அடிப்படையாக் கொண்டு போலி இலக்கத்தினை நிலையான தொழில் வழங்குனர் இலக்கங்களுக்கு மாற்றுதல் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த சபையின் பிராந்திய அலுவலகங்களினால் நிறுவன பரீட்சிப்பு மேற்கொள்ளுகையில் | இந்தக் கணக்குகளில், 25,303 முகவர்களுடன் தொடர்புடைய 31 டிசம்பர் 2021 நிலவரப்படி ரூபா.323,525,004 நிலுவை இருந்தது. சம்பந்தப்பட்ட முகவர்களை நிரந்தர முகவர்களாக்க சபையில் பதிவு செய்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குகளில் (AX தொடக்கம் XX வரையிலும்) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்படும் மீதியானது ரூபா. 317,699,475 ஆகும். இந்த போலி தொழில் வழங்குனர்கள் சபையின் உண்மையான தொழில் வழங்குனர்களாகப் பதிவு செய்து கொள்ளுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத காரணத்தால் அந்தக் கணக்கில் பேணப்பட்டு வரும் சந்தாப் பணம் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட முடியாது காணப்படுகின்றது ( பந்தி 2020 – 3.2 - ஈ) | | பெற்றுக் கொள்ளும் நிலையான தொழில் வழங்குனர் இலக்கத்திற்கு அமைய தொழில் வழங்குனர்களினால் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்பட்ட பின்னர் அந்தத் தகவல்கள் எங்களிடம் தெரிவிக்கப்படும் சந்தர்ப்பம் இருப்பதுடன் அப்போது போலி இலக்கத்தின் கீழ் செலுத்தப்படும் சந்தாப் பணம் நிலையான தொழில் வழங்குனர் இலக்கங்களுக்கு மாற்றுதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். | |
| 06 | 2014 ஆம் ஆண்டளவில் இருந்து கூட்டிணைந்த திட்டத்திற்கு அமைய தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலம் குறிக்கோளிட்டபடி தற்காலத்திலுள்ள கணக்கு முகாமைத்துவ முறை மற்றும் மற்றைய மென்பொருள் முறைமைகள் பற்றி கற்று புதிய மென்பொருள் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வது மற்றும் அபாயங்களை தவிர்க்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் எனது காரியங்கள் 2018 ஆம் ஆண்டு முடிவடையும் போது செய்யப்பட்டிருக்கவில்லை. (பந்தி 2018 – 4.1) | கூட்டிணைந்த திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் மற்றும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வினைத்திறனான மற்றும் உற்பத்தி திறனான முறைகளை அமைக்க வேண்டியுள்ளது. | புதிய கணனி முறையை நிர்மாணித்தல் ICTA மூலம் INNOVA நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருப்பதுடன், அந்நடவடிக்கைகள் இப்போது விரைவாக நடைபெற்று வருகின்றது. | புதிய தகவல் தொழில்நுட்ப அமைப்பின் வளர்ச்சி இன்னும் நிறைவடையவில்லை. |
| 07 | 1995 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள உரிமை கோரப்படாத மரண பிரதிபலன் ரூபா. 17.47 மில்லியனும் மற்றும் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்பட்டு | தீர்க்கப்படாது காணப்படும் உரிமை கோரப்படாத மரண பிரதிபலன், தடுத்து வைக்கப்பட்ட பிரதிபலன்களை வேறு வேறாக கண்டறிந்து | அங்கத்தவர்களின் இறப்பின் பின்னர் அதன் அங்கத்தவர்களின் பிரதிபலனுக்காக உரிமை கோருவோர் பலர் இருக்கும் சந்தர்ப்பங்களில் அந்த உரிமை கோரும் அனைவரும் ஒரே | 2021 டிசம்பர் 31, நிலவரப்படி, கோரப்படாத இறப்புப் பலன் இருப்பு ரூபா. 21.69 மில்லியனாகவும், தக்கவைக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரும் தடுத்து வைக்கப்பட்ட பிரதிபலன் ரூபா. 26.85 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 44.32 மில்லியன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய அங்கத்தவர்களை இனங் கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>( பந்தி -3.1-2020ஆ,2018 - 3.1 2019 – 3.1 அ) | தீர்ப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | நேரத்தில் வருகை தராமை மற்றும் ஒருசிலர் போதுமானளவு தகவல்களை சமர்ப்பிக்காமையால் அவர்களின் பங்கு சபைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளவர்களின் பங்கினை மட்டும் செலுத்துதல் தற்காலத்தில் பின்பற்றப்பட்டு வரும் முறைமை ஆகும். தொலைபேசி அழைப்புகள் மற்றும் கடிதங்கள் மூலம் கோரப்படாத பொதுப் பலன்கள் மற்றும் நலன்புரிப் பலன்கள் குறித்து அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு பணம் வழங்கப்பட்டு, எதிர்காலத்திலும் இதே நடைமுறைகளைப் பின்பற்றி வங்கிப் பயனாளிகளின் தகவல்களைப் பெற்று உரிய பணம் செலுத்த முன்மொழியப்பட்டுள்ளது. | பலன் இருப்பு ரூபா. 17.29 மில்லியனாகவும் இருந்தது, மேலும் அந்த நிலுவைகளுடன் தொடர்புடைய உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு தீர்வு காணப்படவில்லை. |
| **08** | சபையினால் **1981** தொடக்கம் **2019** ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் **8,213** தொழில் வழங்குனர்களிடமிருந்து **2020** திசெம்பர் **31** ஆம் திகதியில் அறவிடப்பட்டிருந்த மொத்தத் தொகையான ரூபா. **943.78** மில்லியன் சந்தாப் பணம் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை சட்டத்தின் **16** ஆவது பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிநபர் கணக்குகளில் வரவு வைக்கப்படாது தொழில் வழங்குனர்களின் கணக்குகளிலேயே தடுத்து | சந்தாப் பணம் வரவு வைக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களைச் சரியாகவும் மற்றும் விரைவாகவும் இனங் கண்டு கொள்ளக் கூடிய வகையில் அங்கத்துவப் பணத்தினை அறவிடும் முறைமையினை முன்னேற்றுதல் மற்றும் கண்டறியப்படாத சந்தாப் பணத்தினை விரைவாகக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வழங்குதல் வேண்டும். | 31.03.2021 நிலவரப்படி, பெரிய அளவிலான உறுப்பினர் கணக்குகளில் 7 கோப்புகள் மீதமுள்ளன, பணம் உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் வரவு வைக்கப்பட வேண்டிய பங்களிப்புகளைத் துல்லியமாக ஒதுக்குவதற்குப் போதுமான தகவல்கள் இல்லாமல் இதுவரை உறுப்பினர் கட்டணத் தொகையிலிருந்து பயனடைந்த உறுப்பினர்கள். பங்களிப்புகள் குறைக்கப்பட்டு, மீதமுள்ள பணம் மற்ற உறுப்பினர்களுக்கு விகிதாசாரப்படி | 1981 முதல் 2019 வரையான ரூபா.943.78 மில்லியன் பங்களிப்புகளில், ரூபா.446.9 மில்லியன் 2021 டிசம்பர் 31, அன்று செலுத்தப்பட உள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டிற்கான 2260 முகவர்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில் இருந்து ரூபா 387.57 மில்லியன் இன்னும் செலுத்தப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது. உரிய அங்கத்துவக் கணக்குகளைக் கண்டறிந்து அந்தக் கணக்குகளுக்கு வரவு வைக்காது இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் குறித்த அங்கத்தவர்களுக்குத் தமது பணம் உரித்தற்று போவதற்கான ஆபத்து நிலவுகின்றது என்பது அவதானிக்கப்ட்டது. எவ்வாறு இருப்பினும், **2021** ஓகஸ்ட் **16** ஆம் திகதியில் இந்த மீதிகளில் ரூபா. **381.86** மில்லியன் தீர்க்கப்படும் என சபையின் தலைவரினால் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(பந்தி – 2020 – 1.5.2 அ) | | விநியோகிக்கப்படுகிறது. மேலும், **15.02.2021** திகதியிட்ட கடிதங்கள் அரையாண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்காத ஆனால் பங்களிப்புகளை செலுத்திய நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதன் பதிலின்படி, அருகிலுள்ள அரையாண்டு அறிக்கையில் உள்ள மாற்றங்களின்படி கணக்குகள் புதுப்பிக்கப்படும் | உள்ளது. |
| **09** | கூட்டுத்தாபன சட்டத்திற்கு அமைய சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சபைத் தலைவர் ஆவார். எவ்வாறு இருப்பினும், நிதி நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனமான சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் அதன் தலைவர் இருத்தல் வேண்டும் என்பதாக ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் **5(2)** ஆம் பிரிவு திருத்தப்பட வேண்டும் என **2016** ஓகஸ்ட் **26** ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், **2020** ஆம் ஆண்டு இறுதி வரையிலும் கூட சட்டத்திற்குத் தேவையான திருத்தம் | குறித்த அனுமதிகளை விரைவாகப் பெற்றுக் கொண்டு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக தற்போதைய தலைவர் நிதியமைச்சகத்துடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க உள்ளார். | சட்டத் திருத்தம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (பந்தி 2020 – 3.1 - உ 2018 – 4.3) | | | |
| **10** | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''ஆண்டு **2030** நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சபையினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (பந்தி 2018 - 4.5 ) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''ஆண்டு **2030** நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் செயற்பட வேண்டியமை. | நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நிறுவனத்தின் மூலோபாயம் குறித்த புதிய ஆய்வு இந்த ஆண்டு நிறுவனத்தின் விரிவான திட்டத்தில் சேர்க்கப்படும் என்றும், அதற்கு நிபுணர்களின் ஆதரவைப் பெற சபை நம்புகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான வளர்ச்சி இலக்குகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்படவில்லை. |
| **11** | 1954 இன் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம். மேலதிக நேரத்திற்கான கொடுப்பனவு செய்யும் போது மேலதிக ஒரு மணித்தியாலத்திற்கு சாதாரண மணித்தியால சம்பளத்தின் ஒன்றரை பங்கு கொடுப்பனவு செய்ய வேண்டியிருப்பினும், சபையினால் மேலதிக மணித்தியாலத்திற்கு ஒன்றரை மற்றும் சனி/ஞாயிறு தினங்களில் | கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் நிறுவனமாக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தொடர்பாக அச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையால் முன்னர் இருந்தே பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் அது தொழில் துறையின் நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>தற்போது திருத்தம் செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கூடுதல் நேர கட்டணம் செலுத்தும் முறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | **8** மேலதிக மணித்தியாலங்கள் பூர்த்தியாவதுடன் ஒரு நாள் சம்பளமும் சேர்த்து மேலதிக நேரக் கொடுப்பணவு செலுத்தப்பட்டிருந்தது.<br><br>2019 மற்றும் 2018 ஆண்டுகளில் சபையின் மேலதிக நேர கிரயம் முறையே ரூபா 25,505,000 மற்றும் ரூபா 18,615,000 ஆக காணப்பட்டது. மேலும், சட்டத்தின் பிரகாரம் ஊழியர்கள் வாரத்திற்கு ஐந்தரை மணித்தியாளங்கள் கடமையாற்ற வேண்டியதுடன் வருடாந்த விடுமுறை **21** நாட்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் , அதற்கு முரணாக சபையின் உத்தியோகத்தர்கள் வருடாந்தம் **4**1 நாட்கள் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் வாரத்திற்கு **5** நாட்கள் மட்டும் கடமையாற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது..<br>(பந்தி 2020 – 1.6 - அ 2019 – 1.6 அ 2018 – 1.6) | | | |
| **12** | **2003** ஜுன் 02 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் பீஈடீ.்.12 கொண்ட அரச வணிக சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு. சபையில் தற்போது செயற்படுத்தப்படும் நிதி மற்றும் நிர்வாக செயற்படு முறைமை கோவை திறைசேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையின் நிதி மற்றும் நிர்வாக செயற்படு முறைமை கோவைகளுக்காக பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்துள்ளதுடன், அவை இற்றைப்படுத்தப்பட்ட பின்னர் திறைசேரி அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | திறைசேரி அனுமதி இதுவரை பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (பந்தி - 2020-1.6-இ) | | | |
| **13** | 1994 ஜூன் 14 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 95 கொண்ட அரச வணிக சுற்றறிக்கை மற்றும் 2000 ஜனவரி 11 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் பீஎப்.்.பீஈ 5 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை. திறைசேரியின் முறையான அனுமதியின்றி ஊழியர்களுக்கும் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் மேலதிகக் கொடுப்பனவு, ஊக்கக் கொடுப்பனவு மற்றும் வேறு வகையிலான நிதி பிரதிபலன்களும் வழங்கப்படலாகாது எனினும், சபையினால் மீளாய்வு ஆண்டில் உணவு கொடுப்பனவாக ரூபா. **11.34** மில்லியனும், மீதப்படுத்தப்பட்ட விடுமுறைக்கான கொடுப்பனவாக ரூபா. **25.02** மில்லியனும், வைத்திய செலவு மீள்நிரப்பலுக்காக ரூபா. **91.06** மில்லியனும், வீட்டுக் கடன் வட்டி மீள்நிரப்பலுக்காக ரூபா **10.48** மில்லியனுமாக மொத்தம் ரூபா **137.90** மில்லியன் தொகை திறைசேரியின் முறையான அனுமதியின்றி பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. (பந்தி - 2020-1.6- ஈ) | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அனைத்து கொடுப்பனவு முறைமைகளுக்கும் திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | அதற்கான அனுமதிகள் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | அனுமதி பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| **14** | பல வருடங்களாக எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருக்கும் கடன் வட்டி தொகைகளில் இன்னமும் பெற வேண்டிய ரூபா. 9.39 மில்லியன் தொகை 2021 ஜுலை 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாது இருக்கின்றது.<br><br>(பந்தி - -20207.1) | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இந்த நிலுவைத் தொகையினை செலுத்துமாறு எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு பல கடிதங்கள் அனுப்பட்டு உள்ளன. இறுதியாக 2022.01.04 திகதி கடிதம் ஒன்று அனுப்பட்டுள்ளது. கொவிட் நிலைமைக்கு முகங் கொடுத்து கம்பனி நிதி சிக்கல்களுக்கு உட்பட்டு உள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். | 2021 டிசம்பர் 31, வரை, கடனீட்டு வட்டி திரும்பப் பெறப்படவில்லை. |
| **15** | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் இணைந்து செயற்படும் பதவியணியின் வீட்டுக் கடன் யோசனைத் திட்டத்திற்காக வங்கியுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி உத்தியோகத்தர்களிடம் இருந்து மீள அறவிடப்பட்ட மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை **03** மாதத்திற்கு ஒரு தடைவ சபையிடம் மாற்றல் செய்தல் வேண்டும். அவ்வாறு இருக்க, அதற்கு முரணாக வங்கியினால் அந்தத் தொகை வருட இறுதியில் வைப்புக் கணக்கு மீதியுடன் சேர்க்கப்பட்டு காட்டப்படுகின்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய **2020** ஆம் ஆண்டில் கடனை மீள அறவிடல் ரூபா **24.47** மில்லியனுக்கும் மற்றும் வட்டி அறவிடல் ரூபா **6.15** மில்லியனுக்கும் எதுவித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.<br><br>(பந்தி - 2020-1.8, 2019 – | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்யவும், திருத்தப்பட்ட விஷயங்களை உள்ளடக்கவும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது | 2021 டிசம்பர் 31, நிலவரப்படி, 03 மாதங்களுக்கு ஒருமுறை சபை கடனை திரும்பப் பெறுவது இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1.7) | | | |
| **16** | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபைச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபை (திருத்தம்) சட்டத்தின் 7 ஆவது பிரிவின் மூலம் செய்யப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், சபையில் சுய தொழில் செய்வோரை பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள 2,746,711 சுய தொழிலாளர்களில் நிதியத்தில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை 42,694 அதாவது 1.55 சதவீதம் மட்டுமாக உள்ளதுடன் அதில் செயற்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5,308 ஆகும். நிதியச் சட்டத்தின் மூலம் விசேடமாக தீர்மானிக்கப்பட்டுள்ள இந்தத் துறையினை முன்னேற்றுவதற்கு சபையினுள் வேறான பிரிவொன்றினைத் தாபிக்க செயல் திட்டத்தில் வழிவகை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 481 மட்டுமே ஆகும். (பந்தி - 2020-3.1 ஆ) | சுய தொழில் செய்வோரை பதிவு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமையான வேலைத் திட்டத்தின் கீழ் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் புதிய அங்கத்தவர்கள் 1,614 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். | 2021 ஆம் ஆண்டிற்காக 254 புதிய பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், சுயதொழில் செய்பவர்களைப் பதிவு செய்வதில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. |
| **17** | சபையின் அங்கத்தவர்களுக்காக செயற்படும் வைத்திய நிவாரண யோசனை முறைக்காக அங்கத்தவர், வாழ்க்கைத் துணை மற்றும் அனைத்து தங்கி வாழ்வோருக்காகவும் ஒரு நபருக்கு மாதாந்தம் | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தில் அமைக்கப்பட்ட அங்கத்துவ நிதியத்தில் செலவுகளை மேற்கொள்ளுகையில் சிறந்த முகாமைத்துவம் மற்றும் | பங்களிப்பு தொகையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பங்களிப்பு தொகையை உயர்த்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவிடப்படும் சந்தாப் ரூபா. **30** என **2011/10** ஆம் இலக்க நிர்வாக மற்றும் மனித வள சுற்றறிக்கையின் மூலம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் **10** வருடத்தினுள் அந்தத் தொகையில் திருத்தம் இடம் பெற்றிருக்கவில்லை.<br>ஆயினும், **2020** ஆம் ஆண்டுக்காக வைத்திய விலைப்பட்டியல் மீள்நிரப்பல் செலவு ரூபா. **92.57** மில்லியனாக உள்ளதுடன் அதற்கான அங்கத்தவ பங்களிப்பு ரூபா. **1.51** மில்லியன் அதாவது **1.6** சதவீதம் மட்டுமே ஆகும். அதற்கமைய மீதி தொகையான ரூபா. **91.06** மில்லியன் அதாவது **98.4** சதவீதம் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.<br><br>மேலும், இலக்கம் **2006/25** மற்றும் **2006/08/31** திகதியிடப்பட்ட சபையின் நிர்வாகம் மற்றும் மனித வள பிரிவினால் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கைக்கு அமைய "ஊழியர்களில் தங்கி வாழும் வேலையற்ற திருமணமாகாத பிள்ளைகள்" இந்த முறைமையின் கீழ் பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடப்படடுள்ள போதிலும், பிள்ளைகளுக்கான ஆகக் கூடிய வயதெல்லை தீர்மானிக்கப்பட்டிருக்காமை , பிள்ளைகள் வேலை | திட்டத்துடனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்கின்றனரா இல்லையா என்பதனை பரீட்சிக்கும் முறைமை இல்லாமை, திருமணமானவரா திருமணமாகாதவரா என்பதனை பரீட்சிக்கும் முறைமை இல்லாமை போன்ற பலவீனங்களும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாது பெற்றுக் கொள்ளப்படும் சிகிச்சையின் கீழ் விசேட கருவிகளைப் பெற்றுக் கொள்ளுகையில் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை அதிகபட்சம் ரூபா. **5,000** மீள்நிரப்ப முடியும் என்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த விலைப்பட்டியல் தொடர்பில் விசேட குறிப்பு கணணி ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்படாததோடு குறித்த நிபந்தனையை பரீட்சித்தல் இடம் பெற்றிருக்காமை போன்ற உள்ளக நிர்வாக பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(பந்தி - 2020-3.1 ஈ) | | | |
| **18** | சபையினால் மூன்று அலகு பொறுப்பு நிதியங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் நாமல் வர்தன நிதியத்தில் **2020** ஆம் ஆண்டில் **450,000** அலகுகள் மீதியாகும். இது அதிகரிப்பு நிதியமாக இருப்பதனால் பங்கிலாபம் வழங்கல் நிச்சயமாக இடம் பெறாது என்பதால் **2020** ஆம் ஆண்டிற்கு பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை. நாமல் வர்தன நிதியத்தின் அலகொன்றின் சந்தைப் பெறுமதி **2020** ஆம் ஆண்டில் அதிகரித்திருந்த போதிலும் **2019** மற்றும் | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத் தப்பட வேண்டும். | 2020 டிசம்பர் 31, நிலவரப்படி, நாமல் வர்தன நிதியத்தின் முதலீட்டில் ஆர்டர் செய்யப்பட்ட **450,000** அலகு களில்,இதுவரை **225,000** அலகுகள் **(50%)** விற்கப்பட்டுள்ளன. | 1997 ஆம் ஆண்டில், ரூபா. 10 அலகுகளின் விலை ரூபா.154.26 ஆக அதிகரித்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | **2020** ஆம் ஆண்டுகளில் நிதியத்திற்கு நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது அதன் நிதிக் கூற்றுகளைப் பரீட்சிக்கையில் அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த நிதியத்தின் நிகர சொத்துக்களின் (நேவ யளளநவள யவவசடைரவயடிடந வழ ரவெை ாழடனநசள) வீழ்ச்சி அதாவது **2017** ஆம் ஆண்டில் ரூபா. **703** மில்லியனாக இருந்த நிகர சொத்துக்களின் பெறுமதி **2020** ஆம் ஆண்டில் ரூபா. **350** மில்லியன் வரையிலும் வீழ்ச்சியடைந்திருந்ததால் இந்த முதலீட்டில் ஆபத்தான நிலைமையினை அவதானிக்க முடிந்துள்ளது.<br><br>(பந்தி - 2020 – 3.2 - இ) | | | |

## 35. இலங்கை மின்சார சபை

1. நிறுவனத்தின் பெயர்:- இலங்கை மின்சார சபை

2. நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் :-

2018 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

3. கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு மற்றும் கணக்காய்வுப் பத்தியைக் குறிக்கும் இலக்கம் | | கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதிய நிலை |
|---|---|---|---|---|---|
| **1** | **2020 - 1.5.1 (அ) (i)**<br><br>**2019 – 1.5.4 (ஈ)**<br><br>**2018 – 1.5.4 (ஈ)** | நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கும் குறிப்பிட்ட வருமான உழைப்புக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாத மற்றும் தனிப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளான ரூபா 43.97 மில்லியன் தொகையான செலவுகள் சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது. | நிறுவனத்துடன் தொடர்புடைய செலவினத்தை இனங்காண்பதற்கும் நிறுவனத்தின் நோக்கத்திற்காக சொத்துக்களை பயன்படுத்துவதற்கும் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில், சேமலாப நிதியத்தின் முகாமை செய்யப்பட்டு நிர்வாகக் குழு தற்போது நடைமுறையில் உள்ள நடைமுறையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்குத் சபை ஒப்புதல் அளித்துள்ளது. | தற்போதுள்ள முறையே தொடர்ந்து பின்பற்றப்படுகிறது. |
| **2** | **2020 - 1.5.1 (அ) (ii)** | நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்கு பொருளாதார நலன்களை உட்பாச்சல் செய்யாத மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் | நிறுவனத்துடன் தொடர்புடைய செலவுகளைக் கண்டறிவதற்கும் நிறுவன நோக்கங்களுக்காக சொத்துகளைப் பயன்படுத்துவதற்கும் கணக்கியல் தரநிலையின் விதிகளின் தேவைகளுக்கு | மேல் குறிப்பிட்டவாறு. | மேல் குறிப்பிட்டவாறு. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சொத்தின் உரிமையும் சபைக்குக் காணப்படுகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்றன. | இணங்குதல். | | |
| 3 | **2020 - 1.5.1 (அ) (iii)** | சொத்தின் உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இன்மை காரணமாக தலைமை அலுவலகக் கட்டிடக் காணியின் உரிமைத்துவத்தை மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது. | இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் உரிமையை உருவாக்கவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு இ.மி.ச. காணிகள் ஆணையாளரைக் கோரியுள்ளது. | இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் உரிமையை உருவாக்கவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு இ.மி.ச. காணிகள் ஆணையாளரைக் கோரியுள்ளது. | அதன் உரிமை தொடர்பில், கொழும்பு பிரதேச செயலகம் காணி ஆணையாளரிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. |
| 4 | **2020 - 1.5.1** (ஆ) **2019 – 1.5.3** (ஆ) **2018 – 1.5.3** **(அ)** | எல்கேஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம் இ.மி.ச ஆனது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது | இருப்பை பெறுமதி யிடுகையில் உண்மைக் கிரயம் அல்லது அண்ணள வான கிரய அடிப் படை பிரயோகிக் கப்படுதல் வேண்டும். | உண்மையான மற்றும் நிலையான விலைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்க தொடர்ச்சியான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. | உண்மையான மற்றும் நிலையான விலைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்க தொடர்ச்சியான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்பட்ட ரூபா 4,038,696,594 கூட்டுத் தொகையான சாதக பொருள் விலை முரண்கள் மற்றும் சாதக மேந்தலை விகித முரண்களும் ரூபா 1,776,858,186 பாதக களஞ்சிய விலை முரண்களும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. இதன் விளைவாக, இ.மி.ச. இன் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது. | | | |
| **5** | **2020 – 1.5.1 (இ)**<br><br>**2019 – 1.5.3** | LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172.2 பில்லியன் | **LKAS 16** இன் பிரகாரம் ஆண்டு தோறும் நிலை யான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு | அனைத்து அசையும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுட | பரிமாற்ற நெட்வொர்க் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் உதவியுடன் மற்ற அசையா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ஈ) **2018 – 1.5.3 (இ)** | சொத்துக்களில் ரூபா 171.2 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படுதல் வேண்டும். | ன் பிற அசையா சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு சாத்தியம் என்பது பரிமாற்ற நெட்வொர்க்கின் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் உதவியுடன் எதிர்காலத்தில் ஆராயப்படும். | சொத்துகளின் பௌதீக சரிபார்ப்பை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் எதிர்காலத்தில் ஆராயப்படும். |
| **6** | **2020 - 1.5.2**<br><br>**2019 – 1.5.3 (இ)**<br><br>**2018 – 1.5.3 (ஆ) ii** | இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கை 2.4.6(உ) மற்றும் 3(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளாய்வு செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக ரூபா 187.58 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் மதிப்பிடப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | முழுமையாக தேய்விட ப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். | முழுமையாக தேய்விடப்பட்ட மின் நிலையங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மின் நிலையத்தின் சிக்கலான தன்மை மற்றும் தனித்துவத் தன்மை காரணமாக, மதிப்பீட்டிற்கு கணிசமான காலம் தேவைப்படுகின்றது.<br><br>மோட்டார் வாகனங்களுக்கான திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட் காலத்தை நடைமுறைப்படுத்துதல் 2021 ஆம் ஆண்டில் சபையின் ஒப்புதலுடன் செய்யப்படும். எஞ்சிய சொத்துக்களின் பிரதான கூறுகள் பரிமாற்ற மற்றும் விநியோக வழிகளாக காணப்படுவதுடன், இது முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 38% ஆகும். கணக்காய்வு அவதானிப்பை தீர்வு | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் மோட்டார் வாகனங்களுக்கான பயனுள்ள ஆயள்காலம் திருத்தம் செய்யப்பட்டு தேவையான கணக்கியல் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.<br><br>இருப்பினும், உற்பத்தி செய்யும் ஆலைகளின் ஆய்வு இன்னும் நடந்து வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காண்பதற்கான ஒரு பொறிமுறையினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| 7 | **2020 - 1.5.3 (அ)**<br>**2019 – 1.5.4 (அ)**<br>**2018 – 1.5.4 (ஆ)** | ரூபா 189.54 மில்லியன் வரவு மீதி (இருப்பு குறைவு) மற்றும் ரூபா 114.64 மில்லியன் செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | இருப்பு மிகை மற்றும் பற்றாக்கு றையினை அது இடம்பெற்று குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். | இருப்புச்சீராக்கத்தை அகற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>• விடயங்களைத் தீர்ப்பதற்காக குழுக்களை நியமித்தல்<br>• பொறுப்புவாய்ந்த ஊழியர்களுக்கு எதிராக முறையான விசாரணைகளை நடத்துதல்<br>• சட்ட ஆலோசனைகளை பெறுதல், மற்றும்<br>• சபை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்.<br>அதன்படி, பற்றாக்குறை இருப்பு மீதியில் 46% இற்கு மேற்பட்டவையும் மேலதிக இருப்பு மீதியில் 30% இற்கு மேற்பட்டவையும் மேற்படி செயன் முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அதே செயல்முறை தொடர்கிறது செயற்படுத்தப்படுவ துடன் 67% அதிகப்படியான இருப்பு மற்றும் 46% பற்றாக்குறை இருப்பு செயல்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. |
| 8 | **2020 - 1.5.3 (ஆ)**<br>**2019 – 1.5.4 (ஆ),** | அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் | திறைசேரிச் செயற் பாடுகள் திணைக் களத்திடமிருந்து எழுத்து மூலமான பணிப்புரை கிடைத் தவுடன் அல்லது நிலுவையான மீதி களைச் செலுத்து வதற்காக இ.மி.ச இன் | இந்த பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. | இந்த பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **(c)**<br><br>**2018 – 1.5.4 (இ)** | நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 பில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டுமென்பதுடன் எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட PE/EN/CEB/Equity/ 2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி, இக்கடன்கள் இ.மி.ச. இன் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். இருப்பினும், இ.மி.ச. பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப் பட்டிருக்காத போதிலும், இக்கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆகையால், இக்கடன்களின் காணப்படும் தன்மை ஐயத்திற்குரியதாக உள்ளதுடன் | புத்தகங்களைச் சீராக்கு வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இக்கடன்களின் மீளச் செலுத்துகை தொடர்பில் நிதிக் கூற்றுக்களிற்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை. மேலும், ரூபா 3.56 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.5 பில்லியன் ஆனதோர் தொகை மற்றும் திறைசேரியால் செய்யப்பட்ட ரூபா 3.15 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.54 பில்லியன் தொகை என்பன முறையே 2019 மற்றும் 2020 இல் இ.மி.ச. இன் உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், இந்த செலவினம் இ.மி.ச. ஆல் செய்யப்படாத போதிலும், உரிமைத்துவத்திற்கு வட்டி என மாற்றப்பட்டிருந்த இந்த வட்டிச் செலவினத்தை இ.மி.ச. அதன் வருமானக் கூற்றிற்கு சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான நட்டம் முறையே ரூபா 3.56 பில்லியன் மற்றும் ரூபா 3.15 பில்லியன் ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மேலும், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவில் அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் உத்தரவாதத்துடன் சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், சபை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அதன் வருமான கூற்றில் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | **2020 - 1.5.3 (இ)**<br>**2019 – 1.5.4 (ஆ) (இ)**<br>**2018 – 1.5.4 (ஏ)** | 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் உப கடன்களாக கருதப்பட்டிருக்காத போதிலும், ரூபா 25.23 பில்லியன் கடன் தொகையினை 2014 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான உப கடன்களாக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த வெளிநாட்டு கடன்கள் என இ.மி.ச. பதிவுசெய்திருந்தது. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துதல் இ.மி.ச. இற்கு ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் இ.மி.ச. செலுத்தவில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவில்லை. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் திருப்பிச் செலுத்தும் | தேவையான விடயங்களை வெளிப்படுத்த வேண்டும். | இந்த நிலுவைத் தொகையை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கான திறைசேரியின் வழிகாட்டல் கிடைக்கும் வரை இ.மி.ச. அதை திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்துள்ளது. | CEB இந்த நிலுவைத் தொகையை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கான திறைசேரியின் வழிகாட்டல் கிடைக்கும் வரை இ.மி.ச. அதை திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்துள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நிலைமைகள் (மூலதனம் மற்றும் வட்டி செலுத்துதல்) மீதான நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை. | | | |
| **10** | **2020 - 1.5.3** (ஈ)<br><br>**2019 – 1.5.4** (எ) | பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், ரூபா 54.71 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் இக் கடன்களின் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை. | பொதுத் திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைளில் கைச்சாத்திடுதல் வேண்டும். | இந்த பிரச்சினை தீர்க்கப்படவில்லை. | இந்த பிரச்சினை தீர்க்கப்படவில்லை. |
| **11** | **2020 - 1.5.3** (உ)<br><br>**2019 – 1.5.4** | 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு | பதியப்படாத பட்டியல்களை பெறுமதியிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். | 2020-12-31 நிலவரப்படி, அரசு நிறுவனங்களுக்காக மேற்கொள்ள ப்படும் வேலைகளின் உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் | 31-12-2021 நிலவரப்படி, அரச நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் உண்மையான செலவுக்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (உ)<br><br>**2018 – 1.5.4**<br>(உ) | மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைப்பட்டியல் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66.99 மில்லியனால் ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிலுவையிலுள்ள மீதிகளிற்கான தீர்ப்பனவு விபரங்கள் மற்றும் பட்டியல்களை இ.மி.ச. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. | | இடையிலான வேறுபாடு ரூபா 43,421,695.18 பொது முகாமையாள ரின் 2020-12-21 திகதி கடிதத்தின் மூலம், இ.மி.ச. எதிர்கொண்டுள்ள திரவத்தன்மை சிக்கல்களைச் சமாளிப்பதற்காக அரசு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள தொகையை திரும்பப் பெறுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகத்தினது உதவியை நாடியுள்ளார். இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத் திடமிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. தொடர்ச்சியான முயற்சிகளு க்குப் பிறகும் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவால் அரசு நிறுவனங்களில் இருந்து நிலுவையாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு முடியாத நிலை காணப்படுவதால் அவற்றை பதிவழிப்பதற்காக ஒரு சபை விஞ்ஞாபனத்தை வரைவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த பெறவேண்டிய மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் | உள்ள வித்தியாசம் ரூபா. 36,811,013.41. துல்லியத்தை உறுதிப்படுத்த இன்னும் தீர்வு விவரங்கள் கனக்காய்வுக்கு வழங்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஐயப்பாடு நிலவுகின்றமையால், இ.மி.ச. இந்த நிலுவைகள் மீது முழுமையான நட்டக்கடன் ஏற்பாட்டை செய்துள்ளது. | |
| **12** | **2020 - 1.5.3** (ஊ)<br><br>**2019 – 1.5.4** (ஊ)<br><br>**2018 – 1.5.4** (ஊ) | 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டி ருந்ததுடன் ரூபா 1.5 பில்லியன் தொகை நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.0 பில்லியன் தொகையினை உரிமைத்து வத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், பொது பொதுத் திறைசேரியிடமிருந் து இ.மி.ச. ஆல் எந்தவொரு முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில் லை. எனவே இந்த | 2016 இல் பொதுத் திறைசேரியினால் விதிக்கப்பட்ட தீர்வைக்காக செலுத்திய ரூபா 5 பில்லியன் தொகை உரிமைத்துவக் கூற்றில் காண்பிக் கப்படுதல் வேண்டும். | 2019.10.16 ஆந் திகதிய PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவு திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ”முகாமைத்துவக் கட்டணம்” என்று கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியில் காலத் தேய்மானம் செய்யப்பட்டது. | இந்த கட்டணம் 2017 முதல் 10 வருட காலத்திற்கு காலத் தேய்மானம் செய்யப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டிற்கான நட்டம் ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டி ருந்தது. | | | |
| **13** | **2020 - 1.5.3** (எ)<br><br>**2019 – 1.5.4** (எ)<br><br>**2018 – 1.7 (அ) (i)** | விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.18 பில்லியன் மதிப்புள்ள 7,546 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவி ல்லை. | பூரணப்படுத்திய வேலைகளை மூல தனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். | பூரணப்படுத்திய வேலைகளை சரியான நேரத்தில் மூலதனமாக்குவதற்கா க தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின் றன. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மூலதன வேலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் ஒப்படைக்கவும் மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2021 மே 31 இல் உள்ளவாறு கடந்த 4 ஆண்டுகளில் DD1 ஆனது 21% இனை மூலதனமாக்கியதுடன், DD3 ஆனது 28% இனை மூலதனமாக்கியது. | நிறைவு அறிக்கைகள் பெறப்பட்டவுடன் அனைத்து முடிக்கப்பட்ட பணிகளும் சொத்துக்களுக்கு மாற்றப்படும். நிலுவையில் உள்ள பணிகளுக்கான நிறைவு அறிக்கைகளை ஆய்வு செய்ய மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டன. அதன்படி, 2022 மார்ச் 31, நிலவரப்படி, 4 ஆண்டுகளில் 32 சதவீத பணிகள் மூலதனமாக்கப்பட்டு ள்ளன. |
| **14** | **2020 - 1.5.3** (ஐ)<br><br>**2019 – 1.5.4** **(க)** | 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179.19 மில்லியன் மொத்தக் கிரயம் கொண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படுவ தற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள் ளது. ஆகவே | குறித்த வாகனங் களை மூல தனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். | வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்பட்ட பின்னர் இத்தொகை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்படும். | தற்போது வரை இருப்புத்தொகை மாறாமல் உள்ளது, மேலும் நிலுவைத் தொகையை மூலதனமாக்க திட்ட முகாமைப் பிரிவின் நடவடிக்கைக்காக காத்திருக்கிறது.<br><br>தற்போது, திட்டத்தின் மூலம் வாங்கப்பட்ட வாகனங்களின் விவரங்கள் திட்ட முகாமை பிரிவு மற்றும் AFM |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நிறுத்திவைத்த உழைப்புகள் ரூபா 179.19 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | | அலுவலகத்தால் பராமரிக்கப்படுகின்றன. மேலும், கடனில் எடுக்கப்பட்ட வாகனங்கள் அடங்கிய அட்டவணை இறுதிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| **15** | **2020 - 1.5.3** (ஓ) | ரூபா 30.56 மில்லியன் தொகையான வீதி விளக்கு பராமரிப்பு செலவுகளின் அறவிட முடியாமைக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | குறித்த தொகையின் அறவீட்டுச் சாத்தியம் குறித்து மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் தேவையான ஏற்பாட்டை செய்தல் வேண்டும். | மிகுதி நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் மீளளிப்பதில்லை என்ற தீர்மானத்தை தென் மாகாணம் எடுத்துள்ளது. | நிலுவைத் தொகையை பதிவழிக்க இயக்குநர்சபை குறிப்பு தயாராகி வருகிறது. |
| **16** | **2020 - 1.5.3** (க) | 2021 சனவரி 01 முதல் 2021 சனவரி 15 வரையிலான காலத்திற்குரிய வருவாயை மீளாய்வாண்டின் வருவாயாக அங்கீகரித்தமையால் சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 585.69 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. எனவே ஆண்டிற்கான வருவாயும் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது. | காலத்திற்குரிய பட்டியல் பொழிப்பை கலண்டர் மாதத்துடன் இணக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பட்டியல் பொழிப்பின் காலப்பகுதியை காலண்டர் மாதத்திற்கு இணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய மீதி 2021 ஆம் ஆண்டிலிருந்து உருவாக மாட்டாது. | 2021 முதல் அத்தகைய இருப்பு எதுவும் உருவாக்கப்படவில்லை. |
| **17** | **2020 - 1.5.3** | உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள | குறித்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | இதனை பதிவழிப்பதற்குத் தேவையான சபை | திறைசேரியில் இருந்து இன்னும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ச) | ரூபா 1.57 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ESC) வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. | வேண்டும். | பத்திரங்கள், அங்கீகாரத்திற்காக 2019 ஆம் ஆண்டில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், இந்த ஈஎஸ்சி நிலுவைகளை பதிவழிப்புச் செய்யாமல், மின்வலு அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அறிவிப்பதன் மூலம் இந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது வேறு ஏதேனும் செலுத்த வேண்டியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கான மாற்றுவழிகளை நிச்சயிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்துள்ளது.<br><br>இது 2018 இன் தேசிய பாதீட்டு பிரேரணைகளின் ஒரு பகுதியாக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது டன் வரி நிவாரணத்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் மின்வலு அமைச்சின் ஊடாக பொது திறைசேரிக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டது. | பதில் இல்லை. |
| **18** | **2020 - 1.5.3** (ட) | அசாதாரண செலவுமீதித் தொகையை எதிரீடு செய்தமையால், விநியோகப் பிரிவிலுள்ள நடைபெறும் வேலை ரூபா 52.06 மில்லியன் | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா 26,014,986 தொகைக்கான அசாதாரண செலவு மீதிகளிற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் | இந்த நிலுவையில் ரூபா. 1.8 மில்லியன் ஏற்கனவே தீர்பனவு செய்யப்பட்டு மீதமுள்ளவை தீர்க்கப்பட்டு வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | | மற்றும் லைட்டிங் ஸ்ரீலங்கா இரத்னபுரி செயற்திட்டம் தொடர்பான வேலைகளை மீளாய்வு செய்து ரூபா 26,045,997 தொகை தனிப்பட்ட வேலை அடிப்படையில் தீர்க்கப்படும். | |
| **19** | **2020 - 1.5.3** (த) | சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 912.69 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதே தொகையால் நட்டம் குறைத்து கூறப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 245.53 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். | மீதியை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021ஆம் ஆண்டுக்குள் 77 சதவீதம் நிலுவைத் தொகை சரி செய்யப்பட்டுள்ளது. |
| **20** | **2020 - 1.5.3** (ப) | நிதிக்கூற்றுக்களிலிருந்து 12 வாகனங்கள் விடுபட்டிருந்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | வாகனங்களை நிலையான சொத் துக்கள் பதிவேட் டில் பதிவு செய்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனங்களை நிலையான சொத் துக்கள் பதிவேட் டில் பதிவு செய்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த விடயம் தீர்க்கப்படவில்லை. |
| **21** | **2020 - 1.5.3** (ர) | 2015 ஆம் ஆண்டு முதல் முடிக்கப்படாதுள்ள ரூபா 167.25 மில்லியன் மதிப்புள்ள இரண்டு | குறித்த செயற்திட்ட ங்களின் முடிவுறா வேலை மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத் தல் வேண்டும். | தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டது டன் இரண்டு செயற்திட்டங்களினதும் | திட்டத்தின் பெயர் - EDDPDM<br><br>Dehiwala Mt (EDDPDM – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | செயற்திட்டங்கள் அகற்றப்படாமல் நடைமுறை வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. | | நடைபெறும் வேலைகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 972.10) DD4 இன் DGM (PHM) கிளையால் நிர்வகிக்கப்படும் மின் விநியோக மேம்பாட்டுத் திட்டம், செயல்பாட்டு வேலையில் மீதமுள்ள ரூபா. 39,075,308 செயல்பாட்டு வேலை மீதியை பதிவழிப்பதற்காக இயக்குநர்கள் சபைக் குறிப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது.<br><br>திட்டத்தின் பெயர் - L.S.H.P தங்காலை புதிய கேன்ட்ரி, T13 வரையிலான பிரிவு 30 மார்ச் 2022 அன்று அதிகாரம் பெற்றது. காணி உரிமையாளர்களால் பல ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள பிரிவு T13-T45 க்கு உரிய நேரத்தில் அதிகாரம் அளிக்கப்படும் மற்றும் மாற்று முன்மொழிவுகளுடன் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றி விடுப்பு அனுமதியை (**way leave clearance)** முடிக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **22** | **2020 - 1.5.3** (ய) | 2007 ஆம் ஆண்டு முதல் மிகை அறவீடு நிறுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்கு இல. 3670100474 இல் காணப்படுகின்ற நிலுவைத் தொகை தொடர்பாக சபை ரூபா 6.54 மில்லியனைத் தவறுதலாக மிகை அறவீடாக சாட்டியிருந்தது. எனவே நிறுத்திவைக்கப்பட்ட வருவாய் அதே தொகையால் அதிகமாகக் கூறப்பட்டி ருந்தது. | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நட வடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிலுவையில் உள்ள மிகை அறவீட்டுக் கட்டணம் ரூபா 6,540,244 என்பது நீதிமன்ற வழக்கு இல. 43932/MR (மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு) இற்கு உரித்தானதாகும். நீதிமன்ற வழக்கு முடிவடையும் வரை இந்த நிலுவையை தனியாக வைத்திருக்க இ.மி.ச. இன் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. | நீதிமன்ற வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. |
| **23** | **2020 - 1.5.3** (ற) | நிலக்கரி கப்பலேற்றல் கட்டணத்திற்கான ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டி ருக் கவில்லை. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் கால த்துடன் தொர்ர்பு டைய அட்டுறுக் களை இனங்காண் பதற்கு தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா 63.56 மில்லியன் மற்றும் ரூபா 42.03 மில்லியன் தொகை 2021 இல் செலுத்தப்பட்டது. | CEB ஆனது CSC இலிருந்து தெளிவுபடுத்தல் கடிதத்தைப் பெற்ற பிறகு, 2018/19 காலத்துக்கான தீர்பனவுக் கட்டணத்திற்கான இறுதித் தொகை ரூபா.13,455,000 செலுத்தப்படும்.<br><br>2018/2019 நிலக்கரி பருவத்திற்கான இறுதி VAT கட்டணம் ரூபா. மீதமுள்ள 8,072,427.98 பணம் இன்னும் LCC உடன் பேச்சுவார்த்தையில் உள்ளது. |
| **24** | **2020 - 1.5.3** (ல) | இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை | நிதிக்கூற்றுக்கள் மீளமைக்கப் படுவதை தவிர்ப்பதற்காக உள்ளக | நிதிக் கூற்றுக்கள் மீளமைப்பதைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு | நிதிநிலை அறிக்கைகள் மறுபரிசீலனை செய்யப்படுவதைத் தடுக்க உள்ளகக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2019 – 1.7** **(ஊ)** **2018 – 1.7** **(ஊ)** | தயாரித்து உண்மையாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களி லிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. இருப்பினும், சபையால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காரணமாக இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றது. | கட்டுப்பாட்டு முறைமையினை பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | முறைமையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுப்பாட்டு அமைப்பு பலப்படுத்தப்படும். |
| **25** | **2020 - 1.5.3** (வ) **2019 – 1.5.4** (க) | ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதியாக 2002 இலிருந்து | உரிய மீதிகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | ஆதாரப்படுத்தும் ஆவணங்களைக் கண்டறிந்து அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதாரப்படுத்தும் ஆவணங்களைக் கண்டறிந்து அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது. | | | |
| **26** | **2020 - 1.5.4** (அ)<br><br>**2019 – 1.5.5** (அ)<br><br>**2018 – 1.5.5** (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டு த்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 753.61 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. | தொடர்புடைய தரப்பி னருடன் கலந்தாலோ சித்து இந்த விடயத்தை தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக பெறோலியக் கூட்டுத்தாபனம், இ.மி.ச. திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வதற்கு மின்வலு அமைச்சில் நடந்த கணக்காய்வுக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. | இந்த விடயம் இன்னும் தீர்க்கப்படவில்லை. |
| **27** | **2020 - 1.5.4** (ஆ)<br><br>**2019 –** | விலைப்பட்டியலிடல் முறைமை யிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக | அந்தந்த பிரிவுகளின் பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் | கடன்பட்டோர் கணக்கிணக்கங்கள் அனைத்து விநியோகப் பிரிவுகளாலும் தயாரிக்கப்பட்டு, பிரிவுகளின் பிரதிகளுடன் | எடுக்கப்பட்ட நடவடிக்கை அப்படியே உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **1.5.5** (ஆ)<br><br>**2018 – 1.5.5** (ஆ) | விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப் பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 41.18 மில்லியன் கூட்டுமொத்தமான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன . மேலும், ரூபா 423.76 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டு ள்ளது. | தேவையான நடவடிக்கை எடுத்தல். | சமர்ப்பிக்கப்படுகின்றன . | |
| **28** | **2020 - 1.5.4** (இ)<br><br>**2019 – 1.5.5** (இ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 2,343 மில்லியன் மற்றும் ரூபா 149 மில்லியன் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை | அந்தந்த பிரிவுகளின் பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் தேவையான நடவடிக்கை எடுத்தல். | சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை 2021 இன் நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்ட நடவடிக்கை அப்படியே உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | | | |
| 29 | **2020 - 1.5.4** (ஈ) **2019 – 1.5.5** (ஈ) | ரூபா 117.58 மில்லியன் தொங்கல் மீதியின் தன்மையினை இனங் காண்பதற்காக அந்த மீதியுடன் தொடர்புடைய வயது பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | தொங்கல் கணக்கு மீதிகளிற்காக காலப் பகுப்பாய்வொன்றை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். | விநியோக பிரிவு 2 மற்றும் 4 ஆகியவை வயது பகுப்பாய்வை கைமுறையாகத் தயாரிப்பதுடன் இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். எனவே, எதிர்காலத்தில் தொங்கல் மீதிக்கான காலப் பகுப்பாய்வை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட்ட நடவடிக்கை அப்படியே உள்ளது. |
| 30 | **2020 - 1.5.4** (உ) | சபையால் வாடிக்கையாள ருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது. | குறித்த விடயத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல். | தற்போது செயன்முறையிலுள்ள இவ்விடயத்தை தீர்ப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | இந்தக் குழு 17/02/2020 அன்று 4270001917 என்ற கணக்கு இலக்கம் கொண்ட Sojits Kelanitissa (Pvt.) நிறுவனத்தின் கட்டணத்தை திருத்தும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்டது. பல விவாதங்கள் நடத்தப்பட்டன. |
| 31 | **2020 - 1.5.4** (எ) | நிதிக்கூற்றுக்களிற்கும் இ.மி.ச. தகவல் அமைப்பால் பராமரிக்கப்படும் பதிவுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவை களுக்கும் இடையே சூரிய சக்தி கொள்வனவு தொடர்பாக ரூபா 20.7 மில்லியன் தேறிய கணக்கு வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | குறித்த அறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல்களின் சரியான தன்மையை பரிசோதிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல். | குறிப்பிடப்பட்ட அறிக்கையில் வழங்கப்பட்ட தகவல்களின் சரியான தன்மையை மெய்மையாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிற்கான இருப்புக்கள் இணக்கம் செய்யப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **32** | **2020 - 1.5.4** (ஏ) | நிதிக்கூற்றுக்களிற்கும் இ.மி.ச. தகவல் அமைப்பால் பராமரிக்கப்படும் பதிவுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவை களுக்கும் இடையே சூரிய சக்தி கொள்வனவு தொடர்பாக ரூபா 100 மில்லியன் தேறிய நேர்பெறுமதி வேறுபாடு அவதானிக்கப்பட்டது . | மேல் குறிப்பிடப்பட்ட படி | மேல் குறிப்பிடப்பட்ட படி | 2021 ஆம் ஆண்டிற்கான இருப்புக்கள் இணக்கம் செய்யப்படும். |
| **33** | **2020 - 1.5.5** (அ)<br><br>**2019 – 1.6 (ஆ)**<br><br>**2018 – 1.6 (இ)** | 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்ப ட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இ.மி.ச. இன் பதவியணியினரிற்கு காலத் திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,544.4 மில்லியன் மற்றும் ரூபா 1,712 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் | பதவியணியினருக்கு படிகளைச் செலுத்து கையில் சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். | எந்த தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | எந்தவொரு மாற்றமும் தொழில்துறை நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால், சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு இந்த கொடுப்பனவுகளை CEB தொடர்ந்து செலுத்துகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| 34 | 2020 - 1.5.5 (ஆ)<br><br>2019 – 1.6 (இ)<br><br>2018 – 1.6<br><br>(ஈ) | 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்கு வதற்குப் பதிலாக இ.மி.ச. 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங் கியிருந்தது. மேலும், இ.மி.ச. பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதவியணியினருக்கு கடன்களைச் செலுத்து கையில் சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் விலகல் காணப்படுமாயின் அதற்கு பொது முயற்சி கள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | எந்த தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | எந்தவொரு மாற்றமும் தொழில்துறை நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால், இயக்குநர்கள் குழுவால் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட கடன் திட்டங்களின்படி CEB தொடர்ந்து வாகனக் கடன்களை வழங்குகிறது. |
| 35 | 2020 - 1.5.5 (இ)<br><br>2019 – 1.9<br><br>(அ)<br><br>2018 – 1.9 | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு | சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குவதற்கு நாம் அமைச்சிற்கு பரிந்துரைத்துள்ளோம். மேலும், பிசிஎஸ்இஎல்ஆர் ஆணைக்குழு (சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை எளிமைப்படுத்தல் | 28-05-2021 திகதியிட்ட கடிதம் இல. DGM (CS&RA)/GEN/1 க்கு மின்வலுதுறை அமைச்சகத்தின் பதிலுக்காக காத்திருக்கிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (அ) | ஆணைக் குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,613 மில்லியனாக இருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 6,731.90 மில்லியனாக இருந்தது. | | ஜனாதிபதி ஆணைக்குழு) இன் செயலாளருக்கான பிரதியுடன் மின்வலு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட இ.மி.ச. இன் டிஜிஎம்(சிஎஸ் மற்றும் ஆர்ஏ) /ஜிஇஎன்/1 ஆம் இலக்க 2021-05-28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குமாறு இ.மி.ச. கோரியுள்ளது. | |
| 36 | 2020 - 1.5.7<br>2019 – 1.5.2<br>2018 – 1.5.2 | வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (டிபிசிஎல்) கணக்காய்வாளர் அதன் நிதிக் கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்தி லெடுக்க வேண்டிய விடயங்களை சுட்டிக் காண்பித்திருந்தார். சாம்பூரில் 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்யும் ஒரே நோக்கில் செயற்பட்ட இக்கம்பனி, அதன் மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கை களை | உத்தேச செயற்திட்ட ங்களை அமுல்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடந்த காலங்களில் நடைபெற்ற டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் இந்த விடயம் தொடர்ந்து விவாதிக்கப்பட்டதுடன் தற்போது டிபிசிஎல் இல் சூரியசக்தி திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு டிபிசிஎல் இன் அமைப்பு அகவிதியை திருத்துவதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. சூரிய சக்தி திட்டத்தை தொடங்குவதற்காக இ.மி.ச. இற்கும் இந்தியாவின் நெஷனல் தெர்மல் பவர் கம்பெனி லிமிடெட் (என்.டி.பி.சி) இற்கும் இடையே | 50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையத்தின் வளர்ச்சி<br>------------------------------<br>அட்டர்னி ஜெனரலின் ஒப்புதலுக்குப் பிறகு சாம்பூரில் நிலக்கரி ஆலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் TPCL ஆல் 50 மெகாவாட் சூரிய சக்தியை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சி மற்றும் பங்குதாரர் ஒப்பந்தம் (JVSHA) 11.03.2022 அன்று கையெழுத்தானது.<br>அபிவிருத்தி தொடர்பாக, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2016 ஆம் நிதி ஆண்டில் கைவிட்டிருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் 2018 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந் தன. அதற்குப் பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டி ருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி மின்வலுப் பொறிகளின் அபிவிருத்திச் செயற்பாடு களில் எவ்வித முன்னேற்றமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. அதற்கிணங்க, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்ற ாக தொடர்ந்து செயற்படுவதற்கான கம்பனிக்குள்ள | | கூட்டு முயற்சியில் கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை 2021 இல் பணிப்பாளர் சபை மேற்கொள்ளவுள்ளது. எவ்வாறாயினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்பு சட்டமா அதிபரிடமிருந்து தேவையான சட்ட விளக்கங்கள் பெறப்படுதல் வேண்டும். இ.மி.ச. இற்கும் என்டிபிசி இற்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடல்களு க்குப் பின்னர், இரு கட்சிகளும் 2019 அக்டோபர் 25 ஆம் தேதி கெரவலப்பிட்டியில் உள்ள எல்என்ஜி மின்நிலையத்தை மேம்படுத்துவதற்காக கூட்டு முயற்சியில் கையெழுத்திட்டன. மேலும், கம்பனியின் அகவிதிக்கான சட்டமா அதிபரின் தெளிவுபடுத்தல்கள் 2021 யூலை மாதத்தில் கிடைத்தது. முன்மொழியப்பட்ட திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபை கருதுகிறது. | முதலீட்டுச் சபை, காணி ஆணையாளர் திணைக்களம், SEA மற்றும் CEA போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் ஆரம்ப கலந்துரையாடல்க ள் நடத்தப்பட்டன. மேலும், CEA யிடமிருந்து தற்காலிக அனுமதியைப் பெறுவதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>500 மெகாவாட் எல்என்ஜி மின் உற்பத்தி நிலையத்தின் வளர்ச்சி<br>--------------------------------<br>CEB மற்றும் NTPC, இந்தியா இடையே JVSHA உடன்படிக்கை 25.10.2019 அன்று கையொப்பமிடப்பட் டதுடன் கெரவலப்பிட்டியவி ல் 300 மெகாவாட் (தொழில்நுட்ப சிக்கல்களுக்கு உட்பட்டு) LNG ஆலையை அபிவிருத்தி செய்வதற்காக 50: 50 பங்குடன் புதிய நிறுவனத்தை உருவாக்குவதற்கு சட்டமா அதிபரின் அனுமதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமை யை இது சுட்டிக் காட்டுகின்றது. | | | பெறப்பட்டது.<br><br>இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (SLLDC) உத்தேச நிலத்தை (சதுப்பு நிலத்தை) மீட்டு CEBயிடம் ஒப்படைக்க உள்ளது. 2021 ஆகஸ்ட் இல் சீரமைப்புக்கு எதிராக பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக, SLLDC இன்னும் சீரமைப்பு பணிகளை தொடங்கவில்லை. எனவே, கெரவலபிட்டியவில் மேற்படி காணியை மீளப்பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கும் வரை, LNG எரிசக்தி அபிவிருத்திக்கான புதிய கூட்டு முயற்சி நிறுவனம் ஒன்றை நிறுவுவது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்ட து. |
| **37** | **2020 - 1.6.1** (அ)<br><br>**2019 – 1.8.1** (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 42,358 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 5,122 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவ தற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்டகால நிலுவைத் தொகையை சேகரிக்க தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிலுவையில் உள்ள வணிக கடன்படுநரை தீர்ப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>• இயல்புநிலை வாடிக்கையாளரின் செயலில் உள்ள கணக்குகளைக் கண்டறிந்து, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2018 – 1.8.1** (அ) | நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 2,671 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. | | | செயலில் உள்ள கணக்குகளுக்கு நிலுவைகளை மாற்றவும்.<br>• நிலுவைத் தொகைக்கு எதிராக போதுமான பாதுகாப்பு வைப்புத்தொகையைக் கொண்டிருந்த மூடிய கணக்குகள், நிலுவைத் தொகையின் ஒரு பகுதியை ஈடுகட்ட நிலுவைத் தொகைக்கு எதிராக தீர்க்கப்பட்டுள்ளன.<br>• நிலுவைத் தொகையை வசூலிக்க இணைப்பு துண்டிக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.<br><br>மேலும், 31.12.2021 நிலவரப்படி 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் வாங்கியவர்களில் 81 சதவீதத்தை DD1 தீர்த்து வைத்துள்ளது. மேலும், DD3 2021 இல் 1-5 வருட கடனாளிகளில் 38 சதவீதத்தை தீர்த்து வைத்துள்ளது.<br><br>மேலும், WPS1 மற்றும் SP இன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | DD4 இல் 10 ஆண்டுகளுக்கும் மேலான தனிப்பட்ட இருப்புகளைக் கொண்ட பொது விநியோக வாடிக்கையாளர்களின் நீண்ட நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்கு இரண்டு பணிப்பாளர் சபை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. |
| **38** | **2020 - 1.6.1** (ஆ)<br><br>**2019 – 1.8.1** (ஆ)<br><br>**2018 – 1.8.1** (ஆ) | ரூபா 7,135,654,703 கூட்டுத் தொகையான சில்லறைக் கடன் பட்டோர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது. பெறவேண்டிய நிறுத்திவை த்தல் வரி ரூபா149,252,278<br><br>ஏஈஎஸ் களனிதிஸ்ஸ ரூபா1,368,961,445<br><br>நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை ரூபா 897,025,999 | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு அல்லது அகற் றுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வாளரிடமிருந்து நோஷனல் வரிச் மற்றும் நிறுத்திவைத்தல் வரி சான்றிதழ்கள் உட்பட தொடர்புடைய ஆதார ஆவணங்கள் CEB ஆல் கோரப்பட்டுள்ளன.<br><br>இ.மி.ச., சிபிசீ, திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இணைந்து மின்வலு அமைச்சினால் இந்த நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள நிலுவைப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது<br><br>மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையின் படி, இந்த மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரை | அரச கணக்காய்வாளரிடமிருந்து ரூபா. 149,252,278 நோஷனல் வரிச் சான்றிதழுக்காக கோரப்பட்டுள்ளதுடன்கணக்காய்வாளர்கள் கணக்கு அதிகாரியிடம் (கட்டணங்கள்) தொடர்புடைய தகவலின் சரியான தன்மையை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.<br><br>எடுக்கப்பட்ட நடவடிக்கை அப்படியே உள்ளது.<br><br>இந்த நிலுவை தொகையை கணக்குகளில் இருந்து பதிவழிக்க சபை ஒப்புதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அகற்றிய டிரான்ஸபோமர்ஸ் ரூபா 497,144,445 | | செய்யப்பட்டுள்ளது. ஆகையால், அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். காரணங்களை கண்டறிய புலானாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட்டுள்ளது. எடுக்கப்பட்ட நடவடிக்கை அப்படியே உள்ளது. |
| 39 | **2020 - 1.6.1** (இ) **2019 – 1.8.1** (இ) **2018 – 1.8.1** (ஈ) | நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714,965,435 மீதி தொடர்ந்தும் அறவிடப்பாது வைக்கப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த மீதியானது தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் ரூபா 478,179,795.00 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் இன் ரூபா 236,785,639.43 தொகைகளை உள்ளடக்குகின்றது. தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் நிலுவை தொடர்பில் ஒரு அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் விடயத்தில் லங்கா கோல் கம்பனி ஒரு நடுவர்தீர்ப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா கோல் கம்பனியினால் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட | சட்ட நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பின்னர் இந்த மீதி நீக்கப்படும். | |
| **40** | **2020 - 1.6.1** (ஈ)<br><br>**2019 – 1.8.1** (ஈ)<br><br>**2018 – 1.8.1** **(உ)** | சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 115,093,276 தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்ற வேளையில் பெறவேண்டியவற்றை அறவீடு செய்தல் வேண்டும். | அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிடுவதற்காக முகாமைத்துவத்தால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், முன்னைய ஆண்டுகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் மேலதிக பொ.மு. (ஏஎம்) அவர்கள் விசேடமாக அரசாங்க நிறுவனங்களின் வேலைகளிற்கான கிரயத்தை அறவிடுதல் தொடர்பில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடை அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கியிருந்தார். அதற்கமைய, கிரய அறவிடும் வேலைகளை பொறுப்பேற்றல் மற்றும் சேவைநாடுனரிடமிருந்து பணத்தினை அறவிடுதல் என்பன காலரீதியாக கணக்காணிக்கப்படும். | 2018 ஆம் ஆண்டில் கூடுதல் அசோசியேட் (AM) வழங்கிய முறையான உள் கட்டுப்பாடுகள் மற்றும் பின்தொடர்தல் வழிகாட்டுதல்கள், தற்போதைய பணிகள் மீட்கப்படாமல் இருப்பதைக் குறைக்க ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளன. |
| **41** | **2020 - 1.6.1** (உ) | ரூபா 3,835,654 ஊழியர் கடன் தொகை மீளப் பெறப்படாமல் விநியோக பிரிவு 01 இல் காணப்படுகின்றது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விசாரணையில் உள்ள மொத்த மீதியில் ரூபா 622,684.25 தொகை என்பது இராஜினாமா செய்த அல்லது பதவிகள் வறிதாக்கப்பட்ட | அந்த நிலுவைத் தொகையில், ரூபா.496,414 (DGM-NWP) என்பது ராஜினாமா செய்த அல்லது தங்கள் பதவியை விட்டு வெளியேறிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஊழியர்களுடன் தொடர்பு டையதாகும். எனவே, கடன் நிலுவைத் தொகையை அவர்களின் ஊ.சே.நி. நிலுவைத் தொகையிலிருந்து மீளப் பெறுமாறு ஊ.சே.நி. பிரிவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபா 1,049,150 கடன் நிலுவை வைத்திருந்த ஊழியர் வெளிநாட்டு விடுமுறையில் இருந்து 2021 ஆம் ஆண்டில் வேலைக்குத் திரும்பியுள்ளதுடன் அவரது சம்பளத்தில் இருந்து மீளப்பெறுவதற்கு உரிய நிலுவைத் தொகை ஊதியப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஊழியர்களுடன் தொடர்புடையது.<br><br>எனவே, சம்பந்தப்பட்ட பணியாளரின் பணியாளர் வருங்கால வைப்பு நிதியில் இருந்து நிலுவையில் உள்ள கடன் பாக்கியை வசூலிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **42** | **2020 - 1.6.1** (ஊ) | விநியோகப் பிரிவு 1 இன் கீழுள்ள மத வழிபாட்டு இடங்களிலிருந்து அறவிடப் படாது ரூபா 16,995,630 தொகை நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவ தற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திருப்திகரமான தீர்வு வழங்கப்படாத நிலையில் அதனைத் தீர்த்து வைக்குமாறு மாவட்ட செயலகத்திடம் கோரப்பட்டுள்ளது. | ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், எதிர்காலத்தில் இதுபோன்ற நிலுவைத் தொகைகளை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. |
| **43** | 2020 - 1.6.2 (அ)<br><br>2019 – 1.8.2 (அ) | பின்வரும் ரூபா 4,306,803,673 கூட்டுத்தொகையா ன கடன்கொடுநர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த | பொறுப்புக்களைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத் தல் வேண்டும். | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2018 – 1.8.2 (அ) | ன.<br><br>சுங்கம் ரூபா 1,065,828<br><br>சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம்<br><br>ரூபா **3**,034,971,432<br><br>செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி **(deemed dividend)** ரூபா 1,270,766,413 | | லக்விஜய பணமதிப்பிழப்பு கட்டணக் குழுவின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் இத் தொகை செலுத்தப்படும்.<br><br>2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு களிற்காக செலுத்த வேண்டிய செயல்பாட்டு மற்றும் பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக் குகின்றது. இ.மி.ச. இன் தற்போதைய பாதகமான நிதி நிலைமை காரணமாக மாதத்திற்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மாத்திரமே செலுத்தப்படுகின்றது.<br><br>செலுத்தவேண்டிய ரூபா 1,270,766,413 பிடித்துவைத்த பங்கிலாப வரியானது 2009/2010 மற்றும் 2010/2011 க்கு கோரப்பட்ட பிடித்து வைத்த பங்கிலாப வரிக்கு எதிராக செலுத்தப்பட வேண்டிய பங்கிலாப வரியை பிரதிநிதி த்துவம் செய்கின்றது. கணக்குகளில் இந்த பொறுப்பைத் பதிவழிப்ப தற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்க ளத்தால் திரும்பப் பெறும் கோரிக்கைகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை | இன்னும் நிலுவையில் உள்ளது.<br><br>இன்னும் நிலுவையில் உள்ளது.<br><br>இன்னும் நிலுவையில் உள்ளது. |
| **44** | **2020 -** | நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) | குறித்த மீதியை பதிவழிப்பதற்குத் | இந்த தொகைகளை பதிவழிப்பதற்குத் | நிர்வாகத்துடன் கலந்தாலோசித்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **1.6.2** (ஆ) | லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் வியாபார கடன்கொடுத்தோரா க வைக்கப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும். | பிறகு, மொத்த நிலுவைத் தொகையை பதிவழிக்க ஒரு சபை குறிப்பு தயாரிக்கப்படும். |
| | | சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமை முடிவுகள் போன்றவற்றுடன் இணங்காதது | | | |
| **45** | **2020 - 1.7.** (அ)<br><br>**2019 – 1.9** (ஆ) | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை திருத்திய சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவுகளுக்கு முறணாக ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 18.91 பில்லியன் பெறுமதியான 732.192 ஜிகாவோட் எரிசக்தி, மின் பிறப்பாக்க த்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிட மிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டி ருந்தது. | சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். | இந்த மூன்று நாட்பட்ட சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் மின் உற்பத்தி நிலையங்களின் காலாவதியான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை (பிபிஏ) நீடிக்க இ.மி.ச. பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஒப்புதலை கோரியதுடன் கால நீடிப்புச் செய்யப்பட்ட மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை அதன் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தது. | பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி பெறப்படவில்லை. |
| **46** | **2020 - 1.7.** (ஆ) | **2009** இன் **20** ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்திய சட்டத்தின் **7(1), 43(2)** மற்றும் **43(7)** ஆம் பிரிவுகளுக்கு | சட்டத்திலுள்ள குறித்த தேவைப்பாடு களுடன் இணங்கி யொழுகுதல் வேண்டும். | வரைவு மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒப்புதலுக்காக | பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி பெறப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | முறணாக மின்வலு கொள்வனவு உடன் படிக்கைக்கு (PPAs) அங்கீகார த்தைப் பெற்றுக்கொள்ளாது, மேலதிக மாக 100 MW மின்வலு இயலளவு 2019 ஆம் ஆண்டில் ஆறு மாதங்களி ற்காக பிறப்பாக்க அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கா த மின்வலு உற்பத்தியாளர்களி டமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி முதல் 6 மாதங்களிற்கு காலநீடிப்புச் செய்யப்பட்டு ரூபா 3.26 பில்லியன் பெறுமதியான 78.669 Gwh எரிசக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | சமர்ப்பிக்கப்பட்டன. | |
| **47** | **2020 - 1.7** (இ)<br>**2019 – 1.9** (இ)<br>**2018 – 1.9**(ஆ ) **ii** | நிதியத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,996 மில்லியன் தொகையை மாத்திரம் சீஈபீ முதலீடு செய்திருந்தது. இருப்பினும் 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் படி | சட்டத்திலுள்ள குறித்த தேவைப்பாடு களுடன் இணங்கி யொழுகுதல் வேண்டும். | இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்ட வுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான சொத்துகளில் 1% க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதகமான திரவ நிலைமை தொடர்வதால் முதலீடுகள் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதி லும் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் ரூபா. **1.2** பில்லியன் முதலீடு செய்யப்பட வேண்டும். | | | |
| **48** | **2020 - 1.7.(ஈ)**<br><br>**2019 – 1.9 (ஈ)** | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவுக்கு முரணாக, 2008 முதல் அவ்வப்போது உரிய அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 56 ஊழியர்களிற்காக ரூபா 79.13 மில்லியன் தொகையினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடு களுடன் இணங்கி ஒழுகுதல் வேண் டும். | உரிய அமைச்சுக்கு ஊழியர்களை விடுவித்தல்<br>------------------------<br>CEB இந்த செலவை CEBக்கு திருப்பிச் செலுத்துமாறு அமைச்சிடம் கோரும்.<br><br>சேமலாப நிதியத்துக்கு ஊழியர்களை விடுவித்தல்<br>---------------------<br>ந்த விடயத்தை இ.மி.ச. இன் சேமலாப நிதிய முகாமைத் துவக் குழுவில் (வர்த்தமானியின் மூலம் நிறுவப்பட்ட ஆளுகைக் குழு) முன்வைக்கப்பட்டதுடன், நிர்வாகச் செலவுகளைச் செய்யும் தற்போதைய நடைமுறையைத் தொடர்வதற்கு 2021 | இந்த செலவினங்களை CEBக்கு திருப்பிச் செலுத்துமாறு CEB அமைச்சிடம் கோரியுள்ளது.<br><br>CEB தற்போதைய வழிமுறையை தொடர்ந்து பின்பற்றுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெப்ரவரி 11 அன்று நடைபெற்ற கூட்டத்தில் குழு முடிவு செய்தது. ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகள் சபையால் பொறுப் பேற்கப்படுகின்ற தற்போதைய கொள்கையை தொடர்வதற்கு குழு ஒப்புதல் அளித்தது. | |
| **49** | **2020 - 1.7.** (உ) | பொது முயற்சிகள் திணைக்களத்தினா ல் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அமைச் சின் கணக்கா ய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்க ப்பட்ட தீர்மானங்களுக்கு முரணாக ரூபா 1.2 பில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் விடுமுறை காசாக்கல் என்ற வகையில் செலுத்தப்பட்டி ருந்தது. | சுற்றிக்கை ஏற்பாடு கள் மற்றும் தீர்மானங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். | இப்பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எந்தவொரு மாற்றமும் தொழில்துறை நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் முந்தைய முடிவில் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் தொகைகளை CEB அதன் அதன் ஊழியர்களுக்கு தொடர்ந்து செலுத்துகிறது. |
| **50** | **2020 - 1.7.** (ஊ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் 47 ஆம் பிரிவுக்கு முரணாக, உழைப்புக்களை கணிப்பிடு கையில் எக்சோடஸ் கொடுப்பனவு, முதுமானிப் பட்டக் கொடுப்பனவு மற்றும் உயர் தொழில் | சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். | இப்பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எந்தவொரு மாற்றமும் தொழில்னுட்ப நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் முந்தைய முடிவுகளின்படி முதலாளியின் பங்களிப்பைக் கணக்கிடுவதில் சேமலாப நிதிக்கான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு / பகுதி உயர் தொழில் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து ஆகக் கூடிய கொடுப்பனவை இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தது. | | | வருவாயை கணக்கிடும் போது CEB இந்த கொடுப்பனவை தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. |
| **51** | **2020 - 1.7.** (எ) | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் 6.1.3 ஆம் பிரிவுக்கு அமைய 220kv வலுவில் இ.மி.ச. இனால் கம்பனிக்கு வழங்கப் பட்ட மின்சக்தி, 220kv வலுவில் மின்சக்தியினை வழங்குவதற்கு எந்த விதிமுறைகளும் நிபந்த னைகளும் இல்லை என்றால், அத்தகைய விநியோகத்தின் போது இ.மி.ச. இன் வழங்கல் நேரத்தில் இ.மி.ச. இன் தொழில்துறை நுகர்வோருக்காக இ.மி.ச. இடமிருந்து கம்பனி அறவிடு கின்ற மின்சக்தி கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். இந்த விதிமுறைக்கு மாறாக, கம்பனிக்கு இ.மி.ச. இனால் வழங்கிய மின் சக்தி கட்டண வீதத்தை | குறித்த விடயத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடி க்கை எடுத்தல் வேண்டும். | ஒரு விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதுடன் இந்தப் பிரச்சினையை முறைப்படுத்த ஒரு நிபுணர் குழுவின் பரிந்துரை அவசியமாகும். | உள்ளூர் பொறி யியளாளர் திறன் கட்டணம் மற்றும் எரிசக்தி கட்டணங்களுடன் பட்டியல் அனுப்ப ஒப்புக்கொண்டார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கணிப்பிடுகையில் இயலளவுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை கருத்தில் கொள்ளாமல் எரிசக்தி கட்டணத்தை மட்டுமே இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தது. | | | |
| **52** | **2020 - 1.7.** (ஏ) | அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கி களை பயன்படுத்துவதன் மீதான 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு இ.மி.ச. தவறியிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தை அமு ல்ப்படுத்த தேவவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பல்வேறு காரணங்களால் மேற்படி தீர்மானம் இதுவரை அமுல்படுத்த ப்படவில்லை. | இந்த விடயம் தீர்க்கப்படவில்லை. |
| **53** | **2020 - 1.7.** (ஐ) | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்திய சட்டத்தின் 24(1) ஆம் பிரிவு தேவைகளை கருத்தில் கொள்ளாமல் நீண்டகால மின்வலு பிறப்பா க்க விரிவாக்கத் திட்டத்தில் காணப்படுகின்றவாறு மின் வலு உற்பத்தி நிலையங் கள் ஆரம்பிக்கப்படாமை யால் நியாயமான முன்னறிவிப்புத் தேவையை பூர்த்தி செய்ய உற்பத்தி ஆலைகளில் போதுமான இயலளவு இருப்பதை | குறித்த தேவைப்பட் டுடன் இணங்குவத ற்காக நீண்ட கால, குறைந்த விலை மின் உற்பத்தி நிலைய ங்களை உருவாக்க வேண்டும். | நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, பெரும்பாலான மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படவில்லை | இந்த விடயம் தீர்க்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (பரிமாற்ற உரிமம் பெற்றவர்) உறுதிசெய்ய இ.மி.ச. தவறியிருந்ததுடன் அதன் காரணமாக அனல் மின்சாரம் குறுங்கால அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | | |
| | | வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை | | | |
| **54** | **2020 – 1.8**<br><br>**2019 - 1.10** (அ)<br><br>**2018 – 1.6** (இ)<br><br>**2018 – 1.10** | உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரி / உயர்தர தனிப்பட்ட வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் சுற்றிக்கைகளுடன் தொடர்ச்சியாக இண ங்குதல் வேண்டும். | 2020 நவம்பர் மாதம் முதல், இ.மி.ச. இன் ஊழியர்களால் உயர்தர தனிப்பட்ட வருமான வரி (ஏபிஐரீ) செலுத்தப்படுகின்றது.<br><br>எவ்வாறாயினும், மின்சார சபையின் நிதியிலிருந்து ஏற்கனவே செலுத்தப்பட்ட வரிகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | CEBI நிதியில் இருந்து ஏற்கனவே செலுத்தப்பட்ட வரிகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை / உயர்தர தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் ரூபா 4.98 பில்லியன் தொகையை இ.மி.ச. அதன் சொந்த நிதியிலிருந்து செலுத்தியிருந்தது. ரூபா 5.48 மில்லியன் வரி மீதான வரிக் கட்டணம் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 57.04 மில்லியன் ஆகும். | | | |
| **55** | **2020-3.1** (அ) | 2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யு) 2016 செப்டம்பர் இல் நிறுவப்பட்டதுடன் சாத்தியக் கூறு ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி மனு ஆவணங்களின் வரைபி னைத் தயாரித்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள் ளப்பட்டன. இந்த செயற் | ஆகக்குறைந்த கூறுவிலை /அபிவிரு த்திக் கிரயத்திற்கு காரணமாக மேற்கொ ள்ளப்பட்ட சகல ஆய் வுகளையும் பகிர்ந்து கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சாத்தியக்கூற்று ஆய்வு, EIA, அனைத்து பரிசோதனை அறிக்கைகள், வடிவமைப்புகள் போன்ற அனைத்து ஆய்வுகளையும் சாத்தியமான கேள்விதாரர்களுடன் (அல்லது அபிவிருத்தியாளர்கள்) பகிர்ந்து கொள்ள முன்மொழியப்பட்டதுட ன் அதன் மூலம் குறைந்த கேள்விப்பத்திர விலை/ அபிவிருத்தி கிரயம் ஏற்படும். இவ்வாறு, ஆய்வுகளுக்கு ஏற்படும் கிரயத்தின் ஒரு பகுதியானது குறைந்த கட்டணங்கள் மூலம் (இறுதி செயற்திட்ட அபிவிருத்தியாளரால்) | அக்டோபர் 2016 முதல் செப்டம்பர் 2021 வரை சீதாவக கங்கை நீர்மின்சாரத் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட செலவினங்களை பதிவழிக்க சபையிடம் ஏற்கனவே சபைக்குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது.<br><br>இது தொடர்பாக இயக்குநர்கள் குழுவின் மற்ற பரிந்துரைகளை செயல்படுத்துவதற் கான அல்லது பதிவழிக்க இயக்குநர்கள் குழுவின் முடிவுக்காக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 289 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்கு வதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற் திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 பெப்ரவரி 23 அன்று நடைபெற்ற சபை கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்தை எஸ்எல் இக்கு ”ஒற்றை மூல கொள்வனவு” என்ற அடிப்படையில் வழங்குவதற் காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்த செயற்திட்டத் திற்கான முதலீட்டை முதலீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், இந்த செயற்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 289 மில்லியன் செலவானது இ.மி.ச. | | இ.மி.ச. இற்கு மீளளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. | காத்திருக்கிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இற்கான செலவாகவே காணப்படும். | | | |
| **56** | **2020 - 3.1** (ஆ) | மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தின் திறப்பு விழாவுக்கான பாதிடப்பட்ட செலவினத் தொகை ரூபா 13 மில்லியன் ஆன போதிலும் அதற்காக ரூபா 18.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த மேலதிகத் தொகைக்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. இந்த திட்டத்தின் திறப்பு விழா 2020 திசெம்பரில் நடைபெற்றிருந்த போதிலும், நடுக்குடா மின் நிலையத்தை பூரணப்படுத்தல் தாமதம் காரணமாக காற்றாலை மின்சாரத்தை தேசிய மின் அமைப்பில் இணைத்துக் கொள்ளல் 2021 மே வரை தாமதமடைந்திருந்தது. | பாதிடப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைக்குள் செலவு செய்வதுடன் தேவைப் படுகையில் சபை ஒப்புதலுடன் அதனை திருத்துதல் வேண்டும். | இயக்குநர் குழுவின் ஒப்புதல் பெறப்படவில்லை. | இயக்குநர் சபையின் ஒப்புதல் பெறப்படவில்லை. |
| | | முகாமைத்துவ வினைத்திறனின்மை | | | |
| **57** | **2020 - 3.2** (ஆ)<br><br>**2019 – 3.1** | இ.மி.ச. பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை | தரப்புடன் சுமுகமான செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக அந்த இரு தரப்பினருடனும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். | லெகோ உடனான உடன்படிக்கை<br>• இ.மி.ச. மற்றும் லெகோ ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் உயர் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்படியே இருக்கின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ஆ)<br>**2018 – 3.2.** (ஆ) | பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற் கிடையே சுமூகமான செயற் பாடுகளை உறுதிப்படுத்து வதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்தி டப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக் கைகள் காணப்படவில்லை. | | அதிகாரிகளின் பங்கேற்புடன் ஒரு வரைவு உடன்படிக்கையை குழவொன்று தயாரித்துள்ளதுடன் அது குறித்து சட்டமா அதிபரின் (AG) கருத்தை கோரப்பட்டுள்ளது.<br>• AG யின் கருத்துப்படி இந்த குழு தேவையான திருத்தங்களை செய்துள்ளதுடன் ”(இறுதி மின் விற்பனை உடன்படிக்கை” ”AGM (டிரான்ஸ்மிஷன்) க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>• இ.மி.ச. இன் பொது முகாமையாளர், குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் லெகோ இன் 03 அதிகாரிகளால் செய்யப்பட்ட சில ஒப்புதல்கள் குறித்து லெகோவின் பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளார். இ.மி.ச. பொது முகாமையாளரின் அக் கடிதத்தில், இந்த விஷயத்தை லெகோ இன் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறு பரிந்துரைக்கப்பட்டு ள்ளது.<br><br>சிபிசி உடனான உடன்படிக்கை<br>———<br>சிபிசி உடனான எரிபொருள் விநியோக | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உடன்படிக்கை இன்னும் பேச்சுவார்த்தையில் உள்ளது. இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. எனவே உடன்படிக்கை இன்னும் இறுதியாக்கப்படவில்லை. | |
| **58** | **2020 – 3.2** (இ)<br>**2019 – 3.1** (இ)<br>**2018 – 3.2** (இ) | இ.மி.ச. இன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங் களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங் களாக ரூபா 92,693,772 தொகை கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | மேலதிக தரகுக் கட்டணங்களை தவிர்க்க திட்டமிட்டபடி செயற்திட்ட நடவடிக் கைகளை செயல் படுத்த வேண்டும். | அனைத்து செயற்திட்டங்களுக்கும் அர்ப்பணிப்பு கட்டணம் பொதுவானதாக உள்ளதுடன் செயற்திட்டம் உரியவாறு பட்டியலிடப்பட்டிருப்பினும், கடன் உடன்படிக்கைகளிலுள்ள கடுமையான நிபந்தனைகள் காரணமாக அதைத் தவிர்க்க முடியாதுள்ளது. இருப்பினும், திட்டத்தை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டால், கூடுதல் பத்திரக் கட்டணங்கள் ஏற்படும். | திட்டத்தை முடிப்பதில் ஏற்படும் தாமதம் அப்படியே உள்ளது. |
| **59** | **2020 – 3.2** (ஈ)<br>**2019 – 3.1** (ஈ)<br>**2018 –** | நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2018 – 2037 இன் படி, 500 MW, 657MW மற்றும் 430MW புதிய | குறைந்த செலவில் உள்ள இலக்குகளை அடைய குறைந்த செலவில் நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின் | நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, பெரும்பாலான மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படவில்லை. | இந்த விவகாரம் தீர்க்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **3.2** (ஈ) | மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவ தற்கு திட்டமிடப்பட்டிருந்த து. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய 1587 MW மேலதிக இயலளவில் 381.85 MW இயலளவுடைய மின்வலு ஆலைகள் மாத்திரமே ஆரம்பிக் கப்பட்டிருந்தன. ஆகையால், புதிய பின்பிறப்பாக்க ஆலை களை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றம் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்க வில்லை. அதன் விளைவாக, ரூபா 22.2 பில்லியன் பெறுமதியான 811Ghw எரிசக்தி, அவசரக் கொள்வனவாக மீளாய்வாண் டில் கொள்வனவு செய்யப்பட் டிருந்தது. | உற்பத்தி நிலையங்களை இயக்குவதை விரைவுபடுத்துதல். | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60 | 2020 – 3.2 (உ)<br><br>2019 – 3.1 (உ)<br><br>2018 – 3.2 (உ) | உதுறுவசந்தய செயற்திட்டத் தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39,551,696 இருப்பு பற்றாக்குறை தொடர்பாக 3 ஆண்டுகள் தாமதிக்கப்பட்டு 2017 ஏப்ரல் மாதத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வொன்று மேற்கொள்ள ப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ரூபா ரூபா 2,510,056 பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் 6 ஆண்டுக ளிற்குப் பின்னரே பொருட்கள் கிடைத்ததாக குறிப்பிட்டு மற்றொரு உத்தியோகத்தருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன் றுடன் (வழக்கு இல. பீ/1164/15) | கையிருப்பு பற்றாக் குறைக்கு காரணமான அதிகாரிக்கு எதிராக முறையான விசாரணை நடத்தி, கையிருப்பு பற்றாக்குறைக்கு காரணமான நபர்க ளிற்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கையை கணிசமான காலத்திற்குள் முடித்தல் வேண்டும். | இருப்புப் பற்றாக்குறை ரூபா 2,510,056<br>டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2017.05.04 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குழுவொன்றை நியமித்திருந்ததுடன் அக்குழுவின் அறிக்கை 2019.10.03 ஆந் திகதி டிஜிஎம் (வட மாகாணம்) இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, களஞ்சியக் காப்பாளரான திரு. ஜே.எம்.அசங்க ஜெயகொடி (பி.எ.ஃ.ப். இலக்கம் 37432) இடமிருந்து இருப்புப் பற்றாக்குறையான ரூபா 2,510,056.88 (சபைக் கட்டணம் உள்ளடங்கலாக) இனை அறவிடுமாறு டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2019.10.09 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்தார். களஞ்சியக் காப்பாளர் 2019 அக்டோபரில் டிஜிஎம் (என்சிபி) க்கு இடமாற்றப்பட்டிருந்தது டன் அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மீதி (ரூபா 2.5 மில்லியன்) ஏனைய பெறத்தக்கவைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏஜிஎம் (டிடி 1) தனது | இது மேலதிக விசாரணைகளுக்காக CEB இன் பொது முகாமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது , மேலும் U.P. திரு.குணரத்ன (PF இலக்கம் 37475) இலங்கை மின்சார சபையிலிருந்து 09-09-2015 முதல் நீக்கப்பட்டுள்ளார்.<br><br>ஜே.ஏ.எம். திரு. அசங்க ஜெயக்கொடி (PF எண். 37432)<br><br>முறையான விசாரணையின்படி, பற்றாக்குறை ஜே.ஏ.எம். திரு.ஜெயக்கொடி (PF எண். 37432) அவர்களின் மாதச் சம்பளத்தில் இருந்து அக்டோபர் 2020 முதல் 180 தவணைகளில் வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தொடர்புடைய ரூபா 39,551,696 தொகைக்கு எதிராக ரூபா 31,257,161 தொகை 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த இருப்பு பற்றாக்குறை தாமதத்திற்கு பொறுப்புடைய ஆட்களிற்கு எதிராக எந்தவொரு நடவடிக் கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | 2019-11-28 ஆந் திகதிய DGM/(C&C)/DD1/HRO/ADMN/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார். ஆயினும், திரு ஜெயகொடி அவரது 2020-01-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முறையான விசாரணையை நடத்துமாறு கோரியிருந்ததுடன் அதன்படி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அத்துடன், முறையான விசாரணை முடிவுக்கு அமைய 180 தவணைகளில் இதனை அறிவிடுமாறு ஏஜிஎம் (டிடி1) தனது 2020.09.03 ஆந் திகதிய AGM(DD1)/DGM/(C&C)/HRO/DD1/162 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார். இருப்புப் பற்றாக்குறை ரூபா 31,257,161<br>―――<br>பொருட்களை வழங்காது மோசடி செய்தமைக்காக ரூபா 22,584,800.00 தொகையான 25 சதவீத சபைக் கட்டணம் உட்பட ரூபா 28,331,000.00 தொகையினை ரிச்சர்ட்சன் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து அறவிடுவதற்காக அக்கம்பனிக்கு இ.மி.ச. இன் சட்ட உத்தியோகத்தர் கோரிக்கையொன்றை அனுப்பியுள்ளார். அத்துடன், இருப்புப் பொருட்களின் இழப்புச் சீராக்கத்திற்கான எந்தவொரு மாற்றத்தையும் இனங்காண்பதற்காக மேலதிக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சில சீராக்கங்களை செய்தபின்னர் இழப்பின் அளவு ரூபா 8.3 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, உள்ளக விசாரணை பூரணப்படுத்தப்பட்டுள் ளதுடன் அதன்படி களஞ்சியக் காப்பாளரான திரு உ.பி. உதரா குணரத்ன (பிஎ்.ப் இல. 37475) மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், திருகோணமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் B/1164/15 ஆம் இலக்க நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. | |
| **61** | **2020 – 3.2** (ஊ)<br><br>**2019 –** | 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் | இழப்பை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் ஏதேனும் மோசடி நடந்திருந்தால், கணிசமான | வழக்குத் தொடர்தல்கள் குறித்து சட்டமா அதிபரின் கருத்தை இ.மி.ச. கோரியுள்ளதுடன் நாட்டில் நிலவும் | 01-11-2021 அன்று சட்டமா அதிபர் காரியாலயத்தில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரச |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **3.1** (ஊ)<br><br>**2018 – 3.2** (ஊ) | பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந் திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. மேலும் அதே ஊழியர் இ.மி.ச. இன் இன்னொரு அலுவலக த்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் முன்னைய மோசடியைக் கருத்திற் கொள் ளாது மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 மாத்திரம் அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிரு ந்தது. | காலத்திற்குள் விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கை யின் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடி க்கை எடுத்து இ.மி.ச. இற்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்தல் வேண்டும். | கோவிட் -19 நிலைமை காரணமாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. | சிரேஷ்ட சட்டத்தரணி திரு. அசங்க மெண்டிஸ் அவர்களுடன் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அரசு வழக்கறிஞர் கூறுகையில், நீண்ட கால அவகாசம் காரணமாக சிவில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. இருப்பினும், கிரிமினல் வழக்கு பதிவு செய்யலாம். எனவே, அவரது சட்டக் கருத்து தொடர்பான அறிக்கையை அரச வழக்கறிஞர் சமர்பிப்பார். |
| **62** | **2020 – 3.2** (எ)<br><br>**2019 – 3.1 (g)**<br><br>**2018 – 3.2** (எ) | புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவ ாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறை க்குப் பொறுப்பான உத்தியோக த்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு | இழப்பை அறவிடுவத ற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் ஏதேனும் மோசடி நடந்திரு ந்தால், கணிசமான காலத்திற்குள் விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கை யின் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடி க்கை எடுத்து இ.மி.ச. இற்கு | கணக்காய்வு அறிக்கையின் படி, இருப்பு பற்றாக்குறை ரூபா 3,789,893.00 ஆகும். இருப்பினும், இருப்பு வேறுபாட்டை ஆராய்வதற்காக 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குழு, இருப்பு பற்றாக்குறை தொகையை ரூபா 1,953,484.15 எனக் குறிப்பிட்டுள்ளது. திரு சமரசிங்க அவர்கள் 60 வயதை எட்டிய | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்படியே இருக்கின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மை யான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகை யினை பதிவழிக்கும் செயற்பா ட்டில் சபை ஈடுபட்டுள்ளது. | ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்தல் வேண்டும். | பின்னர் 2011-10-15 அன்று ஓய்வு பெற்றார். இருப்பு பற்றாக்குறை விவகாரத்தில் தீர்மானம் எடுக்கும் வரை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை செலுத்துவதை நிறுத்துவதற்கு அவரது ஓய்வின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பு பற்றாக்குறையை அறவிடாமை குறித்து விசாரிப்பதற்காக 03 டிஜிஎம்எம் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கை சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் குழுவின் பரிந்துரைக்கு ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | |
| **63** | **2020 – 3.2** (ஏ) | கனரக மற்றும் சாதாரண வாடிக்கையாளர்களின் செயற் பாட்டிலுள்ள மற்றும் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோர் நிலுவைகளை அங்கீகரிக்க கணினி முறைமை நான்கு தனித்தனி கட்டுப்பாட்டு கணக்குகளை ஒதுக்கியிருந்த போதிலும், சில மாகாணங்கள் அனைத்து கடன்பட்டோர் கொடுக்கல் வாங்கல்களுக்கும் | செயலில் உள்ள மற்றும் இறுதி செய்யப் பட்ட கடன்பட்டோர் நிலுவைகளை தனித்த னியாக அங்கீகரிக்க புறம்பான கட்டுப்பாட்டு கணக்குகளைப் பயன்படுத்த வேண்டும். | பெரும்பாலான மாகாணங்கள் நிலுவைகளை தனித்தனியாக அடையாளம் காண உதவுகின்ற A 3600 இன் கீழ் உள்ள துணைக் கணக்குக் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன. | எடுக்கப்பட்ட நடவடிக்கை அப்படியே உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு கட்டுப்பாட்டு கணக்கைப் பயன்படுத்தியிருந்தன. | | | |
| **64** | **2020 – 3.2 (ஐ)** | ரூபா 62,951,457,952 மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அணைக்கட்டுகளின் உரிமையை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து அணைகளும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் இயக்கப்பட்டு, பராமரித்து, நிர்வகிக்கப்படுகின்றது. இருப்பினும், நீர்த்தேக்க ங்களில் மின்சாரத்தை பிறப்பித்தல் வரையான நீர்வழிப்பாதையை மட்டுமே சபை கையகப்படுத்தியுள்ளதுடன் அவற்றை முழுமையாக இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல் என்பன சம்பந்தப்பட்ட மின் நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. | இந்த விடயம் தீர்க்கப்படவில்லை. |
| **65** | **2020 – 3.2** (ஒ)<br><br>**2018 – 1.9** (ஒ) **i** | 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 47(2) (அ) இன் கீழ் நிறுவப்பட்ட தேய்மான ஒதுக்கத்துக்கு ரூபா 1 மில்லியன் தொகையானது சபையின் அங்கீகாரத்தைப் பெறாமலும் முறையான அடிப்படையொன்று இன்றியும் மாற்றப்பட்டிருந்தது. | தேய்மான ஒதுக்கத்துக்கு பணத்தை மாற்ற சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும். | 2021 முதல், தேவைப்பட்டால், அடுத்த ஆண்டு முதல் சபையின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கான சபை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **66** | **2020 – 3.2** (ஓ) | 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 47(1)(அ) இன் கீழ் நிறுவப்பட்ட சுயக் காப்புறுதி ஒதுக்கத்துக்கு ரூபா 1,222,713,673 தொகையானது, சபையின் அங்கீகாரத்தைப் பெறாமலும் சரியான அடிப்படை ஒன்று இன்றியும் மாற்றப்பட்டது. | காப்பீட்டு ஒதுக்கத்துக்கு பணத்தை மாற்ற சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும். | சபை அனுமதி பெறப்படவில்லை. | பணிப்பளர் சபையின் அனுமதி பெறப்படவில்லை. |
| **67** | **2020 – 3.2** (ஔ)<br><br>**2019 – 1.7 (a) (i)**<br><br>**2018 – 1.7 (அ) ii** | நாடளாவிய ரீதியில் பரந்து கிடக்கும் இ.மி.ச. இன் காணிகளின் அளவீடு, மதிப்பீடு மற்றும் பாதுகாப்பை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை . | இ.மி.ச. இன் காணி களின் அளவீடு மற்றும் மதிப்பீடு செயல் முறையை துரிதப்ப டுத்த வேண்டும் | இ.மி.ச நிலங்களின் அளவீடு மற்றும் மதிப்பீட்டை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2021-08-26 நிலவரப்படி இ.மி.ச. இன் நிலங்களின் அளவீடு மற்றும் மதிப்பீட்டின் முன்னேற்றத்தின் படி, மேலதிகமாக 1,300 நிலங்கள் அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன. | நில அளவீடு மற்றும் மதிப்பீட்டை விரைவுபடுத்த CEB செயல்பட்டு வருகிறது. |
| | | செயற்பாட்டு வினைத்திறனின்மை | | | |
| **68** | **2020 - 3.3** (அ)<br><br>**2018 – 3.3** | ரூபா 26,751,970,000 மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 10 சதவீதத்தை பிரதிநிதித் துவம் செய்கின்ற ரூபா 2,667,400,265 ஆனது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி | சேதங்கள், இருப்பு வைத்திருக்கும் செலவு மற்றும் மோசடி போன்ற வற்றைத் தவிர்க்க, அசையாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை குறைப் பதற்கு தேவையான நடவடிக்கைகளை | கணக்கெடுப்பு குழுக்களின் பரிந்துரை மற்றும் சபை ஒப்புதல்களைப் பெறுவதன் மூலம் மெதுவாக நகரும், நகராத மற்றும் காலாவதியான இருப்புக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்படியே இருக்கின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக காட்டப்பட்டுள்ளது. இந்தளவு அதிகமாக நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக் களை பராமரிப்பதனால் அது சேதங்கள், இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் மற்றும் மோசடி போன்றன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும். | மேற் கொள்ள வேண்டும். | அதன்படி, விநியோக பிரிவு 2 ஏற்கனவே ரூபா 38,947,687.46 பெறுமதியான மெதுவாக நகரும இருப்புக்களை அகற்றுவதற்காக சபை ஒப்புதலைப் பெற்றுள்ளது. | |
| **69** | **2020 - 3.3** (ஆ) | மீளாய்வாண்டில் மின் பிறப்பாக்கப் பிரிவினால் செயல் நடவடிக்கைத் திட்டத்தி லுள்ள 76 செயற்பாடுகளில் 16 செயற்பாடுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டி ருந்தன. | திட்டத்தில் கூறப்பட்டு ள்ள செயல்பாடுகளை விரைந்து முடிக்க வேண்டும். | செயல்பாட்டுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள நிதிசார் செயன்முன்னேற்றமான து செயல்பாடுகள் நடைபெற்று வருகின்ற 16 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தை த மாத்திரமே காட்டுகின்றன. | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்படியே இருக்கின்றன. |
| **70** | **2020 - 3.3** (இ) | ஏசிஇ பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் கைச்சாத்திடப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கை (பிபிஏ) உடன் தொடர்பான ஆகக்குறைந்த உத்தரவாத எரிசக்தி தொகை (எம்ஜிஇஏ) ஆண்டுக்கு 697,674,432 கிலோவாட் ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் | அதிக செலவில் அவசர மின் உற்பத்தி நிலை யங்களைப் பயன்படுத் துவதற்குப் பதிலாக நிகழ் நேரத் தேவையைப் பூர்த்தி செய்ய குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின் உற்பத்தி நிலையங் களை இயக்குதல் வேண்டும். | நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, பெரும்பாலான மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படவில்லை. | இந்த விடயம் தீர்க்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா 24.42 கட்டண வீதத்தில் வழங்கப்பட்ட எரிசக்தி 475,831,835 கிலோவாட் ஆகும். அதன்படி, மீளாய்வா ண்டில் வழங்கப்படாத 221,842,597 கிலோவாட் எரிசக்திக்காக இயலளவுக் கட்டணம் செலுத்தப்பட்டிரு ந்தது. மேலும், குறுங்கால அடிப்படையில் தென் மாகாண த்திற்கு மின்சாரம் வழங்குவத ற்காக மாத்தறையில் 20 மெகாவாட், ஹம்பாந்தோட்டை யில் 24 மெகாவாட் மற்றும் காலியில் 24 மெகாவாட் எரிசக்தி கொள்வனவு உடன்படிக்கைகள் கையெழுத் திடப்பட்டன. அதன்படி, இந்த ஆலைகளிலிருந்து ரூபா 4,069,542,205 பெறுமதியுடைய 130,526,364 கிலோவாட் மொத்த மின்சாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆலைகளின் ஒரு அலகின் விலை முறையே ரூபா 28.30, ரூபா 36.84 மற்றும் ரூபா 39.52 ஆகக் காணப்பட்ட போதிலும், சராசரி விற்பனை விலை ரூபா 16.72 ஆகும். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | எனவே, இந்த ஆலைகளிலிருந்து கொள்வ னவு செய்யப்பட்ட எரிசக்தியை எம்பிலிப்பிட்டிய ஆலையி லிருந்து பெறக்கூடியதாக காணப்படுகின்றமை யால் எரிசக்தி கொள்வனவுக்கான அதிகப்படியான கிரயத்தை குறைத்திருக்க முடியும். மேலும், அதிக கிரயத்தில் அவசர மின் நிலையங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உச்சத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இ.மி.ச. இற்கு சொந்தமான ஆலைகள் இயக்கப்பட வேண்டும். | | | |
| | | கொள்வனவு முகாமைத்துவம் | | | |
| **71** | **2020 – 3.4** (அ) | 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். | என்சிஆர்இ செயற்திட்டங்களுக்கான கொள்வனவு செயல்முறையை விரைவுபடுத்த வேண்டும். | பெறுகை மற்றும் மின் உற்பத்தி நிலைய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. | பெறுகை நடவடிக்கை மற்றும் ஆலை கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இருப்பினும், 390 மெகாவாட் இயலளவுடைய என்சிஆர்இ செயற்திட்டங்களுக்காக 7 கொள்வனவுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்ததுடன், 24 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் மட்டுமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தன. | | | |
| **72** | **2020 – 3.4** (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையின் மீது சிற்றளவு நீர்மின் ஆலைகளுக்கான விலை வீதம் குளிர் காலத்தில் ரூபா 19.51 ஆவதுடன் வறண்ட காலத்திற்கு ரூபா 21.25 ஆகும். தவிர்க்கப்பட்ட செலவு முறை அனல் ஆலை அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதுடன் இது எரிபொருள் கிரயத்தை பொறுத்து மாறுபடும். எனவே, இந்த முறையின் மீது நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதம் சிற்றளவு நீர்மின் ஆலையின் உண்மையான கிரயத்துடன் எந்த தொடர்பை யும் கொண்டிருக்கவில்லை | தவிர்க்கப்பட்ட செலவு முறையின் கீழ் தற்போது இயக்கப்படும் மினி ஹைட்ரோ மின்வலு ஆலைகளு க்கு பயன்படுத்தப்படும் கட்டண முறையை அல்லது கட்டணத்தை மாற்றுவதற்கான சாத்தி யத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும். | இப்பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இப்பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ல. நீர் மின்சாரத்தின் அலகொன்று க்கான சராசரி கிரயம் ரூபா 10 இற்கும் குறைவாக காணப் படுதல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது டன், இ.மி.ச. இன் நீர் மின்சாரத்தின் அலகொன்றுக்கான சராசரி கிரயம் ரூபா 2.49 ஆகும். மேலும், இது அலகொன்றுக்கான சராசரி விற்பனை விலையை விட ரூபா 16.72 அதிகமானதாகும். | | | |
| **73** | **2020 – 3.4** (ஈ) | சூரியசக்தி மின் நிலையங்களுக்கான ரூபா 23.10 சமவிகித வீதம், நியமக் கட்டணமாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் பிரகாரம், 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், | மரபுசாரா புதுப்பிக்க த்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக கொள்வனவு நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும். | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான புதிய மின் பெறுகை ஒப்பந்தங்கள் போட்டி ஏலத்தை அடிப்படையாகக் கொண்டவை. | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான புதிய மின்சக்தி பெறுகை ஒப்பந்தங்கள் போட்டி கேள்விமனு கோரல் அடிப்படையாகக் கொண்டவை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒவ்வொன்றும் 10 மெகாவாட் இயலளவுடைய ஐந்து சூரிய மின் உற்பத்தி நிலையங்கள், கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமக் கட்டணத்தின் கீழ் தொடங்கப் பட்டிருந்தன. (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2014 இல் கையெழுத் திடப்பட்டன). புதிய சூரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு (1MW x 60) 2017 இல் நடத்தப்பட்ட கொள்வனவு சபை மூலம் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்கள் ரூபா 12.73 முதல் ரூபா 18.37 வரையான வீச்சில் காணப்பட்டன. | | | |
| **74** | **2020 – 3.4** (உ) | கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட விலை வீதங்களுக்குப் பதிலாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நியமக்கட்டணமான | மரபுசாரா புதுப்பிக்க த்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக கொள்வனவு நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும். | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான புதிய மின் பெறுகை ஒப்பந்தங்கள் போட்டி ஏலத்தை அடிப்படையாகக் கொண்டவை. | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான புதிய மின்சக்தி பெறுகை ஒப்பந்தங்கள் போட்டி கேள்விமனு கோரல் அடிப்படையாகக் கொண்டவை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | து, 2013 ஆகஸ்ட் 06 க்குப் பிறகு தொடங்கப்பட்ட மொத்தம் 135.62 மெகாவாட் இயலளவுடைய உயிர் எரிவாயு ஆலை, தென்ட்ரோ மின்வலு நிலையங்கள், சிற்றளவு நீர்மின் ஆலைகள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் கையெழுத்திடப்பட்) செயற்திட்டங்களிற்கு பிரயோகிக்கப்பட்டன | | | |
| **75** | **2020 – 3.4** (ஊ) | 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னரான மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களிற்கு கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், ஒரு கிலோவாட் இற்கு ரூபா 36.20 வீதத்தில் கழிவை எரிசக்தியாக மாற்றுகின்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஐந்து மாநக ராட்சி திடக்கழிவு ஆலைகள் (20 வருடங்களுக்கு சமவிகித கட்டண) செயற்திட்டங்களிற்கு அமைச்சரவை 2017 இல் அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஒரு திடக் கழிவு ஆலைக்கான மின் | மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். | வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டுக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் எஞ்சிய பகுதியினை மீள்நிரப்புவதற்காக பொது திறைசேரிக்கு பட்டியிலிடப்பட்டுள்ளது . | நாட்டின் கழிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதன் தேசிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, கழிவுகளில் இருந்து ஆற்றலை உருவாக்கும் திட்டங்களில் கவனம் செலுத்த CEB முடிவு செய்துள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கொள்வனவு ஒப்பந்தம் 2020 திசெம்பர் இல் கையெழுத்திடப்பட்ட துடன் அமைச்சரவை தீர்மானத்தின் படி திறைசேரியிலிருந்து ரூபா 36.20 தொகையில் ரூபா 13.10 திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாயினும் கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 மொத்த கட்டணமும் இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்படுகின்றது. | | | |
| | | மனித வளங்கள் முகாமைத்துவம் | | | |
| **76** | **2020-3.5** (அ)<br><br>**2019 – 3.2** (அ)<br><br>**2018 – 3.4** (அ) | இ.மி.ச. இன் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டத்தை அபிவிருத்திசெய்து அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் மற்றும் கனிஷ்ட நிறைவேற்றுநர்களுடன் தொடர் புடைய இ.மி.ச. இன் இரண்டு தொகுதிகள் ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருவதுடன அவை அதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் இறுதிக்கப்பட்ட பின்னர் விரைவில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். | CEB தற்போதுள்ள SORP ஐ திருத்துவதை நிறுத்தியதால் மேல்முறையீட்டு நீதிமன்றம் CA/Writ/163/121 மற்றும் CA/Writ/288/2021 தொடர்பாக இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது, இது அதன்படி, எஸ்.ஓ.ஆர்.பி.யில் திருத்தம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | • தனியார் வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா. **1,081,249.00** | | நவலோக கட்டுமான நிறுவனத்திற்கு ரூபா.**1,080,584.65** செலுத்த வேண்டும். இந்த ஆண்டு கணக்குகளை பகுப்பாய்வு செய்த பிறகு இந்த இருப்பு கணக்கிடப்படும்.<br>ரூபா.**664.35** இருப்பு ஏற்கனவே கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது. | |
| | • வேளாண்மை இரசாயன நுகர்வோர் - ரூபா. **665, 111.00** | | அம்பாறையில் வாடிக்கையாளருக்கு ரூபா.**543, 343.78** செலுத்த வேண்டியுள்ளது, இது சட்டரீதியாக பரிந்துரைக்கப்பட்டு வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.<br>மீதமுள்ள கடன் பாக்கி ரூபா. **121, 767.22** ஒரு முறை வாடிக்கையாளரால் பெறப்பட வேண்டும், (onetime customer) இது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏற்கனவே இந்த ஆண்டு கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது. | |
| | • எஸ்டேட் வாடிக்கையாளர்கள் - ஒரு வாடிக்கையாளருக்கு ரூபா. **2, 113.00.** | | இந்த இருப்பு **2021** கணக்குகளில் சரி செய்யப்பட்டது. | |
| | • மற்றவை - **5** வாடிக்கையாளர்கள் ரூபா.**2,175, 341.00** | | **Rotunda property development limited** கடன் இருப்பு ரூபா.**2,103,240.83** ஆகும், இது நடவடிக்கையை பகுப்பாய்வு செய்த பிறகு **2021** ஆம் ஆண்டில் கணக்குகளில் சரிசெய்யப்படும். மீதமுள்ள கிரெடிட் இருப்பு ரூபா.**72, 100.17** கணக்கை பகுப்பாய்வு செய்த பிறகு கணக்குகளுடன் சரிசெய்யப்படும். | |
| **17.** | மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் ஐந்து வருடங்களுக்கு மேலாக ரூபா. 154.59 மில்லியன் பெறுமதியான 20 வரவு மீதிகளும் 1 முதல் 5 வருடங்கள் வரையிலான ரூபா. 1,448.29 மில்லியன் பெறுமதியான 27 வரவு மீதிகளும் தீரக்கப்படாமல் காணப்பட்டன. மேலும், நடைமுறையில் உள்ள நிலுவைகளைத் தீர்க்காத விற்பனையாளர்களுடன் கூட்டுத்தாபனமானது அடிக்கடி பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் கடுமையான சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | நிலுவையாகவுள்ள மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | PV Oil Singapore PTE Ltd இலிருந்து பெறத்தக்க தொகையான ரூபா.130.94 மில்லியன், 5 ஆண்டுகளில் ரூபா.154.59 மில்லியனில் மிகப்பெரிய இருப்புத்தொகையாக உள்ளது. இந்த விற்பனையாளருக்கான சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. . | நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த நிலுவைகள் தொடர்ந்து உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020-1.2.6(d), 2019-1.2.6(d) | | | |
| 18. | போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் இல்லாததால், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் கழகத்தால் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணங்களின் உண்மையான மதிப்பை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை.<br>2020-1.2.6(f)<br>2019-1.2.6(i) | கொடுக்கல் வாங்கல்களின் சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிலன் தாமதக் கட்டணங்கள் மதிப்பிடப்பட்டு அடிப்படையில் வணிகச் செயல்பாட்டால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உண்மைத் தாமதக்கட்டணத்தின் கிரயம் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. ஒதுக்கீட்டின் விபரங்கள் நிதி செயல்பாடுகளுடன் காணப்படுகின்றன. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில், செலுத்த வேண்டிய ஒட்டுமொத்த தாமதக் கட்டணம் ரூபா. 726 மில்லியன், மற்றும் 2021 ஆம் ஆண்டில் அ.டொ. 1,474,396 செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் கூட்டுத்தாபணம் செலுத்திய தாமதக் கட்டணங்களின் உண்மையான அளவு வெளியிடப்படவில்லை. |
| 19. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை | | | |
| | (i) 7.2 ஆம் வழிகாட்டல் - கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வியாபாரம், நிலக்கரி வியாபாரம், கப்பல் எரிபொருள் வியாபாரம் மற்றும் விவசாய இரசாயன வியாபாரம் போன்ற பாரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய செயற்பாட்டுக் கைநூலை கூட்டுத்தாபனம் தயாரித்திருக்கவில்லை.<br>2020-2.2.2(a) –(ii)<br>2019-2.(a) (iv) | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும். | பெறுகை கையேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நிறைவடைய செய்ய திட்டமிடப்பட்டுள்ளது | செயற்பாட்டுக் கையேடு வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்படவில்லை. |
| | (ii) 9.3 ஆம் வழிகாட்டலின் படி பொருத்தமான | இது தொடர்புடைய | முன்மொழியப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்கான தயாரிப்பு | இப்போதும் கூட்டுத்தாபணத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சு, பொதுத் திறைசேரி, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை.<br>2020-2.2.2(a) (iii)<br>2019-2.(a) (v)<br>2018-2(a) (v) | வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் | மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் ஏறக்குறைய நிறைவடைந்துள்ளன. அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. | பதவி உயர்வு நடைமுறை இல்லை. |
| | (iii) நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கைஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், “A” தர பதவிகளை உள்ளடக்கிய பதவி வெற்றிடங்களின் கடமைகளை மேற்கொள்வதற்காக 03 மாதங்களுக்கு மேலாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள்.<br>2020-2.2.2(b),2019-2(b), 2018 2(b) | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் | 06.10.2020 முதல் 37 பதில் கடமை ஏற்பாடுகள் இருந்தன, இந்த எண்ணிக்கை 14.07.2021 க்குள் 21 ஆகக் குறைக்கப்பட்டது. நாட்டில் நிலவும் தொற்றுநோய் நிலைமை காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு வினைத்திறனாக செயற்பட முடியவில்லை. எவ்வாறாயினும், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி வெற்றிடங்களை நிரப்பப்படும் என்றும், அனைத்து பதில் செயற்பாட்டுகள் இரத்து செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறோம். | 2021 டிசம்பர் 31, க்குள், 12 அதிகாரிகள் 03 மாதங்களுக்கும் மேலாக பதில் கடமைகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டனர். |
| | (iv) 2013 நவம்பர் 04 ஆந் திகதிய எவ்பி/06/35/02/01ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள ஊழியர்களது | இது தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாட்டுடன் இணங்க வேண்டும் | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித்திணைக்கள சட்டதின் பிரகாரம், உழைக்கும் போதே செலுத்தும் வரி தொகையை ஊழியர்களின் சம்பளத்தில் மேலதிக நன்மையாக உள்ளடக்கப்பட்டு கழிக்கப்படுகிறது. | உரிய சுற்றறிக்கைக்கு இணங்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆளுக்குரிய வேதனங்களிலிருந்து கழித்துக்கொள்ளாது அதன் ஊழியர்களின் மீளாய்வாண்டிற்கான ரூபா **173.3** மில்லியன் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை (PAYE) சீபிசீ தாங்கிக் கொண்டிருந்தது. 2019-2(c), 2018-2(c) | | | |
| | (v) நிதி ஒழுங்கு விதி 396 வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் காசோலைகளானவை பழையதாகக் கருதப்படுவதோடு ஆரம்பக் கொடுக்கல் வாங்கலை மாற்றுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், **64** காசோலைகளின் பெறுமதி ரூபா.**34,911,295** வழங்கப்பட்டது ஆனால் சமர்ப்பிக்கப்படவில்லை. தொடர்ந்தும் காசோலைகள் மீளளிக்கப்படாது காணப்பட்டது. 2020-2.2.2(c) 2019-2(e) | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் | சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்கான எதிர்பதிவு செயற்பாட்டில் உள்ளது. | உரிய விதிமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை. |
| | (vi) 4.2.3(டி) ஆம் வழிகாட்டல் துணை கம்பனியின் இலக்குகளை அடைவதை உறுதிசெய்வதற்கான அத் துணை கம்பனியின் செயல்திறன் அவ்வப்போது சபையால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2018-2(a)(i) | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் | வழிகாட்டலுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும | உரிய விதிமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **20.** | முன்னையாண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் மீண்டும் கூறப்பட்டபடி, கூட்டுத்தாபனமும் CPSTL இற்கும் இடையே எந்த ஒப்பந்தமோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தமோ (MOU) ஏற்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மற்றும் LIOC, CPSTL ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன வள திட்டமிடல் (ERP) முறைமையில் ஈடுபாடுதல் தொடர்பான அவர்களின் தனிப்பட்ட பொறுப்புகள் தொடர்பாக, மேலும் இந்த முறைமை போதுமான அளவு குறிப்பாக எரிபொருள் இருப்பு மீளாய்வு நோக்கங்களுக்காக மற்றும் சுத்திகரிப்பு செயல்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>2020-2.2.3(a)<br>2019-2(b)<br>2018-2(h) | கூட்டுத்தாபனத்தினால் மேலும் காலதாமதமில்லாமல் தொடர்புடைய அனைத்து தரப்பினரின் ஒப்புதலுடன் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். | SAP ERP அமைப்புக்காக CPC, LIOC & CPSTL இடையே எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்படவில்லை. இருப்பினும், சபை மேற்கொண்ட தீர்மானத்தின் படி, CPC மற்றும் CPSTL இடையே இரு தரப்பினருக்கும் ஒப்பந்தம் வரைவு செய்யப்பட்டது. அதன்பிறகு, ஈஆர்பி வழிகாட்டுதல் சபைக்கூட்டத்தில் செயற்படுத்தப்பட்ட படி, வரைவு முத்தரப்பு ஒப்பந்தம் மற்றும் SAP மென்பொருள் இறுதிப் பயனர் மதிப்பு உரிம ஒப்பந்தத்திற்கான அவதானிப்புகளைக் கோரியுள்ளோம். | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்பாடுகள் எட்டப்படவில்லை. |
| **21.** | இலங்கை அரசாங்கம் (GOSL), கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவற்றுக்கிடையே 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தமானது (GOSL/ CPC/LIOC) ஒப்பந்தத்தின் பதினைந்தாம் பிரிவின் விதிமுறைகளுக்கு ஏற்ப 2008 திசெம்பர் 31 ஆம் திகதி காலாவதியானது. நிறுவனங்களின் ஆளுகை செயல்முறை மற்றும் உற்பத்தி செலவினைத் | கூட்டுத்தாபனம் தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு இணைக்கப்பட வேண்டும் | CPC மற்றும் CPSTL க்கு இடையே செயற்பாட்டுக் கட்டணம் மற்றும் போக்குவரத்து செலவுகளை தீர்மானிக்க ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. முறையாக ஒப்புக்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்க தனி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.<br>எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளர், CPC மற்றும் CPSTL உடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் இறுதி தீர்மானம் ஒப்பந்தத்தில் இணைக்கப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்பாடுகள் எட்டப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீரமானிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் விலையிடும் சூத்திரம் மற்றும் சிலப் (slab) கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துச் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் உள்வ ாங்கப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகளானவை, தொடர்புடைய எல்லாத் தரப்பினரதும் ஒப்பந்தத்துடன் புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. (இறுதியாக 2011 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது.)<br>2020-2.2.3(b) (i)<br>2019-2(b)<br>2018-2(i) | | | |
| **22.** | 2019 மே 13 ஆம் திகதி லங்கா இந்தியன் ஓயில் கம்பனி இல்லாது கூட்டுத்தாபனமானது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்லிமிடட்டுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது. இவ் ஒப்பந்தத்தின்படி, பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இவ் ஒப்பந்தத்தின்படி, பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலிம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் | கூட்டுத்தாபனம் தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும் | 2019 இல் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் CPC இற்கும் CPSTL இற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டு CPSTL ஆல் CPC இற்கு சேவைகள் வழங்கப்பட்டு உள்ளது. சில விதிமுறைகளை திருத்தும் வகையில் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் தலையீட்டில் தரப்பினர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. CPSTL மற்றும் LIOC இற்கும் இடையே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட முடியாது. CPC க்கு CPSTL இன் 2/3 பங்குதாரராக 06 பணிப்பாளர்களை நியமிக்க உரிமை உண்டு மேலும் சரபயின் | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்பாடுகள் எட்டப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகியவற்றுக்கு இடையே உற்பத்திகளைத் தீர்மானிக்கும் முறை ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் 2003 திசெம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தத்தின் (GOSL/CPC/LIOC) பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக இருக்கக்கூடிய லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இதே விடயத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் வரையறை செய்யப்படவில்லை. எனவே, கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை இந்தியன ஒயில் கம்பனி ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மறுக்கின்ற பொழுது கூட்டுதத்தாபனமானது சாதகமற்ற நிலைமைகளின் ஏதேனும் தாக்கம் மற்றும் செலவுகளை ஏற்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.<br>2020-2.2.3(b) (ii),2019-2(b),2018-2(i) | | கோரிக்கைக்கமைய 03 பணிப்பாளர்களாக உள்ளது, அவர்களில் இருவர் CPC இலிருந்து இருக்க வேண்டும் மற்றும் ஒருவர் லங்கா IOC ஆக இருக்க வேண்டும்.<br>எனவே, சிபிஎஸ்டிஎல் எல்ஐஓசியுடன் எந்த ஒப்பந்தத்திலும் இணைந்து கொள்ளவில்லை சிபிசிக்கு ஏதேனும் பாதகமான விளைவை ஏற்படுத்தும். | |
| **23.** | 2019 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதிய 43/1227 ஆம் இலக்க நிர்வாகக்குழு தீர்மானத்தின் படி 2019 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உற்பத்திக் கட்டணத்தினை அதிகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதன் விளைவாக, 2019 ஆம் | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 சனவரி முதல் சம்பள திருத்தத்துடன் செயல்திறன் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது சபையின் தீர்மானத்தின் படி, 01.04.2021 வரை இவை அதிகரிக்கப்பட்டுள்ளது.<br>இருப்பினும் கணக்காய்வு பந்தியின் படி, CPSTL இலிருந்து இந்தத் தொகையை அறவிட்டுக்கொள்ள | ரூபா 173.77 மில்லியன் மேலதிக கொடுப்பனவு இப்போதும் கூட மீளப் பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்கு கூட்டுத்தாபனமானது ரூபா 173.77 மில்லியன் மேலதிகத் தொகையினைச் செலுத்த வேண்டியிருந்தது. இருப்பினும், கூட்டுத்தாபனம் இற்றைவரை நிலுவைத் தொகையை மீளப்பெற தவறியமை.<br>2020-2.2.3(b) (iii)<br>2019-2(b), 2018-2(i) | | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெற்றியடையவில்லை. | |
| **24.** | 2003 திசெம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட (GOSL/CPC/LIOC ஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தம் மற்றும் 2019 மே 13 ஆந் திகதி கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பவற்றுக்கு ஏற்ப குழாய் அமைப்புகள் அல்லது குழாய் அமைப்புகளின் பகுதியினை ஏற்றுக் கொள ˙ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப பேணல் மற்றும் 02 மாத காலத்திற்கான எரிபொருள் களஞ்சிய வசதிகளை வழங்குதல் என்பன சீபிஎஸ்டிஎல் இன் கடமையாகும். எவ்வாறாயினும் குழாய் அமைப்பில் அமைப்பில் உள்ள தடைகள் மற்றும் களஞ்சிய முறைமையின் வினைத்திறன் இன்மை காரணமாக கொள்கலன் ஒன்றில் இருந்து எரிபொருளை இறக்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக கூட்டுத்தாபனமானது தாமதக் கட்டணம் செலுத்துவதற்கு | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>. | திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன். | கூட்டுத்தாபணம் செலவைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டாயப்படுத்தப்பட்டது. அதன்படி மொத்தமாக அமெரிக்க டொலர் 2.7 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை ஒன்றினைச் செலுத்தி வந்ததோடு அத்தகைய செலவினை சேவை வழங்குனருக்கு மாற்றாமல் கடந்த 6 வருடங்களாக செலுத்தி வந்தது.<br><br>2020-2.2.3(b) (iv)<br>2019-2(b)<br>2018-2(i) | | | |
| 25. | 2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை எண்ணெய் நிலையம் வரை 12″ விட்டம் மற்றும் 5,500 மீற்றர் நீளமான குழாய் புனரமைப்பு தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 250 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, எதிர்காலத்தில் செலுத்தப்பட்ட தொகையை மீட்டெடுப்பதற்காக கட்டடை0ள CPSTL உடன் ஏதேனும் பேச்சுவார்த்தை நடத்தயோ அல்லது ஏதாவது ஒப்பந்தங்களோ கூட்டுத்தாபனத்தினால் ேற்கொள்ளப்படவில்லை. எனவே, ஏனைய பங்குதாரரின் பங்களிப்பு இல்லாமல், கூட்டுத்தபனத்தினால் துணைக்கம்பனியான CPSTL இன் மூலதன அதிகரிப்பு மொத்தக் கிரயத்தில் தங்கியுள்ளதாக கணக்காய்வில் | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 03.07.2019 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில், ''கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவைக்கு எண்ணெய்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணியை முன்னெடுப்பதற்காக குடியேற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதல்'' என்ற தலைப்பில், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு தீர்மானிக்கப்பட்டது மற்றும் பெற்றோலிய வளங்கள அபிவிருத்தி மேற்கூறிய குழாய்களை மாற்றுவதன் 50% கிரயம் மூலம் CPC பெறக்கூடிய நிதி நன்மைகளைக் கருத்தில் கொண்டு, இடமாற்றச் செலவில் மீதி 50% பொது திறைசேரியில் பெறக்கூடிய நிதி நன்மைகளை கருத்தில் கொண்டு, CPC இற்கு உத்தரவிட வேண்டும். CPC இன் பணிப்பாளர் சபை UDA இற்கு உண்மையான செலவில் 50% செலுத்த முடிவு செய்துள்ளது.<br><br>CPC இனால் மேற்கொள்ளப்பட்ட | கூட்டுத்தாபணம் செலவைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரனையாகவுள்ளது.<br><br>2020-2.2.3(b) (v)<br>2019-2(b)<br>2018-2(i) | | முற்பணம் ரூபா. 250 மில்லியன் பெறுமதியாகும். இந்த முற்பணத்தினை அறவிட்டுக் கொளவதற்கு செயற்பாட்க் கட்டணத்தின் கீழ்நோக்கிய குறைப்பைப் பெறும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, சிபிஎஸ்டிஎல் கம்பனியுடன் ரூபா.250 மில்லியனை அறவிட்டுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. | |
| 26. | ஒப்பந்தத்தின்படி உற்பத்திச் செலவுகளானவை களஞ்சிய முனையச் செலவு மற்றும் இலாப எல்லை ஆகியவற்றை உள்ளடக்குவதோடு களஞ்சிய முனையச் செலவானது தனிப்பட்ட செலவு, மேந்தலை செலவு மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் CPSTL இன் சொத்துத் அடிப்படையிலான தேய்மானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டின் போக்குவரத்துக் கட்டணங்களானவை ஒப்புக்கொள்ளப்பட்ட உற்பத்திக் கட்டணங்களில . இருந்து வேறுபட்டது என இது குறிக்கின்றது. எவ்வாறாயினும், சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துடன் தொடர்புடைய செலவுகளானவை உற்பத்திக் கட்டணங்களின் களஞ்சிய முனையச் செலவினை தீர்மானிக்கும் போது தவிர்க்கப்பட்டுள்ளதா | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | CPSTL இன் வாடகை பவுசர் போக்குவரத்தைத் தவிர்த்து செலவினக் கூறுகளைக் கருத்தில் கொண்டு 2019 ஏப்ரலில் செயல்திறன் கட்டணம் 27% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது இருப்பினும், CPSTL இற்கு சொந்தமான பவுசர் படைகள் செலுத்தப்பட்ட நகல் போக்குவரத்து செலவுகளை மீட்டெடுப்பதற்காக CPC ஏற்கனவே 5% செயல்திறன் கட்டணத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் செலவைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துக் கட்டணங்களின் மீள் நிதியிடலானது நகல் செய்யப்படக் கூடும். கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின் படி மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் இற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்துக் கட்டணமாக ரூபா. 2,506 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.<br>2020-2.2.3(b) (vi)<br>2019-2(b)<br>2018-2(i) | | | |
| **27.** | 2003 திசெம்பர் 30 ஆம் திகதிய (GOSL/CPC/LIOCஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தின் படி, களஞ்சிய முனையச் செலவானது "வருடத்துக்கு 12 சதவீதம் என்ற வட்டி விகிதத்தின் அடிப்படையில் கம்பனியில் கடன் அளிக்கப்பட்டுள்ளதோடு களஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒரு பகுதியை உருவாக்குதல் மற்றும் பணப்பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட மேலதிகக் கடன்கள்" என்பதாகும். இவ் ஒப்பந்தமானது 2008 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்தது. எவ்வாறிருப்பினும், ஒப்பந்தம் முடிவடைந்ததன் பின்னர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டினால் 2009 ஆம் ஆண்டு மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காக ரூபா 2,183 | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனம் செலவைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியனுக்கு மேற்பட்ட ஒரு வட்டித் தொகை 2009 முதல் 2016 வரையான காலப்பகுதி வரை கூட்டுத்தாபனத்தில் செலுத்தப்பட்டது. அத்தகைய கட்டணமானது முறையான மதிப்பீடு இல்லாமலும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி செலுத்த வேண்டிய உண்மைத் தொகையினை உறுதிப்படுத்தாமலும் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.<br>2020-2.2.3(b) (vii)<br>2019-2(b)<br>2018-2(i) | | | |

முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப குழாய் அமைப்புக்களை பராமரித்தலும் போதிய அளவிலான களஞ்சிய வசதிகளை வழங்குவதுமே துணை கம்பனியான சிபிஎஸ்ரிஎல் இன் பிரதான வகிபாகம் ஆகும். அதன்படி, நாட்டின் எரிபொருள் வழங்கலின் களஞ்சியப்படுத்தல் மற்றும் முனைய வசதிகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கென கட்டணமாக குறிப்பிடத்தக்க அளவு நிதி சிபிஎஸ்ரிஎல் இற்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் ஆனது ரூபா.**1,000** மில்லியனை தேய்மானமாக அறவிட்டிருந்ததோடு கடந்த **11** வருடங்களுக்கான தொகையானது ரூபா **11,000** மில்லியன் ஆகும். இதற்கு | கூட்டுத்தாபனத்தின் கிரயத்தை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>. | திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன். | கூட்டுத்தாபனத்தின் செலவைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியின் போது சிபிஎஸ்ரிஎல் ஆல் இலாப எல்லையாக ரூபா **2,738** மில்லியன் அறவிடப்பட்டதோடு கடந்த **11** வருடங்களாக சிபிசி மற்றும் எல்ஓஎல்சி ஆகியவற்றில் இருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகையானது ரூபா **43,540** மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும் சிபிஎஸ்ரிஎல் ஆனது புதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காகவும் நடைமுறையிலுள்ள வசதிகளை பேணுவதற்காகவும் உடனடியாக ஏதேனும் சாதகமான நடவடிக்கையினை மேற்கொண்டுளள்தா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை.<br>2020-2.2.3(b) (viii)<br>2019-2(b)<br>2018-2(i) | | | |
| **29.** | 2013 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களைக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்வது தொடர்பாக அமெரிக்க டாலர்கள் **250,925,169** தேசிய ஈரானிய கூட்டுத்தாபனத்திற்கும், தெஹ்ரானுக்கு செலுத்தப்பட வேண்டும், இது ரூபா. 32,343.52 மில்லியனுக்கு சமனாகும். கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அமெரிக்காவால் ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக, அத்தகைய நிலுவைத் தொகையை செலுத்துவது நிறுத்தப்பட்டது. அத்தகைய இருப்புத்தொகையானது தொடக்கத்திலிருந்தே செலுத்த | கூட்டுத்தாபனத்தால் இது தொடர்பான தொடர்புபட்ட கிரயம் மற்றும் பிற விளைவுகளை குறைக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | NIOC நிலுவைத் தொகையைத் தீர்க்க 2019 ஆம் ஆண்டில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 2020 இல் உலகில் கொவிட்-19 நிலைமை காரணமாக, எந்த முயற்சியும் எடுக்கப்பட முடியவில்லை. | இந்த இருப்பு இன்னும் கணக்குகளில் இருக்கும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய தொகையாக, ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும் உள்ள மாற்று விகிதத்திலும், அந்தந்த வருடத்தின் பரிமாற்ற சான்றுகள் அல்லது இழப்புக்கு மாற்றப்பட்ட சரிசெய்தலின் வேறுபாடுகள் காட்டப்படுகிறது. அதன்படி, மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய நிலுவை மற்றும் திரட்டப்பட்ட நாணயமாற்று விகித இழப்பு (2012 முதல் 2020 வரை) முறையே ரூபா. 47,933 மில்லியன் மற்றும் ரூபா.15,193 மில்லியன் ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டிற்குட்பட்ட நாணயமாற்று விகித வேறுபாட்டு இழப்பு ரூபா. 2,122 மில்லியன். மேலும், கட்டுப்பாடற்ற வெளிப்புற காரணிகளால் இந்த நிலுவைத்தொகை செலுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.<br>எவ்வாறாயினும், அந்தத் தொகையை மாற்றுப் படிவங்கள் மூலம் செலுத்துவதற்கும், LKR ஐ நீண்ட காலத்திற்கு USDக்கு மேல் படிப்படியாகக் குறைக்கும் சூழ்நிலையில் நிலுவைத் தொகையைத் தீர்க்காமல் இருப்பதற்கான நிதி சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்கும் கூட்டுத்தாபனம் முயற்சி எடுத்ததா என்பதைக் கண்டறிய போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.<br><br>2020-2.3(a), 2019-1.2.6(f) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | வரையறுக்கப்பட்ட இந்தியா எண்ணெய் கூட்டுத்தாபனம் (IOC) 26 யூன் 2020 ஆம் திகதியில் ஒரு வருட காலத்திற்கு கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றோலியம் தொடர்பான தயாரிப்புகளை வழங்குவதற்கான வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்டது. IOC கூட்டுத்தாபனத்தின் கேள்விமனுவை 05 மாதங்களுக்கே விண்ணப்பித்திருந்தது. எவ்வாறாயினும், LIOC ஆனது IOC இன் மொத்த சொந்த துணை கம்பனியாகும். LIOC ஆனது CPSTL இன் 1/3 உரிமையைக் கொண்டுள்ளது, இது கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனியாகும். மறுபுறம், ஊீளுவுடு மூலம் தொடர்புடைய தரப்பினர் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு தனியொரு போட்டியாளராக டுஐமுஊ ஆனது காணப்படுகின்றது. எனவே, ஒரு வருட காலத்திற்கு பெற்றோலியப் பொருட்களை வழங்குவதற்கு ஒரே போட்டியாளரை அனுமதிப்பதற்கான காரணத்தை கணக்காய்வில் நியாயப்படுத்த முடியவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தின் தற்போதைய வழங்குனர் பதிவுச் செயல்முறையில் பொருத்தமானவையா என கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்த முடியவில்லை.<br><br>2020-2.3(b) | பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களாக ஏற்றுக்கொள்வதற்கு முன் வழங்குனர்கள் சரியான மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மூன்றாம் தரப்பினரிடமிருந்து தேவையற்ற அணுகலைத் தடுக்கும் வகையில், கூட்டுத்தாபனத்தின் வழங்குனர் பதிவு செயல்முறை செயற்படுத்தப்பட வேண்டும். | 26.11.2020 ஆம் திகதியில் நடைபெற்ற சிறப்பு அமைச்சரவை நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு (SSCAPC) ஏற்படுத்திய ஆட்சேபனையின் காரணமாக, CPC உடன் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியலில் இருந்து IOC நீக்கப்பட்டது. 2017 இல் துறைமுகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அவசரகால சரக்குகளைத் தவிர வேறு எந்த சரக்குகளும் அவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. (குறிப்பு. BK/88/2017 - Jet A1). நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (STEC) பரிந்துரைகளுடன் SSCAPC இலிருந்து பெறப்பட்ட அனுமதியுடன் CPC செயன்முறைகளைப் பின்பற்றுகின்றது. தற்போதுள்ள பதிவு செயல்முறையை மாற்றுவதற்கான பரிந்துரைகள் CPC ஆல் வரவேற்கப்படுகின்றன, இது புதிய வழங்குனர்களை எந்த குறிப்பிட்ட காலக்கெடுவுமில்லாமல் விண்ணப்பிக்க | இந்தியன் ஆயில் கூட்டுத்தாபன நிறுவனத்தை வழங்குனர் பதிவு பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுமதிக்கப்படுகிறது, ஆனால் எந்த நேரத்திலும் வழங்குனர்கள் பதிவுக்கு விண்ணப்பிக்க தயாராகவுள்ளனர். பங்கேற்பாளர்களின் பட்டியலை அதிகரிப்பதன் மூலம் போட்டியை அதிகரிக்க செய்யப்படுகிறது. | |
| 31 | கடந்த வருட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை மின்சார சபை உள்ளிட்ட பாரிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் வழங்கலுக்காக முறையான ஓர் ஒப்பந்தத்தைப் கொண்டிருக்கவில்லை.<br>2020-2.3(c)<br>2019-3(a)<br>2018-3(k) | கூட்டுத்தாபனம் பிரதான வாடிக்கையாளர்களுடன் முறையான ஒப்பந்தங்களை மேற்க்கொள் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எரிசக்தி அமைச்சு மற்றும் மின் அமைச்சு ஆகிய இரண்டின் தலையீட்டின் மூலம் CEB உடன் எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம் (FSA) கையெழுத்திடுவது நடைபெற்றுக்கொண்டுள்ளது. இருப்பினும் CPC ஏற்கனவே M/s. Westcoast Power (Pvt) போன்ற முக்கிய சுயாதீன மின் உற்பத்தி நிலையங்களான லிமிடெட் யுகதனவி பவர் பிளாண்ட் & எம்/எஸ். சோஜிட்ஸ் கெலனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்திற்கான சோஜிட்ஸ் கெலனிதிஸ்ஸ பிரைவேட் லிமிடெட் ஆகியோருடன் FSA உடன் ஆரம்பிக்கப்பட்டுளளது. மேலும், CPC ஆனது கோரளப்பிட்டிய இணைக்கப்பட்ட சூழற்ச்சி மின்சக்தியிலிருந்து 350 MW பெறுவதற்கு 19.07.2021 ஆம் | முக்கிய வாடிக்கையாளர்களுடன் முறையான ஒப்பந்தங்களை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திகதியில் சோபதெனவி லிமிட்டட்டுடன் FSA இற்கு உடன்பட்டுள்ளது. CPC இன் வணிக நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டதன்படி, CPC ஆனது<br><br>ஶ்ரீலங்கா ஏர்லைன்ஸ் உடன் FSA ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. | |
| **32** | வரிகள் மற்றும் தீர்வைகளை மீள அறவிடுதல்<br><br>எனது முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று ரூபா 648 மில்லியன் கலால் வரியை உள்ளடக்குகின்ற ஏற்றுமதி சரக்குகளை வெளியேற்றுவதற்கு முன்னர் சுங்கவரி மற்றும் தீர்வையாக செலுத்தப்பட்ட ரூபா.1,617 மில்லியன் தொகையானது 2017 சனவரியிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கட்டணங்களினால் மீளப்பெற அல்லது தீர்க்கப்படிருக்கவில்லை.<br><br>2020-2.3(d)<br>2019-3(b)<br>2018-3(b) | நிலுவையில் உள்ள அனைத்து நிலுவைகளையும் அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஆட்டோ டீசல் ஷிப்மென்ட் (16/01/2017-BK 03/2017 இன் M/T ஸ்வரனா கலாஸ் 0.05% எரிவாயு எண்ணெய்) தரமானது பெரியளவில் மாற்றமடைந்ததால் சனவரி 2017 மாதத்தில் நிராகரிக்கப்பட்டது மற்றும் CPC செலுத்திய ரூபா.1,617,202 சரக்குகளை வெளியேற்றுவதற்கு முன் சுங்க வரிகள் மற்றும் வரிகள். 26/11/2015 ஆம் திகதியிட்ட I/RLV/2015/01 இலக்க கடிதம் மூலம் சுங்கப் பணிப்பாளர் நாயகம் வழங்கிய அறிவுறுத்தலின் படி, சரக்குகளை துறைமுகத்திலிருந்து அகற்றுவதற்கு முன் செலுத்த வேண்டிய கடமைகள் கூறப்பட்டது. மேலும் 28/12/2015ஆம் திகதியிட்ட | இப்போதும் இந்தத் தொகை வசூலிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | MPI/DEV/3/6/4(ii) இலக்க கடிதத்தின் அடிப்படையில் பெற்றோலிய வள மேம்பாட்டு அமைச்சு வழங்கிய உத்தரவின்படி, CPC தொடர்புடைய இறக்குமதியைச் செலுத்திய பின்னரே அடுத்தடுத்த பெற்றோலிய எண்ணெய் சரக்குகளை அனுமதித்துள்ளது. இலங்கை சுங்கத்தால் விதிக்கப்படும் வரிகள். இலங்கை சுங்கத்தின் தடுப்புத் திணைக்களம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தியதன் மூலம், கடமை மற்றும் வரிகளை செலுத்திய பின்னரே கப்பல்களை உள்வர அனுமதித்தது. ஆய்வக சோதனைகளுக்கான மாதிரிகள் வரைதல் மட்டுமே செய்யப்படுகிறது. இந்த காரணத்தால், இந்த ஏற்றுமதியின் தரத்தை சரிபார்க்கும் முன், CPC இறக்குமதி வரிகள் மற்றும் வரிகளை செலுத்த வேண்டியிருந்த தொகையை வசூலிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| **33** | பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல்<br>தற்பொழுது இலங்கையில் | கூட்டுத்தாபனத்தினா | கருத்துக்களுடன் உடன்பட்டர். | எரிபொருள் போக்குவரத்து அமைப்பு மற்றும் பெட்ரோலிய சேமிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையில் உள்ள பெற்றோலிய களஞ்சிய கொள்திறன் போதுமான தன்மையை மதிப்பீடு செய்து தற்பொழுது இலங்கையில் செயற்பாட்டில் உள்ள எரிபொருள் போக்குவரத்து குழாய் அமைப்பு முறைமையின் பொருத்தப்பாடு மற்றும் உற்பத்தித்திறன், புகையிரதம் மற்றும் பவுசர் வண்டிகளின் போக்குவரத்து முறைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்து நாட்டிலுள்ள பெற்றோலிய கட்டிடத் தொகுதி மற்றும் எரிபொருள் போக்குவரத்து ஆகியவற்றில் சுமூகமான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்கின்றதுமான எனது விசேட அறிக்கையானது பாராளுமன்றத்தில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் இதை பதிவிற்க்கம் செய்ய முடியும்.<br>2020-2.3(e)<br><br>2019-3(c) | ல் சரியாக மதிப்பீடு செய்து பரிந்துரை அறிக்கையின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டில் உள்ள பெற்றோலிய களஞ்சிய வளாகம் மற்றும் எரிபொருள் போக்குவரத்து முறைமையில் சீரான மற்றும் பாதுகாப்பான செயல்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அவதானிக்கப்பட வேண்டும். | | அமைப்புகளின் சீரான மற்றும் பாதுகாப்பான செயல்பாட்டிற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | திருகோணமலை தாங்கிப் பண்ணை திருகோணமலை தாங்கிப் பண்ணையில் 100 எண்ணெய்த் தாங்கிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர் ($m^3$)(10,000MT) கொள்ளளவினைக் கொண்டுள்ளன. மற்றும் தொடர்புபட்ட ஏனைய வசதிகளானவை 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர். தாங்கிப் பண்ணைக்கு சொந்தமான 358,553 ஹெக்டேர் நிலம் பரப்பானது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் பிரித்தானிய அரசாங்கத்தின் Lord High Admiraltyஇன் ஆணையாளர்களுக்கு 999 வருடங்களுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1961ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுத்தாபனமானது மூன்று தவணைகளில் 250,000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுணகளை செலுத்தியது. 1964 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் காணி, எண்ணைத் தாங்கி கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான உரிமையைப் பெற்றுக்கொண்டது. இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட நிலத்திற்காக இதுவரை அரசாங்கத்திடமிருந்து எந்த ஒரு சட்டரீதியான ஆவணமும் பெறப்படவில்லை. 2003 ஆம் ஆண்டு 35 வருட காலங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் நிலத்தினை | பண்ணையின் உரிமையை தெளிவுபடுத்தவும் மற்றும் பண்ணையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பெற்றோலியம் தொடர்பான தொழிலை தொடங்கவும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். | பின்னணி உள்ளடக்கத்துடன் உடன்பட்டது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டு முதல் CPC திருகோணமலை மேல்தாங்கிப் பண்ணைக்கான பல அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்துள்ளதுடன், தாங்கிகளின் பயன்பாட்டிற்கான CPC இன் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இற்றைவரை உத்தரவு கிடைக்கப்படவில்லை. | இப்போதும், எண்ணெய் தொட்டி வளாகத்தின் உரிமை தீர்க்கப்படவில்லை, மேலும் தொட்டி வளாகத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி பெட்ரோலியம் தொடர்பான வணிகங்களைத் தொடங்குவதில் கவனம் செலுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எல்ஐஓசி கம்பனிக்கு குத்தகைக்கு விடுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் எல்ஐஓசி கம்பனிக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோடு ஒப்பந்தமானது ஒப்பந்த திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது. கூட்டுத்தாபனமானது எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை அல்லது தாங்கிகளைப் பயன்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் 2003 ஆம் ஆண்டிலிருந்து எல்ஐஓசி கம்பனியானது இச் சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்றது.<br><br>2020-2.3(f)<br><br>2019-3(d)<br><br>2018-3(n) | | | |
| **35** | தண்டப்பண கட்டணம்<br><br>முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று திறைசேரியிலிருந்தான மீள்வசக்கட்டல் அடிப்படையில் கப்பல் எரிபொருள் செயற்பாட்டுடன் தொடர்புடைய 2002 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள தொகையினைத் தீர்ப்பதற்காக ரூபா 57.7 மில்லியன் தொகை ஒன்று செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இவ் இவ் அறிக்கை திகதி வரை இத்தொகை மீளவசக்கட்டப்பட்டிருக்கவில் லை.<br><br>2020-2.3(g), 2019-3(f) | தொகையை முன்கூட்டியே மீளப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>. | இலங்கை சுங்கத்தில் நிலுவையில் உள்ள பொறுப்புகளை நீக்குவதற்காக பொது திறைசேரியின் அறிவுறுத்தல்களின்படி, ரூபா.57,736,913.00 தொகை சுங்கத் திணைக்களத்திற்கு நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக செலுத்தப்பட்டது. பதுங்கு குழி செயல்பாடுகளை மீண்டும் தொடங்கும் நோக்கத்துடன் CPC 2014 இல் பணம் செலுத்தியது. இவை தொடர்பான விவகாரத்தில் தலையிடுமாறு பொது திறைசேரிக்கு கடிதம் | இந்த தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுப்பப்பட்டுள்ளது. | |
| 36 | சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்<br><br>முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காணப்பட்டதைப் போன்று தற்போது காணப்படுகின்ற ஐந்து தசாப்தமான சுத்திகரிப்புச் சாலை (1969 இல் ஆரம்பிக்கப்பட்டு) ஒரு அடிப்படையிலான சுத்திகரிப்பு சாலையாக காணப்படுகின்றதுடன் நாட்டில் பெற்றோலியப் பொருட்களுக்கு காணப்படும் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு முடியாததாகக் காணப்படுகின்றதுடன், குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்களினை வெளியிடுவதற்கு வசதிகள் உள்ளடங்கலாக உயர்தர தொழில்நுட்பங்களுடன் செயற்படுகின்ற மற்றும் சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனை உத்தமப்படுத்துவதன் மூலம் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற தரம்குறைந்த பொருட்களினை உயர் பெறுமதியுடைய பொருட்களுக்கு மேம்படுத்துவதற்கான திறன்களினுடைய சுத்திகரிப்புச் சாலைகளுடன் ஒப்பிடும் போது இந்த சுத்திகரிப்புச் சாலை குறைந்த இலாபத்துடன் செயற்படுகின்றது. எவ்வாறாயினும், கிரய வினைத்திறனான முறையொன்றில் சந்தைக்கு பெற்றோலியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முன்மொழியப்பட்ட | தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டின் கேள்வியை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு இது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் | சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 49 ஆண்டுகள் பழமையானது, ஆனால் தயாரிப்பு விபரக்குறிப்புகள் மற்றும் சட்டத் தேவைகள் மாற்றத்துடன் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் சிறிய அபிவிருத்தி வேலைகளுடன் தற்போது கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த கச்சா எண்ணெயைப் பயன்படுத்தி இன்றும் இயங்குகிறது. சுத்திகரிப்பு நிலையத்தில் பீப்பாயின் அடிப்பகுதியை அதிக மதிப்புள்ள பொருட்களாக மாற்றுவதற்கு உலகில் நவீன தொழில்நுட்பங்களுடன் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்பதனால் இலாப எல்லை அதிகரிக்கும். மேலும், தடைசெய்யப்பட்ட சுத்திகரிப்பு கட்டமைப்பு மூலம், சுத்திகரிப்பு நிறுவனம் இலாபத்தை அதிகரிக்க உலகில் கனமான, புளிப்பு மலிவான கச்சா எண்ணெய்களை செயலாக்க செய்யமுடியாது. நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், | சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் விஸ்தரிப்பு மற்றும் நவீனமயமாக்கல் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (எஸ்ஓஆர்ஈ) சீபிசீ இனால் அமுல்படுத்த முடியாததாகக் காணப்பட்டது. மேலும் ரூபா 1003 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணியானது இவ் அறிக்கையினை மேற்கொள்ளும் திகதி வரையிலும் விளைவற்ற நிலையிலேயே உள்ளது.<br>2020-2.3(i)<br>2019-3(h)<br>2018-3(g) | | சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் (SOREM) திட்டம் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வுடன் தொடங்கப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கான 08 ஆண்டுகளுக்கு குறைவான திருப்பு செலுத்தும் காலத்தை கொண்டு USD 2.1 பில்லியன் முதலீடுகள் கவர்ச்சிகரமாக மேற்கொள்ளப்பட்ட போதும் அரசாங்கத்திடமிருந்து நிதி கிடைக்காமையினால் செயற்படுத்த முடியவில்லை. திட்டம் தாமதமானதால், நாட்டின் அதிகரித்து வரும் தயாரிப்பு தேவை, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது, இது இறுதியில் நாட்டிற்கு கூடுதல் செலவினங்களை ஏற்படுத்துகிறது. | |
| 37 | விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம் வனாத்தமுல்லையில் அமைந்துள்ள ஹல்கஹக்கும்புர காணி எல்பி கேஸ் செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானமொன்றினை ஸ்தாபித்தல் நோக்கத்திற்கு ரூபா 10.6 மில்லியனுக்கு இந்தக் காணி கொள்வனவு | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | இந்த கூற்று சரியானது. சுமார் 700 குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள சமூக பாதிப்பு காரணமாக, வழக்கு தொடர்வது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. | ஆக்கிரமிப்புகளை அகற்றி, சொத்துக்களை பயன்பாட்டுக்கு கொண்டுவர கூட்டுத்தாபனம் தவறிவிட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் காணி குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 700 கட்டுமானங்களுக்கு அதிகமாக அது ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.<br><br>2020-2.3(j) ,2019-3(i), 2018-3(f) | | | |
| **38** | கணக்காய்வுக்காக கிடைக்கப்பெற்ற ஆவணங்களின்படி, கூட்டுத்தாபனம் அந்த நிலத்தினை ரூபா 0.625 மில்லியன் தொகையொன்றிற்கு கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்ததுடன், அதற்குள் அது கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 1986 இல் கொள்வனவுக்குப் பின்னர் கூட முன்னைய உரிமையாளரினால் அந்த நிலம் பயன்படுத்தப்பட்டிருந்தது.<br>2020-2.3(j)<br>2019-3(i), 2018-3(f) | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு பிரதேச செயலாளர் கொழும்பு நீதவான் நீதிமன்றில் நடவடிக்கை எடுத்திருந்தார். கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரதான காணியில் இருந்து 06 பகுதிளை CPC இற்கு வழங்கியுள்ளார். | ஆக்கிரமிப்புகளை அகற்றி, சொத்துக்களை பயன்பாட்டுக்கு கொண்டுவர கூட்டுத்தாபனம் தவறிவிட்டது. |
| **39** | பெறுகை முகாமைத்துவம் 2012 ஆண்டு மார்ச் 22 இல்அமைச்சரவை அமைச்சர்களால மேற்கொள்ளப்பட்ட தீர்மான இல.12/0295/510/003/TRB இன்படி, வாராந்த அடிப்படையில் உடன் வாங்குவது ஆட்சேபிக்கப்பட்டதால், சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சு நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுடன் பெற்றோலிய உற்பத்திகளின் வழங்கல்களுக்கு கால அடிப்படையிலான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும். எனினும், 2018 இல் செய்து கொண்ட | அமைச்சரவையின் அமைச்சர்கள் தீர்மானங்களுடன் அது கடைப்பிடிக்கப்படவேண்டும் | நாட்டின் கேள்வி ஏற்றஇறக்கத்துடன் இருப்பு வேறுபாட்டை உறிஞ்சுவதற்கு சிபிசிக்கு போதுமான சேமிப்புத்திறன் இல்லை, அதேபோல் கால மனுக்கோரல் தொகைகள் நிலையானவை மற்றும் மேலதிகமாக ஏற்படுத்தப்பட்ட தொகைகளை நிரப்புவதற்கான தொகைகளை சரிசெய்ய முடியவில்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் மேலதிகமாக ஏற்படுத்தப்பட்ட | உந்துவிசை கொள்முதல் தொடர்கிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்லுபடியாகும் 78 ஒப்பந்தங்களில் (14 ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன) 52 (கப்பற் சரக்குகள்) மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு முரணான வகையில் உடன் கொள்வனவு என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>2018-2(a) | | தொகைகளை நிரப்புவதற்கு சிபிசி ஒற்றை மனுக்கோரலை பயன்படுத்தாதுவிட்டால், உற்பத்திப் பற்றாக்குறை அல்லது கப்பல் கட்டணங்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது. | |
| 40 | இடர் குறைப்பு பரிவர்த்தனைகள்<br><br>2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இழப்புக்காப்பு பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் படி, 2020 திசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அப் பரிவர்த்தனைகளால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டமானது ரூபா 14,028 மில்லியனாகும். மேலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொமர்ஷல் வங்கியானது 8,648,300 அமெரிக்க டொலர்களை உரிமை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.<br><br>2020-2.3(h)<br><br>2019-3(g)<br><br>2018-3(p) | இவ்விடயத்தை முன்கூட்டியே தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையாக காணப்படுகின்றது. | இது தொடர்பாக இன்னும் வழக்கு நிலுவையில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **41** | மசகு எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் (டுரடிசழைஉயவெ) உற்பத்திகளின் விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை மற்றும் விற்பனைப் பெறுமானது படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. இலங்கை பொதுப் பயன்னாடுகள் ஆணைக்குழுவின் பதிவுகளின் படி, மேலும் கூட்டுத்தாபனத்தின் இலங்கை மசகு எண்ணெய் சந்தையின் சந்தைப் பங்கு மற்றும் சந்தை இடமானது படிப்படியாக மோசமடைந்து இருந்தது. **2019** ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டாகும் போது கூட்டுத்தாபனத்தின் சந்தை இடமானது ஐந்தாவது இடத்தில் இருந்து ஆறாவது இடத்திற்கு சென்றடைந்ததன் மூலம் மேலும் மோசமடைந்தது. எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் விற்பனையின் நிகர வருமானமானது அதிகரித்திருந்தது. எனவே, கூட்டுத்தாபனத்தின் குறைந்த அளவு கவனம் செலுத்தப்பட்ட மசகு எண்ணெய் வணிகமானது இலங்கையில் இலாபகரமான வணிகமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.<br>2019-2(d)(i) | மசகு எண்ணெய் (Lubricant) வியாபாரத்தை முன்னேற்ற பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மசகு எண்ணெய் விற்பனையளவு 2016 ல் இருந்து குறைந்துள்ளதுடன் சந்தை நிலைகள் 5 இலிருந்து 6 ஆக குறைந்துள்ள, அதே வேளை சந்தை பங்கை 6மூ இற்கும் குறைவாகப் பாதுகாத்தது. இருப்பினும், நாட்டின் மொத்த சந்தை அளவு மெதுவாக அதிகரித்துள்ளது. சிபிசி மற்றும் எம் / எஸ் ஹைராக்ஸ் ஆயில் எஸ்.டி.என் பி.டி.க்கு இடையிலான ஒப்பந்தங்கள் காரணமாக ஏற்பட்ட குறித்த ஆண்டு முரண்பாடுகளால் இந்த விற்பனை அளவு ஏற்பட்டது. மேற்குறிப்பிட்ட கருத்து (1) இற்கு மேலதிகமாக தேறிய இலாப வீதமானது சிறிதளவு அதிகரித்திருந்தது. சிபிசி விற்பனை செய்யும் மசகு எண்ணெய் தயாரிப்புகளுக்கான தேவை நிலவியது. ஒப்புதல் நடைமுறையில் இடையூறுகள் மற்றும் தாமதங்கள் காரணமாகவும் சிபிசி மற்றும் எம் / எஸ் ஹைராக்ஸ் ஆயில் எஸ்.டி.என்.பி.எச்.பி.டி.க்கு இடையிலான சர்ச்சைக்குரிய நிலை காரணமாகவும் தேவையான பொருட்கள் சந்தையில் | கூட்டுத்தாபனம் மசகு எண்ணெய் வணிகத்தில் கவனம் செலுத்துவது குறைவு. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விசுவாசமான வாடிக்கையாளர்களிற்கு கிடைக்கவில்லை. மசகு எண்ணெய் வணிகமானது முதலீடு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான சிபிசியின் ஒரு முக்கிய பகுதியாகும் முகாமையானது ஒப்பந்தங்களின் சில பகுதிகளைக் கண்டறிந்த பின்னர், CEYPETCO பிராண்ட் பெயரில் மசகு எண்ணெய் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் முன்னர் அவற்றினை சரிசெய்ய விரும்பியது. | |
| **42** | கூட்டுத்தாபனத்தினால் முகாமை செய்யப்படுகின்ற 1200 இற்கு மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைக் கொண்ட நாட்டில் எல்லா பாகங்களையும் உள்ளடக்கும் வகையில் அதிகூடிய விற்பனை வலையமைப்பு ஒன்றை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக போக்குவரத்து வழி, விலையிடும் செயன்முறை, களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் மசகு எண்ணெய் வணிகத்தின் (Lubricant) ஒட்டுமொத்த தொழிற்பாட்டின் மீதான மேற்பார்வை ஆகியவற்றைக் குறைந்தபட்ச முயற்சி மற்றும் செலவில் கூட்டுத்தாபனத்தின் நடைமுறையில் உள்ள நன்கு நிறுவப்பட்ட எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோக வலையமைப்பினூடாக இலகுவாக முகாமை | மசகு எண்ணெய் (Lubricant) வியாபாரத்தை வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் அதிகரிக்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏப்ரல் 2020 இல், எம் / எஸ் ஹைராக்ஸால் கட்டப்பட்டு இயக்கப்படும் புதிய மசகு எண்ணெய் ஆலையில் வணிக உற்பத்தி மெதுவாக தொடங்கப்பட்டது. கோவிட் -19 தொற்றுநோய் தொடர்பான நிலைமை உற்பத்தி ஆலை ஊழியர்களின் வருகையை தாமதப்படுத்தியதுடன் ஆலை இயக்குநர் எம் / எஸ் ஹைராக்ஸின் படி மூலப்பொருள் விநியோக சங்கிலி இடையூறுகள் காரணமாக பல சிக்கல்கள் இருந்தன.<br><br>2020 ஆம் ஆண்டு யூலை முதல், பகுதி | கூட்டுத்தாபனம் மசகு எண்ணெய் வணிகத்தில் கவனம் செலுத்துவது குறைவு. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யலாம். அரசாங்க நிறுவனம் என்ற வகையில் கூட்டுத்தாபனமானது, மசகு உற்பத்திகளைப் பரவலாகப் பயன்படுத்தக் கூடிய முப்படைகள், இலங்கை பொலிஸ், மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை புகையிரத் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கிய அரச முகவர்களுக்கு மசகு உற்பத்திகளை வழங்குவதற்கான அதி கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் மசகு உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் வழங்கலுடன் தொடர்புடைய எல்லா உட்கட்டமைப்பு வசதிகளையும் கூட்டுத்தாபனம் விருத்தி செய்து உள்ளது. மேலும், கூட்டுத்தாபனமானது 2016 மே மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 20<br><br>வருட காலத்திற்கான நிர்மாணம், செயற்பாடு மற்றும் பரிவர்த்தனை (BOT) எனும் அடிப்படையில் இலங்கையில் மசகு எண்ணை அறைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஹைராக்ஸ் ஒயில் எஸ்.டீ.என் பீ.எச்.டீ (HOSB) நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. மேலும், கூட்டுத்தாபனமானது (HOSB) உடன் குத்தகை ஒப்பந்தம் ஒன்றையும் வழங்கல் ஒப்பந்தம் ஒன்றையும் அதே தினத்தில் மேற்கொண்டது. (HOSB இல் இருந்து உற்பத்திகளைக் கொளவ்னவு செய்வதற்கு ஒத்துழைப்பதற்காக) மசகு | | முகாமையாளர்களின் நேரடி மேற்பார்வையான மற்றும் தொடர்புடைய நேரடி மேற்பார்வையாளர்களின் கீழ் 1200 நிரப்பு நிலையங்கள் மூலம் மசகு எண்ணெய் விற்பனை செய்வதற்கான முகாமைத்துவ திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை சந்தையில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக புதிய கலப்பு தளத்தில் உற்பத்தி செய்யப்படும் சீபெட்கோ மசகு எண்ணெய் விலை கணிசமாகக் குறைக்கப்பட்டது. புதிய விலைகள் ஆகஸ்ட் 1, 2020 அன்று அறிவிக்கப்பட்டன, மேலும் ஸ்டாக்கிஸ்ட் நெட்வொர்க் சிபிசி நிரப்பு நிலையங்களுக்கு பொருட்களின் பற்றாக்குறை இல்லாமல் பொருட்களை வைத்திருக்க ஆர்வமாக இருந்தது.<br><br>,தற்கிடையில், அரசு நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு 20% கார்ப்பரேட் தள்ளுபடி வழங்கப்பட்டது. இலங்கை இராணுவம், எஸ்.எல். கடற்படை, எஸ்.டி.எப், எஸ்.எல்.ரி.பி மற்றும் பிற அரசு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு 2019 ஜூன் 24 ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனமானது நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியவள தந்திரோபாய வியாபாரத் திட்டம் ஒன்றுடன் செயற்பாடுகளைத் தொடங்கியதா என்பதனை கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை.<br>2019-2(d)(ii) | | நிறுவனங்கள் சி.பீ.சி உடன் சீபெட்கோ மசகு எண்ணெய் தயாரிப்புக்களினை வாங்குவதற்கு தற்போது தொடர்பு கொண்டிருக்கின்றன. சிபிசி தற்போது அதன் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மாதத்திற்கு 01 மில்லியன் லீற்றர் / கிலோவை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கொண்டு வருகிறது, இது டிசம்பர் 2020 க்குள் சுமார் 20% சந்தைப் பங்கிற்கு ஒத்திருக்கும். | |
| **43** | முத்துராஜவெல முனையத்தில் அமைந்துள்ள பிரதான நிலையத்தை உள்ளடக்கிய 4 மசகு எண்ணை (Lubricant) நிலையங்கள் உள்ளன. எவ்வாறிருப்பினும், அந் நிலையங்களில் ஒவ்வொரு உற்பத்தியினதும் கையிருப்பு மட்டத்தினை உள்ளடக்கிய முறையான பதிவுகள் பேணப்படவில்லை. முறையற்ற கையிருப்புக் களஞ்சியங்கள், வெப்பநிலை போன்ற சூழல் காரணிகளை கருத்தில் கொள்ளாது களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனைப் பொருட்கள் நிலையங்களில் சேதமடைந்த மசகுப் பொருட்களின் கையிருப்பு என்பன கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்டன. மேலும் 2018 அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட உறுதிப்படுத்தலின் போது ரூபா 6 மில்லியனிற்கு மேலான கையிருப்பு | பொருத்தமான தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் இருப்பு சேதத்தை குறைக்கும் வகையில் இருப்பு கையாளப்பட வேண்டும் | சிபெட்கோ மசகு எண்ணை (Lubricant) உற்பத்திகளை களஞ்சியப்படுத்த சிபிசியால் பராமரிக்கப்படும் ஒரே ஒரு மசகு எண்ணை (Lubricant) களஞ்சியமே உள்ளது. நிரப்பு நிலையங்களில் கேள்விகளை வழங்குவதற்கு போதுமான இருப்புக்களை பராமரிக்க வேண்டும். முத்துராஜவெலவில் உள்ள சிபிசி களஞ்சியம் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையின் கீழ் பாதுகாப்பான களஞ்சிய வசதிகளுடன் வழங்கப்பட்டுள்ளது மற்றும் அதன் | இருப்பு இழப்புகளை குறைக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நட்டத்தினை அடையாளங காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2019-2(d)(iv) | | சுவர்களை சுற்றி கனரக தொழிற்துறை விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஊழியர்கள் திறமையான கையாளக்கூடிய சேமிப்பு பொருட்கள் மற்றும் நியமிக்கப்பட்ட சேமிப்பு விமானமும் பயன்பாட்டிலுள்ளது. இருப்பு இழப்பானது சேதமடைந்த இருப்புக்களினை சேர்த்தல் மீட்கப்பட்ட இருப்புக்கள் மற்றும் போக்குவரத்திலுள்ள பொருட்கள் என்பவற்றிலுள்ள பிரச்சினைகளால் ஏற்படுகின்றது. இது ஆய்வு செய்யபட்டு மீட்கப்பட்ட மற்றைய இருப்பு பொருட்கள் புதியகலவை ஆலைக்கு மறு வேலைக்காக அனுப்பப்ப:கின்றன. | |